# கருகலான சத்தியம்

## பாகம் - 1



Rev.Dr. A. சேவியர் B.Sc.,M.A(Theo).,DD.,
(எழுத்தாளர் சுவிசேஷகர் போதகர்)

# கருகலான சத்தியம்

## (பாகம் 1)

ஆசிரியர்

**Rev. Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)

2019

மறு

வெளியீடு

**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrustxavier

:endtimedeliverance.com; e-mail:-info@deliverance

**கருகலான சத்தியம்**
**பாகம் 1**

First Edition : 2001
Second Edition : 2008
Third Edition : 2016
Fourth Edition : 2019
Total Copies : 1000
Book Serial No : 01/12

**Copy right :**
End Time Deliverance Ministry Trust

**Sponsored by:**
**Pastor P. Sathyadoss** B.E., B.Th.,
Deliverance Church of Christ
Annanur, Chennai - 600 109.
Cell : 94448 73848

காணிக்கை : ₹ 140/-

**Printed by :**
**Sekar Offset Printers**
Old No. 168/1, New No. 50, Big. Street,
Chepauk, Chennai - 600 005.

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

அடியேனுக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட இந்த கருகலான சத்தியங்கள், வாசிக்கும் அனைவருக்கும் பிரயோஜனமாயிருந்து, வருகைக்கு ஆயத்தப்பட வாஞ்சிக்கிறேன். நான் விரும்புகிறதற்கும், வேண்டிக் கொள்கிறதற்கும் மேலாய் செய்கிற தேவன் இவரன்றோ!

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*
*ஆசீர்வாதம் பெறுங்கள் !*
*இயேசு சீக்கிரம் வருகிறார் !*
*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை.
ஆகஸ்ட் 2019

**– ஆசிரியர்**

**குறிப்பு :**
இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்வியோ இருந்தால், தயவுசெய்து ஆசிரியரிடம் எப்போதும் கேட்கலாம்; அவர் நடத்தும் கூட்டங்களில் கேள்விகளோடு வரலாம்; மாத இதழுக்கும் எழுதி அனுப்பலாம்.

# பொருளடக்கம்

## பாகம் - 1


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | அக்கினி அபிஷேகம் என்றால் என்ன? | 273 |
| 2. | அற்புதம் நடந்ததை இயேசு ஏன் சொல்லக்கூடாது என்றார்? | 78 |
| 3. | "அதோ உன் மகன்; அதோ உன் தாய்" - இயேசு ஏன் சொன்னார்? | 287 |
| 4. | "அபிஷேகம்" பண்ணப்பட்டவர்களுக்கு விரோதமாக எழும்பலாமா? | 349 |
| 5. | அவிசுவாசிகளுக்கு தீர்க்கதரிசனம் அவசியமா? | 322 |
| 6. | அன்புள்ள இயேசு சுவாமி என்று ஜெபிக்கலாமா? | 136 |
| 7. | ஆட்டையும் மாட்டையும் கொலை செய்பவன் மனுஷனையும் கொலை செய்யலாமா? | 86 |
| 8. | ஆராதனைக்கு இசை தேவையா? | 258 |
| 9. | ஆளப் பிறந்தது ஆணா? பெண்ணா? | 91 |
| 10. | ஆபிரகாம் தன் ஜாதியில்தான் பெண் எடுத்தானா? | 97 |
| 11. | ஆதாமின் சாபத்தையும் இயேசு அனுபவித்தாரா? | 101 |
| 12 | ஆவிக்குரியவரின் ஜெபம் | 17 |
| 13. | ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்றால் என்ன? | 278 |
| 14. | ஆவியினாலும், அக்கினியாலும் ஞானஸ்நானம் என்றால் அர்த்தம் என்ன? | 140 |
| 15. | ஆவியினால் ஞானஸ்நானமும் ஆவியினால் நிரப்பப்படுதலும் ஒன்றா? | 263 |
| 16. | ஆவியானவர் ஆள்தத்துவமானவரா? | 177 |
| 17. | ஆபேலின் இரத்தமும், இயேசுவின் இரத்தமும் | 145 |
| 18. | இடறலுண்டாகும் வலது கண்ணைப் பிடுங்கிப் போடலாமா? | 205 |
| 19. | "இரகசிய வருகை" என்ற ஒன்று உண்டா? | 207 |
| 20. | இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுக்கலாமா? | 188 |
| 21. | இரட்சிப்பை இழந்தவன் இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்ய முடியுமா? | 314 |
| 22. | இரட்சிப்பும் மீட்பும் ஒன்றா? | 211 |
| 23. | இருபத்து நான்கு மூப்பர்கள் யார்? | 23 |
| 24. | இயேசு ஊதியது ஏன்? | 28 |
| 25. | இயேசுதான் பிதாவை வெளிப்படுத்தினார் | 61 |
| 26. | இஸ்ரேலர் எகிப்திலிருந்தது 400 வருஷமா? 430 வருஷமா? | 81 |
| 27. | இறந்து போன பிள்ளைகள் யோபுக்கு கிடைக்கவில்லையே! | 93 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 28. | இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்தாரா? | 333 |
| 29. | இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரமா? | 375 |
| 30. | இயேசு சர்வ வல்லமையுள்ள தேவனா? | 240 |
| 31. | இயேசு தான் பிதாவா? | 119 |
| 32. | இயேசு மட்டும்தான் பரலோகம் போனாரா? | 123 |
| 33. | இயேசுவாய் வந்தவர்தான் பிதாவா? | 248 |
| 34. | இயேசுவின் படம், சிலை மற்றும் சிலுவை வைப்பது பாவமா? | 378 |
| 35. | இயேசுவின் பார்வையளிக்கும் அற்புதத்தில் குளறுபடிகளா? | 316 |
| 36. | இயேசுவை ஏற்றும் ஏனில்லை ஆசீர்வாதம்? | 319 |
| 37. | இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்களில் அவரை தூஷித்தவர்கள் எத்தனை பேர்? | 355 |
| 38. | இயேசுவின் முதல் வருகையிலே பரலோக ராஜ்யம் ஏன் ஸ்தாபிக்கப்படவில்லை? | 168 |
| 39. | உடலுறவு பாவமா? | 38 |
| 40. | உறவினர் சாவுக்கு ஊழியர் போகக்கூடாதா? | 72 |
| 41. | எல்லா ஆவியும் தேவனிடம் போகுமா? | 24 |
| 42. | எல்லாத் தீங்கையும் கர்த்தர் நம்மேல் வரப்பண்ணுகிறாரா? | 338 |
| 43. | எது அந்தகாரம்? ஏன் தூதர்கள் அடைக்கப்பட்டார்கள்? | 216 |
| 44. | எது கொல்லுகிறது? எது உயிர்ப்பிக்கிறது? | 275 |
| 45. | எது மன்னிக்க முடியாத பாவம்? | 26 |
| 46. | ஒழுங்கின்மையாய் பூமி படைக்கப்பட்டதா? | 61 |
| 47. | கனி கொடுக்கும் காலம் இல்லாவிட்டாலும் பழம் இருக்குமா? | 48 |
| 48. | கற்பனைகளை மீறி போதிக்கிறவன் பரலோகம் போவானா? | 106 |
| 49. | காயீன் காணிக்கை ஏன் ஏற்கப்படவில்லை? | 24 |
| 50. | காயீன் பிசாசுக்கு பிறந்தானா? | 83 |
| 51. | காற்றையும், மீனையும் அனுப்பியது வாதிக்கவா? சாகடிக்கவா? | 300 |
| 52. | கிரியை இல்லாத விசுவாசம் தேவையா? | 62 |
| 53. | கிறிஸ்தவ சபை பற்றிய தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டில் உண்டா? | 382 |
| 54. | கிறிஸ்தவனை பிசாசு பிடிக்குமா? | 103 |
| 55. | கிறிஸ்தவனுக்கு அடையாளம் சிலுவையா? | 112 |
| 56. | கிறிஸ்தவனுக்கு தீபாவளி பண்டிகை உண்டா? | 324 |
| 57. | கிறிஸ்தவனுக்கு ஓய்வு | 133 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 58. | கிறிஸ்துவை அறியாமல் மரித்த ஆத்மாக்கள் எங்கே இருக்கும்? | 237 |
| 59. | கிறிஸ்தவன் ஆசரிக்க வேண்டிய பண்டிகை | 134 |
| 60. | கிறிஸ்தவன் 'பொருத்தனை' (VOW) பண்ணலாமா? | 371 |
| 61. | கிறிஸ்தவன் வட்டி வாங்கலாமா? | 337 |
| 62. | சகரியா ஏன் ஊமையானான்? | 19 |
| 63. | சாபத்தையும் ஆசீர்வாதத்தையும் தேவன் கொடுக்கிறாரா? | 228 |
| 64. | சாபமும் தண்டனையும் கிறிஸ்தவனுக்கு உண்டா? | 191 |
| 65. | சபையை மணவாட்டி என்று சொல்லலாமா? | 158 |
| 66. | ஜலத்தினால் பிறப்பது ஞானஸ்நானமா? | 39 |
| 67. | ஜலத்தினால் ஞானஸ்நானம் எடுக்கும்போது தான் இரட்சிப்பா? | 170 |
| 68. | சிருஷ்டி கர்த்தர் ஒருவரா? இருவரா? மூவரா? | 156 |
| 69. | சிலுவை புனித சின்னமா? அல்லது கிறிஸ்தவனுக்கு அடையாளம் சிலுவையா? | 200 |
| 70. | சிலுவை மரணத்திற்குப் பயந்து இயேசு கண்ணீர் விட்டாரா? | 226 |
| 71. | சீதனம் கொடுக்க வேண்டியது யார்? | 65 |
| 72. | செல்வந்தன் சீஷனாக முடியாதா? | 74 |
| 73. | தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்தால்தான் பாவ மன்னிப்பா? | 250 |
| 74. | தன்னை சிலுவையில் அறைந்தவர்களை இயேசு மன்னிக்க முடியாதா? | 41 |
| 75. | தன் வருகை நாளை இயேசு அறிவாரா? | 70 |
| 76. | தாவீதை மன்னித்தவர் சவுலை ஏன் வெறுத்தார்? | 22 |
| 77. | தெய்வீக சுகம் என்றால் என்ன? | 266 |
| 78. | தேவ வார்த்தையும் தேவ சித்தமும் | 306 |
| 79. | வேதம் சொல்லும் வேசிப்பிள்ளைகள் யார்? | 163 |
| 80. | வேண்டிக் கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மேலாய் தேவன் செய்வாரா? | 362 |
| 81. | தேவ தூதர்களிலும் சற்று சிறியவரா நாம்? | 281 |
| 82. | தேவனின் ஆவியும் பரிசுத்த ஆவியானவரும் ஒன்றா? | 175 |
| 83. | தேவன் தீமையை அனுமதிக்கிறாரா? | 260 |
| 84. | தேவனின் சிட்சை என்ன? | 31 |
| 85. | தேவனின் சித்தமும், தீர்மானமும் ஒன்றா? | 183 |
| 86. | தேவனுக்கு ரூபம் உண்டா? | 297 |
| 87. | தேவன்தான் வேலியடைத்து காக்கிறாரா? | 76 |
| 88. | தேவனுக்கு (இரண்டு) மணவாட்டியா? | 80 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 89. | தேவனால் பிறந்தவன் பாவம் செய்வானா? | 129 |
| 90. | தேவனால் முன் குறிக்கப்பட்டோர்தான் இரட்சிக்கப்படுவார்களா? | 148 |
| 91. | தேவன் நம்மை புடமிடுகிறாரா? | 160 |
| 92. | திரித்துவத்திற்கும் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கும் தொடர்பு உண்டா? | 137 |
| 93. | தீமையை தேவன் ஏன் படைத்தார்? | 353 |
| 94. | நமக்கு விரோதமான கையெழுத்து எது? | 343 |
| 95. | நீதிமொழிகள் சொல்லப்படும் ஞானம் இயேசுவா? | 142 |
| 96. | நியாயத்தீர்ப்பு எங்கே யாருக்கு நடக்கும்? | 234 |
| 97. | நியாயத்தீர்ப்பு செய்பவர் பிதாவா? இயேசுவா? | 99 |
| 98. | நோவா காலத்திற்கு முன் உலகில் மழை இருந்ததா? | 198 |
| 99. | பவுலுக்கு வியாதியா? | 32 |
| 100. | படைப்பிலே நல்லதல்ல - அது எது? | 327 |
| 101. | பரிசுத்தத்தின் மூன்று படிகள் | 35 |
| 102. | பரலோக வானவில் | 75 |
| 103. | பரலோக ராஜ்யமும், புளித்த மாவும் | 37 |
| 104. | பவுல் அகாலப்பிறவியாம் எப்படி? | 71 |
| 105. | பரீட்சையும்... சோதனையும் | 290 |
| 106. | பரிசுத்த ஆவியை பெறாதவரைக்கும் அவன் கிறிஸ்தவனில்லையா? | 88 |
| 107. | பக்தியுள்ள சந்ததி எது? | 111 |
| 108. | பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுவது எப்போது? | 115 |
| 109. | பரலோக ராஜ்யமும், தேவனுடைய ராஜ்யமும், கிறிஸ்தவ சபையும் ஒன்றா? | 130 |
| 110. | பரிசுத்த ஆவியானவர் தரும் ஞானஸ்நானம் எது? | 255 |
| 111. | பரிசுத்த ஆவியானவரின் ரூபம் புறா வடிவமா? | 165 |
| 112. | பரிசுத்த ஆவியை கேட்டுப் பெற வேண்டுமா? | 44 |
| 113. | பலியை தேவன் விரும்புகிறாரா? | 387 |
| 114. | பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை விட நாம் விசேஷித்தவர்களா? | 218 |
| 115. | பழைய ஏற்பாட்டு மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி தெரியுமா? | 232 |
| 116. | பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் | 30 |
| 117. | பாவமில்லாத சரீரம் பாவம் செய்ய முடியுமா? | 310 |
| 118. | பிசாசை கட்ட முடியுமா? | 11 |
| 119. | பிசாசை நாம் கட்டி வைக்க முடியுமா? | 12 |
| 120. | பிசாசினாலும் ஐஸ்வர்யம் வருகிறது | 50 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 121. | பிணம் எங்கேயோ கழுகு அங்கே | 55 |
| 122. | பிசாசை இயேசுதான வென்றுவிட்டாரே! பின்பு ஏன் நமக்கு அவனோடு போராட்டம்? | 95 |
| 123. | பெயரையே குலைப்பாரா தேவன்? | 18 |
| 124. | பெந்தகோஸ்தே அனுபவம் என்றால் என்ன? | 150 |
| 125. | பேதுருவுக்கு மன்னிப்பு, யூதாசிற்கு மன்னிப்பு இல்லையா? | 21 |
| 126. | பொருளாதார ஆசீர்வாதம் நமக்குண்டா? | 27 |
| 127. | பொருளாதார ஆசீர்வாதம் ஏன் பலருக்கு இல்லை? | 179 |
| 128. | பொல்லாத ஆவியை ஏவிவிட்டு தேவன் சோதிப்பாரா? | 357 |
| 129. | புதிய ஏற்பாட்டு மக்களுக்கு சாபம் வருமா? | 384 |
| 130. | புதிய வானம் புதிய பூமியில் மனித வாழ்க்கை இருக்குமா? | 347 |
| 131. | புத்தாண்டிலாவது புரிந்து கொள்வீர்களா? | 292 |
| 132. | மக்கள் மறுரூபமாக 10 கற்பனைகள் தேவையா? | 365 |
| 133. | மரித்த பின்னும் இரட்சிக்கப்படுவதற்கு தருணம் உண்டா? | 194 |
| 134. | மரித்தோருக்காக ஞானஸ்நானம் | 64 |
| 135. | மரியாள் அமலோற்பவ மாதாவா? | 236 |
| 136. | மரியாளே... என்னைத் தொடாதே என்று ஏன் இயேசு சொன்னார்? | 173 |
| 137. | மரியாள் கடைசி வரை கன்னியா? | 221 |
| 138. | மனைவியின் சொல்லுக்கு செவி கொடுக்கலாமா? | 100 |
| 139. | மனிதன் தேவனை தரிசிக்க முடியுமா? | 197 |
| 140. | மாசில்லாத சுத்தமான பக்தி உன்னிடத்தில் உண்டா? | 284 |
| 141. | மாம்சமான எல்லோர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுமா? | 154 |
| 142. | மாம்சம் மற்றும் மாம்சீகம் என்றால் என்ன? | 89 |
| 143. | மிருகங்களுக்கு ஆவி உண்டா? | 43 |
| 144. | மிருகங்களுக்கு ஆத்மா உண்டா? அது அழியுமா? | 312 |
| 145. | மீன் வயிற்றில் 3 நாள் யோனாவா? | 109 |
| 146. | மூன்று நாள் இயேசு கல்லறையில் இருந்தாரா? | 42 |
| 147. | மூடனுக்கு பதில் கொடுக்கலாமா? | 54 |
| 148. | மோவாபியரும் அம்மோனியரும் ஏன் சபிக்கப்பட்டனர்? | 146 |
| 149. | மோசே எகிப்தை விட்டு போனது பயத்தினாலா? விசுவாசத்தினாலா? | 117 |
| 150. | மோசேயின் திக்குவாய் ஏன் மாறவில்லை? | 84 |
| 151. | மோதிரமும் செருப்பும் அணிவது பாவமா? | 330 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 152. | யார் ஞானஸ்நானம் கொடுக்க அதிகாரமுள்ளவர்கள்? | 213 |
| 153. | யார் ஊழியக்காரர்? | 46 |
| 154. | யார் சுவிசேஷகர்? யார் போதகர்? யார் மேய்ப்பர்? | 129 |
| 155. | யூதா கோத்திரத்தில் இயேசு ஏன் பிறந்தார்? | 181 |
| 156. | யெப்தாவின் மகள் பலியானாளா? | 33 |
| 157. | யோவான் இன்னும் ஜீவிக்கிறாரா? | 20 |
| 158. | யோவான் ஸ்நானன் எலியாவா? | 52 |
| 159. | யோபு பாவம் செய்தானா? - 1 | 56 |
| 160. | யோபு பாவம் செய்தானா? - 2 | 58 |
| 161. | வரம் பெற்றவர்கள் தான் அண்ணகரா? | 68 |
| 162. | வார்த்தையாகிய தேவன் எப்போது குமாரரானார்? இயேசுவானார்? கிறிஸ்துவானார்? கர்த்தரானார்? | 127 |
| 163. | விழுந்து போன தாவீதின் கூடாரம் எப்போது கட்டப்படும்? | 245 |
| 164. | விபச்சார ஸ்திரியின் மேல் இயேசு ஏன் கல்லெறியவில்லை? | 124 |
| 165. | விசுவாச ஊழியம் என்றால் என்ன? | 66 |
| 166. | வெள்ளை டிரஸ் தான் போட வேண்டுமா? | 25 |
| 167. | ஜெபிப்பதிலே உள்ள கோளாறுகள் | 185 |
| 168. | ஜீவன் கிறிஸ்து என்றால் சாவு எப்படி ஆதாயமாகும்? | 368 |
| 169. | 2 - சுவிசேஷத்திலும் இயேசுவின் வம்ச வரலாறு ஏன் வித்தியாசம்? | 224 |
| 170. | 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் தேவையா? | 269 |



**இந்த மாத "விசுவாச முழக்கம்" வாசித்தீர்களா?**

## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதபாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

## ஆசிரியரின் நூல்கள்

- தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் I
- தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் - II
- கருகலான சத்தியம் - பாகம் I
- கருகலான சத்தியம் - பாகம் II
- விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & II)
- வியாதியா?! மரணமா?!
- கதைகள் அறுபது
- சிறுவர் வேதாகமப்பள்ளி (கதையும் பாடலும்)
- வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- "இஸ்லாமியர்களின் கேள்விகள்"
- "உங்களுக்குத் தெரியுமா?"
- கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

**இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

# பிசாசைக் கட்ட முடியுமா?

“பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்தில் எவைகளை நீங்கள் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் - பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று - மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்” மத். 18:10. இந்த வசனத்தை வைத்துக் கொண்டு பலர் இயேசுவின் நாமத்தினாலே பிசாசை கட்டுகிறேன் என்கிறார்கள். அப்படி பூலோகத்திலே பிசாசை கட்டினால் பரலோகத்திலும், பிசாசு கட்டப்படுமா? நாம் பரலோகம் போகும் போது கோடிக் கணக்கான கட்டப்பட்ட பிசாசுகளை காண்போமா? புமியிலே இயேசு பிறந்ததிலிருந்து கிட்டதட்ட 2000 வருடங்களாய் தேவனுடைய பிள்ளைகள் இந்த வசனத்தை வைத்து கட்டியிருந்தால், இந்நேரம் பூலோகத்தில் பிசாசே இருக்காதே. ஆயிரம் வருட அரசாட்சி காலம் போல் மாறி இருக்குமே; இன்னும் ஏன் பிசாசுகள் அலைகின்றன? கட்டப்பட்ட பிசாசுகளை இயேசுவின் நாமத்தினாலே யாராவது அவிழ்த்து விட்டார்களா? தேவன் வெளிப்படுத்துகிறார் கவனிப்போம். பரலோகத்தில் பிசாசுகள் நிரந்தரமாய் இல்லை. எனவே பிசாசுகளை கட்ட தேவன் இந்த வசனத்தை சொல்லவில்லை.

“பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும் பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்” - மத். 16:19, இந்த வசனப்படி பரலோக சாவி நம்மிடம் உள்ளது. சாவி எதற்கு? திறக்க அல்லது பூட்ட. பரலோக ராஜ்யத்தில் என்ன உண்டு? ஆசீர்வாதம் மட்டுமே உண்டு. பேய் இல்லை; பிசாசு இல்லை; வியாதி இல்லை; வறுமை இல்லை; அங்கே தெய்வீக ஆரோக்கியம் உண்டு. சமாதானம் உண்டு; சந்தோஷம் உண்டு; செழிப்பு உண்டு; வல்லமை உண்டு; வெற்றி உண்டு; எல்லா ஆசீர்வாதங்களும் உண்டு. இந்த ஆசீர்வாதங்களை பரலோகத்திலிருந்து கட்டவிழ்த்து பூலோகத்தாருக்கு கொடுக்கத்தான் திறவுகோல் கொடுக்கப்பட்டுள்ளது. பூலோகத்திலே எந்த ஆசீர்வாதம் தேவை என்று இயேசுவின் நாமத்தினாலே திறவுகோலாகிய வசனத்தினாலே கட்டவிழ்க்கிறோமோ அது பரலோகத்தில்

கட்டவிழ்க்கப்படும். அந்த ஆசீர்வாத மழை தொடர்ந்து பரலோகிலிருந்து பொழியும். எந்த ஆசீர்வாதம் வேண்டாமென்று பூலோகத்திலே இயேசுவின் நாமத்தினால் திறவு கோலாகிய வசனத்தை கொண்டு ஆசீர்வாத மழையை கட்டுகிறோமோ அது பரலோகிலும் கட்டப்படும். ஆசீர்வாதமே வராது. எலியா அப்படித்தானே மழையாகிய ஆசீர்வாதத்தை 31/2 வருடம் கட்டினான். பிறகு அதை கட்ட விழ்த்து விட்டான். இதனால்தான் தேவன் இயேசு சொல்கிறார் நம்மை பார்த்து "நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்; உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்" என்று. காரணம், நம்மிடத்திலே பரலோகத்தின் சாவி இருக்கிறது. ஒரு காலம் வரும்; நாம் இல்லாமல் போவோம். அப்போது ஆசீர்வாதம் கட்டவிழ்க்கப்படவே முடியாது. அது தான் இராக்கலாம்; அந்தி கிறிஸ்துவின் காலம்; அல்லேலூயா! பிசாசைக் கட்ட முடியுமா? முடியாது. விரட்டத்தான் முடியும். (இன்னும் விளக்கமாக, "பிசாசை நாம் கட்டி வைக்க முடியுமா?" என்ற செய்தியை பக்கம் -ல் வாசியுங்கள்).

❖ ❖ ❖

## பிசாசை நாம் கட்டி வைக்க முடியுமா? (விளக்கம்)

இந்த நூலின் முதல் செய்தியே இதுதான். ஆனாலும் இன்னும் பலருக்கு இந்த கருகலான காரியம் விளங்கவில்லை. நான் கடந்த வாரம் ஒரு ஆவிக்குரிய சபைக்குப் போயிருந்தேன். அங்கே பேசிய போதகர், "இந்தியாவிலுள்ள முப்பத்தி முக்கோடி பிசாசுகளையும் பாதாளத்தில் தள்ளி முத்திரை போடும்படி தேவன் என்னிடம் சொன்னார். இன்றைக்கு நான் ஆட்டுக் குட்டியின் இரத்தம் மற்றும் சாட்சியின் வசனத்தால் பிசாசை பாதாளத்தில் தள்ளி முத்திரை போடுகிறேன்" என்று சொல்லி, முத்திரை போடுவது போல செய்து காட்டினார். உடனே சபையாரெல்லாம் "ஆமென்! அல்லேலூயா!" என்று ஆர்ப்பரித்தார்கள். இன்றைக்கே இவர் பிசாசை பாதாளத்தில் கட்டிப் போட்டு முத்திரையிட்டு விட்டால், இனிப் பிசாசே இந்தியாவில் இருக்காதல்லவா! அப்படியானால் ஆயிர வருட அரசாட்சிக்கு முன்பதாக பிசாசு பாதாளத்தில் கட்டி வைத்து முத்திரை போடப்படும் என்று வெளி.20:1,2ல் சொல்லப்பட்டுள்ளதே அப்போது எந்தப் பிசாசு தள்ளப்படும்? அப்போது பிசாசை கட்டி முத்திரை போடுவது சாத்தியமில்லை அல்லவா! அதைப் பார்க்கும் போது வெளி.20:1,2ல் சொல்லப்பட்டது பொய்யோ என்று எண்ண வாய்ப்புண்டு அல்லவா! தேவனுடைய வார்த்தை பொய்யாகுமா? மேலும், இன்றைக்கே பிசாசைக் கட்டி பாதாளத்தில் கட்டி முத்திரை போட்டு விட்டால் அது முதல் பிசாசின் கிரியைகளான வியாதி, வறுமை, அகால

மரணம், அவிசுவாசம், தோல்வி, நாத்திகம், இரண்டகம், முரட்டாட்டம், லஞ்சலாவண்யம், கொலை கொள்ளை, விபச்சாரம், வேசித்தனம், ஆண்டான் அடிமை, ஜாதி மத வேறுபாடு, அநியாயம், அக்கிரமம், குறி சொல்லுதல், மந்திரவாதம், விக்ரக ஆராதனை, அந்நிய தெய்வ வணக்கம், தீவிர வாதம் போன்ற ஒன்றும் இருக்கக் கூடாதல்லவா! நாம் சொல்லும் இரட்சிப்பின் சுவிசேஷமும் தேவையில்லை அல்லவா!

இதிலிருந்து நாம் அறிவதென்ன? இயேசுவின் பூமிக்கு வரும் இரண்டாம் வருகை வரை பிசாசு பூமியில் இருக்குமென்றும், அதுவரை அதன் பொல்லாத கிரியைகள் பெருகுமென்றும், அந்த நாளில் தான் பிசாசு கட்டப்பட்டு பாதாளத்தில் அடைத்து முத்திரை போடப்படுவான் என்றும் அறிகிறோம். மேலும், பரலோகத்தின் திறவு கோல் களைத்தான் தேவன் நம்மிடம் தந்திருக்கிறாரே ஒழிய (மத்.16:19), மரணத் திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை நம்மிடம் கொடுக்கவே இல்லை. அது இயேசுகிறிஸ்துவிடமே உள்ளது (வெளி.1:18). அப்படியானால், பாதாளத்தின் திறவுகோல் நம் கையில் இல்லாமல் (வெளி.20:1) எப்படி பிசாசை பாதாளத்தில் தள்ள முடியும்? யோசியுங்கள். மேலும் பெரிய ஊழியர் முதற்கொண்டு எல்லோருமே விசுவாசிகள் தான். இதில் சந்தேகமே இலலை. இந்த விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களில் ஒன்று இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவது. பிசாசுகளை கட்டுவது அல்ல; பாதாளத்திலே தள்ளி முத்திரை போடுவதல்ல. இதை கடைசி நாளில் தேவன் செய்ய போகிறதை இப்போதே குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன் போல் பல கிறிஸ்தவ சபையார் சொல்லி தங்களை தேவனாக்கிக் கொள்கிறார்கள். இது ஆகாயத்தில் சிலம்பம் ஆடுவதற்கு சமானம். இது தேவ துரோகம் (மாற்.16:17) அறியாமல் செய்தால் மன்னிப்புண்டு (அப்.17:30); அறிந்தே செய்தால் மன்னிப்புண்டா? 1 யோ.1:8,9ன்படி அறிக்கையிட்டு விட்டு விட்டாலே பாவமும் சாபமும் தொடராது. “துரத்து” என்று சொன்ன வேலையைச் செய்யாமல், அவர் சொல்லாத “கட்டுகிற” வேலையை பலர் செய்து அதிகப் பிரசங்கி ஆகிறார்கள். இயேசு கிறிஸ்து, தன் மனித ஊழியத்தில் எங்காவது பிசாசைக் கட்டியிருக்கிறாரா? இல்லை. துரத்தியிருக்கிறார்; விரட்டியிருக்கிறார். ஆமென். லூக்.4:34; 8:28; மத்.8:29; 25:41; வெளி.20:1,2 போன்ற பல வசனங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் வாசித்தோமானால், இயேசு கிறிஸ்து பிசாசுகளை துன்பப்படுத்தி கட்டிப் போடவில்லை என்றும், பாதளாத்திலோ நரகத்திலோ தள்ளவில்லையென்றும், அப்படிச் செய்வதற்கும் ஒரு நேரம் இருக்கிறது என்றும் அறிகிறோம். பரலோகத் திலிருந்து தள்ளப்பட்ட பிசாசு கூட பூமியை நோக்கி தள்ளப்பட்டானே அல்லாமல் (ஏசா.14:12) பாதாளத்தில்

தள்ளப்படவில்லை; கட்டப்படவில்லை என்று அறிக. அவன் பாதாளத்தில் தள்ளப்படுவான் என்ற தீர்க்கதரிசன வார்த்தையை ஏசா.14:15 ஆங்கிலத்தில் வாசிக்கவும். "Yet then shall be brought down to the sides of the pit". மத்.16:19; 18:18 ஐ வைத்துக் கொண்டு "பிசாசைக் கட்டுகிறேன்" என்று ஊழியக்காரர்கள் சொல்கிறார்கள். இப்படியாய் கடந்த 2000 ஆண்டுகளாய் பல ஊழியக்காரர்கள் சொன்னதாலேயே இந்நேரம் எல்லாப் பிசாசுகளும் கட்டப்பட்டிருக்க வேண்டுமே! பின் ஏன் அவைகள் இன்னும் கிரியை செய்கின்றன? மத்.18:18ல் கட்டுகிறது மட்டுமல்ல; கட்டவிழ்ப்பதும் போடப்பட்டிருக்கிறது. அப்படியானால், பிசாசுகளை கட்டுகிற ஊழியர்களே பிசாசுகளை கட்டவிழ்த்து விட்டு பொல்லாங்கு செய்ய வழி வகுக்கிறார்களா? மேலும் பூலோகில் பிசாசுகளை கட்டும் போது பரலோகிலும் அது கட்டப்படுமா? பரலோகில் தேவ தூதர்கள் மட்டுமே இருக்கும் போது பிசாசுகள் எப்படி கட்டப்படும்? அப்படியே கட்டப்பட்டாலும் நாம் பரலோகம் போவது தேவனைத் தரிசிக்கவா அல்லது இப்படியாய் கட்டப்பட்டுக் கிடக்கும் பிசாசுகளைப் பார்க்கவா? சிந்தியுங்கள். பூலோகத்தில் இருந்து கொண்டே பரலோகத் திறவுகோல்களாகிய (வெளி.3:7; ஏசா.22:22) வசனத்தைக் கொண்டு, பரலோக வாசஸ்தலத்தில் நிறைந்து கிடக்கும் ஆசீர்வாதங்களை கட்டவிழ்த்து விடலாம். (நாமே உலகிற்கு ஒளி, உப்பு என்பதை மறவாதீர்) $3\frac{1}{2}$ வருடம் எலியா மழையைக் கட்டிப் போட்டது போல (யாக்.5:17, 18) நாம் பரலோக ஆசீர்வாதங்களை பூமிக்கு வராமல் கட்டிப் போடலாம். ஆக, கட்டுவதும் கட்டவிழ்ப்பதும் பிசாசு பற்றியது அல்ல என்றும், ஆசீர்வாதங்கள், நன்மைகள் சம்பந்தப்பட்டது என்றும் அறியுங்கள்.

மத்.12:29ஐ வைத்துக் கொண்டு, பலவானை முந்திக் கட்ட வேண்டும் என்று இயேசு சொல்லியிருப்பதால் பிசாசை கட்ட வேண்டும் என்று வாதிடுவோர் உண்டு. ஒரு வசனத்தைப் படிக்கும்போது அதற்கு முன்னும் பின்னுமுள்ள வசனங்களைப் படித்தால் தான் சத்தியம் விளங்கும். மத்.12:29ஐ அறிய வசனம் 22 முதல் வாசியுங்கள். இயேசு பிசாசுகளை துரத்தியதைக் கண்ட பரிசேயர், இயேசு பிசாசுகளின் தலைவனாகிய பெயல் செபூலினால் துரத்துகிறார் என்று எண்ணினர். இங்கே நடந்த சம்பவங்கள் எல்லாமே பிசாசை விரட்டியது சம்பந்தமாகத்தானே அல்லாமல் கட்டினது சம்பந்தமாக இல்லை என முந்தி அறிக. அப்போது இயேசு சொன்ன மூன்று பதில்களை வச.25 முதல் 29 வரை வாசியுங்கள்:- (1) சாத்தானின் ராஜ்யம் பிளவுபடாமல் ஒன்றாயிருக்கிறது. நான் அவனின் ராஜ்யத்தை அழித்தால் நான் சாத்தானல்லவே! சாத்தானே சாத்தானின் ராஜ்யத்தை அழித்துக கொள்வானா? இதிலிருந்து நான் தேவன் என்று புரிகிறதா? (2) நான் பெயர்

செபூலினால் பிசாசுகளை துரத்தினால் உங்கள் சீஷர்களும் பிசாசினால்தான் துரத்துகிறார்கள் என்று சொல்வீர்களா? அப்படிச் சொன்னால் அவர்கள் உங்களை நியாயந்தீர்ப்பார்களே! (3) சாத்தான் தன்னை விட பலமுள்ள பலவானிடம் தான் தோற்றுப் போவானேயல்லாமல், தன்னை விட பலவீனனிடம் தோற்றுப் போகமாட்டான். அப்படியானால் நான் அவனை விட மிகவும் பலமுள்ளவனல்லவா!. இதை விளக்க ஒரு உவமானம் சொல்கிறார். பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து கொள்ளையிட வேண்டுமானால் முதலில் அவனை விட பலவான் ஒருவன் வந்து அவனைத் தடுக்காதபடி வீட்டிலுள்ள பலவானைக் கட்டிப் போட்டால் தானே முடியும். அப்படியே பலவானகிய பிசாசை ஜெயித்து விரட்ட வேண்டுமானால் அவனிலும் பலவானாகிய தேவனால்தானே முடியும் என்று விளக்குகிறார். இயேசு சிலுவையிலே பிசாசை ஜெயித்தது அவர் அவனிலும் பலவானாய் இருந்ததால் அன்றோ! (கொலோ.2:13-15). அந்த மகா பலவான் இயேசுவின் நாமத்தை நாம் உச்சரிப்பதால், நம்மில் பிசாசை மேற்கொள்ள பலமில்லாவிட்டாலும், இயேசுவின் மகா பலத்தினால் அவனை நாம் விரட்ட முடிகிறது (மாற்.16:16). அல்லேலூயா!

இந்த உவமானத்தை இப்படியாய் தியானிக்காமல், பலவானைக் கட்டிப் போட்டு கொள்ளையிடுவது போல் பிசாசை கட்டிப் போட வேண்டும் என்று பலர் போதிக்கிறார்கள். நாம் செய்கிறது பிசாசு பிடித்து நாசமாகிக் கொண்டிருக்கும் ஒருவனிடமிருந்து, பிசாசை விரட்டி அந்த மனிதனுக்கு நன்மையும் சுகமும் அளிப்பது தானே ஒழிய (அப்.10:38), பிசாசை கட்டிப் போட்டு பிசாசிடமிருந்து நன்மையையும், சுகத்தையும் எடுத்துக் கொள்கிறது அல்ல. பிசாசிடம் நன்மையே இல்லையே! தீமைதானே இருக்கிறது. இப்படி பிசாசை கட்ட வேண்டும் என்று போதிக்கிறவர்கள், பிசாசிடம் உள்ள தீமையை சுதந்தரிக்கத்தானோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஒரு வேளை இவர்கள் கருத்துப்படி ஒருவனுக்குள்ளே இருந்து கிரியை செய்யும் பிசாசை கட்டிப் போட்டால் அந்தப் பிசாசு கட்டப்பட்டு அவனுக்குள் தான் இருப்பானே ஒழிய அவனை விட்டு விலகமாட்டான். அந்த பிசாசை அவனை விட்டு விரட்டினால் அல்லவோ பிசாசின் தீமைகள் ஒழியும்; தேவனின் நன்மைகள் வந்து சேரும். சிந்தியுங்கள். ஒரு குழந்தை பால் குடித்துக் கொண்டிருக்கும் போது விக்கி மரித்துப் போய்விட்டது என்று வைத்துக் கொள்வோம். அதைக் கேள்விப்பட்ட ஒரு குருடன் பால் எப்படி இருககும் என்று கேட்கிறான். அது வெள்ளையாயிருக்கும் என்று பதில் வருகிறது. வெள்ளை எப்படி இருக்கும் என்று கேட்கிறான். அது கொக்கு போல இருக்கும் என்று பதில் வந்தது. கொக்கு எப்படி இருக்கும் என்று கேட்கிறான்? கையை வளைத்துக் காட்டி

இப்படியிருக்கும் என்று பதில் வந்தது. கொக்கு இப்படி இருக்கும் என்று சொன்ன உடனே, இந்த குருடன் தொட்டுப் பார்த்து, இவ்வளவு பெரிய அளவுள்ள பாலை குழந்தைக்கு கொடுத்தால் அது விக்கித் தானே சாகும் என்றான். தேவ பிள்ளையே! இது கதை தான். ஆனால் இதிலே கருத்து உண்டு. உவமானமாய் - சொல்லப்பட்டதை அப்படியே எடுத்துக் கொண்டால் அது குருடனின் சிந்தனை போல்தான் ஆகும். இயேசு பல காரியங்களை உவமானமாய் வேதத்தில் சொல்லியிருக்கிறார். உதாரணமாய் திருடனைப் போல் வருவேன் என்று தனது வருகையைப் பற்றி சொல்லியிருக்கிறார். அப்படியானால் அவர் திருடனைப் போல் பூமியிலுள்ளவைகளை கொள்ளையிட கொலை செய்ய வருவரா? அல்லவே அல்ல! திருடனை போல் நினையாத நாழிகையில் வருவார் என்று பொருள். அப்படியே பலவானை முந்திக்கட்டி அவனிடமுள்ளதைக் கொள்ளையிட அவனை விட அதிகப்பலம் தேவைப்படுவது போல, பிசாசை முறியடிக்க - விரட்ட - தோற்கடிக்க, அவனைவிட பெரிய வல்லமை தேவை; அது இயேசுவினால், இயேசுவின் நாமத்தினால் நமக்கு வருகிறது.

மேலும் மத்.12:40ல் தன்னைப் பற்றி அடையாளம் சொல்லும்போது, யோனா 3 நாள் மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்றார். இதை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை எடுத்துக் கொண்டால், யோனா மீனின் வயிற்றில் மரிக்காமலே உயிரோடு இருந்தான்; இயேசுவும் அப்படியே மரிக்காமலே இருந்தாரா? யோனா மரிக்காமலே மீனிலிருந்து வெளியே வந்தது போல இயேசுவின் உயிர்தெழுதலும் மரணத்தை ஜெயிக்காமல் நடந்ததா? இப்படிக் கேட்டுக் கொண்டே போலாம். இது அறிவு - ஞானத்திற்கடுத்த கேள்வியல்ல அறியாமையின் கேள்வி. ஒரு முறை கானானிய ஸ்திரியிடம், பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்களுக்கு போடுகிறது நல்லதல்ல (மத்.15:27) என்றார். அப்படியானால் இஸ்ரேலர் அல்லாதோரெல்லாம் நாய்களா? மனிதர்களில்லையா? அப்பத்தை நாய்க்குப் போடவே கூடாதா? என்றெல்லாம் கேட்பது அறிவீனமேயொழிய அறிவுடைமையாகாது. உவமானத்தை உவமானமாகவே புரிந்து கொள்வது ஞானம். ரோ.8:22ல் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது என்று எழுதப்பட்டுள்ளதால், சர்வ சிருஷ்டியும் குழந்தைப் பேறு பெறுகிறது என்று எடுத்துக் கொள்ள முடியுமா? முன்னும் பின்னுமுள்ள வசனங்களையும் அதன் நிகழ்வுகளையும், நிதானித்துத்தான் அர்த்தம் கொள்ள முடியும், இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே!

பிசாசைக் கட்டவோ, பிசாசைக் கட்டி பாதாளத்திலே தள்ளி முத்திரை போடவோ நமக்கு அதிகாரம் இல்லையென்றும், பிசாசு இன்று வரை பாதாளம் அனுப்பப்படவில்லையென்றும், பிசாசைச் துரத்தத்தான் நமக்கு அதிகாரம் உண்டென்றும், பெலவானாகிய அவனை விரட்ட அவனைவிட மகா பெலவானனாய் இயேசுவின் நாமத்தினால் நாம் ஆக வேண்டும் என்றும் அறிந்து செயல்படுங்கள். பாராம்பரிய கருத்துக்களுக்கு சாவுமணி அடிப்போம்! பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்தலுக்கு வெண்சாமரம் வீசுவோம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஆவிக்குரியவரின் ஜெபம்

பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களுமே ஜெபம் பண்ணி ஆமென் போட்டு முடித்த உடனே இன்னொரு ஜெபத்தை ஆரம்பிக்கின்றோம். "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி; என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!" இது சங்கீதக்காரன் பாடிய 103ம் சங்கீதம். இதை நாம் ஏன் சொல்கிறோம்? நிறைய பேருக்கு இது தெரியவில்லை. அது பாரம்பரியமாய் ஆகிவிட்டது. அதை சொன்னால்தான் ஜெபம் பண்ணி முடித்ததாக அவர்களுக்கு திருப்தி. ஒரு வகையில் இதுவும் கொஞ்சம் சரியாக இருக்கலாம். ஆனாலும் தேவன் வெளிப்படுத்துகிறார். புரிந்து கொள்ளுவோம்.

"என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி" என்று யாரோ ஒருவர் ஆத்மாவை கூப்பிட்டு கட்டளை கொடுப்பதாக தெரிகிறது. மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்று மூன்று இருக்கிறது. இயேசு கிறிஸ்து சொன்னார். "உண்மையாகத் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரை தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்" (யோ. 4:23:24) அப்படி தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம்தான் நம்காலம். நாம் தொழுகையின் போதும் ஆராதனையின் போதும் ஜெபத்தின் போதும் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்கின்றோம். நம்முடைய ஆவி தேவனுடைய ஆவியோடு ஜெபத்திலே தொடர்பு கொள்கிறது.

ஜெபத்தின் மூலமாய் ஆவியோடு தொடர்பு கொண்டு தேவனிடமிருந்து ஆவியிலே வல்லமை பெற்று கொண்டு அந்த வல்லமையோடு நம் ஆவி, ஆத்மாவிற்கு கட்டளை கொடுக்கிறது. ஆத்மா என்பது சிந்தனாசக்தி பிறக்குமிடம். (நீதி. 2:10; 24:14; 1 சாமு. 18:1). இந்தஆத்மா, தேவனோடு தொடர்பு கொண்டு அபிஷேகம் பெற்ற ஆவி சொன்னபடி கேட்டு, கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். அவரின் உபகாரங்களை மறவாமல் நன்றியோடும் இருக்க வேண்டும். இது தான் நம் ஆவியின் கட்டளை. ஆத்மா என்கிற சிந்தனை - உள்ளம், அந்தக் கட்டளையை சரீரத்திற்குக் கொடுத்து செயல்பட வைக்கிறது. ஆக பரிசுத்த ஆவியோடு தொடர்பு கொண்ட நம் ஆவி சொன்னதை ஆத்மா கேட்கிறது. ஆவியால் ஏவப்பட்ட ஆத்மா சொல்கிறபடியே, செய்கிறபடியே சரீரமும் செயல்படுகிறது. ஆக, ஆத்மாவும், சரீரமும் நம்ஆவிக்கு உட்பட்டு அடங்கி இருக்கிறது. அந்த ஆவியோ பரி ஆவிக்கு உட்பட்டு செயல்படுகின்றது. இப்படி ஆவிக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிற மனிதன் தான் ஆவிக்குரிய மனிதன். ஆவி சொல்லுகிற படிதான் செயல்பட வேண்டும். உலக அறிவு சொல்லுகிறபடி அல்ல என்பதை கடைபிடிக்கத்தான் இந்த ஜெபத்தை சொல்கின்றோம். அல்லேலூயா!

❖ ❖ ❖

## பெயரையே குலைப்பாரா தேவன்?

பாகாலுக்கு முன்பாக முழங்காலை முடக்காத 7000 பேரை தேவன், ஆகாபின் காலத்தில் ஒதுக்கி வைத்துப் பாதுகாத்தது போல உபத்திரவ காலத்திலும், அந்தி கிறிஸ்துவுக்கு பணியாத முழங்கால்களை கொண்ட 1,44,000 இஸ்ரவேலரை தேவன் தனிமைப் படுத்தி பாதுகாப்பார்.

இவர்கள் கோத்திரத்திற்கு 12,000 பேராய் மொத்தம் 12 கோத்திரத்திலும் பாதுகாக்கப்படுவர் என்று வெளி 7ம் அதிகாரம் சொல்கிறது. இஸ்ரவேல் கோத்திரங்களாவன: ரூபன், சிமியோன், யூதா, செபுலோன், இசக்கார், தாண், காத், ஆசேர், நப்தலி, எப்பிராயீம் மனாசே, பென்யமீன். ஆனால் வெளி 7ம் அதிகாரத்தில் தாண், எப்பிராயீம் என்ற இரு கோத்திரங்களின் பெயர்களே இல்லை. அதற்குப் பதிலாய் லேவி, யோசேப்பு என்ற புதிய இரண்டு கோத்திரங்கள் பாதுகாக்கப்படுவதாக உள்ளது. அந்தி கிறிஸ்துவின் உபத்திரவ காலத்தில் கூட அந்த பழைய இரு கோத்திர நாமங்களை தேவன் விட்டு விட்டாரே ஏன்? அவர்கள் பாதுகாக்கப்பட வில்லையே ஏன்? தேவன் வெளிப்படுத்துவார்.

பன்னிரண்டு கோத்திரங்களை உண்டாக்கி நியாயப் பிரமாணத்தை கொடுக்கும் போதே உபாகமம் 29:18-21 வசனங்களில் தேவன் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எந்த ஒரு புருஷனோ ஸ்திரியோ குடுமபமோ, கோத்திரமோ இஸ்ரவேலுக்குள் விக்கிரக வணக்கத்தைத் தூண்டி. அந்நியத் தேவர்களை சேவிக்கப் போனால், அப்பேர்ப்பட்டவர்களுடைய பேரை வானத்தின் கீழ் இராதபடி கர்த்தர் குலைத்துப் போட்டு மன்னிக்கவே சித்தமில்லாமல், இஸ்ரவேல் கோத்திரங்கள் எல்லாவற்றிலிருந்து அவர்களை புறம்பாக்கிப் போடுவார் என்று ஆணித்தரமாக சொல்லப்பட்டிருக்கிறது. 1 ராஜா. 12:25-30 வசனங்களை வாசியுங்கள். இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரோபெயாம் பொன்னினால் இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி, ஒன்றை தாணிலும், இன்னொன்றை பெத்தேலிலும் ஸ்தாபித்து, விக்கிரக வணக்கத்தை ஏற்படுத்த, தாண் கோத்திரத்தாரும், எப்பிராயீம் கோத்திரத்தாரும் அனுமதித்தார்கள் என்றும், இரு கோத்திரத்தார்களும் எருசலேமுக்கு, மக்கள் வழிபடப் போகாமல் தடுக்கப்படும்படியாக இடம் கொடுத்து விட்டார்கள் என்றும் அறிகிறோம். இதன் காரணமாகவே இவ்விரு கோத்திரத்தாரின் நாமங்களும் வெளி 7ம் அதிகாரத்தின் பெயர் அட்டவணையில் விடுபட்டுப் போயின. நம் தேவனுக்கு இணையாய் சமமாய் எதை வைத்தாலும் அது விக்கிரக ஆராதனை. இதை நம் தேவன் அருவருக்கிறார். பெயரையே குலைத்துப் போடுவார்; புறம்பாக்கி போடுவார்.

❖ ❖ ❖

## சகரியா ஏன் ஊமையானான்?

ஆசாரிய ஊழியம் செய்த சகரியாவும் அவன் மனைவியும் வயது சென்றவர்கள். எலிசபெத் மலடியாய் இருந்தாள். தனக்கு குமாரன் வேண்டுமென்று சகரியா ஜெபித்ததற்கு தேவதூதன் வெற்றிப்பதில் பகர்கிறான். அதற்கு, "இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாய் இருக்கிறேன்; என் மனைவியும் வயது சென்றவளாய் இருக்கிறாளே" என்று சொன்னான். இதனால் அவன் ஊமையானான். இது அவன் தேடிக் கொண்ட சாபம். ஆனால் மரியாளிடத்திலே தேவதூதன் நற்செய்தியை சொன்ன உடனே அவளும் "இது எப்படி ஆகும்? புருஷனை அறியேனே" என்றாள். சகரியாவுக்கும் விசுவாசக்குறைவு இருந்தது; மரியாளுக்கும் விசுவாசம் இல்லை. ஆனால் சகரியாதான் ஊமையானான். மரியாளுக்கு அப்படி எந்த ஒரு காரியமும் நடக்கவில்லையே ஏன்? தேவன் வெளிப்படுத்துகிறார்:-

மனைவி மலடி என்று அறிந்தும், இருவரும் வயதானவர்கள் என்று உணர்ந்தும், குழந்தை வேண்டும் என்று ஜெபித்த சகரியாவுக்கு பதில் கிடைத்த உடனே விசுவாசக்குறைவு ஏற்பட்டது. சகரியா ஒரு ஆசாரியன், ஆசாரியனுக்கே விசுவாசக் குறைவு என்றால் ஏன் ஜெபித்தான்? ஜெபத்தினால் தேவன் வெற்றியை கொடுப்பார் என முழுமையாய் விசுவாசிக்காமல் இருந்தான். இது ஒரு காரணம். இன்னொன்று, மலடியாயிருந்த சாராளுக்கும் வயதான ஆபிரகாமுக்கும், குழந்தை கொடுத்தார் என்று சகரியா அறிந்திருந்தான். ஆனாலும் வேதத்தின் மேல் அவன் முழு விசுவாசம் இல்லாதிருந்தான். ஆபிரகாமின் தேவன் தன் தேவன் என்று முழுமையாய் நம்பாதிருந்தான். ஊமையானான், ஆனால் மரியாளின் நிலையோ வேறு. புருஷனையே அவள் அறியவில்லை, புருஷனை அறியாமலே தேவன் குழந்தை கொடுத்தார் என்று வேதத்திலே மரியாளுக்கு முன்னே எங்குமே இல்லை. எனவே அவளுக்கு சந்தேகமும், விசுவாசக் குறைவும் வந்ததற்கு ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. எனவே தான் எப்படி குழந்தை உற்பத்தியாகும் என்பதையும் எலிசபெத் கர்ப்பவதியானாள் என்ற சாட்சியையும், மரியாளுக்கு தேவதூன் சொல்லி விசுவாசத்தை துவக்கினான். அவள் விசுவாசித்தாள்; பாக்கியவதியானாள். அறிந்த சத்தியத்தை விசுவாசிக்காமல், கிறிஸ்தவனென்று பேர் மட்டும் வைத்திருப்பது தான் நம் தேவனுக்கு அருவருப்பான காரியம். அறியாத சத்தியத்தை அவரே விளக்குவார்.

❖ ❖ ❖

## யோவான் இன்னும் ஜீவிக்கிறாரா?

“அதற்கு இயேசு, நான் வருமளவும் இவனிருக்க எனக்கு சித்தமானால் உனக்கென்ன? என்றார்” (யோ. 21:22) இயேசு பரலோகம் போகுமுன்னே பேதுருவிடம் யோவானைப் பற்றி சொல்லியது இந்த வசனம். இதனால் யோவான் மரிப்பதில்லை என்ற பேச்சு அப்போதே பரவியது (யோ. 21:22). “இயேசு வருமளவும் இவனிருக்க இயேசுவுக்கு சித்தம்” என்று யோவானே எழுதுகிறார். இயேசு இன்னும் வரவில்லையே? அப்படியானால் யோவான் இன்னும் இருக்கிறாரா? இருக்கலாம் என்று சொல்கின்ற கிறிஸ்தவர்களும் உண்டு. இமயமலையில் இன்னும் வாழ்கிறார் என்று நிதானிப்பவர்களும் உண்டு. தேவன் நமக்கு விளக்குவாராக. இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து சொன்னார்; “இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனுஷகுமாரன் தம்முடைய ராஜ்யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பிதல்லை என்று மெய்யாகவே உங்களக்குச் சொல்லுகிறேன்

என்றார்'' (மத். 16:28). இயேசு இன்னும் வரவில்லையே? ஆனால் சீஷர்கள் எல்லாம் மரித்துப் போனார்களே. தேவன் மெய்யாகச் சொன்னது பொய்யாகுமா? ஆகாதே! உண்மை என்ன? ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும், யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக் கொண்டு, தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின் மேல் போய், அவர்களுக்கு முன்பு மறுரூபமானார் என்று வேதம் சொல்கிறது (மத். 17:1-9). இந்த மறுரூபக்காட்சி இயேசுவின் இரண்டாம் வருகையின் ஓர் அடையாள மாதிரியாகும். மோசே உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுக்கு அடையாளமாகவும், எலியா மறுரூபம் ஆக்கப்படும் நம்மை போன்றோருக்கு அடையாளமாகவும் காட்சி தரப்பட்டது. மறுரூபமலைக் காட்சியிலேயே இயேசு மத். 16:28ல் கொடுத்த வாக்குறுதி ஆவிக்குரிய ரீதியில் நிறைவேறியது எனலாம். அப்படியே, வெளி 4ம் அதிகாரத்தில் யோவான் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் பூமிக்கு மகிமையோடு திரும்பி வருவதை காட்சியின் வாயிலாக நேரடியாக பார்த்தார். இதன் மூலம் யோ. 21:22ல் இயேசு சொன்னது ஆவிக்குரிய ரீதியில் நிறைவேறியது எனலாம். அதாவது தனது ஆயுசு நீண்டு, கிறிஸ்துவின் நிஜமான இரண்டாம் வருகை நடக்கும் காலம் வரை உயிரோடிருநது அவ்வருகையில் தானும் பங்குபெற்று அனுபவித்தவன் போல், பரலோக காட்சியில் யோவானுக்கு கிட்டிய அனுபவத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, காட்சியின் வாயிலாவது கிறிஸ்து மகிமையுடன் திரும்பி வரும்வரை யோவான் உயிரோடிருக்க இயேசு சொன்னபடி காக்கப்பட்டான் என்று அறியலாம்.

❖ ❖ ❖

## பேதுருவுக்கு மன்னிப்பு! யூதாசுக்கு மன்னிப்பில்லையா?

லூக். 22:62ன்படி இயேசுவை காட்டி கொடுத்த யூதாஸ் மனஸ்தாபப்பட்டு, பாவம் செய்தேன் என்று அறிக்கையிட்டான் என்று அறிகிறோம். ஆனால் பேதுரு மன்னிக்கப்பட்டு பிரதான சீஷனானான். யூதாசோ கேட்டின் மகன் என்று தீர்க்கப்பட்டு, நான்று கொண்டு செத்தான். ஏன் இப்படி? இருவருக்கும் ஏன் மன்னிப்பு இல்லை? தேவன் விளக்கட்டும்:-

கர்த்தர் பேதுருவை நோக்கிப் பார்த்தார்; சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன

வசனத்தை நினைவு கூர்ந்தான். ஆனால் யூதாசையோ கர்த்தர் நோக்கிப் பார்த்ததாக இல்லை. அவன் கர்த்தரின் பார்வையை நாடாமல், பிரதான ஆசாரியரிடமும் மூப்பரிடமும் ஓடுகிறான். குற்றமில்லாத ரத்தத்தை காட்டிக் கொடுத்தேன் என்று தேவனிடம் சொல்லி அறிக்கையிடாமல், பிசாசின் ஆவியுடைய ஆசாரியரிடம் சொல்கிறன்றான். தேவாலயத்தை விட்டே வெளியே போனான். இராப்போஜனம் பண்ணும்போது யூதாஸ் காட்டிக் கொடுப்பான் என்று தேவன் சொன்ன வசனத்தை நினைவு கூர்ந்து மனஸ்தாபப்படவில்லை. இதனால் இவன் மன்னிப்பு பெறாமலே மரித்துப் போனான்.

எப்போதும் தேவ வசனத்தை நினைவு கூர்ந்து, கர்த்தரின் பார்வை, பாவியாகிய என் மீது விழட்டும் என்று எண்ணி, தேவனிடமே மனம் கசந்து அழும்போது, பாவம் செய்த உனக்கு மன்னிப்பு நிச்சயம் கிடைக்கும். வசனத்தையும் வசனமாகிய தேவனையும் விசுவாசித்து அறிக்கை யிடுவதையே தேவன் வாஞ்சிக்கிறார்.

❖ ❖ ❖

## தாவீதை மன்னித்தவர் சவுலை ஏன் வெறுத்தார்?

1 சாமு. 15:3ல் தேவன் சொன்னபடி சவுல் அமலேக்கியரை சாகடித்தான். ஆனால் எல்லா ஆடு மாடுகளையும் அழித்துப் போடாமல் அற்பமானதையும், உதவாதவைகளையும் மட்டுமே அழித்துப் போட்டான். கர்த்தருடைய வார்த்தையை முழுமையாக அவன் நிறைவேற்றாததினால் தேவன் அவன் மேல் மனஸ்தாபப்பட்டார். கர்த்தர் உன்னை ராஜாவாய் இராதபடிக்கு புறக்கணித்தார் என்று சாமுவேல் சொன்னதும், நான் பாவம் செய்தேன் என்று அறிக்கையிட்டான் (1 சாமு. 15:22-24). ஆனாலும் தேவன் மன்னிக்கவில்லை. தாவீதோ உரியாவின் மனைவியோடு சேர்ந்து பாவம் செய்தான். அவனும் நான் பாவம் செய்தேன் என்றான் (2 சாமு. 12:13). தேவனோ அவனை மன்னித்து விட்டு விட்டார். ராஜியபாரத்தை பிடுங்கவில்லை. ஏன் இப்படி? தேவன் விளக்குவார்.

சவுல் ஏன் பாவ அறிக்கை பண்ணினான் தெரியுமா? அவனது ஜனத்தின் முன்பாக அவனுடைய ராஜிய பாரம் போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் (1 சாமு. 15:30) அதாவது உலக மேன்மைக்காய், உலக ஸ்தானத்திற்காய் மட்டுமே "பாவி" என்று சொன்னான். உண்மையிலேயே உள்ளத்தின் ஆழத்திலிருந்து அவன் சொல்லவில்லை. அதனால் அவனுக்கு மன்னிப்பு இல்லை. ஆனால் தாவீதோ, பரிசுத்த ஆவியானவர் நீங்கக்கூடாது

என்று உள்ளத்திலே எண்ணி தன் பாவத்தை அறிக்கையிடுகிறான் (சங். 51:10-13). பாவியானால் தேவ பிரசன்னம் தன்னை விட்டு நீங்குமே என்று தான் கதறினான். ராஜ்யபரம் நீங்குமே என்று அவன் கவலைப்படவில்லை. தேவன் விரும்புவது இதுதான், அவர் நம்மோடு இருக்க மனிதன் தன் பாவங்களை அறிக்கையிட வேண்டும். உலக மேன்மைக்காய் அல்ல; எனவே தான், தாவீது மன்னிக்கப்பட்டான். நீயும் அப்படி அறிக்கை பண்ணினாலொழிய உன் பாவம் மன்னிக்கப்படாது.

❖ ❖ ❖

## இருபத்து நான்கு மூப்பர்கள் யார்?

அந்த சிங்காசனத்தை சூழ 24 சிங்காசனங்களிருந்தன. 24 மூப்பர்கள் வெண் வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி அந்த சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக் கண்டேன், (வெளி. 4:4) யார் இந்த மூப்பர்கள்? கிறிஸ்துவ சமுதாயத்தில் கருகலாக உள்ளதை தேவன் விளக்குவாராக.

வெளி. 5:9,10 லிருந்து இவர்கள் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் என அறியலாம். இதனால் இவர்கள் தேவதூதர்களோ, வேறே சிருஷ்டிகளோ அல்ல எனலாம். ஏனெனில் மனிதன் மாத்திரமே இயேசுவால் மீட்கப்பட்டவன், இவர்கள் கிரீடங்களை பெற்றிருப்பதால், நியாய விசாரணையில் கௌரவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆசாரியர்களுக்குரிய வெண்ணங்கி தரித்து, ஆசாரிய ஊழியம் (வெளி. 5:8) செய்வதால் அவர்கள் 1 பேதுரு 2:9ல் சொல்லப்பட்டவர்களாகத்தான் இருக்க முடியும். ஆளும் வேளை வெளி 5ல் வராததால் ராஜ உடை இவர்கள் தரிக்கவில்லை.

மூப்பர் என்னும் பட்டம், தலைவர் அல்லது பிரதிநிதி என்ற அர்த்தத்தில் தான் வேதம் சொல்கிறது. 24என்பது ஆசாரியத்துவ முறைமைகளுக்கான எண்ணிக்கை என, 1 நாளா. 24:1-19; மற்றும் யாத். 19:5,6ல் காணலாம். தாவீது ஆசாரியர்களை பவுசு பவுசுகளாகப் பிரித்தபோது 24 தலைவர்களின் கீழ் அந்தக் குடும்பங்கள் ஆயின. அந்த 24 தலைவர்களும் ஆசாரியத்துவ முறைமைக்குட்பட்ட அனைவருக்குமே பிரதிநிதிகளானார்கள். அது போல் இங்கே பரலோகில் காணும் 24 மூப்பர்களும் பழைய, புதிய ஏற்பாட்டு இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களாகிய ஆசாரியத்துவ பிரதிநிதிகளுக்கு ஒப்பாவார்கள். அதாவது பழைய ஏற்பாட்டில் வரும் 12 கோத்திரங்களையும், ஆட்டுக் குட்டியானவரின் 12 அப்போஸ்தலர்களையும் சேர்த்து 24 பேர்கள்

மூப்பர் எனப்படுவர். இது வெளி. 21:10-14ல் உள்ள புதிய எருசலேமின் அஸ்திபார கற்களாலும் வாசல்களாலும் மேலும் உறுதிப்படும். அல்லேலூயா.

❖ ❖ ❖

## எல்லா ஆவியும் தேவனிடம் போகுமா?

பிர. 12:7 சொல்கிறது: மனிதன் மரித்த உடனே சரீரம் மண்ணுக்கும்,ஆவி தேவனிடமும் போகிறது. இதன்படி பரிசுத்தவான்களின் ஆவியும் பாவியின் ஆவியும் தேவனிடம் போகுமா? 1 தெச. 5:23ன்படி பார்த்தால் பாவியின் ஆவி தேவனிடம் போக முடியாதே; வேதத்தின்படி பாவியின் ஆவி பாதாளம் போகும் என்றுதானே அறிகிறோம் (ஏசா. 14:9; லூக். 16:19,31). இயேசு கூட நமது பாவத்தை சுமந்து பாவியாகவே மரித்ததால்; பாதாளத்தில் இறங்கி 3ம் நாள் உயிர்த்தர் என்று அறிகிறோமே (அப். 2:27,31); அப்படியென்றால் பிர. 12:7 சொல்லும் கருகலான சத்தியம் என்ன?

இயேசு சிலுவையில் தொங்கும் போது இரட்சிக்கப்பட்ட கள்ளனைப் பார்த்து இன்று நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் (லூக். 23:43) என்றார். அன்றைக்கு இயேசு பரதீசில் இருந்தாரா? நீதிமானாக்கப்பட்ட கள்ளன் பாதாளம் போயிருக்கமாட்டானே? பரதீசுதானே போயிருப்பான். பிர. 12:7 வசனப்படி மனித பாவத்தால் நிறைந்திருந்த இயேசுவின் பாவ ஆவியும் நீதிமானாகிய கள்ளனின் இரட்சிக்கப்பட்ட ஆவியும் மரித்த உடனே பரதீசுக்கு போயிருக்க வேண்டும். அங்கே தேவன், ஆவி, ஆத்மாவிற்கு நியாயத் தீர்ப்பு கொடுத்து, பரிசுத்தவானின் ஆவியை பரதீசுக்கும், பாவியின் ஆவியைப் பாதாளத்துக்கும் அனுப்புகிறார் என்று அறியலாம். இரகசிய வருகை வரை பரதீசிலும், வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு வரை பாதாளத்திலும் அவைகள் இருக்கும். சரீர நியாயத்தீர்ப்பு, உயிர்த்தெழுதலின் போது அனைவருக்கும் உண்டு. எனவே, எல்லா ஆவிகளும் மரித்த உடனே நியாயத்தீர்ப்பு பெற பரதீசுக்கு போயே ஆகவேண்டும் என்று அறிகிறோம். இதையே இயேசுவும் சிலுவையில் சொன்னார். பிர. 12:7ம் சொல்கிறது.

❖ ❖ ❖

## காயீனின் காணிக்கை ஏன் ஏற்கப்படவில்லை?

ஆபேலும் காயீனும் தேவனுக்குப் பலியும் காணிக்கையும் செலுத்துகிறார்கள். காயீன் நிலத்தின் கனிகளைக் காணிக்கையாக்கினான்.

ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையான வைகளையும் காணிக்கையாக்கினான். தேவன் ஆபேலின் காணிக்கையை மாத்திரம் அங்கீகரித்தார். ஏன்? காயீன் சொத்தையான காய்கனிகளைக் கொண்டு வந்திருப்பான் என்று பிரசங்கம் பண்ணுகிறவர்களும் உண்டு. தேவன் இன்று விளக்குவாராக. "நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாது இருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்" (ஆதி. 4:7) என்று தேவன் காயீனிடம் சொல்கின்றார். ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால் அது அவனுக்கு பாவமாயிருக்கும் என்று யாக். 4:17 சொல்வதும் இதுதானே! எந்த நன்மையை அறிந்திருந்து காயீன் செய்யாமற் போனான்? விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தினான் என்று எபி. 11:4 சொல்கிறது. அது என்ன விசுவாசம்? ஆதி 3:15ல் ஆதாமிடம் தேவன் சொன்ன காரியம் நடக்கப் போகிறது; இயேசு இரட்சகர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக வரப்போகிறார். அதற்கு நிழலாட்டமாய் மந்தையின் தலையீற்றுக்களை பலிசெலுத்த வேண்டும் என்ற தன் அப்பாவின் போதனையை ஆபேல் விசுவாசித்தான். அதன்படியே தன் விசுவாசத்தை கிரியைகளிலே காட்டினான். நீதிமானான். காயீனோ அதை விசுவாசிக்கவில்லை. எனவே கிரியைகளில் காட்டாமல் கனிகளை கொண்டு வந்தான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமல்லவோ? (ரோ. 14:23) அவன் பொல்லாங்கனால் நிரப்பப்பட்டு தன் சகோதரனைக் கொன்றான் (1 யோ. 3:12). இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும், விசுவாசிக்காதது தான் ஆதியாகமம் முதல் இன்று வரை பாவமென்று ஆகி உள்ளது (யோ. 16:8,9). தேவனால் வெறுக்கப்படுவதும் மன்னிக்க முடியாததும் அது தான். இந்தப் பாவத்தால் காயீனின் கிரியையை தேவன் ஏற்றுக் கொள்ளவில்லை.

❖ ❖ ❖

## 11. வெள்ளை டிரஸ்தான் போட வேண்டுமா?

பிர. 9:8ஐ வைத்துக் கொண்டு கிறிஸ்தவன் எப்போதும் வெள்ளை டிரஸ் தான் உடுக்க வேண்டும் என்றும், அவன் தலையில் எப்போதும் எண்ணெய் குறையக்கூடாது என்றும் போதித்து சட்டமாக்குகிறவர்களும் உண்டு. இன்றைக்கு நாம் காணும் போட்டோக்களில் இயேசு, மரியாள் மற்ற தேவ பிள்ளைகள் எல்லாம் கலர் உடைகளும் அணிந்திருக்கிறார்களே? நிறைய கிறிஸ்தவர்கள் ஆபீசுக்கு, பள்ளிக்கு மற்ற நேரத்திற்கு கலர் உடைகளை அணிகிறார்களே? திருமணம் முடிந்த பின்னே, ரிசப்ஷனுக்கு

கலர் உடைகளை அணிகிறார்களே, இவர்களெல்லாம் இந்த வசனத்திற்கு விரோதிகளா? எண்ணெய் தேய்த்து தலைக்குளித்த உடனே அந்த நாள் முழுவதும் தலையில் எண்ணெய் இல்லாமல் இருககிறார்களே? இவர்கள் இந்த வசனத்துக்கு விரோதிகளா? தேவன் விளக்கட்டும்.

பிரசங்கியை எழுதிய சாலமோனின் நாட்களிலே வெள்ளை வஸ்திரங்கள் அணிவது அதிகமாயிருந்தது தற்கால அரசியல்வாதிகளைப் போல. The allusion to white garments is a beautiful exhortation to perpetual purity of charcter and conduct. வெளி. 7:13; 19:14 இதை உறுதிப்படுத்துகின்றன. வெள்ளையன் என்று ஆங்கிலேயரை சொல்கிறோமே ஏன்? அவர்கள் வெள்ளையாய் இருக்கிறார்கள் என்றா? இல்லை. அவர்கள் சிவப்பாய் பளிச்சென்று இருப்பதால். ரீகல் சொட்டு நீலம் உபயோகித்தால் மின்னலடிக்கும் வெண்மை வரும் என்று விளம்பரம் செய்கிறார்கள். அப்படியானால் கலர் ஆடைகளும் வெள்ளையாய் மாறுமா? இல்லையே! பளிச்சென்று சுத்தமாய் இருக்கும் என்றுதானே பொருள்! இப்படித்தான் நமது ஆடைகள் பளிச்சென்று சுத்தமாய் இருக்க தேவன் விரும்புகிறார். ஆவிக்குரிய ரீதியில் எடுத்துக் கொண்டால் நாம் தரித்திருக்கும் இரட்சப்பின் வஸ்திரம், நீதியின் சால்வை எல்லாம் எப்போதும் உத்தமமாய் இருக்க வேண்டும் (ஏசா. 61:10; கலா. 3:27; எபி. 10:29). உடம்புக்கு டிரஸ் மட்டும் காணாது; தலைக்கு எண்ணெய் எப்போதும் தேவை. இல்லையேல், அவன் பக்கிரி போல் காட்சியளிப்பான். இந்த எண்ணெய் தான் பரிசுத்த ஆவியானவர். (மத். 25; 2 தீமோ. 1:6). எப்போதும் நாம் ஆவியில் நடத்தப்படுகிற பிள்ளையாய் இருக்க வேண்டும். அப்போதுதான் இயேசுவோடு பரலோகம் போக முடியும்.

❖ ❖ ❖

## எது மன்னிக்க முடியாத பாவம்?

பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணம் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை என்று மத். 12:31, 32 கூறுகின்றது. இதை எல்லாக் கிறிஸ்தவர்களுமே அடிக்கடி சொல்வதுண்டு. கொலை, கொள்ளை, விபச்சாரம், அந்நிய பாஷைகளை திட்டுவது, அற்புதங்களை பழிப்பது போன்ற பாவங்கள்தான் பரிசுத்த ஆவிக்கு விரோதமானது என்று பலர் எண்ணுகின்றனர். இந்த பாவங்களை எல்லாம் செய்பவர்களுக்கு மன்னிப்பு உண்டல்லவா! அப்படி என்றால் பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம் எது? தேவன் வெளிப்படுத்துகிறார்.

1 யோ. 5:16ல் மரணத்திற்கு ஏதுவான பாவம், ஏதுவல்லாத பாவம் என்று இருப்பதாகவும், மரணத்திற்கு ஏதுவான பாவம் மகா கொடிது என்றும் சொல்லப்பட்டுள்ளது. மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்பவர்களுக்காய் வேண்டுதல் செய்யக்கூடாதாம். அது என்ன பாவம் என்று எரே. 7:16-18 வசனங்கள் சொல்கின்றன. அந்நிய தேவர்களை நம் தேவனுக்கு சமம் ஆக்கினாலே மரணத்துக்கு ஏதுவான பாவம். அதாவது நமக்காய் ஜீவன் தந்து இரட்சிப்பளித்த இயேசுவை விசுவாசிக்காமல் அந்நிய தேவர்களை நம் தேவனுக்கு சமமாய் வைப்பது தான் மரணத்துக்கு ஏதுவான பாவம். இதுதான் மன்னிக்க முயாத பாவம். பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துகின்ற பாவம். திருடு, பொய், விபச்சாரம் போன்றவை தான் இந்தப் பாவம் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லித்தான் தெரியுமா? நாத்திகனுக்கு, உலகத்தானுக்கு கூட இவைகளெல்லாம் பாவமென்று தெரிகிறதே.

யோ. 16:8 சொல்கிறது:- பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார். யாரைக் கண்டித்து உணர்த்துவார்? உலகத்தை; நம்மையல்ல; இரட்சிக்கப்படாத மக்களை. பலர், நம்மை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். தேவன் அவர்கட்கு வெளிப்படுத்தட்டும். எந்தப் பாவத்தை உணர்த்துவார்? யோ. 16:9 சொல்கிறது "அவர்கள் (இயேசுவை) என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும்", இயேசுவை விசுவாசிக்காததே பாவம்; இதுதான் பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்துகிற பாவம்; அதுதான் மரணத்துக்கு ஏதுவான பாவம்; இந்தப் பாவம் செய்பவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் மன்னிப்பு இல்லை. உலக இரட்சிப்புக்காய் உழைப்போம். திருடியது பாவம் என்றாலே மன்னிப்பு உண்டு; தொடர்ந்து உத்தமமாய் இருந்தால் அல்ல. ஆனால் அவிசுவாசம் பாவம் என்பதனால் மட்டுமே இல்லை; அதற்கு மேல் தொடர்ந்து விசுவாசியாய் இருக்கவேண்டும் அப்போதுதான் மன்னிப்பின் பலன் உண்டு. அல்லேலூயா.

❖ ❖ ❖

## பொருளாதார ஆசீர்வாதம் நமக்குண்டா?

அவர் (இயேசு) ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐஸ்வரியவான்களாகும் படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே (2 கொரி. 8:9). இயேசு தரித்திரரானார். ஏன்? நாம் ஐசுவரியவான்களாகும்படி. பலர் சொல்லுகிறார்கள். "இது பொருளாதார

ஐஸ்வரியம் அல்ல; ஆவிக்குரிய ஐஸ்வரியம்" என்று. அப்படியானால் இயேசு ஆவிக்குரிய தரித்திரரானாரா? இல்லையே; அவர் வல்லமையாய் கிரியை செய்தாரே; அவர் பொருளாதாரத்தில் தான் தரித்திரரானார் நாம் பொருளாதாரத்தில்தான் ஐசுவரியவான்களாகும் படிக்காய். இதை தேவன் வெளிப்படுத்தியும் பலர் இன்னும் ஏற்றுக் கொள்வதில்லை.

வெள்ளியும், பொன்னும் கர்த்தருடையது. அவர் ஐசுவரியவான்; நமக்காய் ஏழையானார்; "ஐசுவரியவான் பரலோகம் போகமாட்டான்; இம்மையிலே துன்பம் தான்; ஐசுவரியம் இல்லை; மறுமையில் தான் ஆசீர்வாதம்" என்று வாதிடுகின்றனர். அப்படியானால் தாவீது, ஆபிரகாம், ஈசாக்கு, யோசேப்பு, பிலமோன் போன்ற ஐஸ்வரியவான்களெல்லாம் போக மாட்டார்களா? பண ஆசை தான் கூடாது; அது பரலோகம் கொண்டு செல்லாது என்று வேதம் சொல்கின்றது. ஆனால் பணம் எல்லாவற்றுக்கும் உதவும் (1 தீமோ. 6:10; பிர. 10:19). புதிய ஏற்பாட்டு மக்களுக்கு இம்மையிலே எப்படிப்பட்ட ஆசீர்வாதம்? பரலோகில் தான் நம் கண்ணீர் துடைக்கப்படுமா? இயேசுவின் பொருட்டு, மிகுந்த உபத்திரவத்தில் கண்ணீரோடு மரிப்பவர் களுக்கு தான் பரலோகில் தேவன் கண்ணீர் துடைப்பார். (வெளி. 7:14,17). நமக்கு அல்ல; நாம் தான் மகா உபத்திரவத்திற்கு முன்பே போய் விடுவோமே; இயேசு சொன்ன (மாற். 10:29,30) வசனங்களை வாசியுங்கள்.

இம்மையிலே நூறத்தனையாய் ஆசீர்வாதம் என்று இயேசு சொல்லியும், விசுவாசிக்காத மக்களுக்கு, இந்த ஆசீர்வாதம் நிச்சயமாய் கிடைக்காது. மறுமையிலே கிடைக்கும் நித்திய ஜீவனை மட்டுமே விசுவாசித்தால் அது மட்டுமேதான் கிடைக்கும். நாமோ இயேசு சொன்ன இரண்டு ஆசீர்வாதங்களையும் விசுவாசிப்போம். நூறத்தனையாய் வீடுகள், சகோதர சகோதரிகள், தாய்கள், பிள்ளைகள், நிலங்கள் பெறுவோம்; அல்லேலூயா. தகப்பனும், மனைவியும் மாத்திரம் இம்மையிலே நூறத்தனையாய் கிடைக்காது. என்னே தேவனின் ஞானம்! ஒவ்வொருவனுக்கும் ஒரு தகப்பன்தான்; ஒரே மனைவிதான். விசுவாசிப்போம். பெற்றுக்கொள்வோம்.

❖ ❖ ❖

## இயேசு ஊதியது ஏன்?

உயிர்த்தெழுந்த இயேசு "அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்" (யோ. 20:22) என்றார். இந்த சத்தியம் நிறைய கிறிஸ்தவர்களுக்கு புரியாத புதிராய் கருகலாய் இருக்கிறது. ஒரு சிலர் இதை

வைத்து பரிசுத்த ஆவியின் அபிசேஷக் காரியத்தை கள்ள உபதேசமாகக் போதிக்கிறார்கள். தேவன் விளக்குவாராக.

வேதத்திலே தேவன் இரண்டு இடங்களில் மனிதர் மேல் ஊதினார். ஒன்று ஆதாம் உருவாக்கப்பட்ட போது (ஆதி. 2:7). மற்றொன்று உயிர்த்தெழுந்த பின் (யோ. 20:22). எசே 37:9ல் சொல்லப்பட்டது தீர்க்கதரிசன வார்த்தை. ஆதாமின் நாசியிலே ஜீவ சுவாசத்தை ஊதினார். அவன் ஜீவாத்மாவனான். தேவன் மனிதனை சிருஷ்டிக்கும் போதே ஆவியினால் சிருஷ்டித்தார். இயேசு பிறந்ததும் பரி. ஆவியினால் தானே. நாமும் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பரி. ஆவியினால் தானே பிறந்தோம் (யோ. 3:35) இயேசுவோடு இருந்த அப்போஸ்தலர்களும், சீஷர்களும் மறுபடியும் பிறந்தவர்கள்; ஞானஸ்நானம் பெற்றவர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் இயேசு மரித்தார் என்ற உடனே பயந்து ஒளித்துக் கொண்டார்கள். உயிர்த்தார் என்று கேள்விப்பட்டும், கலிலேயா கடற்கரைக்கு வரச் சொல்லியும் போகாமல், அவிசுவாசத்தால் கல்லறைக்கு போனார்கள். மறுபடியும் மீன்பிடிக்கும் எண்ணம் வந்தது, என்ன காரணம்? அவர்கள் பரி. ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு (அப். 1:4,8) உலகமெங்கும் போக வேண்டுமே! யோ. 14:17 (In English)ன் படி இவர்களுடனே பரிசுத்த ஆவியானவர் இருந்தால் தானே, வரப்போகிற ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற முடியும். ஆவியானவர் இவர்களோடு இல்லாததால் தானே இவர்களின் நடைமுறை தாறுமாறாய் இருக்கிறது, ஆவியினாலும் வசனத்தாலும் பிறந்த ஆவிக்குரியவர்கள், மாம்சத்திற்குரியவர்களாகி விட்டீர்களே? இனி இவர்களை Recoup பண்ணுவது எப்படி? அதனால்தான் இயேசு இவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார்; உடனே அவர்களுக்கு மறுபடியும்பிறந்த அனுபவம் வந்தது. தேவனைத் துதித்து மகிழ்ந்தார்கள் (லூக். 24:53) பரி. ஆவியின் ஞானஸ்நானத்தை யோ. 14:17ன்படி பெற்றுக் கொண்டார்கள். ஆனால் இன்றைக்கோ, நாம் பின் மாறி, பரி ஆவியின் ஞானஸ்நானத்தை பெறமுடியாத நிலையில் இருந்தோமானால், நமக்கு ஊத இயேசு மனுஷீகமாய் இல்லை. ஆனால் அன்று அப்போஸ்தலர்களுக்கு இல்லாத சிலாக்கியம் இன்று நமக்கு இருக்கிறதே; வேத வசனப் புத்தகம் இருக்கிறது; வசனத்தால் Recoup பண்ண முடியும். வசனத்தை போதிக்கும் போதகர்கள் நமக்குண்டு. இவர்களும் நம்மை Recoup பண்ணுவார்கள். நாம் பாக்கியசாலிகள்.

❖ ❖ ❖

# பாவங்களை மன்னிக்கும் அதிகாரம்

யோ. 20:23ஐ வைத்துக் கொண்டு, பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் போதகர்களிடம் உண்டு என பல சபைகள் போதிக்கின்றன. ஆவிக்குரிய சபை என்று சொல்லப்படும். "புதிய எருசலேம்" சபையும் சொல்கின்றது. இது குறித்து தேவன் விளக்குவாராக. இந்த அதிகாரம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் மல்ல. ஏனெனில் அன்று இயேசு அப்போஸ்தலர்களிடம் மட்டும் இதைச் சொல்லவில்லை; கூடியிருந்த அனைவரிடமும் சொன்னார். லூக். 24:33 இதை விளக்கும். அதே நேரத்தில் தோமா இல்லையே; அதனால் இந்த அதிகாரம் அவனுக்கு இல்லையா? இயேசுவை ஏற்றுக் கொண்ட விசுவாசிகள் எல்லோருக்குமே இந்த அதிகாரம் உண்டு. மற்றவர்கள் நமக்கு செய்த தவறுகளை, குற்றங்களை, பாவங்களை அவர்கள் அறிக்கையிட்டபின் அதற்கு மன்னிப்பு கொடுப்பது உண்டு. 1 யோ. 1:8-10 சொல்கிறது, நம்முடைய பாவங்களை தேவனிடம் அறிக்கையிட வேண்டுமென்று. அப்படி அறிக்கையிட்டால் தான் தேவன் மன்னிப்பாராம். நாமே - போதகரே மன்னிக்கு முடியுமென்றால் 1 யோ. 1:8-10; அப். 13:38,39 போன்ற வசனங்கள் தேவையில்லையே! பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் தேவனுக்கு மட்டுமே என்று இரட்சிக்கப்படாத யூதர்களுக்கு தெரிகிறது (மாற். 2) ஒருசில கிறிஸ்தவர்களுக்கு இன்னும் தெரியவில்லையே! சகல அதிகாரத்தையும் நமக்கு கொடுத்தார் என்பதால், இந்த அதிகாரத்தையும் கொடுத்து விட்டார் என்று சொல்லலாமா? அப்படியானால் படைக்கும் அதிகாரம் மனிதனுக்கு வந்து விட்டதா? சதாகாலமும் உயிரோடிருக்கும் அதிகாரம் மனுஷனுக்கு வந்து விட்டதா? இல்லையே! மனிதனுக்கு இவ்வுலகில் தேவையான அனைத்து அதிகாரங்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. அஃதல்லாத தேவத்துவ அதிகாரம் ஏதும் கொடுக்கப்படவில்லை. அப்படியென்றால் இங்கே சொல்லப்பட்ட அதிகாரம் என்ன?

நமக்கு எதிராய் பாவம் - தவறு - செய்தவன் அதை அறிக்கை செய்யாமலே அவனை மன்னிக்கும் அதிகாரம் நமக்கு உண்டு. இந்தப் பாவம் தேவனுக்கு விரோதமான பாவம் என்றால், தேவனிடத்தில் மட்டுமே அறிக்கை செய்து மன்னிப்பு பெறமுடியும். அப்படியல்ல வென்றால் விசுவாசிக்கு விரோதமாய் ஒருவன் செய்யும் பாவங்களை அந்த விசுவாசி உடனேயே மன்னிக்கலாம்; மன்னியாமலும் இருக்கலாம். இங்கு தான் விசுவாசி தன் உள்ளத்திலிருந்து எடுத்துப்போட வேண்டிய "மன்னியாமை" கொள்கை தேவைப்படுகின்றது. விசுவாசிக்கு விரோதமாய் எவன் என்ன பாவம் செய்தாலும் அவைகளை மன்னிக்க, மறக்க மட்டுமே நமக்கு

அதிகாரம் உண்டு; அதை அவன் நம்மிடம் அறிக்கை பண்ண வேண்டிய கட்டாயம் இல்லை; நாம் மன்னித்தால் தேவன் மன்னித்து விடுவார். மன்னியாவிட்டால் அது அவனை பிசாசினிடத்தில் ஒப்புக் கொடுக்க ஏதுவாகும் (மத். 5:25; 1 கொரி. 5:5). மன்னித்து விட்டாலோ நாம் தேவசாயலாகிக் கொண்டிருக்கிறோம் என்று பொருள்.

❖ ❖ ❖

## தேவனின் சிட்சை என்ன?

எபி. 12:5-11 வசனங்களை வைத்து, "தேவன் தம்மை நேசிக்கிறவர்களை வியாதி, வறுமை, மரணம், தோல்வி போன்ற காரியங்களினால் சிட்சிக்கிறார்" என்று விளக்கம் தந்து தேவனுடைய சத்தியத்தைப் பலர் கருகலாக்கி விட்டனர். தேவன் இன்று விளக்குவாராக.

பிசாசின் கிரியைகளை அழிக்கவே இயேசு வந்தார் (1 யோ. 3:8). வியாதியை ஒழித்தார் (மத். 8:17); வறுமையை ஒழித்தார் (2 கொரி. 8:9) மரணபயத்தை ஒழித்தார்; தோல்வி வாழ்க்கையை ஒழித்தார் (1 யோ. 5:5,6) சமாதானமின்மையை ஒழித்தார். இவைகள் எல்லாம் பிசாசின் கிரியைகள், இந்த பொல்லாங்கான கிரியையை தேவன் கொடுப்பதில்லை; பிசாசு தான் கொடுக்கிறான். (யாக். 1:13-17) தான் சிலுவையில் அழித்த பொல்லாங்கானதை தேவன் மறுபடியும் தன் பிள்ளைகளுக்கு அவராகவே அனுமதித்தால், அவர் சிலுவையில் அழித்தது வீண்! அவர் அனுமதிக்கிறவரல்ல, மனிதன் தான் தன்னுடைய கிரியையினாலோ அல்லது பிசாசின் சோதனையினாலோ தனக்கு தானே அறிந்தோ, அறியாமலோ அனுமதித்துக் கொள்கிறான்; அதைக் கண்டு தேவனும் ஒன்றும் செய்வதில்லை. கற்பனைகளை மீறினால் வரும் சாபத்தை வேண்டுமானால் நாமே தேடிக்கொள்ளலாம்.

அப்படியானால் எபி 12ல் சொல்லப்பட்ட சிட்சை தான் என்ன? இங்கே சிட்சிக்கிறவர் யார்? தேவன். யாருக்கு சிட்சை? தேவனுடைய பிள்ளைக்கு (வச. 6) இப்படிப்பட்ட தான சிட்சை இல்லையென்றால் நாம் வேசிப்பிள்ளைகள்; வேசிப்பிள்ளைகளுக்கு அதாவது இரட்சிக்கப்படாத உலகப்பிள்ளைகளுக்கு இந்த சிட்சை இல்லை (வச.8). அல்லேலூயா! ஏன் நம்மை சிட்சிக்கிறார்? நாம் பரிசுத்தமாகும் பொருட்டு (வச. 10) எவ்வளவு காலம் சிட்சை? நீதியாகிய பலனைத் தரும் வரை, (வச. 11) வியாதி, வறுமை இவையெல்லாம் சிட்சை யென்றால் அது வேசிப்பிள்ளைகளுக்கு

வரக்கூடாதே! இந்த சிட்சை எங்கே கொடுக்கப்படும? சரீரத் தகப்பன் தங்கள் பிள்ளைகளை சரீரத்தில் சிட்சிப்பார் (நீதி. 3:11,12); ஆவியின் தகப்பனான தேவன் தம் ஆவிக்குரிய பிள்ளைகளை ஆவியிலும், ஆத்மாவிலும் தான் சிட்சிப்பார் (வச. 9). அப்படியென்றால் எதன் மூலம் சிட்சிப்பார்?

தம்முடைய வேதவசனத்தின் மூலம் பரிசுத்தமாகும்படி, நீதியைப் படிப்பிக்கும்படி, சீர்திருத்தும்படி, உபதேசித்து கடிந்து கொள்வார். (2 தீமோ. 3:16,17; யோ. 15:3; 17:17); பொல்லாங்கினால் அல்ல. பெந்தகொஸ்தே நாளிலே தேவ வசனத்தாலே தான் இஸ்ரவேலர்கள் இருதயத்திலே குத்தப்பட்டு பரிசுத்தவான்களானார்கள் (அப். 2:37). பொருளாதார இச்சையுடைய ஐஸ்வரியவான் இயேசுவின் வசனத்தினாலே தான் கடிந்து கொள்ளப்பட்டு பின் வாங்கிப்போனான் (மத். 19:22) 2 கொரி. 5ல் பயங்கர விபச்சாரத்தை பவுல் கண்டித்ததினாலே தான் 2 கொரி. 7:8,9ல் பவுல் சொன்னபடி கொரிந்தியர் திருந்தினார்கள்; வியாதியினாலோ, வறுமையினாலோ ஒருவனும் பரிசுத்தமாக முடியாது; அல்லேலூயா! அப்படியானால் தேவ வசனம் தேவையில்லையே!

❖ ❖ ❖

## பவுலுக்கு வியாதியா?

2 கொரி. 12:7-9 வசனங்களை வைத்துக் கொண்டு "பவுலுக்கு மாமிசத்திலே முள் என்பது வியாதி (கண் வியாதி); அதற்காய் அவன் ஜெபித்தும் தேவன் வியாதி இருக்கட்டும் என்று அனுமதிக்கிறார். இப்படியாய் நமக்கும் தேவன் வியாதியை அனுமதிக்கிறார்; அதனால் நாம் சாகும் வரை கஷ்டப்படுவது நமக்கு மகிமை" என்று பிரசங்கம் பண்ணும் ஊழியர் உண்டு; இவர்கள் செழிப்பான சத்தியத்தை கருகலாக்கின்றனர். தேவன் விளக்குவாராக!

பவுலுக்கு மாம்சத்திலே முள் இருக்கிறது. அது சாத்தானுடைய தூதனாயிருக்கிறது; தேவனுடையதல்ல. எதற்காய் கொடுக்கப்பட்டது? பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளைக் குறித்து அவன் மேன்மை பாராட்டி உயர்த்தாதபடிக்கு. இதற்கு வியாதி கொடுக்கப்படுமா? அப்படியென்றால் பரிசுத்தவான்களுக்கு வியாதிகள் வருகின்றனவா? அப்படி வந்தால் பின் ஏன் டாக்டரிடம் போகவேண்டும்? மேட்டிமை வேண்டும் என்று விரும்புகிறார்களா? அல்லது பவுல் மூன்று முறை ஜெபித்தும் பலன் இல்லையே, பின் ஏன் ஜெபிக்கிறார்கள்? அவர் தான் வியாதியை

தேவையென்றே அனுமதிக்கிறார் என்று விசுவாசிக்கிற நீ ஜெபிக்கலாமா? வியாதியைக் குறித்து பவுல் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டினால், அந்த வியாதியை தேவன் ஏன் சிலுவையில் ஒழிக்க வேண்டும்? பவுல் சிலுவைத் தியானத்திற்கு விரோதியா? அல்லவே! அப்படியானால் இந்த முள் என்பது என்ன? எண். 33:55; யோசு. 23:13; எசே. 28:24ல் சொல்லப்பட்ட முள் என்ற அதே வார்த்தைதான் இங்கும் உள்ளது. முள் என்றால் மனிதர்கள் மூலமாய் வரும் மாம்சிக எதிர்ப்பு; பகை என்பதாகும். இந்த எதிர்ப்பையும், பகையையும் பிசாசானவன் தந்து, பவுல், மேலும் வெளிப்படுத்தப்பட வேண்டிய காரியங்களை தேவனிடம் பெற்று மேன்மையாகாத படிக்கு செய்கிறான். ஊழியத்திலோ உலகத்திலோ இப்படிப்பட்ட எதிர்ப்பு நமக்கு வந்தால் தேவன் உடனேயே பகைமையை ஒழிக்க மாட்டார். அவரின் நாமம் மகிமைப்பட, தம் வல்லமையை நமக்குத்தந்து, கிதியோனைப் போலாக்கி வெற்றி பெறச் செய்வார். அதனால் தான் தேவன் சொல்லுகிறார், "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலன் பூரணமாய் விளங்கும்" என்று. பெலவீனம் என்ற உடனே வியாதி என்று எண்ணுகின்றனர். 2 கொரி 13:4ன்படி இயேசு பெலவீனப்பட்டவர் என்பதால், அவர் வியாதி பிடித்தவரா? இல்லையே! இதன் பொருள் மாமிசப்பெலன் இல்லை என்பதாகும். வசனம் 9ம் அப்படித்தான். பிலி. 4:17ஐ இங்கே பவுல் பிரதிபலிக்கிறார். சேனைக்குள் பாய்வேன்; மதிலைத் தாண்டுவேன் என்று தாவீதும் பாடினானே! 2 கொரி. 12:10 நன்கு விளங்குகிறதல்லவா! மாம்சீகமுள்ளாகிய எதிர்ப்பை பிசாசு தருகிறான்; அதன் மூலமாய் ஊழியரெல்லாம் வெளிப்பாடுகளால் மேன்மை பாரட்டாமல், ஊழியத்தை விட்டு விடுவார்கள் அல்லது குறைத்துக் கொண்டே போவார்கள் என்று பிசாசு அறிந்திருக்கிறான். ஆனாலும் தேவ கிருபை நமக்குப் போதும்; பலவீனத்தில் அவர் பெலன் தருகிறார்.

❖ ❖ ❖

## யெப்தாவின் மகள் பலியானாளா?

நியா. 11ம் அதிகாரத்தில் யெப்தா என்பவன், அம்மோன் புத்திரரை வென்று வரும்போது, தன் மகள் எதிர்கொண்டு வரவேற்றதினால் தன் பொருத்தனைப்படியே அவளை தேவனுக்குப் பலியிட்டான் என்று அநேகர் நினைக்கின்றனர். பிரசங்கிக்கின்றனர். தேவன் இந்த கருகலானதை விளக்குவாராக.

நம் தேவன் நரபலியை விரும்புகிறவரல்ல என்று உபா. 12:31; 18:10; லேவி. 20:1,2 போன்ற வசனங்களால் அறியலாம். எனவே யெப்தா தன்

மகளை நிச்சயம் பலியிட தேவன் அனுமதித்திருக்கமாட்டார். அப்படியானால் அவன் பொருத்தனை என்ன? மூல பாஷையில், "எதிர்கொண்டு வருவது கர்த்தருக்கு உரியது; சர்வாங்க தகனபலிக்குப் பதிலாக அதை தேவனுக்கு ஒப்புக் கொடுப்பேன்" (நியா. 11:31) என்று உள்ளது. The things which comes out from the doors of my house to meet me, when I return in peace from the sons of Ammon shall belong to Jehovah and I will offer it instead of burnt offering என்று எபிரேய மொழிபெயர்ப்பு வேதாகமாகிய Interlinear Bible சொல்கின்றது. நரபலி செலுத்துவேன் என்று அவன் தேவனிடம் சொல்லியிருந்தால் தேவனை அவனை திருத்தியிருப்பார்; அல்லது அவன் ஜெபிக்க உதவியிருக்க மாட்டார்; அல்லது முதலில் அவன் மகளை எதிர்வர வழி விட்டிருக்க மாட்டார். லேவி 27ன்படி தகனபலி செலுத்தாமல் அதற்கு மாறுத்தரம் பண்ணவும் வழி உண்டு என்பதை யெப்தா அறிந்திருப்பானே என முதலில் நாம் உணர வேண்டும். அவன் மகள் தகப்னிடம் தன் பொருத்தனைப்படி செய்யச் சொல்லி விட்டு "துக்கம் கொண்டாட 2 மாதம் தவணை கொடும்" என்று கேட்கிறாளே என்ன துக்கம்? நியா. 11:37 சொல்கிறது. "கன்னிகையின் நிமித்தம்" என்று. ஆக அவள் "பலியிடப்படவில்லை; கன்னிகையாக தேவனுக்கு பணிவிடை செய்ய ஆக்கப்பட்டாள்" என்று அறிகிறோம். இதுதான் பொருத்தனை என்று மகளுக்கு தெரிந்து தான் 2 மாதம் அவகாசம் கேட்கிறாள். இது தான் பொருத்தனை என்று யெப்தாவுக்கும் தெரியும் (நியா. 11:39) 2 மாதம் கழித்து அவளை பலியிட்டான் என்று போடவில்லை; பொருத்தனையின்படி செய்தான் என்று எழுதப்பட்டுள்ளது. என்ன பொருத்தனை? "அவர் புருஷனை அறியாதிருந்தாள் என்ற வசனத்தாலே அவள் பலியாகவில்லை; கன்னிகையாய் தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்டாள்; இதுவே அவனின் ஒப்புக்கொடுக்கப்படும் பொருத்தனை" என அறியலாம். தன் மகள் எதிர் வருகிறதைக் கண்ட உடனே ஏன் யெப்தா கலங்கினான்? அவளை பலியிட வேண்டுமே என்பதாலா? அல்ல. நியா. 11:34 விளக்குகிறது. அவள் அவனுக்கு ஒரே பிள்ளை; வேறு மகனோ மகளோ இல்லை; இப்பொழுதோ அவள் கன்னி; அப்படியே அவளை கன்னிகையாக தேவனுக்கு ஒப்புக் கொடுத்தால் அவன் சந்ததி பின்னால் உருவாக அவனுக்கு வழி இல்லாமல் போகுமே! இதை நினைத்தான்; கலங்கினான், உண்மையிலேயே அவனுக்குப் பின்னால் சந்ததி இல்லாமலே போயிற்று.

❖ ❖ ❖

# பரிசுத்தத்தின் மூன்று படிகள்

தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒரவனுமில்லையே (லூக். 18:19) என்று இயேசு கூறுகிறார்; சங்கீதக்காரனும் சொல்லுகிறான் (சங். 86:5; 19:68). பவுலும் எடுத்துச் சொல்லுகிறான். (ரோ 3:10) "நீதிமான் ஒருவனுமில்லை" என்று சாலமோனும் சொல்லுகிறான். (பிர. 7:20). ஆனால் பழைய ஏற்பாட்டிலோ நோவா (ஆதி 6:9), ஆசா. (1 இரா. 15:14), எசேக்கியா (1 இரா. 20:3), யோபு (யோபு 1:18) போன்றவர்கள் எல்லாருமே நீதிமான்கள், உத்தமர்கள், நல்லவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே அது எப்படி? வேதம் மாறுபாடான கருத்துக்களைப் போதிக்குமா? அப்படியானால் உண்மையான காரியம் என்ன? கருகலாக்கப்பட்டிருக்கிற சத்தியம் தான் என்ன? நோவா உத்தமன்தான்; ஆனால் குடிவெறியனாயிற்றே! ஆபிரகாம் நல்லவன் தான்; ஆனாலும் பாவங்கள் செய்திருக்கிறானே! யோபு நல்லவன் தான்; ஆனாலும் அறியாத வார்த்தைகளை அலப்பினானே! பாவம் செய்யாத பாவமே இல்லாத மனுஷன் உலகில் ஒருவனும் இல்லை. மனிதனது பாவ சரீரம் இருக்கும் வரை, சொல்லினாலும், செயலினாலும், சிந்தனையினாலும் மனிதன் அறிந்தோ அறியாமலோ பாவம் செய்கிறான். இரட்சிக்கப்பட்ட, வேதமறிந்த மனுஷனும் அப்படியே! அதனால்தான் யோவான் "நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களா யிருப்போம்" (1 யோ. 1:8) என்று தன்னையும் அந்த வரிசையிலே சொல்லுகின்றனான். ஆக எல்லா மனுஷருக்குள்ளும் பாவ காரியங்கள் இருக்கின்றன. அதனால் தான் இயேசு சொன்னார் தேவன் ஒருவரே நல்லவர் என்று; அவர் பாவத்தைப் பாரா சுத்தக் கண்ணர். எனவே தான், உலகத்தார் பாவத்தையெல்லாம் இயேசு சுமந்து பாவியாய் சிலுவையில் தொங்கும் போது தேவன் அவரைப் பார்க்கவில்லை. ஆதலால் தான் இயேசு, "தேவனே! என்னை ஏன் கைவிட்டீர்" என்று கதறினார். பின்பு எப்படி இந்த பழைய ஏற்பாட்டு மக்களெல்லாம் நீதிமான் என அழைக்கப்படுகின்றனர்? பாவிகளாகிய நாம் எப்படி நீதிமான்களானோம்? யாரும் தங்களுடைய சொந்த நீதியால் நீதிமானாகவில்லை. ரோ. 10:10 சொல்கிறது. "நீதி உண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும்; இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" என்று. இது எந்த நீதி? விசுவாசத்தினால் உண்டாகும் நீதி; நம் கிரியைகளினால் உண்டாகும் நீதியல்ல (1 கொரி. 6:11). இதுதான் தேவநீதி. இந்த விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியை உடையவர்களாய் இருந்த பழைய ஏற்பாட்டு மக்களை தான் பரிசுத்தவான்; நீதிமான்; நல்லவன்; உத்தமன் என்று வேதம் சொல்கின்றது. பவுலும்

இப்படிப்பட்ட நீதிமானாய்த்தான் இருந்தான் (பிலி. 3:9). இரட்சிக்கப் பட்டவர்களாகிய நாமும் இப்படித்தான் இருக்கிறோம். இதைத்தான் தேவன் விரும்புகிறாரே ஒழிய, மனிதனால் பூரணமாய், சுயமாய் இருக்கமுடியாத நீதியை விரும்பவில்லை.

இந்த பரிசுத்தம் அல்லது உத்தமம் என்பது மூன்று படிகளில் இருக்கின்றன. **முதல்படி** நம்முடைய ஸ்தானத்தில் வரும் பரிசுத்தம். எபி 10:14ன்படி இயேசுவின் சிலுவைப்பலி இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்கள், பரிசுத்தவான்கள் (ரோ. 3:24; 5:1). இது விசுவாசி என்ற ஸ்தானத்தில் வரும் பரிசுத்தம் (Positional Perfection). பரமசிவன் கழுத்தில் பாம்பு இருந்ததால் தானே, கருடனைப் பார்த்து சௌக்கியமா என்று கேட்டதாக புராணம் சொல்கின்றது. இயேசுவின் பிள்ளையாய் விசுவாசியாய் மாறினதினால் நீதி வந்து விடுகிறது. பரிசுத்தம் வந்து விடுகின்றது. நீதிமானாகிறோம், பரிசுத்தவானாகிறோம், **இரண்டாவதுபடி** ஆவிக்குரிய பரிசுத்தம். பவுலைப்போன்றோர் பெற்றுக் கொள்வது இது (பிலி. 3:15 English). இந்தப் பரிசுத்தம் பெறுவது எப்படி? தேவனுக்கேற்ற சித்தங்களில் தேறினவர்களாய் இருக்க வேண்டும். (கொலோ. 4:12) அன்பிலே பூரணப்பட வேண்டும் (1 யோ. 4:17,18). மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக் கொள்ள வேண்டும் (2 கொரி. 7:1) பொறுமையினால் கிரியை செய்ய வேண்டும் (யாக். 1:4) நற்கிரியைகளிலே சீர்பொருந்தினவர்களாக வேண்டும் (எபி. 13:21). இந்தப் பரிசுத்தம் சிறிது சிறிதாக, நாட்பட, நாட்பட வந்து சேரும். பரிசுத்தத்தின் முதல் படியில் கால் வைத்தவர்கள், சீர் பொருந்தி இரண்டாவது படியின் பரிசுத்தத்தில் முழுமை பெறவே தேவன் சபையில் ஐந்து விதமான ஊழியங்களை ஏற்படுத்தி இருக்கிறார் (எபே. 4:11-13). **மூன்றாவது படிதான்** ஆவி, ஆத்மா, சரீரம் இம்மூன்றிலும் பெறுகின்ற பரிபூரண பரிசுத்தம். இதைத்தான் நான் அடையவில்லை என்று பவுல் கூறுகிறான் (பிலி. 3:12). பவுல் மட்டுமல்ல; இரட்சிக்கப்பட்ட நீதிமான்களாகிய நாமெல்லாருமே அடைய முடியா பரிபூரண பரிசுத்தம். பாவமில்லா பரிசுத்தம் (Sinless Perfection); தேவனின் பரிசுத்தம் (1 பேது. 1:15,16). இப்படிப்பட்ட பரிசுத்தம் தேவன் ஒருவரிடமே உண்டு (லூக். 18:19). நம்மிடம் இருக்க முடியாதல்லவோ! (1 யோ. 1:8-10). ஆனால் நாம் பெற்றிருக்கிற, நாளுக்கு நாள் வளர்த்து வருகிற இரண்டாவது படியாகிய ஆவிக்குரிய பரிசுத்தமானது (1 தெச. 5:23), நாம் மரித்தோரிலிருந்து எழும்பும் போதோ அல்லது ரகசிய வருகையில் மறுரூபமாகும்போதோ, பரிபூரண பரிசுத்தத்திற்கு நம்மை தகுதியாக்கும் என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை (பிலி. 3:10). அல்லேலூயா! எனவே சுயநீதியை, சுய பரிசுத்தத்தை நாடாமல்

முதல் படியையும், இரண்டாவது படியையும் அடைவோம்! மூன்றாவது படிக்கு அதுவே தகுதியாக மாறும்.

❖ ❖ ❖

## பரலோக ராஜ்யமும் புளித்தமாவும்

"பரலோக ராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு ஸ்திரி எடுத்து முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்று படிமாவிலே அடக்கி வைத்தாள்" (மத். 13:33), பரலோக ராஜ்யம் என்றாலே பரிசுத்தமானது என்ற கண்ணோட்டம் பலருக்கு இருப்பதால், இங்கு புளிப்பு என்றால் பரிசுத்தம், நீதி என்று கணிக்கின்றனர். வேதத்தில் ஒரு இடத்தில் கூட புளிப்பு (Leaven) என்பது பரிசுத்தம் என்ற அர்த்தத்தில் வரவில்லை. புளிப்பு என்றாலே அசுத்தம், பாவம் என்ற கருத்தில்தான் வருகிறது (மத் 16:6,12; மாற் 8:15; லூக் 12:1; 1 கொரி. 5:6-9; கலா. 5:9). அப்படியானால் பரலோக ராஜ்யத்தில் அசுத்தம் நிறைந்திருக்குமா? இது கேள்வி. தேவன் இயேசு பூவுலகில் ஸ்தாபித்து விட்டுப் போன, இன்றும் பெருகிக் கொண்டிருக்கிற சபையாகிய ராஜ்யம் தான் இது (மத். 4:17). சபையிலேயே களைகளும் கோதுமையும், கெட்ட மீனும், நல்ல மீனும் இருக்கும் என்று இயேசு சொன்னாரே! (மத் 13:24-30). அதனால் தான் சபை உண்டான பெந்தகொஸ்தே நாளில் புளிப்புள்ள இரண்டு அப்பங்கள் படைக்கப்பட்டன (லேவி. 23:17). ஆனால் புளிப்பில்லா அப்பப் பண்டிகையிலோ, பஸ்கா பண்டிகையிலோ புளிப்பில்லா அப்பம் படைக்கப்பட்டது (லேவி. 23:6-8). அவைகள் முறையே தனிப்பட்ட மனிதனின் ஆவிக்குரிய வாழ்க்கையையும், இயேசுவின் பலியையும் குறிப்பதால், இவை இரண்டிலும் அநீதியான காரியங்கள் ஒன்றும் இருக்கலாகாது என்று அறிகிறோம். ஆனால் சபையிலே அன்றும் இன்றும் நியாயங்களும் அநியாயங்களும் இணைந்தே இருக்கின்றன; கள்ள உபதேசங்கள் பெருகியே வருகின்றன; மூன்று படி மாவு என்பது பொதுவாக ஒருவேளை போஜன அப்பத்துக்காய் உபயோகிப்பது என்று பொருள். ஆபிரகாம் மூன்று தேவ புருஷர்களுக்கு மூன்று படி மாவுதானே உபயோகித்தான் (ஆதி. 18:6). அவன் புளித்த மாவை சேர்க்கவில்லை, பொதுவாக போஜன அப்பம் என்பது (யோ. 6:48) தேவனுடைய வார்த்தையை குறிக்கும். ஸ்திரி என்றாலே சபையைக் குறிக்கும். வார்த்தையாகிய போஜன அப்பமாவிலே சபையாகிய ஸ்திரி, களங்கமாகிய, அநீதியான, கள்ளமான புளித்த மாவை இணைக்கிறாள். பரிசேயர், சதுசேயர் மற்றும் உலகத்தாரின் சுய கொள்கைகளை கலக்கிறாள். தேவ வசனமே

களங்கமாகும் வரை செய்கிறாள். இந்தக் காலத்தில் இரட்சிக்கப்பட்டோர் நிறைந்த சபைகள் மத்தியிலே இந்தக் கறைகள் அதிவிரைவாய்ப் பரவுகின்றன. இப்படியாய் பரலோக ராஜ்யம் பூமியில் இருக்கும் என்று அன்றே சொன்னார் இயேசு. தெரிந்தவர்கள் புரிந்து கொள்ளட்டும்!

❖ ❖ ❖

## உடலுறவு பாவமா?

"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங். 51:5). இந்த வசனத்தை வைத்துக் கொண்டு ஆண்பெண் உடலுறவு பாவம் என்று பல கிறிஸ்தவர்கள் கருதுகின்றனர். அப்படியானால் ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கு ஏற்ற துணையாய் ஏவாளாகிய பெண்ணை ஏன் ஏற்படுத்த வேண்டும்? ஆணையோ அல்லது ஏதோ ஒரு ஜீவராசியையோ உண்டாக்கியிருக்கலாமே! ஆதாமும் ஏவாளும் உடலுறவு கொண்டு குழந்தைகளைப் பெற்றது, அவர்கள் பாவம் செய்து ஏதேனை விட்டு விரட்டப்பட்ட பின்தான் என்பதால், அந்தக் காரியம் பாவமானது என்று வாதிடுவோரும் உண்டு. பாவம், இவர்கள் மனக்கண் பிரகாசமாகட்டும்! ஆதாமும் ஏவாளும் பாவம் செய்யாமலே ஏதேனில் இருந்திருந்தாலும் குழந்தைகளைப் பெற்றிருப்பார்கள். ஆதாமையும், ஏவாளையும் படைத்த உடனேயே தேவன் கொடுத்த முதல் கட்டளை "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" (ஆதி. 1:28) என்பதாகும். இது பாவம் என்றால் பாவமே செய்யாத காலத்தில் தேவன் ஏன் அவர்களுக்கு இப்படி கட்டளை கொடுக்க வேண்டும்? தேவனோடே சஞ்சரித்து மறுரூபமான ஏனோக்கு, 300 வருஷம் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான் (ஆதி. 5:22) என்று வேதம் சொல்கின்றதே! வேதத்தின் ஆரம்பமே ஏதேன் கல்யாணம்; இயேசுவின் ஊழிய ஆரம்பமே கானாவூர் கல்யாணம்; வேதத்தின் முடிவும் ஆட்டுக் குட்டியானவரின் கல்யாணம். அப்படியென்றால் கல்யாணம் பாவமாகுமா? விவாக மஞ்சம் யாவருக்குள்ளும் கனமுள்ளது (எபி. 3;14) என்று பவுல் சொல்வதால் இந்தக் காரியம் பாவமாகாதே! அந்தக் காரியம் பாவமென்றால் இந்தக் கால சபைகளில் போதகர்கள் ஏன் திருமணக் காரியங்களை அனுமதிக்க வேண்டும்? பாவமென்று தெரிந்தும் செய்வது மகா பெரிய தவறு அல்லவா? அப்படியானால் சங் 51:15ன் அர்த்தம் என்ன? ஒரே மனுஷனாலே எல்லோரும் பாவிகளாக்கப்படுகின்றோம் (ரோ. 5:12,19). ஆதாமின் பாவ இரத்தம் நம் எல்லோருக்கும் இருக்கிறது. அதனால்தான பரி.

ஆவியினால் பிறந்த இயேசுவின் இரத்தம் விலையேறப்பெற்றது என்று விசுவாசிக்கிறோம். பாவ இரத்தத்தால் எல்லா மனுஷனும் பாவ சாயலாயப் பிறக்கிறான். தாவீது மட்டுமல்ல, உலகில் பிறந்த அத்தனை பேரும் துர்க்குணத்தில் - பாவ சாயலில் தான் உருவானோம்; பாவ இரத்தத்தில் தான் கருவானோம். இதனால் தான் சிறு குழந்தைகள் கூட பொய், திருடு, பொறாமை, கோபம், பெருமை, சுயம் என்ற பாவங்களோடே வளர்கின்றன. இவைகளெல்லாம் யாரும் சொல்லிக் கொடுத்து வருவதில்லை; தானே பிறப்பினால் வருகின்றன. இந்த பாவசாயல் முழுமை பெறும்போது அவன் பிசாசின் பிடிக்குள் முழுமையாய் ஆகிவிடுகின்றான். அவனைத் தான் இயேசு தன் இரத்தத்தினால் பிடித்து தேவ சாயலாக மாற்றுகின்றார்; அவன் மனமும் மறுரூபமாகின்றது. அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஜலத்தினால் பிறப்பது ஞனாஸ்நானமா?

"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோ. 3:5) என்ற வசனத்தை வைத்துக் கொண்டு, பலர், இது ஞானஸ்நானத்தையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் சொல்கின்றது என்று கூறி, இதனாலே இந்த இரண்டையும் ஆணித்தரமாய் போதிப்பவரும் உண்டு. முழுக்கு ஞானஸ்நானமும் பரிசுத்த ஆவியின் அபிஷேகமும் தேவைதான். ஆனால் பரலோக ராஜ்யத்தில் இந்த இரண்டு அனுபவங்களும் இல்லாதவர்களும் கூட இருப்பார்களே! ஆபிரகாம், தாவீது, கள்ளன் போன்ற பலருக்கு இந்த அனுபவங்கள் இல்லையே! அப்படியானால் இந்த சட்டம் புதிய ஏற்பாட்டு மக்களுக்குத்தானா? தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது என்பது எல்லா ஏற்பாட்டு மக்களுக்கும் பொதுவானது அல்லவா! இன்றைக்கு ஒருவன் இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் விசுவாசிக்கிறான். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இன்னும் பெறவில்லை; அவனுக்குரிய போதகர் அடுத்த வாரம் தான் ஞானஸ்நானம் கொடுக்கப் போகிறார். இந்தச் சூழ்நிலையில் நாளைக்கு இயேசு வந்துவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம்; அல்லது இன்றிரவு அந்த ஆள் மரித்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். அந்த மனிதன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பானா? நிச்சயம் பிரவேசிப்பான். எப்படி? அதைத்தான் இந்த வசனம் விளக்குகிறதே ஒழிய, நவீன பிரசங்கம் போல தண்ணீரினால் ஞானஸ்நானத்தையும்,

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் குறிப்பது அல்ல. "ஆவியினால் வார்த்தையினால் மறுபடி பிறக்கச் செய்தீர்; ஐயா மறுபடி பிறக்கச் செய்தீர்" என்ற பாடலை பாடிக் கொண்டே, இப்படி நவின பிரசங்கங்களும் பண்ணப்படுகின்றதே! ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பதுதான் மறுபடி பிறப்பு.

மறுபடி பிறந்தவன்தான் ரோ. 10:9,10ன்படி இரட்சிக்கப்பட்டு அப் 2:47ன்படி கிறிஸ்தவ சபையில் சேர்க்கப்படுகின்றவன். மற்றவர்கள் எல்லாரும் பெயர்க் கிறிஸ்தவர்கள் தான். இங்கே ஜலம் என்பது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது (யோ. 4:14; 7:37; எசே. 36:25; 1 பேது. 1:23; யாக். 1:18; எபே. 5:26; ஏசா. 12:3). தேவனுடைய வார்த்தையினால் மறுபடியும் பிறக்க வேண்டும்; அப்படியாய் நமக்குள் தேவனுடைய வார்த்தையை கொடுத்து மறுபடியும் பிறக்க வைப்பவர் பரி. ஆவியானவரே! அவரன்னியில் ஒருவனும் மறுபடியும் பிறக்க முடியாது. அவரே இயேசுவை விசுவாசிக்காத பாவத்தை உலகிற்கு கண்டித்து உணர்த்துகிறவர் (யோ. 6:63: 16:8,9). இப்படியாய் தேவனுடைய வார்த்தையை வைத்து ஆவியானவரால் மறுபடியும் பிறப்பிக்கப்பட்டவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பான். இப்படிப்பட்ட பிறப்பு சரீரத்திலல்ல; அறிவாகிய ஆத்மாவில் அல்ல; ஆவியாகிய தேவனால் நம் ஆவியில் நடப்பது. இந்த ஆவிதான் புது சிருஷ்டிப்பாய் மாறி புதிதாயிற்று; (2 கொரி. 5:17). இதன் மூலம் ஆத்மா நாளுக்கு நாள் மறுரூபமாகும்; (ரோ. 12:2; 1 பேது. 1:9). சரீரம் தேவனின் வருகையில் மறுரூபமாகும் (ரோ. 8:23). இது தான் ஆவியில் பிறந்த மனிதன் என்பது. இதுதான் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் (கலா. 3:27; 1 கொரி. 12:13; ரோ. 6:3). இனி நம் ஆவியும் தேவ ஆவியும் ஜலமாகிய வசனத்தோடு இரண்டறக் கலந்தே செயல்படும் போது வசனத்தின்படி முழுக்கு ஞானஸ்நானம் எடுப்போம். பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வோம்; பரிசுத்த ஜீவியம் செய்வோம். அப்போது "முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க மாட்டேன்; பரிசுத்த ஆவியை அந்நிய பாஷை அடையாளத்தோடு பெறமாட்டேன்" என்று வசனத்திற்கு விரோதமாய் ஒருவன் அடம் பிடித்தால், நிச்சயமாய் தேவ வசனமே அவனை நியாயந்தீர்க்கும். அபப்படிப்பட்டவனும். அந்திக் கிறிஸ்தவ மார்க்கத்தாரும் ஒன்றே (1 கொரி. 12:3; எபே. 2:1; தீத்து. 3:5). தேவனுடைய வித்து அவனுக்குள் இராது.

❖ ❖ ❖

# தன்னை சிலுவையில் அறைந்தவர்களை இயேசு மன்னிக்க முடியாதா?

“பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்” (லூக். 23:33) தன்னை சிலுவையிலறைந்து கொல்லுகிறவர்கள் அறியாமல் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை இயேசுவே மன்னிக்கலாம்; பின்னே ஏன் பிதாவிடம் மன்னிக்க கோருகிறார்? தேவன் விளக்குவாராக!

திமிர்வாதக்காரனை நோக்கி “உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது” (மாற். 2:5) என்று சொன்னவர், இப்போது பிதாவை மன்னிக்க சொல்கிறாரே! பூமியிலே பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டெனறு சொன்னவர் (மாற். 2:10) இப்போது அதிகாரம் இல்லாமல் போயிற்றா? தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தையே பாவ மன்னிப்புக்காய் சிந்தி புது உடன்படிக்கையை உண்டாக்கியவர் (மத். 26:28). பாவத்தை மன்னிக்க முடியாமல் போனதென்ன? தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்கத்தக்கவர் என்ற இஸ்ரவேலரின் கூற்று உண்மையாயிற்றா? அப்படியானால் இயேசு தேவனில்லையா? இப்படி பல கேள்விகளை எழுப்பிக் கொண்டே போகலாம். மனிதனாய் பிறந்த இயேசு கிறிஸ்துவினுள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் நிறைந்திருந்தது. (கொலோ. 2:9) எனவே அவர் பாவிகளை மன்னித்தார்; அற்புதங்கள் செய்தார்; தேவனுடைய ராஜ்யத்தை உருவாக்கினார். ஆனால் அவர் என்றைக்கு நமக்காய் இரத்தம் சிந்த ஆரம்பித்தாரோ, அவமானச் சிலுவையை ஏற்றாரோ அன்றே உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற ஆட்டுக் குட்டியானார் (யோ. 1:29). சிலுவையிலே நம் பாவங்களைச் சுமந்தார்; நமக்காய் பாவமாக்கப்பட்டார் (2 கொரி. 5:21). பாவியாய் சிலுவையில் தொங்கினார். அவர் பாவமாக்கப்பட்டதாலே அவரால் பாவங்களை மன்னிக்க முடியவில்லை; அந்த நிலையிலும் நமக்காய் இஸ்ரவேலருக்காய் தேவனிடத்திலே பரிந்து பேசி மன்னிக்க வேண்டுகிறார். “எனக்குள் பாவம் உண்டென்று யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?” என்று முழங்கிய இயேசு நம்முடைய பாவங்களை ஏற்று சிலுவையிலே தொங்குகிறார். அந்த நிலையிலும் நம் பாவம் மன்னிக்கப்பட வேண்டும் என்று ஆவலாய் தேவனிடம் வேண்டுகின்றார். என்னே அவரின் தேவன்பு!

❖ ❖ ❖

# மூன்று நாள் இயேசு கல்லறையில் இருந்தாரா?

“யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்” (மத். 12:40) என்பது போன்ற வசனங்களை வைத்துக் கொண்டு, இயேசு மூன்று நாள் இரவும் பகலும் கல்லறையில் இருந்தார் என்று சொல்வோருமுண்டு. “மூன்று நாள் என்றால் 3X24=72 மணிநேரம் என்று வாதிட்டு, இயேசுவும் புதன் கிழமை தான் மரித்தார்; அது தான் Good Wednesday. அதை Good Friday என்று சொல்லக் கூடாது; 72 மணிநேரம் கழித்து வாரத்தின் முதலாம் நாள் உயிர்த்தார்” என்று பெந்தகோஸ்தே வட்டாரங்களில் மதிக்கப்படும் DAKES பைபிள் விளக்குகிறது. அப்படியானால், Good Friday ஐ உலகம் முழுவதும் உள்ள பெந்தகொஸ்தே சபையார் உட்பட அனைவரும் ஏன் ஆசரிக்கின்றனர்? அப்படியே பார்த்தால், மூன்று நாளைக்குப் பின், 4ம் நாள் தான் இயேசு உயிர்த்திருக்க வேண்டுமல்லவா! லூக். 9:22; 18:33; 24:7, 46; மத். 16:21; 17:23; 20:19; மாற். 9:31; 10:34; போன்ற வசனங்களின்படி இயேசு மூன்றாம் நாள் தான் உயிர்த்தார்; 4ம் நாள் அல்ல என்று அறிகிறோமே! இயேசுவோடு கூட இருந்த பேதுருவும் கூட அவர் மூன்றாம் நாள் தான் உயிர்த்தார் என்று அப். 10:40ல் சொல்கிறாரே!

பவுல் கூட 1 கொரி. 15:4ல் அப்படியே கூறுகிறாரே! ஆக இயேசு 3 நாட்கள் அதாவது 72 மணிநேரம் கல்லறையில் இல்லை; அதற்குள்ளாகவே மூன்றாம் நாளே (Third day) உயிர்த்து விட்டார் என்று அறியலாம். அப்படியானால் மத் 12:40; மாற் 8:31; போன்ற வசனங்களின் அர்த்தம் என்ன? யோனா 1:17ல் சொல்லப்பட்ட “இராப்பகல் மூன்றுநாள்” என்ற வார்த்தையின் மூல விளக்கம் என்ன என்று ஆராய்வோம். மூல பாஷையின் வார்த்தைப்படி பார்த்தால் இது ஒரு மரபு வாக்கியமாகும்; பேச்சு வாக்கியமாகும், அதாவது Idiomatic Expression; சரியாய் 72 மணி நேரங்கள் என்று இருக்க வேண்டுமென்பதில்லை. உதாரணமாக திங்கள் இரவு யோனாவை மீன் விழுங்கினது என்றால், புதன் காலையில் மூன்றாவது நாளாக (38 மணி நேரம் மாத்திரம் மூன்று நாட்கள் என்ற கணக்கில்) வெளியே வந்தான் என எடுத்துக் கொள்ளலாம். நேரம் 38 மணிதான்; ஆனால் நாள் கணக்கு மூன்று, 1 தெச. 2:9, 2 தெச. 3:8 போன்ற வசனங்களில் “இரவும் பகலும் வேலை செய்து பிரசங்கித்தோம்” என்று பவுல் கூறுகிறபடி, இரவு பகல் 24 மணிநேரம் முழுவதும், வேலை செய்து

பிரசங்கித்தார்களா? சாப்பிட, தூங்க ஓய்வெடுக்க, ஜெயிக்க வெல்லாம்நேரம் எடுக்காமல் இருந்திருக்க முடியுமா? முடியாதே! ஆக, இரவும் பகலும் என்பது சரியாய் 24 மணிநேரக் கணக்கில் வராது. (Refer 1 தீமோ. 5:5). நமது பேச்சு வழக்கில் கூட போன வாரம் முழுவதும் கடுமையான உழைப்பு என்றால் 7 நாள் X 24 மணி = 168மணி நேரமும் உழைப்பு என்று அர்த்தமா? நேற்று பகல் Duty மிகவும் கஷ்டமாயிருந்தது என்றால், பகல் 12 மணி முழுவதும் Duty யா? இல்லையே. Duty என்றால் 8 மணி நேரம் தான். ஆனால் பேச்சு வாக்கில் இந்த 8 மணிநேரத்தை, 12 மணிநேர அர்த்தம் வரும்படியாய், பகல் வேலை; இரவு Duty என்று சொல்லுகிறோம். எனவே வார்த்தையை அப்படியே வைத்துக் கொண்டு எதையும் நிதானிக்கக் கூடாது.

இயேசு கிறிஸ்துவும் இதே கருத்தில் தான் பேசி இருக்கிறார். அவர் மரித்து 3ம் நாளில் உயிர்த்தெழுந்தார். வெள்ளி மாலை மரித்தார்; சனி முழுவதும் கல்லறையில் இருந்தார், ஞாயிறு காலை உயிர்த்தெழுந்தார். மூன்று நாள் பேச்சு வழக்கில் வந்தது; ஆனால் 72 மணி நேரம் வராது. "இரவு - பகல்" என்று சொன்னாலே ஒருநாள் என்று முதலில் அறிய வேண்டும். எப்படி One Day என்று சொன்னால், Dayம் Nightம் சேர்ந்ததோ அப்படியே (ஆதி. 1). ஆக இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; உலக பேச்சு வழக்குப்படி 3 நாள், அதாவது மூன்று இரவும் பகலும் யோனாவைப் போல் மண்ணுக்குள் இருந்தார். இரவும் பகலும் என்பது ஒரு நாளை (One Day)குறிக்கிறது என்று தானி. 8:13 ஐப் படித்து அறிந்து கொள்க!

❖ ❖ ❖

## மிருகங்களுக்கு ஆவி உண்டா?

பிர.3:21ஐ வைத்துக் கொண்டு, மிருகத்திற்கும் ஆவி உண்டு என்று வாதிடுவோரும் உண்டு. இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

தேவன் உலகத்திலே படைக்கும் போது மனிதனை தன்னுடைய சாயலாய்ப் படைத்தார் - தன் ரூபத்தின் படி படைத்தார் (ஆதி 1:26) தேவன் ஆவியாயிருக்கிறார். (யோ 4:24) மனிதனையும் ஆவியாய்த் தான் படைத்தார். இந்த ஆவியைத் தான் மண்ணினால் உருவாக்கப்பட்ட சரீரத்துக்குள் அனுப்பினார். (ஆதி 2:7) மனிதனுக்கு ஆவியைக் கொடுத்ததே, ஆவியான தேவனோடு தொடர்பு கொண்டு பேசத்தான். மிருகங்களையும் பறவைகளையும் கூட மண்ணில்தான் உருவாக்கினார் (ஆதி 2:19). ஆனால்

அவைகளுக்கு ஆவியை கொடுத்ததாகவோ அவைகள் தேவனோடு தொடர்பு கொண்டு துதிக்க வேண்டுமென்றோ வசன ஆதாரமில்லை. பக்தியுள்ள சந்ததி மனிதன் தான். (மல். 2:15) ஆகமொத்தம் 3 விதமானஆவிகள் உலகில் இருப்பதாகவே அறிகிறோம். (1 கொரி. 2:11,12). ஒன்று தேவனின் ஆவி; இரண்டு மனித ஆவி; மூன்று உலகத்தின் ஆவி (அதாவது பிசாசின் ஆவி) மிருகங்களுக்கு ஆவி இல்லை என அறிகிறோம். ஆனால் மனிதனுக்கு, அறிவு - சிந்தனை - உள்ளம் என்ற ஆத்மா இருக்கிறது போல மிருகங்களுக்கும் உண்டு. இந்த அறிவாகிய ஆத்மா மனிதனுக்கு அதிகம் உண்டு. (அதுதான் ஆறறிவு). அதுவும் நாளுக்கு நாள் மனம் மறுரூபமாக மென் மேலும் அதிகமாகி தேவனைப் போல மாற விரும்புகிறது (ரோ. 12:1,2); மனிதனுடைய ஆத்மாவாகிய அறிவு, ஆவியோடு இணைந்துள்ளது. (எபி. 4;12); அதைப் பிரிக்கவே முடியாது. ஆவி தேவனால் தரப்பட்டது என்பதால் மனிதன் மரித்த உடனே ஆவியோடு ஆத்மாவும் தேவனிடம் போகிறது; (பிர. 12:7) மண்ணிலே உண்டாக்கப்பட்ட சரீரம் மண்ணுக்கே போகிறது. இதே போல மிருகங்களின் அறிவாகிய ஆத்மாவோ அவைகளின் மண்ணாகிய சரீரத்தோடு இணைந்துள்ளன. எனவே தான் அவைகளுக்கு ஆவியின் சிந்தனை இருப்பதில்லை. மண்ணின் - உலகின் - சிந்தனையே இருக்கின்றன. ஆவியிலே மரித்திருக்கின்ற - இரட்சிக்கப்படாத மனிதர்களின் நிலையும் இப்படித்தான். இந்த மிருகங்களின் அறிவாகிய ஆத்மா, தான் இணைந்துள்ள மண்ணாகிய சரீரத்தோடு பூமிக்குப் போகிறது. இதைத்தான் பூமியிலிறங்கும் ஆவி என்று எழுதப்பட்டுள்ளது, இதை, ஆத்மா என்று மொழிபெயர்ப்பு செய்திருக்க வேண்டும். ஆவி எப்போதுமே தன்னைத் தந்த தேவனிடமே போகும்; பூமிக்குள்போய் அழியாது (பிர. 3:21) எனவே மிருகங்களுக்கு ஆவியைத் தேவன் கொடுக்க வில்லை என்றும் அறிவாகிய ஆத்மா அதனதன் தகுதிக்கேற்ப உலகப் பிரகாரமாய் மண்ணாகிய சரீரத்தோடு உள்ளது என்றும் அறிகிறோம். இந்த ஆத்மா இல்லையென்றால் நாய் வைக்கோல் தின்னும்; மாடு கறி தின்னும்; அடிப்படை அறிவு கூட அவைகளுக்கு இராது. ஆனால் உயிர் எல்லா ஜீவ ராசிகளின் மாமிசத்திலும் உண்டு. சுவாசம் எல்லா ஜீவராசிக்கும் உண்டு. ஆவியும் உயிரும் ஒன்றல்ல.

❖ ❖ ❖

## பரிசுத்த ஆவியை கேட்டுப் பெறவேண்டுமா?

லூக். 11:11-13 வசனங்களை வைத்துக் கொண்டு, நாம் எல்லோரும் பரிசுத்த ஆவியை பிதாவிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும், என்று

இன்றைய தினம் எல்லா ஊழியக்காரர்களும் போதிக்கிறார்கள். அதையே விசுவாசிகளும் நம்பி பிதாவிடம் பரிசுத்த ஆவியை தரவேண்டும் என்று காத்திருப்பு கூட்டம் நடத்துகின்றனர். எப்படியோ ஒரு சிலர் பெற்றும் கொள்ளுகின்றனர். உண்மையான சத்தியத்தை தேவன் விளகுவாராக!

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், யார் எப்படிப்பட்டவர் என்ற பாகுபாடின்றி, அவர் விரும்புகிற மனுஷர் மேல் பரிசுத்த ஆவியானவர் இறங்குவார் (சகரி. 12:10; லூக். 1:35). இயேசுவின் ஊழியக் காலத்திலே பரிசுத்த ஆவியை சீஷர்கள் பிதாவிடம் வேண்டிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கட்டளையிட்டார். அவருடைய ஊழிய முடிவிலோ, தானே, தன்னுடைய பிதாவிடம் ஜெபித்து பரிசுத்த ஆவியை அனுப்புவேன் என்று விசுவாசிகளுக்கு வாக்குப் பண்ணினார் (லூக். 24:49; யோ. 7:39; 14:16-17; அப். 1:4 - 5). இந்த வாக்குத்தான், யோவேல் 2:28-29ல் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனம். இயேசுவின் ஊழியக் காலத்தில் யூதர்களுக்கு அவர் சொன்ன வாக்குத்தத்தமான லூக். 11:11-13 அவர்களுக்கு அதுவரை கேட்டிராத, புதிதான ஒன்று. அதன்படி அவர்கள பிதாவிடம் கேட்டுப் பெறவேண்டும். ஆனால் விசுவாசிகளாகிய நமக்கோ இயேசுவே பிதாவிடம் ஜெபித்து பரிசுத்த ஆவியைப் பெற்று பெந்தெகொஸ்தே நாளில் அனுப்பி வைத்தார். ஆக, பெந்தெகொஸ்தே நாள் முதற்கொண்டு, பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து, இயேசுவின் ஜெபத்தால் பூமிக்கு நிரந்தரமாய் வந்துவிட்டார். இதை ரோ 8:15; 1 கொரி. 6:19; 2 கொரி. 1:22; கலா. 4:6; 1 யோ. 2:20,27 போன்ற வசனங்கள் சரித்திரச் சான்றுகளாய் சொல்கின்றன. பரிசுத்த ஆவியானவர் மட்டும் நிரந்தரமாய் பூமியில் தற்போது இல்லாதிருந்தால், மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, விசுவாசம் போன்ற காரியங்கள் இல்லாமல் போயிருக்கும், நாம் செய்ய வேண்டிய காரியம் "ஏற்கெனவே பெந்தகொஸ்தே நாளில் பூமிக்கு வந்த பரிசுத்த ஆவியானவரை நாம் ஏற்றுக்கொள்ள, பெற்றுக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும்." தயாராய் இருந்தால் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள முடியும் என்ற வாஞ்சையுள்ள மற்றும் வசனத்திற்கு கீழ்ப்படிகின்ற விசுவாசிகள் எல்லாரும் பெற்றுக் கொள்ள முடியும். இதைத்தான் பேதுருவும், சமாரிய மக்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று (எருசலேமிலிருந்து வந்து), "பிதாவே பரிசுத்த ஆவியை தாரும்" என்று ஜெபிக்காமல் "அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும்படி" அவர்களுக்காய் ஜெபித்தான் (அப். 8:16). அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

இக்கால கிறிஸ்தவ ஊழியர்கள் போல லூக் 11:11-13ஐ வைத்துக் கொண்டு பேதுருவும் பிதாவிடம் கேட்டு ஜெபித்திருந்தால், பரிசுத்த

ஆவியானவர் ஏற்கெனவே பெந்தகொஸ்தே நாளில் பிதாவானவர் அனுப்பி பூமிக்கு வரவில்லை என்று பொருளாகிவிடும். இந்த கருகலான சத்தியம் எல்லா ஊழியர்களுக்கும் தெரியட்டும் என்று வாஞ்சிக்கிறேன். அதிலும் விசேஷமாய் பெந்தகொஸ்தே நாளையே சபைப் பெயராய் வைத்திருப்பவர்கள் மனக்கண் பிரகாசமாகட்டும் (எபே. 1:19). பரிசுத்த ஆவியானவர் பெந்த கொஸ்தே நாளிலேயே இயேசுவின் ஜெபம் கேட்டு, பிதாவினால் பூமிக்கு அனுப்பப்பட்டு விட்டார். இங்கிருக்கும், நம் அருகிலிருக்கும், ஆவியானவரை நாம் வாஞ்சித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். பெந்தகொஸ்தே நாளில் காத்திருந்து பெற்றதுபோல, இப்போது காத்திருக்கத் தேவையில்லை. சமாரியரும் காத்திருக்க வில்லை. (அப். 8:16). கொர்நெலியு வீட்டாரும் உபவாசத்தோடு காத்திருக்கவில்லை (அப்.10). எபேசு பட்டணத்தாரும் உடல் வருத்தி உத்தமமாய் பரிசுத்தத்தோடு காத்திருக்கவில்லை. (அப்.19) இயேசு கிறிஸ்து எப்படி பாவிகளுக்கு ஈவாய் கொடுக்கப்பட்டாரோ அதே போல விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் ஈவாய் கொடுக்கப்பட்டார். அவரைப் பெற்றுக்கொள்ள வேண்டியது நாம். வாஞ்சியுங்கள்; பெற்றுக் கொள்ளுங்கள்.

❖ ❖ ❖

## யார் ஊழியக்காரர்?

ஊழியக்காரர் என்றாலே பாஸ்டர்கள்தான் ஊழியக்காரர்கள் என்ற நிலையில் கிறிஸ்தவ உலகம் இருக்கிறது. அப்படியானால், தீர்க்க தரிசிகள், சுவிசேஷகர்கள் போன்றோரெல்லாம் ஊழியக்காரர்கள் இல்லையா? பைபிள் எடுத்தவர்கள் எல்லாம் பாஸ்டர்கள் என்று சொல்கிறார்கள். பேசத் தெரியாதவர்கள் எல்லாம் சுவிசேஷகர்கள் என்கிறார்கள். இந்த கருகலான சத்தியத்தை தேவன் மலர வைப்பாராக!

1 பேது 2:9; வெளி. 1:6ன்படி புதிதாய்ப் பிறந்த விசுவாசிகள் எல்லாருமே தேவனுடைய காரியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி; ராஜரீகமான ஆசாரியக்கூட்டம். ஆக எல்லா விசுவாசிகளுமே ஆசாரியர்கள் தான்; ஊழியர்கள் தான். இது நமக்கு மட்டுமல்ல; பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருக்கும் கொடுக்கப்பட்ட பதவி (யாத். 19:6). இதிலே வித்தியாசங்கள் இரண்டு உள்ளன. **ஒன்று** அவர்களுக்கு கிடைத்த பதவி நியாயப்பிரமாணக் கிரியைகளினால்; நமக்கோ விசுவாச அறிக்கையினால். **மற்றொன்று** அந்த இஸ்ரவேலர்களோ சாதாரண ஆசாரியர்கள். நாமோ ராஜரீகமான ஆசாரியர்கள் (Royal Priest Hood) அல்லேலூயா! இதனால்தான் சகோ.

பெர்க்மான்ஸ் அவர்கள் எழுதிய பாட்டை சபையில் மேடை மீதுள்ளவர்கள் மட்டும் பாடாமல், விசுவாசிகள் அனைவரும் "ராஜாக்களும் நாங்களே; ஆசாரியர்களும் நாங்களே" என்று பாடுகிறோம். பகிர்ந்து கொடுக்கிறது ஒரு ஊழியம்; முதலாளியாய் இருந்து இரக்கஞ்செய்வது ஒரு ஊழியம்; புத்தி சொல்லுவது ஒரு ஊழியம்; டிராக்ட்ஸ் கொடுப்பது ஒரு ஊழியம்; ஜெபிப்பது ஒரு ஊழியம். இப்படியாய் தேவனுடைய காரியங்களை அறிவிப்பது எல்லாமே ஊழியம் தான். இதைச் செய்யத்தான் இயேசு நம்மை விரும்பி அழைத்தார் (மத். 28:18,19). லேவி. 25:55ன் படி இஸ்ரவேல் புத்திரர் அனைவருமே ஊழியக்காரர் என்றால், புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் எல்லாரும் ஊழியக்காரர்களாக மாட்டார்களா? "விசுவாசிகளே ஊழியக்காரர்கள் என்றால் பாஸ்டர்கள் தேவையில்லையா" என்றும் கேள்விகள் எழலாம். உலகமே மூன்றுவித மனித ஜாதிகளால் நிறைந்துள்ளன. (1 கொரி. 10:33). ஒன்று இஸ்ரவேலர்; அடுத்தது புறஜாதியார்; இன்னொன்று கிறிஸ்தவ சபையார். உலகிலுள்ள புறஜாதியாருக்கு சத்தியம் சொல்லி கிறிஸ்துவுக்குள் கொண்டுவர, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட அனைத்து விசுவாசிகளும் ஊழியக்காரர்களாக்கப்பட்டுள்ளனர். உலகத்தாருக்கு உபதேசிக்கும் ஊழியக்காரர்கள் எல்லாரும் விசுவாசிகளே! சகோ. ஸ்டான்லி, சகோ. அகஸ்டின் ஜெபக்குமார், சகோ. பெர்க்மான்ஸ் போன்றோரெல்லாம் இப்படிப்பட்ட ஊழியக்காரர்கள் தானே! ஆனால் கிறிஸ்தவ சபையிலே உள்ள பரிசுத்தவான்கள் சீர்பொருந்தப் பண்ணும் பொருட்டு சபையிலே தேவன் 5 விதமான ஊழியர்களை ஏற்படுத்தியிருக்கிறார். (எபே. 4:11-13) உலகிற்கு சுவிசேஷம் சொல்லி மக்களை ஆதாயப்படுத்தும் ஆசாரியர்களாகிய விசுவாசிகள் மத்தியில்தான் இந்த 5 வித ஊழியம் செயல்படுகின்றது. இந்த 5 வித ஊழியர்கள் உலகத்தாருக்கு அல்ல; சபையை வருகைக்கு ஆயத்தப் படுத்தவே! இந்த ஊழியர்களுக்கு சபையிலே கண்டிப்பாய் அனைத்து விசுவாசிகளும் கர்த்தருக்குள் கட்டுப்பட்டே ஆக வேண்டும் மாற். 16:16ன் படி அடையாளங்கள் அற்புதங்கள் செய்கின்ற ராஜரீக ஆசாரியர்களாய் இருந்தாலும் சபைக்குள்ளே அவர்கள் அந்த ஐவருக்கும் கீழ்தான். இந்த 5 ஊழியத்திலே மேய்ப்பர் ஊழியந்தான் மிகவும் மேன்மையானதும் அதே நேரத்தில் கஷ்டமானதுமான ஊழியமாகும் (கொலோ. 1:26; யாக். 3:1). பவுலைப் போல புற ஜாதியாருக்கும் போகதர்களாய், ஊழியக்காரர்களாக நியமிக்கப்பட்டுள்ள, (2 தீமோ. 1:10) விசுவாசிகள் அனைவருக்குமே இந்த ஐவரே ஊழியக்காரர்கள். இவர்களில் மேய்ப்பர் ஊழியம் 4வதாய் இருந்தாலும் இந்த ஊழியம் செய்வோர் மேய்ப்பராகவும், போதகராகவும், இருக்க வேண்டுமன்பதால் இந்த இரண்டு

ஊழியங்களையும் இணைத்தே எபே 4:13ல் எழுதப்பட்டுள்ளது. சபையிலுள்ள இந்த 5 ஊழியங்களையும் 5 விரல்களுக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். அதிலே 4வது விரல் மேய்ப்பர் ஊழியம். இது உலகப்பிரகாரமாய் மோதிரவிரல்; இதில் தான் மோதிரம் போடப்படும். அவ்வளவு சிறந்த மேன்மையுள்ளது. இப்படித்தான் பாஸ்டர் ஊழியம் இருக்க வேண்டும். அப்போஸ்தல ஊழியம் கட்டைவிரல் போன்றது. இது எல்லா விரலையும் தொட முடியும். கட்டையாக இருந்தாலும் 5 ஊழிய வரங்களும் இவர்களுக்கு உண்டு. ஆட்காட்டிவிரல் தீர்க்கதரிசன ஊழியம். சபையில் சீர் பொருந்தும் பொருட்டு தீர்க்கதரிசன ஊழியம். சவிசேஷ கூட்டங்களிலோ புறஜாதியார் மத்தியிலோ சொல்வது அல்ல. நடுவிரல் சபைக்குரிய மகிமையின் சுவிசேஷ ஊழியம். 5 விரல்களிலும் இதுவே பெரிதாய்த் தெரியும். இப்படித்தான் இன்றைக்கு சுவிசேஷகர் பெயர்களே மிகவும் பிரபலமாகி இருக்கிறது. சுண்டுவிரல் போதக ஊழியம். சுண்டுவிரல் இல்லையேல் காதுக்குள்ளே ஏதாவது போய்விட்டால் எடுக்கவே முடியாது. சபையில் கள்ள உபதேசங்களை தீமைகளை அகற்ற போதக ஊழியம் அவசியம்; Bible Study அவசியம்.

ஆக, விசுவாசிகள் எல்லாரும் ஊழியர்கள்தான். (பாஸ்டரும், அப்போஸ்தலரும் கூட விசுவாசிதானே!) அது உலக ஊழியத்தில்; சபை ஊழியத்திலும் 5 வித ஊழியர்கள். ஒரு நாணத்துக்கு இரு பக்கம் இருப்பது போல, ஊழியக்காரியத்திலும் இரண்டு பக்கங்கள் உள்ளன என்று நாம் முந்தி அறிய வேண்டும்.

❖ ❖ ❖

# கனி கொடுக்கும் காலம் இல்லாவிட்டாலும் பழம் இருக்குமா?

“அத்திப்பழம் காலமாயிராதபடியால் அவர் அவ்விடத்தில் வந்தபோது, அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை” (மாற். 11:13). “இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக் கடவது என்றார்” (மத். 21:19). இந்த வசனங்களைப் பார்க்கும்போது அத்திப்பழம் பழுக்கும் காலமில்லாத போது அத்திமரத்தில் தேவன் எப்படி பழத்தை எதிர்பார்க்கலாம்; எப்படி சபிக்கலாம் என்று கேள்விகள் எழுகின்றன. நமக்குள்ள இதுவரை கருகலாய் இருந்த சத்தியத்தை பரிசுத்த ஆவியானவர் இன்று விளக்குவாராக.

இயேசு கிறிஸ்து சீஷர்களோடு பெத்தானியாவிலிருந்து புறப்பட்டு வருகின்றார். ஆனாலும் சீஷர்களுக்கு அப்போது புரியவில்லை. மறுநாள் காலையிலே அந்த வழியாய் வரும்போதுதான் பட்டுப் போனதைக் கண்டார்கள் (மாற். 11:20). இது சம்பந்தமாய் இயேசு சொன்னதைப் பாருங்கள். மாற். 11:20ஐ 'பெத்தானியா' என்றால் அத்திப்பழவிடு என்று அர்த்தமாகும். பெயருக்கு ஏற்றபடியே இந்த ஏரியாக்களில் அத்திப்பழம் கிடைக்குமாம். இயேசு வரும் போது அவருக்குப் பசி உண்டாகி இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை தூரத்திலே கண்டு கனியைத்தேடி வந்தார். அத்திமரத்தில் இலைகள் துளிர் விட்டு பசுமையாக இருந்தாலே கனி இருக்கும் என்று அர்த்தம். இலைகள் இல்லாத போது கனி இருக்காது. அப்படியானால் அந்த மரத்தில் இலைகள் எப்படி இருக்கும்? இயேசு எப்படி கனிகளை எதிர்பார்த்திருப்பார்? இதற்கு பதில் கிடைக்கும் முன் அத்திமரத்தைப் பற்றி அறிந்து கொள்வது நல்லது. அத்திமரங்களிலே இரண்டு வகை உண்டு என வேதத்தின் மூலம் அறிகிறோம். ஒன்று பழக்காலத்துக்கு முன்பே கனி கொடுக்கும் மரம் (எரே. 24:2; எசே 28:4) மற்றது பின்னால் கனி கொடுக்கும் மரம் (எரே. 8:19; 28:17). எந்தக் காலத்தில் கனி கொடுத்தாலும் இலைகள் நிறைந்து இருக்கும் போதே அது நடக்கும். இங்குள்ள சம்பவத்தில், இது பழக்காலமல்ல என அறிகிறோம். பழக்காலமில்லாததற்கு முன்பே கனி தரும் மரமாய் இந்த மரம் இருந்திருக்க வேண்டும். (ஏனென்றால் இந்த ஊரின் பெயரே அத்திப்பழ வீடு என்பதால் எப்போதுமே பல்வகைப்பட்ட மரங்களில் பழங்கள் கிடைக்க வாய்ப்பு, பெயருக் கேற்றப்படி இருந்திருக்கலாம்). அதனால்தான் இலைகள் வளர்ந்திருந்தன. **இலைகள் இருந்தாலே கனிகள் வேண்டும். காலம் பற்றி கவலையில்லை.** ஏனென்றால் காலத்திற்கு முன்பே கனிதரும் மரவகைகளில் ஒன்றாய் இந்த மரம் இருக்கலாம். இது சமபந்தமாய் தேவன் தரும் ஆவிக்குரிய கருத்து என்ன? பழம் பழுக்கும் காலம் இல்லாத போதும் கனி கொடுக்கத் திராணியை தேவன் கொடுக்கிறார்; இலைகள் துளிர் விடுகின்றன. அப்படியே நீயும் நானும் கடைசி காலத்தில் இருந்தாலும் சரி, இராக்காலத்தில் இருந்தாலும் சரி, உன்னையும் என்னையும் தேவன் 'ஜீவன்' தந்து துளிர்விட வைத்திருக்கிறார். பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைக்கும் நீதிமானாய் ஆக்கியிருக்கிறார்; பரிசுத்த ஆவியினால் நிரப்பி இருக்கிறார். பலதரப்பட்ட வரங்களால் நிறைத்திருக்கிறார். இந்த நிகழ்ச்சியில் அப்படி அவர் செய்ததற்கு ஆவிக்குரிய காரணம் என்ன? பசி, தாகம் என்ன? அவருடைய பசி தாகத்திற்கு அவர் என்ன எதிர்பார்க்கிறார்? உன்னோடே போஜனம் பண்ண விரும்புகிறாரே அது என்ன போஜனம்? (வெளி. 3:20). அது தான் அவர் விரும்புகின்ற உன் ஆவியின் கனி; நீதியின்

கனி. அந்தக் கனி உன்னில் இருக்க வேண்டும் என்றுதான் (கலா. 5:22) இம்மட்டுமாய் உன்னைப் பராமரிக்கிறார். இந்தக் கனி இல்லாவிட்டால் நமக்கு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் தான். லூக். 13ல் தேவன் சொன்ன உவமையைப் பாருங்கள். கனி கொடாத மரத்தை வெட்டிப்போடு என்கிறார் தோட்டக்காரர். ஆக, ஆவியின் கனி இல்லாவிட்டால் உனக்கும் எனக்கும் தண்டனை தான். இயேசுவோடு வந்த சீஷர்களுக்கு இந்த உண்மையை புரிய வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தேவன் அந்த அத்திமரத்தை தண்டித்தார்.

விசுவாசம் பெருகவே தேவன் இப்படியாய் சபித்திருக்கக்கூடும் என்று நிதானிக்கலாம். இந்த காலம் எப்படிப்பட்ட காலமாயிருந்தாலும் உன்னைத் துளிர்விட வைத்தாலே நீ கனி கொடுத்தே ஆகவேண்டும். கனி கொடாத மரம் சபிக்கப்படும் என்ற விசுவாசம் உனக்கு இப்போதே வரவேண்டும். அல்லேலூயா! நீ காலம்பற்றி கவலையில்லாமல் கனி கொடுக்கிறவனாக - மரமாக வாழ்ந்து காட்டு. இங்கே “சபித்தல்” என்பதை “தண்டனை” என்றே எடுத்துக் கொண்டால்தான் சரியாகும்.

❖ ❖ ❖

## பிசாசினாலும் ஐஸ்வர்யம் வருகிறது

“தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐஸ்வரியமும் மகிமையும் ஜீவனுமாம்” என்று நீதி 22:4 சொல்கிறது. தாவீது ராஜா கூட “ஐஸ்வரியமும் கனமும் உம்மாலே வருகிறது” (1 நாளா. 29:12) என்று பாடுகின்றான். ஆக நமக்கு ஐஸ்வர்யம் தேவனிடத்திலிருந்தே வருகின்றது என்று உணருகின்றோம். ஆனால், சாத்தான் இயேசுவிடம் சொல்வதைப் பாருங்கள்:- “இவைகள் (உலகம் முழுவதும்) எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு கொடுக்கிறேன்” (லூக். 4:6) அப்படியானால் பிசாசும் ஐஸ்வரியத்தை தருகிறான்! தேவன் விளக்குவாராக!

தேவனுடைய பிள்ளைகள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது போன்றவர்கள் ஐஸ்வர்யவான்களாய் இருந்தார்கள். பாவிகள் பலரும் ஐஸ்வர்யவான்களாய் இருந்தார்கள். பாவிகளுக்கும் தேவன் ஐஸ்வரியத்தை தருகிறாரா? தாழ்மையுள்ளவர்களுக்கும், கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கும் (Reverential trust in God and His Word) மட்டுமே அவர் ஐஸ்வர்யத்தை தருகிறார். மற்றவர்களுக்கோ தேவன் தருவதில்லை. பிசாசு தான்

தருகிறான். அப்படியானால் உலகத்தின் அதிபதியாகிய பிசாசிடம் உள்ள உலகப் பிரகாரமான ஐஸ்வர்யத்தை (நிலம், வீடு, சொத்து) தேவன் பிடுங்கி தன்னுடைய பிள்ளைகளுக்கு தருகிறாரா? இல்லை. இல்லை. சிலுவையிலே பிசாசை ஜெயித்த தேவனை விசுவாசித்து செயல்படும் எந்த தேவபிள்ளையும், இயேசுவின் நாமத்தினால் பிசாசை ஜெயிக்க முடியும். பிசாசை ஜெயிக்கும் போது தான், அவனிடமிருக்கும் உலக ஐஸ்வர்யத்தை நாம் கொள்ளையிட முடியும். எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் வரும்போது அவர்களின் பொக்கிஷங்களை கொள்ளையிட்டு வந்தார்களே அப்படி வரமுடியும். தேவன் நமக்கு ஜீவமார்க்கத்தை உண்டு பண்ணியிருக்கிறார். தாழ்மையோடு இருந்தால் கிருபை கிடைக்கும். கிருபையிருக்கும் போது தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க முடியும். விசுவாசித்து அறிக்கை இடும் போது பிசாசின் உலகை கொள்ளையிட்டு ஐஸ்வரியத்தை சம்பாதிக்க முடியும். அதுதான் நமக்கு கிடைக்கும் பலன் (Fruit) என்று நீதி 22:4 சொல்கின்றது. தேவன், கொடுக்கும் மார்க்க பலனாகிய ஐஸ்வரியமும் ஒரு ஆசீர்வாதமே. எந்த ஆசீர்வாதமும் நிபந்தனைக்கு உட்பட்டதுதான். ஆனால் பிசாசோ கண்டிஷனோடு உலக ஐஸ்வரியத்தை கொடுப்பதில்லை. தனக்கு இஷ்டமானவர்களுக்கு தருகிறான். இரட்சிக்கப்பட்ட, பெரிய பெரிய ஊழியர்களுக்கும் அவன் இஷ்டப்பட்டால் அவனால் கொடுக்க முடியும். அப்படியானால் கிறிஸ்தவர்களுக்கும் (Nominal and Spritual) பிசாசின் ஐஸ்வரியம் இருக்கலாம் என்று முந்தி அறிய வேண்டும்.

பிசாசின் மூலமாய் ஐஸ்வரியம் வந்தாலே ஐஸ்வர்ய ஆசை பெருக்கெடுத்து ஓடும். இப்படிப்பட்ட ஆசை உடையவர்களை தான் ஊசி முனைக்காதுக்குள்ளே ஒட்டகம் நுழைந்தாலும் பரலோகத்திற்குள்ளே நுழைய முடியாது என்று இயேசு திட்டமாய்ச் சொன்னார். (மத் 19:24) தேவனின் வசனத்தை விசுவாசித்தால் கிடைக்கும் பலனாகிய ஐஸ்வரியமோ இச்சையை உருவாக்காது. ஐஸ்வர்யவான்களாகிய வேதத்திலுள்ள தேவ பிள்ளைகள் யாருமே ஐஸ்வரியத்திற்கு முதலிடம் கொடுக்கவில்லை; அதைப்பற்றி கொஞ்சமும் அக்கறை செலுத்தவில்லை. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினார்கள். அதனாலே அவர்களுக்கு எல்லாமே கூடக் கொடுக்கப்பட்டது (மத். 6:33). பிசாசு கொடுக்கும் ஐஸ்வரியம் உலக ஐஸ்வரியம் மட்டுமே. இது அழிந்து போகிற ஐஸ்வர்யம்; நம்மோடு கூட வராத ஐஸ்வர்யம். ஆனால் தேவன் கொடுக்கிற ஐஸ்வர்யமோ உலக ஐஸ்வர்யம் மட்டுமல்லாமல், பிசாசிடம் இல்லாத, தேவனிடம் மட்டுமே உள்ள ஆவிக்குரிய ஐஸ்வர்யமும்

இணைந்ததே. ஆவிக்குரிய ஐஸ்வர்யத்திலே பிரதானமானது நித்திய ஜீவன் (மாற். 10:29,30). இதை எல்லா பரிசுத்தவான்களும் பெற்றிருந்தார்கள். நாமும் பெற்றிருக்கிறோம். தேவன் தரும் ஐஸ்வர்யத்தில் வேதனை இல்லை (நீதி. 10:22).

தேவ பிள்ளையே! உன்னிடம் இருக்கும் ஐஸ்வர்யம் தேவனிடத்திலிருந்து வரும் பலனா என்று முதலில் ஆராய்ந்து பார். அப்படியில்லையேல் வசனத்தால் உன்னை நீயே பெலப்படுத்திக்கொள். யோபுவைப் போல் உலக ஐஸ்வர்யமே அழிந்து போனாலும், விசுவாசத்தோடு வாழ்ந்தால் அதன் பலன் இரட்டத்தனை ஆசீர்வாதம்; ஆபகூக் 3;17 - 20ல் சொல்லப்பட்டபடி ஆசீர்வாதம் பெருகும். தெய்வீக ஆரோக்கியமும், பெற்றி வாழ்க்கையும், பொருளாதார முன்னேற்றமும் நமக்கு தேவாசீர்வாதமாய் இருக்கட்டும். அது பிசாசிடமிருந்து வந்தால், அவன் முதலில் கொடுப்பான்; பிறகு எடுப்பான். அவனுடையவேலையே திருடுவதும், கொல்லுவதும், அழிப்பதும் தானே! எனவே ஐஸ்வர்யம் வந்தாலே உடனே அதை சீர்தூக்கிப் பார்த்து தேவனால் வந்த பலனா என்று நிதானித்து அறியுங்கள். வெற்றி நிச்சயம். தேவனால் வரும் எல்லாவிதமான ஐஸ்வர்யங்களையும் விரும்பு. நீ நினைக்கிறதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் மேலாய் அவர் உனக்கு தரவல்லவர்.

❖ ❖ ❖

# யோவான் ஸ்நானன் எலியாவா?

யோ. 1:21ன் படி "நான் எலியா அல்ல" என்று யோவான் ஸ்நானகன் சொல்லுகின்றான். ஆனால் மத். 11:14ல் "நீங்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால் வருகிறவனாகிய எலியா இவன் தான்" என்று இயேசு சொன்னார். ஒன்றுக் கொன்று முரணாய்த் தோணுகிறதே எப்படி? பரிசுத்த ஆவியானவர் தாமே விளக்குவாராக. லூக். 1:17ன்படி தேவதூதன் சகரியாவுக்கு தீர்க்கதரிசனமாய் சொன்னதைக் கவனித்தால், யோவான் ஸ்நானன் எலியா அல்ல என்றும், எலியாவின் ஆவியும் பலமும் உள்ளவனாய் இவன் இருப்பான் என்றும் அறிகிறோம்.

இவன் இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னே வந்து ஆயத்தப்படுத்துவான் என்று ஏசா. 40:3ல் சொன்னது தன்னைப் பற்றித் தான் என்று யோவான் ஸ்நானன் யோ. 1:23ல் சொல்வதாலும், இவனைப்பற்றி இயேசு கிறிஸ்து லூக். 7:27ல் சொல்வதாலும், இவன் எலியா அல்ல என்று

அறியலாம். ஆனாலும் மத். 11:14ல் இவன் தான் எலியா என்று சொல்லும் படியாய் இருக்கிறதே அதன் அர்த்தம் என்ன?

மல். 4:5,6ன் படி எலியா கர்த்தரின் மகாபயங்கரமான ஆக்கினை நியாய தீர்ப்பின் நாளுக்கு முன்னே தான் வருவான் என்று அறிகிறோம். அதன் விளக்கம் தான் வெளி 11ல் சொல்லப்பட்ட இரண்டு சாட்சிகளில் ஒன்றாக இருக்கலாம். யோவான் ஸ்நானனோ முதலாம் வருகைக்கு முன் வந்திருக்கிறான் அல்லவா! மத். 17:10-12 வசனங்களை படிக்கும் போது, இவன் தான் எலியாவோ என்று எண்ணத்தோன்றும். ஆனால் இயேசுவின் இந்த வசனங்கள் யோவான் ஸ்நானகனைப் பற்றித்தான் என்று சீஷர்கள் புரிந்து கொண்டதால், அந்த வசனங்களை ஆராயும் பொழுது அது எலியாவைப் பற்றி அல்ல என்று யூகிக்க முடிகின்றது. ஆனால் மத். 11:14ன் அர்த்தம் என்ன? இவன் தான் எலியாவா? நீங்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால் இவன் எலியாதான் என்றார். அப்படியானால் இஸ்ரவேலர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று எது? அது என்ன வென்றால் மத். 11:11,12ன் படி பரலோக ராஜ்யம் ஆகும். அந்த ஜனங்கள் யோவான் ஸ்நானகனால், வரப்போகிறதாக அறிவிக்கப்பட்ட ராஜ்யத்தை அதாவது பரலேக ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டிருந்திருப்பார்களேயானால் இந்த யோவான் ஸ்நானன் யோவான் ஸ்நானனல்ல; அதற்குப் பதிலாக, வரப்போகிற எலியாவாகவேயிருந்திருப்பான். யோவான் ஸ்நானனால் பிரசங்கிக்கப்பட்ட பரலோக ராஜ்யத்தை யூதமக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்களென தேவன் அவர்களைப் பற்றி முன் அறிந்ததினாலே, நிஜ எலியாவை அந்த கால கட்டத்தில் அனுப்பவில்லை. மல். 4:5-6ன் படி நிஜ எலியா பிரசங்கிப்பாரே யானால், மகா உபத்திரவ யாக்கோபின் இக்கட்டுக் காலத்தில், இஸ்ரவேலர்கள் பரலோக ராஜ்யத்தை ஏற்றுக் கொள்வார்கள். அதன் பயனாய் கிறிஸ்துவின் பகிரங்க வருகையிலே இவரே மேசியா என்று அறிக்கையிடுவார்கள். அல்லேலூயா! பரலோக ராஜ்யத்தை இயேசுவின் காலத்து யூத மக்கள் ஏற்றுக் கொள்ளாததினால், தேவன் எலியாவின் ஆவியும் வல்லமையும் உடைய யோவான் ஸ்நானகனை எலியாவுக்குப் பதிலாக அனுப்பினார். எனவே யோவான் ஸ்நானகன் எலியா அல்ல; அவன் இனிதான் வரப்போகிறான் என்று நாம் அறிகிறோம்.

❖ ❖ ❖

# மூடனுக்குப் பதில் கொடுக்கலாமா?

நீதி. 26:4,5ஐ வாசியுங்கள். ஒரு வசனத்தில் மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடாதே என்று சொல்லப்பட்டுள்ளது. அடுத்த வசனத்திலோ மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறு உத்தரவு கொடு என்று சொல்லப்பட்டுள்ளது. என்ன ஒரே குழப்பமாயிருக்கிறது என்று எண்ணுகிறீர்களா? குழம்ப வேண்டாம்; குழப்பவும் வேண்டாம். இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

மூடன் கேள்விகளை தன் மதியீனத்தில்தான் கேட்பான். மூடன் கேட்கும் கேள்வி ஒருக்காலும் ஞானமுள்ளது அல்ல. மூடன் ஒருவன் அறிவீனமாய் கேள்வி கேட்கும் போது அந்த அறிவீனக் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தால் நாமும் அறிவீனனாய் - மூடனாய் - ஆகிவிடுவோம். எனவே அறிவீனக் கேள்விகளுக்குப் பதில் சொல்லக்கூடாது. இதிலிருந்து நாமறிவது "மூடன் அறிவீனக் கேள்விகளைத்தான் கேட்பான்; நாமோ பதில் ஏதும் சொல்லக்கூடாது." இது தான் வசனம் 4ன் கருத்து. அப்படி நாம் பதில் ஏதும் சொல்லாமலே போய்விட்டால், அந்த மதியீனன் தன்னைத்தான் ஞானி என்று எண்ணிக் கொண்டு, நம்மை மூடன்; புத்தி இல்லாதவன் என்று எண்ணிக் கொள்வான். நாமோ ஞானவான்களையே பைத்தியமாக்கிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அல்லவா! (1 கொரி. 1:27). அப்படிப்பட்டவர்களாகிய நம்மத்தியில் மூடன் தன்னை ஞானி யென்று எண்ண வைக்கலாமா? கூடாதே! இது தான் 5ம் வசனம் சொல்வது. அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? பதில் கொடுக்க வேண்டுமா? வேண்டாமா? இயேசுவிடத்திலே பிரதான ஆசாரியரும் மூப்பரும் (ஆவிக்குரிய மூடர்) வந்து, அவர் செய்கிற அற்புதங்களைப் பார்த்து "எந்த அதிகாரத்தினால் இவைகளை செய்கிறீர்? உமக்கு அதிகாரம் கொடுத்தது யார்?" என்று கேட்டார்கள். (மத். 21:23). நீதி. 26:4ன் படி மூடர்களின் மதியீனக் கேள்விகளுக்கு பதில் சொல்லவில்லை. இயேசு மாறுத்திரமாக நீதி. 26:5ன் படி ஞானமாய் அவர்களுக்கு உரைக்கும்படியாய் பதிலோடு சேர்ந்த கேள்வியைக் கேட்டார். "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ? மனுஷனால் உண்டாயிற்றோ? இதைச் சொன்னால் நானும் உங்களுக்கு பதில் சொல்வேன்" என்றார். அவர்களோ இயேசுவுக்கு பதில் கூற முடியாமல் போனார்கள். இயேசுவும் "நானும் உங்களுக்குச் சொல்லேன்" என்றார் (மத். 21:23-27). ஆக நீதி. 26:4,5ன் பொருள் என்னவென்றால், நாம் மூடனிடம் விளக்கிக் கொண்டிருக்க தேவையில்லை; ஏனென்றால் அவனுக்கு நம்மைப் போல் ஞானமில்லை; பதிலாக நாம் செய்ய

வேண்டியது ஒன்றே ஒன்று. அது தான் நீதி 26:3ன் படியான மறு உத்தரவு. குதிரைக்கு சவுக்கு எப்படியோ, கழுதைக்கு கடிவாளம் எப்படியோ அப்படியே அவன் கேள்விக்கு நமது பதில் சுரீரென்று உரைக்கும் சாட்டையைப் போல, பிரம்பைப் போல இருக்க வேண்டும். அத்தோடு அவன் மறு உத்தரவு கேட்காமல் ஒதுங்க வேண்டும் என்பதே! இன்னொரு இடத்தில், வானத்திலிருந்து அடையாளம் வேண்டும் என்று பரிசேயர் கேட்டபோது, அவர்களின் மதியீனத்தைச் சொல்லிவிட்டு, வானத்தின் அடையாளத்தைச் சொல்லாமல், யோனாவின் அடையாளத்தைச் சொல்லி இயேசு வாயடைத்தார். (மத். 16:1-4). நமது பதில் இப்படியாய் மூடனின் முதுகுக்கு பிரம்பாய் இருக்கட்டும். அல்லேலூயா!

❖ ❖ ❖

## பிணம் எங்கேயோ கழுகு அங்கே

பிணம் எங்கேயோ, அங்கே கழுகுகள் வந்து கூடும் என்ற மத். 24:28ன் வசனத்திற்கு சரியான விளக்கம் தெரியாமல் பலர் பலமாதிரி போதித்து சத்தியத்தை கருக வைக்கிறார்கள். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

தேவனுடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்குமான அடையாளங்களை இயேசு கிறிஸ்து விவரிக்கும் போது இப்படிச் சொல்லுகிறார். தேவனும் யோபுவும் உரையாடும் போது யோபு 39:27-30 வசனத்திலும் இப்படி உள்ளது. பிணம் என்பது எதற்கு அடையாளம் என்று பார்ப்போம்:- இயேசு கிறிஸ்து தன்னுடைய வருகையை சரியான நாளோடும், நாழிகையோடும் சொல்லவில்லை. அதிலும் மத் 24ல் மணவாட்டியாகிய சபை எடுத்துக்கொள்ளப்படும் இரகசியம் வெளியரங்கமாக்கப்படவில்லை. உலகத்தேற்ற முதலே இரகசியமாய் வைக்கப்பட்டு (எபே. 1:4) பவுல் மூலமாய் வெளியரங்கமாக்கப்பட்ட மணவாட்டி சபை (எபே. 2:91-3:5) இரகசியமாகவே எடுத்துக் கொள்ளப்படப் போகிறது (1 கொரி. 15:51). அல்லேலூயா. (இது குறித்து ஆசிரியரின் "இரகசிய வருகை" என்ற செய்தியை "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் படியுங்கள்). எனவே இயேசு புரியும்படியாய் சொன்னது அவரின் பகிரங்க வருகையே! ஏனோக்கு சொன்னதும் அதுதான். (யூதா 14,15) இயேசு ஒலிவமலையில் காலடி வைப்பார்; ஒலிவமலை இரண்டாய்ப் பிளக்கும் (சகரி. 14), மாம்சீகமான புறஜாதி ராஜவோடு அர்மெகதோன் யுத்தம் நடைபெறும் (வெளி. 19). வெளி. 19:17-18ஐப்

பாருங்கள். வானத்துப் பறவைகள் பூமியில் கைவிடப்பட்டு மரித்த, இரட்சிக்கப்படாத மக்களின் மாம்சத்தைப் புசிக்க அழைக்கப்படுகின்றன. "பிணம் எங்கேயோ, கழுகு அங்கே" என்பது ஒரு உவமானமாய்ச் சொல்லப்பட்டுள்ளது. பிணம் என்பதை ஆவிக்குரிய ரீதியில் எடுத்துக் கொண்டால் ஆன்மீக அக்கிரமம் (Moral corruption) என்று பொருள். இது எப்போது உலகில் பரிபூரணமாய் உண்டாகும்? மனுஷகுமாரன் வரும் காலத்தில்தான். நோவாவின் நாட்களின் மக்களைப் போல லோகத்தின் முடிவில் நடந்தடும். லோத்தின் நாட்களின் மக்களைப் போல லோகத்தின் ஆசை பெருகிடும். ஆன்மீக மரணம் ஏராளமாகும். உலகமெங்கும் நடைபிணங்களே இருக்கும். உலகினில் பிணம் இருக்கும் போது உயரப் பறக்கும் வலிமையுள்ள கழுகு அந்த பிணத்தை கொத்தித்தின்று நாசமாக்குவது போல், இந்த நடை பிணங்களையும், சின்னாபின்னமாக்க, வானாதி வானத்தில் உயரே இருக்கும் வல்லமையின் தேவன், இராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாய், நியாயாதிபதியாய் ஒலிவமலையில் காலடி வைக்க (சக. 14) பகிரங்கமாய் வரப் போகிறார். ஆவிக்குரிய அக்கிரமம் எப்போது பூமியில் நிரம்பக் காணப்படுமோ அப்போது தான் இயேசு பூமிக்கு வருவார். அந்த நாளின் அறிகுறி இப்போதே தென்படுகிறது; அந்த நாள் மிகச் சமீபமே! கழுகு எங்கேயோ பிணம் அங்கே!

❖ ❖ ❖

## யோபு பாவம் செய்தானா? – 1

"யோபு விசுவாசக் குறைவான வார்த்தைகளைப் பேசினான்" என்று சொல்லும்போது, சில ஆவிக்குரிய செழுமை உள்ளவர்கள் கூட கோபப்படுகின்றனர். தேவனே அவனை நீதிமான் என்று சொல்லியிருக்க, நீ அவனை பாவி என்று கணிக்கிறாயே என்கின்றனர். இந்த கருகலான காரியத்தை தேவன் விளக்குவாராக.

கடுகளவு விசுவாசம் இருந்தாலே போதும் என்று தேவன் விரும்புகிறார். அற்ப விசுவாசம் இருந்தால்கூட தேவனிடம் அரவணைப்பு உண்டு. அவர்களும் பரலோகம் போகமுடியும். கொடுத்து கொடுத்து சிவந்த கரம் தேவனின் கரம்; ஆனால் யோபுவின் விசுவாசமோ "கொடுத்தார்; அவரே எடுத்தார்" என்று (யோபு 1:12) சொல்கிறான். இதிலே பாதி வார்த்தை அறியாத வார்த்தை. நமக்கே தெரியும், யோபுவிடம் இருந்த ஆடுமாடுகள், தோட்டம், பிள்ளைகள் அனைத்தையும் அழித்தது, எடுத்தது தேவனல்ல; சாத்தானே!

தேவன் ஜீவன் கொடுப்பவர்; சாத்தான் அழிப்பவன் (யோ. 10:10). இப்படியாய் தனக்கு நடக்கும் என பயந்து விசுவாசித்தான். அவனது தேவையில்லாத வீணான விசுவாசத்தினால் அவனுக்கு இப்படி ஆயிற்று; இதை அவனே யோபு 3:25,26ல் சொல்கிறான். "வாதை எந்தன் கூடாரத்தை அணுகாது; பொல்லாப்பு நேரிடாது" என்ற Positive confession தானே நமக்குத் தேவை. "தேவன் கையிலே நம்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமா?" (யோபு 2:10) என்று தவறாய்ப் பேசுகிறான். தேவன் நன்மையே செய்கிறவர்; பொல்லாங்கு - தீமை செய்பவன் பிசாசு என யாக் 1:13 சொல்கின்றதல்லவா! "நீர் என்னை ஏன் பிறக்க வைத்தீர்? கர்ப்பத்திலேயே மரித்திருக்கலாமே!" (யோபு 10:18) என்று தகாதவிதமாய் தேவனைப் பற்றி பேசுகின்றான். தேவனின் சித்தம் இன்னதென்று அறிந்து கொள்ளாமல் இடறி விழுகின்றான் (2 பேதுரு 1:10). தேவனின்றி நமக்கு இளைப்பாறுதலே இல்லை (மத். 11:28). ஆனால் யோபுவோ, "நான் சற்று இளைப்பாறும்படி நீர் என்னை விட்டு ஓய்ந்திரும்" என்றான் (யோபு 10:20). இன்னும் எத்தனையோ வார்த்தைகளைப் பேசினான். இதை யோபுவே "நான் எனக்குத் தெரியாததையும் என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன்" (யோபு 42:3) என்று தேவனிடம் சரணடைகிறான். அப்போதுதான் அவனக்கு முழுமையான விசுவாசக் கண் - ஆவிக்குரிய பிரகாசமுள்ள கண் (எபே. 1:19). தேவனையும், தேவனின் வார்த்தைகளையும், மகிமையையும் காண்கிறது (யோபு 42:5). இப்படியாய் அவன் மனக்கண் பிரகாசமாக்கப்பட்டு, தேவனிடம் சரணடையும் வார்த்தைகளை அறிக்கையிட்டதினாலே தேவன் அதைக் கேட்டு சந்தோஷப் பட்டு அவனை இரட்டத்தனையாய் ஆசீர்வதித்தார்.

அப்படியானால் அவன் அதற்குமுன் வார்த்தையினால் பாவம் செய்தானா? இது கேள்வி. தேவனுடைய பார்வையில் அற்பவிசுவாசமோ கடுகளவு விசுவாசமோ பாவமில்லை. மரணத்துக்கு, அதாவது நரகத்துக்கு ஏதுவான பாவம், நரகத்துக்கு ஏதுவில்லாத பாவம் என்று இரண்டு வகை உண்டு (1 யோ. 5:16). இயேசுவை ஆண்டவரென்றும், இரட்சகரென்றும் விசுவாசியாததுதான் (யோ. 16:8,9) மரணத்துக்கேதுவான, பரிசுத்த ஆவிக்கு விரோதமான பாவம். இப்படிப்பட்டதான பாவத்தை யோபு செய்யவே இல்லை (யோபு 1:22; 1:10). அதனால் தான் தேவன் அவனை நீதிமான் என்கிறார். தேவனை விசுவாசிக்கின்ற நாம் எப்படி நீதிமான்களோ (ரோ. 3:23; 1 கொரி. 6:11) அப்படியே யோபுவும்நீதிமானான். அவன் பாவி அல்ல; விசுவாசக் குறைவுதான் இருந்தது; தவறான அறிக்கைகளால் அலப்பினான். தேவனால் அவன் கண்கள் திறக்கப்பட்டது. நமக்கும் மனக்கண்கள் பிரகாசமாகட்டும்.

அல்லேலூயா! (இன்றுக்கும் பல சபைகளில் யோபுவைப் போல அலப்புகிறவர்கள் உண்டு).

❖ ❖ ❖

## யோபு பாவம் செய்தானா? – 2

"இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ் செய்யவுமில்லை; தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை" என்று யோபு 1:22 சொல்கின்றது. "நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன்" என்று கர்த்தரிடம் யோபு சொல்வதாய் யோபு 42:3ல் வாசிக்கிறோம். இரண்டையும் பார்க்கும் போது, ஒன்றுக்கொன்று முரணாய்த் தோன்றுகிறதல்லவா! இந்தக் கருகலானதை ஆவியானவர் விளக்குவாராக!

"இவையெல்லாவற்றிலும்" என்று யோபு 1:22 ஆரம்பிப்பதால், "எவையெல்லாவற்றிலும்" என்பதை அறிய அதற்கு முன் உள்ள வசனத்தை வாசிக்க வேண்டும். "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்திற்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்பதுதான் முன் உள்ள வசனம். அதே போல யோபு 2:10லும், "இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை" என்று உள்ளதால், அதற்குமுன் உள்ள, "நீ பைத்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம், தீமையையும் பெற வேண்டாமோ?" என்ற யோபுவின் வசனத்தையும் வாசிக்க வேண்டும். இந்த இரண்டு இடங்களிலுமே அவன் பாவம் செய்யவில்லை என்று எழுதப்பட்டிருக்கிறது; யோபு 42:3 ஐ ஆரம்பத்திலிருந்து வாசியுங்கள். "அறிவில்லாமல் ஆலோசனையைப் மறைக்கிற இவன் யார்? ஆகையால்..." ஆக, யோபு தன் புத்திக்கு எட்டாததையும் அறியாததையும் அலப்பியது அறிவில்லாமையினால் தான் என அறிகிறோம். இதை கர்த்தரே யோபுவிடம், யோபு 38:2ல் சொல்லியிருக்கிறார். இது எந்த அறிவு? உலக அறிவா? அல்ல.. அல்ல.. தேவனைப் பற்றிய அறிவு; தெய்வீக அறிவு (Divine - knowledge). இது தேவன் எதிர்பார்க்கிற அறிவு; பகுத்தறிவு (யூதா 22). வேத அறிவு; வசன அறிவு; ஆவிக்குரிய அறிவு. இப்படிப்பட்ட அறிவு இல்லாமையினால் தான் இஸ்ரேலர்கள் சங்காரமாகிறார்கள் என்று ஓசி. 4:6 சொல்கின்றது; சிறைப்பட்டுப் போகிறார்கள் என்று ஏசா. 5:13 சொல்கின்றது. இந்த அறிவு இருந்தால் தான் தேவசித்தம் வெளிப்படும்; தேவ சித்தம் புரிந்தால் தான் விசுவாச அறிக்கைகள் வெளிவரும்;

வெற்றி வாழ்க்கை துளிர்விடும். நம் மனமாகிய ஆத்மா வசனத்தால் புதிதாகிறதினாலே தினந்தோறும் மறுரூபம் ஆனால் மட்டுமே, தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிய முடியும் (ரோ. 12:2). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் எல்லோருக்குமே தேவ சித்தம், தேவ அறிவு - முழுமையாய் வெளிப்படவில்லை என்று ஏற்கெனவே நான் எழுதியிருக்கிறேன். யோ. 1:17; எபி. 1:2,23ன் படி இயேசு கிறிஸ்துவின் மூலமாகத்தான் முழுக்கிருபையும், முழுச் சத்தியமும் வெளிப்படுத்தப்பட்டது என அறிகிறோம். எனவே புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நாம், தேவ சித்தத்தை, அன்பும் நன்மையுமான பரிபூரண சித்தத்தை, கிருபையை, சத்தியத்தை முழுமையாய் அறிய, கொடுத்து வைத்த விசேஷித்தவர்கள். அல்லேலூயா! (எபி. 11:39,40).

அப்படியானால் தேவ சித்தம் - தேவ அறிவு - அறியாமல் யோபு அலப்பியது தான் என்ன? "தேவன் கையிலே தீமையையும் பெற வேண்டாமா" என்கிறான் (யோபு 2:10). இது யாக்.1:13, 17க்கு விரோதமானது. அவர் நன்மை செய்கிறதையே சித்தமாக கொண்டவர் (எபே. 2:10; அப். 10:38). கர்த்தர் கொடுக்கிறவர் மாத்திரமே! எடுக்கிறவரே அல்ல. தேவன் அன்பாயிருக்கிறார்; அவரின் கிருபை வரம் மாறாது (1 யோ. 4:8; ரோ. 11:29). அவர்காயப்படுத்தி காயங்கட்டுகிறார் என்று யோபு கூறி இதுவே தேவனின் சிட்சை என்று அலப்புகிறான் (யோபு.5:17; 9:17, 18). இது யோ.15:2,3; 17:17; சங். 50:17; 105:9; 94:13; நீதி. 1713; 2 தீமோ 3:16, 17; எபி. 12:18 போன்ற பல வசனங்களுக்கு விரோதமானது. அவர் ஆவியாகிய இருதயத்தில் வசனத்தை கொண்டே சிட்சிக்கிறார். (See அப்.2:37). தேவனோடு வழக்காடாமல் யோபு கெஞ்சுவாராம்; அப்படிக் கெஞ்சினாலும் யோபுவின் ஜெபத்துக்கு பதில் கொடுக்கிறார் என்று நம்பமாட்டானாம் (யோபு.9:15, 16). இது ஏசா. 1:18க்கு மாறானது. மட்டுமல்ல; யோபு கடந்து போகாதபடிக்கு தேவன் பாதையை அடைக்கிறாராம்; வழிகளை இருளாக்குகிறாராம்; யோபுவை கீழாக்குகின்றாராம்; யோபுவின் நம்பிக்கையைப் பிடிங்கிக் போட்டாராம்; பகைவனாகக் கருதினாராம். இவையெல்லாம் யோபுவின் அலப்பல் (யோபு 19:8-13). இது யோ. 14:16; 1:19; உபா. 28:14; எபி. 12:1; யோபு 1:12 போன்ற பல வசனங்களுக்கு விரோதமானவை. "மேலும் என்னை ஏன் பிறக்க வைத்தாய்" என்ற தேவனிடம் யோபு கேட்கிறான் (யோபு 10:18). இது நீதிக்கு மாறானதல்லவா! தேவன், யோபுவை விட்டு விலகியிருந்தால்தான் யோபுவுக்கு இளைப்பாறுதல் வருமாம் (யோ. 10:22). என்னே அறியாமை! (See மத்.11:28). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இப்படியாய் யோபு சொன்னதெல்லாம் பாவமில்லையா? இது கேள்வி.

அப். 17:30ல் அறியாத காலங்களை தேவன் அறியாதவர் போலிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யோபுவின் காலம் நியாயப் பிரமாணத்துக்கும் முற்பட்ட காலம் என்று கணக்கிட வாய்ப்புண்டு. வேதப் புத்தகங்களிலேயே மிகவும் பழைமையானது யோபு புத்தகமே. எனவே யோபு, தேவனின் சித்தத்தை, அன்பை, உறவை முழுமையாய் அறியாதிருந்தான். ஆனால், தான் அறிந்தவைகளில் மிகவும் உண்மையாய் பிடிமானமாய் இருந்தார். கொடுக்கும் கர்த்தர் எடுக்கவும் செய்வார் என்றும், நன்மையைத் தரும் கர்த்தர் தீமையையும் தருவார் என்றும், அணைக்கிற கர்த்தர் அடிக்கவும் செய்வார் என்றும் தவறாய் அறிந்திருந்ததையே அறிக்கையிட்டாலும், தனக்கு நேர்ந்தது தேவனால் தான் என்று மட்டும் சொல்லாமல், சத்துருவாகிய பிசாசால் நிகழ்கிறது என்றும் சொல்கின்றான் (யோபு 6:23). இப்படித்தான் அலப்பல் வார்த்தைகளை வெளியிட்டான். தேவனின் வார்த்தைகளில் சிட்சிக்கப்பட்டு, தேவ சித்தத்தைப் புரியத்தக்கத்தாய் அவன் கண்கள் முழுமையாய்த் திறக்கப்பட்டு, தேவனை - தேவனுடைய வார்த்தையை - முழுமையாய் காணும்போது தான் (யோபு 42:15). அவனுக்கு இரட்டத்தனையான ஆசீர்வாதம் வந்தது. எனவேதான் நம் மனக்கண் பிரகாசமடைய வேண்டும் என்று பவுல் விரும்புகிறான் (எபே.1:19). இல்லையேல் அறியாமையினால் சங்காரம் தானே (ஆதி.4:6)! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இந்தக் காலம் அறியாமையின் காலமென்று சொல்லவே முடியாது! விதைக்கப்படுகிற சத்தியங்களை நல்ல நிலம் போல ஏற்றுக் கொள்ளாத வரைக்கும் யோபுவின் நிலை தான் உனக்கும். மட்டுமல்ல... எங்கும் சொல்லப்படும் புதிய புதிய வெளிப்பாடுகளை - சத்தியங்களை - இந்தக் கடைசி நாட்களில் பிரியமாயிராமல், கேட்காமல், தியானிக்காமல் அசட்டை பண்ணினால் ஐயோ! அறியவில்லை என்ற நிலையில் உள்ளோருக்கும் ஆக்கினைத் தீர்ப்பு உண்டு என்பதை மறவாதீர் (லூக்.12:48). அறியாமையால் அலப்பின யோபுவுக்கே கொடிய தீமைகள் வந்ததென்றால் போக்குச் சொல்ல இடமில்லாத காலத்தில் வாழும் நமக்கு என்னென்ன நடக்கும்? சிந்தியுங்கள். அறிய மனமில்லாதது பாவம்; அறிந்ததை மட்டும் வைத்துக் கொண்டு அலப்பியது பாவம்; மனக்கண் பிரகாச மில்லாதிருக்க இடங்கொடுத்தது பாவம் (3 யோ.2: யாக்.1:21). யோபு கற்றுக் கொள்ள மனதாயிருந்தான் என்பதை தேவன் அறிந்தார். எனவே அவன் அவிசுவாசத்தால் பாவம் செய்யவில்லை என்று தேவன் புரிந்திருந்தார். நீ எந்த நிலையிலிருக்கிறாய்! உன்னை நீயே நிதானித்து பார்! இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## இயேசுதான் பிதாவை வெளிப்படுத்தினார்

“தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்” (யோ. 1:18). இதன் படி தேவனை யாரும் கண்டதில்லை என அறிகிறோம். ஆனால் ஆபிரகாம் (ஆதி. 12:7), யாக்கோபு (ஆதி. 32:30); மோசே, ஆரோன் போன்றவர்கள் (யாத். 24:10; 33:18); கிதியோன் (நியா. 6:22) மனாசே (நியா. 13:22) போன்ற பலரும் தேவனை முகமுகமாய்க் கண்டோம் என்கிறார்களே அது தவறா? தேவன் ஆவியாயிருக்கிறார் (யோ. 4:24) ஆவியாயிருக்கிற தேவனை மாம்சக்கண்களால் பார்க்க முடியாது. சேரக்கூடாத ஒளியில்வாசம்பண்ணுகிறவர்; மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர்; காணக்ககூடாதவர்; என்று 1 தீமோ. 6:16 சொல்கின்றது. ஆனால் இவரைக் கண்டவர் குமாரன்; அவரே தேவனின் மடியிலிருக்கிறார். ஆபிரகாம் மடியிலே லாசரு இருந்ததுபோல. தேவன் ஆவியாயிருப்பதால் அவரின் ஆவியின் ரூபத்தை, மகிமையை, மனிதன் யாரும் பார்க்க இயலாது அல்லவா! நாம் ஒரு நாள் மறுரூபமாகி தேவனை முகமுகமாய்த் தரிசிக்கப் போகிறோம். இதைத்தான் சகோ. பெர்க்மான்ஸ் பாடுகிறார்:-

**“உருமாற்றம் அடைந்து...**
**முகமுகமாக என் நேசரைக் காண்பேன்.**
**தொட்டு தொட்டு பார்ப்பேன்...**

அப்படியானால் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கண்டது என்ன? கண்டது தேவ ரூபமல்ல; மனித வடிவில் வெளிப்பட்ட, மனிதனால் காணக்கூடிய ரூபத்தில் வெளிப்பட்ட தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே! தேவதூராய்க் கடந்து வந்தவர் அவரே! மேலும், யோ. 14:8-9; 1 யோ. 1:1-2ஐ வாசியுங்கள். பிதாவாகிய தேவன் மனிதர் காண்கிறபடி இதுவரைக்கும் வெளிப்பட வில்லை; ஆனால் குமாரனாகிய தேவனே அப்படி வெளிப்பட்டார். இன்றைக்கும் மனிதர் காண்கிறபடியே பரலோகம் போன குமாரனாகிய தேவன் அதே வடிவத்தில் தான் இருக்கிறார்; அதே வடிவத்தில் தான் மறுபடியும் திரும்பி வருவார். அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஒழுங்கின்மையாய் பூமி படைக்கப்பட்டதா?

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது (ஆதி. 1:1). இந்த

வசனத்தின்படி தேவன் ஒழுங்கின்மையும், வெறுமையுமான பூமியைப் படைத்தாரா? அவர் படைத்த எல்லாவற்றையும் நன்மையாகக் கண்டவராயிற்றே! தீமையான காரியங்களை செய்கிறவன் பிசாசுதானே! தேவன் நன்மை செய்கிறவரே! இப்படியெல்லாம் நம் எண்ணங்கள் ஓடுகின்றது. ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை விளக்குவாராக!

ஏசா. 45:18ஐ வாசியுங்கள். வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாய் சிருஷ்டியாமல், அதைக் குடியிருப்புக்காக செய்து படைத்து, அதை உருவேற்படுத்தினவர் தேவனாகிய கர்த்தர். ஆக தேவன் பூமியை வெறுமையாய் (without form and void) படைக்க வில்லை என்று அறிகிறோம். பின்பு எப்படி பூமி ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாறிற்று? ஒழுங்கின்மையும், வெறுமையும் என்பதை எபிரேயு பாஷையிலே tohu and bohu என்று போடப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தை, தேவன் ஆக்கினை நியாயத்தீர்ப்புச் செய்வதால் வரும் விளைவுக்கு, நியாயத் தீர்ப்புக்குப்பின் உள்ள நிலைக்கு எழுதப்படுவது. அப்படியானால் தேவன் நியாயத் தீர்ப்புச் செய்ததாலேதான் பூமி ஒழுங்கின்மையும் வெறுமையும் ஆயிற்று எனலாம். பூமி உருவாகுமுன் தேவன் செய்த ஒரே நியாயத்தீர்ப்பு பிசாசின் மேல்தான். (ஏசா. 14:12; எசே. 28:16) பிசாசை கீழே பூமியில் தள்ளி நியாயத் தீர்ப்புச் செய்தார். தேவன் குடியிருப்புக்காகப் படைக்கப்பட்ட பூமியிலே விழுந்த பிசாசு தான், இந்த பூமியைத் தன் சேஷ்டையால் ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் மாற்றி இருப்பான் என்று நாம் யூகிக்க முடிகின்றது. ஆனால், மனிதனைப் படைத்து பூமியில் குடியிருக்க வைக்க நினைத்த தேவன், ஆறு நாட்களாக பூமியை ஒழுங்காகவும், குடியிருக்க ஏற்றதாகவும் ஆக்கி, ஆறாம் நாள் இறுதியில் தம்மால் சீர்படுத்தப்பட்டு செழுமையாக்கப்பட்ட பூமியில் வாழ ஆதாமையும் ஏவாளயும் சிருஷ்டித்தார். என்னே தேவனின் மனிதன் மேலுள்ள அன்பு!

❖ ❖ ❖

## கிரியை இல்லாத விசுவாசம் தேவையா?

ரோ. 3:29 முதல் 4:6 வரை மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகின்றான் என்று பவுல் கூறுகிறார். ஆனால், யாக். 2:14-26ன்படி "கிரியையில்லாத விசுவாசம் தேவையில்லை; அது செத்தது" என்று யாக்கோபு கூறுகிறார். இரண்டும் ஒன்றுக்கொனறு விரோதமாய்த் தெரிகிறதல்லவா! ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாதராக!

விசுவாசம் என்று பவுல் சொல்லும்போது, அது கல்வாரி நாயகன் இயேசுகிறிஸ்துவின் பாவ மன்னிப்புத் திருப்பணியை விசுவாசித்தல் என்று அர்த்தமாகிறது. எந்த மனிதனும் தன் சுய கிரியைகளினால், நீதியை சம்பாதிக்க முடியாது. தேவ கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டேதான். இது எந்த மனுஷனாலும் உண்டானது அல்ல; இது தேவனுடைய ஈவு. ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; விசுவாசத்தால் உண்டானது; விசுவாசத்தால் இலவசமாய் நீதிமானாய் ஆக்கப்பட்டிருக்கிறோம் (ரோ. 3:23; எபே. 2:8; 1 கொரி. 6:11). அதாவது அவருடைய நீதியை தரித்துக் கொள்ளுதலாகும். ஆனால் இரட்சிக்கப்பட்ட பிற்பாடு, அந்த இரட்சிப்பைக் காத்துக் கொள்ள வேண்டுமே! நீதிமான் என்று ஆக்கப்பட்ட பிற்பாடு, அந்த பட்டத்தில் உறுதியாய் இருக்க வேண்டுமே! அப்போதுதான் நாம் சாட்சியாய் ஜீவிக்க முடியும். இப்படி கடைசி வரைக்கும் நிலைத்து நிற்கும் கிரியைப் பற்றித்தான் யாக்கோபு எழுதுகிறார். (see மத். 24:13). அதற்கு உதாரணமாய், நீதிமானாக்கப்பட்ட ஆபிரகாமின் கிரியையைச் சொல்கிறார் அவர். விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் என்ற ஆபகூக் 2:4ஐ வாசியுங்கள். கிரியையில்லாமல் விசுவாசத்தால் நீதிமானாக்கப் பட்டவன், ஆபிரகாமைப்போல மறுபடியும் விசுவாசத்தாலான கிரியைகளால் தான் பிழைக்க வேண்டும். அப்படி என்ன கிரியை ஆபிரகாம் செய்தான்? "ஈசாக்கினிடத்தில் தன் சந்ததி விளங்கப் பண்ணும்" என்ற தேவன், வல்லவரென்று விசுவாசித்து அதைக் கிரியையிலே காட்டி, தன் ஒரே மகனையே பலியிடத் துணிந்தான் (எபி. 11:18,19; யாக். 2:22) இந்த விசுவாசக் கிரியைத்தான், தேவ வார்த்தையின் மேலுள்ள விசுவாசத்தோடுள்ள கிரியைத்தான் யாக்கோபு சொல்கிறான். இப்படிப்பட்டதான கிரியை இல்லாத விசுவாசம் ஜீவனில்லாதது. பவுல் சொல்வதோ ஆரம்ப இரட்சிப்புக்கு கிரியை தேவையில்லை; விசுவாசமே போதும். ஆனால் யாக்கோபு சொல்கிறபடி இரட்சிக்கப்பட்ட, ஆபிரகாம் போல் நீதிமானாக்கப்பட்டவனுக்கு (கிரியை இல்லாமலே) (ஆதி. 15:6) தேவ வார்த்தையின்படி விசுவாசக் கிரியைகள் தேவை. அதுதான் ஆவியின் கனி (கலா. 5:22). கனி கொடாதமரம் வெட்டுண்டுபோம். அல்லேலூயா! இன்றைக்கு இது நியாயப் பிரமாணக் கிரியைகளாலல்ல; இயேசுவின் உபதேசத்தாலும், அப்போஸ்தல உபதேசத்தாலும் வரும் விசுவாசக் கிரியையால் (மத். 28:20; ரோ. 6:17; யூதா 17).

❖ ❖ ❖

# மரித்தோருக்காக ஞானஸ்நானம்

"மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். நாங்களும் ஏன் என்நேரமும் நாச மோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?" (1 கொரி. 15:28,30). இந்த வசனத்தை வைத்துக் கொண்டு, மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்று பவுல் திட்டந்தெளிவுமாய் சொல்கிறார் என்று பிரசங்கிப்பவர்களும் உண்டு. இது சரியான உபதேசமல்ல, கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

1 கொரி. 15ம் அதிகாரமே மரித்தோர் உயிர்த்தெழுதல்பற்றித்தான். ஆரம்ப வசனமே பவுல் பிரசங்கித்த சுவிசேஷம் பற்றியே ஆரம்பிக்கிறது. அந்த சுவிசேஷம் தான் என்ன? இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார் (1 கொரி. 15:1-4). இதுதான் சுவிசேஷம். இந்த நற்செய்தியைச் சொல்லி, இப்படியாய் மரித்தோரும் ஒரு நாள் உயிர்த்தெழப் போகிறார்கள் எனறு பவுல் கூறுவதை சிலர் விசுவாசிக்கவில்லை. "மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா உங்கள் விசுவாசமும் விருதா" என்று வச. 13, 14ல் பவுல் கூறுவதைப் பாருங்கள். இதிலிருந்து நாம் விசுவாசிக்கிறது என்ன? விசுவாசிகள், அதுவும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்த விசுவாசிகள் மத்தியிலும் இப்படிப்பட்ட கள்ள உபதேசம் அந்தக் காலத்திலேயே பரவியிருந்தது என அறிகிறோம். இயேசு பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தது போல விசுவாசிகளும் அதற்கு ஒப்பனையாய் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். ஆக மரித்தபின் உயிர்த்தெழுதல் உண்டு என்று விசுவாசிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளே கள்ள உபதேசம் நுழைந்ததால்... "மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்" என்று தமிழில் பன்மையில் உள்ளது. ஆங்கில வேதாகமத்தில் "Baptized for the dead" என்று ஒருமையிலேயே உள்ளது. இந்தக் கண்ணோட்டத்தில் வச. 29,30ஐ படிப்போம். "மரித்தோர் உயிர்த்தெழுதல் இல்லையென்றால், மரித்தவரான இயேசுவை வைத்து ஞானஸ்நானம் ஏன் பெற வேண்டும்? அப்படி பெறுவதாலே பிரயோஜனம் என்ன? பின்பு ஏன் இந்த சுவிசேஷ ஊழியத்தில் நாசமும் மோசமும் அனுபவிக்க வேண்டும்? மரித்த இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் எடுத்தது வீணா? அப்படி எடுத்தவர்கள் இனி என்ன

செய்வார்கள்?" இதுதான் பவுலின் கேள்வி. இந்தக் கேள்வியிலேயே பதில் உண்டல்லவா! கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என ஞானஸ்நானம் பெறுவதன் தாற்பரியம் இதில் அடங்கியுள்ளது. மரித்தோர் அனைவரும் உயிர்த்தெழுவர். இந்த வச. 29,30ம் மரித்தவர்களுக்கான ஞானஸ்நானம் பற்றியது அல்ல. (இதுகுறித்து இன்னும் தேவன் தந்த விளக்கத்தை இதே நூலில் பாகம்-2ல் உள்ள என்ற செய்தியில் பாருங்கள்).

❖ ❖ ❖

## சீதனம் கொடுக்க வேண்டியது யார்?

உலகத்தில் மட்டுமல்ல; கிறிஸ்தவ வட்டாரத்திலும் சீதனம் பெருகிப் போய்விட்டது. ஆவிக்குரிய கிறிஸ்தவன் என்று சொல்கிறான்; அந்நிய பாஷை பேசுகிறான்; அற்புதம் அடையாளம் செய்கிறான். அவனும் சீதனம் கேட்கிறான்; சீதனம் கொடுக்கிறான்; சீதனம் கேட்பதும் கொடுப்பதும் தவறு என்று அரசாங்கம் சொல்கின்றது. வேதம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்.

சீதனம் என்றால் "தன் மகன் திருமணமாகும் போது அவளுக்கு பணமோ சொத்தோ கொடுப்பது" என்று அகராதியில் போடப்பட்டுள்ளது. இந்த அர்த்தத்தில் தான் இன்றைக்கு உலகத்திலே சீதனம் என்ற சொல் நிலவி வருகிறது. இப்படியாய் பெண்ணுக்கு சீதனம் கொடுத்ததாக வேதத்தில் எங்காவது நிகழ்ச்சி உண்டா? முதன் முதலில் பெண்பார்க்கும் படலம் முழுமையாக ஆபிரகாமின் காலத்தில் தான் வருகின்றது. ஈசாக்குக்குப் பெண் பார்க்க எலிசேயர் போகும் போது ஆபிரகாம் தான் பெண்ணுக்கு வேண்டிய சகலவித உச்சிதமான பொருட்களை கொடுத்தனுப்பினான் (ஆதி. 24:10). அவைகளில் ஒன்று எலியேசர் தண்ணீர்த் துரவண்டையில் ரெபேக்காளுக்குக் கொடுத்த அரை சேக்கல் பொற் காதணியும், 10 சேக்கல் பொற்கடகங்களுமாம் (ஆதி. 24:22). இன்னும் வெள்ளியுடைமைகளும், பொன்னுடைமைகளும், வஸ்திரங்களும், பெண் உறுதியானவுடனே ரெபேக்காளுக்கு எலியேசர் கொடுத்தான். மட்டுமல்லாமல் அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான் (ஆதி. 25:53). ஆக, மாப்பிள்ளை வீட்டார் தான் பெண்ணுக்கும், பெண் வீட்டுக்கும் மனமுவந்து யாரும் கேட்காமலே கொடுத்தாக அறிகிறோம். ஆனால் கலா 3:6-7ன்படி விசுவாச மார்க்கத்தார் எல்லாருமே ஆபிரகாமின் சந்ததி என்று சொல்லிக்கொள்ளும் ஆவிக்குரிய கிறிஸ்தவன் தானே, ஆபிரகாமின் முறைக்கு

எதிராய் பெண் வீட்டிலிருந்து சீதனம் கேட்கிறான். "நான் நகை போடாத பெந்தகொஸ்தே சபையைச் சேர்ந்தவன்; எனவே நகைக்கு பதிலாக பணம் கொடுத்துவிடு, கார் வீடு வாங்கிக்கொடு; கல்யாண செலவைப் பார்த்துக்கொள்" என்று சொல்கிற கிறிஸ்தவர்களும் ஏராளம் உண்டு. இவர்களெல்லாம் யார்? பொருளாசையாகிய விக்ரக ஆராதனைக்காரர்கள். "படிக்கிறது வேதம்; இடிக்கிறது மாதா கோயில்" என்ற பழமொழி போல் சத்தியத்தை சாக்கடையில் தள்ளுபவர்கள். அக்கிரமச் செய்கைக்காரர் - Lawlessness people. இவர்களைத்தான் தேவன் அறியேன் என்று சொல்வாரே! (மத். 7:22) வெள்ளைக் காகத்தைத் தேடும் கறுப்பு எலியாக்கள் இவர்கள். பெண் வீட்டாரே மனமுவந்து கொடுத்தால் பரவாயில்லை; இந்த சீதன காரியத்தில் விசுவாசிகளைவிட முழு நேர ஊழியக்காரர்களே மிகவும் மோசம். இதிலே கமிஷன் வேறு! ஐயோ... இவர்களுக்காய் ஜெபிப்போம். கீரியாத் செப் பேரைச் சங்காரம் பண்ணிப் பிடிப்பவனுக்கு தன் குமாரத்தியைத் தருவேன் என்று காலேப் சொன்னான். அந்த பெண்ணுக்காய் ஒத்னியேல் அதைப் பிடித்தான்; யாக்கோபும், ராகேலாகிய பெண்ணுக்காய் மொத்தம் 20 வருஷம் ஆடு மேய்த்தான். தாவீதும் மீகாளுக்காய் நூறு நுனித்தோலைக் கொண்டு வந்தான். காலேபுடைய மகள் புருஷன் வீட்டுக்குப் புறப்படுகையில், அவளே விரும்பி ஒரு வயல் வெளியைக் கேட்டதால் கொடுத்தான் (யோசு. 15:18,19). மற்றபடி சீதனமாயல்ல. தேவ சத்தியத்தைக் கருகலாக்கிக் கொண்டிருக்கும் யாராயிருந்தாலும் சரி, இன்றைக்கு மனம் மாறுவீர்களாக! பெண்ணுக்காய் கொடுத்த காலம் போய், மாப்பிள்ளைக்குக் கொடுக்க வேண்டிய காலம் தேவைதானா? இப்படிப்பட்டவர்களுக்காய் ஜெபிப்போம்.

❖ ❖ ❖

## விசுவாச ஊழியம் என்றால் என்ன?

"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1 யோ. 5:4). இந்த வசனப்படி தேவனால் பிறந்த நாம் உலகத்தை ஜெயிக்க முடியும். நமக்கிருக்கும் இப்படிப்பட்ட விசுவாசத்தாலே உலகத்தை நாம் ஜெயிக்க முடியும். பலரால் ஜெயிக்க முடியவில்லை காரணம் என்ன? இந்தக் கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

நிறைய ஊழியக்காரர்கள் இனறைக்கு வெளிநாட்டு உதவிகளோடு ஊழியம் செய்கின்றனர். ஆனால், சில ஊழியக்காரர்களோ ஏழ்மையிலே

பிறந்து வளர்ந்து ஏழ்மையிலேயே ஊழியம் செய்து வருகின்றார்கள். அவர்களுக்கு எந்த ஒரு வெளிநாட்டு உதவியோ ஸ்தாபன உதவியோ இல்லை. தன்னுடைய சபையை நடத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பிடிப்பட்டவர்கள் யாராவது தெரிந்தவர்களிடம் பண உதவிக்காய் அணுகும்போது, தன்னுடையஏழ்மையை உணர்த்த "ஐயா! நான் விசுவாசத்திலே ஊழியம் செய்கிறேன்" என்கிறார்கள். விசுவாச ஊழியம் என்றால் என்ன? ஏழ்மையா? பொருளாதாரக் குறைவா? விசுவாசம் இருந்தால் உலகத்தையே ஜெயிக்க முடியும் என்று வேதம் சொல்கிறதே! "உலகத்திலே உபத்திரவங்கள் உண்டு; திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோ. 16:33) என்ற வசனப்படி இதை விசுவாசிக்கும் எல்லோரும் இயேசுவைப் போல் உலகத்தை ஜெயிக்க முடியுமல்லவா? உலகம் தான் பிசாசின் ராஜ்யம்; இருளின் ராஜ்யம். இந்த பிசாசின் ராஜ்யத்தில் தான் வறுமை, வியாதி, மரணம், தோல்வி போன்ற எல்லாமுண்டு. இவைகளை எல்லாம் விசுவாசத்தால் ஜெயிக்க முடியும். அப்படியிருக்க, விசுவாச ஊழியம் செய்வோர் பொருளாதாரத்திலே பின்னடைந்த நிலையை, விசுவாச ஊழியம் என்று ஏன் சொல்ல வேண்டும்? பொருளாதார ஆசீர்வாதத்தோடு ஊழியம் செய்வோர், வெளிநாட்டு உதவியோ ஸ்தாபன உதவியோ பெற்று ஆத்மாக்களை ஆதாயப்படுத்தி வல்லமையாய் ஊழியம் செய்தால் அந்த ஊழியம் விசுவாச ஊழியம் அல்லவா? அது விசுவாசமில்லாத ஊழியமா? நம்முடைய கர்த்தாவாகிய இயேசு கிறிஸ்துவினாலே தேவன் விசுவாசிகளுக்கு நிச்சயம் ஜெயம் கொடுப்பார் (1 கொரி. 15:57). **ஜெயம் கொண்ட ஊழியம் தான் விசுவாச ஊழியம்.** உபத்திரவமோ, வியாகூலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே! (ரோ. 8:36,37). கஷ்டங்கள் ஊழியத்தில் வரலாம்; சோதனைகள் வரலாம்; அவைகள் ஊழியப்பாதையிலே நிரந்தரமல்ல; வெற்றியின் ஜீவியம் தான் நிரந்தரம். இது தான் விசுவாச ஊழியம். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாய் கிடக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாதாம். தேடுகிறவர்களுக்கே அப்படியென்றால் கர்த்தருக்கு ஊழியம் செய்பவர்களுக்கு அதிலும் மேன்மையல்லவா? இந்த ஊழியம் தான் விசுவாச ஊழியம். தேவ நீதியை தேடுகிறவர்களுக்கு எல்லாம் கூடக்கொடுக்கப்படுமாமே! (மத். 6:33). அப்படியிருக்க ஏன் ஏழ்மை ஊழியம்? பால்யாங்கிசோவின் ஆரம்ப ஊழியம் ஏழ்மைதான்; விசுவாச வார்த்தைகளினால் இன்று பொருளாதாரத்தில் ஆசீர்வதிக்கப்பட்டு வெற்றியான

விசுவாச ஊழியம் செய்கிறார். 2 கொரி 8:9ஐ விசுவாசியுங்கள். தேவசித்தம் நாம் ஏழையாய் இருக்க அல்ல. இயேசு தன்னுடைய ஊழியத்தில் ஏழ்மையினால் அவதிப்பட்டதாயில்லை. ஆரம்ப நாளில் உணவின்றி பசியால் வாடினார்; பிசாசு சோதித்தான்; வார்த்தையினால் வென்றார். இதே வெற்றி விசுவாச ஊழியம் என்று வருந்துவோருக்கும் உண்டல்லவா! நீதிமான் கைவிடப்படுவதே இல்லை; அவன் சந்ததி அப்பத்துக்கு இரஞ்சி திரிந்ததே இல்லை (சங். 37:25). நீதிமானுக்கே - அவனுடைய சந்ததிக்கே இப்படிப்பட்ட மகிமை என்றால், அவர்களை நடத்துகிறவர்களுக்கு வறுமை தலைமை தாங்குமா? விசுவாசம் இருந்தால் தான் வெற்றியின் ஊழியம் இருக்கும்; அது தான் விசுவாச ஊழியம்! இந்த வாஞ்சை உள்ளவர்களே வளரட்டும். வீணாய் விசுவாச ஊழியம் என்றால் ‘‘ஏழ்மையின் ஊழியம்; யாரிடமிருந்தும் உதவி பெறாத ஊழியம்’’ என்ற அர்த்தத்தில் யாராவது சொன்னால் அந்தக் கருத்து மாறட்டும் இயேசுவின் நாமத்தில்.

❖ ❖ ❖

## வரம் பெற்றவர்கள்தான் அண்ணகரா?

வரம் பெற்றவர்கள் தவிர மற்றவர்கள் இந்த வசனத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் (மத். 9:11) என்ற வசனத்தை வைத்துக் கொண்டு வரம்பெற்றவர்கள் தான் அண்ணகர்கள் என்றும், அண்ணகர் என்றால் திருமணம் முடிக்காதவர்கள் என்றும் பிரசங்கிக்கிறவர்கள் உண்டு. இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

முதலில் இந்த வசனத்தை இயேசு ஏன் சொன்னார்? அதற்குரிய சூழ்நிலை என்ன? என்று அறிய வேண்டும். மத் 19:3ம் வசனம்முதல் வாசியுங்கள். பெண்களை விவாகரத்து செய்வது சம்பந்தமான காரியத்தைப் பற்றி தேவன் இயேசு விளக்குகிறார். தேவனின் சித்தம் விவாகரத்து செய்யக்கூடாது என்பதுதான். ஆனால் இஸ்ரவேலரின் இருதயக் கடினத்தின் நிமித்தம் மோசே தள்ளுதற்சீட்டை உட்படுத்தினான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ, வேசித்தன முகாந்தரமில்லாமல் யாரையும் தள்ளிவிடக்கூடாது என்று திட்டமும் தெளிவுமாய் சீஷருக்கு சொன்னார். அதன் அர்த்தம் என்ன? தன் மனைவி என்ன தவறு செய்தாலும், புருஷன் அவளைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்; விவாகரத்து பண்ணவே கூடாது; அப்படி தள்ள நினைத்தால் விபச்சாரம் என்ற ஒன்று மட்டுமே காரணமாக இருக்கலாம். இதைக் கேட்ட சீஷர்கள் கலங்கிப் போனார்கள். மனவை என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டுமா? இது எப்படி முடியுமோ? மனைவியைப் பற்றி

புருஷருடைய காரியம் இப்படியிருந்தால் விவாகம் பண்ணுகிறது நல்லதல்ல என்று சொன்னார்கள். தேவனின் உள்ளான சித்தத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் தான் இயேசு சொன்னார், All men cannot receive this saying except they to whom it is given. வரம் - அதாவது Gift பெற்றவர்கள் என்ற அர்த்தத்தில் தேவன் சொல்லவில்லை. திருமணமாகி வாழ வேண்டும் என்று யாருக்கு கொடுத்து வைத்துள்ளதோ, அவர்கள் இந்த வார்த்தையை ஏற்றுக் கொள்வார்கள் என்று சொன்னார். திருமணமாகி வாழ வேண்டும் என்று கொடுத்து வைக்காதவர்கள் தான் அண்ணகர்கள். இவர்களைப் பற்றி தான் 12ம் வசனம் சொல்கின்றது.

அண்ணகர் என்றால் யார்? ஆங்கிலத்திலே அண்ணகர் என்றால் Eunuchs என்று போட்டுள்ளது. அதாவது அலி என்று அர்த்தம். castrated man. இனப்பெருக்க ஆற்றல் இல்லாதவர். இது ஆண்களைத்தான் குறிக்கும்; பெண்களை அல்ல. இதை வைத்தே "திருமணமாகாதவர்கள்" என்று இந்த வார்த்தையை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று அறிகிறோம். ஏனெனில் திருமணமாகாதவர்கள் பெண்களும் இருக்கிறார்களே! இந்த அண்ணகர் என்ற ஆண்பாலிலே மூன்று பிரிவுகள் உண்டு என்று இயேசு சொல்கிறார். (1) பிறக்கும் போதே திருமணமாகத் தகுதியில்லாமல் ஆண்மை யிழந்தவனாய்ப் பிறப்பது. (2) ராணிகளையும், இளவரசிகளையும் பாதுகாக்க, அவர்களுக்குப் பணிபுரிய, அண்ணகர்களாய் ஆக்கப்பட்டவர்கள், அப். 8:27-29ல் வருகிற காந்தேக மந்திரி கூட, அவனுடைய ராணிக்காய் அண்ணகராக்கப்பட்டவர் என்று தெரிகிறது. (See verses in English version). (3) பரலோக ராஜ்யத்தின் நிமித்தம் தங்களையே அண்ணர்களாய் ஆக்கிக் கொள்வது. பாகால் தெய்வத்தை வணங்குவோரின் சாமியார்கள் இப்படியாய் தங்களை ஆபரேஷன் போன்ற காரியம் மூலமாக தங்களை அண்ணகர்களாக்கிக் கொள்வது அந்த நாட்களில் வழக்கமாயிருந்தது. எனவே, இந்த மூன்று பிரிவினர் தான் திருமணம் முடிக்க தகுதியில்லாதவர்கள். மற்றவர்களுக்கெல்லாம் தகுதி உண்டு. இப்படியாய் தகுதியோடு, திருமணமாகி வாழ கொடுத்து வைத்தவர்கள் மட்டுமே இயேசு சொன்ன விவாகரத்துப் பிரமாணத்தை ஏற்றுக் கொள்வார்கள். ஆக, அண்ணகர் என்பது திருமணம் செய்யாமல் தேவனுக்கென்று ஒப்புக் கொடுக்கப்பட்ட வரம் பெற்ற ஆண்கள் அல்ல என்று அறிகிறோம். (திருமணம் செய்ய தகுதி உள்ளவன் தேவனால் கொடுத்து வைத்தவன். அல்லேலூயா!) மேற்சொன்ன அண்ணகர்கள் உலகத்தால் ஒதுக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் தேவனுடைய பிள்ளைகளானால், நமக்கும் மேற்பட்ட ஒரு பெரிய கீர்த்தியை

அவர்களுக்கு தேவன் தருவார். (ஏசா. 56:4,5) என்னே தேவனின் அன்பு! தேவனின் ஆதி 1:28ன் திட்டத்தில் அக்கறையாய் அவர் இருக்கிறார் பாருங்கள்.

❖ ❖ ❖

# தன் வருகை நாளை இயேசு அறிவாரா?

"அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்" (மாற். 13:32). இந்த வசனத்தை வைத்துக் கொண்டு இயேசு கிறிஸ்துவின் வருகை நாளை அவரே அறியார் என்று வியாக்கியானம் பண்ணுபவர்கள் உண்டு. இயேசுவுக்கு தெரியாது; பிதாவுக்கு மட்டுமேதான் தெரியும் என்றால் இயேசு பிதாவைவிட கீழானவர் என்று ஆகிவிடாதா? இயேசு உண்டாக்கப்பட்டவர் என்று வாதாடும் யேகோவா விட்னஸின் வாதம் உண்மையாகிவிடும் அல்லவா? கருகலை தேவன் விளக்குவாராக! இயேசு கிறிஸ்துவுக்கு குமாரன் என்ற பெயர் ஆரம்பத்திலேயே உண்டு. "இவர் என் நேசகுமாரன்; இவர் மேல் பிரியமாயிருக்கிறேன்" (மாற். 1:11). "தாவீதின் குமாரனாகிய இயேசு" (மத். 1;1). போன்ற வசனங்கள் அவரைக் குமாரன் என்கின்றன. இயேசுவாகிய குமாரனை தேவகுமாரன்; மனுஷகுமாரன் என்று இரண்டு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அவர் மனிதனாய்ப் பிறந்த போது மனுஷகுமாரனாகிறார். சங். 2:7, அப். 13:32ன்படி குமாரனை தேவன் ஜெநிப்பித்தார் என்று எழுதப்பட்டுள்ளது. எப்போது ஜெநிப்பித்தார்? ஏசா 9:6ஐ வாசியுங்கள். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். இந்த பாலகன்தான் மனுஷகுமாரன். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். பாலகனான இயேசு குமாரனாய் நமக்கு கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அப்போது அவர் தோளிலிருக்கும். உலகத்தாருக்கு பாலகன் இயேசு கொடுக்கப்படவில்லை; குமாரன் இயேசு தான் கொடுக்கப்பட்டது. எப்போது குமாரனானார்? தேவன் ஜெநிப்பிக்கும் போதுதான். இது எப்போது? மேரியின் வயிற்றிலிருந்து பிறக்கும்போதா? இல்லை. அவர் மரித்து உயிர்த்தெழுந்த போது. (அப். 13:33), உயிர்த்தெழுந்த இயேசு தான் தேவகுமாரன், (ரோ. 1:5). அப்போதுதான் கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருந்தது (ஏசா. 9:6). அப்போது தான் அவர் இரட்சகர் அந்தஸ்து பெற்றார். உயிர்த்தெழுந்தபின் இயேசு தேவகுமாரனாய் இருந்தாலும் மனுஷகுமார ரூபத்திலே காட்சியளித்தார். ஆக, மாற். 13:32 வசனத்தை இயேசு சொல்லும் போது மனுஷகுமாரனாகவே இருந்தார். அதனால் தான், இயேசுவின் வருகையை

மனுஷகுமாரனும் அறியார் என்று உள்ளது. ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு தேவகுமாரனாய் கர்த்தத்துவம் Authority - அவர் தோளின் மேலிருந்தால், சகல அகிதாரமும் அவர் கொண்டிருந்தார் (மத். 28:18). இந்த குமாரன் நிச்சயம் அவரின் வருகை நாளையும் நாழிகையையும் அறிவார்; பிதாவும் அறிவார். இருவரும் ஒரே தத்துவமாய் இருக்கிறார்கள். இருவருமே அனைத்தையும் அறிந்தே இருக்கிறார்கள். அல்லேலூயா! கொலோ. 2:9ன்படி தேவத்துவம் அவரில் சரீரப் பிரகாரமாக இருந்தாலும், பிதா சொல்லிக் கொடுத்தால்தான் இந்த நாளும் நாழிகையும் அவருக்கு தெரியுமல்லவா!

❖ ❖ ❖

## பவுல் அகாலப் பிறவியாம்! எப்படி?...

"எல்லாருக்கும் பின்பு அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்" (1 கொரி. 15:8) என்ற வசனத்தில் பவுல் தன்னை அகாலப் பிறவி என்று குறிப்பிடுகின்றான். அகாலப்பிறவி என்றால் Born Before the time அதாவது காலத்துக்கு முன்னே பிறந்தவன்; Premature என்று அர்த்தம். அப்படியானால் சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக

உயிர்த்தெழுந்த இயேசு யார் யாருக்கெல்லாம் தரிசனமானார் என்று எழுதிய பவுல், கடைசியாய் அகாலப் பிறவியாகிய எனக்கும் தரிசனமானார் என்று எழுதுகிறான். பவுல் தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் போது, இயேசு தரிசனமானார். அன்றே அவன் இரட்சிக்கப்பட்டான்; மறுபடியும் பிறந்தான் (அப். 9:3-6). இப்படியாய் தேவனைப் பார்த்து மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்ட பவுல் தான், தன்னை அகாலப் பிறவி என்கிறான். கமாலியேலின் பாதத்திலே கபடற்ற வேதப் பண்டிதரான பவுல், தன்னுடைய மறுபிறப்பை யோசிக்கிறான். தன்னை ஒரு இஸ்ரவேலன் என்ற எண்ணத்தில் வைத்து சிந்திக்கிறான். மத். 23:29ல் இயேசு சொல்வதைப் பாருங்கள்:- "கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் தோத்தரிக்கப்பட்டவர் என்று நீங்கள் (இஸ்ரவேலர்) சொல்லுமளவும் இதுமுதல் என்னைக் காணாதிருப்பீர்கள்." அதன் பொருள் என்ன? இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாய் கர்த்தாதி கர்த்தாவாய் மேசியாவாய் மகிமையோடு ஒலிவமலையிலே இறங்கும் போது இஸ்ரவேலர் எல்லாரும் அவரைத் தரிசித்து, இவரே மேசியா என்று சொல்லி இரட்சிக்கப்படப் போகிறார்கள். (சகரியா 12:10-13; ரோ. 11:25-27; எசே. 20:35-38; ஓசி. 2:14-17; 1 தீமோ. 1:16) இதுதான் பகிரங்க வருகை! இது அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக்குப்பின் சம்பவிப்பது; அர்மகேதான் யுத்தம் நடக்கும் காலம்; வெள்ளாடு, செம்மறியாடு

என்று பிரிக்கும் நேரம் (வெளி. 19; மத். 25). இவ்வளவு காலத்திற்குப் பிறகுதான் இஸ்ரவேலர் முழுவதுமாய் இரட்சிக்கப்படப் போகிறார்கள். மறுபடியும் பிறக்கப் போகிறார்கள். ஆனால் இஸ்ரவேலனாகிய பவுலோ அந்த காலத்திற்கு முன்னே மறுபடியும் பிறந்து விட்டான்; இது தேவனால் நடந்தது. இப்படி காலத்திற்கு முன்னே இவன் பிறக்க வேண்டும் என்பதற்காகத்தான், பிற்காலத்திலே இஸ்ரவேலர் தரிசிப்பது போலவே, பவுலும் தரிசிக்கும்படி அவனுக்குக் காட்சியளித்தார் முற்காலத்திலேயே. முன்கூட்டியே இப்படி அவர் தரிசனம் கொடுத்ததால் அவன் இஸ்ரவேலருக்குள்ள காலத்திலே மறுபடியும் பிறக்காமல், அக்காலத்தில் - காலத்திற்கு முன்னே, பிறந்து விட்டான். அல்லேலூயா! இந்த Before time spritual Bornஐ த்தான் Premature - காலத்திற்கு முன்னான ஆவிக்குரிய பிறவியைத்தான், பவுல் அப்படி அகாலப் பிறவி என்று சொல்லுகின்றான். பவுல் அப்படி அகாலப்பிறவியாய் ஆவியிலே ஆனதால் தான் புறஜாதியாராகிய நமக்கு சத்தியம் வெளிப்பட்டது. என்னே தேவனின் சித்தம்!

❖ ❖ ❖

## உறவினர் சாவுக்கு ஊழியர் போகக்கூடாதா?

"அவருடைய (இயேசுவின்) சீஷர்களில் வேறொருவன் அவரை நோக்கி, ஆண்டவரே உறவினர் சாவுக்கு ஊழியர் போகக்கூடாதா? முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும்" என்றான். அதற்கு இயேசு:- "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னை பின்பற்றி வா என்றார்." (மத் 8:21, 22). இந்த வசனத்தை வைத்துக் கொண்டு பலர், ஊழியக்காரர்கள் எல்லாருமே தன் மாம்சீகப் பிரகாரமான குடும்பத்தாரின் சாவுக்குக்கூடப் போகக்கூடாது என்றும், அப்படி போகிறது தேவனின் மேற்கண்ட வசனத்திற்கு விரோதம் என்றும், பாவம் என்றும் பிரசங்கிக்கிறார்கள். விசுவாசிக்கிறார்கள். கைக்கொள்கிறார்கள். ஒரு சிலர் மேலே சொன்ன வசனத்தை வைத்து, "இயேசு அன்பில்லாதவர்; இவரின் ஊழியத்திற்கு யார் போவார்கள்" என்று சொல்கிறார்கள். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே விளக்குவாராக!

தேவன் இயேசு ஒரு வசனத்தை ஒரு ஆளிடம் சொன்னார் என்றால், அந்த எல்லா வசனங்களுமே நம் எல்லாருக்கும் கைக் கொள்ள வேண்டிய வசனமாய் நிச்சயம் இருக்காது என்று நாம் முந்தி அறிய வேண்டும். ஒரு சில வசனங்கள் அந்த ஆளுக்கு மட்டுமே ஏற்புடையதாய் இருக்கும். இந்த கண்ணோட்டத்தில் இந்த வசனத்தைப் பார்ப்போம். இயேசுவின் சீஷனின்

அப்பா மரித்து விட்டார்; அதற்கு அடக்கம் பண்ண அந்த சீஷன் போக வேண்டும். போகாதே என்று தேவன் அன்பில்லாமல் சொல்வாரா? தேவனின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் சாத்தானின் வார்த்தை படி நடந்து பாவம் செய்த ஆதாம் ஏவாளை அன்போடு தேடி வந்த தேவனாயிற்றே! கன்றுக் குட்டியை உருவாக்கி விக்கிரக ஆராதனை செய்த இஸ்ரவேலரின் பேரைக் கூட ஜீவ புஸ்தகத்தில் கிறுக்கிப் போடாத அன்புத் தேவனாயிற்றே! காசுக்காய் காட்டிக் கொடுத்த யூதாசையே, என் பிராண சிநேகிதனே என்று அன்பு காட்டிய தேவனல்லவா! சிலுவையிலே தொங்கும் போது கூட இவர்களை மன்னியும் என்று பரிந்து பேசிய அன்புத் தெய்வமாயிற்றே! இவரா மரண வீட்டிற்குப் போக வேண்டாம் என்று சொல்வார்? தன்னுடைய வாழ்வில் மூன்று மரணத்திற்கும் ஒரே ஒரு திருமணத்திற்கும் தானே சென்றார். அப்படியானால் இந்த வார்த்தை நம் எல்லோருக்கும் அல்ல என்று புரிகிறதா? இந்த வார்த்தை இந்த சீஷனின் உள்ளத்தை அறிந்து இவனுக்காகவே சொல்லப்பட்ட வார்த்தை. எப்படி? இயேசுவோடு இருந்தவன்; அவரை ஆண்டவராய் ஏற்றவன்; அவரின் அற்புத அடையாளங்களைப் பார்த்தவன். இவன் ஆண்டவர் இயேசுவையும் கூட சாவு வீட்டிற்கு அழைத்திருக்க வேண்டும். தான் மட்டும் போகிறேன் என்கிறானே, அப்படியானால் இயேசுவையும் தன் குடும்பத்தில் தன்னோடு ஒருவராக இவன் நினைக்கவில்லை போலும். அடுத்து, "ஆண்டவரே வாரும் இறந்து போன என் அப்பாவை எழுப்பும்" என்று சொல்லாமல் அடக்கம் பண்ணப் போகிறேன் என்கிறானே அப்படியானால் இயேசுவின் வல்லமையில் அவனுக்கு விசுவாசம் இல்லையா? அப்படி இயேசு வந்து அற்புதம் செய்வதின் நிமித்தம் தனது குடும்பமே இரட்சிப்புக்குள் வரும் என்று அவன் நம்பவில்லையா? இப்படிப்பட்ட எண்ணமுடைய சீஷன், இன்னும் ஊழியத்தில் பூரணப்படாமலிருப்பதால், இவன் உள்ளத்தை தேவன் நன்கு அறிந்ததினால், "இவனை தாம் அழைத்த அழைப்பு வீணாகி விடக் கூடாது; வீட்டிற்கு போகிற இப்படிப்பட்ட உள்ளமுடையவன் பின்மாற்றம் அடைய ஏதுவாகலாம்" என்ற எண்ணத்தில், இயேசு அவனை அனுப்பவில்லை என்று நிதானிக்கப்படுகிறது. ஆக, சீஷனின் உள்ளத்தை உணர்ந்து அவனுக்காகவே சொல்லப்பட்ட வசனங்கள்தான் இவை. ஆனால் இவனோ அவரின் வார்த்தையாலே விசுவாசத்தில் உறுதியாகி அவர் பின்னே போனான். இதுதான் தேவனின் சிட்சையால் வரும் வெற்றி, எனவே இப்படிப்பட்ட வசனம், எல்லா ஊழியர்களுக்கும் நிச்சயம் பொருந்தாது.

❖ ❖ ❖

# செல்வந்தன் சீஷனாக முடியாதா?

நித்திய ஜீவனை அடைய என்ன செய்ய வேண்டும் என்று ஒரு வாலிபன் இயேசுவிடம் கேட்டபோது கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவனோ, சிறுவயது முதல் கைக் கொள்கிறேன் என்றான். அதற்கு அவர், உனது சொத்துக்களை விற்று தரித்திரருக்கு கொடுத்துவிட்டு என் பின்னே வா என்றார் (மத். 19:16-22). இதை வைத்துக் கொண்டு பலர், "இயேசுவின் பின்னே ஊழியக்காரனாய் வர வேண்டுமென்றால் சொத்துக்கள் எல்லாம் இல்லாமல் வர வேண்டும்; ஐஸ்வரியவான் பரலோகம் போகமாட்டான்" என்று போதிக்கின்றனர்; அதையே விசுவாசித்து செயல்படுகின்றனர். இந்த சத்தியத்தின் தாற்பரியத்தை ஆவியானவர் விளக்குவாராக! மத்தேயு 19:23ஐ வாசித்து விட்டு ஐஸ்வரியவான் பரலோகம் போக மாட்டான் என்கின்றனர். அப்படியானால் ஆபிரகாம், ராஜா தாவீது எல்லாரும் பரலோகம் வரமாட்டார்களா? (பரதீசில் லாசரு, ஆபிரகாம் மடியில் இருந்தானாமே!) வச. 22ஐ வாசியுங்கள். அந்த வாலிபன் ஐஸ்வரியத்தை விற்று தரித்திரருக்கு கொடுக்க மனதில்லாமல் பொருளாசை உடைய விக்கிரக ஆராதனைக்காரனாய் இருந்ததால், இப்படிப்பட்ட ஐஸ்வரிய ஆசை உடையவர்கள் பரலோகம் போக மாட்டார்கள் என்று இயேசு சொன்னார். மேலும் ஆஸ்தியை விற்று தரித்திரருக்குக் கொடுத்து விட்டு வா என்ற இயேசுவின் வார்த்தை எல்லோருக்குமேயா? வேதத்திலே தேவன் சொல்லப்பட்ட வார்த்தைகள் எல்லாமே எல்லாருக்கும் அல்ல; ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட்ட ஒருவருக்கு மாத்திரமே சொல்லப்பட்டிருக்கும். ஒரு சில வார்த்தைகள் அனைவருக்குமே பொருந்தும். பேதுருவைப் பார்த்து கடலின் மேல் நடந்து வா என்று தேவன் சொன்னார்; அவனும் நடந்தான். இந்த வார்த்தை நம் எல்லோருக்குமே சொல்லப்பட்டது என்று சொல்லி கடலில் நடக்கலாமா? கூடாதே. அப்படித்தான் தேவன் இயேசு, அவரோடு சம்பாஷிக்கிற மக்களின் உள்ளத்திற்கு மட்டுமே பொருந்தும்படியாய் பல வசனங்களை சொல்லி இருக்கிறார். மத். 19ல் வந்த வாலிபன், நிறைய ஆஸ்தி உடையவன்; அவன் ஆஸ்தியின் மேல் இச்சை உடையவன் என்று இயேசு அறிந்து அவனுக்கேற்றபடி கேள்வி கேட்டார். நித்திய ஜீவன் வேண்டுமென்று கேட்டவன், ஆஸ்தி உடையவன்; அவன் ஆஸ்தியின் மேல் இச்சை உடையவன் என்று இயேசு அறிந்து அவனுக்கேற்றபடி கேள்வி கேட்டார். நித்திய ஜீவன் வேண்டுமென்று கேட்டவன், ஆஸ்தி தான் முக்கியம் என்ற உணர்வோடு "ஐயோ! ஆஸ்தியை விற்று தரித்திரருக்கு கொடுக்கச் சொல்கிறாரே" என்று துக்கமடைந்தவனாய் போய்விட்டான். இவனைப் போல

பொருளாசை உடையவர்கள், தேவன் சொன்ன வார்த்தை தனக்கென்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் மற்ற ஆபிரகாமின் விசுவாச மார்க்கத்தாரோ தங்களுக்கென்று அதை எடுத்துக் கொள்ளக்கூடாது. பிரசங்கிக்கவும் கூடாது. தேவனுக்கு மேலாய் கரங்களை உயர்த்திய ஆபிரகாமைப் போல (ஆதி. 14:22,23) நீயிருந்தால், உன் ஆஸ்தியை விற்காதே! உன்னைப் போன்றோர்களும் ஊழியத்திற்குத் தேவையாயிற்றே (ரோமர் 12:8) பொருளாசையாகிய விக்ரக ஆராதனையை விட்டுவிலகு (கொலோ. 3:5).

❖ ❖ ❖

## பரலோக வானவில்

வானத்தில் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று. (வெளி. 4:3) என்று யோவான் சொல்கிறான். வானவில் என்ற உடனே நாம் மழைக் காலத்தில் தென்படும் வானவில்லை நினைக்கின்றோம்; அல்லது நோவாவின் காலத்தில் தேவன் பண்ணிய உடன்படிக்கைக்கு அடையாளமான வானவில்லை நினைக்கின்றோம்; இந்த வானவில் அரை வடிவமாயிருக்கும்; ஏழு நிறங்களில் இருக்கும். ஆனால் பரலோக வானவில்லின் மகிமை எப்படி என்று ஆவியானவர் விளக்குவாராக. எசே 1;26-28ல் காணப்படும் வானவில்லையும், யோவான் கண்ட வானவில்லையும் பாருங்கள். ஆதி. 9:13-17ல் தான் முதன் முதலில் வானவில்லைப் பற்றி வேதத்தில் வந்த வசனமாகும். தேவன் மீண்டும் இந்த பூமியை ஜலப்பிரளயத்தால் அழிப்பதில்லை என்பது தான் உடன்படிக்கை. ஆனால் அந்த வானவில் பாதி வட்ட அமைப்பில் மழைக்குப்பின் சூரிய ஒளியில் தோன்றுவதாயிருந்தது. ஆனால் சிங்காசனத்தைச் சுற்றியுள்ள பரலோக வானவில்லோ முழு வட்டமாயிருக்கிறது. இந்த உலகில் நாம் பாதி வட்ட வில்லைத்தான் காணக்கூடும்; இவ்வுலகில் காணும் பாதி காரியங்களின் முழுமையை பரலோகில்தான் பார்க்கலாம். அல்லேலூயா! எப்படி என்று பார்ப்போம். உலக வானவில், அங்கீகரிக்கப்பட்ட நோவாவின் பலியின் அடிப்படையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடையாளமாகும் (ஆதி. 8:20-22).

ஆனால் தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றியுள்ள பரலோக வானவில்லோ, கிறிஸ்துவினால் சிலுவையில் நிறைவேற்றப்பட்ட பலி அங்கீகரிக்கப்பட்டதின் விளைவாக ஏற்பட்ட புதிய உடன்படிக்கைக்கு அடையாளமாயுள்ளது. கர்த்தருக்கே மகிமை! ஒளியாகிய தேவனைச் சுற்றியுள்ள அந்த பிரகாசமோ முழு வட்ட வானவில்லாய்க் காணப்படுகின்றது.

(எபே. 1:28) இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருக்கிறது. விசுவாசிக்கிறவன் மட்டுமே இந்த மகிமையைக் காண முடியும். சிலுவையில் உண்டான புது உடன்படிக்கையை விசுவாசிக்கிறவனுக்கே இந்த சிலாக்கியம் உண்டு. அல்லேலூயா! மட்டுமல்லாமல் நோவாவின் வானவில் ஏழு நிறங்களைக் கொண்டவை. வானவில்லை போல் காணப்படும் தேவ ஒளிப் பிரகாசமோ மரகதம் போன்ற பச்சை நிறமுடையது. பச்சை நிறம் பசுமை. செழுமை, களிப்பு, அன்பு, பொறுமை போன்ற எல்லா குணாதிசயங்களையும் பிரதிபலிக்கும் என்று நாம் அறிவோம். நமது தேசியக் கொடியில் கூட பச்சை நிறம் உள்ளதல்லவா!

பரலோக வானவில்லின் பச்சை தேவனின் மகிமையை வெளிப்படுத்தும் பச்சை. தேவன் உடன்படிக்கையை காப்பவர் என்றும், இப்பூமியைப் பொறுத்த மட்டில் அவருடைய வாக்குத்தத்தங்கள் மாறாதவகைள்; அவைகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் என்றும் இதனால் உறுதியாயிருக்கிறது. பூமியானது அவரின் நியாயத்தீர்ப்பின் தேசத்துக் குட்பட்டாலும் அது அழிக்கப்படுவதில்லை. பத்திரமாக வெளியே கொண்டுவரப்படும்; அவர் அதை மீட்பார்; ஆசீர்வதிப்பார்; மீண்டும் உபத்திரவங்களுக்கும், நியாயத்தீர்ப்புக்களுக்கும் பின்பு ஏற்பட உள்ள 1000 வருட அரசாட்சியின் போது, அதே பூமியின் குன்றுகளும், பள்ளங்களும் பச்சை பசேலென செழித்து மிளிரும். திராட்சைத் தோட்டங்கள் பழங்கள் நிறைந்து கொழிக்கும். பழத்தோட்டங்கள் பழுத்துக் குலுங்கும். ஆமென். இந்த ஆவிக்குரிய அர்த்தத்தை உணர்ந்துதான் வானவில் என்ற பெயரில் சபைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன போலும்.

❖ ❖ ❖

## தேவன் தான் வேலியடைந்து காக்கிறாரா?

இன்றைக்கு பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும் போது "கர்த்தாவே வேலியடைத்துக் காத்துக் கொள்ளும்" என்று சொல்கிறார்கள். இதற்கு அவர்களுக்குள்ள ஆதாரவசனம் யோபு 1:10. தேவன் உண்மையிலிலேயே நம்மை வேலியடைத்துக் காக்கிறாரா? அப்படியானால் துன்பங்கள், தோல்விகள், வியாதிகள் ஏன் வருகின்றன? இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக! யோபு 1:10 தேவன் சொன்ன வார்த்தையல்ல; பிசாசு சொன்ன வார்த்தை. பிசாசு சொல்கிற வார்த்தைகள் அனைத்தும் உண்மையுமல்ல; பொய்யுமல்ல, ஏவாளிடம் அவன் சொன்ன

ஆதி 3:4 ஐ வாசியுங்கள். “நீங்கள் சாகவே சாவதில்லை” என்பது பொய். “கண்கள் திறக்கப்படும்; தேவர்களைப் போலாவீர்கள்” என்பது மெய் (ஆதி 3:7,22) ஆக, பிசாசின் வார்த்தையை மற்ற தேவ வசனங்களோடு ஒப்பிட்டுத்தான் அவனின் தந்திர வார்த்தைகளை நிதானிக்க வேண்டும். “நீர் வேலியடைக்கவில்லையோ”? என்ற பிசாசின் கேள்விக்கு தேவன் பதிலே அளிக்கவில்லை.

தேவன் பதில் அளிக்காததால், அதைப் பற்றி இன்னும் யோசிக்க வேண்டியிருக்கிறது. தேவனே நம்மைச் சுற்றி வேலியடைத்தாரானால் பின்பு ஏன் நமக்கு சோதனைகள் வருகின்றன? பிசாசு தான் நம்மை நெருங்க முடியாதே! ஏன் பலருக்கு வியாதி வறுமை, தோல்வி, மரணம் போன்ற பிசாசின் கிரியைகள் வருகின்றன? (1 யோ. 3:8). நமக்கு தோல்வி, வறுமை, மரணம், வியாதி வரவேண்டுமென்று நினைத்தே அவர், தான் போட்ட வேலியை எடுத்து விட்டு பிசாசுக்கு வழிவிடுகிறாரா? அப்படியானால் அவர் சிலுவையில் சம்பாதித்துக் கொடுத்தவை வீணா? தேவனே அரணும், கோட்டையும், பெலனுமாய் இருக்கிறார் என்று வேதம் சொல்கிறதே அதன் அர்த்தம் என்ன? நானே அரண் என்று சொன்னவர் தனியாக ஒரு வேலி போடுவாரா? ஏதேனிலே தேவன் வேலியடைத்துக் காத்தாரானால் பிசாசு எப்படி உள்ளே வரமுடியும்? “சத்துரு சோதித்திட தேவ உத்தரவுடன் வருவான்; ஆனால் இயேசு கைவிடார்; தானாய் வந்து இரட்சிப்பார்;” என்று பாடுகிறோமே அப்படியானால் ஏதேனில் உத்தரவு கேட்டுத்தான் வந்தானா? தேவன் தன் வேலியை எடுத்து விட்டாரா? பிள்ளையை கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டி விட்டு, நாரதர் வேலை நம் தேவன் செய்வாரா? அவர் உலகத்தோற்றத்திற்கு முன்பேயே, மனிதனை, உலகை, சோதிக்க உத்திரவு பிசாசுக்கு கொடுத்து விட்டார். அதனால் தான் ஏதேனிலிருந்தே பிசாசு தன் வேலையை ஆரம்பித்து விட்டான்.

ஏசா. 59:2ஐ வாசியுங்கள். தேவன் எப்போதும் நமக்கு செவி கொடுத்து பலனளிக்க ஆயத்தமாயிருக்கிறார். அவர் பார்வை நம்மேலே இருப்பதால் பிசாசால் கிரியை செய்ய முடியவில்லை. ஆனால் நமது பாவமே தேவனுக்கும் நமக்கும் பிரிவினையை உண்டாக்கி, ஐக்கியமில்லாமல் ஆக்குவதால், பிசாசு தன் கிரியைகளை நம் மேல் செய்ய வாய்ப்புக் கிடைத்து விடுகின்றது. பாவமென்றால், பொய் திருடு விபச்சாரம் என்றே கிறிஸ்தவன் நினைக்கிறான். இதெல்லாம் உலகத்தாருக்கு தெரிந்தவை. நமக்கோ தேவ வசனத்திற்கு விரோதமாய் போகிறதெல்லாம் பாவம்; அக்கிரமம் (lawlessness) (மத் 7:22).

வசனத்திற்கு விரோதமாய் போனால் தேவனுடைய பார்வையை விட்டு விலகுகிறோம். பிசாசின் கைக்குள் விழுகிறோம். அப்படியானால் தேவனின் பார்வையிலேயே இருக்க வேண்டுமானால் நமக்குத் தேவை அவரின் வசனம். இந்த வசனத்தோடு கூடிய விசுவாசமே நமக்கு பாதுகாப்பு; வேலி. இது இல்லையென்றால் பிசாசு உன்னை தொடமுடியும். ஆக இந்த வசனத்தோடு கூடிய விசுவாச வேலியை போட வேண்டியது நீதான்; தேவனல்ல. பரிசுத்த ஆவியானவர் அதற்கு உதவி செய்வார். அப்படி வேலியை எடுப்பதும் உன் கையில் தான் உள்ளது. வார்த்தையாகிய தேவனே - தேவனாகிய வார்த்தையே - நமக்கு அரண், கோட்டை, கேடகம், துருகம் என்று சொல்லப்பட்ட தன் அர்த்தம் இதுதான். வசனத்தோடு கூடிய விசுவாசத்தால் அரணை உருவாக்கிக் கொள்வோம்! பிசாசை ஜெயிப்போம்.

❖ ❖ ❖

## அற்புதம் நடந்ததை இயேசு ஏன் சொல்லக்கூடாது என்றார்?

இரண்டு குருடர்கள் சொஸ்தமடைந்த போதும், குஷ்டரோகி குணமான போதும், இறந்துபோன சிறுமி உயிரடைந்த போதும், பேதுரு விசுவாசித்து சொன்னதையும் (மத் 8:4,30; லூக் 5:14; 8:56, 9:21) யாரிடமும் வெளியே சொல்ல வேண்டாம் என்று இயேசு கட்டளையிட்டார். ஆனால், பிசாசுகள் நீங்கின மனுஷனிடம் வீட்டுக்குப் போய் சொல் என்கிறார் இயேசு (லூக். 8:39). ஏன் இப்படி அற்புதத்தை "சொல்" என்றும், "சொல்லாதே" என்றும் கட்டளையிடுகிறார். இந்தக் கருகலான சத்தியத்திற்கு ஆவியானவர் விளக்கம் தருவாராக! இயேசு கிறிஸ்து மேசியாவாக பூமியை, அதிலும் விசேஷமாய் இஸ்ரவேல் ராஜ்யத்தை ஆளுவதற்காய் முதலாம் முறை பூமிக்கு வரவில்லை. அவர் இரண்டாம் முறை வந்துதான் ராஜாதி ராஜாவாய் பூமியை 1000 வருஷம் அரசாளப்போகிறார். எனவே இவர்தான் கிறிஸ்து - மேசியா என்று இந்த முறை முதலில் தன்னோடுள்ள சீஷர்கள் அறிய வேண்டுமென்றும் (மத் 16:13-20) தீர்க்கதரிசிகள், வேத பாரகர்கள், ஆசாரியர்கள் அறிய வேண்டுமென்றும் (மத் 11:1-6; 8:4) அதன் மூலமாய் ஒரு புதிய சகாப்தத்தை - சபையை - பக்தியுள்ள விடுதலையான சந்ததியை உருவாக்க வேண்டும் என்றும் இயேசு விரும்பினார். தான் ராஜாவாக வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. குருத்தோலை பிடித்து

ஓசன்னா பாடி போனபோதுகூட அவர் இராஜபாரியத்தை ஏற்கவில்லையே! யோ: 6:14, 15ஐ வாசியுங்கள். 5 அப்பம் 2 மீனை, 5000 பேருக்கு அளித்த அற்புதத்தை மக்கள் அறிந்து, இப்படிப்பட்டவர் தான் - ராஜாவாக வேண்டுமென்று விரும்பியதால் இயேசு விலகி தனியே போய்விட்டார் என்று அறிகிறோம்.

"மறுபடியும் விலகி" என்பதால் ஏற்கெனவே பலமுறை இப்படியாய் இஸ்ரவேலர்கள் எண்ணியிருக்கக் கூடும் என்று நிதானிக்க வழியுண்டு. ஆக, பிதாவின் முதலாம் வருகையின் சித்தம் நிறைவேறவே, அவர் தமது அற்புதத்தை சீஷர்களுக்குள்ளும், வேதபாரகர், தீர்க்கதரிசிகள், ஆசாரியர் களுக்குள்ளும் வைக்க விரும்பினார். அதனால் தான் நியாயப் பிரமாணச் சட்டப்படி (லேவி 14:4,10,21,22) ஆசாரியரிடம் காண்பி என்று குஷ்டரோகியிடம் சொன்னார். மேலும் அவர் புகழை, பெருமையை விரும்பாதவர் என்றும், எல்லா மகிமையும் பிதாவுக்கே செலுத்த வேண்டும் என்றும் அவர் வார்த்தையினால் அறிய வாய்ப்பு உண்டு. அவர் செய்யும் அற்புதத்தை மனிதன் சொல்லிக் கொண்டிருப்பதால் இயேசுவுக்கே பெருமை சேரும்படி ஆகிவிடும். தேவனை மக்கள் மறக்க வாய்ப்பு வந்துவிடும். (see யோ. 17:3). இதுவும் ஒரு காரணமாய் இருக்கலாம் அவர் சொல்ல வேண்டாம் என்பதற்கு. **அடுத்ததாய்,** ஒருவன் உண்மையிலேயே சுகமடைந்திருந்தால் அது நிலைத்து நிற்கும். அதனால் உடனடியாய் சொல்வதைவிட கொஞ்ச நாள் கழித்து சொல்லும்போது அந்த அற்புதத்திற்கு அதிக மகிமையும் கனமும் வரும் என்றும் இயேசு நினைத்து உடனே சொல்ல வேண்டாம் என்று கட்டளையிட்டிருக்கலாம். மேலும் ஊழிய ஆரம்பத்திலேயே அற்புதத்தை வைத்து விசுவாசிக்கிற கூட்டம் தேவையில்லை; அவரின் வார்த்தையை வைத்தே கடைசிவரை விசுவாசிக்கிற கூட்டம் தேவை என்று அவர் நினைத்து, அற்புதத்தை சொல்ல வேண்டாமென்று கட்டளையிட்டிருக்கலாம். 1 கொரி. 1:22ல் பவுல் கூறுவதை வாசியுங்கள். அதனால்தான் நாம் அற்புதத்தால் மறுபடியும் பிறக்காமல் வசனத்தால் பிறந்திருக்கிறோம். அல்லேலூயா! (1 பேதுரு 1:3; யாக் 1:18; யோ 3:3,5). கதரேனருடைய நாட்டில் அற்புதம் செய்தபோது அந்த மக்கள் விசுவாசிக்காமல், பயமடைந்து தங்களை விட்டுப் போகும்படி பணித்தார்கள். இயேசுவும் அப்படியே போய்விட்டால், அந்த நாட்டில் இரட்சிப்பின் சுவிசேஷம் விதைக்கப்படாமல் போகுமே என்று எண்ணி, பிசாசு நீங்கின மனுஷனை, தன் வீட்டாருக்குப் போய் தேவனின் அற்புதத்தை சொல்லச் சொல்கிறார் (லூக். 8:37-39).

எனவே தேவனுடைய பிள்ளைகளே! வசனத்தின் மூலமாய் சுவிசேஷத்தை பரிபூரணமாய் சபையாருக்கு - தேவ பிள்ளைகளுக்கு

பரப்புங்கள். இதை விரும்பாதவர்களுக்கோ, புறஜாதியாருக்கோ ஆண்டவர் செய்யும் அற்புதத்தைக் காட்டி, இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவியுங்கள்!

❖ ❖ ❖

## தேவனுக்கு (இரண்டு) மணவாட்டியா?

வேதத்திலுள்ள காரியங்களை திருடிக் கொண்டுபோய், தனக்கு இஷ்டப்படி தவறான கருத்தை நுழைத்து பிசாசானவன், மற்ற அந்நிய தெய்வ மார்க்கங்களில் செய்து கொண்டிருக்கிறான். 'குமாரன்' என்று வேதம் சொல்வதை "குமரன்" என்று மாற்றுகிறான். இந்தக் "குமரன்" என்ற முருகனுக்கு, திருச்செந்தூரிலே தெய்வயானை, திருத்தணியிலே வள்ளி. ஏன் இப்படி இரண்டு மனைவி? இந்தக் கருத்தை எங்கிருந்து பிசாசு திருடி, மனிதரைக் கெடுக்க திரித்துச் சொல்கிறான் என்று யோசித்தேன். இந்தக் கருகலான சத்தியத்தை தேவன் விளக்கினார். பொதுவாக திருமணத்தைப் பற்றி வேதம் சொல்லும் போதெல்லாம், அது தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவையே அழுத்தம் திருத்தமாய்ச் சொல்கின்றது. இந்த திருமணத்தின் மூலமாய் அன்பு, உறவு, உரிமை, பொறுப்பு போன்றவைகளை வெளிப்படுத்தப்படுகின்றன. பழைய ஏற்பாட்டிலே இஸ்ரவேல் சமுதாயம் தேவனின் மனைவியாய் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஓசியா 2:2, 16-23 போன்ற வசனங்களை வாசியுங்கள். இந்த மனைவியாகிய இஸ்ரவேலரர், கீழ்ப்படியானமையினாலே தேவனுக்குச் சொந்தமில்லாதவர்களாகி விட்டார்கள் என்று அறிகிறோம். எப்படியாயினும், அந்த மக்களின் மனந்திரும்புதலினாலே அவர்கள் மறுபடியும் தேவனால் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். புதிய ஏற்பாட்டில் சபையை மணவாட்டி என்று சித்தரிக்கப்பட்டுள்ளது. (வெளி. 19:7). பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட தேவனின் மனைவியாம் இஸ்ரவேலருக்கும் தேவனுக்கும் உள்ள உறவோடு, புதிய ஏற்பாட்டு சபையாகிய மணவாட்டிக்கும் கர்த்தருக்கும் உள்ள உறவை ஒப்பிடவே முடியாது. (யோ. 3:29) ஆனாலும் தேவ திரித்துவ இரகசியத்தில் இரண்டும் ஒன்றே; உண்மையே! எப்படி? 2 கொரி 11:1-2ன் படி சபையானது ஒரே புருஷனுக்கு நியமிக்கப்பட்ட கன்னியாய் விளக்கப் பட்டுள்ளது. இந்த சபையாகிய கன்னி, விபச்சாரம் செய்து, பின் கிருபையினால் மீட்டெடுக்கப்பட்ட மனைவி என்று எங்கும் சொல்லப்படவில்லை. இஸ்ரேலோ மன்னிக்கப்பட்டு திரும்பவும் சேர்த்துக் கொள்ளப்படுபவள்; அவள் தேவனின் (Lord) மனைவி; அதுவும் தேவனின் பூமியிலுள்ள மனைவி. (ஓசி. 2:23) ஆனால் சபையோ ஆட்டுக்குட்டியானவரின் கன்னியான மனைவி. இவள்

இயேசு கிறிஸ்துவின் பரலோக மணவாட்டி; இஸ்ரவேலோ தேவனின் பூலோக மனைவி. தேவனையும் குமாரனையும் இணைக்கும் தேவத்துவத்தின் ரகசியம் நமக்கு புரிந்தாலொழிய இந்த இருதரப்பட்ட மனைவிகள் சம்பந்தப்பட்ட சத்தியம் புரியாது. எப்படியோ ஒரு நாள் வரப்போகிறது; அப்போது இந்த இரு திறத்தாரும் தேவனின் மணவாட்டியாய் நித்தியம் நித்தியமாய் ஒன்றாய் நிற்கப் போகின்றனர். அல்லேலூயா! அதுவரை குழப்பங்கள், குளறுபடிகள் வரலாம். ஆனாலும் உண்மை என்பது என்றுமே ஒன்றுதானே! ஆபிரகாமுக்கு இரண்டு விதமாக சந்ததிகளை உதாரணம் காட்டினாரே தேவன், வானத்து நட்சத்திரம் என்பது தான் சபையா? கடற்கரை மணல்தான் இஸ்ரவேல் கூட்டமா? எப்படியோ உலக சரித்திரத்தில் இரண்டு விதமான கூட்டங்கள் உருவாகி இருக்கின்றன. இதை வைத்து பிசாசு கட்டுக் கதைகளை அள்ளி விடுகின்றான். இந்த இரண்டு கூட்டங்களும் ஆயிர வருட அரசாட்சியில் ஒரே கூட்டமாகி ஆளப்போகிறது; ஒரே மணவாட்டி என்ற நிலை வரப்போகிறது; புதிய வானம் புதிய பூமியிலும் நித்தியம் நித்தியமாய் இந்த நிலை தொடரப்போகிறது. அல்லேலூயா! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ கற்புள்ள கன்னியாய் தேவனுடைய மணவாட்டியாய் ஜீவிக்கிறாயா?

❖ ❖ ❖

## இஸ்ரவேலர் எகிப்திலிருந்தது 400 வருஷமா? 430 வருஷமா?

ஆதி. 15:13 அப். 7:6ன் படி ஆபிரகாமின் சந்ததி 400 வருஷம் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள் என்று உள்ளது. யாத் 12:40ன் படி இஸ்ரேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் 430 வருஷம் என்று உள்ளது. கலா. 3:17ல் ஆபிரகாமுக்கு தேவன் தந்த வாக்குத்தத்தத்திற்கும் நியாயப் பிரமாணம் கொடுத்ததற்கும் இடைப்பட்ட காலம் 430 வருஷம் என்று உள்ளது. இவைகள் பார்வைக்கு முரண்பாடாய் தெரிகிறது. இந்தக் கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுத்த போது அவனுக்கு வயது 75. அவனுக்கு சந்ததி பிறந்தது 100 வயதில் தான். அப்போது இஸ்மவேல் என்று இன்னொரு மகன் இருந்தான். அவன் சுதந்திரவாளி என்ற உணர்வில் ஆகாரால் வளர்க்கப்பட்டான். (ஆதி. 21:10) எனவே ஆபிரகாமின் சந்ததி ஈசாக்கு மட்டுமே என்று உறுதியாகும்படி, சாராளின் சொல்படியும் தேவசித்தப்படியும் இஸ்மவேல் வெளியேற்றப்பட்டான். அப்போது ஈசாக்கு

பால்குடி மறந்து 5 வயது ஆனது. ஆக ஆபிரகாமின் சந்ததி என்று உருவானது வாக்குத்தத்தம் கொடுத்து 30 வருஷத்திற்குப் பின் தான் என அறியலாம். இந்த வருஷத்திலிருந்து இஸ்ரவேலன் எகிப்திலிருந்து வெளியேறிய வருஷம் வரை உள்ள காலம் 400 வருஷமாகும். எப்படியெனில், ஈசாக்கின் பிறப்பிலிருந்து யாக்கோபு பிறப்பு வரை 60 வருஷம் (ஆதி. 25:26) ஈசாக்கு எதிர்ப்பில்லாத சந்ததியாய் மாறினதிலிருந்து யாக்கோபு பிறப்பு வரை (60-5=55) 55 வருஷம். யாக்கோபின் ஆயுள் 147 வருஷம் (ஆதி. 47:28). யாக்கோபின் மரணம் முதல் யோசேப்பு வரை 54 வருஷம் (ஆதி. 37:2; 42:46; 47:27; 50:22). யோசேப்பு மரணம் முதல் யோசேப்பு வரை 54 வருஷம் (ஆதி. 37:2; 41:46; 47:27; 50:22) யோசேப்பு மரணம் முதல் எகிப்திலிருந்து அவர்கள் வெளியேறும் வரை உள்ள காலம் 144 வருஷம் (யாத். 12:40; கலா. 3:14-17). ஆக 55+147+54+144=400 வருஷம் என்று ஆகிறது.

இதிலிருந்து நாம் அறிவது, ஆபிரகாம் 75 வயதாய் இருக்கும் போது தேவன் தந்த வாக்குத்தத்ததிற்கும் இஸ்ரவேலர் எகிப்தினின்று வெளியேறி சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் பெற்றதற்கும் இடைப்பட்ட காலம் 430 வருஷம் என்று அறிகிறோம். கலா. 3:17ல் சொல்லப்பட்டது சரியே! ஆதி. 15:13; அப் 7:6 போன்றவற்றில் ஆபிரகாமின் சந்ததி அந்நிய தேசத்தில் 400 வருஷம் இருப்பார்கள் என்று சொன்னது, ஈசாக்கு சந்ததியாய் நிர்ணயிக்கப்பட்ட காலத்திலிருந்து உள்ள வருஷம் என உணரலாம். ஆதியாகமத்தை வாசித்துப் பார்த்தால் அந்த சந்ததி, மெசப்தோமியா, சிரியா, கானான், பிலிஸ்தியா எகிப்து போன்ற பல பகுதிகளில் வாழ்ந்தார்கள் என்று அறியலாம். ஆனால் உண்மையிலேயே அவர்கள் கூட்டமாய் எகிப்தில் வாழ்ந்த காலம் 215 வருஷம் தான். (17+54+144+215). ஆனால் அதற்கு முன்னேயே யோசேப்பு எகிப்துக்கு போய்விட்டான் என அறியலாம். அது மாத்திரமல்ல. ஆதி 12:10ன் படி ஆபிரகாம், தன் 75 வது வயதிலேயே எகிப்துக்குப் போய்விட்டான். எபி 7:9,10ஐ வாசியுங்கள். யாக்கோபுக்குப் பிறக்கப் போகிற லேவியன் ஆபிரகாமின் அரையிலிருந்து, அவனும் தசமபாகம் கொடுத்தான் என்று எழுதப்பட்டதே அப்படிப்போல, ஆதி. 12:10ல் சொல்லப்பட்ட 430 வருஷ கணக்கு பூர்த்தியாகிறது என்று அறியலாம். எனவே ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேத வாக்கியங்களில் ஒன்றும் தவறு இருக்காது. அல்லேலூயா!

❖ ❖ ❖

# காயீன் பிசாசுக்குப் பிறந்தானா?

"பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்" (1 யோ. 3:12) என்ற வசனத்தை வைத்துக் கொண்டு சிலர், காயீன் பிசாசுக்குப் பிறந்தவன் என்று போதிக்கின்றனர். அப்படியானால் பிசாசும் குழந்தைகளைப் பிறப்பிக்குமா? பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்ற அதிகாரம் (ஆதி. 1:28) பிசாசுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லையே. இந்த அதிகாரம் இன்று வரைக்கும் மனிதனுக்குத் தானே உண்டு. அப்படியானால் இந்த வசனத்தின் அர்த்தமென்ன? அந்த கருக்லான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக! ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த உடனே சாபம் சூழ்ந்து கொண்டது. அத்தோடு, தேவனின் தண்டனையோடு ஏதேனை விட்டு விரட்டப்பட்டனர். அதற்குப் பின் தான் காயீன் பிறந்தான். ஆதி. 4:1ஐ வாசியுங்கள். ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான். அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்றாள் என்று வசனம் சொல்வதால், நிச்சயமாய் ஆதாமும் ஏவாளும் தான் காயீனைப் பெற்றார்கள் என்று அறியலாம். தேவதூதனாய் இருந்தவன் தான், மேட்டிமையினால் தாழத் தள்ளப்பட்டான். தேவதூதர்கள் மத்தியிலே கொள்வினையும், கொடுப்பனையும் இல்லையென்று மத். 22:30ல் இயேசு திட்டமும் தெளிவுமாய் சொல்லியிருக்கிறபடியால் நிச்சயமாய் சாத்தான் காயீனைப் பிறப்பிக்கவில்லை என்று அறிகிறோம்.

மேலும் ஆதாமும் ஏவாளும் தான் பிறப்பித்தார்கள் என்றும் அறிகிறோம். அப்படியானால் 1 யோ. 3:12ன் அர்த்தமென்ன? மனிதனாய்ப் பிறந்த எல்லாருமே பெற்றோரால் பிறக்கிறோம். ஆனால் மறுபடியும் பிறந்த புது சிருஷ்டிகளோ தேவனால் பிறந்து இருக்கிறார்கள் (1 யோ. 3:9). அல்லேலூயா! இயேசு கிறிஸ்து எப்படி பரிசுத்த ஆவியினால் பிறந்தாரோ அப்படியே இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் எல்லோருமே பரிசுத்த ஆவியாகிய தேவனால், ஜீவதண்ணீராகிய வசனத்தைக்கொண்டு பிறந்திருக்கிறார்கள். (யோ. 3:5; 1 பேது. 1:23; 1 கொரி. 6:11). முரட்டாட்டம் உள்ள யூதர்களைப் பார்த்து யோ. 8:43,44,47ல் இயேசு சொன்ன வார்த்தைகளைப் படியுங்கள். தேவனுடைய வார்த்தையை கேட்கவும், அதன்படி செய்யவும் மனதில்லாதவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான் என்று புரிகிறதல்லவா! 1 யோ 3:8 முதல் 12 வரை இந்த அர்த்தத்தில் தான் எழுதப்பட்டிருக்கிறது என்று வாசித்து உணருங்கள். ஆக மறுபடியும் பிறந்தவன், தேவ வார்த்தையை விசுவாசிக்கிறவன் தேவனால் பிறந்தவன் என்று உணர்கிறோம். இது சரீரப் பிறப்பல்ல; ஆவியிலே பிறப்பது; புது சிருஷ்டியாவது. இப்படி

இல்லாதவனெல்லாம் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; சரீரத்திலல்ல; ஆவியிலே. இப்படித்தான் காயீனும்! அதனாலேதான் பிசாசின் கிரியை அவனுக்குள் வெளிப்பட்டது. தன் சகோதரனைக் கொன்றான். காயீனின் உள்ளான மனுஷன் அதாவது ஆவி மரித்துப் போய், பிசாசோடு இணைந்ததினால் இந்த நிலை; அவன் ஆவி தேவனால் பிறக்காததால் இந்த நிலை; பிசாசின் வித்து (யோ. 10:10) அவனுக்குள் இருப்பதால் இந்த நிலை.

❖ ❖ ❖

## மோசேயின் திக்குவாய் ஏன் மாறவில்லை?

நம் தேவன் அற்புதத்தின் தேவன், அவரால் கூடாதது ஒன்றுமில்லை. மோசேயை பற்றி நற்சாட்சியை தேவன், ஆரோன், மீரியாம் முன்னிலையிலேயே கொடுத்திருக்க (எண். 12:6-8). இஸ்ரவேல் மக்களை விடுவிக்க இவன் ஒருவனே ஏற்றவன் என்று ஆடு மேய்க்கும் அவனைத் தேடி தேவன் சென்றிருக்க, இவன் மூலமாய் செங்கடலைப் பிளக்க வைத்து இஸ்ரேலவரை காப்பாற்றியிருக்க, 40 வருஷமாய் மோசே வழியாய் அற்புதங்களை நடத்தியிருக்க, மோசேயின் திக்குவாயும் மந்த நாக்கு மட்டும் ஏன் கர்த்தரால் சுகமாக்கப்படவில்லை? அவர் செய்த, செய்து கொண்டிருக்கிற அதிசயம் ஆயிரமாயிரம். விவரிக்க முடியாதல்லவா! உங்கள் குறைவுகளை யெல்லாம் மகிமையிலே நிறைவாக்குவார் என்ற பிலி. 4:19 ம் வசனம் பொய்யாகுமா? தேவன் விளக்குவாராக!

ஆடு மேய்க்கிற மோசேக்கு மகிமையைக் கொடுத்து, அவன் மூலமாய் இஸ்ரேலருக்கு விடுதலை அளிக்க எண்ணி, தேவன் மோசேயோடு முட்செடியிலிருந்து அவனோடு பேசுகிறார். தாயின் கர்ப்பத்திலேயே அவனைத் தெரிந்து கொண்ட தேவனாயிற்றே. இதை அறிந்திருந்தும், "தேவன் தன்னோடு இருக்கிறார். இது தேவனுடைய வேலை. அவர் நடத்துவார்" என்று முழுமையாக விசுவாசியாமல், "பார்வோனிடத்திற்குப் போகவும், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம்" என்றான் (யாத். 3:11). தேவனால் நடத்தப்படுகின்ற யாராயிருந்தாலும் அவர்கள் தாங்களாகவே தேவகாரியங்களை செய்வதில்லை; தேவனே செய்ய வைக்கிறார் என்ற விசுவாசம் இருந்தால் மாத்திரமே, நீ விரும்புகிறதற்கும் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் மேலாய் தேவன் செய்வார். நான் உன்னோடே இருப்பேன் (யாத். 3:12) என்று தேவன் சொல்லியும்

அடையாளம் கேட்கிறான் மோசே. அடையாளமும் கொடுத்தார். அதற்குப் பின்னும், "இஸ்ரேலர் என்னை நம்பார்கள்: என் வாக்குக்குச் செவிகொடார்கள்; கர்த்தர் உனக்கு தரிசனமாகவில்லை என்பார்கள்" என்று (யாத். 4:1) Negative Confession பண்ணினான், சகலமும் தேவன் நன்மைக்கேதுவாய் நடத்துவார் என்று அவன் அறிந்திருக்கவில்லை (ரோ. 8:28). எப்போதும் தேவனால் நடத்தப்படும் பிள்ளைகள், Positive Confession தான் செய்ய வேண்டும். மலை பெயர்ந்து போகும் என்று விசுவாசித்துச் சொன்னால் பெயர்ந்தே போகும் (மாற். 11:23). உலகத்தில் இருக்கிறவனிலும் நம்மிலிருக்கிறவர் பெரியவரல்லவா (1 யோ 4:4). ஆனாலும் எப்படியாவது நல்விசுவாசத்தை மோசேக்குள் வளர்க்க வேண்டுமென்று தேவன் விரும்பி மூன்று அடையாளங்களை செய்து காட்டினார். ஆனாலும் மோசே சொன்னதைப் பாருங்கள்: "இதற்கு முன்னாவது தேவரீர் உமது அடியோனோடே பேசினதற்குப் பின்னாவது, நான் வாக்கு வல்லவன் அல்ல; நான் திக்கு வாயும் மந்தவாயும் உள்ளவன்" (யாத். 4:10). தேவனுடைய வார்த்தை இவனுக்குள் வந்த பிறகும், "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் - நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோ. 15:7) என்ற விசுவாசம் மோசேக்கு வரவில்லை.

புருஷனை அறியாத மரியாள் கர்ப்பவதியாவாள் என்று தேவதூதன் சொன்ன உடனே, இதுவரைக்கும் சரித்திரத்திலே இல்லாத இந்தக் காரியம் தேவனாலே தனக்குள்ளே கூடும் என்று விசுவாசித்தாளே, அப்படியாய் பார்வோனிடம் அனுப்புகிற தேவன் நிச்சயமாய் என்னை நல்லவாயாய் பேசவைப்பார் என்று அவனுக்கு விசுவாசம் உதிக்கவில்லை. தன் குறையையே எண்ணிக் கொண்டு தேவகாரியத்திற்கு முட்டுக்கட்டை போடுகின்றான். அப்போதும் கர்த்தர் விட்டபாடில்லை. "நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்" என்றார் தேவன். "நான் பேச வைப்பேன்: திக்குவாயனே! நீ நிச்சயமாய் பேசுவாய்" என்று தேவன் வெற்றிக்கான வழியைச் சொல்லியும், அவனின் திக்குவாய் மாறும் என்று சொல்லியும், அற்புதங்களைக் கண்ட மோசே, முகமுகமாய் தரிசித்த மோசே, இன்னமும் அவரின் உறுதியான வார்த்தையின் மேல் விசுவாசம் வைக்காமல், "நீர் அனுப்ப சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும்" (யாத். 4:12) என்று சொல்லுகிறான். யோபு சொன்னது போல நிச்சயமாய் தேவன் நினைத்தது ஒன்றும் தடைபடாது (யோபு 42:2). மலடியும் வயதானவளும், கர்ப்பம் செத்துப் போனவளுமாயிருந்த சாராளுக்கு குழந்தையை கொடுத்த தேவன், தன் மனைவிக்கும் கொடுப்பாரே என்று

விசுவாசியாமல், சந்தேகக் கேள்வி கேட்டதாலே, சகரியாவின் வாய் ஊமையாயிற்று என்று நாம் அறிந்திருக்கிறோமே! அப்படியாய் மோசேக்குக்கு ஏற்படவில்லை. பதிலாக தேவன், மோசேயின் மேல் கோபமூண்டவரானார் (யாத். 4:14). தேவ கோபம் மூண்டதாலே, அவனின் திக்குவாய் கடைசி வரைக்கும் சுகமாக்கப்படவில்லை; தேவன் கோபம் கொண்டாலே சாபம் தானாய் வந்து நிற்கும் (see எண். 12:9,10). ஆனால் தேவன், தான் நினைத்ததை மோசே மூலமாய் ஆரோனின் துணையோடு செய்தார். விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி. 11:6) தேவனுக்குப் பிரியம் இருந்தால் மட்டுமே ஆசீர்வதிப்பார் தேவன் (எண். 24:1) இன்றைக்கும் கூட எத்தனையோ பெரிய தேவ மனுஷர்கள் கூட இப்படியாய் மோசேயைப் போல இருப்பதால், பல காரியங்களில் தங்கள் வாழ்க்கையில் குறைவுள்ளவர்களாய் இருக்கிறார்கள். எல்லாவற்றிலும் எப்போதும் தேவனைச் சார்ந்து வாழ்ந்தால் என்றும் நமக்கு விடுதலை. அல்லேலூயா! விசுவாசத்தினால் வராத யாவும் பாவம் என்ற ரோ. 14:23 இப்படிப்பட்டவர்களுக்குத்தானே!

❖ ❖ ❖

## ஆட்டையும் மாட்டையும் கொலை செய்பவன் மனுஷரையும் கொலை செய்யலாமா?

ஆடு, மாடு, கோழி போன்றவைகளின் ஜீவனை எடுத்துவிட்டு அவைகளின் மாமிசத்தை மனிதன் சாப்பிடுகிறான்; அந்த ஜீவனை எடுப்பது பாவமில்லையா? அது பாவமில்லையென்றால், மனுஷ கொலை மட்டும் எப்படிப் பாவமாகும்? எல்லா ஜீவனையும் படைத்தது தேவன் தானே! ஆடு, மாடு, கோழி போன்றவைகளைக் கொல்வதும் பாவம் என்றெண்ணித்தான் சிலர் மாமிசம் சாப்பிடுவதில்லையோ! இந்த கருகலான சத்தியத்தை தேவனே விளக்குவாராக!

ஆதி. 1:28ன் படி உலகிலுள்ள அத்தனை ஜீவராசிகளையும் ஆண்டு கொள்ளத் தக்கதான அதிகாரத்தை தேவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார். இதை தான் தாயுமானவர், "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தனைவணங்க" (see மல். 2:15) என்று பாடினார். ஆனாலும் ஆதி. 1:29-30ன் படி சைவ உணவைத்தான் ஆகாரமாய் மனிதனுக்கும் மற்ற ஜீவராசிகளுக்கும், தேவன் கட்டளையிட்டார். இது நோவா காலம் வரை நடைமுறையில் இருந்தது. அதனால் தான் சிங்கம்,

புலி, கரடி, பாம்பு போன்றவைகளைக் கண்டு மனிதனுக்கும் பயமில்லை; அவைகளுக்கும் பயமில்லை. உலகம் ஜலத்தினால் அழிந்தமையால், சைவ உணவுகள் கிடைக்க கொஞ்சம் காலதாமதம் ஆகும் என்பதால், தேவன், ஆடு, மாடுகளையும் ஆகாரமாய்த் தந்தார் (ஆதி. 9:3). அவைகளின் இரத்தத்திலே உயிர் இருப்பதால், உயிரை தேவன் கொடுத்ததால், மாம்சத்தை அவைகளின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார். தேவன் சொன்னார், அவைகளை கொலை செய்து சாப்பிடச் சொன்னார். எனவே சாப்பிடுவதில் பாவமில்லை. அவைகளைக் கொல்லும் மனிதன், மற்ற மனிதனை கொன்றால் மட்டும் பாவமா? இது கேள்வி.

மனிதனின் படைப்புக்கும் மற்ற ஜீவசந்துக்களின் படைப்பிற்கும் வித்தியாசம் உண்டு. மனிதனை தேவன் தன்னுடைய சாயலின்படியேயும், ரூபத்தின்படியேயும் படைத்திருக்கிறார் (ஆதி. 1:26); தேவன் ஆவியா யிருக்கிறார். நமது உள்ளான மனுஷனும் ஆவியாயிருக்கிறான்; அதாவது தேவசாயலின்படி, ரூபத்தின்படி இருக்கிறான். புறம்பான மனுஷனோ மண்ணால் உண்டாக்கப்பட்டவன். இவனுக்குள்ளே உள்ளான மனுஷனாகிய ஆவியையும், ஆத்மாவையும் வைத்து, தன்னுடைய ஜீவசுவாசத்தை ஊதினார் தேவன். மனிதன் ஒருவனையே தமது சாயலின்படியும், ரூபத்தின்படியும் படைத்து, அவனுக்குள் மட்டுமே ஜீவ சுவாசத்தை தேவன் ஊதியதால், மனிதன் தேவனுடைய பார்வையில் வித்தியாசமானவன் அல்லவா! தம்மைப் போலவே மனுஷன் படைக்கப்பட்டபடியால், அவன் கொல்லப்பட்டால், அதாவது அவன் ஜீவன் போனால் - அதாவது ஜீவனுள்ள இரத்தம் சிந்தப்பட்டால் - அது தேவ சாயலையே கொல்வது போலாகும் என்பதால், அது பாவம் என்று தேவன் நிச்சயத்திருக்கிறார். அப்படி எவனாவது மனிதனின் இரத்தத்தை சிந்த வைத்தால் - அதாவது கொலை செய்தால் - அவனின் இரத்தமும் பதிலுக்கு பதில் சிந்தப்படவேண்டும் என்று தேவன் சொல்கிறார். ஆதி. 9:6ஐ வாசியுங்கள். இந்த அடிப்படையில் தான் உலக நீதிமன்றங்கள் தூக்குத் தண்டனை கொடுக்கின்றன. எனவே மனுஷக்கொலை தேவசித்தத்திற்கு விரோதம்; ஜீவ சந்துக்களின் கொலை தேவனால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. இது ஆதியிலே தேவனால் அமுல்படுத்தப்பட்ட ஒன்று அல்ல; சிந்திப்போம் செயல்படுவோம்.

❖ ❖ ❖

# பரிசுத்த ஆவியை பெறாதவரைக்கும் அவன் கிறிஸ்தவனில்லையா?

கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல என்ற ரோ. 8:9ம் வசனத்தை வைத்து, "பரிசுத்த ஆவியைப் பெற்றால் தான் அவன் கிறிஸ்தவன்; இல்லையென்றால் கிறிஸ்தவனல்ல" என்று சொல்வோர் அநேகர். இந்த வசனத்திற்கு ஆதாரமாய் யோ. 3:5ஐ சொல்லி, ஆவியினால் பிறப்பதெல்லாம் அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெறுதல் என்றும் பலர் சொல்கின்றனர். இதுவும் தவறான உபதேசம். ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்பது என்றால் ஜீவத்தண்ணீராகிய வார்த்தையினால், பரிசுத்த ஆவியின் மூலம் ஜெநிப்பிக்கப்படுவது என்று பொருள் (see யாக். 1:18; 1 பேது. 1:23). இயேசு கிறிஸ்து எப்படி பரிசுத்த ஆவியினால் பிறந்தாரோ அப்படியே, பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கிற, மறுபடியும் பிறந்த, ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியனாவரால், அவர் மூலமாய் சொல்லப்படும் வசனத்தைக் கொண்டு பிறந்திருக்கிறான். அல்லேலூயா! யோ. 1:12,13ன்படியானவர்கள் அத்தனை பேரும் கிறிஸ்தவர்கள்; கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள்; கிறிஸ்து + அவன் என்று சொல்லத் தகுதி பெற்றவர்கள். அந்தியோகியாவிலே இருந்த சீஷர்கள் இப்படிப்பட்டவர்கள் தானே! (அப். 11:26).

அப்படியிருந்தும் ரோ 8:9ஐப் பார்த்தால் வேறுவிதமாகப் புரிகிறதே என்று நீங்கள் நினைக்கலாம். அதற்கு முன்னாலே, ஆவி என்பதைப் பற்றி அறிந்தாக வேண்டும். **உலகத்திலே மூன்று ஆவிகள் உள்ளன.** (1) தேவ ஆவி (2) பிசாசின் ஆவி (3) மனித ஆவி. வேதத்திலே ஆவியானவர் என்று வரும்போதெல்லாம் அதிகப்படியாய் பரிசுத்த ஆவியைப் பற்றித்தான் இருக்கும். மற்றப்படி வெறுமனே ஆவி என்று வரும்போது அது அந்தப் பகுதிக்கு ஏற்றாற் போல அர்த்தமாகிவிடும். மல். 2:15ஐ வாசியுங்கள்:- "அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே." இங்கு சொல்லப்பட்ட ஆவி, பரிசுத்த ஆவியா? பரிசுத்த ஆவி என்றால் அது பரிபூரணமாயிருந்தது என்று சொல்ல வேண்டுவதில்லையே! அப்படியென்றால் இதன் அர்த்தமென்ன? இந்த இடத்திலே சொல்லப்பட்டது தேவனின் "Power; வல்லமை." தேவனிடத்தில் வல்லமை பரிபூரணமாயிருந்தும், அவர் ஒருவனைத் தான் படைத்தார்; அவருக்கிருந்த வல்லமைக்கு அவர் எத்தனையோ பேரை படைத்திருக்கலாம். இந்த அர்த்தத்தில் தான் எழுதப்பட்டுள்ளது. 2 ராஜா 2:15ஐ வாசியுங்கள். எலியாவின் ஆவி, எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறது என்று தீர்க்கதரிசிகளின் புத்திரர்

சொல்வதைப் பாருங்கள். ஒரு மனிதனுடைய ஆவி இன்னொருவனுக்குள் எப்படிப் போகும்? அப்படியானால் பிர. 12:7ல் சொல்லப்பட்டபடி தன்னைத் தந்த தேவனிடம் போகிறது என்பது பொய்யா? இங்கே சொல்லப்பட்டது எலியாவின் ஆவியல்ல; எலியாவின் வல்லமை; Power. அப்படியே ரோ. 8:6ல் சொல்லப்பட்டது கிறிஸ்துவின் வல்லமை; கிறிஸ்துவின் குணாதிசயம்; கிறிஸ்துவின் கிரியை இல்லாதன் கிறிஸ்தவன் அல்ல; பரிபூரணமாய் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் நம்மை மாற்ற வேண்டும் என்பது தான் தேவசித்தம் (ரோ. 8:29) அப்படியிருக்க அதிலே கொஞ்சம் கூட இல்லாதவன் எப்படி கிறிஸ்தவன்? எப்படி அவருடையவன்? ஒருசில பிரசங்கிமார், பிரசங்கம் பண்ணும் போது தன்னுடைய கருத்தையே ஒரு விசுவாசி பிரதிபலித்து சொல்லும் போது, என்னுடைய ஆவியும், சகோதரனுடைய ஆவியும் ஒன்று என்று சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். அதன் அர்த்தம் இதுதான். ஆக, பரிசுத்த ஆவியைப்பெற்றால் தான் கிறிஸ்தவன் என்று சொல்வது தவறானது என அறிகிறோம். இதனால் கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியைப் பெறாமலிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள். பரிசுத்த ஆவியைப் பெற்றால் தானே பரிபூரணமாய் கிறிஸ்துவின் சாயல் நமக்குள் வரும். எனவே ஆசிரியரின் "அந்நிய பாஷையா? அடையாளமா?" என்ற செய்தியை "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற புத்தகத்தில் படியுங்கள்; பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

❖ ❖ ❖

## மாம்சம் மற்றும் மாம்சீகம் என்றால் என்ன?

வேதத்திலே பல இடங்களிலே மாம்சம், மாம்ச சிந்தை, "மாம்ச கிரியை" "மாம்சீகம்" போன்ற வார்த்தைகள் வருகின்றன. (யூதா 7,8,23; ரோ. 8:4-8; கலா. 5:19) நம் எல்லோருக்குமே தெரியும் மாம்சம் என்றால் நமது சரீரம் என்று. ஆனாலும் இதற்கு மேலும் இருக்கிற ஒன்றை ஆவியானவர் விளக்குவாராக!

**ஏற்கெனவே நான் எழுதியிருக்கிறேன் மனிதர்களில் மூன்று விதம் என்று** (1) இயற்கை மனிதன்; அதாவது இரட்சிக்கப்படாத மனிதன் (யாக். 3:15; யூதா 19) (2) ஆவிக்குரிய மனிதன். (யோ. 3:3,5 எபே. 5:18-20). (3) இரட்சிக்கப்பட்டும் மாம்சீகமாய் இருக்கும் மனிதன்; அதாவது கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் (1 கொரி. 3:1-4). யூதா 23ஐ வாசியுங்கள். மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரம் என்று உள்ளது. இதன் பொருள்,

இரட்சிக்கப்படாத இயற்கை மனிதன் என்பதாகும்; இது சரீரத்தை மட்டும் குறிக்கவில்லை. ஆவி ஆத்மா சரீரம் இம்மூன்றையும் இணைத்தே சொல்லப்பட்டுள்ளது. இதுதான் ஏதேனிலிருந்து விரட்டப்பட்ட பாவ ஆதாமின் நிலை. இப்படிப்பட்டவர்கள் சுயத்திலும், பாவம் செய்யும் நிலையிலும், தேவனை எதிர்க்கும் குணத்திலும் திகழ்வார்கள் (ரோ. 7:18) ஆனால் மறுபடியும் பிறந்த மனிதன் மேற்சொன்ன மாம்சீகத்தில் இருக்க மாட்டான். ஆவிக்குரியவனாய் இருப்பான்; ஆவியிலே, பரிசுத்த ஆவியால் எழுதப்பட்ட வசனத்தின்படி நடக்கிறவனாய் இருப்பான் (ரோ. 8:9). ஆனாலும், மாம்சீகமான, சுயம், பாவம் செய்யும் நிலைமை மற்றும் தேவனை எதிர்க்கும் குணம் போன்றவை, அவனிடத்திலும் இருக்கத்தான் செய்கிறது. அப்படிப்பட்டவனுக்கு, தனது மாம்சீகப்படியோ, அல்லது ஆவிக்குரிய வசனப்படியோ நடக்க சுயாதீனம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாம்சீகப்படி நடக்கும் இரட்சிக்கப்பட்ட மனிதர்கள் தான். மேலே சொல்லப்பட்ட மூன்று வகை மனிதர்களிலே மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்கள் (1 கொரி. 3:1-4 கலா. 5:16-17). மறுபடியும் பிறந்த தேவ பிள்ளைகளுக்கும், மாம்சீகம் இருப்பதால் அதை ஜெயித்து வெற்றி நடைபோட வேண்டும். அப்போது தான் அவர்கள் பூரண புருஷர்களாய் கர்த்தரின் வருகையிலே எடுத்துக் கொள்ளப்பட முடியம். எனவே தான் அவர்கள் ஆவியானவர் சொல்லுகிற வசனத்தின்படி நடக்க வேண்டும் என்று வேதம் கூறுகின்றது. இப்படி நடப்பது தான் ஆவியிலே நடப்பது (ரோ. 8:2-4; கலா. 5:16,17). மற்றப்படியான காரியங்கள் எல்லாமே மாம்சீகம்தான். அழிந்து போகிறவைதான். அந்நிய மாம்சத்தை தொடர்தல், தங்கள் மாம்சத்தை அசுத்தப்படுத்தல், மாம்சக் கறைகள், இச்சித்தல் போன்றவைகளெல்லாம் சரீரத்தில் மட்டும் என்று எடுத்துக் கொள்ளாதபடிக்கு ஆவி, ஆத்மா போன்ற எல்லாவற்றிலும் சம்பவிக்கும் என்று முந்தி அறியுங்கள். அதனால் இரட்சிக்கப்பட்டவன் ஆவியின்படி, ஆவியில். அதாவது, ஆவிதரும் வசனத்தில் நடக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. வசனத்திற்கு விரோதமானது எல்லாமே மாம்சீகம் தான்; அந்நிய மாம்சம் அழிவுக்குரியதுதான். சோதோமி எல்லாம் அந்நிய மாம்சக் கிரியைதான்; சரீர சிந்தையெல்லாமே மாம்சக் கிரியைதான்.

❖ ❖ ❖

# ஆளப்பிறந்தது ஆணா? பெண்ணா?

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் ஆணுக்குப் பெண் சமம் என்றும், பெண் வர்க்கம் ஒதுக்கப்பட்ட நிலையில் இருப்பதால், அவர்களும் ஆளப்பிறந்தவள் என்றும் சொல்லி, அவர்களும் தேர்தலில் கூட சலுகைகள் கொடுப்பது என்றும் அனுதினமும் பேசப்பட்டு வருகிறது.இந்தக் கருத்துக்களை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள மனதில்லாதவர்கள் கூட தங்கள் எண்ணத்தை வெளிப்படையாகச் சொல்ல தயங்குகின்றனர். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக! தேவன் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தைக் கொடுத்து ஜீவாத்மாவாய் முதன் முதலில் ஆக்கியது ஆணைத்தான். மல். 2:15ன் படி தேவன், ஆண்மகனாகிய ஆதாமைப் படைத்தது பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிக்குத் தான் என அறிகிறோம். ஆக, பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிக்கு தேவன் தெரிந்து கொண்டது ஆணைத்தான். பின்பு ஏன் பெண்ணைப் படைத்தார்? தேவன் படைத்த சகல பறவைகளும், மிருகங்களும் ஜோடி ஜோடியாய் இருப்பதைக் கண்டு ஆதாம் தனது தனிமையை யோசித்திருப்பானோ என்னமோ தெரியவில்லை. அவன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று தேவன் கண்டு, அவனுக்குத் துணையாக பெண்ணை வேறெங்கிருந்தோ உருவாக்காமல் அவனின் சரீரத்திலிருந்தே உருவாக்கினார். ஆக, பெண்ணானவள் வேறு எங்கிருந்தோ வரவில்லை; ஆணிலிருந்து வந்தவள்; அதுவும் துணையாய் வந்தவள். அப்படியானால் ஆதாம்தானே தலையானவன்? (ஆதி. 2:18-23). துணையாய் வந்தவள் மனைவியாய் மாறிவிட்டாள் (ஆதி. 2:24). மனைவிக்கு பெயரிட்டவனே ஆண் என்றால் அவன்தானே பெரியவன்! (ஆதி. 3:20).

பக்தியுள்ள சந்ததியைப் பெற படைக்கப்பட்ட ஆதாமிடமும், அதற்கு துணையாய் அவனுக்கு கொடுக்கப்பட்ட ஏவாளிடமும் தேவன் சொன்ன வார்த்தையை ஆதி. 1:28ல் வாசியுங்கள். பூமியை ஆண்டு கொள்ள இருவருக்குமே தேவன் அதிகாரம் தந்தார். ஆனாலும் துணையாய் இருக்க வேண்டியவள் தனியாய் ஆள முடியாது என்றும், பக்தியுள்ள சந்ததியைப் பெற படைக்கப்பட்ட ஆதாம் துணைவியில்லாமல் அந்தப் பணியைச் செய்ய முடியாது என்றும் முந்தி அறிய வேண்டும். இருவரும் ஒன்றுக்குள் ஒன்றாய் இருந்தனர். பாவம் செய்த பின்னே தேவன் கொடுத்த தண்டனையில் "ஸ்திரியே உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும்; அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான்" என்று தேவன் சொன்னார் (ஆதி. 3:16). அப்படியானால் உலகை மாத்திரமல்ல, பெண்ணையும் ஆள்பவன் ஆண்

தான் என அறிகிறோம். ஆதி. 3:19ன் படி பெண்ணுக்கும், ஜீவராசிகளுக்கும் நெற்றி வியர்வை சிந்திபாடுபட்டு சம்பாதித்து உணவு அளிக்க வேண்டியவன் ஆண்தான்; பெண் அல்ல. இயேசு கிறிஸ்துவின் வருகை வரைக்கும், தண்டனை கொடுத்த தேவன் அதை மாற்றும் வரைக்கும், பெண்ணை ஆள்பவன் ஆண் தான். ஆக ஆளுந்தன்மை - ஆண்மை - ஆணிடம் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிகிறோம். இதை இன்னும் விளக்கமாய்ப் பார்ப்போம்.

கிறிஸ்துவுக்குள் ஆணென்றும் இல்லை; பெண்ணென்றும் இல்லை. எல்லாம் சமம் என்ற வசனத்தை வைத்து வாதிடுவோரும் உண்டு. உண்மைதான் அது. அது உலகத்தில் அல்ல; ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தில்; ஏனென்றால் அங்கே கணவனென்றோ மனைவியென்றோ கொள்வினை கொடுப்பினை என்றோ இல்லை அல்லவா! ஆனால் இந்த பூமியில் இருக்கும் வரை புருஷன் மனைவிக்குத் தலையாக இருக்கிறான் கிறிஸ்து சபைக்குத் தலையாயிருப்பது போல (எபே. 5:23). அப்படியானால் தலைவன் தலைமையானவன்; ஆளுகை உடையவன் ஆண் அல்லவா! ஏசா. 9:6ஐ வாசியுங்கள். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். எப்படி? குமாரனாய்த்தான், குமாரத்தியாய் அல்ல. இதுவே ஆணுக்குத்தான் உலகத்தின் ஆளுகை உண்டு என்று தெளிவுபடுத்துகிறது அல்லவா! கர்த்தத்துவம் (Authority - ஆளுகை) குமாரனான இயேசுவின் தோள் மீது இருந்தது அல்லவா! மேலும் வேதத்திலே தேவனைக் குறித்துச் சொல்லும் போதெல்லாம் ஆண்பாலில் தான் சொல்லப்பட்டுள்ளது என்று முந்தி அறிய வேண்டும். உலகப் பிரகாரமாய் மட்டுமல்ல; ஊழியத்திலும் கூட ஆணுக்குத்தான் முன்னுரிமை உண்டு. பாஸ்டர் ஊழியம் போன்றவற்றிற்கு பெண்கள் ஏற்புடையவர்கள் அல்ல என்று முன்பே நான், "பெண்கள் பாஸ்டர் ஆகலாமா?" என்ற தலைப்பில் எழுதி இருப்பதை தயவு செய்து மறுபடியும் வாசியுங்கள். அதற்காக பெண்கள் பாஸ்டர் ஆகக்கூடாது என்று சட்டமில்லை. பெண்கள் பலவீன பாண்டம் என்று வேதம் சொல்வதை சிந்தியுங்கள். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை; ஸ்திரியானவளே வஞ்சிக்கப்பட்டாள். சபையிலே புருஷர்கள் இருக்கும் போது உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரிக்கு உத்தரவு இல்லை போன்ற வசனங்களை உணர்ந்து கொள்ளுங்கள். (1 தீமோ. 2:12,14) இப்படி இருப்பதால் ஸ்திரிகளுக்கு துணைவி என்ற மரியாதை கூட இல்லாமல் போய்விடுமோ என்றெண்ணிய தேவன், அவர்கள் பால் இரக்கம் வைத்து, இயேசுவின் பூலோக காலத்தில் பெண்களுக்கு முக்கியம் கொடுத்தார். ஆனாலும் அதற்கு ஒரு வரையறை இருந்தது. இயேசு, அப்போஸ்தலர் நிலைக்குக் கூட ஒருவரையும் ஆக்கவில்லையே!

புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான்; ஸ்திரீயானவன் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷன் ஸ்திரியிலிருந்து தோன்றினவனல்ல; ஸ்திரியே புருஷனலிருந்து தோன்றினவள்; புருஷன் ஸ்திரிக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்ல; ஸ்திரியே புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள் (1 கொரி. 11:7-9). எனவே ஆளப்பிறந்த ஆண்மகன், பெண்ணின் துணையோடு ஆள்வானாக! ஆணுக்குப் பெண் சமம் என்று தேவ திட்டத்திற்கு விரோதமாய் எழுப்பும் காரியங்கள் பிசாசினுடையது என்று உணர்வோமாக. அதனால் தானே பெண் பால் கடவுள்களை பிசாசு உருவாக்கி இருக்கிறான். மரியாள் வணக்கமும் இந்த அடிப்படை தானே! எது எப்படியோ தேவசித்தம் நிறைவேற ஒப்புக் கொடுப்போம்! சத்தியத்தை உலகம் அறியட்டும்.

❖ ❖ ❖

## இறந்து போன பிள்ளைகள் யோபுவுக்கு கிடைக்கவில்லையே!

யோபுவின் கண்கள் திறக்கப்பட்டு, அவன் மனஸ்தாபப்பட்டு உபவாசம் இருக்கையில் (யோபு 42:5,6) தன் சிநேகிதருக்காகவும் வேண்டுதல் செய்யவும் போது கர்த்தர் அவனின் சிறையிருப்பை மாற்றினார் (யோபு 42:10) என்றும், இரட்டத்தனையாய் அவனை ஆசீர்வதித்தார் என்றும் அறிகிறோம். யோபு 1:3ன்படி ஏழாயிரம் ஆடுகள், 3000 ஒட்டகங்கள், 500 ஏர்மாடுகள், 500 கழுதைகள் இருந்தன. இப்போதோ 14000 ஆடுகள், 6000 ஒட்டகங்கள், 1000 ஏர்கள், 1000 கழுதைகளை தேவன் தந்தார். (யோபு 42:12) யோபு 1:2ன் படி அவனுக்கு 7 குமாரரும் 3 குமாரத்திகளும் இருந்தனர். கர்த்தர் இரட்டத்தனையாய் மறுபடியும் கொடுக்காமல் அதே போல மறுபடியும் 7 குமாரரும் 3 குமாரத்திகளும் தானே கொடுத்தார்! ஏன் அப்படி? இது கேள்வி. மேலும் என்னதான் மறுபடியும் பிள்ளைகளைக் கொடுத்தாலும் அவனது அதே குழந்தைப் பிள்ளைகளை தேவன் கொடுக்க வில்லையே! அது குறித்து யோபுவுக்கு கவலை இருந்திருக்காதா? இதுவும் கேள்விதான். ஆவியானவர் தாமே விளக்குவாராக!

பிள்ளைகளைப் பற்றி இப்படியாய் சிந்திக்கிறவர்கள் முதலில் பிள்ளைகள் எதற்காய் மனிதனுக்கு பிறக்கின்றன என்பதை அறிய வேண்டும். ஆதி. 1:28ன் படி பலுகிப் பெருகி பூமியை நிரப்ப நமக்கு அதிகாரம் உண்டு. Not to refill the earth; but to "REPLINISH" the earth. இப்படி

பிள்ளைகளைப் பெறுவது பெற்றோர்களின் பிரயோஜனத்திற்காகவா? இல்லை. மல். 2:15ன் படி பக்தியுள்ள சந்ததியை மனிதன் பெறுவது தன்னுடையஉதவிக்காக அல்ல. தேவன் தான், தம்முடைய பிள்ளைகளை விட்டு விலகுவதுமில்லை. கைவிடுவதுமில்லை; நிழல் போல் தொடர்கிறாரே! தேவதூதர்கள் என்றென்றும் பாதுகாப்பாகவும் பக்கபலமாகவும் இருக்கிறார்களே! தேவ ஆசீர்வாதம் கடைசி வரை தொடர்கிறதே! அவரே நமக்கு நாயகனாகவும், தாயாகவும், தந்தையாகவும் கடைசிவரை இருக்கிறாரே! அப்படியானால் மனுஷன் பிள்ளைகளைப் பெறுவது முதிர்வயதில் அவனுக்கு உதவிக்காக அல்ல; துணைக்காகத்தான் மனைவியைக் கொடுத்திருக்கிறாரே! தேவனுக்கென்று ஒரு கூட்ட பக்தியுள்ள சந்ததி தேவை என்பதற்காகவே நாம் பிள்ளைகளைப் பெறுகிறோம்; வளர்க்கிறோம்! அதனால் தான் சங். 127:4 சொல்கிறது "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்; கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" என்று. எல்லாப் பிள்ளைகளும் கர்த்தரால் வரும் சுதந்திரம் அல்ல. ஆதி. 16:2ஐ வாசித்தால், சாராள் தானே வீட்டைக் கட்ட குழந்தைகளைப் பெற விரும்பி இஸ்மவேலைப் பெறுகிறாள். இஸ்மவேல் கர்த்தரால் வரும் சுதந்திரமா? இல்லையே! ஈசாக்குத்தானே சுதந்திரவாளி. கர்ப்பத்திலே கனியும் உண்டு. காயும் உண்டு. கனி மட்டுமேதேவன் கொடுப்பது. ஆதி 4:1ல் காயீன் தேவனால் பிறந்தவன் என்று ஏவாள் அறியாமையில் சொன்னாலும், அவன் கர்த்தரால் வரும் பலனான கனியாக இல்லாததால், 1 யோ. 3:12ஐ வாசியுங்கள்; அவன் காயாயிருக்கிறான். யூதாஸை கூட அவன் பிறவாதிருந்தால் நலம் என்று வேதம் சொல்வதால் அவன் கர்ப்பத்தின் கனியல்லவே!

இந்த சிந்தனையில் யோபுவின் பிள்ளைகளைப் பார்ப்போம். ஆடு மாடுகள் ஒட்டகங்கள் இவைகளை இரட்டத் தனையாய் கொடுத்தவர், மரித்த லாசருவை எழுப்பிய தேவன், அதே பிள்ளைகளை மறுபடியும் கொடுக்க முடியாதா? தேவனால் கூடாதது ஒன்றுமில்லையே ஏன் தரவில்லை? இவர்கள் கர்த்தரால் வந்த சுதந்திரமில்லையா? இவர்கள் கர்த்தரால் வரும் பலனாகிய கர்ப்பத்தின் கனிகள் இல்லையா? ஆம். அப்படித்தான். யோபுவின் குமாரர்கள் தங்கள் சகோதரிகளோடு விருந்து பண்ணும்போது அவர்கள் பாவம் செய்து தேவனை ஒரு வேளை தங்கள் இருதயத்தில் தூஷித்து இருப்பார்கள் என்று பயந்து, செய்தவர்கள் தான் பலி செலுத்தி மன்னிப்பு பெற வேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் யோபுவின் பிள்ளைகளுக்கு இல்லை. பார்த்தீர்களா? எனவே அவர்கள் கர்த்தரால் வந்த சுதந்திரமாகவோ கர்ப்பத்தின் கனியாகவோ இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படி

இருந்திருந்தால் தேவன் திரும்ப எழுப்பியிருக்கலாம். அடுத்து, பிள்ளைகள் கர்த்தருக்கென்று, கர்த்தரால் வரும் ஈவு என்பதை யோபு விசுவாசிக்காததால், மறுபடியும் அதே பிள்ளைகள் வேண்டும் எனறு யோபு கேட்கவில்லை! அல்லேலூயா! இப்படியான விசுவாசம் நமக்குத் தேவை! தன் சுதந்திரத்தை, தன் கனியை கர்த்தர் சித்தப்படி தனக்கு அளிக்க யோபு ஒப்புக் கொடுத்தான். இரட்டத்தணையாய் 14 குமாரரும், 6 குமாரத்திகளுமாய் தேவன் கொடுக்காததற்கு காரணகாரியங்கள் நிச்சயம் இருந்திருக்கும். யோபுவும் உணர்ந்திருப்பான். எத்தனை பிள்ளைகள் நமக்கு என்பதல்ல முக்கியம்; ஒன்றானாலும் இரண்டானாலும் எப்படி பிள்ளைகளை பக்தியுள்ள சந்ததியாய் வளர்க்கிறோம் என்பதுதான் முக்கியம். தேவசித்தம் நிறைவேற செயல்படுவோம். தேவன் செய்வதைப்பாருங்கள். தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளைப் போல சௌந்தர்யமான பெண்கள் காணப்படவில்லை. (யோபு 42:15) அல்லேலூயா! தேவன் எதையும் நேர்த்தியாகவே செய்வார். யோபுவுக்கு மறுபடியும் 140 வருஷம் ஆயுசைக் கூட்டி கொடுத்தாரே! எனவே பிள்ளைகளைப் பற்றிய எல்லா காரியங்களையும் கர்த்தர் மேல் வைப்போம்! அவர் சித்தப்படி நடத்துவார்.

❖ ❖ ❖

## பிசாசை இயேசு தான் வென்றுவிட்டாரே பின்பு ஏன் நமக்கு அவனோடு போராட்டம்?

பிசாசின் கிரியைகளை அழிப்பதற்கே இயேசு வந்தாரென்றும், துரைத்தனங்களையும்அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெற்றி சிறந்தாரென்றும் நாம் அறிகிறோம் (1 யோ. 3:8; கொலோ. 2:15). அப்படியிருந்தும் அதே பிசாசின் சேனைகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்று எபே. 6:12 சொல்கின்றது. அவன்தான் தோற்கடிக்கப்பட்டவனாயிற்றே பின்பு ஏன் அவனோடு போராட்டம்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் வெளிப்படுத்துவாராக! பிசாசானவன் ஆவியாயிருக்கிறான். அவனோடு மாம்சீகப் போராட்டமல்ல; ஆவிக்குரிய போராட்டம் தான் பண்ண முடியும். ஆவிக்குரிய போராட்டம் (Spiritual Warfare) என்றால் என்ன என்று முதலில் அறிவோம். எரிகோ கோட்டை இடிப்பு உலகப் பிரகாரமான போராட்டமல்ல (யோசு. 6). ஆறு நாட்கள் கோட்டையை சுற்றி வந்து, ஏழாம் நாள் ஏழு முறை சுற்றி வந்து கடைசிச் சுற்றின் போது எக்காளம் ஊதுகையில் எரிகோ விழுந்தது. வித்தியாசமான யுத்தத்திட்டம், விநோதமான

ஆயுதங்களோடு நடத்தப்பட்டதால் ஒரு விசித்திரமான முடிவு கிடைத்தது. இதுதான் ஆவிக்குரிய ஆயுதங்களோடு நடந்த ஆவிக்குரிய யுத்தம். கிதியோன் வாளை எடுக்காமலே 300 பேரோடு 1,35,000 பேர் கொண்ட சேனையை வீழ்த்தினானே, இதுதான் ஆவிக்குரிய போராட்டம் (நியா. 6-8). சாதாரண ஆடுமேய்க்கும் தாவீது, பெலிஸ்த ராட்சஷனை ஒரே கல்லில் சாய்த்தானே அது தான் ஆவிக்குரிய போராட்டம் (1 சாமு. 17) முன்வரிசையிலே பாடகர்களை நிறுத்தி தேவனை துதிக்க, யோசபாத்து நிற்க வைத்த உடனே, மோவாப் மற்றும் அம்மோனின் படைகள் அழிக்கப்பட்டவனவே, இதுதான் ஆவிக்குரிய போராட்டம் (2 நாளா. 20). தேவன் சொன்னபடி போராட்டத்திற்கு தயாராயிருப்பது நம்வேலை. நமக்காய் யுத்தம் செய்து வெற்றி தருபவர் தேவன். ஆவியாகிய பிசாசின் கிரியைகளை அழிப்பவர் தேவன். ஆக, பிசாசானவன் தன்இஷ்டப்படி உலகிலே திருடவும், கொல்லவும் அழிக்கவும் எப்படியோ வழிகளைத் தேடி அலைவதால் அந்த ஆவிக்குரிய போராட்டத்தில் நாம், தேவன் தரும் பெலத்தால் எதிர்த்து நின்று வெற்றி பெற வேண்டியதிருக்கிறது.

இயேசு தான் பிசாசை சிலுவையிலே வீழ்த்திவிட்டாரே! இன்னும் ஏன் நமக்கு பேராட்டம்? எபி. 1:13; 2:8; ரோ. 16:20 போன்ற வசனங்களின்படி இன்னும் பிசாசை முழுமையாய் இயேசு நமக்கு பாதபடியாக்கிப் போடவில்லை என்று அறிகிறோம். உதாரணமாக, மரணப்பிசாசை அவர் மட்டுமே ஜெயித்தார். ஆனால் நமக்கு "மரணமே! உன் கூர் எங்கே?" என்று அவரின் இரகசிய வருகையில் தான் சொல்ல முடியும். (1 கொரி. 15:55). இயேசு பிசாசை முழுமையாய் ஜெயித்தாரே அதை நாமும் விசுவாசித்து, மரித்தபின் - அல்லது எடுபடும் போது தான் ஜெயிப்போம். உலகத்தின் அதிபதி பிசாசு (2 கொரி. 4:4) இன்னமும் இத்தகுதியை இயேசு பிடுங்கவில்லையே! இயேசு மனிதனாய் உயிரோடிருக்கும்போதே வியாதியை சுமந்து தீர்த்தார்; வறுமையை தீர்த்தார். சாபங்களைத் தீர்த்தார். பாவங்களை தீர்த்தார்; சமாதானமின்மையை தீர்த்தார்; தோல்வி வாழ்க்கையை தீர்த்தார். இவைகளை நாம் விசுவாசித்து நிற்கிறோம். நாம் ஆவிக்குரிய ரீதியில் இயேசுவோடு உன்னதங்களில் இருந்தாலும் (எபே. 2:7). நம் ஜீவன் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய பிரகாரமாய் இருந்தாலும் (கொலோ. 3:3) நாம் நிற்கிறது அந்தகார லோகாதிபதியின் பூமியில்தான். தேவனுடைய ராஜ்யத்தில் ஆவிக்குரிய ரீதியில் நாம் நுழைந்திருந்தாலும், இந்த ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யம், ஆசீர்வாதம் நிறைந்த பாலும் தேனும் ஓடுகின்ற கானானுக்கு ஒத்திருந்தாலும், கானானில் இருந்த எதிரிகள் போல பிசாசின்

எதிர்ப்புகள் நமக்கு உண்டு. ஒரு நாள் தேவன் சாத்தானை நம் கால்களில் நசுக்கிப் போடுவார் (ரோ. 16:20). அது வரை அவனோடு போராட்டம் உண்டு.

இயேசு கிறிஸ்து மனுஷனாயிருந்து எதிலெல்லாம் ஜெயித்தாரோ அவைகளை எல்லாம் சாத்தான், நமக்கு கொடுக்கும் போது இயேசுவின் நாமத்தினால், தேவ பெலன் கொண்டு, விசுவாசத்தைக் கொண்டு எதிர்த்து நின்று போராடத் தயாராக வேண்டும். அதற்காகத்தான் சர்வாயுத வர்க்கங்கள் அணிய வேண்டும் (எபே. 6:14-16). இந்த சர்வாயுத வர்க்கங்களோடு நின்றால், இயேசுவிடம் புறமுதுகிட்டு தோற்றுப் போன பிசாசானவன், நம் எதிர்ப்பைக் கண்டே ஓடியே போவான். அவன் திட்டமும் கிரியைகளும் தவிடுபொடியாகும். இதுதான் ஆவிக்குரிய போராட்டமும் அதன் முடிவும் (யாக். 4:7). அவர் மரித்தபின் பிசாசிடம் ஜெயித்தவை, இனிமேலும் அவனிடம் ஜெயிக்கப் போகிறவை போன்றவைகளையும் விசுவாசித்து நாம் எதிர்த்து நின்றால், அவைகளிலும் அந்தந்த காலங்களில் வெற்றி கிடைக்கும். அல்லேலூயா! மனிதனுக்கு இயேசுவால் கிடைத்த வெற்றியையும், கிடைக்கப் போகிற வெற்றியையும் விசுவாசித்து, நாம் பிசாசின் ஆவியோடு போராட்டம் நடத்த தயாராவோம்! தைரியத்தின் ஆவியை தேவன் கொடுத்துள்ளார் அல்லவா! அவன் ஓடியே போவான்! வெற்றி வாழ்க்கை நமக்குத் தான்; பொருளாதார ஆசீர்வாதம் நமக்குத்தான். தெய்வீக ஆரோக்கியம் நமக்குத் தான்; நித்திய ஜீவன் நமக்குத்தான். அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஆபிரகாம் தன் ஜாதியில்தான் பெண் எடுத்தானா?

“கிறிஸ்துவுக்குள் கிரேக்கனென்றும் இல்லை யூதனென்றும் இல்லை” என வாயளவில் சொல்லிவிட்டு, உலகப்பிரகாரமான ஜாதிகளில் நிலைத்திருக்கிற கிறிஸ்தவர்கள் ஏராளம்; ஏராளம். ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்பதெல்லாம் பிரசங்கத்தோடு நின்று விடுகின்றது. தாழ்ந்த ஜாதியில் பிறந்த ஊழியக்காரர்களை, இப்படிப்பட்டவர்கள் மதிப்பதே இல்லை; இவர்களை ஊழியத்தில் வளரவும் விடுவதில்லை. மாறாக இந்த தாழ்ந்த ஜாதியில் பிறந்த ஊழியக்காரர்களும், உயர்ந்த ஜாதி ஊழியக்காரர்களையே நாடி தேடி, அவர்களையே அண்டி, அந்த ஜாதி விசுவாசிகளுக்கே மரியாதை கொடுத்து பிழைப்பைநடத்துகிறார்கள். ஏன் இந்த அவல நிலை? அவர்கள் எல்லாருமே தங்களுக்குள்ளே இருக்கிற பரிசுத்த ஆவியான வரை துக்கப்படுத்துகிறார்கள் (எபே. 4:30). திருமண

விஷயங்களில் தங்களின் பாரம்பரிய ஜாதிகளில் பெண் எடுக்கிறார்கள்; கொடுக்கிறார்கள். எந்த உயர்ந்த ஜாதி ஆண் கிறிஸ்தவனாவது, ஊரறிய உலகமறிய, தாழ்ந்த ஜாதி கிறிஸ்தவப் பெண்ணை மணந்திருக்கிறானா? ஏன் இந்த பாகுபாடு? கலா. 3:7ன்படி விசுவாச மார்க்கத்தானாகிய நான் ஆபிரகாமின் சந்ததி என்பதால், ஆபிரகாம் போல் தன் மகனுக்கு தன் ஜாதியில் தான் எடுப்பேன் என்று வாதிடுகிறார்கள். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஜாதியிலே இவ்வளவு அக்கறை காட்டி ஆபிரகாமை உதாரணமாய்ச் சொல்வோர், ஆபிரகாம் பெண் வீட்டாருக்கு சீதனம் கொடுத்தது போல நானும் கொடுப்பேன் என்று மட்டும் சொல்லாமல், பெண் வீட்டாரிடம் தான் சீதனம் வாங்குவேன் என ஒற்றைக்காலில் நிற்கிறார்களே ஏன்? நகை போடாத கொள்கையுடைய பெந்தகொஸ்தே மாப்பிள்ளை என்று சந்தோஷமாக இருந்தால், அவர் கூட நகைக்குப் பதிலாக ரூபாயும், காரும், பங்களாவும் கேட்கிறாரே! சீதனம் பெண் வீட்டில் வாங்குவது மட்டும் இவர்கள் இஷ்டப்படி; ஜாதி பார்ப்பது மட்டும் ஆபிரகாம் செய்தபடியா? **ஆபிரகாம் பெண் எடுத்ததைப் பார்ப்போம்.** வேதத்திலே மூன்று விதமான மனிதப் பிரிவுகள் தான் உண்டு. (1) யூத மக்கள். (2) புறஜாதி மக்கள். (3) சபையார் (1 கொரி. 10:33). மூன்றாவது பிரிவைச் சேர்ந்த சபையார் - அதாவது இரட்சிக்கப்பட்ட சபையார் - அந்நிய நுகத்திலே, இரட்சிக்கப் படாதவர்களோடு விவாகம் செய்யக்கூடாது என்று 2 கொரி. 6:14 சொல்கிறது. அதாவது எக்ளீசியா என்று மூலப்பாஷையில் சொல்லப்படும் Churchல் உள்ள பிரித்தெடுக்கப்பட்ட சபையார் வேறு எந்தப் பிரிவோடும் திருமணம் பண்ணக்கூடாது. இந்த மூன்று ஜாதிப் பிரிவைத் தவிர வேறே எந்த ஜாதிப் பிரிவையும் தேவன் அனுமதிக்கவில்லை; உலகத்தில் இருப்பவைகள் எல்லாம் பிசாசின் தூண்டுதலால் ஏற்பட்ட மனிதனின் உருவாக்கம். இரட்சிக்கப்பட்டோர் எல்லோருமே ஒரே ஜாதி; அதுதான் பரிசுத்த ஜாதி (1 பேதுரு 2:9). ஆபிரகாம் வாழ்ந்த இடம் கானானியர் வாழும் இடம், கானானியக் குடும்பம் தேவனை விசுவாசிக்காத இராட்சதக்குடும்பம். அதிலே பெண் கொள்ள ஆபிரகாம் விரும்பவில்லை. ஏனென்றால் அது அந்நிய நுகம்; தேவனுடையபார்வைக்கு அது பொல்லாதது. சாலமோன் விஷயத்தில் இது திட்டமும் தெளிவுமாய் வெளிப்படுகிறதே (1 ராஜா. 11). ஆபிரகாம் வாழ்ந்த பகுதியில் அவனைத் தவிர வேறு யாருமே யேகோவா தேவனை விசுவாசிப்போர் இல்லை. அதனால் ஈசாக்குக்குப் பெண் பார்க்க தன் இனத்தாரிடம் அனுப்பினான். அவன் இனத்தார் அந்நியநுகமா என்று ஆவியானவர் விளக்குவாராக! எலியேசர் ஜெபித்துக்கொண்டே போகிறான்.

தேவன் அவனுக்கு காட்டியது ரெபேக்காளை. ஆதி 24:24ன் படி இவள் நாகோரின் பேத்தி. யார் இந்த நாகோர்? தேராகு என்பவன் அந்நிய தேவர்களை சேவித்தவன். (யோசு. 24:2). நாகோரோ அப்படியல்ல. ஆபிரகாமின் தேவனும், அவன் தம்பி நாகோரின் தேவனும் ஒன்றே என்று ஆதி. 31:53ல் யாக்கோபு சாட்சியிடுவதைப் பாருங்கள். தான் வணங்கும் தேவனையே வணங்கும் தன் தம்பி நாகோருக்கு, பிள்ளைகள் இருக்கின்றன என்று ஆபிரகாம் கேள்விப்பட்டு (ஆதி. 22:20) நாகோருடைய ஊருக்கு எலியேசரை அனுப்புகிறான். எலியேசரும் அந்த ஊருக்கு வந்து தான் பெண் தேடுகின்றான். (ஆதி. 25:10) இதைப் படிக்கும் தேவ பிள்ளையே! உலக ஜாதி நமக்கு தூரமாக இருப்பதாக! அந்நிய நுகத்தோடு இரட்சிக்கப்படாத மக்களோடு பாரம்பரிய பெயர்க் கிறிஸ்தவ சபையாரோடு திருமண உறவு வேண்டாம். ஆபிரகாமின் சந்ததியாகிய நாம், அவனைப் போலவே தெய்வ பயமுள்ள ஆவிக்குரிய குடும்பங்களில் உள்ள, எபி. 6:1,2ன் படியான அடிப்படைச் சத்தியமுள்ள சபையிலே பெண் எடுப்போம். இதுவே கர்த்தருக்குப் பிரியமான ஒன்று. அதையே செய்வோம்! அதையே பிறருக்கும் சொல்வோம்! சாட்சியாய் வாழ்வோம்! வருகையில் சேர்வோம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## நியாயத்தீர்ப்பு செய்பவர் பிதாவா? இயேசுவா?

“பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின் படி நியாயந்தீர்க்கிற வரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டு வருகிறபடியால்....” (1 பேதுரு 1:17) என்ற வசனத்தின்படி நியாயந்தீர்க்கிறவர் பிதா என்றும் “இதோ சீக்கிரம் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது” (வெளி. 22:12) என்ற வசனத்தின்படி நியாயந் தீர்க்கிறவர் இயேசு கிறிஸ்து என்றும் வெவ்வேறு விதமான கொள்கைகள் கிறிஸ்தவ வட்டாரத்தில் நிலவி வருகின்றன. இன்றும் சிலர் இயேசுவும் பிதாவும் ஒன்று என்று சொல்லி இயேசுவாகிய பிதாதான் நியாயந் தீர்க்கிறவர் என்றும் கள்ள உபதேசத்தைப் பரப்பி வருகின்றனர். கருகலாக்கப்பட்ட உண்மையான சத்தியத்தை ஆவியானவர் வெளிப்படுததுவாராக!

சங். 50:6; 75:7; எபி. 12:23 போன்ற வசனங்களின்படி தேவன் தான் நியாயாதிபதி என்று அறிகிறோம். நியாயத் தீர்ப்புச் செய்கிறவர் பிதாவாய் இருந்தாலும் குமாரன் மகிமைப்படும்படியாய் நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார் என்று யோ.

5:22ன் படி அறிகிறோம். இயேசுவே உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்று பேதுரு பிரசங்கிக்கிறார். (அப். 10:42) மனுஷர்களை ஒரு மனுஷனைக் கொண்டே நியாயந்தீர்க்க தேவன் திட்டமிட்டபடியினாலே தம்முடைய ஒரே பேறான குமாரனை மனிதனாய்ப் பிறக்க வைத்தார். மனிதனாய் பிறந்த அவர் மரித்த போதும், நியாயாதிபதி இவரே என்பதால் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி அதன் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார் (அப். 17:31) அவர் பூமியை நியாயந்தீர்க்க சீக்கிரமாய் வரவேண்டியிருப்பதால், மனுஷ ரூபத்தில் அவர் பரலோகம் போய் நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். அதே மனித ரூபத்தில் தான் அவர் மீண்டும் வந்து நியாயந்தீர்க்கப் போகிறார். அல்லேலூயா! ஆக, அல்பாவும் ஓமேகாவும், ஆதியும், அந்தமும், முந்தினவரும், பிந்தினவரும், மரித்து உயிரோடிருக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவே பூமியை நியாயந்தீர்க்க பிதாவின் அதிகாரத்தோடு வரப் போகிறார்! அந்த நாள் மிகச் சமீபமே!

❖ ❖ ❖

## மனைவியின் சொல்லுக்கு செவி கொடுக்கலாமா?

ஆதாம், மனைவியின் சொல்லுக்கு செவி கொடுத்து விலக்கப்பட்ட கனியை புசித்ததால் அவனுக்கும் பூமிக்கும் தண்டனை கிடைத்தது என்று ஆதி. 3:17 சொல்கின்றது. ஆனால் ஆதி. 21:12ல் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்றையும் கேள் என்று ஆபிரகாமிடம் தேவன் சொல்லுகிறார். ஆக, மனைவியின் சொல்லை புருஷன் கேட்க வேண்டுமா? வேண்டாமா? இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக! தேவன் சொன்னார்:- "இந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய்" (ஆதி. 2:17). ஆதாமோ தேவனின் வார்த்தையைப் பிரதானமாய் எண்ணாமல் தன் எலும்பில் எலும்பும் இரத்தத்தில் இரத்தமுமான ஏவாள் சொன்ன வார்த்தையை செவிமடுத்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகின்றான். தேவனுடைய வார்த்தைக்கு சமமாகவோ அல்லது மேலாகவோ எதை வைத்தாலும், அப்படி வைப்பவன் விக்கிரக ஆராதனைக்காரன்; தேவனை உதாசீனம் பண்ணுகிறவன், இந்த நிலையில்தான் ஆதாம் இருந்தான். இருவரும் ஒருவருக்குள் ஒருவராய் இருந்தாலும் தேவனே பெரியவர்; தேவ வார்த்தையேபெரியது. இதை விசுவாசிக்காமல், பிசாசினால் திசை திருப்பப்பட்ட ஏவாளின் வார்த்தைக்கு ஆதாம் செவி கொடுத்ததால் தேவன் தண்டனை தருகிறார்.

ஆனால் ஆபிரகாம் நிலையில் அப்படியல்ல, அடிமைப் பெண்ணையும் இஸ்மவேலையும் புறம்பே தள்ளு; இவன் ஈசாக்கோடே சுதந்திரவாளியல்ல என்று சாராள் சொன்னாள். இதே கருத்துதான் தேவனுடைய கருத்து. "ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்; இஸ்மவேலினிடத்தில் அல்ல" (ஆதி. 21:12) என்றார் தேவன். மாம்சீகப் பிரகாரமாய் சாராள் சொன்னது ஆபிரகாமுக்கு துக்கமாய் இருந்தாலும், தன் சொந்த சிந்தனைக்கு - சித்தத்திற்கு -இடங்கொடாமல், தேவ சித்தத்திற்கு - வார்த்தைக்கு இடம் கொடுக்க வேண்டுமென்றும் தேவன் விரும்பினார். அதனால் தான் தன் எண்ணத்தையே உடைய ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் வார்த்தைக்கு செவி கொடு என்று தேவன் சொல்கின்றார். இதற்கு முன்னாலே ஒருமுறை சாராளின் சொல்லுக்கு செவி கொடுத்து (ஆதி. 16:2) ஆகாரிடம் போய் இஸ்மவேலைப் பெற்றார் ஆபிரகாம். அதன் விளைவு இன்று வரை பங்காளிகள் சண்டை எலியும் பூனையுமாக தொடர்கிறது. ஏற்கனவே மனைவி சொல்லைக் கேட்டதால் வந்த துன்பத்தை அனுபவித்த ஆபிரகாம், இப்பொழுது கேட்க தயங்குவது பழைய நன்மையில்லாத காரியத்தின் நினைவாலே தான்! ஆனால் எது எப்படியோ தேவன் விரும்புவதெல்லாம் மனைவியின் சொல்லை புருஷன் கர்த்தரின் சித்தத்திற்கு இசைந்திருந்தால் கேட்டே ஆக வேண்டும் என்பதுதான். "நான் தலை; நீ சொல்வது தேவனின் வார்த்தைக்கு இசைந்து போனாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன்" என்று முரட்டாட்டம் பண்ணுவது பாவம் என்று தேவன் விளக்குகிறார்! இதனால்நம் மனக்கண் தெளிவாகட்டும்.

❖ ❖ ❖

## ஆதாமின் சாபத்தையும் இயேசு அனுபவித்தாரா?

சாபம் வேறு; தண்டனை வேறு என்று பழைய முழக்கங்களில் நான் எழுதியிருக்கிறேன். சாபமெல்லாம் சிலுவையில் நீக்கப்பட்டது (கலா. 3:13). உபா. 28:15ன் படி சாபம், பாவம் செய்பவர்களால் வருவது என்றும், அவர்களே தேடிக் கொள்வது என்றும், தேவன் அள்ளிக் கொடுப்பதில்லை என்றும் நாம் அறிந்திருக்கிறோம். ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் தேவன் நமக்கு முன்னே வைத்திருக்கிறார். அதை சுதந்தரித்துக் கொள்வது நமக்கு கொடுக்கப்பட்ட சுயாதீனம். ஆனால் தண்டனை என்பது தேவனே கொடுப்பது. ஒரு முறை தேவன் தண்டனை கொடுத்து விட்டால் அதற்கு அப்பீல் இல்லை. விடுதலைக்கு வழியே இல்லை. தண்டனை கொடுத்தவரே மாற்றினால்தான் உண்டு. அதுவும் தண்டனை பெற்றவர்களின் உலக ஜீவிய நாட்களில்

மாற்றம் கிடைக்காது. நோவா காலத்தில் ஜலப்பிரளயம் வந்தது; சோதோம் கொமோரா பட்டணம் அழிக்கப்பட்டது போன்றவைகளெல்லாம் தேவனின் தண்டனைகளே. (1 பேது. 2:5,6). அவைகள் அவபக்தியாய் நடப்பவர்களுககு திருஷ்டாந்தமாய் இருக்கின்றன. ஆனால் சாபமெல்லாம் நம்முடைய விசுவாசத்தினால், தேவ கிருபையைக் கொண்டு நீக்கப்படும். அல்லேலூயா! ஆதி. 3:14-19 வரை சொல்லப்பட்டவை ஆதாமுக்கும், ஏவாளுக்கும், சாத்தானுக்கும் இடப்பட்ட சாபம் என்று பலர் எண்ணுகின்றனர். அவைகள் சாபமாயிருந்தால் நமக்காய் சாபமான இயேசுவை விசுவாசிக்கும் நமக்கு அவைகள் சம்பவிக்கக் கூடாதல்லவா! கர்ப்பத்திலே வேதனை ஏன்? பிரசவத்தில் வேதனை ஏன்? பெண்ணின் ஆசை ஏன் புருஷனைப் பற்றியே இருக்கிறது? ஆண் ஏன் பெண்ணை இன்னும் ஆள வேண்டும்? பூமி ஏன் சபிக்கப்பட்டதால் நல்ல பலன் கொடாதிருக்க வேண்டும்? முள்ளும் குருக்கும் ஏன் முளைக்க வேண்டும்? மனிதன் ஏன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்? ஏன் மரிக்க வேண்டும்? இவைகளெல்லாம் சாபங்கள் அல்ல; தேவன் கொடுத்த தண்டனைகள். இந்தத் தண்டனையிலிருந்து, விசுவாசத்தில் கிடைக்கும் இரட்சிப்பால் விடுதலை வராது; அவரே மாற்றினால்தான் உண்டு. அதைத்தான் அவரின் வருகையில் செய்யப்போகிறார்.

அப்படியானால், ஆதாமின் பாவத்தால் வந்த சாபம் என்ன? இதை தேவன் அனுபவித்தாரா? இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக! தேவன் சொன்ன ஆதி. 2:16,17க்கு விரோதமாய் ஆதாமும் ஏவாளும் நடந்ததால் உபா. 28:15ன்படி அவர்களுக்கு சாபம் வந்தது. தேவனுக்கும் அவர்களுக்கும் இருந்த தொடர்பு அற்றுப் போயிற்று - Communication Cut. அவர்கள் தங்களை ஒளித்துக் கொண்டார்கள். இதுதான் அவர்கள் பெற்ற ஆவிக்குரிய மரணம். இந்த ஆவிக்குரிய மரணத்தை தான் சாபம் என்கிறோம். ஆதாமின் மூலமாய் வந்த சாபம் தொடர்ந்து மனுக்குலத்துக்கு வந்து கொண்டேயிருந்தது. இதனால் உலகம் தேவனோடு வைத்திருந்த ஆதித் தொடர்பு இல்லாமல், அந்தகார இருளுக்குள் மரித்துக் கிடந்தது. இந்த மரணத்தில் தான் நீயும் நானும் இருந்தோம். இதைத்தான் எபே. 2:1 சொல்கின்றது. ஆவியிலே மரித்திருந்த நமது பாவம் - சாபம் நீக்கப்பட்டு ஆவியிலே ஜீவனுள்ளவர்களானோம். இந்த ஜீவனைக் கொடுக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவும் இயேசு வந்தார் (யோ. 10:10). நமது நோய்களை இயேசு சுமந்ததால் நமக்கு ஆரோக்கியம் வந்தது. நமது பாவங்களை அவர் ஏற்றதால் நமக்கு நீதிமான் என்ற நிலை வந்தது. நமது சரீர மரணத்தை அவர் ஏற்றதால் நமக்கு மரணத்திலிருந்த பயம் நீங்கிற்று. (எபே. 2:14). நமக்காய் அவர் தரித்திரரானதால் நாம் ஐஸ்வரியவான்களாகிறோம். (2 கொரி 8:9).

அப்படியே நமது ஆவிக்குரிய மரணத்தை அவர் ஏற்றதால் நமக்கு ஆவிக்குரிய விடுதலை வந்திருக்கிறது; ஆவியிலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். (ரோ 10:9-10) இது எப்படி நடந்தது? எப்போது நடந்தது?

இயேசு கிறிஸ்து நமக்காய் பாவமாக்கப்பட்டார் (2 கொரி. 5:21). பாவியாய் தொங்கினார் சிலுவையிலே! நாம் ஆவியிலும் ஆத்மாவிலும் சரீரத்திலும் செய்த அத்தனை பாவங்களையும் அவர் ஏற்று தொங்கினார். அவர் சிலுவையிலே மரிக்கும்போது ஏழு வார்த்தைகளை சொன்னார். பிதாவாகிய தேவனை 'பிதா' என்று (அப்பா) புத்திர சுவீகார உரிமையோடு அழைத்தார்; அவரோடு பேசினார்; தொடர்பு இருந்தது. ஆவியிலே மரணம் இல்லை. ஆனால் திடீரென்று "தேவனே " என்று அழைக்கிறார். அப்பா என்ற உரிமை போய்விட்டது. தொடர்பு அற்றுப் போயிற்று என்று உணர்ந்தார். பிதாவோடு ஆவியிலே தொடர்பு வைக்க முடியாமற் போனதால், "தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத். 27:46; சங். 22:10) என்று கதறினார். ஆக தேவனோடு உள்ள தொடர்பு - communication - கட் ஆனது. அப்போதுதான் தேவனுக்கும் இயேசுவுக்குமிடையில் அந்தகாரம் சூழ்ந்தது. ஆவியான தேவனோடு தன்னுடைய ஆவியிலே தொடர்பு கொள்ள இயேசுவால் இயலவில்லை. ஆவியிலே மரித்துப் போனார் நமக்காய். இந்த மரணம் தான் ஆதாமுக்கும் வந்தது. ஆதாம் ஓடி ஒளிந்து கொண்டான். இவரோ தனது சொந்த தாய் மொழியிலேயே, சிலுவையில் தொங்கியபடியே, கைவிடப்பட்ட நிலைமையிலே கதறுகிறார். இதுதான் அவர் அனுபவித்த சாபமான ஆவிக்குரிய மரணம். இயேசுவைப் போல இந்த சாபமான ஆவிக்குரிய மரணத்தை ஆதாம் உணர்ந்திருந்தால். மனம் மாறியிருப்பான். ஆவிக்குரிய மரணத்திலிருந்து உயிர் பெற்றிருப்பான். ஆவியிலே இரட்சிக்கப்பட்ட நாம் கிறிஸ்துவை விசுவாசித்து, மரித்தோரோடு மறுபடியும் மரிக்காமலும், அவர்களோடு தூங்காமலும் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களோடு பழகுவோம்! ஜெபிப்போம்! துதிப்போம்! (எபே 5:14).

❖ ❖ ❖

## கிறிஸ்தவனை பிசாசு பிடிக்குமா?

இன்றைக்கு கிறிஸ்தவ வட்டாரத்தில் பிசாசுகளை விரட்டுகிற, பில்லி சூனியக் கட்டுகளை உடைக்கிற, ஜோஷ்யம் போல் சொல்கிற கூட்டங்களில் தான் மோகம் இருக்கிறது; அப்படிப்பட்ட ஊழியர்களைத் தான் மதிக்கும் காலமாயிருக்கிறது. ஏற்கெனவே நான் எழுதியிருக்கிறேன் "பிசாசை விரட்ட வரம் தேவையில்லை, தேவையானது வல்லமையும் அதிகாரமுமே!" என்று.

இப்படி பிசாசை விரட்டுவதால் பரலோகம் கிடைக்காது; கனிகளால்தான் பரலோகம் கிடைக்கும் என்றும் எழுதியிருக்கிறேன். இந்த நிலையில் நாம் பார்க்கும் போது, இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு பிசாசு பிடித்திருப்பதாகவும், பில்லி சூனியக் கட்டுகள் இருப்பதாகவும், ஞானஸ்நானம் கொடுத்த ஊழியரே சொல்லி, அதிலிருந்து விடுதலையாக்குகிறேன் என்று செயல்படுவதையும் நாம் கண்கூடாய்க் காண்கிறோம். "நான் இயேசுவாலே பிடிக்கப்பட்டவன்" என்று பாடும் சகோதரனை பிசாசு பிடிக்குமா? எப்படிப்பிடிக்கும்? இந்தக் கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

1 நாளா. 21:1ஐ வாசித்தால், தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனான (அப். 13:22) தாவீதுக்குள் பிசாசு புகுந்தான் என்று அறிகிறோம். அப்போஸ்தலனாகிய யூதாஸ்காரியோத்துக்குள் பிசாசு புகுந்தான் என்று யோ. 13:27ல் அறிகிறோம். ஆனால் இவர்களெல்லாம் பிசாசு பிடித்தவர்கள் போல ஆடவில்லையே ஏன்? மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்று உண்டு. இந்த மூன்றிலும், ஆவியை மனிதனுக்கு மட்டுமே தேவன் தந்திருக்கிறார். தேவன் ஆவியாய் இருப்பதால் அந்த தேவ ஆவியோடு தொடர்பு கொள்ள மனிதனுக்கு ஆவி கொடுக்கப்பட்டுள்ளது. சிந்தனா சக்தி - உலக உணர்வுகள் எல்லாம் பிறக்குமிடம் ஆத்மா. இது மற்ற ஜீவராசிகளுக்கும் உண்டு. ஆனால் மனிதனின் ஆத்மா அதிலும் மேலானது. மற்ற ஜீவராசிகளின் ஆத்மா, மண்ணான சரீரத்தோடு இணைந்துள்ளது; அது மண்ணுக்கே போகும். ஆனால் மனிதனின் ஆத்மாவோ ஆவியோடு இணைந்துள்ளது. (எபி. 4:12). சரீரத்தைப் பொறுத்தவரை எல்லாமே மண்தான். ஆனால் ஒரு வேறுபாடு. ஆவியினால் ஆத்மாவைக் கொண்டு இயக்கப்படுவது மனித சரீரம் (சங். 103:1-3). தன்னுடைய சுய ஆத்மாவிலே இயங்குவது ஜீவராசிகளின் சரீரம். ஆக எல்லாவற்றிலும் மனிதன் சிறந்தவன் தான். அல்லேலூயா!

பிசாசு ஆவியாயிருக்கிறது; இது ஆவியோடு இணைய - தொடர்பு கொள்ளத்தான் ஆசைப்படும். அதனாலே பிசாசு, மனித ஆவிக்குள் நுழையவே முயல்வான். நாமெல்லாம் முன்பு அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வந்திருக்கிறோம் (கொலோ. 1:13,14). ஒரு காலத்தில் பிசாசால் ஆளப்பட்டோம்; இன்றோ இயேசுவே ஆண்டவர்.

பிசாசானவன், வெளியிலிருந்து கொண்டே மனித ஆவிக்கு கட்டளை கொடுத்து நடக்கவைப்பது **ஒன்று;** மனித ஆவிக்குள் இரண்டறக் கலந்து அவனை நடத்துவது **இன்னொன்று.** இந்த இரண்டிலே முதலாவது வகை மக்களே அதிகம் உண்டு. இரண்டாவது வகை மக்கள் தான், இன்று நாம்

காணும் பெரிய ஆட்டம். இந்த இரண்டு வித மக்களையுமே தேவன் இரட்சிக்கிறார். இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனை பரிசுத்த ஆவியானவரும், மேற்சொன்ன இரண்டு வழிகளிலும் நடத்துகின்றார். அதிலே இரண்டாவது வழியைத்தான் அதிகம் விரும்புகின்றார். அதுதான் அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல் என்று வேதம் சொல்கின்றது. பிசாசின் வழி அந்தகார வழி; மரணவழி. ஆவியானவரின் வழி ஒளியின் வழி; ஜீவ வழி. இந்த ஜீவ வழிக்குள்ளே வந்துவிட்ட மனித ஆவியை, இரட்சிக்கப்பட்ட ஆவியை, இயேசுவால் பிடிக்கப்பட்ட ஆவியை, பிசாசால் தொட முடியாது; பிடிக்க முடியாது. எனவே இந்த கிறிஸ்தவன் பிசாசு பிடித்து ஆடமாட்டான். எண். 23:23ன்படி, இப்படிப்பட்டவனுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை; இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை. நாம் இரட்சிக்கப்பட்ட மக்கள் மத்தியில் காணும் பிசாசு ஆட்டம், பில்லி சூனியம், மந்திரவாதம், ஜோஷ்ய வார்த்தைகள் எல்லாம் சபை நடத்தும் ஊழியர்களால் அனுமதிக்கப்பட்டு செயல்படுவதாய் இருக்கலாம்; அல்லது அந்த மக்கள் இரட்சிப்புக்குள் வராமல் இன்னும் அந்தகார அதிகாரத்திற்குள்ளேயே இருக்கலாம்; இப்படிப்பட்ட காட்சியை கண்டே நாம் பிசாசு பிடித்துள்ளது என நிதானிக்கிறோம்.

ஆனால் தாவீதுக்கும் யூதாசுக்கும் இப்படி காட்சி இல்லையே! இவர்களின் நிலைமையில் தான் பிசாசானவன் 75 சதவீத கிறிஸ்தவர்களிடம் செயல்படுகிறான். அவர்களின் ஆவியிலே தேவ ஆவி இருப்பதால் ஆவியைத் தொட இயலவில்லை. மாறாக அவர்களின் அறிவாகிய ஆத்மாவை வெளியிலிருந்தே ஏதோ ஒரு வழியில் தொடுகின்றான். இப்படித்தான் தாவீதையும் யூதாசையும் தொட்டான். அதனாலே அவர்கள் ஆவியிலே எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்காமல், தங்களது அறிவிலே உணர்த்தப்படும் பிசாசின் வார்த்தையை விசுவாசித்து செயல்பட ஆரம்பித்தார்கள். முடிவு தாவீதுக்கு சாபம்; யூதாசுக்கு கொடூர சாப மரணம். தற்கால பெரும்பாலான சபைகள் கள்ள உபதேசங்களையும், கள்ளத் தீர்க்கதரிசனங்களையும் போதிக்கின்றன. கள்ள கிறிஸ்துகள் பெருகுகிறார்கள். முடிவோ... ஐயோ!... கிறிஸ்தவன் ஆவிக்குரியவனாய், ஆவியிலே எழுதப்பட்ட வார்த்தைப்படி நடப்பவனாயிருந்தால் பிசாசு அவனின் ஆத்மாவைக்கூட தொட இயலாது.

ஏவாளை பிசாசு பிடித்தது அவளின் ஆத்மாவில் தானே! ஆத்மாவில் பிசாசு பிடித்தால், யூதாசுக்கு, ஏற்பட்டது போல ஆவிக்குரிய மரணம் ஏற்பட வாய்ப்புண்டு. அவ்வாறு ஆவிக்குரிய மரணம் வரப்போவதை அறிந்து

ஏற்கெனவே ஆவியில் எழுதப்பட்ட தேவ வார்த்தையால் தெளிவுண்டாக தாவீதைப் போல பிசாசின் பிடியிலிருந்து விடுபடுவதும் உண்டு. தாவீதைப் போன்ற தெளிவு ஆத்மாவில், பிசாசால் பிடிபட்ட அத்தகைய கிறிஸ்தவர்களுக்கும் வரும் படியாய் ஜெபிப்போம்.

ஆத்மாவைப் பிடிப்பதுபோல பிசாசானவன், கிறிஸ்தவர்களின் சரீரத்தையும் வெளியிலிருந்து கொண்டே அதிகமதிகமாய் ஏதோ ஒரு வழியில் பிடிக்க முடியும். அதனால்தான் விபத்துக்கள், கொலைகள், வியாதிகள், மரணங்கள், எல்லாம் உண்டாகின்றன. யோபுவுக்கு வியாதியையும், அவனின் பிள்ளைகளுக்கு மரணத்தையும் பிசாசு கொடுத்ததுபோல இன்றும் கொடுத்து வருகிறான். இரட்சிக்கப்பட்டவனின் ஆத்மா ஆவியில் எழுதப்பட்ட வசனப்படி நல்வாழ்வு வந்தால் சரீரத்தில் வியாதி அணுகாது (3 யோ. 2). பரிசுத்த ஆவியைப் பெற்ற கிறிஸ்தவனின் சரீரம் தேவனுடைய ஆலயம். (1 கொரி. 6:19) இந்த ஆலயத்தை பிசாசு ஒரு நாளும் தொட இயலாது. யோபுவைப் போல பயமும் விசுவாசக் குறைவும், மனத்தெளிவின்மையும் இருந்தால் மட்டுமே பிசாசு தொடுவான். ஆக, ஆவியிலே பிசாசு பிடிப்பதை வெளியிலே சில சமயம் காணலாம்; ஆத்மா வில்பிடிப்பதை உடனே காண முடியாது; வசனக் கண்ணாடியைக் கொண்டு காணலாம். சரீரத்தில் பிடிப்பதை எப்போதும் காணமுடியும். இயேசு கிறிஸ்துவை பிசாசானவன் ஒன்றிலும் பிடிக்க முடியவில்லை. அல்லேலூயா! அவரின் வழி நம் வழியாகட்டும்! பிசாசின் பிடி நம் ஆவியிலும் ஆத்மாவிலும் சரீரத்திலும் இல்லாதிருக்கட்டும்! தேவனுடைய வார்த்தையைக் கொண்டு விசுவாசத்தால் வேலியடைத்து நாம் நம்மை காத்துக் கொள்வோம்.

❖ ❖ ❖

# கற்பனைகளை மீறி போதிக்கிறவன் பரலோகம் போவானா?

"இந்தக் கற்பனைகள் எல்லவற்றிலும் சிறிதான தொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்" என்ற மத் 5:19ன்படி, கற்பனைகளை மீறி போதிக்கிறவனும் பரலோகம் போவான் போல் தெரிகிறதல்லவா! இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக! இங்கே பரலோக ராஜ்யம் என்று சொல்லியிருப்பது நாம்

நினைக்கின்ற மோட்சலோகம் (சொர்க்கம்) அல்ல. இயேசு கிறிஸ்துவும், யோவான் ஸ்நானகனும், "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று போதித்தார்கள் (மத். 3:2, 4:17). பரலோக ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்க வந்தவரைக் கொன்று போட்டதால், ஆவிக்குரிய ராஜ்யத்தை மாத்திரமே ஸ்தாபித்தார். அதுதான் அவர்மேல் கட்டப்பட்ட சபை; இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம்; யோ 3:3,5ல் சொல்லப்பட்ட ராஜ்யம். இயேசு மறுபடியும் வந்து பூமியிலே 1000 வருஷம் தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார். அதன்பின் தற்போது பரலோகில் இயங்கி வரும் தேவனுடைய ராஜ்யம், பிதாவின் கீழ் புதிய வானம் புதிய பூமியில் ஸ்தாபிக்கப்படும். ஆவிக்குரிய ரீதியிலுள்ள பரலோக ராஜ்யம், இப்படியாய் இறுதியில் தேவனுடைய ராஜ்யமாய் மாறும். (சில இடங்களில் தவறான மொழி பெயர்ப்பினால் பரலோக ராஜ்யமும் தேவனுடைய ராஜ்யமும் மாறி மொழி பெயர்க்கப்பட்டிருக்கும்). இது குறித்து இன்னும் கொஞ்சம் அதிகம் அறிந்து கொள்ள லூக். 7:28ஐ வாசியுங்கள்". தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாய் இருக்கிறவன்" என்ற வார்த்தை நிகழ்காலத்தில் குறிக்கப்பட்டிருப்பதால், ஆவிக்குரிய சபையாகிய தேவனுடைய (பரலோக) ராஜ்யத்தை சொல்வதாகவே அர்த்தமாகிறது. இதே ஆவிக்குரிய ராஜ்யத்தைத்தான் மத். 5:19ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஆவிக்குரிய ராஜ்யத்தில் கிறிஸ்தவ சபையும் உண்டு; இஸ்ரேல் சபையும் உண்டு.

மத். 5:19ல் கற்பனைகள் என்று வருவது நியாயப் பிரமாணம் மட்டும் அல்ல என்று முந்தி அறிய வேண்டும். நியாயப் பிரமாணம் இல்லாத ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தில், அதாவது நமது கிறிஸ்தவ சபையில், நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்வது சம்பந்தமாய் வார்த்தைகள் வருவதற்கு சாத்தியமில்லை. அப்படியென்றால் இங்கே சொல்லப்பட்ட கற்பனை என்ன? இதுதான் மத். 5:1 முதல் தேவன் போதிக்கும் மலைப் பிரசங்க கற்பனைகள். மொத்தத்தில் புதிய ஏற்பாட்டுக் கற்பனைகள் என்று சொல்லலாம். இது கிட்டத்தட்ட 1050 கற்பனைகள் உள்ளன என்று வேத வல்லுநர்களின் கருத்து. இவைகள் நாம் இருக்கும் தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்திற்கு உட்பட்டோருக்கு உட்பட்டது. பழைய ஏற்பாட்டில் உள்ள பத்துக் கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தில் ஒன்றை மீறினாலும் எல்லாவற்றிலும் அவன் உடனே தண்டனை பெறும் குற்றவாளி (யாக். 2:10). ஆனால் புதிய ஏற்பாட்டிலோ அப்படியல்ல. ஏனென்றால் எல்லாத் தண்டனைகளையும் இயேசு சுமந்துவிட்டாரே! புதிய ஏற்பாட்டு கற்பனைகளிலே, அதாவது இயேசுவின் ஆவியின் பிரமாணத்திலே (ரோ. 8:2). ஒன்றை மீறினாலே எல்லாவற்றிலும் உடனே தண்டனை பெறும்

குற்றவாளியல்ல. அந்த ஒன்றிலிருந்து விடுதலையாகி வரவேண்டுமென்று நமக்குள்ளே இருக்கும் பரிசுத்த ஆவியானவர் போதித்து நடத்துகின்றார். அவர் நம்மை விட்டு விலகுவதே இல்லை. நம்மை எல்லா கற்பனைப் படியேயும் நடக்க வைத்து நூற்றுக்கு நூறு உத்தமனாய் மாற்றவே ஆவியானவர் நம்மோடு இருக்கிறார். என்றைக்கு இரட்சிக்கப்பட்டோமோ அன்றைக்கே நம் பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதியாயிற்று. பரலோகம் நமக்கு சொந்தமாயிற்று. ஒரு கட்டளையை மீறினாலும் பெயர் ஜீவ புஸ்தகத்தில் அழிக்கப்படாது. இரட்சிப்பை இழந்தால் மாத்திரமே அழிக்கப்படும். அதுவரைக்கும் நாம் ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தில் தான் ஜீவிக்கிறோம். நம்முடைய புத்திர சுவிகாரம் மாறுவதே இல்லை. 2 கொரி. 5:10ஐ கொஞ்சம் தியானியுங்கள்.

ஒருவன் தேவனுடைய கற்பனைகளில் மிகவும் சிறிதான தொன்றை மீறி, அவ்விதமாய்ப் போதித்தாலும் அவன் ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்தில் நிச்சயம் இருப்பான்; ஏனென்றால் அவன் இரட்சிக்கப் பட்டவனாயிற்றே! ஆவிக்குரிய ராஜ்யத்தில் ஒரு வேளை சிறியவனாய் கருதப்படலாம். அவன் ஆவிக்குரிய ராஜ்யத்தில் இருப்பதாலேயே அவன் மனம் மாற வாய்ப்புண்டு; திருந்தவும் இடமுண்டு. வரங்களோ, வல்லமைகளோ, கனிகளோ ஒரு வேளை அவனுக்கு குறைவாய் இருக்கலாம். அதனாலே அவன் சிறியவன் என காணப்படலாம். ஆனால் பரலோகிலோ ஒவ்வொருவருக்கும் கிரீடங்களும் மகிமையும் தான் வேறுபடும். மற்றப்படி வேறுபாடே இல்லை. (இரு பாலருக்கும் இதுதான் விதி). எனவே இதைவாசிக்கும் தேவபிள்ளையே! பரலோகிலும், ஆவிக்குரிய தேவனுடைய ராஜ்யத்திலும் பெரியவன் என்ற ஸ்தானம் கிடைக்க செயல்படு. அதாவது அதிக கிரீடங்கள் பெற செயல்படு! ஒன்றிலே தவறினாலும் தேவன் தள்ளுவதில்லை; நீயோ மனம்மாறி குணப்படு! அதிக கிரீடங்கள் கிடைக்கும். கற்பனைகளை மீறி பாவத்திலே நிலைத்திருக்கிறவனுக்குள்ளே தேவனுடைய வித்து இராது (1 யோ. 3:9). அப்படிப்பட்டவன் இரட்சிப்பை இழந்து விட்டவன்; அவன் தற்கால சபைகளில் இருந்தாலும் அவன் கோதுமை மணியல்ல; பதருதான். அவன் பரலோக ராஜ்யத்திற்குப் புறம்பானவன்; ஆவிக்குரிய அந்த ராஜ்யத்தில் சிறியவன் என்ற தகுதி கூட இல்லை. இப்படிப்பட்டவனுக்கு பரலோகம் இல்லவே இல்லை.

❖ ❖ ❖

# மீன் வயிற்றில் மூன்றுநாள் யோனாவா?

வேதத்தில் நடந்த எல்லா அதிசயங்களிலும், இது ஒன்று தான் அனைவராலும் ஜீரணிக்க முடியாததாய் இருக்கின்றது. ஒரு மனிதன் மீன் வயிற்றில் மூன்று நாள் சேதப்படாமல் இருந்து உயிரோடு வெளி வந்திருக்க முடியுமா? இது கேள்வி. அப்படி ஒரு மீன் உண்டா? அப்படியே இருந்தாலும் அவன் மரித்திருக்க வேண்டாமா? சரீரம் உடைந்திருக்க வேண்டாமா? இப்படி யோனா உயிரோடே வெளி வந்தது இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாய் இருப்பதால் பிசாசானவன், இந்த அதிசய காரியத்தை அறிந்து கொள்ள மனிதர்களின் மனக்கண்களை குருடாக்கிவிட்டான். இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக. சில மொழிபெயர்ப்புகளில் விழுங்கியது, மீன் என்றும், சிலவற்றில் திமிங்கலம் என்றும் எழுதப்பட்டடிருக்கிறது. சாதாரணமாய் திமிங்கலங்கள் வயிற்றில் ஒரு மனிதனை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு பெரிதாய் இருந்தாலும், அவைகளின் தொண்டைகள் மிகவும் குறுகினதாய் உள்ளதால் மனிதனை முழுவதுமாய் அவைகளால் விழுங்க முடியாது என்று மீன்வள ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். கடலில் ஷார்க் என்ற மீன் உண்டு; அந்த மீனுக்கு மனிதனை விழுங்கக்கூடிய அளவுக்குத் தொண்டை இருந்தாலும், தனது கூரிய பற்களால் கடித்துக் குதறித்தான் ஆகாரத்தை சாப்பிடும் என்பதால் இப்படிப்பட்ட மீனும் யோனாவை விழுங்க வாய்ப்பில்லை. "யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்திப்படுத்தியிருந்தார்" (யோனா 1:17) என்று வேதம் சொல்வதால், நிச்சயமாய் இப்படிப்பட்ட மீனை படைப்பின் போதே உண்டாக்கி இருக்க வேண்டும். இந்த சிந்தனையிலே ஆராய்ச்சியாளர்கள் மீனைத் தேடினார்கள். கடைசியில் கண்டு பிடித்தனர். 70 அடி நீளம் வரையுள்ள இந்த வகை மீன்கள் மனிதனை சேதமில்லாத முறையில் விழுங்கக்கூடியவை.

இப்படிப்பட்ட மீன் ஒன்றை இங்கிலாந்து வளைகுடாப் பகுதியில் கண்டு, அதைப்பிடிக்க முயலும்போது ஒரு மீனவர் கடலுக்குள் விழுந்துவிட்டார். அவரையும் அந்த மீன் விழுங்கிவிட்டு கடலுக்குள் மறைந்துவிட்டது. மீனவர்கள் அந்த மீனைத்தேடி 43 மணி நேரத்திற்குப் பின் கண்டுபிடித்து, சுட்டு, கரைக்கு இழுத்து வந்தார்கள். அந்த மீனவருக்கு அடக்க ஆராதனையெல்லாம் ரெடி பண்ணினார்களள. மீனின் வயிற்றைக் கிழித்துப் பார்த்தால், மீனவனின் உடல் ஒரு சேதமுமின்றி இருந்ததையும், அதுவும் உரோடிருந்ததையும் கண்டு ஆச்சரியமடைந்தனர். உடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். அவன் அதிர்ச்சியில் மயங்கி உள்ளான் என்று மருத்துவர் முதலுதவி செய்து உடனே அனுப்பி விட்டார். அவனை "20ம்

நூற்றாண்டு யோனா" என்று சொல்லி அவனை மக்கள் பார்க்கும் வண்ணம், கொஞ்சநாள் இலண்டன் பொருட்காட்சியில் வைத்திருந்தனர். The Harmony of Science and Scripture என்ற புத்தக ஆசிரியர் Harry Runner சில ஆண்டுகள் கழித்து அம்மனிதனை சந்தித்தாகவும், அவன் நன்கு சுகத்தோடு காணப்பட்டதாகவும், சரீரத்தில் முடியே இல்லாமல், மஞ்சள் கலந்த பழுப்புநிற தோலோடு இருந்ததாகவும் அந்தப் புத்தகத்தில் எழுதி உள்ளார். சாதாரண விபத்தில் ஒரு மனிதன் ஒரு மீன் வயிற்றில் 2 நாள் (43 மணி) உயிரோடு இருந்தானென்றால், கர்த்தர் ஆயத்தப்படுத்திய மீனின் வயிற்றிலே யோனா 3 நாட்கள் உயிருடன் இருந்திருப்பானே!

இந்த மீனவரை விழுங்கிய 70 அடி நீளமுள்ள மீன்மட்டுமல்ல; 95 அடி நீளமுள்ள மீன்களும் கடலில் உண்டாம். இவைகள் திமிங்கல இனத்தைச் சார்ந்தவைகளாதலால் இவைகளுக்கு சுவாசிக்க செவிகள் கிடையாது. ஆனால் காற்றை சேமித்து வைக்க 686 கன அடி (14 நீ X 7 அ X 7 உ) அளவுள்ள அறை தலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட திமிங்கல மீன்கள் தாங்கள் விழுங்க முடியாத பெரிய சாதனங்கள் வாய்க்குள் நுழைந்து விட்டால், அவைகளை இந்தக் காற்று அறைக்குள் தள்ளிவிட்டு, அப்புறம் கரைப்பக்கம் வந்து அவைகளை தும்மி வெளியேற்றி விடுகின்றனவாம். இவ்வளவு பெரிய அறையில் ஒரு மனிதன் மூன்று நாட்கள் சேதம் ஏதும் இன்றி இருப்பதில் வியப்பு ஏதுமில்லை. காற்று அறையில் ஓர் ஆள் நடமாடும்பொழுது அக்கூச்சம் தாங்கமாட்டாமல் அம்மீன் அவனைக் கரையில் கொண்டு வந்து கக்கியதில் வியப்பு ஒன்றுமில்லை. "கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார். அது யோனாவைக் கரையிலே கக்கி விட்டது" (யோனா 2:10) என்ற வசனம் எவ்வளவு பொருத்தமாய் இருக்கிறது பார்த்தீர்களா!

பெந்தகொஸ்தே ஊழியர்கள் அதிகமாய் உபயோகிக்கும் "Dakes Bibleல் யோனா மீனுக்குள் மரித்துப் போனான் என்றும், அவன் ஆவியும் ஆத்மாவும் 3 நாள் பாதாளத்தில் இருந்தது என்றும், மூன்று நாளுக்குப் பின் உயிர்வந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது. இது ஏற்றுக்கொள்ள முடியாதது, ஏனெனில் யோனா 2:1ன்படி, அவன் மீனின் வயிற்றிலிருந்து ஜெபித்ததால், அவன் பாதாளம் போகவில்லை என்றும், உயிரோடே மீனுக்குள் இருந்தானென்றும் அறிகிறோம். மீனின் வயிற்றுக்குள் இருப்பதை யோனாவே பாதாளம் என்று உவமானப்படுத்துகிறான் (யோனா 2:2). பாதாளத்திலிருந்து யார் என்ன ஜெபம் ஏறெடுத்தாலும் அது கேட்கப்படாது என்று லாசரு - ஐஸ்வரியவான் நிகழ்ச்சியிலிருந்தே அறிகிறோம் (லூக். 16:7). ஆனால் இங்கோ தேவன் யோனாவின் ஜெபம் கேட்டு, மீனுக்கு

கட்டளையிட்டார். மீன் கக்கிய உடனே, அவன் பிணமாய் தரையில் விழுந்ததாகவோ, அவனுடைய சரீரத்திற்கு தேவன் உயிர் கொடுத்ததாகவோ வசனம் இல்லை. கரையில் விழுந்தவனுக்கு உடனே சுவிசேஷ ஊழிய அழைப்பு தேவனிடமிருந்து வந்தது; அவனும் உடனே புறப்பட்டான், அவன் உயிரோடே இருந்ததால் (யோனா 3:2,3). மத். 12:39-41ஐ தவறாய்ப் புரிந்து கொண்டு தவறான விளக்கம் கொடுப்பது சரியல்ல. மத் 12:40ல் சொல்லப்பட்டது "மூன்று நாள்" என்பதுதான்; அப்படியே அதை சொல்லுக்கு சொல் எடுத்தால், இயேசு உயிரோடே பூமிக்குள் போகவில்லையே யோனாவைப் போல! அல்லேலூயா! யோனாவிலும் பெரியவர் என்பதால் அவன் மரிக்காமல் வெளியே வந்தான்; இவர் மரித்து உயிர்த்து வந்தார்.

ஆக, யோனாவின் அதிசயம் கட்டுக் கதையல்ல; கருத்தை விளக்கும் காவியம்; கருகலானதை புரியவைத்த தேவனுக்கே மகிமை!

❖ ❖ ❖

## பக்தியுள்ள சந்ததி எது?

ஆதாம் ஏவாளைப் படைக்கும் போதே தேவன் பக்தியுள்ள ஒரு சந்ததி வேண்டும் என்ற எண்ணத்திலே தான் படைத்தார். (மல். 2:15). இந்த பக்தியுள்ள சந்ததி எது? இஸ்ரேலரா? கிறிஸ்துவர்களா? யார் அவர்கள்? இந்த கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக.

ஆதியாகமம் முதற்கொண்டு பக்தியுள்ள சந்ததிக்காகவே நோவா, ஏனோக்கு, ஆபிரகாம், ஈசாக்கு போன்ற பலரைத் தேவன் தெரிந்து கொண்டார். ஆனாலும் சந்ததி அவர் எதிர்பார்த்தபடி அமையவில்லை. இஸ்ரேல் மக்களைத் தெரிந்து கொண்டார். அவர்களும் தேவனின் தெரிந்து கொள்ளுதலில் நிலை நிற்கவில்லை. ஆனால் இவர்களோ தங்களை ஆபிரகாமின் சந்தி என்று பெருமை பாராட்டிக் கொள்கிறார்கள். (யோ. 8:33). மாம்சத்தின்படி அவர்கள் ஆபிரகாமின் சந்ததி தான். ஆனால் தேவனின் உபதேசப்படி அவர்கள் நடக்காததால் அவர்களை ஆபிரகாமின் சந்ததி என அங்கீகரிக்கவில்லை. (யோ. 8:37) ஆபிரகாமுக்கு தேவனால் ஏற்கெனவே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. அந்த சந்ததி கிறிஸ்துவும் அவர் வழியாய் வருவோரும்தான் என்று பவுல் கலா. 3:16ல் விளக்கமாய் எழுதி உள்ளார். அதனால்தான் இயேசு சொன்னார். இந்த கல்லின் மேல் (என்மேல் வார்த்தையின் மேல்) என் சபையைக் கட்டுவேன் (மத். 16:18) என்று. இந்த சபையார் தான் விசுவாச மார்க்கத்தார்; இவர்கள் தான் ஆபிரகாமின்

பிள்ளைகள்; ஆபிரகாமின் சந்ததி (கலா. 3:7-9) ஆதிகாலம் முதல் தேவனுக்குள்ளே மறைந்திருந்த இரகசியம் இதுதான் என்று பவுல், எபே 3:9-11ல் சொல்வதை வாசியுங்கள். இந்த பக்தியுள்ள சந்ததிதான் புதிய ஏற்பாட்டுகிறிஸ்தவ சபை என்றும், இது ஆதிமுதல் இரகசியமாய் வைக்கப்பட்டு பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டது என்றும் அறியும்போது என்னே ஆனந்தம்! (எப 2:19 - 3:6). இப்படிப்பட்டதான சிலாக்கியம் பெற்ற நாம் பேறுபெற்றவர்கள். அல்லேலூயா! இரகசியமாய் வைக்கப்பட்டு பவுல் மூலமாய் வெளிப்படுத்தப்பட்ட, கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட சபை ஒருநாள் இரகசியமாகவே எடுத்துக் கொள்ளப்பட போகிறது! தேவ பிள்ளையே! அதிலே பங்கு பெற நீ ஆயத்தமா?

❖ ❖ ❖

## கிறிஸ்தவனுக்கு அடையாளம் சிலுவையா?

இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள், தங்கள் கழுத்துகளிலே சிலுவையைத் தொங்க விடுகிறார்கள்; தங்கள் வீடுகளிலும், சர்ச்சுகளிலும், தங்கள் உடைகளிலும் சிலுவையை வைத்திருக்கிறார்கள். ஆசீர்வதிக்கும் போது கூட சிலுவை அடையாளமிட்டுத்தான் ஆசீர்வதிக்கிறார்கள். முத்திரைகளிலும், லெட்டர் பேடுகளிலும் Emblemகளிலும் பதித்திருக்கிறார்கள். மொத்தத்தில் சிலுவையானது மதிக்கப்படத்தக்க, மகிமைப்படத்தக்க ஒன்றாய் மாற்றப்பட்டிருக்கிறது. இது சரிதானா? இது விக்ரக ஆராதனைக்கு வழிவகுக்காதா? கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்டுக் கொன்றார்கள்; இதனால் தூக்குக் கயிறுக்கு மரியாதையா? அல்லது தூக்குக் கயிறுதான் தியாகச் சின்னமா? மகாத்மா காந்தி, இந்திரகாகாந்தி போன்றோரை துப்பாக்கியால், கொன்றார்கள். இதனால் துப்பாக்கி தியாகச் சின்னமா? இல்லவே இல்லை. தூக்கிலே தொங்கிய கட்ட பொம்மனுக்குத்தான் மரியாதையே ஒழிய தூக்குக் கயிறுக்கு அல்ல; துப்பாக்கியால் கொல்லப்பட்ட மகாத்மா காந்திக்குத்தான் மரியாதையே ஒழிய, துப்பாக்கிக்கு அல்ல. உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியான இயேசு சிலுவையிலே தூக்கப்பட்டார். இதனால் சிலுவைக்கு மரியாதையா? சிலுவை என்பது ஓர் அவமானச் சின்னம்; இதை புனித சின்னம் என்று சிலர் பாடுகிறதினாலே அதற்கு ஒரு மதிப்பும் மகிமையும் கிறிஸ்தவர்களால் வருகின்றது. நமக்காய்ப் பாவமாக்கப்பட்ட இயேசு (2 கொரி. 5:21) சிலுவையிலே தொங்கியதால், பாவிகளாயிருந்த நாம்தான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறோமே ஒழிய

(ரோ. 3:23; 24; 1 கொரி. 6:11) அவர் தொங்கிய சிலுவை புனிதமாக்கப்பட வில்லை; மகிமைப்படவில்லை; மரியாதை பெறவுமில்லை. அந்த கட்டைச் சிலுவைக்காகவா கர்த்தர் மனிதனானார்? தற்காலத்தில் தடா, மிசா என்றெல்லாம் உள்ள சட்டத்தின் முன்னுள்ள குற்றவாளிகளைவிட மிகவும் மோசமான, சாவுக்கேதுவான பாவம் செய்த, தேவனால் சபிக்கப்பட்டவர்கள் தொங்கவிடப்படும் கொடூரமான ஈன, அவமானச் சிலுவையிலே (உபா. 21:22,23; கலா. 3:13) தேவாதி தேவன் தொங்கினார். அந்தோ பயங்கரம்! இந்த சிலுவைக்கு மதிப்புமில்லை; மரியாதையுமில்லை. அதுவெறும் கட்டையே! அந்த சிலுவையில் தொங்கிய இயேசுவை விட்டுவிட்டு ஈனச்சிலுவையை உலகிற்கு காட்டுகிறார்களே பல கிறிஸ்தவர்கள், இவர்களின் மனக்கண்கள் பிரகாசமாகட்டும் (எபே. 1:19; 2 கொரி. 4:4) இந்தக் காரியம், விக்ரக ஆராதனைக்கு வழிவகுக்கிறது என்று அறியாதிருக்கிறார்கள். இந்த அறியாமையினாலே சங்கார மாகிறார்கள். (ஓசியா 4:6)

கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் வனாந்தரத்திலே இஸ்ரேலரைக் கடித்ததினாலே அநேகர் மரித்துப் போன சமயம், தேவன் சொன்னபடி மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான்; சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது அவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைத்தான் (எண். 2:1,8,9). அவர்கள் பார்க்க வேண்டியது வெண்கல சர்ப்பத்தைத் தானே ஒழிய அது ·தொங்குகிற கம்பத்தை அல்ல. இயேசு கிறிஸ்துவும் இதே போல் தான் சிலுவை மரத்திலே தூக்கப்பட்டார் என்று யோ. 3:14,15 சொல்கின்றது. ஆக, விடுதலை,. சுகம், ஆசீர்வாதம், பாதுகாப்பு வேண்டுமென்றால், கிறிஸ்தவனாயிருந்தாலும் சரி, புறஜாதியானாயிருந்தாலும் சரி அவர்கள் விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்க வேண்டியது சிலுவையை அல்ல; சிலுவையிலே தொங்கிய இயேசுவை.

இந்த வெண்கல சர்ப்பம் கூட பிற்காலத்தில் விக்ரக ஆராதனையாய் மாறிவிட்டது. விசுவாசத்திற்காகத் தான் மோசே வெண்கல சர்ப்பத்தை பார்க்கச் சொன்னான். அவர்களோ, தற்கால - கடைசி கால கிறிஸ்தவர்களைப் போல அந்த வெண்கல சர்ப்பத்தையே அன்று முதல், எசேக்கியா ராஜாவின் காலம் வரை விக்ரகமாக, அதற்குத் தூபம் காட்டி வந்தார்கள். இதை ராஜா கண்டு, அந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப் போட்டான் என்று 2 ராஜா. 18:4 சொல்கின்றது. ஆக, விசுவாசம் விக்ரகமாக மாறக்கூடாது என்று அறிகிறோம். அதனால்தான் சிலுவையில் தொங்கிய இயேசுவைப் போல உருவங்கள் செய்வதோ அதை வீடு, சபை, லெட்டர் பேடு, பத்திரிகை, விளம்பரம் போன்றவைகளில் வைப்பதோ கூடாது என்றும், அது விக்ரக ஆராதனைக்கு

வழிவகுக்கும் என்றும் வேதம் திட்டமும் தெளிவுமாய் விளக்குகிறது. உபா. 5:8,9; ரோ 1:21-25 போன்றவைகளை வாசியுங்கள். சிலுவையில் தொங்கிய இயேசுவைப் போலவே உருவாக்கவும் கூடாது; நமஸ்கரிக்கவும் கூடாது என்றால் அவர் தொங்கிய சிலுவையைப் போலவே உருவாக்கலாமா? அதையே பிரஸ்தாபப்படுத்தலாமா? அதையே கிறிஸ்தவர்களின் அடையாளம் என்று சொல்லிக் கொண்டு தரித்துக் கொள்ளலாமா? சிலுவையைத் தரித்துக் கொள்ளுதல், சிலுவையை உருவாக்குதல், மதித்தல் எல்லாமே பாபிலோனியப் பாரம்பரியம் என்று ஏற்கெனவே நான் எழுதியிருக்கிறேன். நாங்கள் சிலுவையை வணங்குவதில்லையே என்று வாதிடுவோரும் உண்டு. **அவர்களுக்காகத் தான் தேவன் சொல்லியிருக்கிறார் உருவாக்கவே வேண்டாம் என்று.** புரிந்தவர்கள் புரிந்து கொள்ளட்டும்; தெரிந்தவர்கள் தெரிந்து கொள்ளட்டும்.

பழைய ஏற்பாட்டிலே ஓய்வுநாள் ஆசரிப்பு தான் தேவனுக்கும் இஸ்ரேலருக்கும் அடையாளமாயிருந்தது. (எசே. 20:20; யாக். 31:13). புதிய ஏற்பாட்டிலோ ஓய்வு நாட்களுக்கும் நிஜமாகிய கிறிஸ்து வந்து விட்டதால் (கொலோ. 2:16,17) இனி நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ள வேண்டும் (கலா. 3:27). கிறிஸ்து + அவன் என்று உலகமே நம்மைப் பார்த்து சொல்லும்படி கிரியைகள் இருக்க வேண்டும். நம்மைக் காண்பவர்கள் கிறிஸ்துவைக் காண வேண்டும். அதனால் தான் இயேசு சொன்னார். "நீங்கள் பூமி முழுவதும் எனக்குச் சாட்சியாயிருங்கள்" (அப். 1:8) என்று. கிறிஸ்துவுடனே நாம் சிலுவையில் அறையப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் (கலா. 2:20; 5:24). இதுவே அடையாளம், பவுலும் , பேதுருவும் போகுமிடமெல்லாம் சிலுவையை அடையாளமாய் தங்கள் உடையில் தரித்துக் கொண்டோ, கையிலே தூக்கிக் கொண்டோ போனார்களா? பின்பு எப்படி உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கே வந்து விட்டார்கள் என்று அந்த ஊரார் சொன்னார்கள். அவர்களின் விசுவாசக் கிரியையும், கிறிஸ்துவின் வசனத்துக்கேற்ற சாட்சியுமே தான். மாற். 16:20ஐ வாசியுங்கள்.

வேதத்திலே சில இடங்களில் "சிலுவை, சிலுவை" என்று போடப்பட்டதாலே அதை அப்படியே பலர் எடுத்துக் கொள்கிறார்கள். சிலுவையைப் பற்றிய உபதேசம் என்று 1 கொரி. 1:18ல் உள்ளதே இது என்ன, சிலுவை எத்தனை அடிநீளம், எத்தனை அடி அகலம், எந்த மரத்தால் செய்யப்பட்டது. என்ன கலர் அடிக்கப்பட்டுள்ளது என்பது போன்ற உபதேசமா? இல்லை. சிலுவையில் தொங்கிய இயேசுவைப் பற்றிய உபதேசம் என்று பொருள். கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டுவேன்

என்று பவுல் எழுதியிருக்கிறாரே (கலா. 6:14) தங்கச் சிலுவை, வைரச் சிலுவை என்ற மேன்மையா? அவமானச் சிலுவையிலே மரித்த இயேசுவால் கிடைத்த ஆசீர்வாதங்களைக் குறித்தே மேன்மை நமக்குண்டு. பிலி. 3:18ல் "அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்" என்று உள்ளதன் அர்த்தமென்ன? சிலுவையில் மரித்து இரட்சிப்பருளிய கிறிஸ்துவின் உபதேசத்திற்கு பகைஞர் என்று பொருள், ஆக, இப்படி ஏராளமாய் சொல்லிக் கொண்டே போகலாம். எப்படியோ, ஈனச் சிலுவையையல்ல; சிலுவையிலே மரித்த கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வோம். விக்ரகமாய் அல்ல; கிறிஸ்துவையே நம் கிரியைகளால் வெளிக்காட்டி அவருக்குச் சாட்சியாய் உலகில் ஜீவிப்போம்.

❖ ❖ ❖

## பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுவது எப்போது?

மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள் என்று எபே. 4:30ல் பரிசுத்த ஆவியைப் பெற்ற விசுவாசிகளுக்கு பவுல் எழுதுகிறார். பரிசுத்த ஆவியைப் பெறுவதில் மூன்று அனுபவங்கள் உண்டு என ஏற்கெனவே நான் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் எழுதி உள்ளதை மறுபடியும் எழுதுகிறேன். (1) **With us** அதாவது நம்மோடு ஆவியானவர் இருக்கும் அனுபவம். நாம் இரட்சிக்கப்படும்போது இயேசுவை விசுவாசிக்காத பாவத்தை உணர்த்தி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வைத்து விசுவாசத்தை தொடர்ந்து வளர்ப்பிக்கும் ஆவியானவரின் பணி (யோ. 16:8,9; எபே. 2:3) விசுவாசியான போதிலிருந்தே ஆவியானவர் நம்மோடு இருக்கிறார் (2) **In us** - அதாவது நமக்குள் ஆவியானவர் இருக்கும் அனுபவம். நம் சரீரமே தேவனுடைய ஆலயமாய் மாறி அதற்குள் அவர் வாசமாயிருந்து (1 கொரி. 6:19.) மாம்சீகத்திலிருந்து வெற்றியை தந்தும் (ரோ. 8:2-4; கலா. 5:16-17) கிறிஸ்துவின் குணாதிசயங்களை உருவாக்கியும் (கலா. 5:22 - 23). பலவீனங்களில் நமக்கு உதவி செய்தும் (ரோ. 8:26) ஜெபிக்கும் சிந்தனையைக் கொடுத்தும் (எபே. 6:18), புத்திர சுவிகாரத்தை நம்மில் நடப்பித்தும் (கலா. 4:6), சத்திய வசனத்தால் நம்மை கழுவியும் பரிசுத்தப்படுத்தியும் (எபே. 5:26; 2 தெச. 2:13; 1 பேது. 1:2) ஆறுதலையும் பரிந்து பேசுவதையும் தினமும் வெளிப்படுத்தியும் (அப். 9:31; ரோ. 8:26) இயேசு கிறிஸ்துவை முழுமையாய் வெளிப்படுத்தியும் (யோ. 16:14) ஆவியானவர் செய்கிற பணியாகும் (3) **"Upon Us"** - அதாவது ஆவியானவர் நம்மேல் இருக்கும் அனுபவம். ஒரு குறிப்பிட்ட தேவனுடைய

காரியத்திற்காக நம்மை Direct பண்ணும், வழி நடத்தும் பணி, இதைத்தான் அபிஷேகம் பண்ணுதல் என்று சொல்வது. ஆரோன் அபிஷேகம் பண்ணப்பட்டான்; சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டான்; கன்னிமரியின் மேல் ஆவியானவர் வந்தார். அவள் கர்ப்பவதியானாள் (லூக். 1:3). சிம்சோன் மேல், சிமியோன் மேல், கொர்நேலியு வீட்டார் மேல், பெந்தகொஸ்தே நாளில் அப்போஸ்தலர் மேல் இயேசுவின் மேல் (லூக். 4:18) இருந்தது போன்ற பல காரியங்களைச் சொல்லலாம். இது ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு மட்டும்தான்.

மேற்கண்ட மூன்று அனுபவங்களையும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றாக வேண்டும். ஆவியானவர் நமக்குள் (In us) இருப்பதால் தான், உலகத்தில் இருப்பவனிலும் என்னில் இருப்பவர் பெரியவர் என்று சொல்ல முடிகிறது (1 யோ. 4:4) அதனால்தான் தேவனின் வசனப்படி நடக்க முடிகிறது. ஆவியானவர் மூலமாய் வரும் வேத வசனத்திற்குக் கீழ்ப்படியாமல், தீமையான எண்ணங்களை இதயத்தில் நிறுத்தி, செயல்படும் போது நமக்குள் இருக்கும் ஆவியானவர் துக்கப்படுகிறார் (எபே. 4:30; 1 தெச. 5:19). தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு, மணவாளன் - மணவாட்டி உறவு. மணவாட்டி பாவம் செய்தாலும் தற்கால மனிதர்களைப் போல Divorce - விவாகரத்து பண்ணாமல், மணவாளன் நமக்குள்ளேயே இருந்து துக்கிக்கிறார். என்னே நம் மீது உள்ள தேவனின் அன்பு! தேவனுடைய கற்பனையை - தேவனுடைய வார்த்தையை மீறி நடக்கும் போது, வார்த்தையை அவமாக்குகிறோம் (மத். 15:6) தேவனையே துக்கப்படுத்து கிறோம். சில நேரங்களில் பாரம் பரியத்தினாலே அவமாக்குக்கிறார்கள் என்று இயேசு சொல்கிறார். (மத். 15:3). அதுமாத்திரமல்ல, அதனாலே மனுஷருடைய கந்பனைகளை உபதேசதங்களாக கைக்கொண்டு வீணாய் ஆராதனை செய்கிறார்கள். (மத். 15:9). **இதற்கு ஒரு உதாரணம் தான் கிறிஸ்மஸ் ஆராதனை, ஈஸ்டர் ஆராதனை போன்றவை.** கிறிஸ்மஸ் என்றால், கிறிஸ்து+மஸ் அதாவது Christmas. mas என்றால் பூஜை என்று பொருள். கத்தோலிக்க மக்கள் Masக்கு, பூசைக்குப் போய் வருகிறேன் என்கிறார்களே அது இதுதான். ஆக கிறிஸ்மஸ் என்றால் கிறிஸ்து பூஜை. அதைத்தான் டிசம்பர் 25 என்று சொல்லி, ஸ்டார், பலூன் எல்லாம் கட்டி, வேதத்திலே இல்லாத கிறிஸ்மஸ் Tree (மரம்), கிறிஸ்மஸ் தாத்தா எல்லாம் செய்து, பண்டிகையாய், கிருஷ்ண ஜெயந்தி, காந்தி ஜெயந்தி போல "கிறிஸ்து ஜெயந்தி" என்று சொல்லி கிறிஸ்து பூஜை நடத்துகிறார்கள். கிறிஸ்தவர்கள், பிறந்த பாலகனையே (Infant Jesus) பிரகடனப்படுத்தி, அவர் குமாரனாய்க் கொடுக்கப்பட்டு நமக்கு இரட்சிப்பை அளித்ததை (ஏசா. 9:6) பிரகடனப் படுத்தாமல், தினந்தோறும் இதைச் செய்யாமல், பாரம்பரிய பண்டிகை

களினாலே தேவன் நமக்கு கொடுத்த சுவிசேஷ ஊழிய வார்த்தையை அவமாக்குகிறார்கள். விக்ரக வழிபாட்டுக்கு வழிவகுக்கிறார்கள். துணை போகிறார்கள். மரித்தோரோடு தூங்குகிறார்கள் (எபே 5:14). இதனால் நமக்குள் இருக்கும் ஆவியானவர் துக்கப்படுகிறார். அது மட்டுமல்ல; இன்னும் எபே. 4:17-5:18ன் படியான துக்கப்படுத்தும் காரியங்களையும் வாசியுங்கள். இரட்சிக்கப்படாத புறஜாதிகள் மற்றும் பெயர்க்கிறிஸ்தவர்கள், தங்களின் வீணான சிந்தனையினாலே உலகப் பிரகாரமாய் நடப்பது போல நாமும் நடவாமல், பண்டிகைக் கிறிஸ்தவர்களாய் மாறாமல், புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டு, ஆவியானவர் தரும் போதனைகளின்படி நடந்து, அவரைத் துக்கப்படுத்தாதிருப்போமாக! அவர் விசனப்பட்டால் உன் எதிர்காலமும் விசனமாகும். ஜாக்கிரதை! ஆவியானவர் தரும் வசனப்படியே வாழ்வோம். ஆமென்.

❖ ❖ ❖

## மோசே எகிப்தைவிட்டு போனது பயத்தினாலா? விசுவாசத்தினாலா?

அப். 7:26 மற்றும் யாத். 2:11-15 வசனங்களைப் படிக்கும்போது, மோசே எகிப்தியனைக் கொன்ற விஷயம் பார்வோன் ராஜா அறிந்து, மோசேயைக் கொலை செய்ய வகை தேடியதால், மோசே பார்வோனிடத்தினின்று தப்பி ஓடினான் என்று அறிகிறோம். ஆனால் எபி 11:24-27 வசனங்களை வாசிக்கும்போது, மோசே விசுவாசத்தாலே எகிப்தை விட்டுப் போனான் என்று அறிகிறோம். அப்டியானால் மோசே எகிப்தை விட்டு வெளியேறியது பயத்தினாலா? விசுவாசத்தாலா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே விளக்குவாராக!

மோசே பார்வோன் குமாரத்தியின் மகனாய் ராஜ போகத்தோடு வளர்ந்தான். வரப்போகும் எகிப்திய ராஜா என்ற நிலையில் இருந்தான். இவனைக் கண்காணித்த தாதி, இவனுடைய தாயாகவே இருந்ததால் தேவனைப் பற்றிய அறிவு இவனுக்கு இருந்தது. அந்த விசுவாசத்தினாலே ராஜா வீட்டுப் பிள்ளை என்பதை வெறுத்து, இஸ்ரேல் மக்களோடு துன்பத்தை அனுபவிப்பதை தெரிந்துகொண்டு அரண்மனையை விட்டு வெளியே வந்தான்; எகிப்தியனை வெட்டி தன் சகோதரனுக்கு நியாயஞ் செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் இஸ்ரவேலருக்கு இரட்சிப்பைத் தருவார் என்பதை தன்னுடைய சகோதரர்கள் அறிவார்கள் என்று மோசே

நினைத்தான். அவர்களோ அறியவில்லை. ஆபிரகாமைப் போல (யோ. 8:56) இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிகபாக்கியம் என்று எண்ணினான். ஆனால் மறுநாளோ, சண்டை பண்ணிக்கொண்டிருக்கும் இஸ்ரவேலர் இருவருக்கும் சமாதானம் பண்ணப்போகும் போது இவனைக் கொலைகாரன் என்று அவர்கள் பிரசித்தம் பண்ணியதோடல்லாமல், இவனின் நியாயாதிபதிப் பணி தேவையில்லை என்று நிராகரித்தனர். இவனின் கொலை விஷயம் தன் சொந்த சகோதரர்களாலே பார்வோனுக்கே தெரிந்து விட்டதால் மோசே பயந்தான். அதனால் எகிப்தை விட்டு ஓடிப்போனான். இது மோசே முதல் முறையாய் எகிப்தை விட்டுப் போனது.

மோசே ஒருமுறையல்ல; இரண்டு முறை எகிப்தை விட்டு போயிருக்கிறான். பயத்தினால் ஓடிப்போன மோசே 40 வருஷம் மீதியான் தேசத்தில் வாழ்ந்து மனைவியையும் 2 பிள்ளைகளையும் பெற்றான். அங்குதான், அதரிசனமான தேவனை முட்செடியிலே தரித்தான். அன்று முதற்கொண்டு மோசே தேவனின் வார்த்தையின் மேல் உள்ள விசுவாசத்தில் உறுதியாகி எகிப்துக்கு மீண்டும் வந்தான். அவன் வருகிறபோது பழைய பார்வோன் இல்லை; அவன் ஏற்கெனவே மரித்துப் போனான். (யாத். 2:23). இப்போது மோசேக்குப் பயமில்லை. அதரிசனமான தேவனை - ராஜாவை மோசே கண்டு விட்டதால், மாமிசக்கண்களால் காணும் பார்வோன் ராஜாவைக் கண்டு பயமே இல்லை. பயம் யாருக்கு எப்போது வரும் தெரியுமா? விசுவாசம் இல்லாதவர்களுக்கு வரும். Fear is the reverse gear of faith என்ற நான் ஏற்கெனவே எழுதி இருக்கிறேன். விசுவாசத்தோடு, பார்வோன் ராஜாவுக்கு எதிர் நின்று (எபி. 11:27) இஸ்ரேல் மக்களை விடுவித்து தைரியமாய் மோசே எகிப்தை விட்டு வெளியேறினான் (யாத். 5:1-14; 31). இது மோசே 2வது முறையாய் எகிப்தைவிட்டுப் போனது.

முதல் முறை தன்னிடம் உள்ள விசுவாசத்தில் (எபி. 11:24-26) உறுதியாய் நிற்கமுடியாமல் ஓடிப்போனான். 2ம் முறையோ தேவனைத் தரிசித்து விசுவாசத்திலே உறுதிப்பட்டவனாய் திரும்பி வந்ததாலே, ராஜாவுக்குப் பயப்படாமல், விசுவாசத்தோடே எகிப்தைவிட்டு இஸ்ரேல் மக்களோடு புறப்பட்டான். புறப்படும் போதே விசுவாசத்தோடு பஸ்காவை ஆசரித்து காத்துக் கொண்டான். விசுவாசத்தாலே பார்வோனுக்குப் பயப்படாமல் செங்கடலைக் கடக்கவைத்தான்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! முதல் முறை மோசே ஓடியது போல உறுதியில்லாத விசுவாசம் உனக்கிருக்கிறதா? இன்றே வசனத்தின்

மூலமாய் தேவனைத்தரிசி! விசுவாசமாகிய வரம் உனக்கு வந்து சேரும் (1 கொரி 12:9). அப்போது அநித்யமான எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இனிவரும் பெலன் மேல் நோக்கமாயிருந்து விசுவாசத்திலே மோசேயைப் போல எகிப்தை விட்டு வெளியேற முடியும், வசனத்தின் மூலமாய் தேவனைத் தரிசிப்பது தான் நல்லதும், சரியானதுமாகும். அப்போது தான் விசுவாசத்தில் உறுதியாய் இருக்க முடியும்.

❖ ❖ ❖

## இயேசுதான் பிதாவா?

"நானே அவரென்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்" என்ற யோ 8:24 மற்றும் 28 வசனங்களை வைத்துக் கொண்டு, இயேசு தான் பிதா என்று வாதிடும் இயேசு நாமக்கார சபையார் அதிவேகமாய் எழும்பிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வசனப்படி இயேசுதான் பிதாவா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக.

ஆங்கில வேதாகமத்தில் "Iam he" (நானே அவர்) என்று எழுதப்பட்டிருக்கிறது. எல்லா வேதப்பண்டிதராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட King James Versionல் "Iam he" என்பதில் he என்பதை italic letter ஆகப் போட்டிருக்கிறார்கள். மட்டுமல்ல, எந்தெந்த இடங்களிலெல்லாம் தேவனைக் குறிக்கிற சொல்லாக He என்ற சொல் வருகிறதோ அந்த இடங்களிலெல்லாம் Capital Letterல் போடுவார்கள். ஆனால் இங்கோ he small letterல் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சியின் தியானத்தில் வேதப் பண்டிதர்களின் கருத்தை நோக்குவோம். கிரேக்க மூல பாஷையில் யோ 8:24,28ல் "he" என்ற வார்த்தை இல்லையாம். வெறுமனே 'I am' என்று தான் உள்ளது. இந்த I am (இருக்கிறேன்) என்ற வார்த்தை வேதத்தில் மிக மிக முக்கியமான வார்த்தையன்றோ! யாத். 3:14-15 ஐ வாசியுங்கள். முட்செடியின் நடுவே மோசேக்கு தரிசனமான நம் தேவனின் பெயர் இதுவே. அல்லேலூயா! "இருக்கிறேன்" என்ற நாமமுடைய நம் தேவன், கெத்சமனே தோட்டத்தில் யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டபோது, நசரேனாகிய இயேசுவை தேடுகிறோம் என்று யூதர்கள் சொன்ன உடனே, இயேசு சொன்ன பதிலைப் பாருங்கள். "நான்தான்" என்றார் (யோ. 18:5) (I am) நான்தான் என்று அவர் தன்னுடைய நாமத்தை (மோசேயிடம் சொல்லிய அதே நாமத்தை) கேட்டவுடனே யூதர்கள் பின்னிட்டு விழுந்தார்களாம் (வச.6). ஏன்? அவர் நாமம் வல்லமையுள்ளது. அல்லேலூயா! மோசேக்கு முட்செடியில்

“இருக்கிறேன்” என்ற நாமத்தில் தோன்றியவர் (அப். 7:3), மனிதனாக இயேசு என்ற நாமத்தில் வெளிப்பட்டார். இந்த இயேசு தான் யோ. 8:24,28ல் “இருக்கிறேன் (I am) என்ற நாமமுள்ள கிறிஸ்து நான்” என்று விசுவாசியுங்கள் என்று வேதமறிந்த இஸ்ரேலரிடம் சொல்லுகிறாரே யல்லாமல், இவர் தான் பிதாவாகிய தேவன் என்று சொல்லவில்லை. இப்படியே இயேசு சம்பாஷித்துக் கொண்டிருக்கும் போது, (நான் பிதாவினிடத்திலிருந்து வந்தேன்; பிதா என்னை அனுப்பினார்; பிதா போதித்த படியே சொல்கிறேன்; செய்கிறேன்” - இயேசு) 58ம் வசனத்தில் மறுபடியும் I am நான் இருக்கிறேன் - என்ற தன் நாமத்தை சொன்ன உடனே, யூதர்களுக்கு இவர் சொல்வது புரிந்ததால் அவர்மேல் கல் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள். இதன் அர்த்தம் யூதர்களுக்குப் புரிகிறது; கிறிஸ்தவர்கள் என்று சொல்லும் சிலருக்குப் புரியவில்லையே.

ரோமன் கத்தோலிக்க தமிழ் பைபிளில் “நானே அவரென்று” குறிக்கும், மூலபாஷையில் இல்லாத “he” என்ற வார்த்தையை சேர்க்காமல், மோசேயிடம் அவர் வெளிப்பட்ட Iam (இருக்கிறேன்) என்ற நாமமே போடப்பட்டிருக்கிறது. “நானே இருக்கிறேன் (I am) என்று நீங்கள் விசுவாசிக்காவிடில் உங்கள் பாவங்களிலே மடிவீர்கள்” **அருளப்பர் 8:24.** ஆக, பிதாவே, இயேசு என்று இந்த வசனத்தில் இயேசு சொல்லவில்லை என்று அறிகிறோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

❖ ❖ ❖

# யார் சுவிசேஷகர் ? யார் போதகர்? யார் மேய்ப்பர்?

எபே. 4:13ல் தேவன் 5விதமான ஊழியங்களை சபையிலே வைத்திருக்கிறார் என்று அறிகிறோம். இதைக் குறித்து நான் ஏற்கெனவே எழுதி இருக்கிறேன். இந்த 5 ஊழியங்களும் 5 விரலைப் போன்றவை. அப்போஸ்தல ஊழியம் கட்டைவிரல் போன்றது. பார்வைக்கு குட்டையாய் இருந்தாலும் அது பலமுள்ள விரல்; இந்த விரலால் மற்ற விரல்களை தொட முடியும். அதாவது அப்போஸ்தலன் மற்ற ஊழியங்களையும் செய்ய தகுதி உள்ளவன். ஆட்காட்டி விரல் தீர்க்கதரிசன ஊழியத்தைக் குறிக்கிறது. சபையிலுள்ளளோரின் குறைகளையும் குற்றங்களையும் சுட்டிக்காட்டி சீர்திருத்தும் ஊழியம். விரல்களில் எல்லாம் உயரமாயிருக்கும் நடுவிரல் சுவிசேஷ ஊழியத்தைக் குறிக்கிறது. இந்த ஊழியம் மற்ற எல்லா

ஊழியங்களையும் விட மிகவும் பிரபலமாயிருக்கும். இன்றைக்கு அநேக சுவிசேஷகர்களும் அப்படித்தான். இது சபைக்குள்ளே சொல்ல வேண்டிய மகிமையின் சுவிசேஷம். (இரட்சிப்பின் சுவிசேஷமல்ல). மோதிரவிரல் பாஸ்டர் ஊழியத்தைக் காட்டுகிறது. இது மரியாதைமிகு ஊழியம். சுண்டு விரல், கடைசி ஊழியமான போதகர் ஊழியம். பார்வைக்கு இந்த விரல் சிறியதானாலும் காதுக்குள்ளே எறும்பு போய் விட்டால் அதைக் குடைவது இது ஒன்றுதான். இந்த 5 ஊழியங்களும் சபையிலே பரிசுத்தவான்கள் சீர்பொருந்தி, பூரண புருஷராகி, இயேசுவின் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட தேவனால் ஏற்படுத்தப்பட்ட சபை ஊழியங்கள். பொதுவாக கிறிஸ்தவ வட்டாரத்தில் ஊழியர் என்றாலே பாஸ்டரை, மேய்ப்பரைத்தான் குறிக்கின்றனர். அது தவறு. சுவிசேஷகரும், தீர்க்கதரிசியும் அப்போஸ்தலரும் எல்லோருமே ஊழியர்தான். சுவிசேஷக, போதக மற்றும் மேய்ப்பர் ஊழியத்தைப் பற்றிய கருகலானதை ஆவியானவர் விளக்குவாராக!

இன்றைக்கு சுவிசேஷம் என்றாலே புறஜாதிகளுக்கு இயேசுவைப் பற்றி அறிவித்து அதன் மூலம் கிடைக்கும் ஆத்துமாக்களை ஆவிக்குரிய சபையில் இணைத்து வைப்பவரே சுவிசேஷகர் என்று கிறிஸ்தவ வட்டாரத்தில் பெரும்பாலோர் கருத்து. ஒருவகையில் இதுசரிதான். இந்தப்பணியைச் செய்ய சுவிசேஷகர் என்ற பட்டமுள்ள அழைப்பு கூட தேவையில்லை. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு சாதாரண விசுவாசியும் இந்த ஆத்ம ஆதாய ஊழியத்திற்காவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.இதைத்தான் 1 பேதுரு 2:9ல் அழுத்தம் திருத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது. மத். 28:18,19ல் "உலகமெங்கும் போய் சீஷராக்குங்கள்" என்ற தேவ கட்டளை சுவிசேஷகர் என்ற பட்டமுள்ளவர்களுக்கு மட்டுமல்ல; இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் தான். ஆனால் எபே 4:11-13ல் சொல்லப்பட்ட சுவிசேஷகரின் ஊழியம் இதுவல்ல. சபையாரை பூரண புருஷராக்கவும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்படிக்கு, சபையிலே பக்தி விருத்தியடையவும், சவிசேஷக ஊழியத்தையும் தேவன் ஏற்படுத்தியிருக்கிறார். பலர் சொல்கிறார்கள்:- "சபையாரை பக்திவிருத்திக்கு ஏதுவாக நடத்த மேய்ப்பர் (பாஸ்டர்) போதும்; சுவிசேஷகர் தேவையில்லையே" என்று. இப்படியாய் எண்ணுகிறவர்கள், பேசுகிறவர்கள் வசனத்தை அறியாதவர்கள்; புரியாதவர்கள், தங்களுக்குப் போதிக்கப்பட்ட பாரம்பரிய கருத்திலேயே நிலைநிற்பவர்கள். சுவிசேஷ ஊழியம் சபைக்கு மிகவும் முக்கியமானது. மேய்ப்பராய் இருப்பவர் புல்லுள்ள இடங்களுக்கு அழைத்துச் செல்வார்; அமர்ந்த தண்ணீர்களண்டையில் நடத்துவார். (சங். 23). ஆக புல்லாகிய ஆகாரம் சுவிசேஷகர், போதகர்

போன்ற மற்ற 4 விதமான ஊழியர்களாலும் கிடைக்கும். மேய்ப்பரே அதைக் கொடுக்க திராணியுள்ளவரானால் கர்த்தர் அவரை மேய்ப்பராக மட்டுமல்ல; மற்ற ஊழியராகவும் அபிஷேகம் பண்ணி இருக்கிறார் என்று பொருள். தேவ அழைப்பை பலர் உறுதிப்படுத்திக் கொள்வது இல்லை (2 பேது. 1:10). சுவிசேஷ ஊழியம் என்பது ஒரு நாணயத்தின் இருபக்கம் போல. ஒன்று சபைக்குள்ளே; மற்றொன்று உலகத்திலே. உலகிலே சொல்வது இரட்சிப்பின் சுவிசேஷம். சபையிலே சொல்வது மகிமையின் சுவிசேஷம்; சபையார் இம்மையிலும் மறுமையிலும் மகிமையடைய.

போதகர் என்ற உடனே பலர் பாஸ்டர் என்றுதான் எண்ணுகிறார்கள். இது மகாப் பெரிய தவறு. சபை ஊழியத்திலே போதகர் என்பது 5வது ஊழியம்; மேய்ப்பர் என்பது 4வது ஊழியம். போதகர் என்றால் Teacher (ஆசிரியர்) என்று பொருள். 1 கொரி. 12:8ல் சொல்லப்பட்ட முதல் இரண்டு வரங்களும் கண்டிப்பாய் உடையவர்கள் இவர்கள். போதக அபிஷேகம் இருந்தால் மட்டுமே 3,4,5 வது ஊழியங்களை செய்ய முடியும். இதனால் தான் இந்த மூன்றையும் ஒன்றாக இணைத்து 3வது பட்டியலில் பவுல் 1 கொரி. 12:28ல் எழுதி உள்ளார். இந்த மூன்றையும் இணைத்த அர்த்தத்தில்தான் ரோ. 2:20; 12:7; 1 தீமோ. 2:7; 2 தீமோ. 1:1; 4:3; எபி. 5; 12; யாக். 3:1 போன்ற வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. நான் புறஜாதிகளுக்கு போதகனாக்கப்பட்டேன் என்று பவுல் கூறியது பாஸ்டர் என்ற அர்த்தத்தில் அல்ல என்று முதலில் அறியுங்கள். இயேசுவை போதகர் என்று அவர் வாழ்ந்த காலத்தில் அழைக்கப்பட்டதும் இந்தக் கருத்தில் தான். ஆக, சுவிசேஷகரையும் போதகர் எனலாம் தவறில்லை. போதக ஊழியத்திலே அற்புத அடையாளங்கள் நடக்க வாய்ப்பில்லை; ஆத்மாதான் மறுரூபமாகிறது (ரோ. 12:1) யோவான் ஸ்நானன் இதற்கு உதாரணம். ஆனால் சபையின் சுவிசேஷ ஊழியத்தினால் மழலையாய் இருக்கும் ஆவி வளர்கிறது; வாலிபனாகிறது; வல்லமையைப் பெறுகிறது; அற்புதங்களும் நடக்கின்றன. அதனால் வசனம் உறுதிப்படுகிறது (1 யோ. 2:14; மாற். 16:20). கற்பாறையின் மேல் கட்டப்பட்ட வீடாய் விசுவாசி மாறுகிறான். உலகத்தோற்றம் முதலே தேவ திட்டம் சுவிசேஷ ஊழியம்தான் (1 நாளா. 16:23; சங். 96:2; ஏசா. 40:9). இந்த ஊழியம் செய்ய யாரும் முன்வராததால் அவரே வந்து தொடங்கி வைத்தார் (ஏசா. 41:27, 28; 61:1).

பாஸ்டர், மேய்ப்பர் ஊழியம் என்பது இரட்சிக்கப்பட்ட சபையாரை வழி நடத்துவது ஆகும். எபே. 4:13ல் முதல் மூன்று ஊழியங்களையும் தனித்தனியே காட்டி விட்டு மேய்ப்பராகவும் போதகராகவும் என்று இரண்டையும் ஒன்றாய் எழுதி இருப்பதால், மேய்ப்பர்கள் (பாஸ்டர்கள்) போதக

அபிஷேகம் உடையவர்களாய் கண்டிப்பாய இருக்க வேண்டும். அதனால் தான் தீமோத்தியோவுக்கு எழுதும்போது "போதக சமர்த்தனாய் இரு" என்று பவுல் எழுதுகிறார். போதகம் இல்லாத மேய்ப்பர் ஊழியம் பிரயோஜன மில்லை. ஆக ஊழியர் என்றால் பாஸ்டர் என்று மட்டும் அர்த்தமில்லை என்றும், சபையிலுள்ள 5 வித ஊழியங்கள் செய்வோரும் ஊழியர் என்றும், போதகர் என்றால் பாஸ்டர் என்று மட்டுமே பொருளில்லை என்றும், சுவிசேஷகர் என்றால் வெளியில் பிரசங்கிப்பது மட்டுமல்ல சபையிலும் பக்திவிருத்தக்காய் செய்யும் ஊழியம் என்றும் அறிந்திருக்கிறோம். இன்னும் ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

❖ ❖ ❖

## இயேசு மட்டும் தான் பரலோகம் போனாரா?

"பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோ. 3:13) என்ற வசனத்தை வைத்துக் கொண்டு இயேசு ஒருவர் தான் பரலோகம் போனார் என்று பலர் நம்புகின்றனர். அதே நேரத்தில் 2 ராஜா. 2:11ன்படி எலியா பரலோகம் போனான் என்றும் ஆதி. 5:24 மற்றும் எபி. 11:5ல் ஏனோக்கு பரலோகம் போனான் என்றும் 2 கொரி. 12:2ன்படி பவுலும் பரலோகம் போனான் என்றும் பலர் நம்புகின்றனர். அப்படியானால் யோ. 3:13ல் சொல்லப்பட்ட கருத்து பொய்யா? தேவனுடைய வார்த்தைகள் அனைத்தும் சத்தியமானதன்றோ! இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

யோ. 3:13ல் சொல்லப்பட்ட வார்த்தை இயேசுவின் வார்த்தை அல்ல என்றும் அது யோவானின் மூலம் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை என்றும் முதலில் அறிய வேண்டும். இதற்கு ஒத்ததான நீதி. 30:4ஐயும் வாசியுங்கள். ஏனோக்கு பரலோகம் போனான்; எலியாவும் பரலோகம் போனான்; இயேசுவும் பரலோகம் போனார். இதிலே வித்தியாசம் என்னவென்றால் ஏனோக்கும் எலியாவும் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் (Taken Away) எபிரேய பாஷையிலே Law-Kakh அதாவது to take Away என்றும், முறையே ஆதி. 5:24 மற்றும் 2 ராஜா. 2:11 போன்ற வசனங்களில் வருகின்றன. இதன் பொருள் அவர்கள் தேவனால் எடுத்துக் கொள்ளப் பட்டார்கள் என்பதாகும். நாமும் அதேபோலத்தான் இயேசுவின் இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று 2 தெச. 4:16-16 சொல்லுகின்றது. ஆனால் யோ. 3:13ல் இயேசு பரலோகத்துக்கு ஏறினார்

என்பதற்கு எபிரேயு பாஷையிலே Anabaino, அதாவது "to go up of on power" என்று போடப்பட்டுள்ளது. இதன் பொருள் கிறிஸ்துவாகவே தன்னுடைய வல்லமையினாலே பரலோகத்துக்கு ஏறினார் என்பதாகும். ஆனால் ஏனோக்கு எலியா போன்றோரெல்லாம், தங்களுடைய வல்லமையினால் பரலோகம் போகவில்லை; தேவனால் தான் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். இதிலிருந்து நாமறிவது என்ன? குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அல்லாமல் தன்னுடைய தெய்வீக வல்லமையினாலே பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை. அல்லேலூயா! இதனால் தான் இவரை தேவனென்று சொல்ல முடிகிறது. ஆனால் ஏனோக்கும் எலியாவும் தேனவனல்லவே! அவர்கள் மனிதர்கள்தானே! எனவே அவர்கள் தங்கள் சொந்த பலத்தால் பரலோகம் போகவில்லை என்றும் தேவனே எடுத்துக் கொண்டார் என்றும் அறிகிறோம். ஆனால் இயேசுவோ, தானே பரலோகம் ஏறினார் என்றும், இதனாலே இவர் தேவன் என்று நிரூபணமாகிறார் என்றும் அறிகிறோம். தேவனுக்கே மகிமையுண்டாவதாக! இப்படியாய் இயேசுவைப் போல் தானே பரலோகம் ஏறினவனோ இறங்கினவனோ ஒருவருமில்லை என யோ 3:13ன் மூலம் தேவன் வெளிப்படுத்துகிறார். இந்த கருகலான சத்தியத்தை உலகறியச் செய்யும் தேவனுக்கே மகிமை. (எலியாவும், ஏனோக்கும் எடுத்துக் கொள்ளப்பட்டபின் எங்கே இருக்கிறார்கள் என வெளிப்பாடு இல்லை. ஆனால் இயேசுவோ, பரலோகில் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார்.)

❖ ❖ ❖

## விபச்சார ஸ்திரியின் மேல் இயேசு ஏன் கல்லெறியவில்லை?

நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவே வந்த இயேசு (மத். 5:17) ஏன் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சொன்னபடி விபச்சார ஸ்திரியின் மேல் கல்லெறியவில்லை? அவரும் பாவமுள்ளவரா? அல்லது நியாயப் பிரமாணத்துக்கு எதிராளியா? இப்படிப் பல கேள்விகள் எழுவதுண்டு. ஆவியானவர் தாமே விளக்குவாராக.

என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் என்று இயேசுவே அதிகாரமாய் அறிக்கை விடுகிறார் (யோ 8:46) அவரை விசாரித்த பிலாத்தும் அவர் மேல் குற்றம் ஏதும் இல்லை என்கிறான். காட்டிக் கொடுத்த யூதாசும் மாசற்ற ஆட்டுக்குட்டி, என்று சொல்லி, மனங்கசந்து

நான்று கொண்டு செத்தான். நூற்றுக்கு அதிபதியும் இவர் பாவமில்லாதவர் என்கிறான் (லூக். 23:47) ஆக இயேசு பாவமில்லாதவர். ஆமென். அவருடைய பிறப்பே இதற்கு அத்தாட்சி. பாவ ஆதாம் சாயலின் இரத்தத்தில் அவர் பிறக்கவில்லையே! லேவி. 20:10 உபா. 22:22; எண். 5 போன்றவற்றின்படி, யோ.8ல் கையும் மெய்யுமாய் பிடிப்பட்ட விபச்சார ஸ்திரி கல்லெறிந்து கொல்லப்பட்டே ஆகவேண்டும். பலர் சொல்லுகிறார்கள் அது மோசேயின் பிரமாணம் என்று. மோசேயின் பிரமாணத்தைக் கொடுத்தவரும் நம் தேவனாகிய கர்த்தர் தானே! தவறாய் பிரமாணத்தை கொடுத்திருப்பாரா? அல்லது கொடுத்த பிரமாணத்திற்கு எதிராய் செயல்படுவாரா? மோசேயின் பிரமாணத்திற்கு எதிராய் செயல்பட்டால் இவரை சிலுவையிலறைந்து கொன்றது சரியாயிருக்கும். தவறாய் பிரமாணம் கொடுத்திருந்தால் இவர் தேவனாய் இருக்கமாட்டாரே!

“உங்களில் பாவம் செய்யாதவர்களல்ல; பாவமில்லாதவர்கள் கல்லெறியட்டும்” என்று சொன்ன இயேசுவின் வார்த்தையைக் கேட்ட, ஸ்திரியை பிடித்து வந்த அத்தனை பேருமே மனச்சாட்சியினால் குத்தப்பட்டு ஆதாமின் பாவ சாயலினாலே பாவிகள் என்ற எண்ணத்தோடு கல்லெறியாமல் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர். (ரோ. 3:10; 1 யோ. 1:8). இயேசு தரையிலே எழுதியது ஒருவேளை அவர்கள் பார்வைக்கு தங்கள் பாவங்களை வெளிப்படுத்தியதாகவும் இருந்திருக்கலாம். மட்டுமல்ல... அவர்கள் பாவ ஜாதியில் பிறந்ததால் பாவமுள்ளவர்கள். “நியாயப் பிரமாணமானது, தண்டனை கொடுப்பதற்காக மட்டுமே அல்ல; எல்லோரும் நியாயமாயிருந்து, பாவமில்லாதவன் (பாவம் செய்யாதவன் அல்ல) தண்டனை கொடுக்கட்டும் என்பதற்குதான்” தேவன் தந்தார். நமக்குத் தெரியும் ரோ. 3:23; 2 கொரி. 6:11 போன்ற வசனப்படியல்லாமல் ஒருவனும் நீதிமானில்லை; பாவமில்லாதவனில்லை. ஆபிரகாம் விசுவாசத்தி னாலல்லவோ நீதிமான்! எனவேதான் சொன்னார்:- உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல்லெறியக்கடவன் என்று. இயேசு கீழே குனிந்து எழுதிக் கொண்டிருக்கிறார். அந்த ஸ்திரியை கல்லெறிய வந்தவர்கள் தங்களை உணர்ந்து கடந்து போன உடன் இந்த ஸ்திரியும் தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஓடியிருக்கலாமல்லவா!

அவள் ஓடவில்லை. அந்த ஸ்திரி நடுவே நின்றாள் என்று யோ. 8:9 சொல்கின்றது. நடுவே என்றால் யார் நடுவே நின்றாள்? ஒரு புறம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (பூமியில்) மறுபுறம் பிதாவாகிய தேவன் (பரலோகில்) இருவருக்கும் நடுவே அவள் ஓடாமல் நிற்கிறாள். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவின் மேல் அவளுக்கு விசுவாசம் வந்திருக்கிறது என்று பொருள்.

விசுவாச ஓட்டத்தை துவக்குகிறவர் இவர்தானே! (எபி. 12:1). ஒருவனும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்று இயேசு கேட்ட உடனே அவள் சொன்ன பதிலைப் பாருங்கள்: “இல்லை ஆண்டவரே” (Lord) (யோ. 8:11) இயேசுவை Lord என்று (Adonai) சொல்கிறாள். அவளுக்கு இவர் மேல் விசுவாசம் அதிகமாயிற்று. வேறொரு ஸ்திரியாயிருந்திருந்தால், “என்னைப் பிடித்து கொண்டு வந்தவரெல்லாம் பாவிகள்; வீணே என் மேல் குற்றம் சுமத்துகிறார்கள்; பாவிகளானதால் ஓடிவிட்டார்கள்” என்றிருப்பாள். இவளோ அப்படியில்லாமல் தான் செய்த பாவத்தை ஒப்புக் கொண்டு மோசேயின் பிரமாணத்தையும் ஏற்றுக் கொண்டவளாய்,. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவரருகில் பாவியாய் நிற்கிறாள். யோ. 3:6; ரோ. 5:8; 1 தீமோ. 1:15; ரோ. 1:16ன்படி நாம் பாவியாயிருக்கையில்தான் இயேசு பாவிகளுக்காய் வந்தார். இப்படிப்பட்ட விசுவாசம் அவளுக்கு இருந்திருக்க வேண்டும். அதனால்தான்: Lord (யேகோவா) என்று அழைக்கிறாள்.

தேவன் எப்போதுமே உள்ளத்தைப் பார்க்கிறவர். மனந்திரும்பி நிற்கும் எந்தப் பாவியையும் சேர்த்துக் கொள்பவர்; அவர் மறக்கிறவர். மன்னிக்கிறார் (1 யோ. 1:9; லூக். 7:37-50) சிலுவையில் தொங்கும்போது கூட மன்னிப்பை உண்டாக்கியவர் இந்த இயேசு. அவளின் விசுவாசத்தைக் கண்டு “நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை, நீ போ இனிப் பாவம் செய்யாதே” என்றார் (யோ. 8:11). இந்த வசனத்தை ஆதிகாலத்தில் பல இடங்களில் யாரும் வாசிப்பதில்லை. இவர் ஆக்கினைத்தீர்ப்பு செய்யாததால் விபச்சாரம் செய்வது சரி என்பது போல ஆகிவிடும் என்று அறியாமையினாலே பயந்து அப்படிச் செய்தனர். நாட்கள் போகப் போக சிலர் இந்த வசனத்தையே எடுத்து விட்டனர். விபச்சாரத்தை வன்மையாய்க் கண்டித்தவரை (மத். 5:28; 32; 19:9;) இன்னும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. (ஓசி. 4:6). இனி பாவம் செய்யாதே என்றால் என்ன பொருள்? விபச்சாரத்தை அவர் வெறுக்கிறார் என்று பொருளல்லவா! ஆக நம் தேவன் சரீர விபச்சாரமானாலும் ஆவிக்குரிய விபச்சாரமானாலும், அன்றும் இன்றும் என்றும் வெறுக்கிறவர். மனமாறி அவரை விசுவாசித்து அவரிடம் நிற்கும் யாரையும் அவர் புறம்பே தள்ளாமல் அவர்களுக்கு ஆறுதலையும் தேறுதலையும் கொடுத்து தொடர்ந்து நல்வழியில் நடக்க வழி நடத்துகிறார். ஆமென். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தேவனை தெரிந்தால் மட்டும் போதாது; தேவனைப் பற்றி அவரின் குணாதிசயங்கள் மற்றும் உள்ளந்திரியங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் சங்காரமாக மாட்டோம்.

❖ ❖ ❖

# வார்த்தையாகிய தேவன் எப்போது குமாரனானார்? இயேசுவானார்? கிறிஸ்துவானார்? கர்த்தரானார்?

"ஆதியிலே வார்த்தை இருந்தது; இந்த வார்த்தை தேவனோடிருந்தது; தேவனாயிருந்தது" (யோ 1:1) ஆக "வார்த்தை" தேவன்தான் என அறிகிறோம். தேவன் என்பதற்கு "God - LORD - Lord" என்று ஆங்கில வார்த்தைகள் வேதத்தில் உள்ளன. அதை மூல பாஷையில் முறையே ஏலோகீம் (ஆதி. 1:1) யோகோவா (ஆதி. 2:4; யாத் 34:6), "அதோனை" (ஆதி. 15:2) என்று உள்ளது. தமிழில் முறையே "தேவன்", "யேகோவா" அல்லது கர்த்தர், ஆண்டவர் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இம்மூன்று வார்த்தைகளுமே மூன்று ஆள் தத்துவமாய் இருக்கும் ஒரே தேவனையே குறிக்கின்றன (உபா. 6:4 in English); இன்னும் தெளிவாகச் சொன்னால் இந்த மூன்று வார்த்தைகளுமே, தேவன், வார்த்தை, ஆவியானவர் ஆகிய மூவரையுமே குறிக்கும். எனவே தான் வார்த்தையான வரை தேவன் என்றும், கர்த்தர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறோம், ஆக, வார்த்தையானவர் தேவன் ஸ்தானத்தில் இருப்பதாலேயே அவர் கர்த்தர் எனப்படுகிறார். ஆமென். இப்படி அழைக்கிற வார்த்தைகளெல்லாம் காரணப் பெயர்கள் தானே ஒழிய, நமக்கு பெயர்கள் வைப்பது போல் வைக்கப்பட்ட பெயர்கள் அல்ல. நீதி. 30:4ல் சொன்னபடி இம்மூவருக்கும் பெயர்களே கிடையாது. மூன்று ஆள் தத்துவமாகிய ஒரே தேவனேயன்றி வேறே தேவன் இல்லாதபடியினால் (யாத். 20:3) நமக்கு இருப்பது போல் தனித்தனி பெயர்கள் தேவையில்லை என அறியலாம். ஆதியிலேயே வார்த்தையாகிய கர்த்தர் எப்போது குமாரனானார்? கிறிஸ்துவானார்? இயேசுவானார்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

இதை அறியுமுன்னே இன்னொரு சத்தியத்தை அறிய வாஞ்சிக்கிறேன். அதாவது, வார்த்யையாகிய கர்த்தர் குமாரனாக்கப்பட்ட போதுதான், பிதாவகிய தேவனுக்கு பிதா (தந்தை, அப்பா) என்ற காரணப்பெயர் உண்டாயிற்று. அல்லேலூயா! வார்த்தையாகிய தேவன், "உலகத்தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" என்று அழைக்கப்படுகிறார் (வெளி. 13:8). ஆதாமாகிய மனிதன் உருவாகும் முன்னமே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார். மனிதன் உருவாகும் முன்னமே, ஆதிமனிதன் வீழ்ந்து போவான் என்று தேவன் முன்னறிந்து (Fore Knowledge) மனுக்குலத்தை இரட்சிக்க திட்டம் போட்டு, அதிலே வார்த்தையாகிய கர்த்தர், அடிக்கப்பட்டு, பாவமன்னிப்புக்கென்று இரத்தம் சிந்த ஆட்டுக்குடியாக, தேவ சன்னிதானத்திலே கருதப்பட்டார். இந்த

காரியத்துக்கு வார்த்தையாகிய கர்த்தரே வருகிறேன் என்று பரலோகிலேயே ஒப்புக் கொடுத்தார் (சங். 40:6-8 in sept. எபி. 10:5-7) இதற்காகவே சரீரம் ஒன்று பரலோகிலேயே ஏற்பாடு பண்ணி பூமியிலே பிறப்பிக்கப் பண்ணப்பட்டது. இப்படி இவர் பிறப்பிக்கப்படப் போவதால்தான், இவரை குமாரன் என்றும், மகன் என்றும் காரணப்பெயரால் பரலோகிலேயே அழைக்கப்பட்டார். உலகத்தின்மேல் தேவனுக்குள்ள அன்பினாலே, வார்த்தையாகிய கர்த்தரை பிறப்பிக்கப் பண்ணி குமாரனாக்கினார் (யோ. 3:16) இந்த குமாரனைப் பற்றித்தான் ஆதி. 3:15 முதலே தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தையாகிய கர்த்தர், மனுஷகுமாரனாய்ப் பிறப்பதற்கு முன்பே, இவரை குமாரன் என்றே வேதத்தில் பல இடங்களில் அழைக்கப்டுகிறது (சங். 2:7; ஏசா. 9:6; 7:14; ஓசி. 11:1) இவர் என் நேசகுமாரன் என்று தேவனே இவரைக் குறித்து சாட்சி கொடுத்தாலும் (மாற். 1:11), அவர் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த பின்தான் (மனுஷரின் பாவத்தை அழித்து நீதியின் சூரியனாய் எழுந்த பின் தான் - அதாவது பரலோக திட்டம் நிறைவேறின பின்தான்) அவர் தேவகுமாரனென்று பலமாய் ரூபிக்கப்பட்டார் (ரோ. 1:5) அல்லேலூயா!

இந்த வார்த்தையாகிய குமாரனாகிய கர்த்தர் பூமியில் பிறந்த போதுதான், அவருக்கு இயேசு என்னும் நாமம் இடப்பட்டது. ஆக மனிதனான, வார்த்தையாகிய கர்த்தர் (யோ. 1:14), இயேசு என்ற பெயரில் பூமியில் $33^1/_2$ ஆண்டுகள் வாழ்ந்தார் என அறிகிறோம். இது உலகப் பெயரானாலும், தேவன் தூதன் மூலமாய் சொல்லி இட்ட பெயரென்பதால் இதிலே வல்லமையிருக்கிறது; மகிமை இருக்கிறது; இரட்சிப்பு இருக்கிறது; அதிகாரம் இருக்கிறது (அப். 4:12) இந்த மனஷனான கர்த்தராகிய இயேசுவைத்தான், தேவன், ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார் (அப். 2:36). எப்போது? மூலபாஷையில் கிறிஸ்துவுக்கு christos என்று உள்ளது. கிறிஸ்டோஸ் என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். "அபிஷேகம் என்றால் அந்நிய பாஷை பேசி பரிசுத்த ஆவியைப் பெறுவதல்ல; ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காய் Direct பண்ணுவது; வழிநடத்துவது; திடப்படுத்துவது என்பதாகும். கர்த்தராகிய இயேசு கன்னியின் வயிற்றில் பிறந்து 30 வருடங்களுக்குப் பிறகுதான் கிறிஸ்துவானார். அதாவது அபிஷேகம் பண்ணப்பட்டார். எப்போது? பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் வரும் போது (அதாவது யோர்தான் நதிக்கரையிலே மத். 3:16; யோ. 3:34; ஏசா. 11:1; 42:1-5; 61:1; அப். 10:38). (பரிசுத்த ஆவியானவர் நம்மோடு நமக்குள் நம்மேல் என்ற மூன்று அனுபவங்களைப் பற்றி "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆசிரியரின் புத்தகத்தில் உள்ள "அந்நிய

பாஷையா? அடையாளமா?" என்ற செய்தியை வாசித்தறியுங்கள்) கிறிஸ்டோஸ் என்ற கிரேக்க வார்த்தைக்கான எபிரேய பதம்தான் மேசியா என்பதாகும். இது தானி. 9:24-26; யோ. 1:41; 4:25 போன்ற இடங்களில் வருகின்றது.

ஆக வார்த்தையாகிய தேவன், கர்த்தராகவே பரலோகில் இருந்தார் என்றும் மனுக்குலத்தை இரட்சிக்க பரலோகில் இட்ட திட்டத்தின்படி அப்போதே குமாரனாக்கப்பட்டார் என்றும், பூமியிலே பிறந்த போது இயேசு எனப் பெயரிடப்பட்டார் என்றும், மீட்கும் பணியை ஆரம்பிக்கும் போது அதற்காய் அபிஷேகம் பண்ணப்பட்டு கிறிஸ்து (மேசியா) வானார் என்று அறிகிறோம். இந்த இயேசு, ராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தவாய் பூமியை நியாயந்தீர்க்க வரப்போகிறார். அதற்கு முன்னே அவரது இரகசிய வருகையிலே சபையாக எடுத்துக் கொள்ளப்பட நாம் ஆயத்தமாவோம்! மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துவோம்!!

❖ ❖ ❖

## தேவனால் பிறந்தவன் பாவம் செய்வானா?

1 யோ. 3:9ன் படி தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் என்று உள்ளது. 1 யோ 1:8,9ன் படி நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு பெறவேண்டும் என்று உள்ளது. இதன் படி பார்த்தால் தேவனால் பிறந்தவன் பாவம் செய்கிறான் என்று தெரிகிறது. அப்படியானால் 1 யோ. 3:9 பொய்யாகுமா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

நான் இதற்கு முன்பெல்லாம் எழுதியிருக்கிறபடி தேவனால் பிறந்தவன் ஆவியிலே தான் பிறக்கிறான்; 2 கொரி. 5:17ன் படி ஆவியே புது சிருஷ்டியாகிறது. அது வரைக்கும் பிசாசின் ஆவியோடு தொடர்பு கொண்டிருந்த மனித ஆவி, தேவ ஆவியின் பக்கம் திரும்பி குழந்தைபோல பாவமில்லாதிருக்கிறது (see எசே. 36:25-27; எபி. 8:10) இந்த குழந்தையாகிய ஆவிக்கு வசனமாகிய ஞானப்பால் கொடுத்து வளர்க்கப்படுகிறது (1 பேது. 2:3) வளரவளர போஜனம் கொடுக்கப்படுகிறது (1 கொரி. 3:2) ஆவி வளர்ந்தால் ஆத்மா (மனம் - சிந்தை), ஆவிக்கு கட்டுப்பட்டிருக்கும். வசனப்படி நடக்க சரீரத்திற்கு கட்டளை கொடுக்கும். "என் ஆத்மாவே! கர்த்தரை தோத்தரி" என்பதன் பொருள் இது தான். அதாவது புதிதாய்ப் பிறந்த ஆவி, ஆத்மாவுக்கு "கர்த்தரை தோத்தரி" என்று கூறுவதன் பொருள் இது தான். அதாவது புதிதாய்ப் பிறந்த ஆவி, ஆத்மாவுக்கு கட்டளை

கொடுக்கிறது. இப்படி கட்டளை கொடுப்பவனே ஆவிக்குரியவன். இரட்சிக்கப்பட்ட ஆவி, சரியான வளர்ச்சியில்லாதிருந்தால், ஆத்மா மாம்சீகம் சொல்கிறபடி நடக்க ஆரம்பிக்கும்; பாவத்தைப் பிறப்பிக்கும். அதனால் தான் ஆவியிலே பெலன் வேண்டும்; பரிசுத்த ஆவி வேண்டும்; வல்லமை வேண்டும் என்று சொல்லுகிறோம். பாவ சாயலான ஆவி மட்டுமே இரட்சிப்பின் போது தேவசாயலாய் மாற்றப்பட்டது (ஆனாலும் பிறந்த குழந்தை நிலை தான்). ஆத்மாவிலும் சரீரத்திலும் தேவ சாயல் வராதபட்சத்தில், மறுபடியும் ஆவியிலே பிறந்தவன் - அதாவது இரட்சிக்கப்பட்டவன் பாவம் செய்ய வாய்ப்புண்டே! இப்படி அறிந்தோ அறியாமலோ பிசாசின் உலகில் வாழும் நாம் பாவம் செய்தால், அறிக்கையிட்டு மன்னிப்புப் பெற வேண்டும்; மறக்க வேண்டும் என்று 1 யோ 1:8,9 சொல்லப்பட்டுள்ளது.

1 யோ. 3:9ன் அர்த்தமென்ன? மூல பாஷையில், தேவனால் பிறந்த எவனும் பாவத்தில் நிலைத்திரான்; பாவத்தில் ஒட்டியிரான் (He will not stick on sin or continue to sin) என்று உள்ளது. ஏனென்றால் தேவனின் வசனமாகிய வித்து அவனுக்குள் இருக்கிறதே (1 பேது. 1:23) தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவம் செய்தே ஒளியை விட்டு இருளுக்குள் போகவே மாட்டான். வெள்ளியையும் பொன்னையும் புடமிடுவதுபோல் தேவன் வார்த்தையால் மறுபடியும் பிறந்த இருதயமாகிய ஆவியை புடமிடுகிறார் (நீதி. 17:2; சங் 105:19). இதனால் தேவனால் பிறந்தவன் திருந்துகிறான். தொடர்ந்து பாவம் செய்யான். இதே கருத்தில் தான் நீதி. 24:16ல் "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்" என்று உள்ளது; அவன் பாவத்தில் நிலைத்திரான். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ எப்படி இருக்கிறாய்! நீ தேவனால் மறுபடியும் பிறந்திருந்தால் நிச்சயம் தொடர்ந்து பாவம் செய்யமாட்டாய். இன்றே இரத்தத்தால் கழுவப்பட்டாய் என்ற வசனத்தை விசுவாசித்து கழுவப்படு. இயேசு சீக்கிரம் வருகிறார் ஆயத்தமாவோம் ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## பரலோக ராஜ்யமும், தேவனுடைய ராஜ்யமும், கிறிஸ்தவ சபையும் ஒன்றா?

வேதத்திலே பரலோக ராஜ்யம் (Kingdom of Heaven) என்று 33 முறையும், தேவனுடைய ராஜ்யம் (kingdom of God) என்று 72 முறையும் வருகின்றது. கிறிஸ்தவ சபை (எக்ளீசியா) தேவனின் இரத்தத்தினால், சிலுவை

மரணத்திலே உருவாக்கப்பட்டது (அப். 20:28; எபே. 2:14-16). இது இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையிலே எடுப்பட்டுப் போகும். இந்த மூன்றும் ஒன்றுதானா? ஆவியானவர் தாமே விளக்குவாராக!

மத். 19:24ன் படி தேவனுடைய ராஜ்யம் ஒன்று உள்ளது என அறிகிறோம். இதன் தலைமைச் செயலகம் பரலோகில் உள்ளது. (சங். 103:19; 10:16). இதற்கு தேவனே ஆளுநர். வானம் அவருக்கு சிங்காசனம்; பூமி அவருக்கு பாதபடி. வானத்துக்கும், பூமிக்கும் அண்ட சராசரங்களுக்கும் அவரே ராஜா. இது நித்திய நித்தியமாய் இருக்கின்ற ராஜ்யம். பரலோக ராஜ்யம் என்பது இயேசுவின் தலைமையில் இந்த பூமியில் நடைபெறக்கூடிய ராஜ்யம். இதன் தலைமைச் செயலகம் எருசலேம். இதில் தான் இஸ்ரவேலர்கள் ஆளுவார்கள். இந்த ஆளுகை வேண்டும் என்று தானே இஸ்ரவேலர்கள் பாபிலோன் சிறைப்பிடிப்பு முதல் இன்று வரை ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் (அப். 1:6,7). இந்த பரலோக ராஜ்யம்தான் சமீபமாய் இருக்கிறது என்று யோவான் ஸ்நானனும் இயேசுவும் பிரசங்கித்தார்கள் (மத். 3:2; 4:17). இந்த இராஜ்யத்தை இயேசு தான் ஸ்தாபிப்பார் என்று வேதம் ஆதிமுதல் பறைசாற்றுகிறது (2 சாமு. 7:8-17; சக. 12:8; லூக். 1:31-33). இந்த இராஜ்யத்தை ஏற்றுக் கொள்ள மனதின்றி யூதராஜாவாகிய இயேசுவை யூதர்கள் புறம்பே தள்ளினார்கள் (மத். 2:2; 16:21). இப்படி புறம்பே தள்ளுவார்கள் என்று முன் கூட்டி அறிந்து இயேசு (சங். 22; ஏசா. 53) அன்று வரை மறைக்கப்பட்டிருந்த பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினார் (மத். 13:11). இந்த ராஜ்யம் இயேசுவின் மரணத்திற்கும், அவரின் மகிமையான, பகிரங்க வருகைக்கும் இடையில் நிழலாட்ட ரீதியில் கட்டப்படும் (மத். 13:1-50). இயேசு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட கிறிஸ்தவ சபையும் (மத். 16:18) இந்த நிழலாட்டமான பரலோக ராஜ்யத்தில் இணைந்திருக்கிறது. மேசியாவின் இராஜ்ய பாரத்துக்காய் காத்திருக்கும் இஸ்ரேலரும் இதில் இணைந்திருக்கின்றனர். இந்த நிழலாகிய பரலோக ராஜ்யம் பூமியிலே நிஜமாகவே (Materialise) கட்டப்படும் போதும் சரி, இப்போதும் சரி, மேசியாவாகிய இயேசு தான் ஆண்டவர் - ராஜா - Lord என்று சபையாராகிய நாம் விசுவாசிக்கிறோம். இஸ்ரவேலரில் ஒரு பங்கு கடினமாய் இருப்பதால் அவர்கள் விசுவாசிக்கவில்லை (ரோ. 11:25). இந்த நிழலாகிய ராஜ்யம், நன்மை – தீமை; கோதுமைப்பயிர் – களைகள்; நல்ல மீன் – கெட்டமீன்; புத்தியுள்ள கன்னிகைகள் – புத்தியற்ற கன்னிகைகள் ஆகியவைகளின் கலப்பாக (Mixture) இருக்கிறது. 12 உவமைகளால் இயேசு கிறிஸ்து இதை விளக்குகிறார்.

இந்த ஆவிக்குரிய ரீதியான பரலோக ராஜ்யத்தில், யோ. 3:3,5ன் படியான ஆவிக்குரியவர்கள் அத்தனை பேரும் உறுப்பினர்கள். ஜலமாகிய

வார்த்தையினால் பரிசுத்த ஆவியைக் கொண்டு மறுபடியும் ஆவியாகிய இருதயத்தில் பிறந்திருப்பவர்கள்தான் இதில் பங்கு பெற தகுதி உள்ளவர்கள், அதன்படி பார்க்கும்போது பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், அதற்கு முன் ஆதாம் வரை இருந்த நீதிமான்கள் மற்றும் புதிய ஏற்பாட்டு சபையார் இதில் அடங்குவர். இதைத்தான் மத். 6:33ல் இயேசு வலியுறுத்துகிறார். கறைதிரை இல்லா பூரண புருஷராகிய சபையார் (எபே. 5:27) இயேசுவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவர்; கிறிஸ்துவுக்குள் மரித்த, சபைக்கு முன்னான பரிசுத்தவான்களும் எடுத்துக் கொள்ளப்படுவர். இந்த கூட்டம் ஒலிவமலையில் இயேசுவோடு கூட இறங்கும் (சக. 14:4); நிழலாட்டமான பரலோக ராஜ்யம் அதுவரை உலகில் ஜீவிக்கின்ற இஸ்ரேலரோடும் இருக்கும். இந்த ராஜ்யத்தின் ஆண்டவராகிய இயேசு, ராஜாதி ராஜாவாய் கர்த்தாதி கர்த்தாவாய் வந்து தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து 1000 வருடம் ஆட்சி செய்வார். இந்த பூமியில் நடக்கும் இந்த நிஜமான ஆட்சி தான் பரலோக ராஜ்யத்தின் நிறைவேறுதல். (மத். 25:30-37; அப். 15:14-17; வெளி. 20:1-10). நிழலாட்டமான பரலோக ராஜ்யத்தில் இருந்த இஸ்ரேலர் தங்கள் தேசத்தையும் (ஆதி. 15:18-21). கிறிஸ்தவ சபையார், உலகம் முழுவதையும் அரசாளுவர். **இந்த ராஜ்யம் தான் உலகம் உண்டானது முதல் தேவனால் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யம்** (மத். 25:34). நிஜமானது வரும்போது நன்மை மட்டுமே நிலைத்திருக்கும்; கோதுமை மட்டுமே இடம் பெறும்; புத்தியுள்ள கன்னிகைகள் தான் பங்கேற்பர்; நல்ல மீன்தான் சேர்ந்துவிடும்.

பூமியிலே தெய்வீக அதிகாரம் நிலை நிறுத்தப்பட்டு, 1000 ஆண்டுகள் முடிந்து, இந்த நிஜமான பரலோக ராஜ்யத்தை - மேசியாவின் வெளிப்படையான ராஜ்யத்தை, பிதாவிடம் இயேசு ஒப்படைப்பார் (1 கொரி. 15:24) அப்போது தேவனும் ஆட்டுக்குட்டி யானவரும் இருக்கின்ற சிம்மாசனத்தின் கீழ் (வெளி. 22:1). தேவனுடைய ராஜ்யம் என்ற பெயரில், புதிய வானம், புதிய பூமியில் ஸ்தாபிக்கப்படும்; இயேசுவின் தலைமையினலான சபையாய், நிழலாட்டமான பரலோக ராஜ்யத்தில் அங்கம் வகிக்கும் நாம், இதிலே பூரணப்பட்டால் தான், நிஜமான பரலோக ராஜ்யத்திலும், அதாவது பிதாவாகிய தேவனின் ராஜ்யத்திலும் பிரவேசிக்க முடியும். ஆக, யோ. 3:3,5 மிக மிக இன்றியமையாதது ஆகும். இப்போதுள்ள பரலோக ராஜ்ய இரகசியம் நமக்கு மாத்திரமே இயேசுவால் வெளிப்படுத்தப் பட்டதற்கு தோத்திரம்! தோத்திரம்!

❖ ❖ ❖

# கிறிஸ்தவனுக்கு ஓய்வு

ஓய்வு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் கண்டிப்பாய் தேவை. இதைத் தான் நம் வேதம் அதிகமாய் வலியுறுத்துகிறது. ஓய்வில்லாமல் உழைத்து, சீக்கிரத்திலேயே ஜீவனை விட்ட பரிசுத்தவான்களை நாம் கண்கூடாக கண்டிருக்கிறோம். வேதத்திலே கீழ்க்கண்ட ஓய்வுகள் சொல்லப்பட்டுள்ளன.

1. ஆதி. 2:1-4ல் சொல்லப்பட்ட ஓய்வு. இது தேவனுக்குரிய ஓய்வு; ஏழாம் நாளில் தேவன் படைப்பிலிருந்து அனுபவித்த ஓய்வு. இது மனிதனுக்கு அல்ல.
2. பத்துக் கற்பனையிலே சொல்லப்பட்ட 4ம் கற்பனையில் வரும் ஓய்வு (யாத். 20:8-11) இது 7ம் நாளில், அதாவது தேவன் படைப்பிலிருந்து ஓய்ந்திருந்த நாளில் ஓய்வு எடுக்க வேண்டுமென்று இஸ்ரேலருக்கு கொடுக்கப்பட்ட ஓய்வு (உபா. 5:15; யாத். 31:13; எசே. 20:12,20,24).
3. இஸ்ரேல் மக்களுக்கு, பாலும் தேனும் ஓடுகின்ற கானான் தேசத்தில் தேவன் கொடுக்க இருந்த ஓய்வு (எபி. 3:16-19). இவைகள் எல்லாமே சரீர இளைப்பாறுதல்.

இவைகளை அல்லாமல், தாவீதும், பவுலும் கிறிஸ்தவனுக்குள்ள வேறொரு வகையான ஓய்வைக்குறித்து சொல்லியிருக்கிறார்கள் (எபி. 4:7-10) அது இரண்டு பிரிவாய் இருக்கிறது. **ஒன்று** - கிறிஸ்துவுக்குள்ளே, கிறிஸ்துவின் வார்த்தைக்குள்ளே நாம் பெறுகிற இளைப்பாறுதல்; ஓய்வு (மத். 11:28:30; எபி. 4:3). இந்த இளைப்பாறுதல் ஆத்ம இளைப்பாறுதல், சிந்தனையின் பிறப்பிடமான ஆத்மாவிலே ஒரு கிறிஸ்தவனுக்கு இளைப்பாறுதல், ஓய்வு கிடைத்து விட்டாலே அவன் பூரிப்படைகிறான். அவனுடைய ஆத்மா செழித்து வாழ்கிறது. இதனால் அவன் எல்லாவற்றிலும் வாழ்ந்து செழிப்பாயும், சுகமாயும் இருக்கிறான். (3 யோ. 2), ஜீவத்தண்ணீர்தான் இந்த இளைப்பாறுதலுக்கு ஆகாரம்; ஔஷதம். **இரண்டு** - முதல் இளைப்பாறுதலில் உள்ள கிறிஸ்தவனுக்கு மறுமையிலே நித்திய நித்தியமான இளைப்பாறுதல் - ஓய்வு உண்டு (எபி. 3:11, 18; 4:1,5,9 - 11; வெளி. 14:13; தானி. 12:13) அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! மத் 11:28ன் படி இளைப்பாறுதலைப் பெற்றுவிட்டாயா? அதிலே நிலைத்திரு. நித்திய இளைப்பாறுதல் நிச்சயம் உண்டு. ஆமென்.

❖ ❖ ❖

# கிறிஸ்தவன் ஆசரிக்க வேண்டிய பண்டிகை

இன்றைக்கு எங்குபார்த்தாலும் கிறிஸ்மஸ், புத்தாண்டு என்று பண்டிகைகள் கோலாகமாக கொண்டாடப்படுகின்றன. ஆவிக்குரிய சபை என்று மார்தட்டிச் சொல்வோரும் இதில் விதிவிலக்கில்லை. நியாயப் பிரமாணத்தில் தேவன் எட்டு விதமான பண்டிகைகளை 7ம் நாளாகிய சனிக்கிழமை ஓய்வு நாள் பண்டிகையும் சேர்த்து ஆசரிக்க கட்டளை கொடுத்தார் (லேவி. 23). இந்த பண்டிகைகள் எல்லாம் வருங்காரியத்துக்கு நிழலாயிருந்தன. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது. எனவே நிஜம் வந்தபின்னே நிழல் தேவையில்லை என்று கொலோ. 2:16-17ன்படி நாம் ஆசரிப்பதில்லை. அப்படியிருக்க இந்த கிறிஸ்மஸ், புத்தாண்டு பண்டிகைகள் எங்கிருந்து வந்தன? ஆதி அப்போஸ்தலர்கள் ஆசரிக்கவே இல்லையே! ஆண்டவர் இயேசுகிறிஸ்து கூட தன் பிறந்தநாளை ஆசரிக்க கட்டளை கொடுக்கவில்லையே! உலகில் மனிதனாக அவர் பிறந்தது தான் அவர் ஜீவியத்தின் முதல் நாள் என்றால் அந்த நாளை ஆசரிக்க சொல்லியிருப்பாரே! அவரது ஜீவியம் நித்திய ஜீவியம்; அவர் நித்திய பிதா (ஏசா. 9:6) ஆமென்! மனிதனுக்கு அவன் பிறந்தநாள் தான் ஜீவியத்தின் முதல் நாள்; எனவே அவன் அதை ஆசரிக்கிறான். மட்டுமல்ல மரணத்தோடு இயேசுகிறிஸ்துவுக்கு உலக வாழ்வு முடிந்ததென்றால் அவரின் பிறந்தநாள் ஆசரிப்பு முக்கியமானதுதான். அப்படியில்லையே! அவர் என்றென்றும் உலகை ஆளும் ஆண்டவராயிற்றே! ஆதியும் அந்தமும் இல்லாதவர் அவர் (வெளி. 1:8) அல்லேலூயா! அப்படியானால் கிறிஸ்தவனுக்கு பண்டிகையே கிடையாதா? மகிழ்ச்சியாகவே இருக்க முடியாதா? என்றைக்கு துக்கமும்தானா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

1 கொரி. 5:6,7 வசனங்களை வாசியுங்கள். "பண்டிகைகளை ஆசரிக்கக்கடவோம்" என்று புதிய ஏற்பாட்டு சபையாருக்கும் பவுல் எழுதியிருக்கிறானே அது எந்தப் பண்டிகை? பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியானார் என்றும், புளிப்பில்லாத அப்பத்தோடே ஆசரிக்க வேண்டும் என்றும் எழுதியிருக்கிறானே அதன் பொருள் என்ன? கர்த்தருடைய பஸ்கா எகிப்திலேயே, நியாயப் பிரமாணம் கொடுக்கும் முன்பே இஸ்ரவேலர்களால் ஆசரிக்கப்பட்டது. இதை கர்த்தருக்கு பண்டிகையாய் ஆசரிக்க தேவன் அப்போதே கட்டளையிட்டார் (யாத். 12:14). இந்த பஸ்கா 400 வருஷம் அடிமையாயிருந்த இஸ்ரேலின் விடுதலைநாள்; அடிமைத்தளையை உடைத்தெறிந்த நாள். இது மாம்சப்பிரகாரமாய்

இஸ்ரேலருக்கு நடந்தாலும் ஆவிக்குரிய ரீதியில் இது நடந்திருக்கிறது. ஆமென்! என்றைக்கு "பஸ்காவாகிய இயேசு நமக்காய்ப் பலியானார்; என் பாவங்கள் தீர்த்தார்; புது சிருஷ்டியாய் ஆவியிலே என்னை இரட்சித்தார்; பழைய புளித்தமாவை புறம்பாக்கினார்; புளிப்பில்லாத அப்பமாய் எனக்கு அவர் மாறினார்" என்று விசுவாசிக்கிறோமோ அன்றே நமக்கு இரட்சண்ய நாள்; விடுதலையின் நாள்; பஸ்காப் பண்டிகை! இந்த விசுவாசம் ஒரு நாள் ஆரம்பித்து, அன்றோடு முடிந்துவிடுவது அல்ல; நம் ஜீவனுள்ள நாளெல்லாம் இது தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். பழைய ஏற்பாட்டிலே ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், என்ற தீர்க்கதரிசிகளின் புத்தகத்திலே, அடிக்கடி இஸ்ரேலரின் அடிமைத்தன விடுதலையை கோடிட்டுக் காட்டியிருப்பதை உணருங்கள்.

நமக்காய்ப் பலியான இயேசுவின் மரணத்தை என்றென்றும் நினைவு கூறவேண்டும் எப்படி? பழைய புளித்தமாவாகிய தீயகாரியங்களோடு அல்ல; ஜீவிய மற்றும் உபதேச மாறுபாடுள்ள சந்ததிகளோடு அல்ல (எகிப்தை விட்டு வெளியே வந்து ஆராதனை செய்ததை சிந்தியுங்கள்); தினந்தோறும் நம்முள்ளே உருவாகும் துர்க்குணம் பொல்லாப்பு எனும் தீய குணங்களோடு அல்ல; துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத, பரிசுத்தமான அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்க வேண்டும். இது வாரம் ஒரு முறை அல்ல; வருடம் ஒரு முறை அல்ல; மாதம் ஒரு முறை அல்ல; என்றென்றும். இதைத்தான் இயேசு கிறிஸ்து சொல்லி விட்டுப் போனார் (மத். 26:26-28); பவுலும் விளக்கிக் காட்டினார் (1 கொரி. 11:23-26). இப்படியாய் பண்டிகையை ஆசரிப்பது நமது கடமையும் உரிமையும் ஆகும். இதை சபையாராய் ஆசரிப்பது அப்பம் பிட்டுத்தான். இதுவே இராப்போஜனப் பண்டிகை. அல்லாமலும் இதை தனி மனிதனாய் தினமும் ஆசரிப்பது ஜீவனுள்ள வார்த்தையாகிய அப்பத்தை உட்கொள்வதால் தான்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ உலக பண்டிகை கிறிஸ்தவனாயிராதே! ஆவிக்குரிய பண்டிகைக் கிறிஸ்தவனாயிரு! யாரோ ஒருவர் ஏற்படுத்தியதை பாரம்பரியமாய், உன் அறிவுக்கேற்றபடி செய்யாதே. அப்படி நீ செய்தால், கொலோ. 2:16,17ல் சொல்லப்பட்ட நிஜமாகிய கிறிஸ்து இன்னும் உனக்காய் பலியாகவில்லை என்று உன்னை அறியாமலே பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் தூஷணம் சொல்கிறாய் ஜாக்கிரதை! ஆகவே, வேத வார்த்தைக்கேற்றபடி சொல்லப்பட்ட பண்டிகையை தினந்தோறும் ஆசரி! என்றும் சமாதானமே! என்றும் சந்தோசமே! என்றும் நிம்மதியே! துர்க்குணம், பொல்லாப்பை விட்டு, தீயசக்திகளை விட்டு, துப்புரவு, உண்மை என்னும்

அப்பத்தை புசித்து, தினமும் நீ உலகிலே இயேசுவின் பஸ்காபலிக்கு சாட்சியாய் இருக்க வேண்டும் என்பதுதானே தேவன் உன்னிடத்திலே, என்னிடத்திலே எதிர்பார்ப்பது! (அப். 1:18)

❖ ❖ ❖

## அன்புள்ள இயேசு சுவாமி என்று ஜெபிக்கலாமா?

இன்றைக்கு பெரும்பாலான விசுவாசிகளும், ஏன் பெரிய ஊழியக்காரர்களும் கூட அன்புள்ள இயேசு சுவாமி என்று சொல்லித்தான் ஜெபத்தை ஆரம்பிக்கின்றனர். இப்படி ஜெபிப்பது திரித்துவத்தை மறுதலிப்பதாகும்; இப்படி ஜெபிப்பது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை தரக் குறைவாக்குவதாகும். தெரியாமல் பலர் ஜெபிப்பது பரவாயில்லை. அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவராய் இருப்பார் (அப். 17:30) தெரிந்தும் ஜெபிப்பது மரணத்துக்கேதுவான பாவம் (1 யோ. 5:16). எபி. 12:1ல் சொல்லப்பட்ட ஆண்டவனை பார்க்காமல், ஆட்களையே பார்ப்பதால் ஏற்பட்ட விளைவு இது. சத்தியம் கருகலாக்கப் பட்டிருக்கிறது. இதை ஆவியானவர் விளக்குவராராக!

2001 ஆண்டுகளுக்கு முன்பாக இயேசு மனிதனாய் வந்து ஊழியம் செய்தபோது ஒரு முறை அவரே சீஷர்களுக்கு ஜெபம் பண்ண கற்றுக்கொடுத்தார் (மத். 6:9-13); இன்னொரு முறை ஒரு சீஷர் கேட்டபோது சொல்லிக் கொடுத்தார் (லூக். 11:2-4) இரண்டு முறையும் பிதாவிடம் தான் ஜெபிக்கக் கற்றுக் கொடுத்தார்; இயேசுவிடம் அல்ல. பிதாவிடம். பலர் இந்த ஜெபத்தையே மனப்பாடம் பண்ணி அதையே ஜெபம் பண்ணும் போதெல்லாம் ஒப்பிக்கின்றனர். இந்த ஜெபத்தை அப்படியே ஒப்பித்தால் தான் பலன் உண்டு என நம்புகின்றனர். சிலர் இதை முக்கியமான நேரங்களில் (உதாரணமாய் இராப்போஜனம்) அப்படியே ஒப்பிக்கின்றனர். இன்னும் பலருக்கு "இது வல்ல ஜெபம்; இது ஜெபம் பண்ண வேண்டிய விதம்" (மத். 6:9) என்று தெரியவில்லை. இவர்களின் மனக்கண்கள் இன்னும் பிரகாசம் ஆகவில்லை (எபே. 1:19). இயேசு சொல்லிக் கொடுத்த விதத்தை மாத்திரமல்ல; யாரை நோக்கி ஜெபிக்க வேண்டும், யார் மூலம் ஜெபிக்க வேண்டும் என்பதையும் மறந்துவிட்டனர். யோ. 16:23,24; 15:16; 14:13,14ஐ வாசியுங்கள் "மெய்யாகவே மெய்யாகவே" என்று எங்கெல்லாம் இயேசு சொல்லியிருக்கிறாரோ அந்த வசனங்களெல்லாம் மிகமிக முக்கியமானவை. பிதாவினிடத்தில் மீட்புக்காய் தேவன் கொடுத்த நாமம், இயேசு என்னும் நாமம்

(அப் 4:12) பிதா கொடுத்த இந்த நாமத்தினால் பிதாவிடமே ஜெபிக்க வேண்டும் - கேட்க வேண்டும் என்று இயேசுவே விரும்புகிறார். இயேசுவின் சித்தத்திற்கு, வார்த்தைக்கு மாறாய் செயல்படுவதே துரோகம். இப்படி இயேசுவை நோக்கி ஜெபிப்பதானது, பிதாவாகிய தேவன், மூன்று ஆள்தத்துவத்தில் ஒருவர் - என்பதை மறுதலிப்பதாகும். இது திரித்துவக் கொள்கைக்கு விரோதமானதாகும்.

மேலும் "சுவாமி" என்று இயேசுவை அழைப்பது அவரின் மகிமைக்கு இழுக்கானது. சுவாமி என்ற வார்த்தை அந்நிய தெய்வங்களை குறிக்கும்படி நியா. 17:5; யோனா 1:6ல் எழுதப்பட்டுள்ளது. அந்நிய தெய்வங்களுக்குள்ள வார்த்தையை அண்டசராசரங்களையும் படைத்த இரட்சகர் இயேசுவுக்கு சூட்டி, அழைக்கலாமா? இது மாபெரும் பாவமல்லவா! அந்நிய தெய்வங்களை பின்பற்றுபவர்களின் நாமத்தை கூட உச்சரிக்கவே மாட்டேன் என்று சொன்ன தேவனை (சங். 16:4) அந்நிய தெய்வங்களோடு விபச்சாரம் வேசித்தனம் செய்கிறீர்கள் என்று "விபச்சாரக்காரரே" என்று இஸ்ரேலரை அழைத்த தேவனை, அந்நிய ஸ்திரிகளோடு சேர்ந்து அந்நிய தெய்வங்களுக்கு பலிபீடம் கட்டிய சாலமோனின் ஞானியை விசுவாசிகளின் பட்டியலிலே இல்லாமல் ஆக்கிய (எபி. 11) தேவனை, அந்நிய தெய்வ விக்ரகங்களை சுட்டெரிக்கச் சொன்ன தேவனை, அந்நிய தெய்வ வணக்கம் (கன்றுக்குட்டி) செய்த இஸ்ரேலின் பெயரை ஜீவ புஸ்தகத்தில் கிறுக்கிப் போடுவேன் என்று சொன்ன தேவனை, அந்த அந்நிய தெய்வ அழைப்பான சுவாமி என்ற பெயரால் கூப்பிடலாமா?

இந்த செய்தியை வாசிக்கும் தேவ பிள்ளையே! இன்னும் மாயக்காரர் பின்னால் ஓடாதே! அவர்கள் போல் ஜெபிக்காதே! தேவ கோபாக்கினை வரும்! பிதாவை நோக்கி இயேசுவின் நாமத்தில், இயேசு சொல்லிக் கொடுத்த முறைப்படி ஜெபி! வீணே சாபத்தை கட்டிக் கொள்ளாதே! மத். 7:21, 22, எப்போதும் நினைவில் இருக்கட்டும்.

❖ ❖ ❖

## திரித்துவத்துக்கும் தண்ணீர் ஞானஸ்நானத்துக்கும் தொடர்பு உண்டா?

நம் தேவன் (God - Elohim) மூன்று ஆள் தத்துவமாய் செயல்படுகிறார் என்று விசுவாசிக்கிறோம் (see உபா. 6:4 In English & Hebrew). இந்த விசுவாசம் தவறு என்று சொல்லும் கிறிஸ்தவ சபைகளும்

உள்ளன. மத். 28:18-20 ன் படி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று நாம் போதிக்கிறோம். இயேசுவின் நாமத்தினால் தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று சொல்லும் சபையாரும் உண்டு. தண்ணீர் ஞானஸ்நான முறைமையையும் திரித்துவத்தையும் - திரியேகத்தையும் இணைத்துப் பார்க்கும் போது இவையிரண்டிலும் ஏதோ ஒரு ஆழ்ந்த சத்தியம் இருப்பதாகத் தெரிகிறது. இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

அப். 19ல் எபேசு பட்டண விசுவாசிகளைப் பார்த்து பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று பவுல் கேட்கிறான். பரிசுத்த ஆவி உண்டென்பதை கேள்விப்படவே இல்லை என்று எபேசு பட்டண விசுவாசிகள் சொன்னார்கள். உடனே பவுல் கேட்ட கேள்வி என்ன தெரியுமா? நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்று கேட்கிறான். பரிசுத்த ஆவியானவரை அறியவே இல்லையென்றால் அது சம்பந்தமான வேத வசனங்களை பவுல் விளக்கிச் சொல்லியிருக்கலாம். அப்படியில்லாமல் ஞானஸ்நானம் பற்றிக் கேட்டதற்கு காரணமும் காரியமும் உண்டல்லவா! ஆமென். அவர்கள் பெற்ற ஞானஸ்நானம் யோவான் கொடுத்தது போன்ற ஞானஸ்நானம். யோவான் ஸ்நானகன் எப்படிக் கொடுத்தான்? எதற்காகக் கொடுத்தான்? மனந்திரும்புதலுக்கென்று ஞானஸ்நானம் கொடுத்தான் (மத். 3:11; அப். 19:4). ஞானஸ்நானம் பெற்றவர்கள் தனக்குப்பின் வருகிற மேசியாவாகிய இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று கொடுத்தான்; இயேசுவின் வார்த்தைகளை விசுவாசித்து அவரின் இரத்தத்தால் பாவ மன்னிப்பைப் பெற்று மனந்திரும்பி ஜீவிக்க வேண்டும் என்பதற்காக கொடுத்தான். அவனும் தண்ணீருக்குள் மூழ்கித்தான் கொடுத்தான். (மத். 3:16; யோ. 3:23). ஆனால் எந்த நாமத்தையும் உச்சரித்து ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாமோ ரோ. 10:9,10ன் படி மனந்திரும்பி, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று - அதாவது "பாவத்துக்கு கிறிஸ்துவோடு மரித்தேன், கிறிஸ்துவோடு கூட நீதிமானாய் எழுந்தேன் என்ற விசுவாசத்தோடு - பரிசுத்த ஆவியானவரால் வசனத்தைக் கொண்டு மறுபடியும் பிறந்திருக்கிறேன்" (1 பேது. 1:23; யோ. 3:5) என்ற விசுவாசத்தோடு இயேசுவின் நாமம் தரித்து (1 கொரி. 6:11; கலா. 3:27; ரோ. 13:14) இயேசுவின் நாமத்தினாலே, அப். 2:38ன் படி ஞானஸ்நானம் பெறுகிறோம். ஞானஸ்நானம் கொடுப்பவரோ, பிதா - குமாரன் - பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுப்பார். இரட்சிப்பில் பிதாவின்

பணி என்ன, குமாரனின் பணி என்ன, பரிசுத்த ஆவியின் பணி என்ன என்று விசுவாசித்து ஞானஸ்நானம் எடுப்போம் நாம்.

(a) Father is he who brings forth salvation.

(b) Son is He who arranges or executes salavation which the Father brings forth.

(c) Holy Spirit is He who applies to the people, the salvation which was provided by the Father through the Son (Refer யோ. 3:16).

இந்த சத்தியம் தெரிந்து, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே எபேசு சபையார் ஞானஸ்நானம் எடுத்திருந்தால், பரிசுத்த ஆவி உண்டென்று நாங்கள் கேள்விப்படவே இல்லை என்று சொல்லியிருக்க மாட்டார்கள். ஆமென். அப். 19:5ஐ வாசித்தோமானால், இயேசுவின் நாமம் தரித்தவர்களாய், பாவ மன்னிப்பின் நிச்சயம் பெற்றவர்களாய் இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற பவுல் முன் நின்று, மத் 28:18-20ன் படி பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள் என அறியலாம். இதனாலே பரிசுத்த ஆவியானவரைப் பற்றி புரிந்து விட்டார்கள் என தெரிகிறது. எனவேதான் அப். 19:6ல் பவுல், அவர்கள் மேல் வைத்த உடனே அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். அல்லேலூயா!

மட்டுமல்ல, அப். 8ல் பிலிப்புவால் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளிடம் பேதுருவும் யோவானும் பரிசுத்த ஆவியைப் பெறாமலிருக்கிறார்கள் என்று கண்ட போதும், அவர்களுக்காய் ஜெபம் பண்ணும்போதும், அவர்கள் மேல் கைகளை வைக்கும் போதும், அந்த இரட்சிக்கப்பட்ட சமாரிய விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பற்றி நாங்கள் அறியவில்லை என்று சொல்லவே இல்லை. காரணம், பிதா குமாரன் பரிசுத் ஆவியின் நாமத்தினாலே பிலிப்பு ஞானஸ்நானம் கொடுக்கும்போதே அவர்களுக்கு திரித்துவம் பற்றி போதித்திருப்பான். ஆமென்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! மத். 28:18-20ன் படி ஞானஸ்நானம் பெற்றால்தான் திரித்துவத்தை உணர முடியும். அப்போதுதான் அப். 2:38ன் படி பரிசுத்த ஆவியைப் பெற முடியும். எனவே புதிய ஏற்பாட்டு தண்ணீர் ஞானஸ்நானமுறை மைக்கும், திரித்துவத்துக்கும் தொடர்பு உண்டு என அறிகிறோம்.

❖ ❖ ❖

# ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் என்றால் அர்த்தம் என்ன?

கிறிஸ்தவனுக்கான மூல உபதேசங்களிலே ஒன்று "ஸ்நானங்களுக் கடுத்த உபதேசம்" (எபி. 6:1,2). ஸ்நானங்கள் என்று பன்மையில் போட்டிருப்பதால் ஒரே ஞானஸ்நானம் (எபே. 4:5) மூன்று பிரிவுகளாய் உள்ளன. அதாவது ஒரே மனுஷன், ஆவி, ஆத்மா, சரீரம் என்று மூன்றாய் இருப்பது போல்; ஒரே உலகம் Space Matter, Time என்று மூன்றாய் இருப்பது போல; ஒரே தேவன் (Elohim-God) மூன்று ஆள்தத்துவமாய் இருப்பது போல. அது (1) <u>**கிறிஸ்துவுக்குள்ளான - கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள்ளான ஞானஸ்நானம்**</u> (கலா. 3:27; யோ. 3:3,5; 1 யோ. 1:23); இது தான் ஆரம்ப இரட்சிப்பு. (2) <u>**ஜலத்தினால் ஞானஸ்நானம்.**</u> இது தேவனோடு பண்ணும் உடன்படிக்கை (1 பேது. 3:21). பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கிறோம் என்பதற்கு அடையாளம்; சபைக்கும் உலகிற்கும் விசுவாசி என்று வெளிப்படுத்துகிறோம். (யோ. 1:31; அப். 2:38; மாற். 16:16). (3) <u>**பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்**</u> (அப். 1:4). இதில்தான் இரண்டு பிரிவுகள் உள்ளன என்பதை ஆவியானவர் விளக்குவாராக!

ஜலத்தினால் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானன் சொன்னான்: "எனக்குப் பின் வருகிறவர். பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11). இந்த ஞானஸ்நானத்தைத் தான் அபிஷேகம் என்று பலர் சொல்லுகிறார்கள். "ஜலத்தினால் மூழ்க வேண்டும் என்கிறார்களே: அக்கினியினால் ஞானஸ்நானம் என்றால் அக்கினிக்குள் மூழ்க வேண்டுமா?" என்று ரோமன் கத்தோலிக்க குருக்கள் கேட்கிறார்கள். நம்மவர்களே சிலர் இதற்குரிய விளக்கம் தெரியாமல் இருக்கின்றனர். ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பவர் சபை ஊழியர்; ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பவர் இயேசு. ஆனால் பரிசுத்த ஆவியானவர் என்று பலர் தவறாய்ப் போதிக்கிறார்கள்.

நம்மை இரட்சிப்புக்குள் நடத்தி நம்மோடு (With us) இருப்பவர் ஆவியானவர். நம்மோடு இருக்கிற ஆவியானவர், நமக்குள் வருகின்ற (In us) அனுபவம் தான் ஆவியினால் ஞானஸ்நானம். யோ. 14:17ஐ ஆங்கிலத்திலும், அப். 1:4ஐயும் இணைத்துப் படித்தால் இந்த அனுபவம் புரியும். இந்த ஞானஸ்நானத்தைத் தான் பரிசுத்த ஆவியை பெறுகிற காரியம்

என்று வேதம் சொல்கின்றது (அப். 8:15-17; 19:6). இதைத்தான் ஆவியின் அபிஷேகம் என்று சொல்கிறார்கள். இந்த ஞானஸ்நானம் பெறும் போதுதான் அந்நிய பாஷை பேசப்படும் என்று அறிகிறோம். இதைத்தான் பெந்தகொஸ்தே நாளில் 120 பேர் பெற்றனர். இந்த அனுபவத்தினால் ஆவியானவர் நமக்குள்ளிருந்து, நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துதலுக்கு இசைந்து போனால் நமக்கு வெற்றி வாழ்க்கை, பொருளாதார ஆசீர்வாதம், தெய்வீக ஆரோக்கியம் எல்லாம் இம்மையிலேயும், நித்திய ஜீவன் மறுமையிலேயும் நிச்சயமாய்க் கிடைக்கும்; சாட்சியுள்ள வாழ்க்கை வாழமுடியும். ஆவியின் கனி, நீதியின் கனி நிரம்பி வழியும். ஆவியானவருக்கு இசைந்து போகாத போது, அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியை பெற்றிருந்தாலும் அவர் நமக்குள்ளே இருந்து துக்கப்படுவார் (எபே. 4:30) இப்படிப்பட்ட நிலை இன்றைக்கு பல பெந்தகொஸ்தே மக்களிடம் இருப்பதால் தான் அந்நிய பாஷை பேசுவதை பலர் எதிர்க்கிறார்கள்.

நம்மோடு இரட்சிப்பின் போது இருந்து வழி நடத்திய ஆவியானவர், நமக்குள் வந்து தங்கியிருந்தால் மாத்திரம் போதாது. நம்மேல் (Upon us) இருக்க வேண்டும். நம்மேல் இருக்கின்ற அனுபவம் பழைய ஏற்பாட்டிலும் உண்டு. ஆனால் நம்மோடு இருக்கும் அனுபவம் புதிய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டுமே உண்டு. அதனால் தான் எருசலேம் ஆலயம் அழிந்து போனாலும் நமது சரீரத்தை ஆலயமாக்கி அதில் ஆவியானவர். தங்கியிருக்கிறார் (1 கொரி. 6:19), நம்மேல் இருக்கிற அனுபவம் இயேசுவோடு இருந்தது (ஏசா. 61:1-3); எலிசபெத்தோடு இருந்தது (லூக். 1:41); சவுலோடு, தாவீதோடு, சிம்சோனோடு இருந்தது, இது ஒரு குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்றவே இருக்கும். அந்த காரியம் முடிந்தவுடன், இந்த அனுபவமும் முடிந்து விடுகிறது. இதனால் தான் அடிக்கடி தேவ ஆவியால் நிரப்பப்பட விரும்புகிறோம். இந்த அபிஷேகத்தைத் தான் அக்கினி ஞானஸ்நானம் - அபிஷேகம் என்கிறோம். அக்கினி அபிஷேகம் இருக்கும் வரை பிசாசின் கிரியைகளை சுட்டெரிக்கத்தக்கதான வல்லமையும், வரமும் நம் அறிவுக்கு எட்டாத வகையில் கிரியை செய்யும்; ஆத்ம ஆதாயம் பெருகும்; மாற். 16:20ன் படி அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் வசனத்தை உறுதிப்படுத்த முடியும். Signs and wonder will occur.

இப்படிப்பட்ட நிலைதான் பின்மாரி காலத்தில் நடக்கும். இதற்கு அடையாளமாய்த்தான் பெந்தகொஸ்தே நாளில் நடந்தது. அன்று வரங்கள் கிரியை செய்தன. 3000 பேர் இரட்சிக்கப்பட்டனர். ஆவியின் ஞானஸ் நானத்தினால், வரங்கள் கிரியை செய்யும். ஆனால் வல்லமை இவ்வளவாய் இருக்காது. நமது உபவாசம் ஜெபம், விசுவாசம், தியானம் இவைகளுக்கு

ஏற்றபடி மட்டுமே இருக்கும். ஆனால் அக்கினி அபிஷேகத்தின் போதோ நாம் நினைக்கிறதற்கு மேலாய் காரியங்கள் நடக்கும். இது நமது சன்மார்க்க ஜீவியத்தாலோ, நீதியான கிரியைகளாலோ மட்டும் அல்ல. தேவ சித்தப்படி அவர் பகிர்ந்து கொடுப்பதாகும். இது ஓர் Gift - ஈவு. ஆனால் ஆவியின் அபிஷேகத்திற்கு வாஞ்சை வேண்டும். அப்பொழுதுதான் அவரை பெற்றுக் கொள்ள முடியும். இதற்கும் உத்தமமோ நீதியின் கிரியையோ மட்டும் தேவையில்லை. மாம்சமான யாவர் மேலும் ஆவியின் வல்லமையை ஊற்றுகிறார் (யோவேல் 2).

❖ ❖ ❖

## நீதிமொழிகளில் சொல்லப்படும் "ஞானம்" இயேசுவா?

நீதி. 8ம் அதிகாரத்தில், "அவர் அருகே செல்லப் பிள்ளையாயிருந்தேன்"; "உலக முண்டாகுமுன்னே ஜெநிப்பிக்கப்பட்டேன்; அபிஷேகம் பண்ணப்பட்டேன்" என்றெல்லாம் வரும் பல வசனங்களை வைத்துக் கொண்டு, இங்கு சொல்லப்படும் ஞானம் என்பது இயேசுதான் என்று பல ஆவிக்குரிய சபையில் கூட பிரசங்கிக்கின்றார். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே வெளிப்படுத்துவாராக.

நீதி. 8:24-26ன் படி ஜெநிப்பிக்கப்பட்ட ஞானம் என்பது இயேசு என்றால், அவர் படைக்கப்பட்டவர் என்றே ஆகிறது. அப்படியானால் அவர் தேவனாக இருக்க முடியாதல்லவா? நம் இயேசு மகா தேவனாயிற்றே! (தீத். 2:13). அப்படியிருக்க வீணே யேகோவாவின் சாட்சிகள் என்று சொல்வோரின் துர் உபதேசத்திற்கு ஆளாக வேண்டாம். நீதி. 1:2ஐ வாசித்தால், நீதிமொழிகள் என்ற புஸ்தகம் சாலமோனால் எழுதப்பட்டதே, நாம் ஞானம், போதகம், புத்திமதி போன்றவைகைள அறிந்து கொள்வதற்காகவே என அறியலாம். போதகம் (Instruction) புத்திமதி (words of understanding) போன்றவை எந்த ஒரு ஆள்தத்துவத்தையும் குறிக்காத போது, ஞானம் (Wisdom) மட்டும் எப்படி இயேசுவைக் குறிக்க முடியும்? ஞானத்தைப் பலவாறாக உலகம் எண்ணுகிறது. விஞ்ஞானம், அஞ்ஞானம், மெய்ஞானம் என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. மெய்ஞானம் தான் தேவஞானம். இந்த தேவனின் ஞானத்தைத் தேடித்தான் எத்தனையோ பேர் ஞானி என்ற பட்டமிட்டு திரிகின்றனர். இதிலிருந்து நாம் நிதானிப்பது என்னவென்றால்:- இந்த ஞானம் என்பது, சாயல் (Character) குணாதிசயம் எனலாம். இந்த

தேவனின் சாயலில் ஒன்றான, Characterல் ஒன்றான ஞானத்தை அடைந்து கொள்ளவே அன்றும் இன்றும் என்றும் மனிதன் தாகமாயிருக்கிறான். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று நீதி. 1:7; 9:10 போன்ற வசனத்தின் படி பார்த்தால், ஞானம் என்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அல்ல என்று தெளிவாய் உணரலாம். கர்த்தருக்குப் பயப்படுதல் என்றால் Fear அல்ல, Reverential trust in God and His word என்பதாகும். அதாவது தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் எல்லாவற்றிற்கும் மேலாக நம்பி செயல்படுவதாகும். கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்றால் தீமையை வெறுப்பதே என்று நீதி. 8:13 விளக்குகின்றது. எப்போது தீமையை வெறுக்க முடியும்? பெருமையையும், அகந்தையையும், புரட்டுவாயையும் வெறுக்க முடியும்? தேவனையும் தேவனுடைய வார்த்தையையும் மதித்து விசுவாசித்து செயல்படும்போது தானே! செயல்பட ஆரம்பிக்கும் போதே ஞானம், மனுஷசாயலில் இணைய ஆரம்பிக்கிறது. ஆமென். இது முழுமை பெறும்போது நாம் தேவனைப் போலாகி விடுகின்றோம். அல்லேலூயா!

ஞானத்தைப் பற்றி நீதி. 1:20-32; 3:13-18 போன்ற பல வசனங்கள் விவரிக்கின்றன. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவருமே இணைந்துதான் அனைத்தையும் படைத்தனர். (ஆதி 1:1,2; யோவா 1:3; 2 கொரி 3:17) சங் 104:24; 136:5 போன்ற வசனங்களை வாசிக்கும் போது, தேவன் அனைத்தையும் ஞானமாய்ப் படைத்திருக்கிறார் என்றே அறிகிறோமே அல்லாமல், ஞானமாகிய இயேசு தான் படைத்தார் என்று அல்ல. ஞானத்தை நீதி. 8:2,3; போன்ற இடங்களில் "அது" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் மூல பாஷையிலோ பெண்பாலாய், "அவள்" (She) என்று எழுதப்பட்டுள்ளது. இயேசு பெண்பாலா? இல்லையே. கவிஞன் தன் கலைக்கண்ணோட்டத்தோடு, ஞானத்தைப் பெண்ணாகவும், செல்லப்பிள்ளையாகவும் ரசித்து எழுதுகிறான். மற்றபடி அது பெண்ணுமல்ல; பிள்ளையுமல்ல. நீதி. 8:34ல் சொல்லப்பட்ட அபிஷேகம் என்பது Anointed அல்ல; Setapart என்று பொருள். தேவனிடத்தில் ஆவியிலேயே ஞானம் பிரத்தியேகமாய் இருந்தது என்பதாகும். ஞானத்தைப் பற்றி எழுதுகிற சாலமோன் தேவனிடம் கேட்டது ஞானத்தைத்தானே (1 ராஜா. 3:11)! ஞானம் என்பது இயேசு என்றால் இயேசுவையா கேட்டான்? தேவன் இயேசுவையா அவனுக்குக் கொடுத்தார்? இல்லையே. அவனுக்கு இயேசு என்ற பெயரே தெரியாதே! நியாயம் விசாரிக்கிறதற்கு ஏற்ற ஞானத்தை கேட்டான். தேவ ஞானத்தை தேடினால் கிடைக்கும்; அதிகாலையிலே அதாவது இளவயதிலேயே (Early Stages) தேட வேண்டும் (நீதி. 8:17). இப்படித்தேடிப் பெற்றுக் கொண்டு சாட்சியாய் வாழ்ந்தவர்கள் தான் யோசேப்பு (ஆதி. 41:39)

சாமுவேல் (1 சாமு. 7:15-17). சாலமோன், தானியேல் (தானி 2:20) போன்றோர். தேவனுக்குள்ளே ஞானம், அறிவு போன்ற பொக்கிஷங்கள் உள்ளன (கொலோ. 2:3); அவற்றை இந்த தேவமனுஷர்கள் பெற்றிருந்தார்கள். நாமும் பெற வேண்டும் என்பதே சாலமோனின் விருப்பமும் தேவனின் சித்தமுமாகும்.

தேவ ஞானத்தில் பல வகைகள் உள்ளன. அதிலே பிரதானமான ஒன்று தான் 1 கொரி. 2ல் பவுல் கூறும் தேவ ஞானம். இது தேவன் தம்முடைய மகிமைக்காய் ஏற்படுத்தி, மறைக்கப்பட்ட இரகசியமான தேவஞானம். இதுதான் இயேசு கிறிஸ்துவால் உண்டான இரட்சிப்பின் சுவிசேஷம்! இதைத்தான் தீர்க்கதரிசிகளும் தேவ தூதர்களும் கூட ஆராய்ந்தார்கள் என்று 1 பேது. 1:10-12 சொல்கின்றது. இப்படிப்பட்டதான விசேஷத்தை, தேவ ஞானம் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. அல்லேலூயா! உலக ஞானத்தால் இதை அறிய முடியாது. இப்படியான உலக ஞானிகளை வெட்கப்படுத்தவே உலகின் பைத்தியங்களாகிய உன்னையும் என்னையும் தெரிந்து கொண்டார். யூதர்கள் அடையாளத்தையும், அற்புதத்தையும், வல்லமையையும் கேட்டார்கள்; கிரேக்கரோ புறஜாதியாரோ ஞானத்தைக் கேட்டார்கள். தேவனால் அழைக்கப்பட்டு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்பவர்களுக்கு, இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிபவர்களுக்கு, கிறிஸ்து மூலமாகவே ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்பும் கிடைக்கிறது (1 கொரி. 1:22-31). ஆக, இரட்சிப்பின் சுவிசேஷமாகிய பிரதான தேவஞானத்தைப் பெற்றுக் கொள்ளும் அத்தனை பேருக்கும், யோசேப்பின் ஞானம், சாலமோனின் ஞானம், தானியேலின் ஞானம் எல்லாம் வந்து சேரும். எனவே ஞானம் என்பது இயேசு அல்ல என்றும், ஞானத்தை உருவாக்கியவரே கர்த்தர் என்றும், அதுதான் மனிதனுக்கு மிகமிகத் தேவையென்றும் அறிவோமாக! ஞானக்கர்த்தர் இயேசுவின் சுவிசேஷமே நமக்குள் இருக்கும் போது தேவஞானம் நம்மில் பிரகாசிக்குமன்றோ!

பெந்தகொஸ்தே சபையாரால் மதித்து உபயோகப்படுத்தப்படும் Dakes Bible நீதி. 8:30ல் கீழ்க்கண்டவராறு விளக்கப்பட்டிருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டுகிறேன்" - There is no proof here of the Diety and eternity of Jesus Christ. Wisdom is simply personified in all this passage (8:1-9:18) and it has no clear reference to Christ" (See column 4 (c) page 646 of O.T). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தவறான சிந்தை கொண்டு, தவறாய் விசுவாசித்து தவறாய் எடுத்துச் சொல்லி கள்ள உபதேசம் வளர விடாமல் தடுப்போம்.

# ஆபேலின் இரத்தமும் இயேசுவின் இரத்தமும்

எபி 12:24ல் "ஆபேலின் இரத்தம் பேசினதைப் பார்க்கிலும், நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" என்று உள்ளது. இந்த வசனத்தை வைத்துக் கொண்டு, ஆபேலின் இரத்தம் தீமையானவைகளைப் பேசியது; இயேசுவின் இரத்தம் நன்மையானவைகளைப் பேசியது என்று பலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். உண்மையான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆபேலின் இரத்தம் என்ற வார்த்தை வேதத்தில் ஆதி. 4:9; மத். 23:35 மற்றும் எபி. 11:4; 12:24 ஆகிய இடங்களில் வருகின்றது. மூல பாஷையைப் பார்ப்போமானால் முதல் இரண்டு வசனங்களும் ஆபேலின் சொந்த சரீர ரத்தத்தையும், அடுத்த இரண்டு வசனங்களும் ஆபேல் பலியிட்ட ஆட்டுக் குட்டியின் இரத்தத்தையும் குறிக்கின்றன என்று அறியலாம். ஆபேலை காயீன் கொலை செய்தபோது, "The Voice of thy brothers blood crieth unto me from the ground" என்று தேவன் காயீனிடம் சொல்லுகிறார் (ஆதி. 4:9). "Crieth" (என்னை நோக்கி கூப்பிடுகிறது) என்பதற்கு மூல பாஷையிலே "TSAW-AK" என்று உள்ளது. அதாவது, Shriek - தாங்க வொண்ணா துயரத்தாலும் பயத்தாலும் அலறுதலாகும். (anguish and fear) இதே வார்த்தை யாத். 22:27; 15:25; 5:15; ஆதி. 41:55; 27:34; போன்ற பல இடங்களில் வருகின்றன. ஆபேலின் அழுகையின் அலறலைக் கேட்டு மனதுருகிய தேவன் நேரே காயீனிடம் வருகிறார். ஆனால் இயேசுவின் இரத்தம் இப்படியாய் அலறி கூக்குரலிடவில்லை. பதிலாக சிலுவை மரணத்தைத்தாங்கி, "இவர்கள் பாவத்தை மன்னியும்" என்று இரக்கம் பாராட்டியது. எனவே தேவன் இறங்கி வரவும் இல்லை; காயீனின் ஒப்புரவாகுதல் (Reconcilation) இல்லாமையால் ஏற்பட்ட சாபத்தையும் அவர் சுமந்து விட்டார் (கலா. 3:13) இயேசுவின் இரத்தம் தேவரத்தம்; ஆபேலின் இரத்தம் மனித இரத்தம். மத். 23:35ஐ வாசித்தால் ஆபேலைப் போன்ற நீதிமான்களின் இரத்தத்தால் இரத்தப்பழி இஸ்ரேலருக்கு வந்தது என அறிகிறோம். ஆனால் இயேசுவின் இரத்தத்தால் பழியெல்லாம் தீர்ந்தது.

ஆனால் எபி. 12:24ல் சொல்லப்பட்டது ஆபேலின் இரத்தமல்ல; அவன் பலியிட்ட ஆட்டின் இரத்தம் (எபிரேயரில் சொல்லப்படுவது பலிமுறைகளும் ஆராதனை முறைகளும் பற்றித்தான் என்று முந்தி அறிய வேண்டும்) ஆட்டின் இரத்தம் சிந்தப்பட்டாலும் வரப்போகும் மேசியாவின் மேல் விசுவாசம்

வைத்து சிந்தப்படுமானால் பாவ மன்னிப்பு உண்டு. அப்படியே பாவ மன்னிப்பு கிடைத்தாலும் அது பாவத்தை மூடுவதாக மட்டுமே இருந்தது; வருடாவருடம் பாவ நிவாரண பலி செலுத்த வேண்டி வந்தது. ஆனால் விலையேறப் பெற்ற இயேசுவின் இரத்தத்தினாலே நித்திய மீட்பு வந்தது; இரட்சிப்பு நிரந்தரமாய் கிடைத்தது (எபி. 9); பாவம் அழிக்கப்பட்டது. கிருபையும் சமாதானமும் கிடைத்தது. (1 பேது. 1:2); தேவ பிள்ளையாகும் சுதந்திரம் கிடைத்தது (ரோ. 8:15); அதிக நன்மை கிடைத்தது. இதைத்தான் எபி. 12:25ல் ஆபேல் படைத்த பலியின் இரத்தத்தைப் பார்க்கிலும் இயேசுவின் பலி இரத்தம் அதிக நன்மைகளைப் பேசியது என்று எழுதப்பட்டுள்ளது. எபி 11:4ல் ஆபேல் மரித்தும் இன்னும் பேசுகிறான் என்றால், அவனின் மாம்சீக இரத்தம் பேசுகிறது என்றல்ல. ஏனென்றால் மனித இரத்தமாகிய அது, இயேசுவின் இரத்தம்போல இன்றும் ஜீவனோடு இருக்க முடியாதே! அப்படியானால் இன்னும் பேசுகிறான் என்றால், வரப்போகும் மேசியாவை விசுவாசித்து அவன் ஆட்டைப் பலியிட்டதினாலே அவனின் விசுவாச செயலின் மூலம் இன்னும் நமக்குச்சாட்சியாய் நம்மோடு இணைந்து இருக்கிறான் என்று பொருள்.

ஆக, ஆபேலின் மனுஷீக இரத்தம் கூக்குரலை எழுப்பி, சாபத்தை வருவித்தது என்றும், அவனின் பலியாட்டின் இரத்தமோ நன்மைகளை வருவித்தாலும், விலையேறப் பெற்ற இயேசுவின் இரத்தத்தினாலே அதிலும் மேன்மையானதை நமக்கு தேவன் அளித்தார் என்றும் அறிகிறோம். ஆமென்.

❖ ❖ ❖

## மோவாபியரும் அம்மோனியரும் ஏன் சபிக்கப்பட்டனர்?

சோதோம் கொமோரா பட்டணத்தின் அழிவினின்று தேவனால் காப்பாற்றப்பட்ட லோத்தும் அவனுடைய இரண்டு வாலிப குமாரத்திகளும், கெபியிலே வாழ்ந்த போது, தங்களுக்கு சந்ததி உண்டாக யாரும் புருஷர்கள் இல்லை என எண்ணி, லோத்தின் குமாரத்திகள் தன் தகப்பனுக்கு மதுவைக் கொடுத்து, அவனோடு சயனித்தனர். மூத்தவளுக்கு பிறந்தவன் மோவாப்; இவன் தான் மோவாபியருக்கு தகப்பன். இளையவளுக்குப் பிறந்தவன் பென்னம்மி; இவன்தான் அம்மோனியருக்குத் தகப்பன் (ஆதி. 19:30-38). இந்த மோவாபியரும் அம்மோனியரும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது என்று தேவன் சபித்தாரே காரணம் என்ன? (உபா. 23:3).

"இவர்களின் பிறப்பு தவறான வழியில் இருந்ததால் தான் தேவன் சபித்தார்" என்று ஒரு சிலர் சொல்கின்றனர். அது உண்மை தானா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே வெளிப்படுத்துவாராக.

உபா. 28:15ன் படி தேவனுடைய சத்தத்துக்கு செவிகொடாமல் போனால் சாபம் வரும் என அறிகிறோம். மோவாபியரும், அம்மோனியரும் கர்த்தருக்கு விரோதமாய் மூன்று நான்கு பாதகங்கள் செய்திருக்கிறார்கள் என்று ஆமோஸ் 1:13; 2:1 போன்றவை தெரிவிக்கின்றன. ஏசா. 15:1-16:14; 25:10; செப். 2:8-11; எரே. 48:1-47; 49:1-6; எசே. 21:28-32; 25:1-11 போன்ற வசனங்களை முதலில் வாசியுங்கள். இவர்கள் தங்கள் பொக்கிஷங்களையும், சம்பத்தையுமே நம்புகிற பொருளாசைக்காரர்கள்; மெத்தப் பெருமை - மேட்டிமை - அகந்தைக்காரர்கள்; மோளேகு, கேமோஸ் என்னும் அந்நிய தெய்வத்தை வணங்கும் விக்கிரக ஆராதனைக்காரர்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலே, சபிக்கும்படியாய் தேவன் இவர்களிடத்திலே கண்டு கொண்டது என்ன தெரியுமா? தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே, அம்மோனியரும் மோவாபியரும் தேவனின் வார்த்தைப்படி, அப்பத்தோடும் தண்ணீரோடும் எதிர்கொண்டு வரவில்லை; ஆதரிக்கவில்லை. (இந்த சம்பவத்தை மத். 25:40 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்) மட்டுமல்ல; சிறுமந்தையாகிய இஸ்ரேலரை சபிக்கும்படியாய் பிலேயாம் என்ற தேவனின் தீர்க்கதரிசிக்கு கூலிபேசி அவனை அழைத்தனர். இந்தக் காரியங்களினிமித்தமே அவர்களை சபைக்கு உட்படுத்தலாகாது; சபிக்கப்பட்டவர்கள் என்று தேவன் சொன்னார் என்று உபா. 23:4ன் மூலம் அறிகிறோம். இதிலிருந்து நாம் உணர்வது என்ன? மனிதனின் பார்வைக்கு எது பாவமாக காணப்படுகிறதோ அது பாவமாய் எண்ணப்படவில்லை. தேவனின் பார்வையில், தேவனின் சித்தத்தை நாம் அறிந்தால் மட்டுமே தெய்வீக வாழ்க்கை வாழ முடியும். தன்னால் தெரிந்து கொள்ளப்பட்ட, அபிஷேகம் பண்ணப்பட்ட பிள்ளைகளுக்கு விரோதமாய் எழும்பி அவர்கள் மேல் பகைமை காட்டுவதையே மிகவும் பெரிய மீறுதலாக, அக்கிரமமாக தேவன் கணக்கிட்டு அதற்கேற்ற தண்டனையை அளிக்கிறார். அதனால் தான் தாவீது சவுலின் மேல் கை போடவில்லை. இதனாலே தாவீது தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாகிறான். மனிதன் வெளிக்காரியங்களை வைத்து எடை போடுகிறான்; தேவன் இருதயத்தைப் பார்க்கிறார். சந்ததி வேண்டும் என்பதற்காய் தகப்பனோடு சயனித்ததை தேவன் பெரிதாய் எண்ணவில்லை அல்லவா!

இப்படிப்பிறந்த சந்ததி தேவனுக்கேற்றபடி இருந்திருந்தால் தேவன் சபித்திருக்கவே மாட்டாரல்லவா! அப்படியானால் தகப்பனோடு சயனிக்கலாமா

என்று நீங்கள் கேட்கலாம். ஆதாம் - ஏவாள் வாரிசாய் உலக சந்ததி எப்படியல்லாமோ உருவாக தேவன் தடை செய்யவில்லை என்றும், மருமகள் தாமாரோடு யூதா சயனித்து சந்ததி உருவாக்கியதை யூத ராஜசிங்கம் வரவேண்டும் என்பதற்காகவே தேவன் எதிர்த்து நிற்கவில்லையென்றும் முந்தி அறிக. பாவம் பெருகின போது தான் நாம் நினைக்கிறபடி பிரமாணங்கள் வந்தன; பாவம் கணக்கிடப்பட்டது (ரோ. 5:13) என்பதிலே நாம் தெளிவாயிருக்க வேண்டும். தேவ சித்தத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

❖ ❖ ❖

## தேவனால் முன் குறிக்கப்பட்டோர்தான் இரட்சிக்கப்படுவார்களா?

ரோ. 8:29, 30 ஐ வாசித்தால், தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள் தான் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று தெரிகிறது. அப்படியானால் இரட்சிப்புக்குள் வராதவர்களையெல்லாம் தேவன் தெரிந்து கொள்ள வில்லையா? இந்த கருகலான சத்தியத்தை தேவ ஆவியானவர் விளக்குவாராக!

ரோ. 3:22-23ன் படி எல்லா மனிதரும் பாவம் செய்து தேவ மகிமை அற்றவர்களானால், எல்லோருமே தானே இரட்சிப்புக்குள் வர வேண்டும்? அப்படியில்லாமல் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தான் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், விதி (Fate) என்ற தவறான கொள்கையை நம்ப வேண்டிவருமே. நம் தலை எழுத்துப்படி நடக்கட்டும் என்று மனிதன் சொல்வானே! ஆதியாகமத்திலிருந்து நாம் பார்க்கும்போது "தேவன் காயீனுக்குப் பதிலாக ஆபேலைத் தேர்ந்தெடுத்தார்; காம் மற்றும் யாப்பேத்துக்கும் பதிலாக சேமை தேர்ந்தெடுத்தார். நாகோரைக் காட்டிலும் ஆபிரகாமை தெரிவு செய்தார்; தாராள மனதுடைய ஏசாவை விட்டு விட்டு தந்திரமான யாக்கோபை தெரிந்தெடுத்தார்; மூத்தவனான மனாசேயை விட்டுவிட்டு இளையவனான எப்பிராயீமை தெரிந்தெடுத்தார்" என அறிகிறோம். மனிதர்களை மட்டுமல்லாது, தேசங்களையும் தெரிந்து கொண்டிருக்கிறார். அப்படி தெரிந்து கொண்டுள்ள தேசம் தான் இஸ்ரேல் தேசம். ரோ. 9:15-18; யோ. 15:16; அப். 13:48; எபே. 1:4-6; 2 தெச. 2:13; 2 தீமோ. 1:9 போன்ற பல வசனங்களை வாசிக்கும் போது இது வெளிப்படையாய்த் தோன்றும், அப்படியானால் நாம் ஏன் சுவிசேஷ ஊழியம் செய்ய வேண்டும்? மனிதன் ஏன் இரட்சிப்புக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்?

தேவனுக்கு ஒரு சித்தம் உண்டென்றால், அவர் சாயலில் படைக்கப்பட்ட மனிதனுக்கும் சுயாதீனம் - சுதந்திரம் சித்தம் இருக்குமல்லவா! மனிதனுக்கும் சித்தம் உண்டென்றால் இவனுக்கும் தெரிந்தெடுக்க உரிமையும், பொறுப்பும் உண்டே! தேவனின் தெரிந்து கொள்ளுதலின்படி தான் எல்லாமே நடக்கும் என்றால், மனிதன் அடிமை என்றும், தேவன் சர்வாதிகாரி என்றம் குற்றம் சுமத்த வாய்ப்புண்டே! யோ. 6:37; 3: 16; 1:12; 5:40; வெளி. 22:17 போன்ற வசனங்களின்படி பார்த்தால் மனிதனுக்கு சுயசித்தம் உண்டென்றும் அவன் தன் விருப்பத்தை இரட்சிக்கப்பட விட்டுக்கொடுத்தால் மாத்திரமே இரட்சிக்கப்படுவான் என்றும் அறிகிறோம். வேதத்திலுள்ள சகல தீர்க்தரிசனங்களும் தேவனுடைய முன்னறிவைச் சார்ந்து சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இந்த முன்னறிவு, மனிதனின் நடத்தையையோ, நிகழ்வுகளையோ முன்னரே தீர்மானிக்கிறதில்லை. மனிதன் என்ன செய்வான் என்பதை தெரிந்த தேவனது முன்னறிவு, மனிதன் செய்யப்போகும் காரியங்களைச் செய்வதற்கு அவனைக் கட்டாயப்படுத்தாது. உதாரணமாக, ஆதாம் வீழ்ந்து போவான் என தேவன் முன்னறிந்திருந்தார். யூதாசும் இயேசுவை காட்டிக் கொடுப்பான் என தேவன் முன்னறிந்திருந்தார்.

ஆனால் அவர்கள் செய்யப்போகிறதைக் குறித்த முன்னறிவு, அவர்கள் அந்த கிரியைகளை செய்யும்படி கட்டாயப்படுத்தவில்லை. அவர்களே தங்கள் சுயாதீனப்படி விரும்பியே செய்தார்கள். அவர்களே தெரிந்தெடுத்து காரியங்களைச் செய்ததால்,தேவன் அவர்களை அதற்கு பொறுப்பாளி களாக்கினார். அவர் முன்னறிந்ததால் அவைகள் நடப்பதில்லை; அவைகள் நடக்கப் போவதால் முன்னறிந்தார். மனிதனின் இருதயம் எப்போதும் தீமைப் பக்கமே சார்ந்திருக்கிறது. அவனைத் தேவன் பக்கம் கொண்டு வர வேண்டுமானால் அவனைத் திசை திருப்ப ஒரு சக்தி தேவைப்படுகிறது. அதுதான் பரிசுத்த ஆவி. அது அவனுக்கு விசுவாசத்தை தருகிறது (எபி. 12:1); விசுவாசிக்க வசனத்தைத் தருகிறது; தேவ பெலனையும் தருகிறது (ரோ. 10:17; 1:16). இதைத்தான் யோ. 6:44 மற்றும் 1 கொரி. 12:3, யோ. 3:5 சொல்கின்றது. இதுவும் கூட மனிதன் தன் சுயவிருப்பப்படி இசைந்தால் தான் நடக்கும். இதைத்தான் ஸ்தேவான் கல்லெறியுண்டு சாகும் போது, “வணங்காக் கழுத்துள்ளவர்களே! இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே! நீங்கள் எப்பொழுதும் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நிற்கிறீர்கள்” (அப். 7:51) என்று சொல்கிறான்.

ஆக, இரட்சிப்பு என்பது தேவனால் முன் குறித்தோருக்கு, அவர்கள் தங்கள் விருப்பத்தை அதற்கு ஒப்புக் கொடுத்தால் மாத்திரமே நடக்கும் என்று

அறிகிறோம். தேவனின் சித்தமும் மனிதனின் சித்தமும் நற்செய்தியைக் கொண்டு பரிசுத்த ஆவியினால் இணைக்கப்படுகிறது. இதற்கு செவி கொடாதவன் தேவனால் தெரிந்து கொள்ளப்படாதவன்; விரும்பி செவி கொடுப்பவனோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன்; முன் குறிக்கப் பட்டவன். அல்லேலூயா! சில சமயங்களில் பரிசுத்த ஆவியால் நடத்தப்படாமல் ஒளியின் தூதனின் வேஷந்தரித்த பிசாசினால் நடத்தப்பட்டு, செவி கொடுத்து, "இரட்சிக்கப்படுகிறேன்; கிறிஸ்தவனாகிறேன்" என்று சொல்வோரும் உண்டு. இவர்கள் கோதுமையோடு கூடிய களைகள்; இவர்கள் உலகப் பார்வையில் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் போல இருந்தாலும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே அல்லர். ஆமென்.

❖ ❖ ❖

## "பெந்தகொஸ்தே அனுபவம்" என்றால் என்ன?

"இந்த ஊழியர் நம் சர்ச்சில் மெம்பர் இல்லாவிட்டாலும், அவர் பெந்தேகொஸ்தே அனுபவம் உள்ளவர். எனவே அவரோடு சேர்ந்து ஊழியம் செய்யலாம்; அவருக்கு மரியாதை கொடுக்கலாம்" என்று சொல்வோரும் உண்டு. "இந்த மாப்பிள்ளை பெந்தேகொஸ்தே அனுபவமுள்ளவர்; எனவே அவர் எந்த சர்ச்சில் இருந்தாலும் பரவாயில்லை; அவருக்கு பெண் கொடுக்கலாம்" என்றும், "இந்த பெண் பெந்தேகொஸ்தே அனுபவமுள்ளவள்; எனவே அவள் சர்ச் பற்றி கவலைவேண்டாம்; மணம் முடிக்கலாம்" என்று சொல்வோர் உண்டு. இவர்கள் எல்லாரும் எண்ணுவது என்னனென்றால்:- பெந்தேகொஸ்தே அனுபவம் என்றால் அந்நியபாஷை பேசுவது; வெள்ளை டிரஸ் உடுத்துவது; பொட்டு, பூ, நகை எதுவுமின்றி இருப்பது என்பதுதான். இப்படிப் பார்த்தால் இன்றைக்கு நிறைய சபையைச் சேர்ந்தவர்கள் அந்நியபாஷை பேசுகிறார்கள். பரிசுத்த ஆவியின் அபிஷேகப் பெருவிழா என்று சொல்லி, சென்னை கடற்கரையில் சமீபத்தில் ரோமன் கத்தோலிக்கரால் நடத்தப்பட்டது நம் எல்லோருக்கும் தெரியுமே! செவன்த்டே சபையில் ஒரு பகுதியைச் சார்ந்த சபையார் அந்நிய பாஷை பேசுகிறார்கள். சி.எஸ்.ஐ. சபையில், கட்டிலுக்கும், தொட்டிலுக்கும், பெட்டிக்கும் (சவ) மெம்பராய் இருந்து கொண்டு, ஆவிக்குரிய சபைகளில் வந்து அந்நிய பாஷைபேசி ஞானஸ்நானமும் பெற்றுக் கொண்டு போகும் பலரையும் நாம் அறிவோமே! (இப்படியாய் இரண்டு இடத்திலும் அங்கம் வகிப்போரை தட்டிக் கேட்காத நமது ஊழியர்களும் உண்டு!) மேலும் லுத்தரன், சி.எஸ்.ஐ. போன்ற புராட்டஸ்டண்ட் சபைகளில் உள்ள பெண்கள் பொட்டு வைப்பதில்லை

என்பதை நாமறிவோமே! செவன்த்டே போன்ற சபைகளில் "நகையே போடக்கூடாது; அப்படி ஏதாவது போடுவதென்றால் கழுத்தில் செயின் மட்டும் போடலாம்" என்று பாரம்பரியம் இருக்கிறதே! இரட்சிக்கப்படாத நிலையில் இருக்கும் தமிழக அரசின் சமுக சேவகிகள் கூட வெள்ளை டிரஸ் யூனிபார்ம் தான் போடுகிறதையும், இந்து விதவைகளில் பெரும்பாலோர் நகை ஆபரணமின்றி பொட்டு வைக்காமல் வெள்ளை டிரஸ் உடுத்துவதையும் நாம் கண் கூடாய்க் காண்கிறோம். சில நேரங்களில் பெந்தகொஸ்தே பெண்களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசம் காண முடியாத நிலையில் உள்ளது. முஸ்லீம் பெண்களும் பொட்டு வைப்பதில்லை! அப்படியானால் அந்நியபாஷை பேசுவதும், நகை பூ எதுவுமின்றி வெள்ளை டிரஸ் அணிவதும் தான் பெந்தேகொஸ்தே அனுபவமா? இப்படிப்பட்டவர்கள் எல்லோருமே பெந்தேகொஸ்தேகாரர்களா? ஆவிக்குரிய சபையாரா? இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

பெந்தகொஸ்தே என்றால் ஐம்பது என்று பொருள். லேவி. 23:15, 16ன் படி முதற்கனிகளின் பண்டிகையிலிருந்து (The feast of first fruits) 50 நாள் கழித்து வரும் பண்டிகையை வைத்தும், அந்த நாளில் ஆவியானவர் இறங்கியதை வைத்தும், பெந்தெகொஸ்தே சபை, பெந்தேகொஸ்த அனுபவம் என்றெல்லாம் பேசப்படுகிறது. கொலோ. 2:16-17ன்படி இயேசுகிறிஸ்து வந்தபிறகு ஒருவரும் லேவி. 23ல் சொல்லப்பட்ட 7 பண்டிகைகளையும் கொண்டாடத் தேவையில்லை. அப்படிக் கொண்டாடுகிற சபை எதுவாயிருந்தாலும், ஒன்று அறியாமையினால் செய்கிறார்கள்; அல்லது இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையை அவமதிக்கிறார்கள் என்று பொருள். இந்த 50ம் நாள் பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது தான் இயேசு அப். 1:4,8ல் சொன்னபடி அப். 2ம் அதிகாரம் நடந்தேறியது. பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது இரண்டு புளிப்புள்ள அப்பங்கள் சுடப்பட்டு போஜனபலியாய் தேவனுக்கு முன்பாய் படைக்கப்படும். இது புதிதாய் உருவாக்கப்படும் கிறிஸ்தவ சபையிலே (மத். 16:18; எபே. 2:14-16; எபே. 3:3) யூதர்களும் புறஜாதியாரும் இணைவதையே உருவகப் படுத்துகிறது. இது அப். 2ம் அதிகாரத்தில் ஆரம்பித்து இன்றும் நடந்து வருகிறது; இது இயேசுவின் இரகசிய வருகை வரை நடப்பதாகும். இந்த பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது என்ன?

பரிசுத்த ஆவியானவர் 120 சீடர்கள் மேல் இறங்கினார்; அவர்கள் அந்நிய பாஷைகள் பேசினார்கள். பேதுரு, அப்போஸ்தல ஊழியம் செய்ய ஆரம்பித்தான். அன்றைய தினமே 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். யோவான் ஸ்நானன் சொன்னபடி ஆவியினாலும் அக்கினியாலும் சீஷர்கள்

ஞானஸ்நானம் பண்ணப்பட்டதினாலே (மத். 3:11) சுவிசேஷம் எங்கும் பரவியது. ஆக, பெந்தெகோஸ்தேயின் முதல் அனுபவம் அந்நியபாஷை பேசுவதாகும். இன்றைக்கு கள்ள உபதேசக்காரர்களும், கள்ள கிறிஸ்துக்களும் அந்நிய பாஷைகள் பேசுவதால், இந்த அனுபவத்தை பலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

நிச்சயமாய் ரோ. 10:9,10ன்படி இரட்சிக்கப்பட்டவன் பேசுவது ஆவியானவர் தரும் அந்நியபாஷை; மற்றவர்கள் பேசுவதெல்லாம் பிசாசின் பாஷை. எனவே ஆவிகளைப் பகுத்தறிவதும் மிகவும் நல்லது (1 கொரி. 12:10) இப்படிப்பட்ட சூழ்நிலையில், பிசாசும் ஒளியின் வேஷந்தரித்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்க அலைவதினால் (மத். 24:24) தற்காலத்தில் இந்த அந்நியபாஷை பேசுவதை பெந்தேகொஸ்தே அனுபவம் என்று ஏற்றுக் கொள்ள இயலாமற் போகிறது. "ஞாயிற்றுக்கிழமை அந்நியபாஷை பேசுகிறான்; வாரம் முழுவதும் குழாயடி பாஷை பேசுகிறான்" அந்நிய பாஷை பேசுபவன் செய்யும் அட்டகாசங்கள் ஒன்றா? இரண்டா? அந்நியபாஷை பேசுகிற ஒருவன் மோதிரம் போடுகிறான். ஒருத்தி நகை அணிகிறாள், பூ வைக்கிறாள். இன்னொரு பிரிவோ இதெல்லாம் பாவம் என்கிறது. என்னய்யா இவர்கள் பேதும் அந்நிய பாஷை? அந்நிய பாஷை பேசுகிறவர்களிலேயே கொள்கை வித்தியாசங்கள்; குழப்பங்கள் உள்ளனவே ஏன்? "அந்நிய பாஷை பேசுகிறவர்களே ஒருவரை ஒருவர் பகைமை காட்டுகிறார்களே" இப்படியெல்லாம் கிறிஸ்தவ வட்டாரத்தில் தினந்தோறும் பேசப்படுவதால் தற்கால அந்நியபாஷ பேசுவதை பெந்தேகொஸ்தே அனுபவம் என்று முழுமையாய் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. அதற்காக இது பெந்தகொஸ்தே அனுபவம் இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்த கடைசி காலத்தில் இன்னும் மேலான அனுபவங்களை நாம் அறிந்து செயல்வடிவில் காட்ட வேண்டும்.

**பெந்தகொஸ்தே அனுபவமுள்ளவன்** (1) முற்றிலுமாய் மனந்திரும்பினவனாய் இருக்க வேண்டும. உலகம், மாமிசம், பிசாசு, பாவம் இவைகளிலிருந்து Just about turn. (2) இனி நான் பாவயல்ல, நான் நீதிமான் (ரோ. 33:23,24; 1 கொரி. 6:11) பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்றுவிட்டேன் என்று அறிக்கையிட வேண்டும். (3) இயேசு கிறிஸ்துவின் நாமம் தரித்து கிறிஸ்துவுக்குள்ளாய் ஜலமாகிய வசனத்தினால் ஆவியானவரைக் கொண்டு ஜநிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் (கலா. 3:7; யோ. 3:5; 1 பேது. 1:23). (4) பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்றையாவது பெற்றிருக்க வேண்டும் (1 கொரி. 12:8-10). (5) பாரம்பரிய சபைகளை விட்டு பவுலைப்போல,

மார்ட்டின் லூத்தர் போல வெளியே வந்து ஆவிக்குரிய சபைகளிலே இணைந்து கொள்ள வேண்டும் (கலா. 1) அந்நிய நுகப்பிணைப்பு கூடவே கூடாது. இது திருமணத்திற்கு மட்டுமல்ல, ஊழியத்திற்கும் கூட (2 கொரி. 6:14-17; யாத். 4:24-26) (மாறுபாடுள்ள எல்லா சந்ததிகளையும் விட்டுவிலக வேண்டும். ஆற்றில் ஒருகால் சேற்றில் ஒருகால் கூடவே கூடாது. (6) விசுவாசம் உள்ளவனாகி முழுக்கு ஞானஸ்நானம் பெற்றே இருக்க வேண்டும் (மாற்கு 16:16). குழந்தை ஞானஸ்நானம் இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவமதிப்பதாகும். (7) அப்போஸ்தலர்கள் உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். (8) சபையாரிடம் அந்நியோன்யமாய் பழகி, அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் இருக்க வேண்டும். (9) சுவிசேஷ ஊழியத்திற்காய் எல்லாவற்றையும் நஷ்டமென எண்ண வேண்டும்.

(10) ஒருமனப்படுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (11) சபை கூடி வருதலை விட்டுவிடாதிருக்க வேண்டும். (12) கபடமில்லாத இருதயத்தோடு வாழ்ந்து எப்போதும் தேவனைத்துதிக்க வேண்டும். (13) உலக மக்கள் மத்தியில் தயவு பெற்றிருக்க வேண்டும் (அப். 2:47; லூக். 2:52). (14) கிறிஸ்துவுக்கு சாட்சியாய் வாழவேண்டும். (15) அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றபோதே தேவ அன்பு நம் ஆவியில் ஊற்றப்பட்டதால் தேவ அன்பு நம்மில் வெளிப்பட வேண்டும் (ரோ. 5:5; 1 கொரி. 13). (16) சரீரத்தை ஜீவ பலியாய் ஒப்புக் கொடுக்க வேண்டும். மாம்ச இச்சைகளை சிலுவையில் அறைப்பட்டாயிற்று என்ற விசுவாசம் வேண்டும் (ரோ. 12:1; கலா. 5:24; 2:20). (17) இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவசித்தத்தை அறியத்தக்கதாக மனம் மறுரூபமாக வேண்டும் (ரோ. 12:2). (18) ஆவியாகிய இருதயத்தில் ஆவியானவரால் எழுதப்பட்ட வசனத்தையே கைக்கொண்டு நடக்கும் ஆவிக்குரியவனாய் இருக்க வேண்டும். ரோ. 14:21; பிலி. 4:8ஐ விசுவாசித்து செயல்பட வேண்டும். இப்படி எத்தனையோ சொல்லிக் கொண்டே போகலாம். இப்படிப்பட்டதான அனுபவம் தான் பெந்தகொஸ்தே அனுபவம். இந்த அனுபவம் நமக்கு இருக்கட்டும். ஆவியானவரின் நடத்துதலுக்கு ஒப்புக் கொடுக்கும் போது இப்படிப்பட்ட அனுபவம் தானாய் வந்துசேரும். இதுவரை இல்லையென்றால் இன்றுமுதல் பெற்றுக் கொள்வோம். இப்படிப்பட்ட அனுபவம் உள்ளவர்களை மட்டுமே ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று சொல்லுவோம். ஆமென். மற்றவர்களுக்காய் ஜெபிப்போம்.

❖ ❖ ❖

# மாம்சமான எல்லோர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுமா?

யோவேல் 2:28,29ல் சொல்லப்பட்டபடி பரிசுத்த ஆவி, நல்லவர், கெட்டவர், இரட்சிக்கப்பட்டோர், இரட்சிக்கப்படாதோர் ஆகிய எல்லோர் மேலும் ஊற்றப்படுமா? இதற்கு ஏதும் வரைமுறைகள் இல்லையா? இப்படிப்பட்டதான கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

யோவேல் 2:28,29 என்பது பிதாவின் வாக்குத்தத்தம் (லூக். 24:49; அப். 1:5) பழைய ஏற்பாட்டிலே கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள்,. உடன்படிக்கைக்ள், புத்திர சுவிகாரம், மகிமை, நியாயப்பிரமாணம், தேவாரதனைகள், பிதாவாகிய தேவன் ஆகிய அனைத்துமே இஸ்ரேலருக்கு உரியவைகளே! (ரோ. 9:4,5) சபைக்காய் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால் சபை இயேசு கிறிஸ்துவின் மேல்தான் கட்டப்பட்டது (மத். 16:18). இந்த இரகசியம் பழைய ஏற்பாட்டில் ஒருவருக்கும் வெளிப்படுத்தப்படாமல் பவுல்மூலமாய் நமக்கு வெளிப்படுத்தப்பட்டது என்று (எபே. 2:19-3:3) ஏற்கெனவே நான் விளக்கியிருக்கிறேன் (ஆசிரியரின் தெரிந்து கொள்ளுங்கள் என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியங்கள்) எனவே யோவே 2:28,29ல் சொல்லப்பட்டது இஸ்ரேலருக்குத்தான். அதுவும் "அதற்குப்பின்பு" என்று எழுதியிருக்கிறது. எதற்குப்பின்பு? யோவே. 2:18-27 வசனங்கள் நிறைவேறின பின்பு ஆவியை அவர்கள் மேல் ஊற்றுவாராம். அதாவது கடைசி நாட்களில் இஸ்ரேலர் எல்லாரும் உலகின் பலமுனைகளிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்; எருசலேமில் ஆலயம் கட்டுவார்கள். அந்தி கிறிஸ்துவின் கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகளில் அவனால் யாக்கோபின் இக்கட்டுகாலம் ஆரம்பிக்கும்; அப்போது தான் அவர்கள் மனந்திரும்பி மேசியாவை விசுவாசிப்பார்கள். (ஓசி. 3:5; ஆதி. 49:1). இந்த நாட்களில்தான் இஸ்ரவேலர் மேல் பரிசுத்த ஆவியை தேவன் ஊற்றுவார். அதற்குப் பின்தான் வானத்திலும் பூமியிலும் அதிசயங்கள் காணப்படும் (யோவே. 2:30,31). இந்தக் காலம் தான் இஸ்ரேலருக்கு தேவன் இரக்கமாய் கொடுத்திருக்கும் தருணம். இந்த வேளையில் நமது சபை பூமியில் இராது. 1 தெச. 4:16,17ன்படி எடுத்துக் கொள்ளப்பட்டுவிடும். மாம்ச இஸ்ரேலர்கள் எல்லார் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்படும்; அவர்கள் எல்லோரும் தான் மனந்திரும்பி விட்டார்களே!

இது குறித்து ஒரு காரியத்தை உங்களுக்கு சொல்லுகிறேன். மோசேயின் காலத்தில் வனாந்திர யாத்திரையின்போது, 70 மூப்பர்களை கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் நிறுத்திய போது, அவர்கள் மேல் தேவன்

ஆவியை பொழிந்தார்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப்போது 2 பேர் (எல்தாத், மேதாம்) மட்டும் இதில் பங்கு கொள்ளாமல். பாளையத்திலேயே இருந்து விட்டனர். ஆனாலும் அவர்கள் மேலும் ஆவி ஊற்றப்பட்டு, அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். இதைக் கண்ட ஒருவன் மோசேக்கு அறிவித்தான். யோசுவா, "இப்படி தீர்க்கதரிசனம் சொல்லும் இந்த இருவரையும் தடை பண்ணும்" என்கிறான். அதற்கு மோசே சொன்ன வார்த்தை:- "எல்லாரும் தீர்க்கதரிசனம் சொல்லும்படியாய் அவர்கள் மேலும் கர்த்தர் ஆவியை இறங்கப்பண்ணினால் நலமாயிருக்குமே" என்பதே (எண். 11:24-29). இந்த மோசேயின் விருப்பந்தான் கடைசி நாட்களில் மாம்சமான, மனந்திரும்பிய இஸ்ரேலர் எல்லோர் மேலும் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டு நிறைவேறப் போகிறது (ஏசா. 32:15; 4:3-4; எசே. 36:27-28; சக. 12:10). இயேசுவின் நாட்களில் கூட, அவரைப் பின்பற்றாத ஒருவன் கர்த்தரின் நாமத்தினாலே பிசாசுகளை துரத்தியிருக்கிறான் (லூக். 9:49, 50). எனவே பரிசுத்த ஆவியின் வல்லமை, வாஞ்சிக்கிற அனைத்து மாம்சமானவர்களுக்கும் ஊற்றப்படும்; There is no hard and fast rule. கூடாரத்திற்கு (ஆலயத்திற்கு / சபைக்கு) வருகிறானோ இல்லையோ; இயேசுவைப் பின்பற்றுகிறானோ இல்லையோ, வாஞ்சையுள்ள மனமாற்றமடைந்த எல்லோர் மேலும் ஊற்றப்படும். விதிவிலக்கே இல்லை. இப்படி ஊற்றப்படுவதை வைத்து "இவர் மகா பரிசுத்தவான்; அற்புதம் அடையாளம் செய்கிறார்" என்று யாரையும் எடைபோடக்கூடாது. மத் 7:22ஐ மட்டும் மறவாதீர். தேவ நாமம் பூமியில் பிரஸ்தாபமாகும்படி பார்வோனையே தேவன் தெரிந்து கொள்ள வில்லையா! (ரோ. 9:17)

இஸ்ரேலருக்குரிய வாக்குத்தத்தம் சபைக்கு எப்படி வந்தது? இது கேள்வி. கிறிஸ்துவின் சந்ததி, அதாவது விசுவாச மார்க்கத்தார்; அதாவது இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் (ரோ. 10:9,10; அப். 2:38; மாற். 16:16; 1 பேது. 1:23). அத்தனை பேருக்கும், ஆபிரகாமின் ஆசீர்வாதம் எப்படி கையளிக்கப் பட்டதோ (கலா 3:7,9) அப்படியே, ஆவியைக் குறித்து சொல்லப்பட்ட வாக்குத்தத்தமும் நாம் விசுவாசத்தில் பெறும்படியாய் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று பவுல் கூறுவதை அறியுங்கள் (கலா. 3:14). இதனாலே நமக்கும் பரிசுத்த ஆவி ஊற்றப்படுகிறது. இது பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பமானது என்று பேதுருவின் பிரசங்கம் தெளிவாக்குகிறது. ஆனால் அப். 2:19,20 (யோவேல் 2:30, 31) சபையின் காலத்தில் நடப்பதில்லை என்பதை முதலில் அறியவேண்டும். இந்த வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவி, ஆபிரகாமின் சந்ததியான, கிறிஸ்து இயேசுவினால், மனந்திரும்பி, பாவ மன்னிப்புக்கென்று, ஞானஸ்நானம் பெற்றவர்கள்

மட்டுமே பெற முடியும். (அப். 2:38). இது யாவருக்கும் உண்டாயிருக்கிறது (அப். 2:39) என்று பேதுரு சொல்வதை வாசியுங்கள். ஆக இரட்சிப்புக்குள் வந்த அத்தனைபேரும், ஞானஸ்நானம் எடுக்காத போதும்கூட அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவி அருளப்படுகிறது. இதை கொர்நேலியு வீட்டில் யூதர்கள் கண்டு, தங்களுக்கென்று யோவேலில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கும் உட்பட்டிருக்கிறது என்று உணர்ந்தார்கள். (அப். 10:46,47). நாமும் விசுவாசத்தோடு, வாஞ்சிக்கும் போது பெற்றுக் கொள்கிறோம். இந்த பரிசுத்த ஆவியைப் பெற்றால் தான் பரலோகமென்றில்லை; ஆவியின் கனி, நீதியின் கனி, போன்ற கனி இல்லாவிட்டால்தான் பரலோகமில்லை; மற்றப்படி பரிசுத்த ஆவியைப் பெறுவதால் விசுவாசத்தில் ஸ்திரப்படுகிறோம். சத்தியத்தில் வளர்கிறோம்; அற்புத அடையாளங்களால் கிறிஸ்துவின் சுவிசேஷம் பரப்புகிறோம். (இது குறித்து "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆசிரியரின் நூலை வாசியுங்கள்).

❖ ❖ ❖

## சிருஷ்டி கர்த்தர் ஒருவரா? இருவரா? மூவரா?

சிருஷ்டிக்கப்படும் எதையுமே சிருஷ்டி என்றும், யாராலும் சிருஷ்டிக்கப்படாது, ஆதியிலிருந்து இருக்கிறவராகவே இருப்பவர்தான் சிருஷ்டி கர்த்தர் என்றும் சொல்கின்றோம். இந்த சிந்தனையில், தலைப்பை ஆராய்ச்சி செய்வோம் (யோ 5:39) ஆவியானவர் விளக்குவாராக. ஆதி. 1:1ல் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்று உள்ளது. இதிலே தேவன் (God) என்ற வார்த்தை ஒருமையில் (Singular) தென்பட்டாலும், மூலபாஷையில் Elohim என்று உள்ளது. அதாவது பன்மையில் (Plural) ஒருமை, ஏலோகிம் என்றால் இரண்டுக்கும் மேற்பட்டவர்கள் என்று பொருள். இதே மூல பாஷை பொருளில்தான் ஆதி. 1:26ல் சொல்லப்பட்டுள்ளது. "நமது" என்று எழுதப்பட்டிருப்பதால் படைப்புத் தொழிலில் நிச்சயமாய் இரண்டுக்கும் (ஏலோகிம்) மேற்பட்டோர் ஈடுபட்டிருக்கின்றனர் என அறியலாம். குமாரனை நோக்கி, பிதாவாகிய தேவன் சொல்கிறார்:- "கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது." பிதாவே, குமாரனை கர்த்தரென்றும், சிருஷ்டித்தவர் என்றும் சொல்கிறார் (எபி. 1:10) மேலும் யோ. 1:1-3ஐ வாசித்தால் உண்டான தொன்றும் வார்த்தையாகிய தேவனாலேயல்லாமல் உண்டாகவில்லை என அறிகிறோம். தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார் என்று

யோபு 33:14ல் வாசிப்பதாலும், கர்த்தரே ஆவியானவர் என்று 2 கொரி. 3:17ல் சொல்வதாலும், ஆவியானவரும் கர்த்தர் என்று அறிகிறோம். ஆக, பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் இணைந்து, சிருஷ்டிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என அறிகிறோம். இது தான் ஏலோகிம் என்ற மூலபாஷையால் அறியப்படுவதாகும்.

ஏசா. 43:11, 44:6, 8,24 சங். 83:17 ஏசா. 26:4 எரே. 16:12 ஓசி. 12:15 போன்ற வசனங்களை வைத்து பலர், யேகோவா என்பவர் பிதா என்றும், கர்த்தரும் அவரே என்றும் நிதானித்து, இந்த வசனங்களிலெல்லாம் கர்த்தரை ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதால், சிருஷ்டிகர்த்தர் ஒருவர்தான் என்றும் வாதிடுகின்றனர். அப்படியானால் மேற்கண்ட வசனத்தில் சொல்லப்பட்ட இரட்சகர் யார்? (லூக். 2:11) இஸ்ரவேலின் ராஜா யார்? (யோ. 12:13) சேனைகளின் கர்த்தர் யார்? (வெளி. 19:11) இயேசு கிறிஸ்துவையும் இவைகள் குறிக்கிறது என அறிகிறோமே! கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்று புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் வாசிக்கிறோம் பிலி. 2:6; யாக். 1:1; 1 பேது. 1:3) நமது சபைகளிலே ஆசீர்வாதம் கூறும்போது கூட கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று தான் உச்சரிக்கிறோம் (see 2 கொரி 13:14) ஆக, இயேசுவும் கர்த்தர்தான் என அறியலாம். இப்படியே தியானித்தால் பரிசுத்த ஆவியானவரும் கர்த்தரே என உணரலாம்.

மேலும் யேகோவா என்பவர் பிதாவாகிய கர்த்தர்தான் என்று மட்டும் எண்ணி ஏசா. 26:4ஐ வாசித்தால், 1 கொரி. 10:14ன்படி கன்மலையாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் யேகோவா என்றும், 2 கொரி. 13:7ன் படி கர்த்தராகிய ஆவியானவரும் யேகோவா என்றும் அறியலாமே! யேகோவா என்றால் இருக்கிறவராகவே இருக்கிறவர் என்று பொருள். இம்மூவரும் அப்படித்தானே! சிருஷ்டிக்கப்பட்டவர்கள் அல்லவே! எனவே பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய மூவருமே சிருஷ்டி கர்த்தாக்கள்தான். மூவரும்தான் சேர்ந்து சிருஷ்டிப்பணியை செய்துள்ளனர். ஆனால் பழைய ஏற்பாட்டில் தேவன் "கர்த்தர்" என்ற பெயரிலேயே மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட படியால், பழைய ஏற்பாட்டு வசனங்கள் எல்லாம், ஒருமையாய்ச் சொல்லப்பட்டாலும், அந்த வார்த்தைகளுக்குள்ளே மூன்று ஆள் தத்துவம் அடங்கியிருக்கிறது என அறியலாம். நம் தேவன் ஒன்றில் மூன்றாய் இருக்கிறார். ஒரு மனுஷன் ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்றாய் இருப்பது போல (see 1 தெச. 5:23). புதிய எற்பாட்டில் மூவரையும் தனித்தனியாகவே காணலாம். இயேசு ஞானஸ்நானம் பெறும்போதும், ஸ்தேவான் மரிக்கும் போதும், பரிசுத்த ஆவியானவர் பூமிக்கு வந்துவிட்டபோதும், இயேசு

பிதாவிடம் பரிந்து பேசுவதைக் காணும் போதும், இதை உணரலாம். இதனால் மூன்று தேவனில்லை; ஒரே தேவன் மூன்று, ஆள்தத்துவமாய் செயல்படுகிறார் என்று அறிய வேண்டும். பிதா மட்டும்தான் தேவன்; குமாரனும் பரிசுத்த ஆவியும் தேவனில்லை என்போரும் உண்டு. தயவு செய்து ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" புத்தகத்திலுள்ள "பிதா - குமாரன் - பரிசுத்த ஆவி" என்ற செய்தியை வாசியுங்கள்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! திரித்துவத்தை உணராத வரைக்கும் இந்த குழப்பம் இருந்தே தீரும். திரித்துவம் என்ற வார்த்தை பைபிளில் உண்டா என்று கேட்போரும் உண்டு. **அவர்களைப் பார்த்து என் கேள்வி** (1) ஜெபமே ஜெயம் என்று சொல்கிறாயே ஜெபமே ஜெயம் என்று வேதத்தில் எங்காவது உண்டா? (2) சிகரெட் பிடிக்காதே, சினிமா பார்க்காதே என்று சொல்கிறாயே, வேதத்தில் எங்காவது உண்டா? (3) சத்துருவை சிநேகியுங்கள் என்று சொல்லியிருப்பதால் (மத். 5:44) சத்துருவாகிய பிசாசை சிநேகிக்க வேண்டுமா? வேத வார்த்தைகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி வாசிக்கும் போது மட்டுமே உண்மைச் சத்தியம் விளங்கும். எனவே அப்படியே வாசித்துப் பழகுவோம். தேவனே வழி நடத்துவார்.

❖ ❖ ❖

## சபையை மணவாட்டி என்று சொல்லலாமா?

யோ. 1:12; ரோ. 8:15 போன்ற வசனங்களின் படி நாம் பிதாவாகிய தேவனுக்கு புத்திராயிருக்கிறோம். எனவே ரோ. 8:29ன் படி நமக்கு இயேசுகிறிஸ்து மூத்த சகோதரர், நாமெல்லாரும் அவருடைய தம்பிமார், தங்கைமார். இப்படியிருக்க நாம் எப்படி இயேசுவுக்கு மணவாட்டியாவோம்? இதுதான் இன்று சில ஆவிக்குரிய சபைகளிலும் கேள்வியாயிருக்கிறது. இந்த கருகலானதை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

இயேசுகிறிஸ்து நமக்கு மூத்த சகோதரர்தான். ஆனால் அவர் நம்மை நண்பர் என்கிறாரே எப்படி? (யோ. 15:14); யோ. 13:35ன் படி நம்மை அவரைப் பின்பற்றும் சீடர்கள் என்கிறாரே எப்படி? யோ. 21:5ல் நம்மை பிள்ளைகளே (Children) என்கிறாரே அதெப்படி? எபி. 8:12ன் படி அவர் பிரதான ஆசாரியராயிருக்கிறாரே எப்படி? அவர் நமக்கு ராஜாவாய், நியாயாதிபதியாய், தேற்றரவாளனாய் எஜமானனாய் இருக்கிறாரே எப்படி? மொத்தத்தில் அவர் எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருக்கிறார். உங்களுக்கு எந்த நிலையில் அவர் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்த

நிலையில் அவரைக் காணலாம்; உணரலாம்; ருசிக்கலாம். ஆவிக்குரியவர்கள் மட்டுமே இப்படிப்பட்டதான ஆவிக்குரியவைகளை நிதானிக்க முடியும்; தெளிவடைய முடியும். உலகத்தில் எத்தனையோ உறவுகள் உள்ளன. ஆனால் கணவன் மனைவி உறவு போன்ற ஒரு உறவு எதுவுமே இல்லை. இப்படிப்பட்ட, இரத்தத்தில் ரத்தம், எலும்பில் எலும்பான உறவுமுறையைத்தான், "மணவாட்டி" என்று சபையை அழைப்பதினால், ஏற்படுத்த தேவன் விரும்புகிறார்.

இயேசு கிறிஸ்து தன்னை மணவாளனாக யோ. 3:29ல் சொல்கிறார். அவரின் வருகையைப் பற்றி சொல்லும்போது கூட மத். 25ல் மணவாளனுக் காக காத்திருந்த பத்து கன்னிகைகள் கதையைச் சொல்கிறார். மத். 2:1-14ஐ வாசித்தால் பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்கு திருமணம் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறதாம். குமாரனாகிய கிறிஸ்து மணவாளனானால், மணவாட்டி யார்? வேதத்திலே சபையை ஸ்திரி என்றே காட்டப்பட்டுள்ளது. எபே. 5:22-27வரை வாசித்தால் புருஷனுக்கு கிறிஸ்துவையும், மனைவிக்கு சபையையும் ஒப்புமைப்படுத்தி சொல்லப்பட்டதை அறியலாம். முதல் ஆதாமுக்கு மனையாட்டி இருந்தது போல, 2வது அல்லது கடைசி ஆதாமாகிய இயேசுவுக்கு (ரோ. 5:14; 1 கொரி. 5:47) ஒரு மனையாட்டி இருக்குமல்லவா! ஆதாமிற்கு அயர்ந்த நித்திரை உண்டு பண்ணி ஏவாளாகிய மணவாட்டியை தேவன் உருவாக்கினார். (ஆதி. 2:18; 21-24) அப்படியே பிந்தின ஆதாமாகிய இயேசுவின் மரணத்தினாலே ஏவாளாகிய மணவாட்டி சபை உருவாயிற்று. எபே. 5:29-33ன் படி ஆதாமும் ஏவாளும் போல. கிறிஸ்துவும் சபையும் உள்ளது என அறியலாம். அப்படியே ஈசாக்கு தன் மனைவியைப் பெற்ற விபரத்தையும் பார்த்தால் இன்னும் விளக்கம் புரியும். பரிசுத்த ஆவியானவராகிய எலியேசர், பிதாவாகிய ஆபிரகாமால், இயேசுவாகிய ஈசாக்குக்கு, சபையாகிய ரெபேக்காளைப் பிடிக்கப் போனது போல பெந்தகொஸ்தே நாளிலேயே ஆவியானவர் பூமிக்கு வந்துவிட்டார். அவர் மணவாட்டியாகிய சபையை - ஜீவத்தண்ணீர் ஊற்றும் நம்மை ஆயத்தம் பண்ணுகிறார். பின் மணவாட்டியாகிய ரெபேக்காளை எலியேசர் கூட்டிக் கொண்டு போய் ஈசாக்கிடம் சேர்த்ததுபோல, ஆவியானவர் மணவாட்டியாகிய சபையை மணவாளன் இயேசுவினிடம் இரகசிய வருகையிலே கொண்டுபோய் சேர்ப்பார். (தெச 4:16; 17; 1 கொரி. 15:51, 52) (இரகசிய வருகை என்ற செய்தியை ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியுங்கள்)

"மணவாட்டியாகிய சபையின் கல்யாணம்தான் பரலோகில் நடக்க உள்ளது. இதற்குத்தான் நாம் ஞானஸ்நானம் மூலமாய் நிச்சயதார்த்தம்

(Betrothel) பண்ணி உள்ளோம் (1 பேது. 3:21) அதற்காகத்தான் மாப்பிளை அழைப்பு போல மணவாளன் வருகிறார்" (1 தெச. 4:16,17) என்று நிதானிப்பது நமது தமிழர் கலாச்சாரம் போன்றது. ஆனால், இது இஸ்ரேல் பண்பாட்டுப்படி ஒத்துவரும். நமது வேதம் இஸ்ரேல் கலாச்சாரப்படியே எழுதப்பட்டிருப்பதால், எபே. 5ம் அதிகாரத்தை வைத்து இந்தக் கூற்றை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. பூமியிலேயே திருமணம் முடிந்து விட்டது என்றும் பரலோகில் கல்யாண விருந்து மட்டும்தான் என்றும் சிலர் சொல்கின்றார்கள்.

பழைய ஏற்பாட்டு மக்களை தேவன் மனைவியாக வைத்திருந்தார் (ஏசா. 54:5-8) அவர்கள் அவிசுவாசத்தினாலே சோரம் போனார்கள் (ஏசா. 54:1-10; ஓசி 2:1-17) இவர்களிலே எபி 11ல் சொல்லப்படும் விசுவாச வீரர்கள் அனைவரும் நம்மோடு இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களே ஆட்டுக்குட்டியானவரின் தோழர்கள்; கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் (வெளி. 19:9; யோ. 3:29) ஆனாலும் விருந்து முடிந்து வரும்போது அனைவருமே ஒன்றாய் வருகிறோம் (சகரி. 4:5; கொலோ. 3:4; யூதா 14) அவர்கள் தாவீதின் உடன்படிக்கை (2 சாமு. 7:16) மற்றும் பாலஸ்தீனாவின் உடன்படிக்கை (உபா. 30:3; ஆதி. 15:18-21) ன்படி பாலஸ்தீனாவை ஆள்வார்கள்; நாமோ உலகையே ஆள்வோம். பின்பு புதிய வானம் புதிய பூமி உருவாகும். அப்போது புதிய எருசலேமாய் இருதரத்தாரும் காட்சியளிப்போம் பழைய மனைவியாகிய இஸ்ரவேலரும், புதிய மணவாட்டியாகிய நாமும் தேவனின் முன்னே ஒரே ஸ்திரீயாய் காட்சியளிப்போம். இதைத்தான் வெளி. 21:9ல் "ஆட்டுக்குட்டியான வருடைய மனைவியாகிய மணவாட்டி" என்று எழுதப்பட்டுள்ளது. இப்போதும், அப்போதும், எப்போதும் நாம் தேவனின் மணவாட்டி என்பதால் அலங்காரமாய் அழகாய் இருப்போம் (வெளி. 21:2) ஆமென்.

❖ ❖ ❖

## தேவன் நம்மைப் புடமிடுகிறாரா?

புடமிடுதல் என்றால் அழுக்குகளையும், தேவையில்லாதவை களையும் அகற்றி, பெருகேற்றுதல்; பிரகாசிக்க வைத்தல்; அழகூட்டுதல் என்று பொருள். வெள்ளியையும் பொன்னையும் அக்கினியால் புடமிடுகிறார்கள். புடமிட்ட பின்னே அதன் மதிப்பு கூடுகிறது. அப்படிப்போல. தேவன் தன்னுடைய பிள்ளைகளையும் புடமிடுகிறாரா? எப்படிப் புடமிடுகிறார்? இந்தக் கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

ஏசா. 60:1 ன் படி நாம் மகிமையோடு பிரகாசிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அதனால்தான் எல்லா மனுஷரையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாய் அவர் உலகத்திற்கு வந்தார். (யோ. 1:9) தேவன் நம்மை இந்த நிலைக்கு உயர்த்தவே புடமிடுகிறார். புடமிடுதல் என்ற உடனே பலருடைய எண்ணம், அவர் நமக்கு வியாதி, வறுமை, தோல்வி போன்ற உபத்திரவங்களைக் கொடுத்து, சிட்சித்து நல்வழிப்படுத்துகிறார் என்று எண்ணுகிறார்கள். சங். 119:71ஐ வைத்துக் கொண்டு பலர், உபத்திரவங்களை தேவன் கொடுத்து பிரமாணங்களை, தேவனுடைய வார்த்தையை உணர வைக்கிறார் என நினைக்கிறார்கள். சங். 119:67 ஐ வாசியுங்கள். தேவனுடைய வார்த்தையைக் காத்து நடக்காததால் தான் வழி தப்பி நடந்து, உபத்திரவப்பட்டான் தாவீது. இது தேவன் கொடுப்பதல்ல. யாக். 1:13ன் படி பொல்லாங்கினால் தேவன் யாரையும் சோதிக்க மாட்டார். நன்மை செய்வதே அவர் சாயல் (எபே. 2:10; அப். 10:38) பொல்லாங்கான காரியங்கள் எல்லாமே பிசாசின் கிரியைகள் (யோ. 10:10) இவைகளை சிலுவை மரணத்தால் அழித்த தேவன் எப்படி மறுபடியும் அவைகளை கொடுப்பார் (1 யோ. 3:8). "உலகத்தில் உபத்திரவங்கள் உண்டு; திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற யோ. 16:33 நம் காதில் ஒலிக்கிறதா? உலகத்தை, பிசாசின் பொல்லாத கிரியைகளை ஜெயித்தவர் நம் தேவன் இயேசு! இதை விசுவாசித்தால் நாமும் ஜெயம் பெறுவோம் (1 கொரி. 5:57; ரோ. 8:37; 1 யோ. 5:4). பொல்லாத காரியங்களால் தேவன் புடமிடுவதில்லை சிட்சிப்பதில்லை என்றால் அவரின் புடமிடுதல்தான் என்ன?

மல். 3:3ஐ வாசித்தால், கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியால் காணிக்கையை செலுத்தும்படிக்கும் அவர் புடமிடுகிறார் என அறிகிறோம். நீதி. 17:3; 27: 21; சங். 26:2 போன்ற வசனங்களை வாசித்தால் அவர் இருதயத்தை புடமிடுகிறார் என அறிகிறோம். இருதயம் என்றால் மாம்ச இருதயமல்ல; மனிதனுடைய ஆவி (1 பேதுரு 3:4)- மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்று இருந்தும் அவர் ஆவியிலே மாத்திரமே புடமிடுகிறார். ஆவியிலே அனலாய், ஒளியாய், ஜீவனோடு இருந்தால் மாத்திரமே அந்த ஆவி, ஆத்மாவையும், சரீரத்தையும் அடக்கி ஆளமுடியும் (சங். 103 க்கான விளக்கத்தை ஏற்கெனவே பார்த்தோம். இந்நூலின் செய்தி 2வது). இந்த ஆவி பரிசுத்த ஆவியினால் வசனத்தைக் கொண்டு நடத்தப்படுகிறது. தேவ வசனம் ஆவியில் எழுதப்படுகிறது. (எபி. 8:10) இந்த ஆவியில் எழுதப்பட்ட வார்த்தைப்படி ஆன்மாவையும் சரீரத்தையும் நடத்துபவனே ஆவிக்குரியவன். வெறுமனே "என் ஆத்மாவே! கர்த்தரை தோத்தரி" என்று ஆவியில் ஜெபித்தால் மட்டும் போதாது. இப்படிப்பட்ட

ஜெபத்தை, புடமிடப்பட்ட ஆவியே செய்யும் (சங். 103). இப்படி சொல்ல வைக்கவே இருதயமாகிய ஆவியை தேவன் புடமிடுகிறார். "சோதிக்கிறார்" என்று தமிழில் மொழி பெயர்த்தது தவறு. Tempt அல்ல Test என்று மூல பாஷையில் இருக்கிறது ஆவியிலே தேவன் பரீட்சை பார்க்கிறார். ஆவியிலே புடமிடுதல் எப்படி என்று பார்ப்போம்.

சங். 105:17-19ஐ வாசியுங்கள். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் சிறையாக விற்கப்பட்டான். கர்த்தர் அவனுக்கு தரிசனங்கள், சொப்பனங்கள் மூலம் சொல்லப்பட்ட வசனங்களெல்லாம் நிறைவேறுமளவும், அவருடைய வசனமே அவனைப் புடமிட்டது. பெந்தகொஸ்தே நாளிலே பேதுரு பிரசங்கித்தபோது, அதைக் கேட்டவர்கள் இருதயம் குத்தப்பட்டதாம் (அப். 2:37) இதுதான் ஆவியில் வசனத்தின் புமிடுதல். உடனே அவர்கள் இரட்சிப்புக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அவர்கள் இருதயம் புடமிடப்பட்டது. ஆரம்பத்திலே மட்டும் ஆவியை புடமிடவைத்து, ஆவியிலே மறுபிறப்பைக் கொடுத்து, இரட்சிப்புக்குள் நடத்துவதுமட்டுமல்ல (யாக். 1:18; யோ. 3:3,5; 1 பேது. 1:23 10:9,10). தினந்தோறும் தேவன் வசனத்தைக் கொண்டு இருதயமாகிய ஆவியைப் புடமிடுகிறார். இதனால் ஆவியிலே வல்லமை கிடைக்கிறது. எனவே ஆவியாயிருக்கிற பிசாசுக்கு நாம் எதிர்த்து நிற்கமுடிகிறது; ஆத்மாவையும், சரீரத்தையும் வசனத்தினால் ஆவி நடத்த முடிகிறது; அதன்மூலமாய் தெய்வீக ஆரோக்கியம், வெற்றி வாழ்க்கை பொருளாதார ஆசீர்வாதம் மட்டுமல்ல; நித்திய ஜீவனும் நிச்சயமாகிறது. பரலோகம் போக வழி கேட்ட வாலிபனிடம் இருந்த குறையை இயேசு சுட்டிக் காட்டினாரே அதுதான் தேவனின் புடமிடுதல்; சிட்சித்தல்; (மத். 19:22) முடிவு, அவன் புடமிடுதலுக்கு உட்படவில்லை; சோகமாய் வெளியேறினான். நாமோ அப்படியில்லாதபடிக்கு வசனத்தின் மூலமாய் நம் ஆவிக்கு வரும் தேவனுடைய சிட்சையை, போதனையை, பரீட்சைக்குரிய காரியத்தை அற்பமாய் எண்ணாமல் (எபி. 12:5) புடமிடுதலுக்கு தினந்தோறும் ஒப்புக் கொடுக்க வேண்டும். பயங்கரமான விபச்சாரம் செய்யும் கிறிஸ்தவனுக்கும், அந்த சபையாருக்கும் பவுல் நிரூபம் மூலமாய் புடமிடும் வார்த்தைகளை எழுதினதினால் அல்லவோ அங்கே ஒரு புது மாற்றம் உண்டானது! (1 கொரி. 5:1-5; 11 கொரி. 2:1-11; 7:8-12).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நம் தேவன் வார்த்தையினால், ஆவியாகிய இருதயத்தை புடமிடுகிறார். உன் ஆவி பலமுள்ள, அனலுள்ள, பரிசுத்தமுள்ள ஆவியாய் இருக்கவேண்டும் என்று விரும்புகிறாயா? அந்த உன் புடமிடப்படும் ஆவியினாலே உன் ஆத்மாவும், சரீரமும் சீர்செய்யப்பட,

கிறிஸ்துவுக்குள் சாட்சியாய் இருக்க நாடுகிறாயா? இன்றே வசனத்தால் தேவன் உன் ஆவியிலே தினந்தோறும் தரும் புடமிடுதலை ஏற்றுக்கொள். சபை பிரசங்கங்களின் மூலமாய் கூட தேவன் உன்னைப் புடமிடுவார். நீ தயாராயிருந்தால் தேவன் செயல்பட தடையே இல்லை.

❖ ❖ ❖

## வேதம் சொல்லும் வேசிப்பிள்ளைகள் யார்?

வேதம் விவரிக்கும் நாய்களைப் பற்றியும், பன்றிகளைப் பற்றியும் பழைய மாதாந்திர முழக்கங்களில் ஆவியானவர் விளக்கியிருக்கிறார். அதே ஆவியானவர், வேதம் சொல்லும் வேசிப்பிள்ளைகள் யார் என்ற சத்தியத்தை விளக்குவாராக! இந்தத் தலைப்பைப் பற்றிய சிந்தனையோ ஆராய்ச்சியோ கருகலாய் இதுவரை இருந்ததை இன்றைக்கு புரிந்து கொள்வோம்.

உலகப் பிரகாரமாய் உள்ள விபச்சாரம் (Adultery) வேசித்தனம் (Fornication) என்ற இரண்டுக்குமே பலருக்கு அர்த்தம் புரியவில்லை. திருமணமான ஒருவர் தானே விரும்பி (Voluntary) தன்னால் திருமணமாகாத அல்லது தனக்கு உரிமையில்லாத ஒருவரோடு உடலுறவு கொள்வது விபச்சாரமாகும். இதைத்தான் ரோ. 7:3ல் "புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபச்சாரி எனப்படுவாள்" என்று விளக்கப்பட்டுள்ளது. இது பெண்ணுக்கு மட்டுமல்ல; ஆணுக்கும் தான். காசுக்காக தன் உடலைக் கொடுக்கிறவள் செய்கிற காரியம் விபச்சாரமல்ல; அப்படிப்பட்டவள் பரத்தை என்று அழைக்கப்படுகிறாள். Prostitute என்று ஆங்கிலத்தில் உள்ளது. ஒருவகைக்கு பரத்தைத் தொழிலையையும், Adultery அதாவது விபச்சாரம் என்றும் நடைமுறையில் அழைப்பதுண்டு. ஆனால் ரோ. 7:3ன் படியான விளக்கமே மிகவும் சரியானது. ஆவிக்குரிய ரீதியில் தேவன் இஸ்ரேல் மக்களை பார்த்து "விபச்சார சந்ததியே" என்று அழைத்தாரே அதன் பொருள் என்ன? (யாக். 4:4 மத். 12:39; 16; 4; மாற். 8:38; ஏசா. 57:3) யேகோவா தேவனை புருஷனாக மணவாளனாக வைத்துக் கொண்டு, தனனிச்சையாக அவர்கள் வேறு தெய்வங்களை ஏற்படுத்தியதும், விக்கிரகத்தோப்புகளை நாட்டியதும், தேவனின் வார்த்தைகளை கைக் கொள்ளாமல் வேறே தேவர்களின் சொற்படி செய்ததும், தேவனுக்குச் சமமாகவோ, மேலாகவோ வேறொரு பொருளையோ, அந்தஸ்தையோ, தெய்வத்தையோ அல்லது வேறு எதையோ வைத்ததும், தேவனின் பார்வையில் இஸ்ரேலர்கள் விபச்சார சந்ததிகள்

என ஆக்கப்பட்டனர். இப்படிப்பட்டவர்கள்தான் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டவர்கள்; விசுவாசத்தை விட்டு விலகி விழுந்தவர்கள் (வெளி. 2:4,5) கெட்ட குமாரனாய் மாறியவர்கள். இவர்கள் மறுபடியும் தேவனோடு இணைய வேண்டும் என்ற பேரன்பினால்தான், "விபச்சாரரே விபச்சார சந்ததியே!" என்று வசனத்தால் தேவன் சிட்சிக்கிறார்; புடமிடுகிறார்; உணர்த்துகிறார்.

திருமணமாகாத ஒருவர் தன் இஷ்டப்படி (Voluntary) மணமான அல்லது மணமாகாத ஒருவரோடு உடலுறவு கொள்வது வேசித்தனமாகும். விபச்சாரர்கள்கூட தேவனுடைய சபைக்கு வந்து மனமாற்றம் மடைந்து ஒப்புரவாக வாய்ப்புண்டு. ஆனால் வேசிப்பிள்ளைகள் கர்த்தருடைய சபைக்கு உட்படவே கூடாது என்று உபா. 23:2 கூறுகின்றது. அவர்கள் யேகோவாவை வணங்காத புறஜாதிக்காரரான பெலிஸ்தர் குடியிருக்கும் அஸ்தோத்தில் தான் இருக்க வேண்டும் என்று சக. 9:6 சொல்கின்றது. அப்படியானால் வேசிப்பிள்ளைகளும், வேசித்தனமும் மிகவும் கொடூரமாய் சித்தரிக்கப் பட்டுள்ளது அல்லவா! இதை ஆவிக்குரிய ரீதியிலும் அறிந்து கொள்வோம். எபி. 12:8ல் தேவனுடைய புத்திரர் என்றும் வேசிப்பிள்ளைகள் என்றும் இரண்டு பிரிவுகள் சொல்லப்பட்டுள்ளன. யார் தேவனுடைய புத்திரர்கள்? தேவனை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், தேவனால் தேவவார்த்தையாகிய ஜலத்தால் ஆவியைப் பெற்றவர்கள், புத்திரர்கள் என்று வேதம் சொல்கிறது. (யோ. 1:12, 3:5; ரோ. 8:15; கலா. 4:6). மற்றப்படி தேவ வார்த்தையாகிய ஜலத்தால் பிறவாமல், இயேசுவை மணவாளனாகக் கொள்ளாதவர்கள், உலகம், மாமிசம், பிசாசு இவைகளோடு இணைந்து வாழ்கிறார்கள். திருமணமாகாமலே அதாவது இயேசுவை ஏற்றுக் கொள்ளாமலே பிசாசின் கிரியைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள்தான் எபி. 12:8ல் சொல்லப்படும் வேசிப்பிள்ளைகள். அதாவது இரட்சிக்கப்படாதவர்கள்; பிரதான பாவிகள். (யோ. 16:8,9; 1 தீமோ. 1;15) இப்படியாய் இரட்சிக்கப்படாத பாவிகள், இரட்சிக்கப்பட்ட நீதிமான்களின் சபையில் நிற்பதில்லை (சங். 1:5) ஆக, சபை என்றாலே இரட்சிக்கப்பட்ட, தேவனால் பிறந்த கூட்டம் என்றும் இதில் உலகப்பிரகாரமான இரட்சிக்கப்படாத வேசிப்பிள்ளைகள் இருப்பது இல்லை என்றும் அறிகிறோம். இவர்கள் இருக்க வேண்டியது அஸ்தோத் ஆகிய உலகில்தானே தவிர தேவபிள்ளைகள் மத்தியில் ஒட்டும் இல்லை; உறவும் இல்லை (சக. 9:6) இவர்களோடு இணைவதே மகாதவறு!

யோ. 8:41,44,47 வசனங்களை வாசித்தால், தேவனால், தேவ வார்த்தையால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படாத உலகத்தார் எல்லாரும்

வேசிப்பிள்ளைகள் என அறியலாம். இப்படியான, இரட்சிப்பின் வாசனையே இல்லாத சபையாரோடோ, அப்படிப்பட்ட சபையில் அங்கம் வகிப்பவரோடோ திருமணத்திற்கு மட்டுமல்ல (1 கொரி. 6:14-17) ஊழியத்திலும் (யாத். 4:24-26) இணைவது வேசித்தனத்தாரோடு இணைவதாகும். நியாயப் பிரமாணத்திலே (உபா. 23:2) சொல்லப்பட்டது மாம்சப் பிரகாரமாய்த் தோன்றினாலும் அதற்கு ஆவிக்குரிய அர்த்தம் இன்றும் உண்டல்லவா! ஆக, இப்பிள்ளைகள் இரட்சிக்கப்படாத உலகத்தார் என அறிகிறோம் அல்லவா! அதுமட்டுமல்ல; இரட்சிப்பின் வாசனையை ஒதுக்கி வாழும் பெயர்க்கிறிஸ்தவ சபையாரும், இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லியும், இன்னும் அந்த பழைய பாரம்பரிய சபையிலேயே அங்கம் வகிப்போரும், அதிலேயே ஊழியம் செய்வோரும் அதைவிட்டு வெளியே வராதவர்களும் இப்படிப்பட்டவர்கள் தானே! 1 தெச. 4:3, 4ஐ மறவாமல் வாசியுங்கள். யாக். 4:24ஐ விளங்கிக் கொள்ளுங்கள். கிருபையின் காலம் என்பதால் தேவனின் கோபாக்கினைக்கு தப்பித்துக் கொண்டிருக்கிறோம்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன் நிலை எப்படியிருக்கிறது? இரட்சிக்கப்படாத, உலகத்தார், உலகரீதியான பெயரக்கிறிஸ்தவ சபையார், பாரம்பரியத்தார், ஆகியோரை அடையாளம் கண்டு கொண்டாயா? அவர்களை விட்டு உடனே விலகி ஓடு. ஆவியானவர்தாமே இந்த கருகலான சத்தியத்தை இன்னும் விளக்குவாராக! ஆமென்!

❖ ❖ ❖

## பரிசுத்த ஆவியானவரின் ரூபம் புறா வடிவமா?

"யோர்தானில் ஞானஸ்நானம் பெற்று கரையேறின போது, ஆவியானவர் புறாவைப் போல் இயேசுவின் மேல் இறங்கினார்" (மத். 3:16; மாற். 1;10; லூக். 3:22; யோ. 1:32) என்பதால் ஆவியானவரின் ரூபம் புறாவடிவம் தான் என்று கணித்து, நோட்டீசுகளிலும், புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும், லெட்டர் பேடுகளிலும், சபைகளிலும், வசன அட்டைகளிலும் புறா ரூபத்தைப் போடுகின்றனர். அப்படியானால் ஆவியான தேவனுக்கு ரூபம் ஒன்றும் இல்லையே என்று பாடுவது தவறா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆவியானவர் பிதாவைப் போல, குமாரனைப் போல தேவன் தான் என்றும், அவர் காற்றைப் போன்றவராயிராமல் ஒரு ஆள்தத்துவ முள்ளவர் என்றும் முதலில் உணரவேண்டும் (அப். 5:3,5; 2 கொரி. 3:17 12:2; 26:4;

சங். 86:4; எரே. 33:22; ஓசி. 12:5; யாத். 6:2-3). இவரைத்தான் தேற்றரவாளன் என்றும் இவரைத்தான் இயேசு பரலோகம் போய் அனுப்புவேன் என்று சொன்னார் என்றும் அறியலாம் (யோ. 14). இவர்தான் திரித்துவத்தில் ஒருவர். தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை (யோ. 5:37) என்று வேதம் சொல்வதால், மனிதக் கண்களால் அவரைப் பார்க்க முடியாது எனலாம். 1 யோ. 3:1,2ல் சொல்வதை தியானித்தால் விளக்கம் புரியும். 1 தீமோ. 6:15,16ஐ வாசியுங்கள். சமாரியா ஸ்திரீயிடம் "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோ. 4:24) என்பதால், உருவமில்லை என்று அர்த்தமல்ல; மனிதக்கண்களால் பார்க்கக்கூடிய உருவம் இல்லை எனப் பொருள். யோ. 3:8ஐ தியானியுங்கள். மனித ரூபத்தில் வந்த இயேசுவை எல்லோரும் பார்த்தனர். ஆனால் மகிமையின் ரூபத்தில் தெய்வீக ரூபத்தில் இயேசுவைப் பார்த்ததால் தான் பவுலின் கண் குருடானது என்று அவனே சொல்வதை சிந்தியுங்கள் (அப். 22:11). "வானத்திற்குரிய மேனிகளுமுண்டு; ஆவிக்குரிய சரீரமுமுண்டு." (1 கொரி. 15:40,44) என்று பவுல் சொல்வதால் தேவனுக்கு ஆவிக்குரிய மேனி உண்டு என அறியலாம். மேலும் உள்ளான மனுஷனாகிய ஆவியையும் ஆத்மாவையும் தேவன் தம்முடைய ரூபத்தின்படியே படைத்திருப்பதால் (ஆதி. 1:267) பாவத்தில் விழாத உள்ளான மனுஷரின் ரூபம் அவரைப் போன்றதே என அறியலாம்; ஆனால் அதை யாரும் பார்க்க முடியாது. (ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற புத்தகத்திலுள்ள "ஆவி உயிர் ஆத்மா" என்ற செய்தியைப் படியுங்கள் see பிலி. 2:6-8).

அப்படியானால் புறா வடிவில் வந்தார் என்பதன் அர்த்தமென்ன? இயேசு கிறிஸ்து, "தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலி. 2:7). "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்". (1 தீமோ. 3:16) போன்ற வசனங்களெல்லாம் பார்க்கும் போது இயேசு மனிதரூபத்தில் வந்தது போல, பரிசுத்த ஆவியானவரும் மனிதக் கண்கள் பார்க்கும் படியாய் புறா வடிவில் வந்திருக்கிறார் என அறியலாம். பூமியை ஆள வேண்டிய ஒரு மனுஷனாலே பாவம் உலகத்தில் வந்ததால், மனுஷனாலேயே பாவத்திற்கு நிவாரணம் அளிக்கவும், இந்த பாவ பூமியை நியாயந்தீர்க்கவும் பிதாவாகிய தேவன் இயேசுவைத் தெரிந்து கொண்டதால், (ரோ. 5:18; அப். 17:31), அவர் வானத்துக்குரிய மேனியை விட்டு மனித ரூபமெடுத்து 33 1/2 ஆண்டுகள் உலகத்திலே மனித ரூபத்தில் காணப்பட்டது போல, இயேசு மரிக்கும் வரை ஆவியானவர் புறா ரூபத்தில் வெளிப்புறமாய் காணப்படவே இல்லை. புறா வடிவில் இறங்கியவர், இயேசுவுக்குள்ளேயே இருந்து காரியமாற்றியனார் என அறிகிறோம். (அப். 10:38). அப்படியானால்

புறா வடிவில் ஏன் இறங்க வேண்டும்? தேவன் எந்தக் காரியம் செய்தாலும் மனித அறிவுக்குப் புரிகின்ற விதத்தில்தான் செய்வார். மனிதன் அறிந்தபடி புறாவானது வானத்திலிருந்து கீழிறங்கினால் மற்றப்பறவைகளைப் போலில்லாமல் ஒரே நேர் கோட்டிலேயே, வளையாமல் நெளியாமல் இறங்க வேண்டிய இடத்திற்கு வந்து சேரும். அப்படியே யோர்தான் நதிக்கரையில் பிதா அனுப்பிய ஆவியானவர் இயேசுவுக்காக மட்டுமே எனப் புரிந்து கொள்ளும்படியாய் புறா வடிவில் நேராய் அனுப்பியிருக்கலாம்.

எங்காவது ஒரு இடத்தில் தங்கவேண்டும் என்று கூடுகளுக்காய் தீவிரிக்கும் தன்மையுடையது புறா (ஏசா. 60:8). இதை நோவா காலத்தில், ஜலப்பிரளயம் வந்த போது அது வற்றிவிட்டதா என்பதைக் காண புறாவை மூன்றுமுறை அனுப்பியபோது, நீர் வற்றி, கூடுகட்ட புறாவுக்கு வழிவகைகள் இருந்ததால் மூன்றாம்முறை நோவாவிடம் திரும்பி வரவில்லை என்பதால் அறியலாம் (ஆதி. 8:8-12). அப்படியே ஆவியானவரும் இயேசுவிடம் தங்கினார். ஆமென். புறா உத்தமமானது (உன். 5:2; 6:9); புறா கபடமில்லாதது (மத். 10:16) புறா துக்கிக்கும் தன்மையுடையது (எசே. 7:16; see எபே. 4:30) புறா அழகானது (உன். 2:14). அதன் கண்கள் கூர்மையானது; கவர்ச்சி உள்ளது; பறந்து போய் இளைப்பாறும் தன்மையுடையது (சங். 55:6). அது பேதை உள்ளம் கொண்டது (ஓசி. 7:11). இப்படியாய் புறாவின் தன்மைகளை வேத வசனத்தின்படி சொல்லிக் கொண்டே போகலாம். ஆவியானவரும் இப்படிப்பட்டவரே! அல்லேலூயா! எனவே மனிதர்கள் யூகிக்கும்படியாய் இப்படியாய் புறா வடிவில் அவர் வந்திருக்கலாம். மேலும் யோ. 1:33ன்படியும் நடந்திருக்கலாம்.

ஆவியானவரை புறாவுக்கு மாத்திரம் ஒப்புமையாய் வேதத்தில் சொல்லப்படவில்லை. இயேசுவின் மேல் புறாவடிவம் கொண்டு இறங்கியவர், ஆதி பெந்தகொஸ்தே நாளிலே காற்றைப் போல் இறங்கினார். அக்கினியாய் இறங்கினார். எல்லோரும் கண்டார்கள். (அப். 2:2,3,33) அப்படியானால் பஞ்ச பூதங்களான காற்றையும், அக்கினியையும் புறஜாதி யார் தெய்வமாய் காட்டுவது போல, ஆவியான தேவன் என்று இவைகளை காட்டலாமா? சித்தரிக்கலாமா? (யோ. 3:34; எபி. 1:9) தண்ணீர் (யோ. 7:38-39) முத்திரை (எபே. 1:13; 4:30) அச்சாரம் (எபே. 1:14) போன்றவை ஆவியானவருக்கு அடையாளமாய் உள்ளன. இதனால் இவைகள் எல்லாம் ஆவியானவரின் ரூபமில்லை. ஆவியானவரின் குணாதிசயங்களை நமக்கு தெரியப்படுத்தும் வகையில், புறாவாகவும், காற்றாகவும், அக்கினியாகவும், எண்ணெயாகவும், தண்ணீராகவும் நமக்கு வெளிப்படுத்துகிறார் தேவன்.

மொத்தத்தில் ஆவியானவரை தேவன் என்று விசுவாசித்தால், இந்த தேவனுக்கு மனித கண்களால் காணப்படும ரூபம் இல்லை என்று அறிந்தால். அப்படிப்பட்ட மகிமையுள்ள தேவனுக்கு இணையாக, மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றமாட்டார்கள். (ரோ. 1:23) இப்படி விக்ரகங்களை படமாகவோ, சிலையாகவோ உருவாக்குவதும், விக்ரக ஆராதனை; அதை நமஸ்கரிப்பதும் விக்ர ஆராதனை. இயேசுவாகிய தேவனுக்கு இப்படியாய் மனித ரூபம் கொடுப்பது தவறு என்று பிப்ரவரி மாத இதழில் "மனக்கண்களை பிரகாசமாக்கும் வைட்டமின்கள்" என்ற தலைப்பில் எழுதியுள்ளேன். அப்படியே ஆவியானவராகிய தேவனுக்கு ரூபம் கொடுப்பது தவறு. ("ஆவியானவர் தேவன்தான்" என்று விளக்கும் ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" புத்தகத்திலுள்ள "பிதா - இயேசு - பரிசுத்த ஆவி" என்ற செய்தியைப் படியுங்கள்). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! அதரிசனமான தேவனின் சந்ததியே! புறா வடிவம் உன்னிடம் இருந்தால் இன்றே அது உன்னை விட்டு நீங்கட்டும்! மறைமுகமாய் விக்ரக ஆராதனையைத் திணிக்கும் பிசாசின் கிரியைகள் அதமாகட்டும்! மனித இயேசுவின் உருவமே பவுலுக்கு இல்லை என்கிறபோது (2 கொரி. 5:16), புறா வடிவம் நமக்கு எதற்கு?

❖ ❖ ❖

## இயேசுவின் முதல் வருகையிலே பரலோக ராஜ்யம் ஏன் ஸ்தாபிக்கப்படவில்லை?

"பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று யோவான் ஸ்நானகனும், இயேசுவும் ஆரம்பத்தில் பிரசங்கித்தார்கள் (மத். 3:2; 4:17). ஆனால் மத். 16:21 முதல் இயேசு தன் மரணத்தைப் பற்றி சொல்ல ஆரம்பித்தார். ஏன் இப்படி ஒரு மாற்றம்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

பழைய ஏற்பாட்டில் மேசியா வருவதை இரண்டு விதமாய் தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்டது. மேசியா ஏற்றுக் கொள்ளப்படாமல், பாடுபடுதல் என்று ஏசா. 53லும், பூமியில் மகிமையோடும் வல்லமையோடும் ஆளுவார் என்று ஏசா. 11, எசே. 37லும் சொல்லப்பட்டுள்ளது. இந்த இருகாரியங்களும் ஒன்றாகவே எழுதப்பட்டுள்ளதால் (Ex: சங். 22; சக. 12:8; எபி. 10:18) தீர்க்கதரிசிகள் சரியாக நிதானிக்க முடியாமல் திணறினார்கள்

என்று 1 பேது. 1:10-11ல் சொல்லப்பட்டுள்ளது. இயேசு, ஏசா. 7:14ன்படி கன்னியின் வயிற்றில் பிறந்து "பரலோகராஜ்யம் சமீபமாயிற்று" என்று பிரசங்கித்தார். இந்த பரலோக ராஜ்யம் இஸ்ரேலர்களால் ஏற்றுக் கொள்ளப்படாததால், இந்த பரலோக ராஜ்யம் பூமியில் ஸ்தாபித்தல் தள்ளி வைக்கப்பட்டது. இயேசுவின் இரண்டாம் வருகையில் பூமியில் ஸ்தாபிக்கப்படும். (see மத். 11:12, 20-24; 27:22-25; லூக். 19:11-27; அப். 15-17).

எப்படி தள்ளப்பட்டது? மத். 11:12ல் பரலோக ராஜ்யம் பலவந்தம் பண்ணப்பட்டது. மல். 4:5,6ன்படி பரலோக ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கும்முன், எலியா வந்து சீர்செய்ய வேண்டியிருக்கிறது. முதல் வருகைக்கு முன்னமே, யோவான் ஸ்நானகன் வந்து மேசியாவிற்கு வழியை ஆயத்தம் பண்ணினான். இவன்தான் எலியோவோ? இவனுக்குப் பின் பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப்டுமோ? ஆபிரகாமுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தப்படி பூமியிலே இஸ்ரேலருக்கு ராஜ்யம் தரப்படுமோ? என்று பல யூதர்கள் நினைத்தார்கள். 2 சாமு. 7:8-17ல் சொல்லப்பட்ட தாவீதின் உடன்படிக்கை நிறைவேறுமெனக் காத்திருந்தார்கள். கோரோசீன், கப்பர் நாகூம் போன்ற முக்கியமான இடங்களிலே இயேசு அற்புத அடையாளங்களைச் செய்தும் அவர் சொன்ன பரலோக ராஜ்யத்தை அவர் மூலமாய் ஏற்றுக் கொள்ள மறுத்தனர் They rejected morally (மத். 11:20) "பலவந்தம் பண்ணப்படுகின்ற பரலோக ராஜ்யத்தை யூதர்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால் வருகிறவனாகிய எலியா யோவான் ஸ்நானகன் தான். (மத். 11:14); பரலோக ராஜ்யம் இப்போதே ஸ்தாபிக்கப்படும்" என்று இயேசு சொன்னார். அவர்களோ ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. They rejected officially also (மத். 21:42-43). உண்மையிலேயே யூதர்கள் மறுதலிப்பவர்கள் என்றும் சிலுவையில் அறைவார்கள் என்றும் அறிந்து, பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அதன்பின் இயேசு விவரிக்கத் தொடங்கினார். (மத். 13)

சபையைப் பற்றியும் சொன்னார் (மத். 16:18) Compare with எபே. 3:9-11 இந்தப் பரலோக ராஜ்யம் உலகப் பிரகாரமாய் ஸ்தாபிக்கப்படா விட்டாலும், ஆவிக்குரிய பிரகாரமாய் இப்போதும் உண்டு. இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகையிலே இந்த ராஜ்யம் முடிவடையும் (மத். 13:39-43; 49,50, 25:1,11,12) அதன்பின் இயேசுவின் தலைமையில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் (மத். 24:2-30, அப். 15:17; வெளி. 20:1-10). இது 1000 வருடம் பூமியில் நடக்கும் பரலோக ராஜ்யம் (Kingdom of God). பூமிக்கு

மாத்திரமல்லாமல், சர்வலோகத்திற்கும், சர்வ சிருஷ்டிக்கும், தூதர்களுக்கும் சர்வலோகாதிபதியால் நடத்தப்படும் ராஜ்யம் (சங். 103:19; தானி. 4:3). வரப்போகும் 1000 வருட உலகரீதியான பரலோக ராஜ்யமும், தேவனுடைய ராஜ்யம் என்றே அழைக்கப்படும். ஏனெனில் அதன் தன்மைகள் அப்படித்தான் இருக்கும். இந்த தேவனுடைய ராஜ்யத்தை அதாவது என்றைக்கும் நிலைத்திருக்கிற தேவனுடைய ராஜ்யத்தை ஆவிக்குரிய ரீதியிலே தேடிப் பெற்றுக் கொள்வோம்; எல்லா நன்மைகளையும் பெற்று வாழ்வோம் (மத். 6:33) ஆமென்.

❖ ❖ ❖

# ஜலத்தினால் ஞானஸ்நானம் எடுக்கும் போதுதான் இரட்சிப்பா?

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவனே இரட்சிக்கப் படுவான்" (மாற். 16:16) என்ற வசனத்தையும் ரோ. 6: கலா 3: கொலோ. 2 போன்ற அதிகாரங்களில் வரும் ஞானஸ்நானம் என்ற வசனத்தையும் வைத்துக் கொண்டு, ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றால்தான் இரட்சிப்பு என்று போதிக்கும் ஆவிக்குரிய சபைகள் பல உள்ளன. இந்த சத்தியம் சரிதானா? இது ஆரோக்கியமான உபதேசமா? ஆவியானவர் தாமே விளக்குவாராக?

மாற். 16:16 பாதியை மாத்திரம் படித்து விட்டு முடிவுக்கு வரக்கூடாது. முழுவதும் படிக்க வேண்டும். அதிலே இரண்டு ஆட்களைப் பற்றி சொல்லியிருக்கிறது. ஒருவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவானாம்; அதாவது நரகத்தில் தள்ளப்படுவான். அப்படியானால் மற்றொருவன் பரலோகம் போவான் என்று தானே பொருள். பரலோகம் போவதைத்தான் இரட்சிக்கப்படுவான் என்று போடப்பட்டுள்ளது. அப்படியானால் இயேசுவை ஆண்டவரென்றும் இரட்சகரென்றும் ஏற்றுக்கொள்வது இரட்சிப்பில்லையா? அதுவும் இரட்சிப்புதான். ஆனால் அது ஆவிக்குரிய இரட்சிப்பு; ஆரம்ப இரட்சிப்பு, இதுவோ இறுதி இரட்சிப்பு; நிரந்தர இரட்சிப்பு; இதைத்தான் "முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என்று மத். 24:13 சொல்கின்றது. அதாவது ஆரம்ப இரட்சிப்பிலிருந்து பின்வாங்காமல் நிலைத்திருந்தால் இறதி இரட்சிப்பான பரலோகம். அதாவது ஆத்மா, சரீரம் எல்லாம் இரட்சிக்கப்படுவது (ரோ. 12:2; 8:23; 1 தெச. 5:23). இதைத்தான் பேதுருவும் "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால்..." (1 பேது. 4:18)

என்று இறுதி இரட்சிப்பை சொல்கின்றான். இந்த இறுதி இரட்சிப்புத்தான் மாற். 16:16ல் சொல்லப்பட்டுள்ளதே ஒழிய ஆரம்ப இரட்சிப்பு அல்ல. விசுவாசமுள்ளவனாகி ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்றவனே இறுதி இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ள தகுதியுள்ளவன். மற்றப்படி ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறும்போதுதான் இரட்சிப்பு என்றில்லை.

ஆரம்ப இரட்சிப்பு என்றால் இருளிலிருந்து, பாவத்திலிருந்து, உலகத்தின் பிடியிலிருந்து, பிசாசிடமிருந்து விடுதலையாதல், பாதுகாக்கப்படல் என்று பொருள். இதைத்தான் ரோ. 10:9,10 சொல்கின்றது. தேவ நீதி உண்டாக இருதயத்திலே விசுவாசிக்க வேண்டும். இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும். அவ்வளவு தான். தண்ணீர் ஞானஸ்நானம் என்ற பேச்சே எழவில்லை. இப்படியாய் விடுதலையாவதுதான் மறுபடியும் பிறத்தல். மறுபடியும் பிறப்பது என்பது தண்ணீரால் அல்ல; ஜீவதண்ணீராகிய வார்த்தையால், பரிசுத்த ஆவியானவரால் நமது ஆவியில் பிறக்க வேண்டும் (யோ. 3:3,5; 1 பேது. 1:23; யாக். 1:18; எசே. 36:25-27). இதுதான் பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி இரட்சிப்பு என்பதற்கு அர்த்தம். இப்படியாய் இரட்சிப்புக்குள் வருபவன் வசனத்தால் பிறப்பவன். அதாவது ஞானமாகிய (1 கொரி. 1:31) இயேசுவிற்கு அதாவது கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள் ஸ்நானம் பண்ணப்பட்டவன்; அதாவது மூழ்கப்பட்டவன்; அமிழ்த்தப்பட்டவன் (Bapitizo என் மூலபாஷையின் பொருள் - Diped, Immersed). இதுதான் கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள் ஸ்நானம் பண்ணப்பட்டவன்; அதாவது மூழ்கப்பட்டவன்; அமிழ்த்தப்பட்டவன். இதுதான் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம். இதைத்தான் கலா. 3:27ம் ரோ. 6ம், கொலோ. 2:11,12ம் சொல்கின்றன. இங்கே தண்ணீரைப் பற்றிய பேச்சே இல்லை. இப்படியாய் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டிதான் கிறிஸ்துவுக்குள் இருப்பவன் (2 கொரி. 5:17) அவன் பாவமெல்லாம் கழுவப்பட்டது; தேவ நீதி வந்தது; இலவசமாய் அவருடைய இரத்தம் சிந்திய மீட்பினாலே நீதிமானாக ஆக்கப்பட்டான் (ரோ. 3:23,24; 1 கொரி. 6:11). இங்கே கழுவப்பட்டது தண்ணீரினால் அல்ல; இயேசுவின் நாமத்தினால் (வல்லமையினால், வசனத்தால்) தேவ ஆவியைக் கொண்டு கழுவப்பட்டதாகும். பவுலுக்கும் அனனியா மூலம் அப். 22:16ல் சொல்லப்பட்ட கழுவுதலும் ஞானஸ்நானமும் இப்படிப்பட்டதான கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் தான். இது இருதயமாகிய ஆவியிலே உண்டாகிறது. இதுதான் இருதயத்திலே விருத்த சேதனம் (கொலோ. 2:11,12). இந்த கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தில்தான் இயேசுவோடு அடக்கம் பண்ணப்பட்டு, பாவத்திற்கு மரித்து, அவரோடு கூட நீதிக்குப் பிழைத்து

எழுந்திருக்கிறோம். இதுதான் கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு பாவமன்னிப்பும் பெற்று கிடைக்கும் இரட்சிப்பு (எபே. 2:8). இப்படித்தான் பழைய எற்பாட்டிலும் இரட்சிப்புக்குள் வந்த பரிசுத்தவான்களை பரலோகத்திற்கென்று தெரிந்து கொண்டு நீதிமான்களாக்கினார் (ரோ. 8:29,30)

அப்படியானால் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டிய கட்டாயமென்ன? ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்ற கட்டளை இயேசுவால் கொடுக்கப்பட்டது (மத். 28:18,19). சீஷராக்கி, கிறிஸ்துவுக்குள்ளாய் - அவருடைய வார்த்தைக்குள்ளாய் ஞானஸ்நானம் பெற்று (அதாவது மறுபடியும் பிறந்து) அதற்குப்பின் தான் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும். விசுவாசமுள்ளவனாகித்தான் ஞானஸ்நானம் பெற வேண்டும் (குழந்தை அல்ல) மனந்திரும்பி பாவ மன்னிப்புப் பெற்றுத்தான் ஞானஸ்நானம் பெறவேண்டும். (அப். 2:38) (யோவான் ஸ்நானனோ மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் கொடுத்தான்). இந்த ஜலத்தினால் ஞானஸ்நானத்தை பாவமில்லா இயேசு செய்து காட்டினார். அப்படியே அவரின் கட்டளைப்படி, அவரின் வழியில் நாமும் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு, பாவத்திற்கு மரித்து நீதிக்கு எழுப்பப்பட்ட பாவம் இல்லா நிலையில், அவரைப்போலவே ஞானஸ்நானம் எடுத்தாக வேண்டும். இது நாம் பெற்ற புது சிருஷ்டியின் நீதிமான் அனுபவத்திற்கு அடையாளமாய் இருக்கிறது. இதை சபையார் மத்தியில், மற்றும் ஊர்மத்தியில், நான் இயேசுவின் சிலுவை மரண இரத்தத்தால் கழுவப்பட்டு பாவத்திற்கு மரித்த நீதிமானாய் இருக்கிறேன் என்பதற்கு அடையாளமாய்ச் செய்ய வேண்டும். இதனால் பிசாசு மிரளும்; உலகத்தார் ஆச்சரியப்பட்டு ஆண்டவரிடம் வர வாய்ப்புண்டு. இயேசு இஸ்ரவேலருக்கு வெளிப்படும் பொருட்டாய்த்தான் பகிரங்கமாய் யோர்தான் நதியிலே யோவான் ஸ்நானன் ஞானஸ்நானம் கொடுத்தான் என யோ. 1:31 சொல்கின்றது. தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பது மேற்சொன்ன காரியத்திற்கு மாத்திரமல்ல. 1 பேது. 3:21ன்படி தேவனோடு உடன்படிக்கை செய்வதாகவும் உள்ளது. உடன்படிக்கை பண்ண காலமும், இடமும் இருந்து தண்ணீரால் ஞானஸ்நானம் எப்போது எடுத்தோமோ அப்போதே தேவனின் ஒப்பந்தம் அரங்கேறுகிறது. மோட்சம் (நித்திய ஜீவன்) நமக்கு சொந்தமாகிறது. அல்லேலூயா! இப்படியாய் ஒப்பந்தம் பண்ணாத எவனும் பரலோகம் போகவே முடியாது. பெயர்க்கிறிஸ்தவர்கள் நிலை இதுதான்.

ஆக, மேற்சொன்ன இரு காரியங்களுக்காகத்தான் தண்ணீரால் ஞானஸ்நானமே ஒழிய, வேறெதற்காகவும் இல்லை. ஏசாயா புத்தகம் படித்து

பிலிப்புவினால் போதிக்கப்பட்டு மனந்திரும்பின காந்தேகே மந்திரி தண்ணீரை விலக்கலாமா என்று கேட்டது இந்த வழி நடத்துதலினால் தான். எனவே தண்ணீர் ஞானஸ்நானத்தால் இரட்சிப்பு இல்லையென்றும், இரட்சிக்கப்பட்டபின் தான் புதிய ஏற்பாட்டு மக்கள் தண்ணீரால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றும் அறிகிறோம். ஆமென். இந்த கருகலான சத்தியச் செய்தியினாலே தேவன் எல்லோருடைய மனக்கண்களையும் பிரகாசமடையச் செய்வாராக! தவறான எண்ணங்கள், போதகங்கள் ஒழிந்து போவதாக!

❖ ❖ ❖

## மரியாளே... என்னைத் தொடாதே என்று ஏன் இயேசு சொன்னார்?

யோ. 20:17ல் உயிர்த்தெழுந்த இயேசு மகதலேனா மரியாளைப் பார்த்து "என்னைத் தொடாதே" என்கிறார். ஆனால் மத். 28:9ல் "அவர்கள் கிட்ட வந்து அவர் பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்து கொண்டார்கள்" என்று உள்ளது. யோ. 20:27ல் "உன் கையை நீட்டி என் விலாவிலே போடு" என்று தோமாவிடம் இயேசு கூறுகிறார். இம்மூன்றையும் வாசிக்கும்போது "தொடு" "தொடாதே" என்று இருப்பதைக் கண்டு மிகவும் குழப்பமடைகிறோம். சிலர் மகதலேனா மரியாள் பாவியான ஸ்திரி என்பதால் தான் (லூக். 8:2) உயிர்த்தெழுந்த நீதியின் சூரியனாகிய இயேசு கிறிஸ்து, அவளைத் தொட வேண்டாம் என்று சொன்னார் என போதிக்கின்றனர். லேவி. 16ன் படி பிரதான ஆசாரியன் அசுத்தத்தை தொடாமல் பரிசுத்தமாய் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தோடு மகா பரிசுத்த ஸ்தலம் போக வேண்டும் என்று சிலர் விளக்கம் தருகின்றனர். ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

இதை அறியுமுன்னே, இயேசு உயிர்த்தெழுந்த அந்த காலை வேளையிலே நடந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். அதிகாலையிலே மகதலேனா மரியாளும், மரியாளும் (யாக்கோபின் தாய்), சலோமே என்பவளும் மற்ற சகோதரிகளுடன் சுகந்தவர்க்கம் இடும்படி கல்லறைக்குப் போனார்கள் (மாற். 16:2-3). அவர்கள், கல்லறையின் கல் தேவதூதனால் புரட்டப்பட்டிருந்ததைக் கண்டார்கள் (மத். 28:2). மகதலேகனா மரியாள் உடனடியாக இந்த விஷயத்தை பேதுருவிடமும், யோவானிடமும் சொல்ல ஓடினாள் (யோ. 20:2-4). மற்றவர்களோ கல்லறைக்குள் நுழைந்து இயேசு

உயிர்த்தெழுந்தார் என்று தூதன் சொல்லக் கேட்டார்கள். இந்த விபரத்தை சீஷர்களிடம் சொல்ல அவர்களும் ஓடினார்கள் (மத். 28:8). போகும் போது இயேசு அவர்களுக்கு தரிசனமானார் (மத். 28:9-10). பேதுருவும் யோவானும் கல்லறைக்கு ஓடிவந்து இயேசு இல்லாதைக் கண்டு திரும்பினார்கள் (யோ. 20:4-10). மகதலேனா மரியாளும் கல்லறைக்கு திரும்பி வந்து அழுது கொண்டு நிற்கும்போது இயேசு அவளுக்குத் தரிசனமானார். இதுதான் முதல் தரிசனம் (மாற். 16:9-1). தோமாவுக்கு மற்ற சீஷர்கள் இருக்கும் போது காட்சியளித்தது அடுத்த ஞாயிறு இரவில்தான் (யோ. 20:26-31).

முதல் தரிசனத்தில் என்னைத் தொடாதே (Touch me not) என்று மகதலேனா மரியாளிடம் சொன்னதை "Apto" (அப்டோ) என்று மூல பாஷையில் போடப்பட்டது. அதன் பொருள் "to fasten to," to cling to அதாவது என்னை கட்டிப்போடாதே என்பதாகும். கண்ணீரோடு அவரைக் காணாதிருக்கும் மரியாள், அவரைக் கண்ட உடனே அவரை எங்கும் தப்பிவிடாமல், தனது கட்டுக்குள்ளே வைக்கும்படியாய் இறுக்கிப் பிடிக்க முனைந்தாள். அப்போதுதான், "நான் பிதாவினிடம் போகவேண்டும். என்னைக் கட்டிப்போட்டு தடுத்து நிறுத்தாதே" என்று கூறுகிறார். இவர் உயிர்த்தெழுந்தபின் பிரதான ஆசாரியராய். தமது விலையேறப்பெற்ற இரத்தத்தோடு பாவ நிவாரண பலிக்காய் மகாபரிசுத்த ஸ்தலம் சென்று நமக்கு இரட்சிப்பை உண்டு பண்ண வேண்டியிருப்பதால் "தடுக்க வேண்டாம்; நான் போகிறேன். இதை சீஷரிடம் சொல்லு" என்கிறார். மற்றப்படி அவர் அவளைப் பாவியென்று கருதியோ, அவள் தொட்டால் தான் தீட்டுப்படுவேன் என்றெண்ணியோ அவர் அப்படிச் சொல்லவில்லை. மட்டுமல்ல 2ம் முறையாய் மகதலேனா மரியாள் அல்லாத மற்றப் பெண்களுக்கு அன்றே 2ம் தரிசனமாக காணப்பட்டபோது அவர்கள் கிட்ட வந்து, அவர் பாதங்களைத் தழுவி பணிந்து கொண்டார்கள் (Worshipped); அதாவது ஆராதித்தார்கள். இந்த இரண்டு தரிசனங்களுக்கிடையே அவர் பரலோகம் போய்விட்டு வந்த பின் தான் தொட அனுமதித்தார் என்று வாதிடுவாரும் உண்டு. அப்படியானால் பரலோகம் போய் விட்டு வந்ததினால் அவரின் பரிசுத்தம் குறைந்து போய்விட்டது என்று பொருளா? இல்லையே! பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்த உயிர்த்தெழுந்த ஆண்டவர் என்றென்றும் மகாபரிசுத்தமுள்ள வரல்லவா! ஆமென். அவர் தொட்டு ஆராதிக்க ஒப்புக் கொண்டார்.

அதுபோலத்தான், தோமாவின் அவிசுவாசம் நீங்கும்படியாக இயேசு உன்கையை நீட்டி என் விலாவிலே போடு என்கிறார் (யோ. 20:27) அவிசுவாசம் உள்ள ஒரு பாவியை தொட வைத்தால் அவரின் பரிசுத்தம்

குறைவுபடாதா? யார் நீதியின் சூரியனைத் தொட்டாலும், அவன் நீதிமான் ஆவானே ஒழிய, அவருடைய பரிசுத்தம் குறையாது. அல்லேலூயா! அவர் பரலோகம் போய் வந்தாலும் என்றென்றும் பரிசுத்தமாயிருப்பவர் அவரன்றோ! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இந்த கருகலான சத்தியத்தை நீயும் புரிந்து கொள்! மற்றவர்களுக்கும் புரியவை! ஆமென்!

❖ ❖ ❖

# தேவனின் ஆவியும் பரிசுத்த ஆவியானவரும் ஒன்றா?

தற்காலத்தில் யேகோவா விட்னஸ், யோகோவா ஷம்மா போன்ற சபைகள் பரிசுத்த ஆவி என்பது ஒரு ஆள்தத்துவமுள்ள தேவனில்லை; பரிசுத்த ஆவி என்பது "தேவனுடைய சக்தி; வல்லமை" என்று உபதேசிக்கிறார்கள். பெந்தகொஸ்தே போன்ற சபைகள். "பரிசுத்த ஆவி என்பது ஒரு சக்தியல்ல. அவர் திரித்துவத்தில் ஒருவர்" என்கின்றனர். வேதத்தில் தேவ ஆவி, கிறிஸ்துவின் ஆவி, தேவனின் ஆவி என்று பல இடங்களிலும், பரிசுத்த ஆவியானவர், ஆவியானவர், பரிசுத்த ஆவி என்று பல இடங்களிலும் வருகின்றன. இடத்திற்கு ஏற்ப இதன் அர்த்தம் மாறுகிறது. ஒரு இடத்தில் ஒரு அர்த்தம் என்றால் எல்லா இடத்திலும் அதே அர்த்தம் தான் என்று வாதிடுவது தவறு. ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!.

எலியா வானத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டபோது எலியாவின் ஆவி எலிசாவின் மேல் இறங்கியிருக்கிறதாய் எரிகோவிலிருந்த தீர்க்கதரிசிகள் சொன்னார்கள் (2 ராஜா. 2:15). நிச்சயமாய் ஒரு மனிதனுடைய ஆவி இன்னொருவனுக்குள் வராது. மரித்த மனிதனின் ஆவிகள் ஒன்று பரதீசுக்குப் போகவேண்டும். அல்லது பாதாளம் போக வேண்டும். பரிசுத்த ஆவியும் பிசாசின் ஆவியும் தான், யாருக்குள்ளும் இறங்கமுடியும். அப்படியானால் அவர்கள் சொன்னதன் அர்த்தமென்ன? கீழே விழுந்த எலியாவின் சால்வையை வைத்து எலிசா தண்ணீரை அடித்தவுடன் அது பிரிந்ததினால், எலியாவின் ஆவி இவனுக்குள் இறங்கியதாகச் சொன்னார்கள். அதவாது எலியாவின் வல்லமை, மகிமை, மகத்துவம் எலிசாவுக்குள் இறங்கியுள்ளது என்று பொருள். அப்படித்தான் யோவே. 2:28ல் சொன்னபடி "மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றால் ஆவியை ஊற்றுவது அல்ல; ஆவியானவர் ஆள்தத்துவமானவராகையால் ஊற்றுதல் என்ற நிலை

இருக்க முடியாது. ஆவியானவரையும் ஊற்ற முடியாது. அதன் பொருள் "மாம்சமான யாவர் மேலும் என் வல்லமையை ஊற்றுவேன்" என்பதாகும். எனவே, ஆவி என்று வரும்போது ஆள்தத்துவமுள்ள ஆவியானவர் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அறிகிறோம். இந்த இடங்களில் ஆவி என்பது வல்லமையை, மகிமையை, மகத்துவத்தைக் குறிக்கின்றன. சங். 139:7; ஏசா. 30:1; 40:13 ரோ. 8:9; போன்ற வசனங்களை வாசியுங்கள்.

பரிசுத்த ஆவியானவர் என்று போடப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் ஆள்தத்துவமுள்ள கர்த்தரையே குறிக்கிறது. 2 கொரி. 3:17ன் முன்பகுதியை வாசித்தால் இந்த உண்மை புரியும். இதன் பின் பகுதியில் வரும் ஆவி என்பது கர்த்தரின் வல்லமையை, மகிமை, மாட்சிமையைக் குறிக்கிறது. தேவனின் ஆவி, கிறிஸ்துவின் ஆவி, தேவ ஆவி போன்ற வார்த்தைகளெல்லாம் இந்த அர்த்தத்தைத்தான் கொடுக்கின்றன. ஆதி 1:2 ஏசா 61:1; யோ. 14:17; அப். 2:4 போன்ற வசனங்கள் ஆள்தத்துவமுள்ள ஆவியானவரையே குறிக்கின்றன என்று அறியுங்கள். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கள்ள உபதேசக்காரர்கள் சொல்லுகிறபடி ஆவி என்பதை சக்தி, வல்லமை என்று மட்டும் எடுத்துக் கொள்ளாமல், ஆள்தத்துவமான ஆவியானவர் இல்லையென்று அவரை மறுதலிக்காமல், முன்னும் பின்னும் உள்ள வசனங்களையும் சேர்த்துப் படித்து உண்மையை உணருங்கள். வெளி. 22:17ல் சொல்லப்பட்ட ஆவி என்பது சக்தியா? சக்தியையும் ஒரு ஆள்தத்துவமுள்ள (Personality) மணவாட்டியையும் எப்படி இணைக்க முடியும்? சக்தி, எப்படி வா என்று அழைக்க முடியும்? இந்த இடத்தில் சொல்லப்பட்ட ஆவி என்பது பரிசுத்த ஆவியானவர் என்று அறியுங்கள். அப். 1:8ல் பரிசுத்த ஆவி என்ற வார்த்தை சக்தியை குறிக்காமல் ஆவியான கர்த்தரையே குறிக்கிறது எனலாம்.

எனவே ஆள்தத்தவமுள்ள ஆவியானவர் ஒருவர் உண்டென்றும் அது சக்தி அல்ல என்றும் அறிந்திருக்கிறோம். பிதாவிடமிருந்தும், குமாரனிடமிருந்தும், ஆவியானவரிடமிருந்தும் வல்லமை, சக்தி, மகமை, மகத்துவம் வெளிப்படுகிறது என்றும் அறிந்திருக்கிறோம். எனவே பரி. ஆவி, தேவ ஆவி, கிறிஸ்துவின் ஆவி என்பதெல்லாம் எல்லா இடங்களிலும் ஆள்தத்துவத்தை குறிப்பதில்லை. சில இடங்களில் ஆள் தத்துவத்தை குறிப்பதற்கு பதிலாக வல்லமை / சக்தியை குறிக்கும்படியாய் மொழிபெயர்ப்பு செய்திருக்கலாம். எது எப்படியோ ஆள்தத்துவமுள்ள ஆவியானவர் நம்மோடு இருக்கிறார். நம்மை கூடவே இரகசிய வருகையில் பரலோகம் அழைத்துச் செல்வார். ஆமென்! அல்லேலூயா!

# ஆவியானவர் ஆள்தத்துவமானவரா?

"பிதாவும் குமாரனும் இரண்டு ஆள் தத்துவமாயிருக்கிறார்கள்; ஆவியானவர் ஒரு ஆள்தத்துவமானவரல்ல. அது ஒரு சக்தி. ஆனாலும் குமாரன் தேவனல்ல; அவர் உண்டாக்கப்பட்டவர்" என்று ஒரு கள்ள உபதேசம் பரவியிருக்கிறது. "தேவன் ஒருவரே. அவர்தான் இயேசு. இந்த இயேசுதான் பிதாவாகவும் பரிசுத்த ஆவியானவராகவும் வெளிப்படுகிறார்; தேவன் மூன்று ஆள்தத்துவம் உள்ளவரல்ல" என்று ஒரு கள்ள உபதேசமும் பரவியிருக்கின்றது. **தற்போது நவீன கள்ள உபதேசம் ஒன்று:-** "பிதாவும் குமாரனும் இரண்டு ஆள்தத்துவமுள்ள ஒரே தேவனல்லல: தேவன் இரண்டு ஆள்தத்துவமாகத்தான் இருக்கிறார்" என்று விவரிக்கின்றது. இதற்கு ஆதாரமாய் யோ. 5:17; 22:31, 3; 8:17, 18; 10:30; 8:16, 29; 14:1; 10:11; 23; 15:1; 16:3, 15; 17:13; வெளி. 5:3; 7:10 போன்ற வசனங்களைச் சொல்லி; இவைகளிலெல்லாம் இரண்டு ஆள் தத்துவமுள்ள தேவனைப்பற்றித்தானே சொல்லப்பட்டிருக்கின்றன; ஆவியானவரைப்பற்றி ஒன்றுமில்லையே என்று வாதிடுகின்றனர். இவர்களின் மனக்கண்கள் பிரகாசமடைய ஜெபிப்போம். ஆவியானவர் ஆள்தத்துவமுடைய தேவன்தான் என்ற கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

மேலே சொன்ன இரண்டு கள்ள உபதேசங்களைப் பற்றி பற்பல தலைப்புகளில் நான் ஏற்கெனவே ஆவியானவரால் எழுதியிருக்கிறேன். அடியேனே எழுதிய, திருச்சி கருத்தரங்கில் வெளியிட்ட மூன்று ஆராய்ச்சி புத்தகங்களிலும் (கருகலான சத்தியம், தெரிந்து கொள்ளுங்கள், விசுவாசித்தேன் ஆகையால் பேசுகிறேன்) இவைகளை பற்றி தேடி வாசிக்கலாம். தற்போது எழும்பியுள்ள நவீன கள்ள உபதேசக்காரர்கள் கொடுத்துள்ள வசன ஆதாரங்கள் மூலமாய் பிதாவும், குமாரனும் வேறு வேறு ஆள் தத்துவமுடையவர்களென்றும், அவர்கள் இருவரும் இரண்டு ஆள்தத்துவமுள்ள தேவனென்றும் புதிய உணர்வை தந்ததற்காய் கர்த்தருக்கு தோத்திரம். பார்வோனையும் தமக்கென்று உபயோகிக்கிற தேவன் இன்னும் ஜீவிக்கிறதற்காய் தோத்திரம் (ரோ. 9:17). "ஆவியானவர் ஆள்தத்துவமானவர்தானா? சில ஆதார வசனங்களைப் பார்ப்போம்.

(1) ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று வெளி. 2 மற்றும் 3ல் அடிக்கடி வருகிறது. சொல்லுகிறார் என்பதால் அவர் ஒரு நபர்தானே? (2) 2 கொரி. 3:17ல் கர்த்தரே ஆவியானவர் என்பதால் ஆவியானவர் தேவன்தானே? (3) தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார் (யோபு 33:4) என்பதால் அவர்

படைப்பாற்றல் உள்ள தேவனல்லவா? (4) தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசை வாடிக்கொண்டிருந்தார் என்று ஆதி. 1:2ல் சொல்வதால் இவர் ஆள்தத்துவமுள்ளவரென்று புரியவில்லையா? (5) 1 கொரி. 2:11; ரோ. 15:30; 8:26; 6:15; எபே. 4:30; வெளி. 2:7; யோ. 16:9; 14:26; அப். 20:28; 13:2 போன்ற பல வசனங்களின்படி, பேசுகிறவரும், சித்தமுள்ளவரும், உணர்கிறவரும்,போதிக்கிறவரும் வழிநடத்துகிறவரும் கண்டித்து உணர்த்துகிறவருமாகிய ஆவியானவர் ஆள்தத்துவமுள்ளவராய் (ஒரு நபராய் - Personality) இல்லாமல் எப்படி ஒரு சக்தியாய் வல்லமையாய் இருக்க முடியும்? (6) அவர் ஆள்தத்துவமாய் இருப்பதால் தான் அவருக்கு நாம் ஆலயமாயிருக்கிறோம்.

நமக்குள் அவர் இருக்கிறார் (1 கொரி. 6:19; 1 யோ. 4:4) (7) ஆவியானவர் வேறொரு தேற்றரவாளன் என்று இயேசுவே சொல்லியிருக்கிறாரே! (யோ. 14:16, 17, 26) (8) அவர் வெளிப்படுத்துகிறவர்; ஆராய்கிறவர்; அறிகிறவர் (Person) என்பதால் ஆள்தத்துவமுள்ளவர் அல்லவா? (1 கொரி. 2:10-11) (9) சாட்சியாயிருப்பவர் ஒரு நபர் இல்லையா? (அப். 5:32; யோ. 5:7) (10) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டாரே அப்படியானால் பரிசுத்த ஆவியானவரும் பிதாவைப் போல் குமாரனைப் போல் ஒரு ஆள்தத்துவமுடையவர் தானே! (மத். 28:18;19) (11) சபையிலே ஆசீர்வாதம் கொடுக்கும் போது பரிசுத்தஆவியானவரையும் சேர்ப்பதால் அவர் ஒரு ஆள்தத்துவமானவரல்லவா? (see 2 கொரி. 13:14) (12) வெளி. 12:17ல் ஆவியும் மணவாட்டியும், கேட்கிறவனும், நபர்கள் - Persons - என்ற முறையில் எழுதப்பட்டிருக்கிறதல்லவா! (13) வேத வாக்கியங்கள் எழுதப்பட்டதே ஆவியானவரால் தான் என்று சொல்லும் போது அவர் ஆள்தத்துவமானவர்தானே! (2 தீமோ. 3:16; 2 பேது. 1:21) (14) சக. 1:7-2:17ல் குமாரனும் ஆவியானவரும் ஆள்தத்துவமானவர்தானே! (15) இயேசு ஞானஸ்நானம் பெறும்போது ஆவியானவர் புறா வடிவில் இறங்கி வந்தாரே அவர் ஆள்தத்துவமானவராய் இருப்பதால்தானே! (16) பரலோகத்தில் சாட்சியிடுவோர் மூவர் என்பதால், பரிசுத்த ஆவியானவர் ஓர் ஆள்தத்துவமானவர்தானே (1 யோ. 5:7). இப்படி ஏராளமாய் ஆதாரங்களை சொல்லிக் கொண்டே போகலாம். மொத்தத்தில் ஆவியானவர் என்பவர் ஒரு ஆள்தத்துவமுள்ள (Personality) திருத்தவ தேவன் என அறிகிறோம்.

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு, தேவன் என்றுதான் அதிகமாய் எழுதப்பட்டு சொல்லப்பட்டுள்ளது வேதத்தில். அப்படியானால் குமாரன்

இல்லையா, என்று கேட்கலாம். குமாரன் பிறந்தபின்பு, தேவனையும் (பிதா), குமாரனையும் பற்றியுமே வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும். அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் இல்லையா என்று கேட்கலாம். பரிசுத்த ஆவியானவர் பெந்தகொஸ்தே நாளில் பூமிக்கு வந்தபின்பு மூவரைப் பற்றியும் வேதத்தில் அதிகமாய் சொல்லப்பட்டிருக்கும். எனவே ஏதோ ஒரு சில வசனங்களை எடுத்துக் கொண்டு அதன் காலத்தையும் சந்தர்ப்பத்தையும் கணிக்காமல், தேவன் "ஒரு ஆள்தத்தவமானவர் தான்; அல்லது இரு ஆள் தத்துவமானவர்தான்" என்று சொல்லக் கூடாது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் இரட்சிப்புக்கடுத்த பணிகள் இன்னவை என்று புரிந்து கொண்டால் போதும். "ஆவியானவர் ஆள்தத்துவமானவரே" என்று திட்டமும் தெளிவுமாய்ச் சொல்ல முடியும்.

"Father is He who brings forth Salvation". Son is He who arranges or executes that which the Father brings forth.

"Holy spirit is He who applies to the people that which was provided by that Father through the Son."

❖ ❖ ❖

## பொருளாதார ஆசீர்வாதம் ஏன் பலருக்கு இல்லை?

தேவன் தன்னுடைய பிள்ளைகளை செழிப்பாயிருக்கவே விரும்புகிறார் (சங். 1; 3 யோ. 2) இந்த செழிப்பு ஆவியிலும் வேண்டும்; ஆத்மாவிலும் வேண்டும்; சரீரத்திலும் வேண்டும். அதாவது ஆவியின் கனிகளை தரவேண்டும்; வசனத்தை விசுவாசித்து கீழ்ப்படிந்து சாட்சியுள்ள ஜீவியம் செய்து மனமாகிய ஆத்மா தினமும் மறுரூபமாக வேண்டும். சரீரத்திலே எந்த ஒரு வியாதியும் விக்கனமும் இல்லாமல், வறுமையின்றி செழிப்பான, ஆசீர்வாத, சாட்சியுள்ள வாழ்வு வேண்டும். இம்மூன்றும் இருந்தாலே நம்மைத் தேவன் செழிப்பாய் நடத்துகின்றார் என்று பொருள். ஈசாக்கையும், யோசேப்பையும் புறஜாதியார் இப்படிக் கண்டதால்தானே அவர்கள் மத்தியிலே நம் தேவனுக்கும் இவர்களுக்கும் ஒரு இனமறியாத தொடர்பு வந்தது (ஆதி. 26:28; 39:3) அல்லேலூயா! ஆனால் இன்றைய கடைசிநாளிலோ இப்படிப்பட்ட தொடர்பு உருவாகாததற்கு காரணமென்ன? ஆவியிலும் ஆத்மாவிலும் பல கிறிஸ்துவர்கள் செழிப்பாயிருக்கிறேன் என்று சொன்னாலும், பொருளாதார காரியத்திலே ஆசீர்வாதமில்லாமல்

இருக்கிறார்களே ஏன்? நமக்கு தேவன் தரும் ஆசீர்வாதத்தை கண்டே புறஜாதியார் நம் தேவனைப் பற்றி சிந்திப்பார்கள் அல்லவா! இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

உலகத்தில் இருக்கிறவனிலும் நமக்குள் இருக்கிறவர் பெரியவர் அல்லவா (1 யோ. 4:4). வானமும் பூமியும் கர்த்தருடையது; பொன்னும் வெள்ளியும் கர்த்தருக்குரியது. அந்த ஐஸ்வர்ய தேவன் தான் மனிதனாய்ப் பிறந்து நம் மத்தியிலே வாசமாயிருக்கிறார் (1 கொரி. 8:9). ஐஸ்வர்ய தேவன் தரித்திரராய்ப் பிறந்ததே தரித்திரரான நாம் பொருளாதாரத்தில் ஐஸ்வரியமாய் வாழ வேண்டும் என்பதற்காகத்தானே! இந்த தேவன் நம்மோடிருக்க நம்மில் பலர் ஏன் வறுமையில் வாடுகிறார்கள். தேவனிடத்திலிருந்து செழிப்பைப் பெற்ற ஒரு சிலரைப் பாருங்கள்:- (1) யோசேப்பு (ஆதி. 39:2-3,23; 41:40-44). (2) யோசுவா (யோசு. 1:7; 12:1-14; 24:15). (3) தாவீது (சங். 30:6; 2 சாமு. 5:10). (4) சாலமோன் (1 ராஜா. 3:13; 4:1-34; 10:7). (5) உசியா (2 நாளா. 26:5). (6) எசேக்கியா (2 நாளா. 31:21; 32:30). (7) தானியேல் (தானி. 6:28). (8) மேசியா (ஏசா. 53:10; எரே. 23:4). (9) ஆபிரகாம் (ஆதி 24:35). (10) விசுவாச மார்க்கத்தார் (கலா. 3:7,9,11). (11) பிலமோன். (12) கொரிந்து பட்டணத்தார். (13) நூற்றுக்கதிபதி யோசேப்பு.

நமக்குத் தெரியும் "ஆசீர்வாதமெல்லாம் நிபந்தனையோடுதான் கொடுக்கப்படுகின்றன." Blessings are conditional. அப்படியே பொருளாதார ஆசீர்வாதத்திற்கும் ஏழு நிபந்தனைகள் உள்ளன. மேலே சொன்ன தேவமனுஷர்களெல்லாம் இந்த நிபந்தனைப்படி நடந்ததாலே செழிப்பா யிருந்தார்கள். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன்னிடத்தில் என்ன குறை என்று உன்னை நீயே நிதானித்துப் பார். **ஏழு நிபந்தனைகளாவன:-** (1) தேவன் நம்மோடிருக்க வேண்டும் (ஆதி. 39:1-3; எரே. 20:11). (2) கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் (உபா. 28:1-14; 1 நாளா. 22:13). (3) வசன தியானம் வேண்டும் (யோசு. 1:8; சங். 1:2-3). (4) வசன விசுவாசம் வேண்டும் (2 நாளா. 20:20; நெகே. 2:20). (5) தேவனைத் தேடுகிற பிள்ளையாயிருக்க வேண்டும் ( 2 நாளா. 26:5; எரே. 10:21). (6) ஆவிக்குரிய மற்றும் மாம்சீக இஸ்ரேலருக்கு நன்மை செய்ய வேண்டும் (ஆதி. 12:1-3; சங். 122:6). (7) உதாரத்துவமாய் கொடுக்க வேண்டும் (லூக். 6:38; கொரி. 8:15). (8) தசமபாகம், காணிக்கை மறக்கவே கூடாது (மல். 3:10). (9) நன்மையே செய்ய வேண்டும் (யாக். 4:17). (10) ஏழைகளை, திக்கற்றவர்களை, விதவைகளை உபசரிக்க வேண்டும் (யாக். 1:27). (11) பிசினித்தனம் கூடாது (நீதி. 11:24).

இவை எல்லாவற்றுக்கும் மேலாக கீழ்க்கண்ட காரியங்கள் உள்ளவர்கள் ஒருநாளும் பொருளாதாரத்தில் செழிப்பாய் இருக்கமாட்டார்கள். (1) தேவனுக்கு விரோதமாய் முறுமுறுப்போர்; கலகம் செய்வோர் (உபா. 28:29) (2) பாவமன்னிப்புப் பெறாமல் பாவத்தை மூடி மூடிவைப்பவர்கள் (நீதி. 28:13). (3) தேவனோடு போரிடுவோர் (ஏசா. 54:17). இரட்சிக்கப் படாதவன், பாவம் செய்பவன் செழிப்பாயிருக்கிறானே என்று சிலர் சொல்வது என் காதில் விழுகிறது. ஐஸ்வர்யம் பிசாசாலும் வருமென்று "கருகலான சத்தியம்" என்ற இதே ஆராய்ச்சிப் புத்தகத்திலே எழுதியிருக்கிறேன். அந்த ஐஸ்வர்யம் நிரந்தரம் இல்லை; வேதனையைக் கூட்டும். தேவன் தரும் ஐஸ்வரியமோ வேதனையைக் கூட்டாது (நீதி. 10:22). உயர்ந்த மலையின் மேல் நிறுத்தி உலக ஐஸ்வர்யங்களை தருகிறேன் என்று இயேசுவிடம் பிசாசு சொன்னது ஞாபகம் இருக்கிறதா? (லூக். 4:5-7). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தேவன் விரும்பும் பொருளாதார ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொண்டு சாட்சியாய் ஜீவிக்க ஆவியானவர்தாமே நம்மை வழிநடத்துவராக! தேவசித்தம் நம்மில் நிறைவேறட்டும் ஆமென்!

❖ ❖ ❖

## யூதா கோத்திரத்தில் இயேசு ஏன் பிறந்தார்?

யாக்கோபுக்குப் பிறந்த 12 பிள்ளைகளையும் 12 கோத்திரமாக்கினார் தேவன். (ரூபன், சிமியோன், லேவி, யூதா, செபுலோன், இசக்கார், தாண், காத், ஆசேர், நப்தலி, யோசேப்பு. பென்யமீன்). இதில் லேவி கோத்திரத்தாரை ஆசாரியத்துவத்திற்காய் தேவன் பிரித்ததால், தேச எல்லைகளைப் பிரிக்கும்போது, யோசேப்பின் இரண்டு மகன்களாக எப்பிராயீம், மனாசே ஆகிய இருவரையும் யோசேப்புக்குப் பதிலாக இருகோத்திரங்களாக்கினார். இந்த 12 கோத்திரங்களிலும் நாலாமவன்தான் யூதா. குடும்பத்தில் தலைமகன் தான் ஊழியங்காரர்களாக்கப்படுவது சட்டம். அந்த வழியில் பார்த்தால் முதல் மகனான ரூபன் வழியில்தான் இயேசு பிறந்திருக்க வேண்டும். அல்லது பிரதான ஆசாரியர் என்று இயேசு சொல்லப்படுவதால் (எபி. 9:1) லேவியர் வரிசையில்தான் அவர் பிறந்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் யூதா கோத்திரத்தில் ஏன் அவர் பிறக்க வேண்டும்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆதியாகமத்திலிருந்து இயேசுவின் சரித்திரத்தைப் பார்த்தால் ஆரம்பத்திலேயே முதல் மகன் காயீன் வழியில் இயேசு வராமல், ஆதாமின்

மூன்றாம் மகனாகிய சேத் வழியிலே தான் வந்தார். தாவீது ஈசாய்க்கு கடைசி மகன்தான். அவன் வழியில் தான் இயேசு வந்தார். சாலமோன் கூட தாவீதுக்கு 5வது மகன். ஆனாலும் இவன் வழியில்தான் இயேசு வந்தார். அப்படியானால் இதற்கெல்லாம் நிச்சயமாய் காரண காரியம் உண்டென்று அறிகிறோம். இப்போதைக்கு ஏன் யூதா வழியில் வந்தார் என்பதை மட்டும் பார்ப்போம்.

யூதா என்ற பெயருக்கு அர்த்தம் "துதியின் மத்தியில் வாசம் பண்ணுகிற தேவன்." இந்த வம்சத்தில் பிறக்க வேண்டும் என்பதற்காகவே துதி என்ற அர்த்தத்தில் யூதா என்று பெயர் வைத்தார்களோ, என்று கருத இடமுண்டு. முதல் மகன் ரூபன் கூட, யோசேப்பை கொல்லாமல், தண்ணீரில்லாத வெற்றுக்குழிக்குள்ளே போட்டுவிடுவோம் என்றான். ஆனால் யூதாவோ சகோதரனைக் கொல்ல வேண்டாம்; அவன் எங்கேயாவது போய் பிழைத்துக் கொள்ளட்டும். (see ஆதி. 37:26,27) என்று சொல்லி அவனை எகிப்தியனுக்கு விற்றுப் போட்டான். ஆக தெய்வீக அன்பு அவன் சாயலாய் இருந்திருக்கிறது. தேவனின் சித்தப்படி பலுகிப் பெருக வேண்டும் என்ற எண்ணத்தில் (ஆதி. 1:28; மல். 2:15) யூதா மரித்துப் போன தன் முதல் மகனின் மனைவி தாமாரோடு 2ம் மகன் ஓணானை இணைத்தான். அவளோடு அவன் சந்ததிக்கு வழிவகுக்காததால் தேவனால் சாகடிக்கப்பட்டான். (ஆதி. 38:15) இந்த தாமாருக்கும் யூதாவுக்கும் வந்த சந்ததியில் தான் (ஆதி. 38:15) இயேசு பிறந்தார். ஆக யூதா, தேவனின் சந்ததி பெருக விழைந்தான். எகிப்துக்கு தானியம் கொள்ளப்போனபோது, பென்யமீனுக்காகத் துணை நிற்கத் துணிந்தவன் இந்த யூதாவே. பாவிகளாகியிருந்த நமக்கு இயேசு ஜாமீன் தந்தது போல. ஆக இயேசுவின் இரட்சிப்பு உள்ளம், இவனிடம் இருந்திருக்கிறது. பிற்பாடு, யோசேப்பின் எகிப்து வீட்டிற்கு அவனுடைய சகோதரர் அழைக்கப்பட்டபோது எல்லாருக்காக பரிந்து பேசியவன் இவனே. இயேசுவின் பரிந்து பேசும் ஆவி இவனிடம் இருந்தது (1 யோ. 2:1). யாக்கோபு எகிப்துக்கு போகு முன், அங்கே வேண்டிய ஆயத்தங்கள் செய்யும்படி அனுப்பப்பட்டவன் இவனே (ஆதி. 46:28). பிதாவுக்காய் இரட்சிப்பை உண்டாக்க இயேசு பூமிக்கு வந்ததுபோல இதை யூகிக்கலாம். மரணத்தருவாயில் யாக்கோபு தீர்க்கத்தரிசனமாய் "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை" (ஆதி. 49:10) என்று "இயேசு யூதா வழியில் தான் வருவாரென்று" தேவனாலே சொன்னான். யூதாவின் குணாதிசயப்படியே இயேசு அவன் சந்ததியில் பிறக்க நேர்ந்தது. யோசுவா மரித்தபின் கானானியரை எதிர்த்து யுத்தம் பண்ண முதன் முதல் யூதா எழுந்து புறப்படட்டும் என்று தேவனே சொல்வதால், யூதாவின் குணாதிசயங்கள் இன்னும் நன்கு புரிகிறது (நியா.

1:2). இயேசு யூதா வழியில் பிறந்தார் என்பதற்கு பரலோகிலே ஆதார வார்த்தை வெளி. 5:5ல் இருப்பது எவ்வளவு விந்தை பார்த்தீர்களா? ஆக இஸ்ரேலரை தெரிந்து கொண்ட தேவன், யூதாவின் ஆத்மா வாழ்கிறபடியே (3 யோ. 2) அவன் சந்ததியில் இயேசுவை பிறக்க வைத்திருக்கிறார் என அறிகிறோம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! யூதாவைப் போலும் அதற்கு மேலும் உன் ஆத்மா இருந்தால் உன் சந்ததியும் அவ்வண்ணமாய் ஆசீர்வதிக்கப்படும்.

மட்டுமல்ல; மூத்தசகோதரன் ரூபன் தன் தகப்பனின் மஞ்சத்தை தீட்டுப்படுத்தினபடியால் (1நாளா. 5:1) ஆசீர்வாதம் இழந்து போனான். தீனாளை தீட்டுப்படுத்திய பின்னும் அவளை மணந்து இஸ்ரேலரோடு ஒருமித்து வாழ இசைந்து, விருத்தசேதனம் பண்ணிக் கொண்ட சீகேமியரைக் கொன்று, சிமியோனும் (2 மற்றும் 3ம் மகன்கள்) லேவியும் துரோகம் செய்தனர் (ஆதி. 35:22). இதனால் நல்ல உள்ளம் கொண்ட யூதாவுக்கு சிரேஷ்ட புத்திர சுதந்தரம் கிடைத்தது. மேலும் ஆசாரிய கோத்திரத்தில் இயேசு பிறவாமல் யூதாவில் பிறந்து, பிரதான ஆசாரியரானதால் நியாயப்பிரமாண ஆசாரியத்துவம் மாற்றப்பட்டதாயிற்று (எபி. 7:11,12) நாமெல்லாரும் ராஜரீக ஆசாரியக் கூட்டமானோம் (1 பேது. 2:9). அல்லேலூயா! பிள்ளைகளே! யூதாவைப் போல இருதயம் நமக்கிருக்கட்டும்; இயேசு தினமும் நம்மில் வெளிப்படுவார்.

❖ ❖ ❖

## தேவனின் சித்தமும், தீர்மானமும் ஒன்றா?

வேதத்தில் ஏராளமான தேவனுடைய சித்தங்களும், தீர்மானங்களும் விவரிக்கப்பட்டுள்ளது. 1 தெச. 4:3ன்படி நாமெல்லாரும் பரிசுத்தமுள்ளவர் களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆனாலும் எல்லாரும் பரிசுத்தமாகிறதில்லை. அவனவன் தன் சுய இச்சையினாலே கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கிறான் (யாக். 1:15). தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லை என்று இயேசு சொல்கிறார். (மத். 19:17) அப்படியானால் தேவசித்தம் வீணாயிற்றா? எபே. 1:10,12; 3:9; 2 தீமோ. 1:9 ரோ. 3:28 போன்ற பல வசனங்களின்படி கிறிஸ்தவ சபையும், அதிலே அங்கம் வசிக்கும் நாமும் தேவனால் தீர்மானிக்கப்பட்டு பரிசுத்தத்திற்கு சொந்தக்கார்களாய் இருக்கிறாம். அதன்படி பார்த்தால் தேவசித்தமும், தேவ தீர்மானமும் வேறு வேறா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே விளக்குவாராக!

**தேவனின் சித்தத்தை (Will of God) அறிவது எப்படி?** 1. கனவு 2. தரிசனம் 3. இருதய உணர்வு 4. சூழ்நிலை 5. அடையாளங்கள் 6. தேவ மனுஷர் 7. வசனம் ஆகியவற்றின் மூலம் தேவன் வெளிப்படுத்துகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக வசனத்தின்படி வெளிப்படுத்துவதுதான் தீர்க்கமானது; உறுதியானது. தேவன் தன்னுடைய தீர்மானத்தையும் (Decision, plan, purpose) இதேபோலத்தான் வெளிப்படுத்துகிறார். அதற்கும் வசனமே ஆதாரமானது. அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன்னாலே தேர்தல் அறிக்கையில் அநேக வாக்குறுதிகளோடு மக்களுக்குச் சொல்வார்கள்; அத்தனையும் மக்களுக்குத் தேவையான ஒன்றுதான். ஆனால் ஆட்சிக்கு வந்து, திட்டமிட்டு, தீர்மானித்து, செயல் வடிவம் பெறும்போது எதிர்க்கட்சிகள், நிலைமைகள், சூழ்நிலைகளின்படி பல தேர்தல் வாக்குறுதிகள் செயல்படுத்த முடியும்; சில வாக்குறுதிகள் செயல்படுத்த முடியாது; சில வாக்குறுதிகள் சற்று மாற்றப்பட்டு செயல்படுத்தப்படும். அது போல தேவசித்தம் என்பது தேர்தல் வாக்குறுதி போல உள்ளது; தேவ தீர்மானம் என்பது திட்டமிட்டு செயல்படும் ஐந்தாண்டுத் திட்டம் அல்லது பட்ஜெட் அல்லது G.O. போல உள்ளது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிடும்; சித்தமோ முழுவதுமாய் நிறைவேறுவதில்லை.

**ஒன்றிரண்டு உதாரணங்களைப் பார்ப்போம்.** இயேசுகிறிஸ்துவை நொறுக்க தேவனுக்குச் சித்தம் (ஏசா.53:10). தேவ சித்தத்திற்கு இயேசு தன்னையே ஒப்புக் கொடுத்தார். ஆனாலும் கெத்சமனே தோட்டத்தில் ஜெபம் பண்ணும்போது, அப்போது பிசாசால் வந்த இந்தக் கசப்பான பாத்திரம் என்னைவிட்டு அகலக்கடவது என்று கேட்டார். அதன்படியே, தேவனின் தீர்மானம் நிறைவேறியது (லூக். 22:22) தேவனின் தீர்மானம் நிறைவேற பிரதான ஆசாரியர், பரிசேயர் ஆகியோரின் தீர்மானமும் (சித்தமல்ல) உறுதுணையாயிருந்தது (மாற்.14:64). மரித்த இயேசுவை உயிர்ப்பிப்பது அவரின் தீர்மானம் (சங். 2:7) இதிலிருந்து நாம் அறிவது என்ன, தேவனின் சித்தம் கூட மாறலாம்; ஆனால் அவர் தீர்மானம் மாறவே மாறாது. பாவம் பெருகிய நினிவேயை அழிக்க சித்தம் கொண்டார் தேவன்; ஆனாலும் யோனா மூலமாய் சுவிசேஷம் சொல்லி, அவர்களை மனந்திருப்ப வைக்க வேண்டும் என்று தீர்மானித்து அதையே செயல்படுத்தினார். அழிவிலிருந்து காத்தார். அல்லேலூயா!

ஒருவனாவது கெட்டுப்போவது தேவனுக்கு சித்தமல்ல (மத்.18:14; யோ. 3:16) ஆனாலும் தேவசித்தம் நிறைவேற பாவமும், மாமிசமும், பிசாசும் தடையாய் இருப்பதால், அநேகர் நரகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்

கின்றனர். ஆனாலும், தேவன் இவர்களுக்காய் திட்டமிட்டு, தீர்மானமிட்டு, இயேசு கிறிஸ்து மூலமாய் காரியம் செய்து கொண்டிருக்கிறார்; அவரின் தீர்மானத்தின்படியே அழைக்கப்பட்டவர்களாய் நாம் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைகிறோம். தேவசித்தம் என்பது பொதுவானது; தீர்மானமோ நிலைமைக்கு ஏற்றாற்போல குறைந்த அளவிலாவது, சித்தத்தை நிறைவேற்றுவதாகும். தேவ சித்தம் இன்னதென்று நாம் பகுத்தறிந்தால்தான் (ரோ.12:2) அது நம்மில் நிறைவேற தேவன் தீர்மானத்திருக்கிறாரா என்று நாம் உணரமுடியும். நம்மை பற்றி தேவன் எடுத்திருக்கிற தீர்மானத்தை அவர் எப்படியும் முடித்தே தீருவார், ஒன்றும் தடைப்படாது (யோபு 42:2) ஆனால் தேவ சித்தத்திற்கு நாம் ஒப்புக் கொடுத்தால் மாத்திரமே தேவ சித்தம் நம்மில் நிறைவேறும். ஒரு சில காரியங்களை (சித்தத்தை) தேவன் நடத்தியே தீரவேண்டியிருப்பதால்தான், அவர் தன் தீர்மானத்தின்படி, கோடியில் ஒருவனாயும், கோத்திரத்தில் ஒருவனாயும் நம்மைத் தெரிந்து கொண்டிருக்கிறார். தேவ சித்தத்தை செயல்படுத்தவேண்டிய நபர்களை வைத்து, தேவன் தன் தீர்மானத்தை முன்கூட்டியே வெளிப்படுத்தி (Predestination) செயல்படுத்துகிறார். அதிலே ஒருவன் யூதாஸ்; ஒருவன் பேதுரு.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ எப்படி இருக்கிறாய்? உன்னைப் பற்றி சபையைப் பற்றி, குடும்பம்பற்றி, தேசம்பற்றி உள்ள தேவசித்தத்தை அறிந்திருக்கிறாயா? அது நிறைவேற தேவனுக்கு வழிவிடுகிறாயா? தேவ சித்தம் புரியவில்லையெனில் அவரின் தீர்மானத்திற்கு விட்டுவிடுகிறாயா? அந்த தீர்மானமும் உன் நிலையை வைத்துத் தான் நிதானிக்கப்படும், உன் சுயத்தை வெறுத்துவிடு; தேவ சித்தத்திற்கு கீழ்ப்படி; வெற்றி உனதே. இரண்டு பக்கம் குந்தி குந்தி நடந்தாலும் அவர் தீர்மானம் உன்னிலே நிறைவேறியே தீரும். அது எப்படியிருக்கும் என்று அறிவாயா? அதையும் கூட தேவன் வெளிப்படுத்துகிறாரே! ஆமென்.

❖ ❖ ❖

## ஜெபிப்பதிலே உள்ள கோளாறுகள்

“எனக்காக உபவாசமிருந்து ஜெபித்தாலும் பதிலில்லையே, அழுது அழுது ஜெபித்தாலும் பதிலில்லையே, பொருத்தனை பண்ணி ஜெபித்தாலும் பதிலில்லையே, பெரிய ஊழியக்காரர் மூலம் ஜெபித்தாலும் பதிலில்லையே.” என்று ஏங்கி, “இதுதான் தேவசித்தம் போலிருக்கிறது; இப்படித் தானே தீர்க்கதரிசனமும் அவர் சொன்னார்.” என்று சொல்லி, தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்ளும் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வோர்

ஏராளம்; ஏராளம். ஏன் இந்த நிலை? இவர்கள் ஜெபத்திலே கோளாறுகள் எதுவும் உண்டா? கருகலானதை ஆவியானவர் விளக்குவாராக!

நிறையப்பேர் யோ. 15:16;16:23,26; 14:13ன்படி இயேசுவின் நாமத்தினால் பிதாவிடம் ஜெபிக்காமல், "அன்புள்ள இயேசு சுவாமி" என்று ஜெபிக்க ஆரம்பிக்கின்றனர். பெரிய பெரிய ஊழியக்காரர்கள் இப்படிச் ஜெபிக்கிறார்களே நான் ஜெபிப்பதில் என்ன தவறு என்று சப்பைக் கட்டு கட்டுவோரும் உண்டு. இப்படி நான் ஜெபித்து பலகாரியங்களை பெற்றிருக்கிறேன் என்று சொல்வோரும் உண்டு. அறியாமையினாலே இப்படி ஜெபிக்கும் போது தேவன் அதை கண்டு கொள்வதில்லை (அப்.17:30). அறிந்தும் செய்தால்... இவர்கள் ஒரு காரியத்தை உணர வேண்டும். தைரியமாய் கிருபாசனத் தண்டைக்குப் போய், அப்பா பிதாவே என்ற புத்திர அதிகாரமாய் ஆண்டவனிடம் கேட்க வேண்டும். அது தெரியாமல், ஆபிரகாம் ஈசாக்கு, தாவீது போன்ற தாசர்களைப் போலவோ, சிநேகிதர்களைப் போலவோ தங்களைத் தாழ்த்திக் கொள்ளுகிறார்கள்; அன்னாளைப் போல் அழுது துடிக்கிறார்கள்; நினிவே பட்டணத்தார் போல உபவாசமிருந்து கதறுகிறார்கள்; யெப்தாவைப் போல பொருத்தனை பண்ணுகிறார்கள்; தங்களைப் பிச்சைகாரர்களைப் போல பாவிக்கிறார்கள். இதைப் பார்த்த தேவன் இரக்கம் பாராட்டி, தம்முடைய பெரிதான கிருபையினாலே பல ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார். இப்படியல்ல நாம் தேவனோடு ஜெபிப்பது. சுதந்திரவாளியாய், தைரியமாய், இயேசுவின் நாமத்தினாலே பிதாவிடம் ஜெபிக்கும் போது எல்லா ஜெபமும் நிச்சயம் கேட்கப்படும்; உன் வாழ்வு செழிப்பாயிருக்க வேண்டுமென்பது தானே தேவசித்தம் (சங்.1:3, 3 யோ.2; 1 யோ. 5:3). "மற்றவர்களுக்காய் ஜெபிக்கும் விதம் வேறு" என்று உணர்ந்து இந்த செய்தியை தொடர்ந்து படியுங்கள்.

நிறையப்பேர் பிசாசு சொன்னதையும் (யோபு 1:10) யோபு புலம்பினதையும் (யோபு19:8) உண்மையென்று நம்பி "கர்த்தாவே! என்னை வேலியடைத்துக் காத்துக்கொள்ளும்" என்று ஜெபிக்கிறார்கள்; பாடுகிறார்கள், ஆனாலும் அவர்கள் வாழ்க்கையிலே கஷ்டம், கவலை, கண்ணீர், வியாதி, வறுமை, ஏன் இப்படி? ஆதாமையும் ஏவாளையும் வேலியடைத்துக் காத்திருந்தால் சாத்தான் எப்படி உள்ளே வந்திருப்பான்? ஆபேலை அப்படி காத்திருந்தால் காயீன் எப்படி கொன்றிருப்பான்? அவரே வேலியடைப்பதும், பின் வேலியை எடுப்பதும், பின் கதறும் போது காப்பாற்றுவதும் ஆகிய நாரதர் வேலையைச் செய்வாரா? அப்படியானால் ஏசா. 59:2 வீணாய்ப் போகுமே! நான் வேலியடைத்துப் பாதுகாக்கிறேன் என்று சொல்லாமல் "உலகத்திலே

உபத்திரவம் உண்டு; திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோ.16:33) என்று இயேசு சொன்னதன் அர்த்தமென்ன? வசனத்தை ஆவியானவரைக் கொண்டு விசுவாசித்து, நம்மைச்சுற்றி நாமே வேலி போட்டுக் கொள்ள வேண்டும்; சர்வாயுத வர்க்கங்களைத் தரித்துக் கொள்ள வேண்டும். இப்படி இல்லாதபடி "வேலியடைத்துக் கொள்ளும் கர்த்தாவே!" என்று ஜெபிப்பதை பார்த்து நமது அறியாமையைக் கண்டு பிசாசு சிரிப்பான்; நமக்கு சங்காரம் உண்டாகும். (ஓசி. 4:6)

நிறைய ஊழியர்கள் அடுத்தவர்கள் வீட்டில் ஜெபிக்கும் போது "நிலைக்கால்களிலும் கதவுகளிலும் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தை தெளிக்கிறேன்; எந்த சங்கார தூதனும் அணுக மாட்டான்!:" என்கின்றனர். எகிப்திலே இருந்த இஸ்ரேலர்கள் தாங்கள் தான் பஸ்காவை அடித்து நிலைக்கால்களில் இரத்தத்தைப் பூசினார்களே ஒழிய, மோசே, ஆரோன், மீரியாம் போன்ற ஊழியர்கள் பூசவில்லை, அப்படிப்போல, சங்காரத்திலிருந்து விடுதலையாக அந்தந்த வீட்டாரே இரத்ததைப் பூசியிருப்பதாய் விசுவாசித்து ஜெபிக்க வேண்டும். வீட்டிற்கு வந்து ஜெபிப்போர் "இப்படிப்பட்ட விசுவாசம் இந்த வீட்டாருக்கு வர வேண்டும்" என்று வேண்டுமானால் ஜெபிக்காலாமே ஒழிய, மற்றப்படி தாங்களே தெளிப்பதாக ஜெபிப்பதை பிசாசு கேட்டு, வீட்டாரை நோக்கி ஏளனமாய்ப் பார்ப்பான்.

மட்டுமல்ல, சிலுவையிலே தேவன் வியாதியை ஒழித்து விட்டார். தற்போது அவரது தழும்புகளாலே சுகமுண்டு. ஆனால் பலர் ஜெபிக்கும் போது "கர்த்தாவே! சுகமாக்கும்; ஆணி பாய்ந்த கரம் தொட்டு சுகமாக்கும்;" என்று ஜெபிக்கின்றனர், மறுபடியும் இயேசு சிலுவையில் காயம்பட்டு சுகமாக்க வேண்டுமா? ஏற்கெனவே சுகம் கொடுத்ததை விசுவாசித்து அல்லவோ ஜெபிக்க வேண்டும்! இப்படித் தான் அவர் சிலுவை மரணத்தில் என்னென்னவெல்லாம் நமக்கு சம்பாதித்துக் கொடுத்தாரோ, அவைகளை யெல்லாம் விசுவாசித்து பெற்றுக் கொள்வதை விட்டுவிட்டு, "அவைகளைத் தாரும்; தாரும்;" என்று கேட்டால் அவரை மறுபடியும் சிலுவையில் அறைய வைக்கிறோம் என்று பொருள். இது அவிசுவாச ஜெபம். மேலும் தேவசித்தம் இன்னதென்று அறிந்து அதற்கேற்றபடி ஜெபிக்க வேண்டும் (1 யோ. 5:14). வசனமே அவரின் சித்தத்தைக் காட்டும் கண்ணாடி. வசனத்துக்கு மாறான அவிசுவாச வார்த்தைகளைச் சொல்லும் போது பிசாசுக்கு கொண்டாட்டமாகும்; அதனால் நமக்கு திண்டாட்டம் வரலாம்.

இன்னும் இருக்கும் ஏராளமான கோளாறுகளையும் சொல்லிக் கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உனக்காய்

ஏறெடுக்கும் உன் ஜெபம் முழுவதும் வசனத்துக்கு ஒத்தே இருக்கட்டும்! உன் வசன விசுவாச அறிக்கையைக் கண்டு பிசாசு ஓடியே போகட்டும்! உங்கள் மனம் எப்பொழுதும் பிரகாசமாயிருக்கட்டும் (எபே.1:17). தினந்தோறும் மறுரூபமாகட்டும் (ரோ. 12:2)! உங்களின் எல்லா ஜெபங்களும் கேட்கப்படும்! ஆமென்.

❖ ❖ ❖

## இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுக்கலாமா?

"இரகசிய கிறிஸ்தவர்கள்" "இரகசிய கிறிஸ்தவர்கள்" என்று சிலரைப் பற்றி கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இப்படிப்பட்டவர்களுக்கு ஒருவருக்கும் தெரியாமல் இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுத்தோம் என்றும் சொல்கிறார்கள். அப்படி இரகசியமாய்க் கொடுப்பது சரிதானா? ஆவியானவர் விளக்குவாராக!

ரோ. 10:9,10 ன் படி இயேசு என் பாவங்களுக்காய் மரித்தார்; என்னை மன்னித்தார் என்று இருதயத்திலே விசுவாசிக்கும் போது நம்மிடத்திலே தேவநீதி உண்டாகிறது. அதை வாயினாலே அறிக்கையிடும் போது இரட்சிக்கப்படுகிறோம். இப்படியாய் ஜலமாகிய வசனத்தினால் ஆவியானவரைக் கொண்டு மனந்திரும்பி - மறுபடியும் பிறந்து - பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றபின் தான் ஞானஸ்நானம் பெற வேண்டும். (யோ.3:3,5; 1 பேது. 1:23; அப். 2:38) "பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கிறேன்; இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட நான் இனி பாவியல்ல; நான் நீதிமான்" என்று புது சிருஷ்டியானதற்கு அடையாளமாகத்தான் நாம் ஞானஸ்நானம் எடுக்கிறோம். ரோமன் கத்தோலிக்க சபையின் ஞானஸ்நான உபதேச "பெரிய குறிப்பிடம்" என்ற புத்தகத்தில், ஏழு தேவத்திரவிய அனுமானங்கள் செல்லப்பட்டுள்ளன. அதிலே முதலாவது, ஞானஸ்நானம் ஆகும். இயேசு கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட வெளியரங்கமான அடையாளமே தேவத்திரவிய அனுமானம் என்று பக்கம் 106ல் தெளிவாய்ப் போடப்பட்டுள்ளது. இது வெளியரங்கமான அடையாளமாய் இருப்பதால் தான் 4000 வருடங்களாய் இல்லாத ஞானஸ்நான முறைமையை பகிரங்கமாய் யோவான்ஸ்நானகன் ஆரம்பித்து செயல்படுத்தினான். இயேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததே பகிரங்கமாய்த்தான். இயேசு பாவி என்பதற்காக அல்ல; இயேசு இஸ்ரேலருக்கு வெளிப்படும் பொருட்டாய் ஞானஸ்நானம் கொடுத்தான். (யோ. 1:31). ஏரோது ராஜாவுக்கோ, பிரதான ஆசாரியர்களுக்கோ பயப்படாமல்

"இவர் தேவ குமாரன்" என்று அறிக்கையிட்டு பகிரங்கமாய் ஞானஸ்நானம் கொடுத்தான். அப்படியிருக்க இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுப்பது தவறல்லவா!

ஞானஸ்நானம் எடுப்போரின் வீட்டுக்கும், இனத்தாருக்கும் தெரிந்தால் மகா உபத்திரவங்களும், துன்பங்களும் வரும் என்பதால் இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்தவனாக்குகிறார்கள் பல ஊழியக்காரர்கள், இப்படி இரகசியமாய் கிறிஸ்தவ சபையில் சேர்த்து என்ன பயன்? கிறிஸ்தவர்கள் எல்லோருமே, எருசலேமிலும் யூதேயாவிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் இயேசுவுக்குச் சாட்சியாய் அறிக்கையிட வேண்டுமல்லவா! (அப். 1:8). ஆத்ம ஆதாயம் செய்ய வேண்டுமல்லவா! மனுஷர் முன்பாக இயேசுவை அறிக்கையிடாதவர்களை பிதாவின் முன்பாக இயேசு மறுதலிப்பார் (மத்.10:32, 33) என்று இயேசு சொல்வதால், நம் விசுவாச அறிக்கை பகிரங்கமாய், இருக்க வேண்டுமல்லவா! "என் கணவர் என்னை விட்டு விடுவார்; என் பெற்றோர் என்னை வெறுத்து விடுவர்; நான் எப்படி வாழ்வது?" என்று சொல்லி யாருக்கும் தெரியாமல் ஞானஸ்நானம் எடுக்க விரும்புவோருக்கு, இரகசிய ஞானஸ்நானம் கொடுக்கவே கூடாது. மாற்.10:29,30ன்படி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதினிமித்தம் எல்லாவற்றையும் விட்டவிடுபவனே கிறிஸ்தவன்! "சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; பெற்றோருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்" (மத். 10:21,22) என்று இயேசு சொல்லவில்லையா? இயேசுவை ஏற்றுக்கொள்வதினிமித்தம் குடும்பத்திலே, சமாதானமல்ல பிரிவினையே உருவாகும் என்று இயேசு சொல்ல வில்லையா? இது தான் அவர் அன்று முதல் போட்டு பற்றி எரிகிற அக்கினி (லூக். 12:49-53). எனவே புருஷனுக்கோ, மனைவிக்கோ வீட்டாருக்கோ தெரியாமல் இயேசுவை இரகசியமாய் ஏற்றுக் கொள்வது என்பது வசனத்திற்கு மாறானது. ரோ. 8:37 ஐ நாம் சாட்சியாய் சொல்ல வேண்டாமா? கிறிஸ்துவின் நிமித்தம் வரும்பாடுகள் ஒரு நாளும் வீணாகாது. பாடுகளை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவரே நமக்கு மாதிரி. இயேசு உலக உபத்திரவங்களை ஜெயித்தது போல நாமும் ஜெயிப்போமல்லவா! (யோ. 16:33). எனவே "கிறிஸ்து என்முன்னே; உலகம் என் பின்னே" என்று கிறிஸ்துவுக்கு முன்னுரிமை கொடுத்து சாட்சியுள்ள கிறிஸ்தவனாய் பகிரங்கமாய் வாழ்வோம்.

**ஒரு கதை.** ஒரு ஊரில் ஒரு சகோதரி இரட்சிக்கப்பட்டு புருஷனுக்கு தெரியாமல் ஞானஸ்நானம் எடுத்துவிட்டாள். காலப்போக்கில், இவர் ஞானஸ்நானம் எடுத்துவிட்டாள் என்ற செய்தி கணவனின் காதுக்கு எட்டியது. ஞானஸ்நானத்தைப் பற்றி அவன் அறியாததினால். இனி மேல் ஞானஸ்நானம் எடுப்பாயா? எடுப்பாயா? என்று சொல்லி அவளை அடித்தான். அவளோ, "இனிமேலே ஞானஸ்நானம் எடுக்கவே மாட்டேன்" என்று ஆணித்தரமாய், "ஒரே தரம்தான் ஞானஸ்நானம்" என்பதை விசுவாசித்து அறிக்கையிட்டாள். இதைக் கேட்ட அறியாமைக் கணவன், மனைவி சொல்லை நம்பினான். காலம் கடந்தது. அவளின் விசுவாச நடக்கையினிமித்தம் இந்த கணவரும் இரட்சிப்புக்குள் வந்தாராம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கிறிஸ்துவை பகிரங்கமாய் ஏற்றுக் கொள்வதால் வரும் துன்பம் ஆயிரமிருந்தாலும் முடிவோ நன்மைக்குரியது. சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் (ரோ.8:24) என்று விசுவாசியுங்கள். இரகசிய இரட்சிப்பால், இரகசிய ஞானஸ்நானத்தால் பயனேதுமில்லை. ஆதி அப்போஸ்தலர்கள் இரகசியமாகவா வாழ்ந்தார்கள்? இரட்சிக்கப்பட்ட மனுஷன் ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவர இரகசியமாய் அவர்களுக்குள் நுழைந்து சத்தியத்தைப் பரப்பலாம். ஆனாலும் சுவிசேஷ உச்ச கட்டத்தில் அந்தப் பகுதியிலுள்ளளோர் அனைவருக்கும் தெரிவது நல்லதுதான். சவுதி அரேபியா, கொய்த் போன்ற முஸ்லீம் நாடுகளில் இரகசியமாய் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இருப்பது உலகப் பிழைப்புக்குத்தானே ஒழிய கிறிஸ்துவுக்காய் அல்ல. அங்கே இரகசியமாய் ஞானஸ்நானம் கொடுப்பது தேவையில்லாத ஒன்று. இரட்சிக்கப்பட்டதற்கு அடையாளமாய் எடுப்பதை எப்படி இரகசியமாய் வைப்பது? உலகத்தில் இருப்பவனிலும் எனக்குள் இருப்பவர் பெரியவர் என்ற விசுவாசம் பெய்யாகுமோ! ரோம சர்க்காரும் பிராதான ஆசாரியரும் வெறுத்தாலும், பகிரங்கமாய் ஆதி அப்போஸ்தலர்கள் ஊழியம் செய்யவில்லையா? கிறிஸ்து எனக்கு ஜீவன்; சாவு எனக்கு ஆதாயம் என்ற பவுலின் விசுவாசம் நமக்கு வேண்டாமா? எதிர்ப்பு உள்ள இடத்தில் ஊழியம் ஏன்? (மத். 10:14). அவர்களுக்காய் ஜெபித்தாலே போதுமே!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இரகசிய ஞானஸ்நானம், இரகசிய கிறிஸ்தவன் என்ற நிலை மாறட்டும்! சாட்சியாய் வெளியரங்கமாய் காட்சியளிப்போம். நாம் மட்டுமல்ல; நம் நிமித்தம் நம் குடும்பம், இனம், தேசம், ஆகிய எல்லாமே இரட்சிப்புக்குள் வரட்டும்! 1 பேது. 3ல் சொல்லப்பட்டபடி மனைவியின் நடக்கையினால் புருஷன் ஆதாயப்படட்டும். தைரியமாய் ஞானஸ்நானம் பெற்ற நாம் கிறிஸ்துவுக்கு முதலிடம்

கொடுத்தாலும், நமக்குள்ள பொறுப்புகளிலிருந்து சற்றேனும் பிறழாமல், குடும்பத்தார் அதிசயிக்கும்படி அவைகளைச் செய்து விட்டு அதன் பின் ஆராதனை, ஜெபம், உபவாசம் போன்றவைகளில் ஈடுபடுங்கள். இரகசிய ஞானஸ்நானம் கொடுப்பதும், பெறுவதும், பின் இரகசியமாய் வாழ்வதும் பரலோகத்திற்கு கொண்டு செல்லாது என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

❖ ❖ ❖

## சாபமும் தண்டனையும் கிறிஸ்தவனுக்கு உண்டா?

உபா.12:26; 30:19ன் படி ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் இஸ்ரேல் ஜனங்கள் முன்னே தேவன் வைக்கிறார். விசுவாசமார்க்கத்தாராகிய நாம், ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கும் போது, சாபமும் தண்டனையும் நம்மைத் தொடர வாய்ப்புண்டல்லவா! இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

முதலில் சாபம், தண்டனை என்பதற்கான வேறுபாடுகளை அறிந்து கொள்வோம். ஆதாமிடம், இந்தக்கனியைப்புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று தேவன் சொன்னார். சாவை அவன் முன்னே வைத்தார். அதை அவன் சுதந்தரித்தான். அன்றே அவன் ஆவியிலே மரித்தான்; தேவனின் தொடர்பில்லாமல் போனான்; ஏதேனைவிட்டு வெளியேற்றப்பட்டான். அவனுடைய சந்ததியும் அவனைப்போல் ஆவியிலே மரித்தோராய் இருக்க விரும்பாத தேவன் தன் குமாரனை அனுப்பி சிலுவையில் இரத்தம் சிந்தவைத்து பாவமன்னிப்பை உண்டு பண்ணினார். இதனால் ஆவியிலே மரித்திருந்த நாம் அதை விசுவாசித்து உயிர்மீட்சி அடைந்தோம். (எபே. 2:1,5) இந்த ஆதாமின் ஆவிக்குரிய மரணம் தேவன் தந்த தண்டனை அல்ல; அவனே தேடிக்கொண்ட சாபம். இந்த சாபத்திற்கு இயேசுவே சாபமாகி பலியாகி - நம்மை மீட்டுக்கொண்டார். ஆனால் ஆதாம் மனந்திரும்பாமற் போனதால் அவனுக்கு தேவன் தண்டனைகளை கொடுத்தார். அதில் ஒன்றுதான் மண்ணுக்கு திரும்ப வேண்டும் என்பது. சாபம் நம் விசுவாசத்தால் மாறும்; தண்டனை மாறாது; கொடுத்த தேவனே மாற்றினால்தான் உண்டு; 1 கொரி. 15:55ன் படி அவரின் வருகையிலே அவரே அந்த மரண தண்டனையை மாற்றுவார். ஆமென். தண்டனை அவரே கொடுப்பது; சாபம் நாம் தேடிக்கொள்வது. சாலையில் இடதுபக்கம் போகவேண்டுமென்பது சட்டம். மீறி நடந்து விபத்து ஏற்பட்டால் அது நாம் தேடிக்கொள்ளும் சாபம். அப்படி மீறி நடந்ததைக் கண்டுபிடித்து போலீஸ்காரர் அபராதம் விதித்தால் அது

தண்டனை. விபத்தை கொடுப்பவர் போலீஸ்காரர் அல்ல; நாம் தேடிக் கொள்வது. தண்டனை கொடுப்பதும் கொடுக்காமலிருப்பதும் போலீஸ்காரர் கையில், அதாவது தேவனின் கையில். ஆக சாபத்தை நாமே வருவித்துக் கொள்கிறோம்.

அன்பைப்பொழிகிற தேவன்; சத்துருக்களையும் சிநேகிக்கச் சொல்லுகிற தேவன், தண்டனைகளையும் கொடுப்பாரா? இது கேள்வி. அவர் பட்சிக்கிற அக்னி; நீதியுள்ள நியாயாதிபதி. எனவே தண்டனையையும் கொடுப்பார். எப்போது? 2 தீமோ 5:24ஐ தியானியுங்கள். அவர் கர்த்தாதி கர்த்தாவாய் ராஜாதி ராஜாவாய் நியாயந்தீர்த்து நரகத் தண்டனை கொடுப்பது ஒன்று. இதுதான் கோபாக்கினையின் நியாயத்தீர்ப்பு நாள். அஃதன்றி, பாவம் செய்த மனுஷன் உலகில் இருக்கும் போதே அவனுக்கு தண்டனை கொடுப்பது ஒன்று. இதுதான் சரித்திர நியாயத்தீர்ப்பு. சோதோம் கோமேரா பட்டண அழிவு; அனனியா சப்பீராள் மரணம் போன்றவை உதாரணம். தொடர்ந்து ஒருவன் பாவம் செய்தால், பாவத்திலேயே நிலைத்திருந்தால் அவன் தேவனால் பிறந்ததை மறப்பவன் அல்லது தேவனை புறக்கணிப்பவன் (1 யோ. 3:8). அப்படிப்பட்டவனுக்குத்தான் தண்டனையைக் கொடுக்கிறார். அது வியாதியாய் இருக்கலாம்; மரணமாயிருக்கலாம்; வறுமையாயிருக்கலாம்; மேன்மையிலிருந்து தள்ளப்படலாம். அதிலிருந்து விடுதலையே இல்லை. உதாரணம் பிசாசு (2 பேது.2:4-9). சரி கேள்விக்கு வருவோம்.

நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதமெல்லாம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வருகிறது என்ற கலா. 3:9 ஐக்காட்டி பல பிரசங்கியார் பிரசங்கிக்கிறார்கள். ஒருவகையில் இது உண்மையா யிருந்தாலும். இந்த ஆசீர்வாதங்கள் நியாயப்பிரமாண கிரியைகளால் தான் வருகின்றன. Blessing is conditional - ஆசீர்வாதம் நிபந்தனைக்குட்பட்டது என்று அறிந்திருக்கிறோம். அப்படியானால் நியாயப்பிரமான கிரியைகளைச் செய்தால்தான் இந்த ஆசீர்வாதங்கள் வருமா? இல்லை. விசுவாசத்தினாலே இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்து இயேசுவினால் நமக்கு வருகின்றன. உண்மைதான். எந்த ஆசீர்வாதங்கள்? நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களா? இல்லை.... இல்லை.... கலா.3:7,8,9,14 ன் படி ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் தான் நமக்கு உண்டு. ஆபிரகாமின் ஆசிர்வாதங்கள் எவை? ஆதி. 12:3ன்படி "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாமுக்குள் ஆசீர்வதிக்கப்படும்." உபா. 28ல் சொல்லப்பட்ட இஸ்ரேலுக்குண்டான ஆசீர்வாதங்கள் மட்டுமல்ல... பூமியின் வம்சங்களுக்கு தேவையான அத்தனை ஆசீர்வாதங்களும் இதிலே அடங்கும். அப்படிப்போல,

கிறிஸ்து இயேசு நியாயப்பிரமாணத்தின் சாபங்களை எல்லாம் நீக்கி மீட்டுக் கொண்டார் என்று கலா.3:13 சொல்வது நியாயப் பிரமாணக்காரர்களாகிய இஸ்ரேலருக்கு மட்டுமே! நாம் தான் நியாயப்பிரமாணம் அறியாதவர்கள்; அதன் ஆசீர்வாதங்களும் தெரியாதவர்கள்; அதன் சாபங்களும் புரியாதவர்கள்; நாம் தான் புறஜாதியாராயிற்றே! அப்படியானால் நமக்கு எந்த சாபமும் இல்லையா? ஆதாம் மூலமாய் மனுக்குலத்தை சாபம் தொடர்ந்திருக்கிறது. அந்த சாபங்களில் பிரதானமானவைகளைத் தான் உபா.28ல் சொல்லப்பட்டுள்ளது. ஆக, நியாயப்பிரமாணத்தை அறியாத முற்காலத்தில் ஆதாம் முதல் மோசே வரை வாழ்ந்தவர்களுக்கும், கிறிஸ்துவுக்குப் பின் வாழும் நமக்கும் சாபம் நிச்சயம் இருக்கத்தான் செய்யும். நியாயப்பிரமாண காலத்தவர்க்கு நியாயப்பிரமாண சாபம் வரும். ஆதாம் தேவனுடைய வார்த்தையை மீறி கனியைப் புசித்ததால் சாபத்திற்குட்பட்டது போல, சாபம் நமக்கும் வரும். இந்த சாபம் என்பது தேவ வார்த்தையை மீறுகிற பாவத்தினால் வருகிறது. ரோ. 6:17; யூதா 17; மத். 28:20ன்படி இயேசு மற்றும் அப்போஸ்தலர் உபதேசங்களை - வார்த்தைகளை - மீறினால் நமக்கு சாபம் வரும்.

ஏசா.59:2ன் படி நம்முடைய அக்கிரமமே தேவனுக்கும் நமக்கும் பிரிவினையை உருவாக்குகிறது. பிரிவினை பெரிதாகப் பெரிதாக சாத்தான் நம்மை ஆள எத்தணிப்பான்.. அவனின் பணியாகிய திருடுதல், கொல்லுதல், அழித்தல் போன்றவை எந்த வழியிலாவது திணிக்க நினைப்பான். இதை நாமே தேடிக் கொள்ளுகிறோம். இதிலிருந்து விடுதலை கிடைக்காதபடி தேவபிரசன்னத்தை விட்டு விலகுகிறோம். அப்போதுதான் ஆவியானவர் 1 யோ. 1:8-10 போன்ற பல வசனங்களைக் கொடுத்து, நியாயப் பிரமாண சாபத்தை மட்டுமல்ல, எல்லா பாவங்களின் சாபங்களையும் சிலுவையிலே தீர்த்த இயேசுவோடு ஒப்புரவாக வைக்கிறார்; விசுவாசத்தில் உறுதிப்படுத்தி சத்தியத்துக்குள் நடத்துகிறார்; தேவனுடைய வித்தாகிய வசனத்தால் ஜெநிப்பிக்கப்பட்ட மனுஷனின் (1 பேது.1:23) காது, இதைக் கேட்டு செயல்பட வைக்கிறது. அதனால் தேவனுக்கும் நமக்குமிருந்த பிரிவினை மறைகிறது. தேவப் பிரசன்னம் நம்மை மூடுகிறது. சமாதானம் பெருகுகிறது. அல்லேலூயா!

இதிலிருந்து நாம் அறிவது என்ன? ஆபிரகாம் மூலம் பூமியிலுள்ள வம்சங்களுக்கெல்லாம் வருகின்ற ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தங்களும் வேதத்தில் எங்கெல்லாம் யாருக்கெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகள் எல்லாமே விசுவாசிக்கிற நமக்கும் உண்டு. வசனத்தை

மீறுகிறதால் ஏற்படும் பாவத்தினால் வரும் சர்த்தானின் எல்லா தீமையான காரியங்களாகிய சாபமும் சாத்தானால் பூமியிலுள்ள சகல வம்சங்களுக்கும் வரும்; பாவம் செய்தும் வாராதே போனால், சாத்தான் கண்டுகொள்ளவில்லை என்று பொருள். ஆனால் தேவன் கண்டு கொள்கிறார் எப்போதுமே! ஒரு நாள் ஜீவ புஸ்தகத்தில் பெயரே கிறுக்கிப் போடும் நிலை வரும். நித்திய நியாயத்தீர்ப்புக்கு முன்னாலேயே தண்டனையும் கூட கிடைக்கலாம். (see 1 தீமோ. 5:24). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தேவ வசனத்தை விசுவாசித்து இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய ஆசீர்வாதங்களை சுதந்தரிப்போம்! பிசாசுக்கு எதிர்த்து நின்று தீமையான சாப காரியங்களிலிருந்து விடுபடுவோம்; தேவ தண்டனையிலிருந்து தப்பிக் கொள்வோம்.

❖ ❖ ❖

## மரித்த பின்னும் இரட்சிக்கப்படுவதற்கு தருணம் உண்டா?

1 பேது. 3:19, 20; 4:6; 1 கொரி. 5:29 போன்ற வசனங்களை வைத்து மரித்தபின்னும் இரட்சிக்கப்படுகிறதற்கு தருணம் இருக்கும் என்று சிலர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும்படி உத்தரிக்கிற ஸ்தலம் (Purgatory) என்ற ஒன்று இருப்பதாகவும், மரித்தவர்கள் அங்க போய் இருந்து பின் பூமியிலே அவர்களுக்காய் செய்யப்படும் ஜெபத்தினாலும் தவத்தினாலும் அவர்கள் மோட்சத்திற்கு கொண்டு போகப்படுவார்கள் என்றும் ரோமன் கத்தோலிக்க சபையும் போதிக்கிறது. இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

கிறிஸ்தவனுக்கு வெளிச்சம் நம் கையிலிருக்கிற வேதம் மட்டுமே! வெளி.22:18-19ஐ வாசியுங்கள். இந்த வேதத்திலில்லாத ஏதேனும், வெளிப்பாடுகளோ தரிசனங்களோ கிடைத்தாலும் அவைகள் தேவ வார்த்தைகளுக்கு ஒத்திருந்தால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஏசா.8:20ஐ வாசியுங்கள். வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் (Law and Testimony) கவனிக்க வேண்டும். இந்த வார்த்தையின்படி சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. மனிதன் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது (எபி.9:27). "அவனவனுடைய கிரியைகளின்படி (பூமியின் கிரியை) அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" (வெளி.22:12; 14:13) என்ற

இயேசுவின் வார்த்தை பொய்யாகுமா? நல்ல கனிகொடா மரங்களெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் (மத்.7:19) என்று வேதம் சொல்கின்றதே. அந்தக் கனிகொடுப்பது பூமியில்தான்! பரலோகப் பிதாவின் சித்தப்படி செய்பவன் மட்டுமே பரலோகம் போவான் என்ற வார்த்தை (மத்.7:21) தவறாகுமா? லாசரு - ஐஸ்வர்யான் காரியத்தில், ஐஸ்வரியவான் பாதாளம் போனானே அவனுக்கு மோட்சம் போக சாத்தியம் இருக்கிறதா? இல்லாததால் தானே தன் சகோதரர்களும் தன்னைப் போல் இந்த இடத்திற்கு வரக்கூடாது என்று எண்ணி பூமியிலியே அவர்கள் தேவ வசனத்திற்குள் வாழ்ந்து மரித்து பரலோகம் போகவேண்டும் என்பதற்காய் லாசருவை மறுபடியும் பூமிக்கு அனுப்பக் கேட்டுக் கொண்டது புரியவில்லையா? (லூக். 16:19-31) பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே , "ஜலத்தினாலும் (வார்த்தை) ஆவியினாலும் பிறவாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" (யோ.3:3.5) என்று நிக்கோ தேமுவிடம் இயேசு சொன்னது தவறாகுமா? இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு இரட்சிக்கப்பட்ட நீதிமானே (ரோ. 3:23,24; 1 கொரி. 6:11), இறுதி இரட்சிப்பை, அதாவது பரலோக வாழ்வை அடையப்போவது அரிது என்று 1 பேது. 4:18 சொல்வதை வாசியுங்கள். ஆக இந்த பூமியிலேயே ஒவ்வொருவனும் இரட்சிக்கப்பட்டு, அந்த இரட்சிப்பில் நிலைத்திருந்தால்தான் (மத். 24:13) பரலோகம் கிடைக்கும். இது வேத சத்தியம்.

மேலே சொல்லப்பட்ட வசனங்களைப் பார்ப்போம். 1 பேது. 3:19, 20 ஐப் பற்றி ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற புத்தகத்தில் வாசிக்கலாம். இயேசு உயிர்ப்பிக்கப்பட்ட பின் பாதாளம் போகவில்லை என்று முந்தி அறியுங்கள். எந்த ஆவியிலே இயேசு கிறிஸ்து உயிர்ப்பிக்கப்பட்டாரோ அதே ஆவியிலேதான், நோவா காலத்தில் கீழ்ப்படியாமல் போனவர்களுக்கு பிரசங்கித்திருக்கிறார். இது நித்தியமாய் இருக்கும் பரிசுத்த ஆவி, இந்த ஆவியில் தான் நோவா கால மனிதர்களோடு தேவன் போராடி அவர்கள் கீழ்ப்படியாததினால் அவர்களைப் படைத்தற்காகவே மனஸ்தாபப்பட்டு ஜலப்பிரளயத்தால் அழித்தார். (ஆதி. 6:3,6) இயேசுவை உயிர்த்தெழுப்பின அதே ஆவியிலே, சொன்ன வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தோர் நோவாவின் குடும்பத்தார்; கீழ்ப்படியாதோர் தான், பிசாசின் கட்டுக்குள் காவலுக்குள், சிறைக்குள் இருந்தவர்கள். இப்படிபட்ட ஆவிகளை விடுவிப்பதுதானே தேவசித்தம். (ஏசா. 61:1-3) அல்லேலூயா! எனவே பாதாளப் பிரசங்கம் தேவையில்லை. அதனால் இரட்சிப்பும் இல்லை. பாதாளத்தில் சரீரம் இல்லை. என்று அறிந்தால், "சரீரத்திலே அவனவன் செய்த நன்மைக்காவது

தீமைக்காவது கிருபாசனத்திற்கு முன்னே நிற்க வேண்டும்." (2 கொரி. 5:10) என்ற வசனப்படி, ஆவியாயிருக்கும் போதும் வசனம் கேட்டு பிரயோஜன மில்லையென்று உறுதியாய்ச் சொல்லலாம்.

1 பேது. 4:6ல் சொல்லப்படட மரித்தோர்கள் சரீரத்தில் மரித்தோர் அல்ல என்றும் ஆவியிலே மரித்தோர் என்றும் முந்தி அறியுங்கள் (எபே. 2:1). 1 கொரி. 5ல் பவுல் அந்த பாவ மனுஷனை பிசாசுக்கு ஒப்புக் கொடுத்து ஆக்கினைக்குள்ளாக்கியது போல, ஆவியிலே மரித்த இரட்சிக்கப்படாதோர் எத்தனையோ பேர் நம் கண் முன்பாகவே மாம்சத்திலே ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்! இப்படி மாம்ச ஆக்கினை, மாம்சம் உள்ள பூமியில்தானே இருக்கும்; பாதாளத்தில் இருக்காதல்லவா! இப்படிப்பட்டவர்கள் இங்கேயே இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் வாழ தேவன் விரும்புகிறார். அதுவே சத்தியம். எனவே மரித்தபின் இரட்சிப்புக்குத் தருணமே இல்லை. தேவன் பட்சிக்கிற அக்கினி. மேலும் 1 கொரி.15:29 பற்றி "மரித்தோர்களுக்கு ஞானஸ்நானமோ?" என்ற தலைப்பில் இதே புத்தகத்தில் எழுதி உள்ளேன், வாசியுங்கள். இங்கே 1 கொரி. 15ல் பேசப்படுவது உயிர்த்தெழுதலைப் பற்றி, அதற்கு ஆதாரமாய் சொல்லி, அவர் மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார்; உயிர்த்தெழுந்தார் என்பதற்கு அடையாளமாய் ஏன் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கிறீர்கள் என்று பவுல் கேள்வி கேட்டு" நீங்கள் மரித்தோரை வைத்து எடுக்கவில்லை; உயிர்த்தோரை வைத்து எடுக்கிறீர்கள்" என்று எழுதுகிறார்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! மரித்தபின் இரட்சிப்புக்கான தருணமே இல்லை என்று ஆணித்தரமாய் விசுவாசி! அதை அப்படியே மற்றவர்களுக்கு சொல்! காதுள்ளவன் கேட்கக்கடவன், பிசாசின் ஆவி கிரியை செய்யும் காலமல்லவா! அதனால் தானே உத்தரிக்கிற ஆத்மாக்கள் திருவிழா, All Saints day, திவசம் செய்தல், ஆறுகளிலும் கடல்களிலும் அஸ்தி கரைத்தல், ஆத்மா சாந்தியடைய ஜெபம் / பிராத்தனைக் கூட்டங்கள், ஏழைகளுக்கு தருமம் செய்தல் போன்றவை நடக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களால்மரித்தபின்னும் இரட்சிப்புக் கிடைக்க தருணம் உண்டென்றால், பூமியிலிருக்கும்போதே நாம் கொஞ்சம் பணத்தை கொடுத்து இப்படிப்பட்ட சடங்குகளைச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு, பலமிருக்கும் வரையும் பாவங்கள் செய்துவிட்டு மரித்துப் போகலாமல்லவா! சிந்திப்போம்! தேவன் மனிதனாய்ப் பிறந்ததை வியர்த்தமாக்குகிறவனுக்கு ஐயோ!

❖ ❖ ❖

# மனிதன் தேவனை தரிசிக்க முடியுமா?

1 தீமோ. 6:16 மற்றும் யோ. 1:19ன் படி நம் தேவன் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவர்; காணக்கூடாதவர்; இதுவரைக்கும் காணப்படாதவர். ஆனால் ஆதி 32:30; யாத். 24:10; நியா. 6:22; வெளி 22:4 போன்ற பல வசனங்களின்படி தேவனை முகமுகமாய் கண்டிருக்கிறார்கள் என அறிகிறோம். ஏன் இந்த வித்தியாசமான கருத்து? ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக.

யோ.4:24ன் படி தேவன் ஆவியாயிருக்கிறார்; ஆவியாயிருக்கிறார் என்றால் காற்றாகவோ, ஆவியாகவோ என்று அல்ல. ஒருவராலும் காணக்கூடாதவராய் (invisible) இருக்கிறார் என்று பொருள். ஆவியாகிய தேவன் தம் சாயலின்படியேயும், தம் ரூபத்தின்படியேயும் மனிதனை உண்டாக்கினார். (ஆதி. 1:26, 27); ஆணும் பெண்ணுமாய் சிருஷ்டித்தார்; ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்கினர். அப்படியானால் ஆணும், பெண்ணும் ஆவியாயிருக்கிறார்கள். அதாவது நமது உள்ளான மனுஷன் தேவ சாயலின்படியும், ரூபத்தின்படியும் படைக்கப்பட்டுள்ளது. புறம்பான மனுஷனாகிய சரீரத்தை காண்கிறோம். ஆனால் உள்ளான மனுஷனாகிய ஆவி-ஆத்மாவை காண முடியவில்லை. (இது குறித்து "ஆசிரியரின் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் உள்ள "ஆவி - உயிர் - ஆத்மா" என்ற செய்தியைப் படியுங்கள்). 1 கொரி. 15:40,44ன்படி ஆவிக்குரிய மேனியும் உண்டென்பதால், கண்களால் காணப்படாத உள்ளான மனுஷனுக்கும், தேவனுக்கும் ஒரு மேனி உண்டென்று அறிகிறோம். அப்படியானால் வேதத்திலே ஆபிரகாம், யாக்கோபு, மோசே, யோசுவா, கிதியோன், சிம்சோன், தாவீது, யோபு, ஏசாயா, ஆமோஸ், எசேக்கியேல், தானியேல், ஸ்தேவான். போன்றேரெல்லாம் கண்டது என்ன?

உதாரணத்திற்கு மோசேயின் காரியத்தை மாத்திரம் பார்ப்போம். யாத். 33:9-11 ஐ வாசித்தால், தேவன் மோசேயோடு முகமுமாய் பேசினார் என அறிகிறோம். யாத். 33:18ல் "உம்முடைய மகிமையை காண வேண்டும்" என்கிறான்; "நீ என் முகத்தை காணமாட்டாய்; ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது" என்று தேவன் சொல்கிறார் (யாத். 23:19) அப்படியானால் மோசே, யாத். 33:9-11ல் கண்ட முகம்தான் என்ன? மோசே கேட்டது என்ன? அவன் தேவனுடைய மகிமையை காண வாஞ்சித்தான். ஒருவரும் சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற தேவனின் மகிமையை காண விரும்பினான். இந்த தேவனின் மகிமையை மிகமிக குறைந்த அனுபவத்தில் சில இடங்களில் பார்க்கப்பட்டிருக்கிறது. (In limited sense as

per யாத்.16:10; 24;16-17). ஆனால் இது வரைக்கும் பார்க்காத மகிமையின் ரூபத்தை மோசே முழுமையாய் காண விரும்புகிறான். பவுல், மகிமையின் ஒளியைக் கண்டதினாலல்லவோ கண்பார்வை இழந்தான்! (அப். 22:11) இப்படிப்பட்டதான தேவனின் பரிபூரண மகிமையின் ரூபத்தை; மகிமையின் முகத்தை; காணக் கூடாத ஒளியின் மேனியை ஒருவனும் இந்த மனுஷக் கண்களால் காண முடியாது; கண்டு உயிரோடிருக்கவும் முடியாது. ஆமென். அதனால்தான் தேவன், தன் வீட்டில் எங்கும் உண்மையுள்ள மோசேக்கு (எண். 12:7) தன் பரிபூரண ரூபத்தின், மகிமை நிறைந்த ரூபத்தின் பின்பக்கத்தை மாத்திரம் காண்பிக்க விரும்பினார் (யாத்.33:23). அதுவும், மோசே அதைக் கண்டும் அதமாகிப் போய்விடக் கூடாது என்ற மிகுந்த பாதுகாப்போடு செய்கின்றார். அப்படியானால் பல இடங்களில் மோசேயும் மற்றவர்களும் கண்டது என்ன? பரிபூரண மகிமை இல்லாத தேவனின் ரூபத்தைக் கண்டிருக்கிறார்கள். தேவனும் அவர்கள் பார்த்துணருகிற காட்சியில் காட்டியிருக்கிறார். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! மகிமை நிறை தேவனை முகமாய் சந்திக்க விரும்புகிறாயா? பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது (எபி. 12:14; மத். 5:8) இதுவரைக்கும் சுயதோற்றமான பொருளை உடையதாயிராத தரிசனங்களை கண்டது போதும்; (2 பேது. 1:20); நேருக்கு நேராய் அவரைக் காண வேண்டாமா? இயேசு சீக்கிரம் வருகிறார்! அவரை முகமுகமாய் மகிமையில் சந்திக்க, இந்தக் கண்களால் அல்ல மறுரூபக்கண்களால் சந்திக்க ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!!

❖ ❖ ❖

# நோவா காலத்திற்கு முன் உலகில் மழை இருந்ததா?

மழையினால் உலகை தேவன் அழிக்கப் போகிறார் என்று நோவா அக்கால மக்களுக்கு எச்சரித்தான் என்றும், அதுவரை மழையையே பார்க்காத, கேள்விப்படாத மக்கள் நோவாவின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் அழிந்தனர் என்றும் பல பெரிய பிரசங்கிமார்கள் பிரசங்கிக்கிறார்களே இது சரிதானா என்று எனக்குக் கேள்வி கேட்டு, சகோ. கோபி, ஆவடி அவர்கள் எழுதியிருந்தார். அதன் அடிப்படையில் நான் தேவனிடம் அமர்ந்தேன். ஆவியானவர் விளக்கிய அந்த கருகலான சத்தியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்.

மனுஷனுடைய அக்கிரமம் பூமியில் பெருகினதால், நித்தமும் மனுஷனின் இருதய நினைவுகளெல்லாம் பொல்லாததாய் இருந்ததால் தேவன் ஆவியிலே கலங்கினார்; மனிதனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார்; எனவே ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி பூமியிலுள்ள சகல மாம்ச ஜந்துகளையும் அழிக்கப் போகிறேன் என்று தேவன் நோவாவிடம் சொன்னார். 40 நாள் இரவும் பகலும் மழையை வருஷிக்கப்பண்ணுவேன் என்றும், அதுவும் பெருமழை பெய்யும் என்றும் தேவன் சொன்னார். ஆதி.6,7 அதிகாரங்களில் "இதுவரையும் நாம் காணாத மழை என்ற ஒன்றினால் பூமியை அழிக்கப் போகிறார் தேவன்" என்று நோவாபிரசங்கித்ததாக தெரியவில்லை. நோவா நீதியைத்தான் பிரசங்கித்தான் என்று 2 பேது 2:5ன் மூலம் அறிகிறோம். கன்னியாகிய மரியாள் கர்ப்பவதியாவாள் என்று தேவதூதன் சொன்ன உடனே, கன்னி கர்ப்பவதியாவதை இதுவரைக்கும் அறியாத மரியாள், இது எப்படி ஆகும் என்று கேட்டாள். அதேபோல, மழையையே அறியாமல் நோவா இருந்திருந்தால் மரியாளைப் போல அவனும் கேட்டிருப்பானல்லவா! அல்லது அவன் காலத்து மக்களாவது கேட்டிருப்பார்கள் அல்லவா! யாருமே கேட்கவில்லையே ஏன்? எல்லோரும் அறியாமலே தேவ வார்த்தையை விசுவாசித்தார்களா? இல்லையே!

தேவன், படைப்பின் போதே மேகங்களை உருவாக்கினார் என்று யோபு 38:9; நீதி.8:27-29; எரே.10:12-13ன் மூலம் அறிகிறோம். அது மட்டுமல்ல. சாத்தான் வீழ்ந்து போகும் முன்பு வட மேகங்கள் இருந்தன என ஏசா.14:14 சொல்கின்றது. மேகங்களில்லாமல் மழையில்லை என்று நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். (ஆதி.9:14) அப்படியிருக்க, நோவாவுக்கு முன்பு கிட்டதட்ட 1600 ஆண்டுகளாய் மேகங்கள் உருவாக்கப்பட்டிருக்கும் பூமியில், மழையே பெய்யவில்லை என்று எப்படி நிதானிக்க முடியும்? மழையே அதுவரை பெய்யவில்லை என்றால், தேவன் மேகத்தை உருவாக்கியது வீண் காரியம் என்று ஆகிவிடாதா? புல், பூண்டு, மரம், செடி, கொடிகள், தானிய வகைகள் முளைத்துக் கிளம்பி செழித்து வளர மழை கண்டிப்பாய் தேவை என்று சங். 147:8 போன்ற வசனங்கள் மூலம் அறிகிறோமல்லவா! ஆதி.1:11ல் தேவன் 3ம் நாள் புல் பூண்டுகளையும், கனி தரும் விருட்சங்களையும் முளைப்பிக்கப் பண்ணினார். தன் படைப்பு முடிந்து - அதாவது ஆதி மனுஷனை உருவாக்கி, அவர் ஓய்ந்திருக்கும் வரைக்கும் மழை பூமியில் பெய்ததாய் தெரியவில்லை. ஆதி. 2:6ன்படி மூடுபனி பூமியிலிருந்து எழும்பி பூமியை நனைத்தது என்று அறிகிறோம். ஈரப்பதமுள்ள மேகங்களிலிருந்து இறங்குவதுதான் இந்தப் பனி என்று நாம்

நன்கு அறிவோம். **ஆதி. 2:5ஐ கவனமாய் வாசியுங்கள்.** பூமியின் மேல் சகலவித புல், பூண்டு, மரங்களும் தேவனால் உண்டாக்கப்படாத நிலையில், இந்தப் புல்பூண்டுகள் உள்ள பூமியைப் பயன்படுத்த மனுஷனை தேவன் உண்டாக்காத நிலையில், பூமியின் மேல் கர்த்தர் மழையைப் பெய்யப் பண்ணவில்லை என்று அறிகிறோம். புல், பூண்டு 3ம் நாள் உண்டாக்கினார் என்றும், மனுஷனை 6ம் நாள் உண்டாக்கினார் என்றும் நாமறிவோம். ஆக, ஆதி. 2:5ன்படி கண்டிப்பாய் தேவன் 6ம் நாளுக்குப் பிறகு பூமியில் மழையைப் பெய்யப்பண்ணி, மரம், செடி, கொடிகளை வளரப்பண்ணி மனுஷனை நிலத்தைப் பயன்படுத்த வைத்தார் என்று திட்டமும் தெளிவுமாய் அறிகிறோம்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நிச்சயமாய் நோவாவிற்கும், அவன் கால மக்களுக்கும் மழை நன்றாய் தெரியுமென்றும், நினிவே பட்டணத்தார் போல அவர்கள் மனந்திரும்பி கீழ்ப்படியாமல் போனதினால், பிசாசின் ஆவியினால் காவலுக்குள் கிடந்ததினால் - மரித்த இயேசுவை உயிர்ப்பித்த அதே ஆவியின் வல்லமையினால் நோவா மூலமாய் இந்த கட்டப்பட்ட ஆவிகளுக்கும் தேவன் பிரசங்கம் பண்ணியும் செவி கொடாமல் அந்த மக்கள் போனபடியினால் (1 பேது. 3:19, 20). பெருமழையால் அந்த மக்களை நிக்கிரகம் பண்ணினார் என்று ஆவியானவர் வெளிப்படுத்திய தற்காக தோத்திரம், இன்னும் தியானியுங்கள். அநேக இரகசியங்கள் வெளிப்படும். அல்லேலூயா!

❖ ❖ ❖

## சிலுவை புனித சின்னமா? அல்லது கிறிஸ்தவனுக்கு அடையாளம் சிலுவையா?

இன்றைக்கு அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் கழுத்துகளிலே சிலுவையைத் தொங்கவிடுகிறார்கள்; தங்கள் வீடுகளிலும் சர்ச்சுகளிலும் தங்கள் உடைகளிலும் சிலுவையை வைத்திருக்கிறார்கள். ஆசீர்வதிக்கும் போது கூட சிலுவை அடையாளமிட்டுத் தான் ஆசீர்வதிக்கிறார்கள். நெற்றியிலே சிலுவை போடுகிறார்கள். முத்திரைகளிலும், லெட்டர் பேடுகளிலும், Emblemகளிலும் சிலுவையைப் பதித்திருக்கிறார்கள். சிலுவையை உயரத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, ஆவிக்குரிய சபையாரும் சேர்ந்து ஊர்வலம் வருகிறார்கள். மொத்தத்தில் சிலுவையானது மதிக்கப்படத்தக்க - மகிமைப்படத்தக்க - கிறிஸ்தவனுக்கே உரிய ஒன்றாய்

மாற்றப்பட்டிருக்கிறது. இது சரிதானா? இது விக்ரக ஆராதனைக்கு வழிவகுக்காதா? கருகலான சத்தியத்தை தேவன் விளக்குவாராக!

வீரபாண்டிய கட்டபொம்மனை தூக்கிலிட்டுக் கொன்றார்கள். இதனால் தூக்குக் கயிறுக்கு மரியாதையா? அல்லது தூக்குக்கயிறுதான் தியாகச் சின்னமா? மகாத்மா காந்தி, இந்திராகாந்தி போன்றோரை துப்பாக்கியால் கொன்றார்கள். இதனால் துப்பாக்கி தியாகச் சின்னமா? இல்லவே இல்லை. தூக்கிலே தொங்கிய கட்டபொம்மனுக்குத் தான் மரியாதையே ஒழிய தூக்குக் கயிறுக்கு அல்ல. துப்பாக்கியால் கொல்லப்பட்ட காந்திதான் மதிக்கப்பட வேண்டியவரே அல்லாமல், துப்பாக்கி அல்ல. உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியான இயேசு சிலுவையிலே தூக்கப்பட்டார். இதனால் சிலுவைக்கு மரியாதையா? இப்படி நான் எழுதுகிறதைக் கண்டு சிலர், "கர்த்தர் இயேசுவை, காந்திக்கும் கட்டபொம்மனுக்கும் உதாரணமாய்ச் சொல்லாமா?" என்கின்றனர். கர்த்தரை மணவாளனுக்கும், தாலந்து கொடுத்த எஜமானுக்கும், கல்யாண வீட்டு ராஜாவுக்கும், விதைக்கிற விவசாயிக்கும், திராட்சைத் தோட்டக்காரருக்கும் உவமானமாய் வேதத்தில் சொல்லப்பட்டதை இவர்கள் வாசிக்கவில்லையோ? தற்கால மக்களின் உணர்வுகளுக்கும் புரிந்துகொள்ளக்கூடிய அறிவுக்கும் ஏற்றபடி உதாரணங்களைச் சொல்லி விளக்குவதில் தவறே இல்லை. இயேசு கிறிஸ்து மனிதனாய்ப் பிறந்த தேவனென்றும், அவர் ஒரு சரித்திரப் புருஷர் என்றும் மனிதனாகவே வாழ்ந்து காட்டி மரித்தவரென்றும் முதலில் இவர்கள் உணரவேண்டும். அவரின் மனித ரூபம் அடிமையின் ரூபமான மனிதரூபம் என்றும், அவர் மனுஷ சாயலானார் என்றும் முந்தி அறிந்தால் (பிலி.2:7) இப்படிப்பட்ட கேள்விகள் எழும்பாது.

சிலுவை என்பது ஓர் அவமானச் சின்னம். சிலுவையில் தூக்கப்பட்டால் அவன் சபிக்கப்பட்டவன் என்று கலா. 3:13 சொல்லும்போது, அந்த சிலுவை நல்ல சின்னமா? இதை புனித சின்னம் என்று சிலர் பாடுகிறதினாலே அதற்கு ஒரு மதிப்பும் மகிமையும் கிறிஸ்தவர்களால் வருகின்றது. நமக்காய்ப் பாவமாக்கப்பட்ட இயேசு (2 கொரி. 5:21) சிலுவையிலே தொங்கியதால், பாவிகளாயிருந்த நாம் தான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறோமே ஒழிய (ரோ. 3:23:24; 1 கொரி. 6:11) அவர் தொங்கிய சிலுவை புனிதமாக்கப்படவில்லை; மகிமைப்படவில்லை; மரியாதை பெறவுமில்லை. அந்தக் கட்டைச் சிலுவை பாவியுமல்ல; அது புனிதமாகவும் தேவையில்லை. இயேசுவுக்கு முன்னால் அதே சிலுவையிலே தொங்கவிடப்பட்ட பயங்கரக் குற்றவாளிகள் பலர் உண்டு. இயேசுவுக்குப் பின்னால் அவர் தொங்கிய அதே சிலுவையிலே

ரோமசர்க்காரால் தொங்கவிடப்பட்ட குற்றவாளிகள் பலர் உண்டு. அந்த கேவலமான கட்டைச் சிலுவைக்காகவா கர்த்தர் மனிதனானார் (யோ.3:16). தற்காலத்தில் உள்ள தடா, மிசா, பொடா என்றெல்லாம் உள்ள சட்டத்தின் முன்னுள்ள குற்றவாளிகளைவிட மிகவும் மோசமான, சாவுக்கேதுவான பாவம் செய்த, தேவனால் சபிக்கப்பட்டவர்கள் தொங்கவிடப்படும் கொடூரமான ஈன, அவமானச் சிலுவையிலே (உபா.21:22, 23; கலா. 3:13) தேவாதி தேவன் தொங்கினார். அந்தோ பயங்கரம்! இந்த சிலுவைக்கு மதிப்புமில்லை மரியாதையுமில்லை. அது வெறும் கட்டையே. அந்த சிலுவையில் தொங்கிய இயேசுவை விட்டு விட்டு ஈனச்சிலுவையை உலகிற்கு காட்டுகிறார்களே பல கிறிஸ்தவர்கள் இவர்களின் மனக்கண்கள் பிரகாசமாகட்டும் (எபே. 1:19). இப்படிப்பட்டவர்களின் மனக்கண்களை பிசாசானவன் தேவன் பக்கம் குருடாக்கி, (2 கொரி. 4:4) தன் பக்கம் திறந்து வைத்திருப்பதாலே (ஆதி. 3:7) இந்தக் காரியம் விக்ரக ஆராதனைக்கு வழிவகுக்கிறது என்று அறியாது இருக்கிறார்கள். இந்த அறியாமையினாலே சங்காரமாகிறார்கள் (ஓசி. 4:6).

கொள்ளிவாய்ச் சர்ப்பங்கள் வனாந்தரத்திலே இஸ்ரேலரைக் கடித்ததினாலே அநேகர் மரித்துப் போன சமயம், தேவன் சொன்னபடி மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின் மேல் தூக்கி வைத்தான். சர்ப்பத்தால் கடிக்கப்பட்ட ஒருவன் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்து பிழைத்தான் (எண். 28:9). அவர்கள் பார்க்க வேண்டியது வெண்கல சர்ப்பத்தைத் தானே ஒழிய அது தொங்குகிற கம்பத்தை அல்ல. இயேசு கிறிஸ்துவும் இதேபோல் தான் சிலுவை மரத்திலே தூக்கிலடப்பட்டார் என்று யோ 3:14, 15 சொல்கின்றது. ஆக, விடுதலை, சுகம், ஆசீர்வாதம், பாதுகாப்பு வேண்டுமென்றால் கிறிஸ்தவனாயிருந்தாலும் சரி, புறஜாதியானாயிருந்தாலும் சரி அவர்கள் விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்க வேண்டியது சிலுவையை அல்ல; சிலுவையில் தொங்கிய இயேசுவை. இந்த வெண்கல சர்ப்பம் கூட பிற்காலத்தில் விக்ரக ஆராதனையாய் மாறிவிட்டது என்று வேதம் சொல்கின்றது. விசுவாசத்திற்காகத்தானே மோசே வெண்கல சர்ப்பத்தை பார்க்கச் சொன்னான். அவர்களோ தற்கால கடைசி கால கிறிஸ்தவர்களைபோல, அந்த வெண்கல சர்ப்பத்தையே அன்று முதல் எசேக்கியா ராஜாவின் காலம் வரை, விக்ரகமாக அதற்குத் தூபம் காட்டி வந்தார்கள். தற்கால கிறிஸ்தவர்களைப் போல நினைவாய் வைத்திருக்கிறோம் என்று கூடச் சொல்லியிருப்பார்கள். இதைராஜா கண்டு, அந்த வெண்கல சர்ப்பத்தையே உடைத்துப் போட்டான் என்று 2 ராஜா. 18:4 சொல்கின்றது. **அதனால் தான் சிலுவையில் தொங்கிய இயேசுவைப்போல் உருவங்கள் செய்வதோ, அதை வீடு, சபை, லெட்டர்பேடு, விளம்பரம்**

**போன்றவைகளில் வைப்பதோ கூடாது என்றும், அது விக்ரக ஆராதனைக்கு வழி வகுக்கும் என்றும், வேதம் திட்டமும் தெளிவுமாய் விளக்குகிறது.** உபா. 5:8,9; ரோ. 1:21-25 போன்றவைகளை வாசியுங்கள். இதனால்தான் பவுலும் மாம்சத்தில் வந்த இயேசுவை இனி அறியோம் என்று (2 கொரி. 5:16) சொல்லியிருக்கிறார். சிலுவையில் தொங்கிய இயேசுகூட பாவியாய் - வெண்கல சர்ப்பமாய் நம் நிமித்தம் ஆக்கப்பட்டதினாலே, அந்த நிழலாட்டமான பிசாசையா பார்ப்பது? அந்த நிழலைப் பார்த்து, நிஜத்தை விசுவாசிக்கவே மோசே அப்படிச் செய்தான். சிலுவையில் தொங்கிய இயேசுவைப் போலவே உருவாக்கவும் கூடாது; நமஸ்கரிக்கவும் கூடாது என்றால் அவர் தொங்கிய சிலுவையை உருவாக்கலாமா? அதையே பிரஸ்தாப்படுத்தலாமா? அதையே கிறிஸ்தவர்களின் அடையாளம் என்று சொல்லிக் கொண்டு தரித்துக் கொள்ளலாமா? நாங்கள் சிலுவையை வணங்குவதில்லையே என்று வாதிடுவோரும் உண்டு. அவர்களுக்காகத் தான் **"உருவாக்கவே வேண்டாம்"** என்று தேவன் சொல்லியிருக்கிறார். புரிந்தவர்கள் புரிந்து கொள்ளட்டும்; தெரிந்தவர்கள் தெரிந்து கொள்ளட்டும்.

சிலுவையை உருவாக்குதல், தரித்துக் கொள்ளுதல், மதித்தல் எல்லாமே பாபிலோனியப் பாரம்பரியமாகும். TAMUS (தமூஸ்) என்ற பாபிலோனிய தெய்வத்தின் பெயரிலுள்ள T (Tou) என்ற முதலெழுத்தை கல்தேயரும், எகிப்தியரும் மந்திர எழுத்தாய் வைத்திருந்தனர். அந்த அடிப்படையில் சிலுவை சின்னம் கிறிஸ்தவர்களுக்குள் உபயோகிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டிலே ஓய்வு நாள் ஆசரிப்பு தான், தேவனுக்கும் இஸ்ரேலருக்கும் அடையாமாய் இருந்தது (எசே. 20:20; யாத். 31:13). புதிய ஏற்பாட்டிலோ ஓய்வு நாட்களுக்கும் ஆண்டவராகிய நிஜமாகிய கிறிஸ்து வந்து விட்டதால் (மாற். 2:28 : கொலோ 2:16,17) இனி நாம் கிறிஸ்துவைத்தான் தரித்துக் கொள்ள வேண்டும். (கலா. 3:27) கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன் என்று உலகமே நம்மைப் பார்த்துச் சொல்லும்படி நம் கிரியைகள் இருக்க வேண்டும். நம்மைக் காண்பவர்கள் கிறிஸ்துவைக் காணவேண்டும். அதனால்தான் இயசே சொன்னார்:- நீங்கள் பூமி முழுவதும் எனக்குச் சாட்சியாயிருங்கள் (அப்.1:8) என்று. கிறிஸ்துவுடனே நாம் சிலுவையில் அறையப்பட்டவர்களாய் (கலா. 2:20; 5:24) அவரோடுகூட உயிர்த்தெழுந்தவர்களாய் நாம் இருக்க வேண்டும். இதுவே கிறிஸ்தவன் என்பதற்கு அடையாளம். பவுலும், பேதுருவும் போகுமிடமெல்லாம் சிலுவையை அடையாளமாய் தங்கள் உடையில் தரித்துக் கொண்டோ கையிலே தூக்கிக் கொண்டோ போனார்களா? ஆதி அப்போஸ்தலர்கள் சிலுவையை புனித சின்னமாக கருதி பிரசங்கித்தார்களா? அது தான்

அவர்களுக்கு அடையாளமாய் இருந்ததா? இல்லையே! பின்பு எப்படி உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கே வந்து விட்டார்கள் என்ற அந்த ஊரார் சொன்னார்கள்? அவர்களின் விசுவாசக் கிரியையும், கிறிஸ்துவின் வசனத்திற்கேற்ற கனியுள்ள சாட்சியுமேதான்: அல்லேலூயா! மாற்.16:20ஐ வாசியுங்கள்: என்றைக்கு பாபிலோனியக் கொள்கை போப் மார்க்கத்தால் கிறிஸ்தவர்களுக்குள் அங்கீகரிக்கப்பட்டதோ அன்றே சிலுவை புனித சின்னமாய் அடையாளமாய் மாறியது. ஒரு தற்கால ஆவிக்குரிய சபை ஊழியர் சொல்கிறார்:- நான் சபை வீடு கட்டி ஒரு கிராமத்தில் ஆராதனை செய்தபோது அந்த ஊரிலிலுள்ளவர்கள் நெல் போன்ற தானியங்களை அடுக்கி வைக்க அந்த சபையை உபயோகிக்கின்றனர். சில நேரங்களில் ஆடு மாடுகள் கூட தங்குகின்றன; என்றைக்கு சிலுவை ஒன்றை பெரிதாக வைத்து கோவில் என்று வெளிக் காட்டினோமோ அன்று முதல், ஊரார் ஒதுங்கிப் போய்விட்டனர் என்று. ஆதிகால ஜெப ஆலயங்களெல்லாம் சிலுவையோடுதான் இருந்ததா? ஜெபவீடு என்ற ஒரு போர்டு போட்டு "இது கர்த்தருடைய வீடு" என்றெல்லாம் வசனங்கள் வெளியே தொங்கவிட்டிருந்தால் ஒருவரும் வரமாட்டார்கள். மற்றபடி சிலுவையைப் பற்றி நீங்கள் போதிக்காமல் புற ஜாதி மக்களுக்கு எப்படி அதன்மேல் ஒரு பயமும் பக்தியும் வரும்? யோசியுங்கள். நம்முடைய சரியில்லாத போதனைகளால் - பிரசாரங்களால் நமக்கே தீமை வருகிறதல்லவா! சிலுவையல்ல பாதுகாப்பு; சிலுவையில் தொங்கிய இயேசுவாகிய வசனமே நமக்கு பாதுகாப்பு! அல்லேலூயா!

வேதத்திலே சில இடங்களில் "சிலுவை சிலுவை" என்று போடப்பட்டதாலே அதை அப்படியே கட்டைச் சிலுவை என்றே பலர் எடுத்துக் கொள்கிறார்கள். சிலுவையைப் பற்றிய உபதேசம் என்று 1 கொரி. 1:18ல் உள்ளதே இது என்ன, சிலுவை எத்தனை அடி நீளம், எத்தனை அடி அகலம், எந்த மரத்தால் செய்யப்பட்டது, என்ன கலர் அடிக்கப்பட்டுள்ளது என்பது போன்ற உபதேசமா? இல்லை. சிலுவை அல்ல; சிலுவையில் தொங்கிய இயேசுவைப் பற்றிய உபதேசம் என்று பொருள்; கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டுவேன் என்று பவுல் எழுதியிருக்கிறாரே (கலா. 6:14) அதன் அர்த்தமென்ன? தங்க சிலுவை, வைர சிலுவை என்ற மேன்மையா? கிறிஸ்துவின் சிலுவை என்றால் அவர் அனுபவித்த அவமானம், நிந்தனை, கேவலம், ஆகிய சிலுவை என்று பொருள். ("அவமானம் நிந்தை சிலுவைதனை" என்று பாடுகிறாமே அதன் பொருள் புரியவில்லையா?) அவமானச் சிலுவையிலே மரித்த இயேசுவால் கிடைத்த ஆசீர்வாதங்களைக் குறித்தே நமக்கு மேன்மையுண்டு. பிலி. 3:18ல் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர் என்று உள்ளதன் அர்த்தமென்ன?

சிலுவையில் மரித்து இரட்சிப்பு அருளிய கிறிஸ்துவின் உபதேசத்திற்குப் பகைஞர் என்று பொருள். இப்படி ஏராளமாய் சொல்லிக் கொண்டே போகலாம். எப்படியோ நாம் ஈனச் சிலுவையை அல்ல; சிலுவையிலே மரித்த கிறிஸ்துவை, கிறிஸ்துவின் வல்லமையை - மகத்துவத்தை மகிமையை தரித்துக் கொள்வோம். (கலா. 2:27). அதுவும் விக்ரகமாய் அல்ல; கிறிஸ்துவையே நம் கிரியைகளால் வெளிக்காட்டி அவருக்கு சாட்சியாய் உலகில் ஜீவிப்போம்.

❖ ❖ ❖

## இடறலுண்டாக்கும் வலது கண்ணைப் பிடுங்கிப் போடலாமா?

மத்.5:29,30ல் வலது கண் இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிய வேண்டும் என்றும், வலது கை இடறலுண்டாக்கினால் அதைத் தறித்து எறிய வேண்டுமென்றும், சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது நல்லது என்றும் இயேசு சொல்லியிருக்கிறார். அப்படியானால் கையையும் கண்ணையும் தறித்து / பிடுங்கிப் போடலாமா? இந்த சரீரம் தேவனுடைய ஆலயமல்லவா! (1 கொரி.6:19) அப்படியிருக்க சரீரத்தை ஊனப்படுத்தலாமா? இதுவரைக்கும் எந்த தேவனுடைய மனுஷனும், இடறல் உண்டாக்கும் அவயத்தை தறித்துப் போட்டதாக கேள்விப்படவே இல்லையே! அப்படி செய்யாதவர்கள் எல்லாம் இயேசுவின் வார்த்தையை கைக்கொள்ளாத பாவிகளா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக! மத்.5:28ஐ வாசியுங்கள். ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்த்தாலே அவளோடே விபச்சாரம் செய்தாயிற்றாம். இது சரீரத்திலே விபச்சாரமல்ல; இருதயமாகிய ஆவியிலே செய்கிற விபச்சாரம். ஆவியில் செய்கிற விபச்சாரம் ஆத்மாவிற்கு வந்து அங்கிருந்து சரீரத்திற்கு வந்து விபச்சாரம் செய்தால்தான் பாவம். இச்சையானது ஆவியிலோ ஆத்மாவிலோ உருவாகி, சாத்தானோடு சேர்ந்து உடலுறவு செய்யும்போது, சரீரத்தில் பிறப்பிக்கிறது தான் பாவம் (யாக்.1:15). அவனவன் சரீரத்தில் செய்த நன்மைக்காவது தீமைக்காவதுதான் தக்க பலன் கிடைக்கும் (2 கொரி. 5:10). அப்படியானால் ஆவியிலும் ஆத்மாவிலும் பாவம் செய்யலாமா? 1 தெச, 5:23ன்படி ஆவியும்ஆத்மாவும் குற்றமில்லாதிருக்கணுமே! ஆவியிலே தேவ ஆவியின் ஒத்தாசையோடு வசனம் எழுதப்பட்டிருப்பதால் (எபி. 8:10) அந்த ஆவி சொல்வதை ஆத்மா கேட்பதால் (சங்.103) தேவ வசனத்தாலே

ஆவியிலும் ஆத்மாவிலும் பரிசுத்தமாக்கப்படுகிறது (யோ. 15:3; 17:17); பாவம் மறைகிறது. ஆனால் சரீரத்திலோ பாவக்கறை உலகிற்கு வெளிப்படுகிறது. பத்சபாளோடு தாவீது சரீரத்திலே செய்த பாவத்தின் கறை, மகன் மூலம் வெளிப்பட்டது அல்லவா! எனவே தான் சரீரம் மூலம் வெளிப்படாமல் இருதயத்திலேயே செய்த பாவத்தை, அங்கேயே களைந்து போடும்படி இயேசு விரும்புகிறார். சரீர மூலம் பாவம் வெளிப்பட்டால் அது பாவம் செய்பவனுக்கு மட்டுமல்ல; உலகிற்கே கேடு விளைவிக்கும். ஆமென். இந்த சிந்தனையிலே கருகலான சத்தியத்தை ஆராய்வோம்.

கண்ணால் பார்க்கும்போது இருதயமாகிய ஆவியிலே விபச்சாரம் செய்கிறான். உண்மைதான். பார்வை என்றாலே இரு கண்ணும் தான் பார்க்கும். வலது கண் பாவப் பார்வையை பார்க்கும்போது இடது கண் நல்ல பார்வையை பார்க்குமா? இல்லையே! சரீரத்தில் பாவம் செய்ய ஆரம்பித்தால் இரண்டு கைகளும் தான் பாவம் செய்யும். வலதுகை பாவம் செய்யும் போது, இடதுகை பாவம் செய்யாமல் இருக்குமா? இல்லையே! அப்படியிருக்க ஏன் ஒரு கண்ணை மாத்திரம் அதுவும் வலது கண்ணை மாத்திரம் பிடுங்கிப் போட வேண்டும்? வலது கண்ணைப் பிடுங்கிப் போட்டால், ஒற்றைக் கண்ணில் மாத்திரம் பாவம் செய்ய முடியாதா? இரண்டு கண்ணும் இல்லாமலே இருதயத்தில் பாவம் செய்ய முடியாதா? முடியுமே! பின்னை ஏன் ஒரு கண் என்று - அதுவும் வலது கண் என்று ஏன் போடப்பட்டுள்ளது. வேதத்தில் வலது என்று போடப்பட்டதெல்லாம், பலம், பராக்கிரமம் என்ற முக்கியத்தை குறிப்பதாக வருகிறது. "வலதுகரம்" (யாத். 15:6); "வலது பாரிசம்" (சங்.16:8) போன்ற வசனங்களை வாசித்து அறியுங்கள். அப்படியானால் "இடது" என்றால் பலமில்லை; மகிமையில்லை என்று பொருளா? நாம் கூட வலதுகைக்கு மரியாதையும் வலதுகையில் பாராக்கிரமும் இருப்பது போன்ற எண்ணத்தையும் கொண்டிருக்கிறோமல்லவா! வலது கைக்கும் இடது கைக்கும் ஒரே வல்லமைதான் உள்ளது. ஆனால் நமது பழக்க வழக்கத்தினால் வலது கை பலம் நிறைந்த கையாய் ஆகிவிடுகின்றது. இந்த அர்த்தத்தில் தான் இயேசு வலதுகண், வலதுகை என்று கூறியுள்ளார் என்று உணரலாம். மொத்தத்தில் கண், கை என்றே அது பொருளாகும். சரி, கண்ணையும், கையையும் வெட்டிவிட்டாலும் இருதயத்தில் பாவம் செய்ய முடியுமே! அப்படியானால் வெட்டச் சொல்வதன் அர்த்தம் சரீரப்பிரகாரமான (Literal) அர்த்தமல்ல; அது ஆவிக்குரிய அர்த்தத்தில் சொல்லப்பட்டது என்று உணரலாம். ஆவிக்குரிய ரீதியில் கண்களையும், கையையும் எப்படி வெட்டுவது?

கலா. 5:24ன் படி கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருப்பது எப்படி? சரீரப் பிரகாரமாய் சிலுவையில் நாம் தொங்க வேண்டுமா? கிறிஸ்துவுடனே கூட பவுல் எப்படி சிலுவையலறையப்பட்டார்? (கலா.2:20). இது ஆவிக்குரிய அர்த்தமுடையது. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் நாம் மரித்தது (எபே.2:1) எப்படி ஆவிக்குரியதோ, அப்படியேதான் இதுவும். ரோ.12:1ன்படி நம் சரீரத்தை ஜீவ பலியாய் ஒப்புக்கொடுப்பதும் ஆவிக்குரிய ரீதியில்தானே! இப்படியாய் ஆவிக்குரிய (Sprititual) ரீதியில் கண்ணைப் பிடுங்குவது எப்படி? கையைத் தரிப்பது எப்படி? ஒருவன் தேவ வசனத்தால் மறுபடியும் பிறந்து புதுசிருஷ்டியாய் ஆவியிலே மாறி, மனமாகிய ஆத்மாவிலே தினந்தோறும் மறுரூபமானாலே பாவத்துக்கு காரணமான உள்ளான மனுஷனின் கண்களும் கைகளும் பிடுங்கப்படுகின்றன;தேவ சாயல் மலர்ந்து கொண்டே வருகிறது. அல்லேலூயா! (யாக்.1:18, 21; 1 பேது.1:23; யோ.3,3,5). See 2 கொரி. 5:17-18; கலா. 5:16-26; ரோ.6:16-23; 8:11-13; 1யோ.1:17; 2:29; 3:6-10, 5:1-5,18. மாம்சமும் மாம்சீகமும் சிலுவையில் அறையப்படுதலும் ஆவிக்குரியவையே! உள்ளான மனுஷரின் பாவக்கண்களும், கைகளும் பிடுங்கப்படுகிறது நல்லது; அதனால் தேவசாயலுள்ள கண்களும், கைகளும் உருவாகும். அப்படிப் பிடுங்காமல் இருந்தால், சரீரம் முழுவதும் நரகத்திற்குப் போகும். இங்கே சொல்லப்படுவது மாம்ச சரீரமும் ஆவிக்குரிய சரீரமும் தான். வெளி. 20:5ல் வரும் முதலாம் உயிர்த்தெழுதல் பரிசுத்தவான்களுக்கு. இரண்டாம் உயிர்த்தெழுதல் நிச்சயம் பாவிக்குத்தான். முதலாம் உயிர்த்தெழுதலில் சரீரம் மறுரூபமாகி பரலோகம் போகும். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உள்ளான மனுஷன் வசனத்தால் மறுரூபமாகட்டும்! பாவத்தை உருவாக்கும் உள்ளான மனுஷனின் அவயங்கள் மறுபிறப்பால், புது சிருஷ்டிப்பால் வசனத்தைக் கொண்டு நாசமாகட்டும்: தேவ சாயலுக்கு உள்ளான மனுஷன் வளர்ந்து பிரகாசிக்கட்டும்! அப்போது சரீரப் பாவமுமில்லை; மறுரூபமாக்கப்பட்ட நம் சரீரம் நரகத்திற்குப் போகவும் தேவையில்லை! இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## "இரகசிய வருகை" என்ற ஒன்று உண்டா?

எபி.9:28ன் படி முதலாந்தரம் பூமிக்கு வந்து நம் பாவங்களைச் சுமந்து இரட்சிப்பு அருளிய இயேசு. இரண்டாந்தரம் இந்த பூமிக்கு வரப்போகிறார் என்பது நிச்சயமே! அதுவும் அப்.1:11ன்படி எந்த ஒலிவமலையிலிருந்து

பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அதே ஒலிவமலையில் மறுபடியும் கால் வைத்து இறங்கப் போகிறார் (சக.14:4). யாருக்காக? இரட்சிப்புக்காக காத்திருப்பவர்களுக்காக! யார் அவர்கள்? நாமல்லவே! நாம்தான் முதலாம் வருகையை விசுவாசித்தே இரட்சிக்கப்பட்டுவிட்டோமே! இவர்கள் 2ம் வருகையில் இரட்சிக்கப்படும் இஸ்ரேலர் (ரோ. 11:25,26). இப்படியாய் பூமிக்கு வருவதற்கு முன்பே, இயேசு மத்திய ஆகாயத்திற்கு வந்து தம்முடைய சபையாரை மட்டும் கூட்டிக் கொண்டு போகப் போகிறார். அதுதான் இரகசிய வருகை என்று சொல்லுகிறோம். இதுபற்றி ஆவியானவர் விளக்குவராக!

1 கொரி.15:51, 52; 1 தெச. 4:15-17 ன்படி கிறிஸ்தவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். இயேசு பூமிக்கு வராமல் மத்திய ஆகாயத்தில் இருக்கிறார். இது எப்படி இரகசிய வருகை? (Rapture) 1 தெச.4:17ல் 'Caught up in the air' என்று உள்ளது. இதற்குரிய கிரேக்க வார்த்தை 'Harpazo' என்பதாகும். இதை ஜெரோம் என்பவர் இலத்தீன் பாஷையில் 'Repere' என்று மொழி பெயர்த்தார். அதுவே ஆங்கிலத்தில் "Rapture" என்று ஆயிற்று. 'Caught up in the air' அதாவது ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுதல் என்பது ஒரு சாதாரண எடுத்துக் கெள்ளப்படுதல் அல்ல; இது ஒரு Super natural catching. அப்.8:39லும் இதே 'Harpazo' என்ற வார்த்தைதான் போடப்பட்டுள்ளது. காந்தேக மந்திரியும் பிலிப்பும் தண்ணீரிலிருந்து கரையேறின போது, ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய்விட்டார். இது அந்த மந்திரிக்கே தெரியாமல் இரகசியமாய் நடந்தது. 2 கொரி.12:2ல் மூன்றாம் வானம் வரைக்கும் பவுல் எடுக்கப்பட்டான் என்பதிலும் இதே Harpazo என்ற வார்த்தைதான் உபயோகிக்கப்பட்டுள்ளது. பவுலுக்குகூட தெரியாதபடி இந்த காரியம் Secret - இரகசியமாக - நடந்திருக்கிறது. **இப்படியாய் சபையார் எடுத்துக் கொள்ளப்படுவது யாருக்கும் அறியாமல் இரகசியமாய் நடக்கும் என்பதற்கான ஆதாரங்கள்** (1) 1 கொரி.15:51; 1 தெச.4:16 போன்ற வசனங்களில் கைவிடப்பட்டவர்களைப் பற்றி ஏதுமில்லை என்பதால் இது இரகசியமானது. (2) சபையார் எடுத்துக் கொள்ளப்படுவதை யாரும் பார்ப்பதாகவும் இல்லை. எனவே இது இரகசியமானது. (3) மத்.24:30,31,40,41 போன்ற வசனங்களில் பூமியிலுள்ள சகலரும் பார்ப்பார்கள் என்று உள்ளது. ஆனால் இந்த தீர்க்கரிசனவசனம் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுவால் சொல்லப்பட்டது.

இது இஸ்ரேலருக்குரியது; சபையாருக்கல்ல. மகா உபத்திரவ காலத்தில் எழும்பும் இரண்டு சாட்சிகளாலும், பிதாவின் நாமம் தரிக்கப்பட்ட 1,44,000 இஸ்ரேலரின் முழக்கத்தாலும், தேவதூதர்களின் மூன்று

தூதுகளாலும் கேள்விப்பட்டு, இயேசுவே ஆண்டவர் என்று விசுவாசிக்கும் இஸ்ரேல் மக்களை கூட்டிக் சேர்க்கும் செயல் இது. சபை எடுத்துக் கொள்ளப்படுவது அல்ல இது. சபை என்பது அந்திகிறிஸ்து ஆட்சி தொடங்கும் போதே எடுத்துக்கொள்ளப்படும். புதிய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் பழைய ஏற்பாட்டில் நிழலாட்டம் உண்டு. ஆபிரகாம் தனது ஒரே பேறான ஈசாக்குக்கு, எலியேசரை பெண் பார்க்க அனுப்புகிறான். தண்ணீர்த் துரவிலே ரெபேக்காளைக் காண்கிறான். அவளை ஈசாக்குக்கென்று நிச்சயித்து அழைத்து வருகிறான். அப்படியே பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மணவாட்டியைப் பிடிக்க கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஆவியானவரை பூமிக்கு அனுப்பிவிட்டார். ஜீவத் தண்ணீராகிய வசனம் வெளிப்படும் நம்மை மணவாட்டியாக கொண்டு போகப் போகிறார். ஊராருக்கு தெரியும் ரெபேக்காள் மணவாளனுக்காக காத்திருக்கிறாள் என்று, அப்படியே சபையராகிய நாம் இயேசுவுக்காய் காத்திருப்பதை சகலரும் அறிவர். ஆனால் ஒரு காரியம். ஈசாக்கு வனாந்திரத்தற்கு வந்ததோ, அதை ரெபேக்காளும் எலியேசரும் பார்த்ததோ, ரெபேக்காள், உடனே முக்காடு போட்டுக் கொண்டு ஈசாக்கின் முன் முகம் குப்புற வணங்கியதோ, ஈசாக்கு அவளை தன் தாய் வீட்டுக்குள் கொண்டு சென்றதோ, ரெபேக்காளின் ஊரார் யாரும் அறியவில்லை. (ஆதி. 24:62-87) அப்படியே, இயேசு மத்திய ஆகாயத்தில் வருகிறதையும், நாம் மறுரூபமாகி எடுத்துக் கொள்ளப்படுவதையும், பூமியிலுள்ளோர் யாரும் அறியார்கள். இது இரகசியமே!

சபை என்பது ஆதி முதல் இரகசியமாகவே வைக்கப்பட்டு பவுல் மூலம் வெளிப்படுத்தப்பட்டு (எபே.2:19-3:6) இரகசியமாய் வைக்கப்பட்ட சபை இரகசியமாகவே எடுத்துக் கொள்ளப்படும். அல்லேலூயா! 1 தெச.4:15-17ல் தேவசத்தம், பிரதான தூதர் சத்தம், தேவ எக்காளம் என்றெல்லாம் உள்ளதே! இந்த சத்தம் கூட உலகத்தாருக்கு கேட்காதா? **இது கேள்வி.** (1) தேவ சத்தம் பாக்கியமுள்ளவர்களால்தான் அறியப்படும். (சங்.89:15) பிரேதக் குழியிலுள்ளோரும் கேட்டுப் புரியும் சத்தம் இது (யோ.5:28,29; 11:43); காதேஸ் வனாந்திரத்தை அதிரப்பண்ணும் சத்தம்; பெண்மானை ஈன வைக்கும் சத்தம்; சாமுவேலிடம் தேவன் பேசியது அருகிலிருந்த ஏலிக்கு கேட்கவில்லை. தமஸ்கு போகும் வழியில் சவுலிடம் பேசிய தேவனின் சத்தம் உடனிருந்தவர்களுக்குப் புரியவில்லை; இயேசுவோடு பிதா பேசிய சத்தமும் அருகிலிருந்தோருக்கு புரியவில்லை; (அப்.9:7; 22:9; 24:14; 1 சாமு 3:7-8; யோ 12:28;29) ஆக தேவசத்தம் எல்லோருக்கம் புரியாது; கேட்காது

(2) **பிரதான தூதர் சத்தம்:-** இது வான மண்டலத்தில் அதுவும் 2ம் வானத்தில் இருக்கும் லூசிபரோடு எதிர்த்து நின்று மிகாவேல் தூதன் வழியை ஆயத்தம் பண்ணும்போது ஏற்படும் சத்தம். இது பூமியில் உள்ளோருக்குப் புரியாது; கேட்காது (3) **தேவ எக்காளம்:-** உலக எக்காளம் கேட்டிருக்கிறோம்; தேவ எக்காளம் ஒருவரும் அறியார். ஆனால் ரேடியோ ஸ்டேஷனுக்கு ஏற்றபடி (tune) டியூன் பண்ணியுள்ள ரேடியோவில் தானே அந்த ஸ்டேஷன்பாடல் கேட்கும். அதுபோல தேவனுக்கேற்றபடி நம் ஆவியும், ஆத்மாவும் சரீரமும் டியூன் பண்ணப்பட்டிருக்கும் போது (1 தெச 5:23) மட்டுமே, தேவ எக்காளம் கேட்கும். மற்றவர்களுக்கு கேட்காது; புரியாது. தாவரம் பசிக்காகவும், தாகத்திற்காகவும் பேசுகின்றன என்று விஞ்ஞானி கண்டு பிடித்திருக்கிறான். தாவரம் பேசுவது அவனுக்குத்தான் தெரியுமே ஒழிய மற்றவர்களுக்கு தெரியாது. அப்படித்தான் தேவ சத்தமும் தேவ எக்காளமும்.

இயேசு கிறிஸ்து உயிர்த்தார்; எனவே கிறிஸ்துவுக்குள் மரித்தோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இயேசு உயிர்த்தெழும்போது ஒருவரும் பார்க்கவில்லை. அப்படியே கிறிஸ்தவன் உயிர்த்தெழுவதும் இரகசியமே. யோ 20:17 மற்றும் 27 ஐ வாசித்தால் இயேசு பரலோகம் போய் வந்திருக்கிறார் என்று நிதானிக்கலாம். ஆனால் அவர் பரலோகம் போனதையோ திரும்பி வந்ததையோ யாரும் காணவில்லை. அப்படியே நாம் பரலோகம் போவதும் இரகசியமே! பகிரங்கமாய் சபையை எடுத்துக்கொள்வதாக இருந்தால் "அவர் வரும்போது சேர்ந்து கொள்கிறேன்" என்று சொல்லி ஒருவனும் கிறிஸ்தவனாக மாட்டான். மரணம் என்பது உலகத்தாருக்கு திடீரென்று வருவதால், இயேசு வரும் போது கிறிஸ்தவனாகலாம் என்ற எண்ணத்தால் நிறையப்பேர் கிறிஸ்தவனாகாமலே மரித்துப் போவார்கள். (see 2 பேது. 3:19) நரகமே அதற்கு முடிவு! வரப்போகும் அந்தி கிறிஸ்துவின் ஆட்சியின்போது கிறிஸ்தவனாகிறேன் என்று சொல்லி, ஒருவரும் இரட்சிப்புக்குள் வரமாட்டான். அந்த ஆட்சியிலே தான் புறஜாதிக்கு இரட்சிப்பே இல்லையே! சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு வரும் பயங்கர அந்திகிறிஸ்துவின் உபத்திரவத்திலிருந்து காக்கவே தேவன் முன் கூட்டியே சபையை எடுத்துக் கொள்கிறார் (வெளி. 3:10; 1 தெச.1:10; 5:9). இதை வாசிக்கும் தேவபிள்ளையே! தேவ அன்பை எண்ணிப்பார்! நினையாத நாழிகையில் தேவன் வருவார் தம் ஜனத்தை அழைக்க! அந்திகிறிஸ்து ஆட்சியும், தேவ கோபாக்கினையும் உனக்கு வேண்டாம்.

❖ ❖ ❖

# இரட்சிப்பும் மீட்பும் ஒன்றா?

ரோ.10:9,10-ன்படி இருதயமாகிய ஆவியிலே விசுவாசித்து, வாயினாலே அறிக்கை பண்ணினால் இரட்சிப்பு உண்டாகிறது. ஆனால் மாற்.16:16ன் படி ஞானஸ்நானம் பெற்றால்தான் இரட்சிப்பு என்று உள்ளது. மத்.24:13ன் படி முடிவு பரியந்தம் நிலைத்து நிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்றிருக்கிறது. இவைகளைப் பார்க்கும்போது இரட்சிப்பு என்பதை கிறிஸ்தவன் அடைந்து விட்டானா . அல்லது இனிமேல்தான் அடையப்போகிறானா என்ற ஒரு சந்தேகம் வருகிறது. அதேபோல தான் சரீரமீட்பு உண்டு என்றும் (ரோ.8:33 with எபே. 4:30) எழுதப்பட்டிருப்பதால் கிறிஸ்தவன் இன்னும் மீட்கப்படவில்லையா என்று எண்ணத் தோன்றுகிறது. ஆவியானவர் தாமே இந்தக் கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

இரசிப்பு (Salvation) என்றாலே விடுதலை, பாதுகாப்பு, அழிவினின்று காப்பாற்றல், சுகம் கிடைத்தல், முழுமையான நிலை போன்றவற்றைக் குறிக்கிறது. ஆக, இரட்சிப்பு என்பது நீதிமானாக்குதல், மீட்குதல், கிருபைப்பலியாதல், மன்னித்தல், தூய்மைப்படுத்தல், மகிமைப்படுத்தல், குற்றம் நீக்கப்படல் போன்ற பல செயல்களை உட்படுத்தியதாகும். இந்த எல்லாக் காரியத்தையும் இயேசு நமக்காய் சிலுவையில் செய்து விட்டார் என்பது உண்மைதான். அதனாலேயே அவரை இரட்சகர் என்கிறோம். இந்த இரட்சிப்பின் அனுபவத்தை கிறிஸ்தவன் முழுவதும் பெற்று விட்டானா? இதற்கு முன்பு "மீட்பு" என்றால் என்ன என்று பார்ப்போம். "விலை கொடுத்து வாங்குவது" என்று பொருள். இயேசு தம் விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தி நம்மை விலை கொடுத்து வாங்கி இருக்கிறார். (1 கொரி 6:20; 1 பேது. 1:9; வெளி 5:9) மட்டுமல்ல. இனிமேலும் விற்கப்படாதபடிக்கு வாங்குவது என்றும் பொருள். இயேசுவும், பாவத்திலும், சாபத்திலும் மரணத்திலும் இனிமேலும் விழாதபடிக்கே சிலுவையில் மீட்பை அருளினார் (கலா.3:13 4:4;5; எபே.5:16) அஃறியும் அடிமையினின்று விடுவிப்பது என்னும் இன்னொரு பொருளும் உண்டு. இயேசுவும் அடிமைத்தனத்தினின்று மீட்டார் சிலுவையிலே (ரோ.3:24; எபே. 1:7, 14; எபி. 9:15). அப்படியானால் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் தேவனுக்கு சொந்தமாக்கப்பட்டபடியால் பிசாசு அவனைத் தொட முடியாது அல்லவா! பின்பு எப்படி பிசாசு கிறிஸ்தவனுக்கு தொல்லை தருகிறான்; மறுபடியும் விழாதபடிக்கே இரட்சிக்கப்பட்டிருக்கும்போது எப்படி இரட்சிக்கப்பட்டவன் விழுகிறான்? அடிமைத் தனத்தினின்று விடுவிக்கப் பட்டிருக்கும்போது எப்படி இன்னும் பாவத்தின் அடிமைக்குள் நுழைகிறான்?

சிலுவையிலே எல்லாவற்றையும் முடித்தார். உண்மைதான். ஆனால் இன்னும் கிறிஸ்தவனுக்கு ஏன் முழுமையாகவில்லை?

**இதை அறியுமுன்னே இரட்சிப்பின் மூன்று நிலைகளை உணர வேண்டும்.** (1) கிறிஸ்தவன் பாவத் தண்டனைக்கும், குற்றத்திற்கும் நீங்கலாக்கி இருக்கிறான் (லூக்.7:50); 1 கொரி 1:18 2 கொரி 2:15 2 தீமோ.1:9) அப்படியானால் அவனுக்கு நியாயத்தீர்ப்பு இல்லையா? நிச்சயம் உண்டு (1 பேது. 4:17,18) நியாயசனத்திற்கு முன்பாக நாம் நின்றே ஆக வேண்டும். (2 கொரி 5:10). அங்கே நமக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோ.8:1) அல்லேலூயா! அதுவரைக்கும் நாம் அனுபவிக்கிறது, ஜாமீனில் வெளியே கொண்டு வரப்பட்ட குற்றவாளி "தனக்கு" தண்டனையே இல்லை; விடுதலையே உண்டு" என்று நம்பி தைரியமாய் நடப்பது போல! ஆமென். இந்த தைரியத்தைக் கொடுக்கவே அவர் இரத்தம் சிந்தி மீட்டார்; ஜாமீன் தந்தார்: இப்போது பரிந்து பேசும் வழக்கறிஞராய் இருக்கிறார். நம் பாவங்களுக்குரிய தண்டனையை அவர் பெற்றுவிட்ட குற்றவாளியாய் இருப்பதால், நியாதிபதியாய் இருந்து நமக்கு நிரந்தர வெற்றி தருவார். அந்த நாள் தான் மீட்கப்படும் நாள். அதுவரை எந்த குற்றமும் செய்யாமல், சாத்தானாகிய போலீசின் கையில் விழாத, ஜாமீனில் வெளி வந்த ஆளைப் போல நாமிருக்க வேண்டும். (2) பாவப் பழக்கத்திலிருந்தும் பாவம் நிறைந்த ஸ்தலத்திலிருந்தும் (Habit and dominion of sin) தினந்தோறும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறான் (ரோ.6:14; 8:2; கலா.2:19-20; கொரி. 3:18,19). (3) இயேசுவின் வருகையில், பாவத்தினால் வந்த பாதகங்களிலிருந்து பாவ உலகிற்கு வரும் சபை ஆக்கினையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு இயேசுவோடு இணைந்து இரட்சிக்கப்படுவான். பாவ ஆக்கினை இல்லை (ரோ. 8:18-23; 1 கொரி. 15:42-44; எபி. 10:36).

இந்த இரட்சிப்பின் முதல் நிலையில்தான் இன்றைக்கு ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் இருக்கிறோம். இதனால்தான் 'இரட்சிக்கப்பட்டோம்' என்று எதிர்காலத்தில் நடக்கப் போவதையும் விசுவாசித்து சொல்கிறோம், (ரோ.10:9,10) இந்த நிலையில் நிலைத்திருந்து தினந்தோறும் இரடசிப்பின் அனுபவத்தைப் பெறுவது தான் இரண்டாம் நிலை. இப்படி, நிலைத்திருந்தால் தான் மூன்றாம் நிலையான இரட்சிப்பு கிடைக்கும். (மத். 24:13; மாற். 16:16). **இதை இன்னும் கொஞ்சம் விபரமாய் சொல்லலாம்.** (1) முதல் நிலை (ரோ.10:9;10 யோ 3:3,5; 1 பேதுரு 1:23) இரட்சிப்படைவது. (2) 2ம் நிலை (ரோ.12:1-2) இரட்சிப்புக்குள் வாழ்வது; வளர்வது. (3) 3ம் நிலை உலகை விட்டு வெளியேறி அவரோடு இணைத்திருப்பது. இந்த மூன்று

நிலைகளையும் சேர்த்துதான் இரட்சிப்பு என்று சொல்கிறோம். ஜாமீனில் வந்திருப்பதைபோல, இரட்சிக்கப்பட்டிருக்கும் முதலாம் நிலையிலுள்ள நமக்கு இறுதிநாளில் முழுமையான - முடிவான இரட்சிப்புக்கு வழி நடத்தவே ஆவியானவரை நாம் முத்திரையாய்ப் பெற்றிருக்கிறோம். (எபே 4:30). ஆக, ஜாமீனின் நிலைபோல இந்த பாவ பூமியில், பிசாசின் பிடியிலுள்ள பூமியில், பாவ ராஜ்யம் மத்தியில், பிசாசின் நடமாட்டம் மத்தியில் வாழும் நாம் பெறப்போகும் முழுமையான இரட்சிப்புக்காய் இயேசு எல்லாம் செய்து முடித்து விட்டார் என்ற விசுவாசத்தோடு தைரியமாய் ஜீவிக்க ஆவியானவரின் வழி நடத்தலில் வாழ்வோம்! நிச்சயமாய் மீட்பின் நாளில், நியாயத் தீர்ப்பின் நாளில் இயேசுவின் இரகசிய வருகை நாளில், சிலுவையில் தேவன் எல்லாம் நமக்காய் முடித்து விட்டதால் பரிபூரண இரட்சிப்பைப் பெற்று நித்திய நித்தியமாய் வாழ்வோம்! முதலாம் நிலை இரட்சிப்பில் நிலைத்திருப்போம்! நிச்சயமாய் மீட்பின் நாளில், நியாயத் தீர்ப்பின் நாளில், இயேசுவின் இரகசிய வருகை நாளில் சிலுவையில் தேவன் எல்லாம் நமக்காகய் முடித்து விட்டதால் பரிபூரண இரட்சிப்பைப் பெற்று நித்திய நித்தியமாய் வாழ்வோம்! ஜாமீன் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! பரிபூரண விடுதலையை அளிக்கப் போகும் தேவனுக்கு ஸ்தோத்திரம். முழுமையாய் மீட்கப்படும்போது, இரட்சிப்பு முழுமையாய் நிறைவேறும்.

❖ ❖ ❖

# யார் ஞானஸ்நானம் கொடுக்க அதிகாரமுள்ளவர்கள்?

"ஞானஸ்நானத்திற்கு வழி நடத்துவது எப்படி?" என்ற தலைப்பில் ஊழியர்களுக்கென்று எழுதப்பட்ட செய்தியில் ஞானஸ்நானம் எடுப்பவர் எப்படி இருக்க வேண்டும் என்று எழுதி இருந்தேன். யார் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று தற்காலத்தில் கேள்விகள் பல எழுந்துள்ளதால் ஆவியானவர் எழுத வைக்கிறார். சில சபைகளில், அதிலும் விசேஷமாய் சி.பி.எம் சபையில் அப்போஸ்தலர்தான் ஞானஸ்நானம் கொடுக்க தகுதி உள்ளவர் என்கிறார்கள். பல சபைகளில் இதற்கென்று ஆர்டினேஷன் (Ordination) பெற்றவர்கள் தான் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். பல சபைகளில் சபை மேய்ப்பர்தான் கொடுக்க வேண்டும் என்கிறார்கள்; அல்லது தலைமை போதகர்தான் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

நாம் இப்பொழுது சிந்தித்துக் கொண்டிருப்பது கிறிஸ்தவ சபையிலுள்ள முழுக்கு ஞானஸ்நானம் பற்றித்தான் என்று முந்தி அறிக. சில பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளில் உள்ள பாஸ்டர்கள், சபைக்கு வரும் புறஜாதி மக்களிடம் "முழுக்கு ஞானஸ்நானம் வேண்டுமா? தெளிப்பு ஞானஸ்நானம் வேண்டுமா?" என்று கேட்டு அதற்கேற்றபடி ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள். பாவத்திற்கு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, இயேசுவைப் போல நீதிக்கு உயிர்த்தெழுந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்கு அடையாளமான ஞானஸ்நானம், எப்படி தெளிப்பு ஞானஸ்நானமாய் இருக்க முடியும்? Baptism என்பது Baptiso என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததுதானே! Baptiso (பாப்டிஸோ) என்றால் மூழ்குதல் என்று தானே பொருள். எனவே வேதத்தில் தெளிவாய் முழுக்க ஞானஸ்நானம் என்று விளக்கியிருக்க அதை விடுத்து எந்த ஞானஸ்நானம் வேண்டும் என்று கேட்டு ஞானஸ்நானம் கொடுப்பவர்கள், ஞானஸ்நானம் கொடுக்க தகுதியில்லாதவர்கள். இதனால்தான் ஒரு சிலர் இதற்கு முன் ஞானஸ்நானம் எடுக்காத இவரைப் போன்றோர், வேறொருவருக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்கின்றனர். அப்படிப் பார்த்தால் முதன் முதலில் வேதத்தில் ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானன் யாரிடமும் ஞானஸ்நானம் பெற்றதில்லையே! அப்படிப்பட்டவனிடம் இயேசு ஞானஸ்நானம் எடுத்தது செல்லுபடி ஆகாதா? யோ. 1:31ன் படி இவன் ஞானஸ்நானம் கொடுக்கவே தேவனால் அனுப்பப்பட்டு வந்தார். இவன் ஞானஸ்நானம் கொடுக்கலாம்; தற்காலத்தில் அப்படி யாராவது தேவனால் அனுப்பப்பட்டு இருந்தால் இதற்குமுன் ஞானஸ்நானம் எடுக்காமலே மற்றவர்களுக்கு கொடுக்கலாம். யோவான் ஸ்நானகன் காலம் பழைய ஏற்பாடு என்பதாலும், அவன் தான் முதன் முதல் ஞானஸ்நானம் கொடுத்தான் என்பதாலும் அவன் செய்தது சரியே! நாமோ புதிய ஏற்பாட்டில் இருக்கிறோம். இயேசு காலத்திலேயே ஞானஸ்நானம் பெறாத ஆவிக்குரிய ஊழியரோ, விசுவாசியோ ஒருவரும் இல்லை. எனவே இந்த கேள்வி அடிப்பட்டு போயிற்று.

சமாரியா நாட்டில் ஞானஸ்நானம் கொடுத்த பிலிப்பு, காந்தேகியின் மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்த பிலிப்பு (அப்.8) அப்போஸ்தலனல்ல; விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவன்; பந்தி விசாரணைக்காய் நியமிக்கப்பட்டவன் (அப்.6:3-6) ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டபின் சிதறிப் போய் சமாரியாவுக்கு சுவிசேஷம் சொல்ல வந்தவன். அவன் ஒரு சபைப் போதகனும் அல்ல; சுவிசேஷ ஊழியம் செய்பவன் (அப்.8:40). அப்படிப்பட்டவனுக்கு ஞானஸ்நானம் கொடுக்க தகுதி இருந்ததல்லவா! இயேசு கிறிஸ்து பரலோகம் போகும் போது மத்.28:18-20ல் ஞானஸ்நானம்

கொடுக்கச் சொல்லி யாருக்குக் கட்டளையிட்டார்? 11 சீஷர்களையும் அவர்களோடு சந்தோசப்பட்டு மலையடியில் நின்றிருந்த கிட்டத்தட்ட 500 சகோதரர்களையும் பார்த்துச் சொன்ன கட்டளை இது (மத்.28:16,17; 1 கொரி.15:6 அப்.1:3,6). இயேசு கிறிஸ்துவின் சகோதரர்களாகிவிட்ட, சீஷர்களாகிவிட்ட அனைவரும் ஞானஸ்நானம் கொடுக்க அதிகாரம் பெற்றிருக்கும் போது ஏன் இப்படிப்பட்ட வித்தியாசமான கருத்து? **அப்படியானால் விசுவாசிகளும் ஞானஸ்நானம் கொடுக்கலாமா?** இது கேள்வி. மத். 28:18-20ன் படி ஞானஸ்நானம் கொடுக்கும் நபர், இயேசு போதித்தவைகளை ஞானஸ்நானம் எடுத்தவர் கைக்கொள்ளும்படி போதித்து வழி நடத்துகிறவராய் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர் எபே.4:13ன்படி மேய்ப்பரும் போதகருமாயிருக்கிற சபையின் பாஸ்ட்டர்தான். எனவே கிறிஸ்தவ சபை போதகர் எல்லோருமே ஞானஸ்நானம் கொடுக்க தகுதி பெற்றவர்கள். சபை போதகர் என்று ஆர்டினேஷன் பெற்றால்தான் சபை பாஸ்டரா? பவுல் அப்போஸ்தலனாகியிருக்கிறாரே அவரை ஆர்டினேஷன் பண்ணியது யார்? இதுவும் கேள்விதான்.

இயேசுகிறிஸ்துவும், பிதாவும் தான் தன்னை ஆர்டினேஷன் பண்ணினார்கள் என்று பவுலே, கலா. 1:1ல் சொல்வதைப் பாருங்கள் (see 1 தீமோ 1:1). அப்படிப் போல தற்காலத்திலும் சபை விசுவாசிகளை தேவனே 5 விதமான ஊழியங்களில் ஏதாவது ஒன்றிற்கோ, இரண்டிற்கோ எல்லாவற்றுக்குமோ ஆர்டினேஷன் பண்ணலாமல்லவா! உலக மனித ஊழியர்கள் தான் ஆர்டினேஷன் பண்ண வேண்டுமென்று கட்டாயமில்லை. அப்படி ஆர்டினேஷன் தேவசித்தப்படி நடந்தால் அது நல்லது தான். எனவே தேவ அழைப்பை உறுதி செய்து கொண்டு, ஞானஸ்நானம் பெறப் போகும் நபரை சத்தியத்தில் நடத்த நம்மாலே முடியும் என்றால், நிச்சயம் நாம் ஞானஸ்நானம் கொடுக்கலாம். அப்படியில்லையென்றால் இரட்சிப்புக்கு ஒப்புக்கொடுத்த சகோதரனை ஏதோ ஒரு சபையில் இணைய வைத்து அந்த சபை போதகரையே ஞானஸ்நானம் கொடுக்க வைக்கலாம்.

ஞானஸ்நானம் கொடுத்தே ஆக வேண்டுமென்ற அத்தியாவசியத் தேவை வந்தபோது, அருகில் எங்குமே பாஸ்டர்கள் இல்லாத நிலையில் கிறிஸ்தவ விசுவாசிகள் யாரும் ஞானஸ்நானம் கொடுக்கலாம். ஞானஸ்நானம் கொடுத்தபின் வழி நடத்த, தாயில்லாப் பிள்ளையாய் அந்த விசுவாசியை ஆக்கக்கூடாது; அது பிரதான பாவமாகி விடும். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன் விசுவாசப்படி வசனத்தோடு செயல்படு! பாரம்பரியம் ஒழியட்டும்! பகுத்தறிவு மலரட்டும்! விடுதலை பிறக்கட்டும்!.

# எது அந்தகாரம்? ஏன் தூதர்கள் அடைக்கப்பட்டார்கள்?

2பேது.2:4; யூதா. 8 போன்ற வசனங்களில் பாவம் செய்த தூதர்களை தேவன் அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது. யார் அந்த தூதர்கள்? எது அந்த காரம்? ஏன் அடைக்கப் பட்டார்கள்? இப்படிப்பட்ட கேள்விகள் பலருக்கு எழும்பினாலும் பதில் தெரியாமல் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு ஆவியானவர் விளக்குவாராக!

பிசாசு என்பவன் ஒரே ஒருவன்தான் என்று முந்தி அறிய வேண்டும். (வலுசர்ப்பம்; அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி-லூசிபர்; சாத்தான்) இவன் தனது மேட்டிமையினால் ஏசா.14, எசே 28ல் சொல்லப்பட்டபடி கீழே தள்ளப்பட்டான். அவன் தன்னோடுகூட மூன்றிலொரு பங்கு தூதர்களையும் தன்னோடு கொண்டு வந்தான் (வெளி.12:4). அவர்களோடு இணைந்து ஏதேனைத் தலைமையாய்க் கொண்டு ஆண்ட இந்த பூமியை ஒழுங்கின்மை ஆக்கினான். தேவனின் கோபாக்கினையால் அது வெறுமையானது. (ஆதி.1:2) அதன் பின்தான் பக்தியுள்ள சந்ததியைப் படைத்து, சாத்தானும் அவன் தூதர்களும் இருந்த ஸ்தலத்திலே வைக்க தேவன் விரும்பி ஆதாமைப் படைத்தார் (மல்.2:15). அப்போதே சாத்தானுக்கு திருடவும் கொல்லவும், அழிக்கவும் அனுமதி கொடுத்தாயிற்று. இந்த சாத்தானும் அவனது தூதர்களும் தான், தேவன் ஆதியிலே அவர்களுக்குத் தந்த மேன்மையைக் காத்துக் கொள்ளாதவர்கள்; மட்டுமல்ல, அவனோடிருந்த சில தூதர்கள் தங்களின் வாசஸ்தலத்தை dominion, அதாவது தாங்கள் கிரியை செய்ய வேண்டிய ஸ்தலத்தை விட்டு விட்டார்கள். அப்படி என்ன தான் செய்தார்கள்? இந்த தூதர்கள் பிசாசின் கட்டளைப்படி செய்திருந்தால் பிசாசையும் தேவன் அடைத்திருப்பாரல்லவா! பிசாசுதான் வானமண்டலத்தில் 2ம் வானில் இருந்து கொண்டு பூமியை இன்னும் கெடுத்துக் கொண்டிருக்கிறானே! (எபே.6:12). அதாவது தலைமைப் பிசாசின் அனுமதியின்றி இந்த தூதர்கள் தங்களின் ஸ்தலத்தை விட்டு வெளியேறி பாவம் செய்திருக்கிறார்கள். இன்னும் கூட சாத்தானுக்கு பல தூதர்கள் அவனோடு இருப்பதால், எல்லா தூதர்களும் இப்படிப் பாவம் செய்யவில்லை என அறிகிறோம். வேதத்தில் பிசாசின் தூதர்களையும் பிசாசு என்று எழுதப்பட்டிருக்கிறது என்றும், ஆங்கிலத்தில் Demons / Evil spirits என சொல்லப்பட்டிருக்கிறது என்றும் முந்தி நாம் அறிய வேண்டும். ஆக, பாவம் செய்த பிசாசின் தூதர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினர் தான் இவர்கள் என்று அறிகிறோம்.

அந்த குறிப்பிட்ட ஒருசில தூதர்கள் செய்த பாவம் என்ன? யூதா.7ன்படி சோதோம் கொமோராப் பட்டணத்தார் செய்த விபச்சாரம் போல, இவர்களும் செய்திருக்கிறார்கள் என்று விளங்குகிறது. தேவ தூதர்கள் ஆணென்றுமில்லை; பெண்ணென்றுமில்லை, ஆனாலும் வேதத்தில் ஆண்பாலில்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இருப்பினும் Sex in the human sense is never ascribed to angles (மத்.22:30. மாற்.12:25). சோதோம் கொமரா பட்டணத்தார் மனிதர்களாயிருப்பதால் உடலளவில் விபச்சாரம் பண்ணினார்கள். அதைத்தான் பெண் கொண்டும் பெண் கொடுத்தும் என்று வேதம் சொல்கின்றது (லூக். 17:28). பிசாசின் தூதர்களோ ஆவியாய் இருப்பதால் (சங்.104:4; எபி.1:14) அவர்கள் செய்த விபச்சாரம் ஆவிக்குரியதாகத்தான் இருக்க முடியும். ஆவிக்குரிய விபச்சாரங்கள் பல உள்ளன. அவைகளில் ஒன்று அந்நிய நுகப்பிணைப்பு (2 கொரி 6:14-15; உபா.7:1-3) இதை நோவா காலத்தில் சாத்தானின் தூதர்கள் தூண்டி விட்டு தேவனுடைய பிள்ளைகள் (Saints of God), உலக மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தர்யம் உள்ளவர்கள் என்று கண்டு, திருமணம் பண்ண வைத்தனர். இதனாலே பூமியில் அக்கிரமம் பெருகியது; மனுஷனைப் படைத்ததற்காய் தேவன் மனஸ்தாபப்பட்டார் (ஆதி.6:6). இஸ்ரேல் ராஜ்யம் இரண்டாய்ப் பிரிந்ததே இதனால்தானே! (1 ராஜா 11). உலகத் தோற்றம் முதலே அந்நிய நுகப்பினைப்பு தேவனுக்குப் பிடிக்காத ஒன்று, மட்டுமல்ல; இந்த விக்ரக ஆராதனை ஒரு ஆவிக்குரிய விபச்சாரம். தேவனை விசுவாசிக்காமல் வேறொன்றை விசுவாசித்து செயல்படுவது விக்ரக ஆராதனை, இஸ்ரேல் மக்கள் கன்றுக்குட்டி செய்து முக்கியப்படுத்தியதால் அல்லவோ அவர்களின் பெயர்களை தேவன் ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போட துணிந்தார்! இப்படியாய் ஆவிக்குரிய விபச்சாரம் செய்ய வைத்தவர்கள் பிசாசின் தூதர்கள். பொருளாசை, முரட்டாட்டம், தேவனுக்குரிய பணத்தை கொள்ளையிடல் போன்ற பல ஆவிக்குரிய விபச்சாரங்கள் ஏவி விடப்பட்டன.

சோதோமில் ஏவி விட்டது ஆண் புணர்ச்சி. இப்படிப்பட்ட காரியங்களை ஆரம்பத்திலே செய்கிற பிசாசின் தூதர்களை தேவன் கண்டார். அவர்களை மாத்திரம் அந்த காரத்தில் அடைத்து வைத்தார். அப்படியானல் மற்ற தூதர்களும், பிசாசும், மேற்கண்ட ஆவிக்குரிய விபச்சாரங்கள் செய்யவில்லையா? இது கேள்வி. சோதோம் கொமோராவை மட்டும் அக்கினியால் தேவன் அழித்தாரே மற்ற பட்டணங்களெல்லாம் அப்படிப்பட்ட பாவங்களை செய்யவில்லையா? நோவா காலத்தில் உலகையே ஜலத்தால் நிர்மூலமாக்கி 8 பேரை மட்டும் உயிரோடு வைத்தாரே, அந்த கால மக்கள் போல அதற்குப்பின் உள்ள மக்கள் இன்று வரை பாவம் செய்யவில்லையா?

பின்னை ஏன் அவர்களை மாத்திரம் அழித்தார்? 2 பேது. 2:6ன் படி பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாய் வைத்திருக்கிறார். அப்படியே இந்தப் பாவஞ் செய்த தூதர்களையும், நமக்காகவும் இன்னும் சாத்தானோடு அலைகிற தூதர்களுக்காகவும் திருஷ்டாந்தமாய் தேவன் அந்தகாரத்தில் அடைத்து வைத்துள்ளார். அதுவும் வெளி.20ல் சொல்லப்படும் நியாயத் தீர்ப்பின் நாள் வரை. எங்கே அந்த காரம் உள்ளது? 2 பேது. 2:4ன் படி நரகத்திலே தள்ளப்பட்டிருப்பதாகவும் அங்கேதான் இந்த அந்தகாரம் உண்டென்றும் அறிகிறோம். இங்கே சொல்லப்பட்ட நரகத்திற்கு, "இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல்" என்ற கிரேக்க வார்த்தை போடாமல் "Tartaros" என்ற வார்த்தை போடப்பட்டுள்ளது. இதன் பொருள் இருளடைந்த பாதாளம் என்பதாகும். "Zophos" என்னும் கிரேக்க வார்த்தை அந்தகாரத்திற்கு உபயோகிக்கப்பட்டுள்ளதால் இது உண்மையான இருள் நிறைந்த இடம்தான். அந்தகாரச் சங்கிலி என்பதில், சங்கிலி என்பதற்கு "Seira" என்ற கிரேக்க பதம் 2 பேது. 2:4லும் "Desmos" என்று யூதா 6லும் போடப்பட்டுள்ளதால் நிச்சயமாய் இது அந்தகாரச் சங்கிலி என்றே பொருளாகும். பிசாசை அந்தகார சங்கிலியால் கட்டமுடியுமா என்று ஒரு கேள்வி கேட்கலாம்.லூக் 13:16; மாற்.7:35 போன்ற இடங்களில் பிசாசு - பிசாசின் தூதர்கள் - மனிதனைக் கட்ட முடியுமென்றால், நம் தேவனால் பாவம் செய்த பிசாசின் தூதர்களை இருளடைந்த பாதாளத்தில் தள்ளி அந்தகாரச் சங்கிலியினால் கட்ட முடியாதா?

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! ஆவிக்குரிய விபச்சாரத்தை நடத்த வைக்கும் பிசாசின் தூதர்களுக்கே இந்த நிலையென்றால், இரட்சிப்பைப் பெற்று அனுபவித்துக் கொண்டிருக்கும் நாம், அப்படிப் பாவம் செய்தால் நம் நிலை என்னவாகும்? சற்று சிந்தியுங்கள். 1 தீமோ.5:24 ஐ மறந்து போகாதே! திருஷ்டாந்தம் நமக்குப் பாடமாகட்டும்!

❖ ❖ ❖

## பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை விட நாம் விசேஷித்தவர்களா?

பழைய ஏற்பாட்டுக்கு முற்பட்ட நோவா, யோபு, ஏனோக்கு, ஆபிரகாம் மற்றும் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்த மோசே, தாவீது, தானியேல் போன்ற எல்லா பரிசுத்தவான்களைவிட புதிய ஏற்பாட்டு பரிசுத்த வான்களாகிய நாம்

விசேஷித்தவர்கள்; பூரண ரானவர்கள் என்று நான் பலமுறை செய்தி கொடுத்திருக்கிறேன். எழுதியிருக்கிறேன். ஆனாலும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அவர்களையே மேன்மையானவர்கள் என்று நம்பி போதிக்கின்றனர். இவர்களுக்கு கருகலாக்கப்பட்ட இந்த சத்தியத்தை வெளிப்படையாக விளக்கவே ஆவியானவர் இந்த செய்தியை எழுத வைக்கிறார்.

எபி. 11:39, 40ஐ வாசியுங்கள். ஆபேல் முதற் கொண்டு சொல்லப்பட்ட அத்தனை தேவ மனுஷர்களும் அவர்களுக்குள்ள விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அவர்கள் அடையவில்லையாம். மட்டுமல்ல, விசேஷித்த நன்மையான ஒன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்ததால், அவர்களுக்கு முன் கூட்டியே நியமிக்காததால், நாமில்லாமல் அவர்கள் பூரணராவதில்லையாம். அப்படியானால் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது என்ன? நாம் எப்படி அடைந்தோம்? நமக்கென்று முன்னதாக நியமித்த விசேஷநன்மை என்ன? நாம் எப்படி பூரணராகின்றோம்?

அநேக வாக்குத்தங்களை பழைய ஏற்பாட்டு மக்களுக்கு தேவன் கொடுத்திருக்கிறார். இரட்சிப்பு, நித்திய ஜீவன், பரம எருசேலம் பரிசுத்த ஆவி, இஸ்ரேல் ராஜ்யம், சுவிசேஷம் (அப்.13:23; எபி.10:36-37; லூக்.1:67-68; ரோ.1:3-5) போன்ற பல வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார். இந்த ஒட்டு மொத்த வாக்குத்தத்தங்களும் அதன் கருப்பொருளும் கிறிஸ்துவை மையமாக கொண்டிருப்பதாலும், கிறிஸ்துவின் மூலமாகவே கிடைக்கப்போவதாலும், மேசியாவாகிய இயேசு தான் அந்த வாக்குத்தத்தம் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த வாக்குத்தத்தங்களின் உடன்படிக்கையே இயேசுதான் (எபி.7:22). இந்த வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கிறது (2 கொரி.1:2). இந்த வாக்குத்தத்தமான மேசியா வருவார் என்று அந்த விசுவாசிகள் - தேவ மனுஷர்கள் எல்லாம் காத்திருந்தார்கள். ஆனால் அவர்கள் அவரைக் காணாமல் மரித்துப் போனார்கள். இந்தக் கண்களால் காணாவிட்டாலும் ஆவிக்குரிய தொலைநோக்க - கண்களால் விசுவாசித்தார்கள்; கண்டார்கள். கண்டு களிகூர்ந்தார்கள் (எபி.11:23; யோ. 8:56). நாமோ வாக்குத்தத்தமாகிய மேசியாவை அடைந்தோம். அல்லேலூயா! இதனால் நமக்கு புது உடன்படிக்கை கிடைத்தது. நிழலாட்டமாயிருந்த பழைய ஏற்பாட்டு பலி முறைகள் சடங்காச்சாரங்கள் எல்லாம் நமக்கு நிஜமாக்கினார் தேவன் (கொலோ.2:16, 17). இது தான் தேவன் நமக்கென்று முன்னதாக

நியமித்திருந்த விசேஷித்த நன்மை. அதனால் பழைய ஏற்பாட்டைப் போல நம்முடைய பாவங்கள் மூடப்படுவதில்லை; அழிக்கப்படுகின்றது; சுத்திகரிக்கப்படுகின்றது (எபி.11.11-28); அவர்களைப் போல பாவிகள் என்ற எண்ணமின்றி, நீதிமான்கள் என்று தலை நிமிர்ந்து நிற்கிறோம். (ரோ.3:23, 24; 1 கொரி.6:11) அவர்கள் மணவாளனாகிய இயேசுவின் தோழர்கள்; நாமோ அவரின் மணவாட்டி (யோ.3:29; வெளி. 19:9; 21:1) கிறிஸ்துவும் சபையும், புருஷனும் மனைவியும் போல (எபே.5:29-32) அவர்களில் லேவியர் கோத்திரத்தார் மட்டுமே ஆசாரியர்; இப்போதோ இரட்சிக்கப்பட்ட நாமனைவருமே சாதாரண ஆசாரியரல்ல; ராஜரீக ஆசாரியர் (1 பேது.2:9) அன்றோ ஆசாரியன் மட்டுமே கிருபாசனத்தண்டை போக முடியும்; இன்றோ நாமெல்லாரும் தைரியமாய் போகமுடியும். (எபி.4:16) மட்டுமல்ல உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரவும் வைத்திருக்கிறார் (எபே.2:7) நம்முடைய நோய்களையும், வறுமையையும் அவரே சுமந்ததால் நமக்கு வியாதியில்லை; வறுமையில்லை (சங்.51:10; 2 கொரி.89: ஏசா.53:4) அவர்களுக்கு ஆலயம் எருசலேமில் இருந்தது; நமக்கு நமது சரீரமே ஆலயம் (1 கொரி.6:19). அவர்களுக்கு தேற்றவாளனாகிய ஆவியானவர் என்றென்றும் இல்லை; ஆனால் நமக்குள்ளே ஆவியானவர் நிரந்தரமாய் இருக்கிறார். அவர்களை தேவன் புத்திரர் என்று அழைக்க விரும்பியும் அதற்குப் பாத்திரர் இல்லை; நாமோ கிருபையினால் அவராலேயே புத்திரர் என்ற அதிகாரம் பெற்றோம் (யோ.1:12). பழைய ஏற்பாட்டு மக்களோ எல்லோரும் நித்திரையடைந்தார்கள். கடைசி கால கிறிஸ்தவ சபையாராகிய நாமோ மரிக்காமலே அவரோடு போகப் போகிறோம் (1 கொரி.15:51). அவருடைய மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமான ஞானஸ்நானம் நமக்கு மட்டுமே உண்டு. அதனால் தேவனோடு உடன்படிக்கை பண்ணுகிறோம் (1 பேது.3:21). சகல ஜாதிகளையும் சீஷராக்கும் கட்டளை நமக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. எல்லா விசுவாசிகளுக்கும் பிசாசுகளை துரத்தவும். வியாதியஸ்தர்களை சுகமாக்கவும் அதிகாரமும் வல்லமையும் உண்டு. இப்படி ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வளவு விசேஷித்த நன்மைகளை தேவன் நமக்கென்று முன்கூட்டியே வாக்குத்தத்த உடன்படிக்கையாகிய கிறிஸ்துவின் மூலம் நியமித்திருக்கிறார். இவ்வளவு விசேஷித்த நன்மைகளும், பரலோக வாசம் - நித்திய ஜீவன் = நித்திய ஆளுகை - என்ற ஒன்றிலே அடங்கியிருக்கிறது. அதனால்தான் "பரலோகம் தான் என் பேச்சு; பரிசுத்தம் தான் என் மூச்சு" என்று நாம் பாடுகிறோம்.

பூரணராய் இருந்தால்தான் பரலோகம் (எபே.4:11; 1 தெச.5:23; மத்.5:48). இந்தப் பூரணத்தை (Perfectness) வாக்குத்தத்த

உடன்படிக்கையாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் முன்னதாகவே நியமிக்கப்படடிருக்கிற நன்மையான ஒன்றால், கிருபையாய் நமக்கு வந்து விடுகின்றது. அல்லேலூயா! பிலி.3:13ன்படி கிறிஸ்து இயேசுவினால்தான் இந்த பரிபூரணம் வருகிறது. எனவே பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் எல்லாருமே, விசுவாசம் இருந்தாலும், நன்மையானதொன்றை பெற்றிருக்கும் - வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவை அடைந்திருக்கும் - நம்மையல்லாமல் பரிபூரணகிறதில்லை.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உன்னை எந்த நிலையில் தேவன் வைத்திருக்கிறார் பார்த்தாயா! பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான் களைவிட நீ மேலானவனில்லையோ! இன்றே உன் தாழ்வு மனப்பான்மை ஒழியட்டும்! மேலான உன்னதத்தையே நாடுங்கள். ஆமென்.

❖ ❖ ❖

## மரியாள் கடைசி வரை கன்னியா?

பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்ட பாக்கியவதி மரியாள், யோசேப்பின் மனைவி; கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தாயார். இந்த மரியாளுக்கு இயேசு ஒருவர் தான் பிள்ளை என்றும், கடைசி வரை மரியாள் கன்னியாகவே இருந்தாள் என்றும் பலர் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இது குறித்த சத்திய வார்த்தையை வேதத்திலிருந்து ஆவியானவர் விளக்குவாராக!

ஏசா.7:14ல் சொல்லப்பட்டபடியே, கன்னியாகிய மரியாள் வயிற்றிலே இயேசு பிறந்தது நிச்சயமே! லூக். 2:7 ஐ வாசித்தால், இயேசு மரியாளுக்கு முதல் மகன் என அறியலாம். அப்படியானால் இயேசுவுக்குப் பின் பல பிள்ளைகள் கண்டிப்பாய் பிறந்திருக்க வேண்டும் என அறியலாம். பிதாவாகிய தேவன் கூட இயேசுவை உலகிற்கு கொடுக்கும்போது அவரை "தம்முடைய ஒரே பேறான குமாரன்" (யோ. 3:16) என்று சொன்னார். ஒரே மகனோடு இருந்தவர், இயேசு உயிர்த்தெழுந்த பின், இயேசுவை முதல் மகனாகவும் (முதற் பேறு - கொலோ. 1:18 ரோ. 8:29; எபி. 1:6; 11:28; 12:23; வெளி.1:5) அவரை விசுவாக்கிற நாமெல்லாம் 2ம், 3ம் மகன்களாகவும் பெற்றுக் கொண்டார். அப்படியே கன்னியாயிருந்து இயேசுவைப் பெற்ற மரியாள், இயேசு பிறந்தபின், யோசேப்புக்கு நிறைய பிள்ளைகளை பெற்றிருக்கிறாள். மத்.1:25 ஐ வாசித்தால், மரியாள் தன் முதல் மகனாகிய இயேசுவைப் பெறுமளவும், யோசோப்பு மரியாளோடு உடலுறுவு

கொள்ளவில்லை என அறிகின்றோம். அதற்குப்பின் உடலுறவு கொண்டு பிள்ளைகளைப் பெற்றிருப்பார்கள் என அறியலாம். வேறு பிள்ளைகளும் இருக்குமென்றும் தீர்க்கதரிசனமாகவே சங்.69:8-9ல் சொல்லப்பட்டதை நிதானியுங்கள். திருமணமே பக்தியுள்ள சந்ததியைப் பெறத்தான். அப்படியிருக்க. யோசேப்பின் மனைவியான மரியாளை தேவன் கடைசிவரை கன்னியாகவே வைத்திருப்பாரா? திருமண வாழ்க்கையை ஏற்படுத்தியது ஏன்?

சங்.69:8, 9ல் சொல்லப்பட்டபடியே இயேசுவின் சகோதரர்கள் அவரை விசுவாசியாமல் "யூதேயாவுக்குப் போய் அற்புதம் செய்து உம்மை வெளிப்படுத்தும்; இங்கே ஏன் இருக்கிறீர்" என்று சொன்னார்கள் என யோ.7:3- 10ல் வாசிக்கும்போது, நிச்சயமாய் அவருக்கு சகோதரர்கள் இருந்தார்கள் என அறிகிறோம். மேலும் மத்.12:46-50; மாற்.3:31-35; லூக்.8:19;21; யோ.2:21 போன்ற வசனங்களில் இயேசு ஊழியம் செய்து கொண்டிருந்தபோது அவருடைய தாயாரும் அவருடைய சகோதரரும், "அவரைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்றால், "உம்முடைய (இயேசுவுடைய) சகோதரர்" என்று சொல்லிக் கொண்டு அவர்கள் மரியாளோடு வரத்தேவையில்லை அல்லவா!

மத்.13:55-56; மாற்.6:3 ஐ வாசிக்கும் போது இயேசுவுக்கு யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்ற நான்கு சகோதரர்களும் இருந்தார்கள் என அறியலாம். "சகோதரிகளும் இருந்தார்கள் என அறியலாம். "சகோதரிகள்" என்று சொல்வதால் குறைந்தது 2க்கும் மேற்பட்ட சகோதரிகள் இருந்ததாய் உணரலாம். Atleast 2 Sisters. ஆக மரியாளுக்கு இயேசுவையும் சேர்த்து 5 மகன்களும் குறைந்தது 2 மகள்களும் இருந்தார்கள் என அறிகிறோம். இயேசு மாத்திரமே பரிசுத்த ஆவியினால் கன்னிக்குப் பிறந்தாரென்றும், மற்றவர்களெல்லாம் யோசேப்புக்கு பிறந்தவர்களென்றும் உணர்கிறோம்.

**பலருடைய கட்டுக்கதைகள் என்னவென்றால்:-** (1) யோசேப்பு வயதானவராயிருந்தான்; எனவே மேரியோடு பிள்ளைபெற முடியாது; (2) யோசேப்புக்கு ஏற்கெனவே திருமணமாகி குழந்தைகள் இருந்தன. (3) கிலேயப்ப மரியாளுக்குப் பிறந்த இந்த பிள்ளைகள் இயேசுவுக்கு சகோதர உறவினர் (Cousins). இந்த தவறான - கள்ள உபதேசங்களை ஒவ்வொன்றாய்ப் பார்ப்போம்.

1. யோசேப்பு வயதானவன் என்றால் இயேசு பிறக்கும்வரை மரியாளோடு அவன் உடலுறவு கொள்ளவில்லை என்ற மத்.1:25 பொய்யாகுமே!

2. ஏற்கெனவே யோசேப்புக்கு திருமணமாகி பிள்ளைகள் இருந்தால் இயேசு முதற்பேறான குமாரன் - முதல் மகன் என்று சொல்ல முடியாதே! அப்படியிருந்தால் சட்டப்படி இயேசு தாவீதின் சிங்காசனத்தில் ராஜாவாக தகுதியில்லாது போகுமே! எப்படியெனில் முதல் மகனுக்குத் தானே அந்த உரிமை உண்டு (See மத்.1:6-16).

3. இந்த சகோதரர்கள் மரியாளின் சகோதரியான கிலேயப்பா மரியாளின் பிள்ளைகள் என்றால் "His Brethren" (அவருடைய சகோதரர்) என்ற வார்த்தை தேவையில்லையே! Cousins என்பதன் பொருள். "His half-brothers and Sisters" அதாவது இயேசுவின் இளைய சகோதர, சகோதரிகள் என்பதாகும். (See யோ.2:12; 7:3-10; அப்.1:14; 1 கொரி.9:5; கலா.1:19) Cousin சகோதர உறவு முறை என்றால் "Sungnes" என்றுதானே இருக்க வேண்டும்! (Meaning kin; kinsmen & kinsfolk) (See மாற்.6:4; லூக்.1:36-58; 2:44; அப்.10:24; யோ. 18:26; ரோ.9:3; 16:7)

மேலும் 4 சகோதரரில் ஒருவரான யாக்கோபு என்ற பெயரிலேயே இன்னும் இரண்டு யாக்கோபுகள், மரியாளின் சகோதரியாகிய கிலேயப்பா மரியாளுக்கு உள்ளனர். (மத்.26: 56; மாற்.15:40; 16:1; லூக்.24:10). அவர்கள் இருவருமே இயேசுவின் அப்போஸ்தலரானார்கள் (மத்.10:2-3). எனவே யோ.7:5ன்படி, விசுவாசியாமல் போனவர்கள் இயேசுவின் உடன்பிறந்த சகோதரர்களே என அறியலாம். இயேசுவின் சகோதரன் யாக்கோபு தான், யாக்கோபு நிருபத்தை எழுதியவர். இவரைப் பற்றி கலா.1:19; 1 கொரி. 9:5; அப். 1:14 போன்ற இடங்களில் எழுதப்பட்டுள்ளது.

எகிப்திய பாரம்பரியம், கிறிஸ்தவ சபைக்குள் நுழைந்ததுமே, பாகால் தேவதை போலவே மரியாள் மாற்றப்பட்டாள். கோரஸின் தாயாகிய ஐசிஸ், எகிப்தில் தேவதையாய் இருந்துபோல, மரியாளையும் தேவதையாகவும், தேவ மகனின் தாயாகவும், கடைசி வரை கன்னி என்றும் சொல்ல ஆரம்பித்து, பாலகன் இயேசுவை கையிலேந்தி நிற்பவளாய் மாற்றினார்கள். மரியாள் தன்னை ஆண்டவருக்கு அடிமை என்றாள் (லூக்.1:38) இவர்களோ அவளை தேவதை ஆக்குகிறார்கள். என்னே பரிதாபம்! இப்படிப்பட்ட தேவதைக்கு ஆசியாவிலே சிபெலி என்றும், ரோமில் ஃபோர்டினா என்றும், கிரேக்கத்தில் செரஸ் என்றும், சீனாவில் ஷிங்மூ என்றும் பெயரிட்டு கன்னி மேரி சிலைபோல கையிலே குழந்தையோடு அந்த தேவதைகள் காட்சியளிக்கின்றன. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! பிசாசின் தந்திரங்களை அறிந்து கொள். மரியாள்,

இயேசுவை பிறப்பிக்கும் வரைக்கும் கன்னி என்றும், அதற்குப் பின் குழந்தைகள் இருந்தனவென்றும், மரியாள் தேவதை அல்ல என்றும் கடைசி வரை கன்னியல்ல என்றும், நமக்கு தேவன் ஒருவரே என்றும் அறிந்துகொள்! மற்றவர்களுக்கும் அறிவி!

❖ ❖ ❖

## 2 சுவிசேஷத்திலும் இயேசுவின் வம்ச வரலாறு ஏன் வித்தியாசம்?

இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு மத்.1:1-7ல் ஆபிரகாமிலிருந்து இருக்கிறது. லூக்.3:23-38ல் ஆதாமிலிருந்தே இருக்கிறது. எப்படி யிருந்தாலும் தாவீது வரைக்கும் வம்சவரலாறு இரண்டிலும் சரியாக உள்ளது. தாவீதின் ஒருமகனான சாலமோன் வழியாய் வரும் வம்சத்தை மத்தேயுவிலும், இன்னொரு மகனான நாத்தான் வழியாய் வரும் வம்சத்தை லூக்காவிலும் காண்கிறோம். மேலும் இயேசுவிடம் வந்து முடியும்போது, மத்.1:16ல் யாக்கோபு யோசேப்பின் அப்பா என்று உள்ளது; ஆனால் லூக்.3:23ல், யோசேப்பு ஏலியின் குமாரன் என்று உள்ளது. வம்ச வரலாற்றில் ஏன் இந்த வேறுபாடுகள்? வித்தியாசங்கள்? ஆவியானவர் தாமே இநத கருகலான சத்தியத்தை விளக்குவராக!

"இயேசுகிறிஸ்து ராஜாவாய் வரவேண்டும்; அதுவும் தாவீதின் வம்சத்திலிருந்து வரவேண்டும், என்பதுதான் தீர்க்கதரிசனம். அதன்படியே மத்தேயு சுவிசேஷத்தில் தாவீதுக்குப் பின் சாலமோன் ராஜாவானான். அப்படியே சாலமோன் வழியிலேயே யோசேப்பு வரை வம்சவரலாறு ராஜரீகவம்ச வரலாறு (வம்சவழியான Legal Royal line) மத்தேயுவில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் அப்பா மூலமும் வம்ச வரலாறு உண்டு; அம்மா மூலமும் உண்டு. அப்படியே மத்தேயு, இயேசுவின் சட்டப்படியான அப்பாவாகிய, (Not actual father - only legel father or Jesus Foster) யோசேப்பின் வம்சவரலாற்றை எழுதியிருக்கிறான். ஆனாலும் இந்த பரம்பரையில் உள்ள யோசியா என்வன் எகோனியாவைப் பெற்றான் (மத். 1:11) யார் இந்த எகோனியா? இவன் விந்தில் வரும் ஒருவனாகிலும் வாழ்வடைந்து. தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாவை அரசாளப் போகிறதில்லை என்று கர்த்தர் சபித்திருக்கிறார் (எரே 22:30). இந்த சபிக்கப்பட்ட எகோனியாவின் வழி வந்த யோசேப்புக்கு, இயேசு பிறந்திருந்தால் அவரின் சாபம் இயேசுவுக்கும் வந்திருக்கும். அவர்

அதிகாரமும், வல்லமையோடும், நீதியோடும் தாவீதின் சிங்காசனத்தில் இருக்க முடியாது; யாக்கோபின் குடும்பத்தாரை ஆளமுடியாது. லூக். 1:32-33ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறாமலே போய்விடும். எனவே இயேசு யோசேப்பின் இரத்த சம்பந்தமான வழியில் பிறக்கவில்லை. சட்டப்படியான யோசேப்பின் மகனாய் பிறந்திருந்தும் சாபம் வருமே!"

இதனால்தான், தாய் மரியாளின் வம்சவரலாறை தாவீதின் மகன் நாத்தான் முதல் லூக்கா எழுதுகிறார். அம்மாவின் வரலாறு சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை எண்.27:1-11 மற்றும் 36:1-12 வசனங்கள் மூலம் அறியலாம். லூக்கா எழுதியது எப்படி மரியாளின் வம்ச வரலாறு என்று சொல்ல முடியும்? லூக் 3:23ல் யோசேப்பு ஏலியின் குமாரன் என்று உள்ளதல்லவா! உண்மையிலேயே மத்.1:15ன் படி யோசேப்பு யாக்கோபின் குமாரன் தான். அபப்டியானால் யார் இந்த ஏலி? "இவன் மரியாளின் அப்பா; மரியாளின் கணவனாகிய யோசேப்பின் வளர்ப்புத் தந்தை" என்று சரித்திரம் சொல்கின்றது. ஆக ஏலிவரை மரியாளின் வம்ச வரலாறு வந்து, அதன்பின் சாலமோன் வழியில் வந்த யோசேப்பு ஏலியின் வளர்ப்பு மகனாக்கப்பட்டு, இயேசு இந்த வம்சா வழியில் வந்தாக எழுதப்பட்டுள்ளது. இதனால் எகோனியாவின் சாபமும் இயேசுவுக்கு இல்லை; சட்டப்படியான அரசாளும் பரம்பரை மட்டுமல்ல; நியாயப்பிரமாணத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, தாய் வழி வம்சத்திலும் ஆளுகை உண்டு அல்லவா! எந்த வகையிலும் இயேசு கிறிஸ்துவின் ஆளுகையை குற்றப்படுத்தமுடியாதபடி தேவன் இரு சுவிசேஷங்களிலும் எழுதியிருக்கிறார். அல்லேலூயா! ஆனாலும் பாவ உலக மனிதனாகிய யோசேப்புக்கு, இயேசு பிறந்தார் என்று எழுதாமல் "இயேசு யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார்" என லூக்.3:23ல் உள்ளதையும், 'யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான். அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார்" என மத்; 1:16ல் உள்ளதையும் வாசித்து, தேவன் எவ்வளவு ஞானமாய் சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதை விசுவாசித்து தேவ நாமத்தை மகிமைப்படுத்துங்கள். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆனால் பாவ மனுஷனின் வித்தில் வெளிப்படவில்லை; பாவ ஜாதியில் பிறக்கவில்லை அல்லேலூயா! அதனால் தான் அவர் இரத்தம் சகலபாவங்களையும் நிக்கி சுத்திகரிக்கும். ஆமென்.

❖ ❖ ❖

# சிலுவை மரணத்திற்குப் பயந்து இயேசு கண்ணீர் விட்டாரா?

எபி. 5:7 வசனத்தை வைத்துக் கொண்டு, இயேசு வரப்போகும் சிலுவை மரணத்தைக் கண்டு பயந்து அதிலிருந்து விடுதலையாக வேண்டும் என்று மிகுந்த சத்தத்தோடும், கண்ணீரோடும், கெத்சமனே தோட்டத்தில் ஜெபம் பண்ணினார் என்றும் அந்த பயம் நிறைந்த கவலையினாலேயே அவர் அங்கே இரத்த வியர்வை சிந்தினார் என்றும் உபதேசிப்பவர்கள் உண்டு. அப்படியானால் இயேசு சிலுவை மரணத்திற்குப் பயந்தாரா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவராக!

வார்த்தையாகிய தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்பட்டதால் (வெளி.13:8) சிலுவை மரணம் பற்றி அவர் அப்போதே அறிந்திருக்கிறார். தேவ சித்தத்தின்படி பூமிக்கு வந்து பாடுபட்டு மரிக்க சித்தம் கொண்டு தான் அவர் அடிமையின் ரூபமெடுத்தார். (எபி.10:7) மேலும் அடையாளம் கேட்டவர்களுக்கு யோனா தீர்க்கதரிசியின் அடையளத்தைச் சொன்னவர் (மத்.12:39; 40) சிலுவை மரணத்தையும் அதன் பாடுகளையும் அறிந்திருந்தார். அவர் மத்.16:21; 17:23; 20:19; மாற். 9:31;10, 34 லூக். 9:22;18; 33 போன்ற பல இடங்களில் தமது சிலுவை மரணத்தை சீஷர்களுக்கு விவரித்துக் சொல்லியிருக்கிறார். ஒரு முறை இப்படி அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் பேதுரு அவரை தனியே அழைத்துக் கொண்டு போய் "ஆண்டவரே! இது உமக்கு நேரிடக் கூடாதே இது உமக்கு சம்பவிப்பதில்லை" என்று கடிந்து கொள்ளும்போது, "எனக்குப் பின்னால் போ சாத்தானே. நீ எனக்கு இடறலாயிருக்கிறாய். தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார் (மத்.16:22:23). இதிலிருந்து என்ன தெரிகிறது? தேவ சித்தத்தின்படியே மரிக்க இயேசு மனிதனாய் வாழ்ந்த போதும் தயார்தான்; ஆனால் பிசாசானவன் அந்த சிலுவை மரணத்தை அவர் சந்திக்க விடாமல் வேறு வழியாய் அவருக்கு மரணம் கொடுக்க பிரயாசப்பட்டான் என அறிகிறோம். இதைத்தான்! "இயேசு மனிதனாய்ப் பிறக்க தடை அன்று. மனிதரில் பிறக்க தடை இன்று" என்ற தலைப்பிலும் விவரித்திருக்கிறேன். சிலுவை மரணத்தில் தூக்கப்பட்டு மரிக்க வேண்டும் என்ற தேவ சித்தம் நிறைவேறும் போது தான் மனுமக்களுக்கு நித்திய ஜீவன் கிடைக்கிறது; சாபம் மாறுகிறது; தெய்வீக சுகம் கிடைக்கிறது; தரித்திரம் மாறுகிறது (யோ.3:124; 15; கலா.3:13; மத்.8:127) என்பதை அறிந்த இயேசு, அதற்காகவே ஒப்புக் கொடுக்க சித்தமானார். அதைக் குறித்து அவர் பயப்படவே இல்லை. அவரின் இலட்சியமே அதுதான்.

ஆனால் பிசாசானவன் இந்த இலட்சியத்திற்கு விரோதமாய் பலமுறை செயல்பட்டான். ஆலய உப்பரிக்கையிலிருந்து குதிக்க சொன்னான்; சொந்த ஜனத்தையே செங்குத்தான உயரமான பாறையிலிருந்து அவரை கீழே தள்ள வைத்தான்; 3 முறை கற்களால் அவரை அடித்து கொல்ல நினைத்தான்; இரண்டு முறை கடலில் போகும்போது புயலால் சாகடிக்க நினைத்தான்; சிலுவை மரணமே அவரது நோக்கமாய் இருந்தபடியால் இவைகளிலிருந் தெல்லாம் அவர் தப்பித்தார். ஆனால், யூதாஸ் அவரை காட்டிக் கொடுக்க கெத்சமனேக்கு வந்தபோது, பேதுரு வந்தவர்களை தடைசெய்ய, வாளால் போர்ச் சேவகனின் கதை வெட்டிய போது அவர் சொன்ன வார்த்தையை மத்.26:53,54ல் வாசியுங்கள். ஒரு லேகியோன் என்பது 6,000 தூதர்களுக்கு சமம். 12 லேகியோனுக்கு அதிகமானவர் என்றால் 72,000 தூதர்களுக்குமேல். ஏன் இவ்வளவு தூதர்கள்? ஒரு தூதன் 1,85,000 பேரை ஒரு இரவில் கொன்றதுபோல 72,000 தூதர்கள் அன்று இரவே 13,320,000,000 பேரை அதாவது அன்றைய தேதியில் உலகிலுள்ள அத்தனை பேரையும் கொல்ல முடியும் "இதற்காய் தேவனிடம் ஜெபித்தால் - கேட்டால் உடனே அனுப்புவார். ஆனாலும், நான் அப்படி கேட்காமல் வேத வாக்கியங்களின்படியே சிலுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கிறேன்" என்று இயேசு சொல்வதிலிருந்து அவர் சிலுவை மரணத்திற்குப் பயப்படாதவர் என்று அறிகிறோம்.

அப்படியானால் எபி.5:7ன் அர்த்தம் என்ன? கெத்சமனே தோட்டத்தில் இயேசு பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்தது எதற்காக? "பயபக்தியினிமித்தம் கேட்டார்" என்றால் "பயந்து கேட்டார்" என்று அல்ல; மூல பாஷையிலே "Reverential trust in God & God's word" என்று போடப்பட்டிருக்கிறது (சங்.19:9) அதாவது தேவன் மேலும், வேத வாக்கியங்களின் மேலும் மிகவும் உன்னதமான நம்பிக்கை வைப்பதே பயபக்தி என்ற சொல்லுக்குப் பொருள். வேத வாக்கியமே இவராய் இருப்பதால் அதன் மேலுள்ள நம்பிக்கையில் பிதாவின் சித்தத்திற்கு கீழ்படிந்து சிலுவை மரணம் அடைந்து மனுமக்களுக்கு நித்திய இரட்சிப்பு அளிக்க வேண்டும் என்ற விசுவாசத்தில் ஜெபித்தார்; மரணத்தினின்று இரட்சிக்க வேண்டும் என்று கேட்டார். நிச்சயமாய் சிலுவை மரத்தினின்று இருக்காது என்று ஏற்னெவே பார்த்தோம். பிறகு என்ன மரணம்? பிதாவின் சித்தப்படியான சிலுவை மரணத்திற்கு தானே ஒப்புக்கொள்ளப்போகும் அந்த ராத்திரியிலே தானே, அவர் இப்படியாய் பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்திருக்கிறார். ஏன்? பிசாசானவன், அவருக்கு அப்போதே மரணத்தை கொடுக்க முயன்றிருக்கிறான். அது அவனின் இறுதி முயற்சி; பயங்கரமான

முயற்சி; முழு பெலத்தினாலான முயற்சி; **அதனாலேயே அவர்வியர்வை நாளங்களில் இரத்தம் வடிந்தன;** வேத வாக்கியம் நிறைவேற தடைவருமோ என கலங்கினார். இந்த மரணமாகிய பாத்திரம், பிசாசு தரும் மரணம் - நீங்கட்டும் என்று ஜெபித்தார். மூன்று முறை இப்படியாய் ஜெபித்தார் (மத்.26; 39-44; லூக்.22:42;) அப்போது வானத்திலிருந்து பாதுகாப்பின் தூதன் வந்து பிசாசு கொடுக்க வந்த மரணத்திலிருந்து பாதுகாத்து இரட்சித்து - அவரைப் பலப்படுத்தினான். (லூக். 22:43). அவர் கண்ணீர் மாறியது; அதன்பின் தேவசித்தப்படி சிலுவை மரணத்திற்கு தன்னை ஈடுபடுத்த சீஷர்களோடு ஆயத்தமானார். (மத். 26:45-46) அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே! உனக்காகவும் எனக்காகவும், சிலுவையிலே பலியாகிய இயேசு, அந்த சிலுவை மரணத்திற்கு முன்னமேயே பிசாசு வேறொரு மரணம் கொடுத்து, இரட்சிப்பை இல்லாமல் ஆக்கப்போகும், பிசாசின் மரணத்தினின்று இரட்சிக்க - பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவர் பலத்த சத்தத்தோடும்., கண்ணீரோடும் ஜெபித்தார் என்றும் புரிகிறதா? இன்னும் ஆவியானவர் உன்னோடு பேசட்டும்! அதை விசுவாசித்து மற்றவர்களுக்கும் சொல்! வருகை சமீபாயிருக்கிறதே!

❖ ❖ ❖

## சாபத்தையும் ஆசீர்வாதத்தையும் தேவன் கொடுக்கிறாரா?

இந்த கருகலான சத்தியத்தைப் புரியமுன்னே, நம் தேவனின் நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நம் மனமாகிய ஆத்மா மறுரூபமாக வேண்டும். (ரோ.12:2). **தேவனுடைய பொதுவான சித்தம் என்னவென்று ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.** (1) பரலோகம் எப்படி இருக்கிறதோ அப்படியே பூலோகமும் எல்லா நன்மைகளோடு இருக்க வேண்டும். (மத்.6:10). (2) எல்லோரும் சுகமாயிருக்க அவருக்கு சித்தமுண்டு (மத்.8:3). (3) ஒருவனும் கெட்டுப் போக கூடாது. (மத். 18:14; யோ. 3:16; 1 தீமோ. 2:4). (4) ஒரு மனிதனையும் இழந்து போகக் கூடாது (யோ.6:39). (5) தாவீதைப் போல தேவனுடைய வார்த்தையாகிய உடன்படிக்கைப் பெட்டியாலேதான் ஆசீர்வாதம் உண்டென்று உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து,

அவனைப் போல ஊழியம் செய்ய வேண்டுமென்பது தேவசித்தம் (அப்.13:36) (6) வரங்களை பகிர்ந்து கொடுப்பது (1 கொரி. 12:11; எபி. 2:4). (7) பொல்லாத உலகிலிருந்து விடுதலையளிப்பது (கலா.1:4). (8) ஊழியர்களை அவரே உருவாக்குவது. (9) புத்திரசுவீகாரம் கொடுப்பது (எபே. 1:6; யோ. 1:12. (10). பரிசுத்தமாக வேண்டுமென்பது 1 தெச. 4:3). (11) எல்லாக் காரியத்திலும் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். (1 தெச. 5:18). (12) நாம் இரட்சிக்கப்பட்டதே தேவசித்தம் (யாக். 1:18). (13) சகல சிருஷ்டியும் அவர் சித்தமே! (வெளி. 4:11) (14) நன்மை செய்வதே அவர் சித்தம் (எபே.2:10; 3 யோ.11; அப். 10:38 யாக் 1:17) (15) ஜீவனளிப்பதே தேவ சித்தம் (யோ.10:10) (16). நம்மை ஆசீர்வதிப்பதே அவருக்குப் பிரியம் (எண்.24:1; சங். 149:4) (17). தேசம் வாழப் பிரியம் (ஏசா. 62:4) (18). துன்மார்க்கன் கூட பிழைக்கப் பிரியம் (எசே.18:23). (19) கொடுப்பதில் பிரியம் (2 கொரி.9:7). (20). விசுவாசமாயிருந்தால் பிரியம் (எபி.11:6) (21). நீதிநியாயத்தின் மேல் பிரியம் (சங்.33:5) இவ்வளவு சித்தமுள்ள அன்பு தெய்வம், சாபத்யையும் ஆசீர்வாதத்தையும் கொடுக்கிறாரா? ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் நன்மையையும், தீமையையும், ஜீவனையும் மரணத்தையும் தேவன் நமக்குமுன் வைத்திருக்கிறார். அதைச் சுதந்தரித்துக் கொள்வது நம் கையில் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தியானித்து, அதன்படி செய்தால், ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கிறோம்; இல்லையேல் சாபத்தை சுதந்தரிக்கிறோம். (உபா. 28:2, 15; 11:27, 28). ஆதாமும் ஏவாளும் "இந்தக் கனியைப் புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" (ஆதி. 2:17) என்ற வார்த்தையை விசுவாசித்துக் கீழ்ப்படியாமல் "புசிக்கும் நாளில் சாகவே சாவதில்லை" (ஆதி 3:4) என்ற பிசாசின் வார்த்தையை விசுவாசித்துக் கீழ்ப்படிந்ததால் சாபம் அவர்களுக்கு வந்தது. இந்த சாபத்தை அவர்களே சுதந்தரித்துக் கொண்டனர். தேவன் சொன்னது தான் இது; ஆனாலும் தேவன் கொடுக்கவில்லை. அது என்ன சாபம்? அந்த கனியைப் புசித்ததாலே அவர்கள் மரித்துப் போனார்கள். எதிலே? ஆவியிலே மரித்தார்கள். நாமும் அப்படித் தானே எபே.2:1ன்படி ஆவியிலே மரித்திருந்தோம். ஆமென். ஆதாம் ஏவாள் தேடிக் கொண்ட சாபத்திலிருந்து விடுதலை கொடுக்கவே தேவன் அன்று மாலையே ஏதேனுக்கு வந்தார். ஆனாலும் நம் ஆதிப்பெற்றோர்கள் பாவ அறிக்கை பண்ணாததாலே சாபம் நீங்காமல் தொடர்ந்தது. அப்போது தேவன், ஆதாம், ஏவாள் பிசாசு ஆகிய மூவருக்கும் தண்டனை கொடுத்தார். (ஆதி. 3:14-19). ஆதிப்பெற்றோர் சம்பாதித்த சாபத்திலிருந்து விடுதலை கொடுக்கவே இயேசு நமக்காக சாபமானார் (கலா.3:13) என்னே அவரது அன்பு! ஆனால் அவர் கொடுத்த தண்டனையிலிருந்து விடுவிக்க அவர் இரத்தம் சிந்த

தேவையே இல்லை. அதனால் விடுதலை வராது; தண்டனை கொடுத்தவரே மாற்றினால்தான் மாறும். இந்த தண்டனையை இரகசிய வருகையில் நமக்கு மாற்றுகிறார். (1 கொரி. 15:55) அல்லேலூயா! ஆக, சாபத்தை தேவன் கொடுப்பதில்லை என்றும், அதை நாமே சுதந்தரித்துக் கொள்கிறோம் என்றும், தண்டனையைத்தான் தேவன் கொடுக்கிறார் என்றும் அறிகிறோம். சாபத்தை தேவன் கொடுப்பதில்லை என்றும் அதை நாம்தான் சுதந்தரித்துக் கொள்கிறோம் என்றும் சொல்லலாமல்லவா! ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் அவரே நமக்கு முன் வைத்திருப்பதால், இரண்டையும் அவரே கொடுத்தார் என்றும் சொல்ல வாய்ப்புண்டல்லவா!

**இது சம்பந்தமாய் ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்.** ஒரு சாலையில் ஒருவர் வாகனத்தில் போகும்போது, போக்குவரத்து போலீஸ் ஒருவர் "வலதுபுறம் போகாதீர்கள்; போனால் ஆக்சிடென்ட் நடக்கும், இடது புறமாகவே போங்கள். அப்போது பிரயாணம் நலமாயிருக்கும்" என்று சொல்கிறார். அவர் வார்த்தையை கேட்காமல் வாகன ஓட்டுநர் வலது புறமாய் போய் ஆக்சிடென்ட் ஆகி கைகால் ஒடிந்து போய்விட்டது என்றால் இப்படி கை காலை ஒடிய வைத்தவர் போலீஸா? இல்லையே! ஆக்சிடென்டை அவரே தேடிக் கொண்டார். மாறாக, இடதுபுறமாகவே போய் கவனமாக பிரயாணம் வாய்த்ததென்றால், இப்படிச் செய்தவர் போலீஸ்காரரா? இல்லையே! நல்ல பயணத்தை வாகன ஓட்டுநரே தேடிக்கொண்டார். ஆனால், போலீஸ்காரரின் வார்த்தையைப் பின்பற்றியதன் பலனாக நன்மை கிடைத்திருப்பதால் நன்மையை வாய்க்கச் செய்தவர் போலீஸ் என்றும் சொல்லலாம். அப்படிச் சொல்லும்போது தீமையை வாய்க்கச் செய்தவரும் போலீஸ் என்றும் சொல்வோமா? சொல்ல மாட்டோம். நன்மையை போலீஸ் கொடுத்தார் என சொல்வது போல, **ஆசீர்வாதத்தை தேவன் கொடுத்தார் என்று வேதத்திலே பல இடங்களில் எழுதப்பட்டுள்ளது.** உதாரணம்:- ஆதி.14:19; சங்.37:22; 128-5; உபா. 28:11! ஆனால் உண்மை அது அல்ல அல்லவா! அதுபோல **சாபத்தையும் தேவனே தருகிறார் என்று வசனங்கள் உள்ளன.** உதாரணம்:- 1 சாமு 1:5; அ ஆதி 20:17; உபா.28:2-27. ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் தேவன் நமக்கு முன் வைத்திருப்பதால் இப்படியே அவரே கொடுப்பதாய் எழுதப்பட்டுள்ளது. மற்றப்படி நாம் தான் நமது பாவத்தால் வரும் சாபத்தாலும், மூதாதையரின் சாபத்தாலும், மற்றவர்களின் காரணமுள்ள சாபத்தாலும் (நீதி.26:2) பெற்றுக் கொள்கிறோம் என்பதே உண்மை. இந்த உண்மை புரிந்தால் போதும். சாபமும் ஆசீர்வாதமும் தேவனே நேரிடையாகச் கொடுக்காமல் நாமே சுதந்தரித்துக் கொள்கிறோம் என்று உணர முடியும்.

**உபா.28ன்படி தேவன் நமக்குமுன் வைத்திருக்கும் ஆசிர்வாதங்களானவன:-** மேன்மை; செழுமை; ஆரோக்கியம்; வெற்றி; கனிதருதல்; தேவ தயவு போன்றவையாகும். **அப்படியே நமக்குமுன் வைத்திருக்கும் சாபங்களாவன:-** இழிவுபடுத்துதல், மலட்டுத்தன்மை, கனியற்ற நிலை, மனதிலும் சரீரத்திலும் சுகவீனம், குடும்பத்தில் பிளவு, வறுமை, தோல்வி, சோர்வு, இழப்பு, தேவதயவற்ற தன்மை போன்றவையாகும். தேவபிள்ளையே! தேவனின் சித்தத்தையும், பிரியத்தையும் முழுமையாய் அறிந்திருக்கும் நாம், தமது சித்தத்திற்கு மாறான மேற்கண்ட சாபங்களை தேவனே கொடுக்கமாட்டார் என புரிகிறோமல்லவா! நேரிடையாய் அவர் கொடுத்தால், அந்த சாபத்தை அவரே சிலுவையில் ஏற்று அவரே சாபமாக மாட்டாரே! எனவே வறுமை, வியாதி, தோல்வி, மலட்டுத்தன்மை போன்ற சாபங்கள் தேவன் நேரிடையாய் கொடுப்பதில்லை. மேலும் நமக்கு ஒரு பிரச்சனை வந்தால் உடனே நாம் நம்மை சோதித்துப் பார்த்து, இது சாபமா என்று அறிய வேண்டும். சாபமானால் பாவத்தை அறிக்கையிட்டு தேவனோடு ஒப்புரவாகி சாபத்தினின்று விடுதலையாகலாம். சாபம் இல்லையெனில், நமக்குள்ள வல்லமை குறைவால், சர்வாயுதவர்க்கமாகிய பாதுகாப்பில் உள்ள குறைவால், விசுவாசக் குறைவால், அதிகாரத்தை கையிலெடுக்காததால், பிசாசனவனே அதை நமக்குத் தரலாம். இது உபவாசம், ஜெபம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் போன்றவற்றால், ஆவியில் வல்லமை பெற்று (மத்.17:21) எதிர்த்து நின்றால் பிசாசு ஓடியே போவான்; இடங்கொடாதிருந்தால் வரவேமாட்டான். 1 பேது. 2:24; சங். 91:10 போன்ற வசன விசுவாச அறிக்கைகளும், வல்லமையைப் பற்றிய அறிவும், வரங்கள் கிரியை செய்வதும், அதிகாரத்தை உபயோகிப்பதுமே இதற்கு விடுதலைக்கான வழி. இஃதில்லாமல் நமக்கிருக்கும் ஐக்கியமும் அறுபட்டு, தேவனோடுள்ள புத்திர சுவீகாரமும் அறுபட்ட நிலையில், விடுதலையே இல்லாத சூழலில், சோதோம் கொமாரா, அனனியா சப்பிராள் போன்றோருக்கு வந்ததுபோல தேவனே தண்டனை கொடுக்கலாம். இப்படிப்பட்டவன் நரகத்திற்கு பங்காளி, ஆனால் பிசாசினால் நசுக்கப்பட்டு மரித்தாலும்கூட புத்திர சுவீகாரம் அறுபடாமலிருந்தால் பரலோகம் செல்ல தடையில்லை. சாபத்திலிருந்து விடுதலை பெறாமல் மரித்தாலும் பரலோகம் செல்ல தடையில்லை புத்திரசுவிகாரம் இருப்பதால், ஆமென்.

❖ ❖ ❖

# பழைய ஏற்பாட்டு மக்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி தெரியுமா?

இந்த செய்தியைப் படிக்குமுன்னே, சீனாய் மலையில் பழைய உடன்படிக்கை உருவானது முதல், இயேசுவின் மரணம் வரையிலும், அதாவது புதிய உடன்படிக்கை உருவாகும் வரையிலும் உள்ள காலம் பழைய ஏற்பாட்டுக்காலம் என்றும், கிரேக்க பாஷையில் கிறிஸ்து என்றும் எபிரேய பாஷையில் மேசியா என்றும், இருப்பதற்கு, "அபிஷேகம் பண்ணப்பட்டவர் - வரப்போகிறவர்" என்ற அர்த்தம் இவைகளுக்கு உண்டு என்றும் முதலில் அறிய வேண்டும். கிறிஸ்துவைப் பற்றி பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டுமல்ல; ஆதாம் - ஏவாள் காலந்தொட்டே அனைவருக்கும் தெரியும் என்பதை ஆவியானவர் விளக்குவாராக!

பிசாசை ஜெயிக்கக் கூடியவர் ஒருவர் வருவார் என்று இஸ்ரேல் மக்கள் ஆதி.3:15ன் மூலம் அறிந்தனர். ஆசீர்வாதம் அளிக்கிறவர் ஒருவர் வருவார் என ஆதி 12:2ன் மூலம் அறிந்தனர். ஆதி. 49:10 எண். 24:17; உபா. 18:81 போன்றவைகளின் மூலம் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் மேசியா வந்து தங்களை ஒரு பெரிய ஜாதியாக்கி, உலகம் முழுவதையும் அரசாளுவசார் என்று எதிர்பார்த்தார்கள். லூக்.24:21. அப். 1:5ஐ வாசித்தால் இயேசுவின் சீஷர்கள் கூட அப்படித்தான் நம்பினார்கள் என அறியலாம். தாவீது சங். 16, 22, 40 மற்றும் ஏசா 53 போன்ற அதிகாரங்களில் மேசியா அடையப்போகிற பாடுகளைப் பற்றி சொல்லியிருந்தும் தானி. 9:25-26ல் மேசியா சங்கரிக்கப்படுவார் என்று சொல்லியிருந்தும், சங். 2:7; 118: 22-24ல் அவர் உயிர்த்தெழுவார் என்று சொல்லியிருந்தும் அதைப்புரிந்து கொள்ள மனக்கண் குருடாய் (2 கொரி. 4:4) அவர்களுக்கு இருந்ததினால் முதல்முறை பூமிக்கு வந்த மேசியாவை அவர்கள் விசுவாசிக்கவில்லை. மேசியா தாவீதின் சந்ததியிலே பிறப்பார் (அப்.2:30; சங்.2:2; 132:11; 2 சாமு. 7:12) என்றும், தாவீதின் ராஜ்யத்தை ஆளுவார் என்றும் அவர்கள் அறிந்து விசுவாசித்ததினாலல்லவோ. "மேசியாவின் முதல் வருகையிலே தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று பாடி குருத்தோலை பிடித்து அவரை எருசலேமுக்கு கொண்டு போய் ராஜாவாக்க நினைத்தார்கள். கிறிஸ்துவானவர் "தாவீதின் குமாரன்" என்று பரிசேயரே சொல்வதை நாம் காண்கிறோம்! (மத்.22:41-46). "கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்கள் கேட்டிருக்கிறோம்" என்று ஜனங்களே சொல்கிறார்கள் (யோ.12:34) ஆக, கிறிஸ்து பிறப்பிற்கு முன்னிருந்த இஸ்ரேலர், வரப்போகும் மேசியாவைப் பற்றி நன்கு

அறிந்திருந்தார்கள் என அறிகிறோம். முதல்முறையாய் பூமிக்கு வந்த கிறிஸ்துவை, அறியாமையினால் சிலுவையில் அறைந்த இஸ்ரேலர்கள், இன்றைக்கும் மேசியா வருவார் என்று அழுகையின் சுவருக்குமுன் நின்று அழுவதையும், காத்திருப்பதையும் நாம் கண்கூடாய்ப் பார்க்கிறோம். 1 சாமு. 2:10, 35; சங். 45:7, ஏசா. 61:1; யோ. 1:41; 245 போன்ற வசனங்களையும் பாருங்கள்.

இந்த சத்தியத்தை இன்னும் கொஞ்சம் விசாலமாகப் பார்ப்போம். இஸ்ரேல் மக்களால் புறக்கணிக்கப்பட்ட சமாரிய ஜாதியிலுள்ள ஒரு ஸ்திரியே "கிறிஸ்து எனப்படுகிற மேசியாவருகிறார் என்று அறிவேன்" (யோ. 4:25) என்று சொல்லும்போது, பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் கிறிஸ்துவைப் பற்றி தெரிந்திருக்கிறார்கள் என உணரலாம். இயேசு ஜனங்களிடமும், சீஷர்களிடமும், கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார் (மத்.23:8;10) என்று சொல்லும்போது அவர்கள் கிறிஸ்துவைப் பற்றி அறியாதிருந்தால் "கிறிஸ்து" என்றால் என்ன என்று கேட்டிருப்பார்களே! யார் அந்த கிறிஸ்து என்று கேட்டிருப்பார்களே! கிறிஸ்து மேசியா - என்பவர் தேவகுமாரன் தான் என்று பிரதான ஆசாரியருக்கும் மூப்பருக்கும் சங்கத்தாருக்கும் தெரிந்ததாலே தானே, "நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து தானா?" (மத். 26:68) என்று கேட்கிறான். "நீ சொன்னபடிதான்" என்று இயேசு சொன்னதும் அவன் தன் வஸ்திரங்களை கிழித்துக் கொண்டு "இவன் தேவதூஷணம் சொல்கிறான்" என்றானே ஏன்? வரப்போகிற அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவாகிய மேசியாவின் தேவத்துவம், மகிமை, வல்லமை எல்லாமே அவன் அறிந்திருந்தபடியால் தச்சன் மகனாகிய இவன் தன்னை கிறிஸ்துவுக்கு இணையாக்கி, நானே கிறிஸ்து என்கிறானே என்று மனந்துடித்துப் போகிறான். இப்படிப்பட்டவர்களுக்காகவே இயேசு, "வேத வாக்கியங்களை ஆராய்ந்துப் பாருங்கள்; என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோ.5:39) என்று சொல்லியிருக்கிறார். மேலும் கிறிஸ்துவைப் பற்றி அறியாதிருந்தால் பழைய ஏற்பாட்டுகாரனாகிய பேதுரு "நீர் கிறிஸ்து" (மாற்.8:29; யோ. 6:69) என்று சொல்லியிருப்பானா? இயேசு ஊழியம் செய்யும்போது யோவான் ஸ்நானனின் சீஷருக்கும் யூதருக்கும் வாக்குவாதம் உண்டாகி அவனிடத்தில் வந்து, இயேசுவிடத்தில் எல்லோரும் போகிறார்களே என்று கேட்டார்கள். அதற்கு அவன் "நான் கிறிஸ்துவல்ல; அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன்" (யோ.3:28) என்றான். கிறிஸ்துவைப் பற்றி வேதம் மூலமாக அவர்கள் அறியாதிருந்தால் யார் கிறிஸ்து என்றும், அவருக்கு முன்பாக ஒருவன் அனுப்பப்பட்ட வேண்டுமா என்றும் கேட்டிருப்பார்களே! மல் 4:5ஐ எல்லாம் அவர்கள்

அறிந்திருக்கிறார்களா. எருசலேம் மக்கள் கிறிஸ்துவைப் பற்றி அறிந்ததால் தானே யோ.7:26; 27, 31, 41 வார்த்தைகளைச் சொல்கிறார்கள்! கிறிஸ்துவின் மகிமையை அறிந்திருந்ததால்தான், இயேசுவை கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று கட்டுப்பாடு செய்திருந்தார்கள்'' (யோ.9:2). கிறிஸ்து வருவார் என்று அறிந்திருந்ததால் தான் ''எதுவரைக்கும் எங்கள் ஆத்மாவுக்கு சந்தேகம் உண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்துவானால் எங்களுக்கு தெளிவாகச் சொல்லும்'' (யோ.10:24) என்று கேட்டார்கள். மார்த்தாள் ''ஆண்டவரே நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்'' (யோ. 11:26) என்று சொல்வதால் நிச்சயமாய் அந்த கால மக்கள் வரப்போகிற கிறிஸ்துவை அறிந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

மேலும் கர்த்தருடைய தூதனானவர் என்று பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் வருகின்றது. அவர் தேவன் என்றே உணர்ந்தனர். அந்த தூதனானவர் கிறிஸ்துவாகிய இயேசுதான் என்று அவர்களும் அறிந்திருக்கிறார்கள். ஸ்தேவான், பவுல் போன்ற புதிய ஏற்பாட்டு ஊழியர்களும் விளக்கியிருக்கிறார்கள் என்பதை மே 2000 முழக்கம் 85ல் எழுதியிருக்கிறேன். இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே! பழைய ஏற்பாடடு கால இஸ்ரேலர் மட்டுமல்ல; அதற்குமுன் இருந்தவர்களும் கிறிஸ்துவாகிய மேசியாவைப் பற்றி நிச்சயம் அறிந்திருக்கிறார்கள். அல்லேலூயா!

❖ ❖ ❖

## நியாயத்தீர்ப்பு எங்கே யாருக்கு நடக்கும்?

நியாயத்தீர்ப்பு என்றாலே ஆக்கினைத் தீர்ப்பு என்ற எண்ணம் பலருக்கு உண்டு. ரோ. 8:1ன் படி இரட்சிக்கப்பட்ட தேவப்பிள்ளைக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என அறிகிறோம். ஆனால் 1 பேது.4:17, 18ஐ வாசித்தால் நமக்கு நியாயத்தீர்ப்பு உண்டென்றும், நீதிமானாக்கப்பட்ட நாமே ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து இரட்சிக்கப்படுவது அரிதான தென்றும் சொல்வதால் இது என்ன நியாயத்தீர்ப்பு; இது எங்கே நடக்கும் என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா! வெளி.20:11,12 மற்றும் செம்மறியாடு வெள்ளாடு என்று பிரிக்கும் மத். 25:31-46 போன்ற வசனங்களை வைத்து 1000 வருட அரசாட்சிக்குப் பிறகு ஒரு பொதுவான உயிர்த்தெழுதல் நடக்கும் எனவும், அதைத் தொடர்ந்து ஒரு பொதுவான நியாயத்தீர்ப்பு ஏற்பட்டு

அத்தோடு பூமியானது அக்கினியினால் அழிக்கப்படும் எனவும் ஒரு பொதுவான கருத்து கிறிஸ்தவ வட்டாரத்தில் நிலவுகிறது. இது கத்தோலிக்க சபையிலிருந்து எழும்பியது. இதையும் நம்புகிற மற்ற சபைகளும் உண்டு. அப்படியானால் நியாயத்தீர்ப்பு ஒரே இடத்தில் தான் நடக்குமா? அது பாவிகள், பரிசுத்தவான்கள் என அனைவருக்கும் நடக்குமா? என்பதை ஆவியானவர் விளக்குவாராக!

**ஒரே ஒரு பொதுவான நியாயத்தீர்ப்புக்கு வேதம் இடமளிக்கவில்லை,** எப்படியெனில் ஓர் நியாயத் தீர்ப்புக்கு 3 இடங்களில் மூன்று வெவ்வேறான நியாயசனங்கள் வைக்கப்படுமா? மூன்றுவிதமான மானிடருக்கும் மூன்று முறை நியாயத்தீர்ப்பு நடக்குமா? இவைகள் கேள்விகள்.

2 கொரி. 5:10ஐ வாசித்தால் **"கிறிஸ்துவின் நியாயாசனம்"** (Judgement seat of Christ) என்று உள்ளது. இது ஆகாயத்தில் வைத்து நடப்பது. 1 தெச. 4:16, 17; 1 கொரி 15:51-58 வசனப்படி விசுவாசிகள் ஆகாயத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நடக்கும் நியாயத்தீர்ப்பு. இதிலே ஆக்கினைத் தீர்ப்புகள் இல்லை. இங்கே கிரீடங்கள் தான் கொடுக்கப்படும். ஜீவ கிரீடம் (யாக்.1:12; வெளி. 2:10) மகிமையின் கிரீடம் (1 பேது 5:2-4) மகிழ்ச்சியின் கிரீடம் (1 கொரி 2:19,20; பிலி. 4:1) நீதியின் கிரீடம் (2 தீமோ 4:8) வாடாத கிரீடம் (1 கொரி. :25-7) போன்றவை அளிக்கப்படும். இந்த நியாயத் தீர்ப்பு கொடுப்பதற்காகத்தான் நியாய விசாரனை தேவனுடைய வீட்டில் துவக்குங் காலமாயிருக்கிறது. (1 பேதுரு 4:17) என்று பேதுரு முதலாம் நூற்றாண்டிலேயே கூறியிருக்கிறார். இன்னொன்று **மகிமையின் சிங்காசனம்** (The throne of Glory மத். 25:31, 32). இது பூமியின் மேல் வைத்து நடப்பது. இது இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜவாய் கர்த்தாதி கர்த்தாவாய் மகிமையோடு ஒலிவமலையில், காலடி வைத்து (சக.14:4) இரண்டாம் முறை பூமிக்கு வரும்போது, பூமியில் அப்போது உயிரோடிருக்கும் பற்பல தேச மக்களுக்கு செய்யப்படும் நியாயத்தீர்ப்பு. மூன்றாவதோ **"பெரிய வெள்ளை சிங்காசனம்"** (Great white Throne) வெளி.20:11;12ல் உள்ளது. இது மரித்த பொல்லாதோருக்குரியது; இரகசிய வருகையில் பங்கடையாதவர்களும், முதலாம் உயிர்தெழுதலில் பாக்கியம் பெறாதவர்களும் இதில் அடங்குவர். (இயேசுவின் இரகசிய வருகை, முதலாம் உயிர்த்தெழுதல் போன்ற தலைப்பிலுள்ள செய்திகளை ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற புத்தகத்தில் வாசியுங்கள்).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ எங்கே நடக்கும் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாயிக்கிறாய்? இரகசிய வருகையிலே அவரோடு சென்று கிறிஸ்துவின் நியாயசானத்திற்கு முன்பு நின்று கிரீடம் வாங்க தயாராயிருக்கிறாயா? இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## மரியாள் அமலோற்பவ மாதாவா?

மரியாளுக்கு பாத்திமா மாதா, காணிக்கை மாதா, சகாய மாதா, ஆரோக்கியமாதா என பல பெயர்களை ரோமன் கத்தோலிக்கர் வைத்துள்ளனர். அதிலே ஒரு பெயர் தான் அமலோற்பவ மாதா என்பது. அமலம் என்றால் பாவமில்லாத - குற்றமில்லாத" என்று பொருள். அமலோற்பவ மாதா என்றால் பாவமில்லாமல் பிறந்தவர் என்று பொருள். அப்படியானால் இவரது இரத்தம் மாசில்லாத இரத்தமாக இருக்க வேண்டும். அப்படி மாசற்ற இரத்தமானால், உலகத்தார் பாவங்களை தீர்க்க மரியாளின் இரத்தமே போதும், இயேசுவின் இரத்தம் தேவையில்லையே! இந்த சிந்தனையிலேயே மரியாள் பாவமில்லாமல் உற்பவமானாரா - அமலோற்பவியா என்று பார்ப்போம்.

உலகிலுள்ள அத்தனை பேரும் பாவிகள். பாவம் செய்வதால் பாவிகளல்ல; ஆதாம் ஏவாளின் பாவ ஜாதியில் பிறந்ததால் பாவிகள். இதனால்தான்; "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்" (சங்.51:5) என்று தாவீது பாடுகின்றான். இதிலே பாவம் என்று சொல்லப்பட்டது உடலுறவல்ல; ஆதாம் ஏவாளின் மூலம் தொடர்ந்து வரும் பாவம் (ரோ.5:19) ஆதாம் ஏவாளின் பாவம், பிள்ளைகளையும் தொடர்கிறது. அதனால் தான் கையும்களவுமாய் பிடிபட்ட விபச்சார ஸ்திரீயின் மேல் "பாவமில்லாதவர்கள் கல்லெறியுங்கள்" என்று இயேசு சொன்ன போது, பெரியோர் முதல் சிறியோர் வரை எல்லோரும் ஒதுங்கி விட்டனர் (யோ. 8) பாவம் செய்யாதவர்கள் கல்லெறியுங்கள் என்று சொல்லியிருந்தால், சிறியோர்கள் எறிய வாய்ப்புண்டு. இதிலிருந்து நாமறிவது என்ன? ஆதாமின் ஜாதியில் பிறந்த அத்தனைபோரும் பாவிகளே! இந்த அர்த்தத்தில் தானே "ஏ! பாவியே!" என்று Dawn Preaching பண்ணுகிறோம். இந்த அர்த்தத்தில் தானே 1 யோ. 1:8ம் வசனம் எழுதப்பட்டுள்ளது. மரியாள், ஆதாம் சந்ததியில் பிறந்திருப்பதால் அவரும் பாவ ஜாதிதானே! அவரும் பாவிதானே! அப்படியிருக்க அவர் எப்படி

பாவமில்லாமல் உற்பவித்த அமலோற்பவ மாதா என்று அழைக்கப்பட முடியும்? ஆதாமில் பாவமில்லாமல் பிறந்தவர் இயேசு ஒருவரே! இரட்சிக்கப்பட்ட நாமெல்லாரும் எப்படி யோ. 1:13ன் படி பிறந்ததால் நீதிமானாய்ப் பிறந்தோமோ அப்படியே இயேசு கிறிஸ்து பாவ ஜாதியான யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறக்காமல் பரிசுத்த ஆவியானாலே உற்பவிக்கப்பட்டு கன்னிமரியின் வழியில் பிறந்தார்! அவர் ஒருவரே பாவமில்லாமல் உற்பவிக்கப்பட்டவர். அல்லேலூயா!

இதை இன்னும் கொஞ்சம் விளக்கமாய் படிப்போம். லேவி 12:6-8ஐ வாசியுங்கள். குழந்தையைப் பெற்ற தாய், பாவ நிவிர்த்தி செய்து அவள் சுத்தமாக வேண்டும் என்பதற்கு, சர்வாங்க தகனபலியாக ஒரு வயது ஆட்டுக்குட்டியையோ ஒரு புறாக்குஞ்சையோ காட்டுப் புறாவையோ பாவ நிவாராண பலியாக ஆசாரியனிடம் செலுத்த வேண்டும். ஆட்டுக்குட்டியை செலுத்த சக்தி இல்லையென்றால் இரண்டு காட்டுர் புறாக்களையாவது அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது செலுத்தவேண்டும். இந்த நியாயப் பிரமாணப்படி மரியாள் செய்தாள் என்று லூக். 2:24, 39ன் மூலம் அறிகிறோம். ஆக, மரியாளே தனக்கு பாவ நிவர்த்தி செய்தாள் என்றால், அவள் எப்படி அமலோற்பவியாக முடியும்? அவளும் நம்மைப் போல் பாவத்தில்தான் பிறந்திருக்கிறாள். ஆமென். சத்தியம் இப்படியிருக்க, வீணே அமலோற்பவமாதா என்று மரியாளைச் சொல்லி, இயேசுவின் மகிமைப்பிறப்பை, மரியாளின் பாவ ஜாதிப்பிறப்போடு இணைப்பது தேவனுக்குச் செய்யும் துரோகமில்லையா! இப்படிச் செய்கிறவர்களின் மனக்கண்கள் பிரகாசமாகட்டும்! (எபே.1:19) இந்தக் கருகலான சத்தியம் அவர்களுக்குள் மலரட்டும்! இயேசு சீக்கிரம் வருகிறார்.

❖ ❖ ❖

## கிறிஸ்துவை அறியாமல் மரித்த ஆத்மாக்கள் எங்கே இருக்கும்?

மண்ணிலிருந்து உருவாக்கப்பட்ட சரீரம் "புறம்பான மனுஷன்" என்றும் (ஆதி. 2:7) ஒன்றுமில்லாமையிலிருந்து தேவ சாயலின்படியும் ரூபத்தின் படியும் சிருஷ்டிக்கப்பட்ட ஆவியும் (ஆதி.1:26) அதோடு இணைந்துள்ள ஆத்மாவும் (எபி.4:12) "உள்ளான மனுஷன்" என்றும் அறிகிறோம். மனிதனுக்கு சரீர மரணம் வரும் போது ஆவி தன்னோடு இணைந்துள்ள ஆத்மாவோடு தேவனிடம் போகின்றது என்றும் (பிர.12:7)

அங்கிருந்து பரதீசுக்கோ பாதாளத்திற்கோ செல்லும் என்றும் அறிந்திருக்கிறோம். பாதாளம் என்பது பூமிக்குள்ளும், பரதீசு என்பது மூன்றாம் வானத்திலும் இருக்கிறது என்று அறிவோம். (எபே.4:9; அப்.2:27; 2 கொரி 12:23) (ஆசிரியரின் இந்த நூலில் உள்ள "எல்லா ஆவியும் தேவனிடம் போகுமா?" என்ற செய்தியும் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் உள்ள "ஆவி-உயிர்-ஆத்மா" மற்றும் "நரகமா? பாதாளமா?" என்ற செய்திகளையும் வாசியுங்கள்.) எபி. 12:22-24ன்படி பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் ஆவி இருக்கிற மூன்றாம் வானத்திலுள்ள பரதீசும் பரலோகமும் அருகருகே உள்ளது என்று உணரலாம். இந்தப் பரதீசில்-இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்துவுக்குள்ளாய் மரித்தவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் தான் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் 1 தெச. 4:16-17ன் படி முதலாவது எழுந்திருப்பவர்கள் (பரதீசிலுள்ள உள்ளான மனுஷனும், பூமியிலுள்ள புறம்பான மனுஷனும் இணைந்து எழுகிறான்) (வெளி.20:6) இரட்சிக்கப்படாதவர்கள் - கிறிஸ்துவுக்குள் மரிக்காத பாவிகள், யூதாஸ் காரியோத்தைப்போல (அப்.1:24) ஐஸ்வரியவானைப் போல (See லாசரு-ஐஸ்வரியவான் சரிதை) நமக்காய் பாவமாக்கப்பட்ட இயேசுவைப் போல பாதாளத்தில் இருக்கிறார்கள். நம் காலம் கிறிஸ்துவை உலகமெங்கும் பரப்புகிற காலம்; அவரை அறிகிற காலம். ஆனால் மனிதனின் கிட்டதட்ட 6000 ஆண்டு சரித்திரத்தில் இயேசு கிறிஸ்துவைத் தெரியாத, அறியாத, புரியாத காலங்கள் உண்டு; அப்படிப்பட்ட மக்களுக்கும் பாதாளம் உண்டா? அந்த காலகட்ட நிலையில் மரித்த மக்களின் ஆத்மா பரதீசில் இருக்குமா? இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

அப். 17:30ன் படி அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருக்கிறார். அப்படியானால் இப்படிப்பட்ட அறியாமையில் வாழ்ந்தவர்களை தேவன் பரதீசில் வைப்பாரா? பூரணராக்கப்பட்ட நீதிமான் தான் அங்கே இருப்பான். உலகிலே தேவன் ஒருவர் தவிர நீதிமான் ஒருவரும் இல்லை (லூக்.18:19); நீதிமான் ஒருவனாகிலுமில்லை (எரே. 2:10). அப்படியானால் பரதீசில் உள்ளோர் யார்? ரோ 3:23; 24 ன் படி நீதிமானாக்கப்பட்டவர்கள் (ரோ. 10:9,10; 1 கொரி.6:11) ஆதாம் முதல் இன்று வரை வாழ்வோர் அத்தனை பேரும் கிறிஸ்துவினால் தான் மீட்பை பெறுகின்றனர். இப்படிப்பட்ட மீட்பைப் பெற்ற விசுவாசமாக்கத்தார் அத்தனை பேரும் கிறிஸ்துவுக்குள் மரித்தால் பரதீசில் இருக்கிறார்கள். அப்படியானால் கிறிஸ்துவையே அறியாத, உணராத, கேள்விப்படாத யாரும் சன்மார்க்கனாய் இருந்தாலும், நீதிமானாக்கப்படாத பட்சத்தில் பரதீக்கு செல்ல வாய்ப்பில்லை

அல்லவா! ஒரு மனிதன் எந்தக் காலத்தில் வாழ்ந்தாலும் ரோ.2:14, 15ன் படி வாழ்ந்த பாவிகள் அனைவரும் பாதாளம் தான் போவர். கடவுளைப் பற்றி எனக்குத் தெரியாது என்று போக்குச் செல்வோரும் (ரோ.1:20) பாதாளம்தான் போவார். கிறிஸ்துவுக்குள் மரிக்காமல், அறியாத காலங்களில் ரோ. 2:14, 15ன் படி நடந்த மரித்த உத்தமர்கள் நிலை என்ன? மனித வாழ்க்கையை எடைபோட அடிப்படையாய் இருக்கும் நியாயப் பிரமாணத்தில் ஒருவன் அறிந்து செய்த பாவத்திற்கு மட்டுமல்லாது, அறியாமையினால் பாவம் செய்தாலும், அவன் குற்றமுள்ளவனாயிருந்து அக்கிரத்தைச் சுமப்பானென்றும், அதிலிருந்து விடுதலையாக குற்ற நிவாரண பலி செலுத்த வேண்டும் என்றும் எழுதப்பட்டுள்ளது (லேவி 5:17). இதன்படிப்படையில் இயேசு சொன்ன உவமானத்தை லூக். 12ல் வாசிக்கலாம்.

பெருந்தவறு செய்பவர்களை யூதர்கள் 40 அடி அடிப்பார்கள் (உபா. 25:3) சிறிய தவறுகள் செய்தால் நாலைந்து அடிகள் மட்டுமே அடிக்கப்படும். அதுபோல லூக். 12:48ன் படி அறியாதவனாயிருந்தாலும், சில அடிகள் அடிக்கப்படுவான்; ஏனெனில் அறியாமலே அடிகளுக்கு ஏதுவானதைச் செய்திருக்கிறான். லேவி. 5:17ஐயும் லூக் 12:48யும் தியானித்தால் ஒருவன் இயேசுவைப்பற்றி அறியாத காலத்தில் இருந்தாலும், பாவத்திற்கு ஏதுவான, இயேசுவை விசுவாசிக்காத நிலையில் அவன் இருந்தபடியால் (யோ. 16:8,9) அவனுக்கு சில அடிகள் அடிக்கப்பட்டே ஆகும்; அதாவது அப்படிபட்டவன் பாவிகளோடு பாதாளம் போய்த்தான் ஆகவேண்டும். சில அடிகள் என்பதால்மற்றப் பாவிகளைப் போல அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்குள் நிந்திய நியாயத் தீர்ப்பின் போது அனுப்பப்படுவதில்லை. இதைத்தான் பவுல் ரோ.2:16ல் எழுதுகிறான். இந்த நித்திய நியாயத் தீர்ப்பு (வெளி. 20:11) உத்தம நன்னடக்கையின்படியும் கிரியையின்படியும் வெளிப்படுத்தப்பட்ட வெளிச்சத்தின்படியும் நற்செய்தியின்படியும் இருக்கும். (ரோ.2:2,6,11,15, 16) இந்த வகையில் பார்த்தால் கிறிஸ்துவை அறியாத காலங்களில் வாழ்ந்த தெய்வ பயமுள்ள நற்கிரியைக்காரர்கள் நரகத்திற்குப் போவதில்லை. இவர்கள் கொஞ்சம் அடிக்காய், மரித்த உடன், பாதாளம் போனாலும், நித்திய நியாயத் தீர்ப்பில் பாதுகாக்கப்படுபவர்; தென் தேசத்து ராஜஸ்திரி, நினிவே பட்டணத்தார், தீரு. சீதோன், சோதோம் மக்கள், 1000 வருஷ ஆட்சியில் மரித்த நற்கிரியைக்காரர்கள் போன்றவர்கள் இந்த கூட்டத்தில் அடங்குவர் (லூக்.11:31-32; மத். 11:21-24; ஏசா. 65:20) தேவனுடைய நியாயத் தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள்; ஆராயப் படாதவைகள் (ரோ. 11:33) அல்லேலூயா! இந்தக் கூட்டத்தார் வரப்போகும் புதிய பூமியில் வாழப்போகிறவர்கள். ஆமென்! இதை வாசிக்கும் தேவ

பிள்ளையே! அறியாத காலங்களில் மரித்த உங்கள் மூதாதையர்கள் மற்றும் உலக மக்களைப் பற்றி எந்த ஒரு கவலையும், கலக்கமும் வேண்டாம். தேவன் நேர்த்தியாய்ச் செய்வார்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## இயேசு சர்வ வல்லமையுள்ள தேவனா?

"இயேசு தேவனா?" என்பதை விளக்க பல செய்திகள் எழுதியிருக்கிறேன். எல்லா ஆய்ச்சிப் புத்தகங்களிலும் விளக்கியிருக்கிறேன். இன்றைய தேதியில் இயேசு கிறிஸ்து தேவன்தான் என்று "யேகோவாவின் சாட்சிகள்" போன்ற சபையார் கூட ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் 1 கொரி.8:5,6ன் படி அநேக தேவர்கள் இருந்தாலும் பிதாவாகிய ஒரே தேவன் தான் உண்டு என்றும், வெளி.21;22; 19:6 போன்ற வசனங்களின்படி பிதா தான் "சர்வவல்லமையுள்ள தேவன்" என்றும், இயேசு கிறிஸ்து எல்லாம் அவருக்கு கீழானவர் என்றும் வாதிடுகிறார்கள். ஆதியிலே வார்த்தை தேவனாயிருந்தது; அது தேவனோடிருந்தது என்று சொன்னாலும் (ஆதி.1:1) அவருக்கு மேலே பிதாவாகிய தேவன் ஒருவர் இருந்தார் என்று பதிலளிக்கிறார்கள். இப்படியான கருகலான சத்தியத்தை தேவன் மலரச் செய்வாராக!

தேவன் மூன்று ஆள்தத்துவமாய் இருக்கிறார் என்பதை நம்பாதவர்கள் செய்கிற வாதம் தான் இது. திரித்துவம் உண்டு என்றும், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று ஆள்தத்துவத்தில் ஒரே தேவன் வெளிப்படுகிறார் என்றும், இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்றும் ஏராளமான வசன ஆதாரங்களோடு பல தலைப்புகளில் ஆராய்ச்சிப் புத்தகங்களில் எழுதியிருக்கிறேன். அதை ஒருவன் விசுவாசிக்கும் போது, இயேசு கிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவன் என்று நிச்சயம் நம்புவான். இயேசு நாமக்காரர்கள் (Only Jesus) திரித்துவத்தை நம்பாவிட்டாலும் "இயேசு தான் பிதா என்றும், இயேசு தான் பரிசுத்த ஆவியென்றும் சொல்லி இயேசுவே தேவன்" என்று சொன்னாலும், யேகோவா விட்னஸ் போன்ற சபையார், அவர் சர்வ வல்லமையுள்ள தேவனல்ல என்று வாதிடுகிறார்கள. சங்.2:7, நீதி.8:24,30 போன்றவற்றைக் காட்டி இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும், கொலோ 1:15ன் படி சர்வ சிருஷ்டிக்கும் முன்பே சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும், அவருக்கு பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவன், அதிகாரங்களையும், வல்லமையையும் கொடுத்து, தனக்கு அடுத்த ஸ்தானத்தில்நிறுத்தி உலக இரட்சகராய் மாற்றினார் என்றும் சொல்கிறார்கள்.

சங்.2:7 என்பது இயேசு மரித்து உயிர்த்தெழுந்ததைப் பற்றி சொல்வது என்றும் (அப்.13:32,33; எபி.5:5:1:5), நீதிமொழியில் சொல்லப்பட்ட ஞானம் இயேசு அல்ல என்றும் விரிவாய் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். இன்னும் விரிவாய் அறிந்து கொள்வோம்.

வார்த்தையானவர் தேவனுக்குச் சமமாயிருந்தார், தேவனுடைய ரூபமாயிருந்தார் (பிலி.2:6; கொலோ. 1:15); இன்றைக்கும் தேவனுக்கு சமமாய் அவரது வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். மட்டுமல்ல... "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை விசுவாசிக்கிறதில்லையா? நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோ.14:9,10;10:30; 17:21) என்று இயேசுவே சொல்லியிருக்கிறார். ஏசா.42:8ல் என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன் என்று கர்த்தர் கொல்லியிருக்கும்போது இயேசுவுக்கு எப்படி மேலே சொல்லப்பட்ட படி சம அந்தஸ்து தரப்பட்டது; பிதாவாகிய தேவனின் மகிமையே வார்த்தையானவருக்கும் கொடுக்கப்பட்டால், வார்த்தையானவரும் பிதாவைப் போன்ற சர்வ வல்லமையுள்ள தேவனே! "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று இயேசு சொன்ன உடனே, இந்த வார்த்தையின் உட்பொருள் "இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் தான்" என்று அர்த்தமுள்ளதை யூதர்கள் உணர்ந்து அவர் மேல் கல்லுகளை எடுத்தார்கள். (யோ.10:31); மேலும் தன்னை சர்வ வல்லமையுள்ள தேவனென்று சொல்லி தேவ தூஷணம் சொன்னதால் கல்லெறிகிறோம் என்று யோ.10:33ல் விளக்கமும் கொடுக்கிறார்கள். இயேசுவின் இரட்சிப்பை உணராத இஸ்ரேலருக்குப் புரிகிறது இவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகவே வெளிப்படுத்துகிறார் என்று; ஆனால் இயேசுவை இரட்சகர் என்று சொல்வோருக்கு இந்த உண்மை புரியவில்லை. பாவங்களை மன்னிக்கிறவர் சர்வ வல்லமையுள்ள தேவன் மட்டுமே! உன் பாவம் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று இயேசு சொன்னதை தேவ தூஷணம் என்று யூதர்கள் சொன்னார்கள்; மன்னிக்கும் அதிகாரமும் அவரிடம் உண்டென்றால் அவர் சர்வ வல்லமையுள்ள தேவனல்லவா? (மாற்.2:5-1). இயேசு நித்திய பிதா என்று ஏசா.9:6-7ல் உரைக்கப்பட்டதை ஒருவரும் தியானிப்பதில்லை. மனிதனாய்ப் பிறக்கும் போது இம்மானுவேல் என்று பெயரிட ஏன் முன் கூட்டியே சொல்லப்பட்டது. இமானுவேல் என்றால் "தேவன் நம்மோடு" என்று பொருள். சர்வ வல்லமையுள்ள தேவன் மனிதர்களோடு மாம்சமானார் என்று அர்த்தம் (1 தீமோ. 3:16). ஆமென். "சர்வ வல்லமையுள்ள தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லை என்றார்" இயேசு (லூக்.18:19). யோ.8:46 ல் which of you convinceth me sin என்கிறார் இயேசு.

நீதிபதி பிலாத்தாலும், காட்டிக் கொடுத்த எதிரியான யூதாசாலும், தன்னாலும், ஊரிலிருந்த நூற்றுக்கதிபதி யோசேப்பாலும் பாவமில்லாத நல்லவர் என்று நிரூபிக்கப்பட்டதால், இவர் சர்வ வல்லமையுள்ள தேவன் தானே! உயிர்தெழுந்த இயேசுவைப் பார்த்து, "என் ஆண்டவனே! என் தேவனே!" (My Lord! My God!) என்றானே அதன் பொருள் புரியவில்லையா?

மேலும் தீத்து 2:13ல் இயேசுவை "மகாதேவன்" என்று சொல்லப் பட்டிருப்பதால், இவருக்கும் மேலே தேவன் ஒருவரும் இல்லையென்றும், பிதாவும், இவரும், ஆவியானவரும் "மகாதேவன்" தான் என்றும் அறிகிறோம். 1 யோ. 5:20ல் "இவரே மெய்யான தேவன்" என்று எழுதப்பட்டிருப்பதால், இவருக்கு மேலே மெய்யான தேவன் ஒருவரும் இல்லையென்றும், பிதாவும், இவரும், ஆவியானவரும் மெய்யான தேவன் என்றும் அறிகிறோம். யோ. 17:3ல் பிதா, மெய்யான தேவன் (True God) என்று சொல்லப்பட்டுள்ளது; 1 யோ. 5:20ல் இயேசுவே மெய்யான தேவன் என்று சொல்லப்பட்டுள்ளது. அல்லேலூயா! இருவருமே சமமான மகிமையும், மாட்சிமையும், வல்லமையும் கொண்ட தேவன் தான்! ஏசா.9:6ல் இயேசுவை வல்லமையுள்ள தேவன் (mighty God) என்று எழுதப்பட்டுள்ளதை தியானியுங்கள். ஒவ்வொரு மொழியிலும் தேவனுக்குரிய வார்த்தையைப் பாருங்கள்:-

| எபிரேய மொழியில் | ஆங்கிலத்தில் | தமிழில் | வசன ஆதாரம் |
|---|---|---|---|
| ஏல், ஏலா, ஏலோஹிம் | God | தேவன் / கர்த்தர் | ஆதி.1:1 |
| யேகோவா (YHWH-Jehovah) | LORD | கர்த்தர் | ஆதி.2:4; யாத்.34:6 |
| அதோன், அதோனை | Lord | ஆண்டவர் | ஆதி.15:2 |

ஆக, எங்கெல்லாம் வேதத்தில் God, LORD, Lord என்று வருகிறதோ அதுவெல்லம் சர்வ வல்லமையுள்ள தேவனையே குறிக்கிறது என அறிகிறோம். தமிழ் பைபிளிலே "கர்த்தர்" என்று வரும் இடங்களிலெல்லாம் Bold Letters (தடித்த, பெரிய எழுத்துக்களில்) இருப்பதே அது சர்வ வல்லமையுள்ள தேவனைக் குறிக்கிறது என அறியலாம். இயேசு கிறிஸ்துவையும் "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" "கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு" "ஆண்டவனே! என் தேவனே"! என்றெல்லாம் அழைக்கப் படுவதால், பிதாவாகிய தேவனைப் போல இவரும் சர்வ வல்லமையுள்ள தேவன் என்றே அறியலாம். பிதாவையும் "கர்த்தர்" என்று வேதம்

அழைக்கிறது. வார்த்தையான குமாரனையும் "கர்த்தர்" என்று வேதம் அழைக்கிறது; பரிசுத்த ஆவியானவரையும் "கர்த்தர்" என்றே வேதம் அழைக்கிறது. ஆக, மூவரும் சர்வ வல்லமையுள்ள தேவன் தான் என்று அறிகிறோம். தேவன் என்றும், கர்த்தர் என்றும் வேதத்தில் வரும் போது அது பன்மையில் ஒருமையாய் (மூன்று ஆள்தத்துவம் கொண்ட ஒரே தேவன்) அழைக்கப்படுகிறது. மற்றப்படி ஒருவரே சர்வ வல்லமையுள்ள தேவனைக் குறிக்கிறது. ஆதி 2ம் அதிகாரத்திற்கு மேல் பழைய ஏற்பாட்டில் இப்படித் தான் பெரும்பாலான இடங்களில் எழுதப்பட்டுள்ளது. இப்படி எழுதப்பட்டுள்ள தேவனாகிய கர்த்தர், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய வார்த்தையான வரையே குறிக்கிறது என்றும், பழைய ஏற்பாட்டில் வெளிப்பட்டு பேசியவர், நடத்தியவர் எல்லாமே சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் தான் என்றும் "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்" என்ற அடியேனின் புத்தகத்தில் விளக்கி உள்ளேன். இதுகுறித்து கொஞ்சம் விரிவாய்ப் பார்ப்போம்.

முட்செடியில் மோசேயோடு பேசிய தூதனானவர் யார்? இந்த தூதனாகிய சர்வ வல்லமையுள்ள தேவனின் நாமம் "இருக்கிறவராகவே இருக்கிறேன் (யேகோவா)" என்பதாகும் (யாத். 3:14; 6:2,3). இந்த தூதனானவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று அவரே விளம்புவதாக ஸ்தேவான் சொல்கிறான் (அப்.7:30-32). அப்படியானால் குமாரனாகிய தேவனின் பெயரும் யேகோவாதான். ஆமென். இதை நான் முன்பே எழுதி இருக்கிறேன். யாக்கோபுடன் இரவிலே போராடிய சர்வ வல்லமையுள்ள தேவனும், இந்த தூதனான வரும், யேகோவாவும், வார்த்தையாகிய கர்த்தருமானவர் தான் என்று ஓசி.12:4,5 சொல்கின்றது. இந்த வார்த்தையாகிய சர்வ வல்லமையுள்ள தேவன், இயேசு என்று மனிதனாய் வெளிப்பட்டு, கெத்சமனேயில் தன்னைப் பிடிக்க வந்தவர்களிடம், "நசரேயனாகிய இயேசுவைத் தேடி வந்தோம்" என்று அவர்கள் சொன்னதற்காக இவரின் பதில் என்ன தெரியுமா? "நான் தான்" (I am that I am) இது முட்செடியிலே மோசேக்கு முன் சொன்ன வார்த்தை. (யோ.18:6) "யேகோவா" என்பது இதன் பொருள். இந்த வார்த்தையின் மகிமை வெளிப்பட்ட உடனே பிடிக்க வந்தவர்கள் எதிர்த்து நிற்க முடியாமல் பின்னிட்டு விழுந்தார்கள். அல்லேலூயா! இவர் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் யோகோவா அல்லவோ! ஆமென். யோ.8:24, 58 போன்றவற்றில் "நான் இருக்கிறேன்" என்று கத்தோலிக்க தமிழ் பைபிளில் போட்டு. "நானே இருக்கிறேன் - நாமே இருப்பவர் என்று கடவுள் ஆதியில் மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். முழு நிறைவுடன், எக்குறையுமின்றி இருப்பவர் (உபா.32:39; இசை 43:10 காண்). கடவுள் தமக்குரியதென வெளிப்படுத்திய

பெயரை இயேசு தமதாக்கிக் கொள்கிறார். ஆகவே தாமும் உண்மைக் கடவுள் என்று கூறுகிறார்" என்று விளக்கியும் இருக்கிறார்கள். நான் இருக்கிறேன் (I am) என்று இயேசு தன்னை தேவனாகவே வெளிப்படுத்திச் சொன்னதை யூதர்கள் உணர்ந்து அவர் மேல் கல்லெறிய ஆரம்பித்தார்கள். (யோ. 8:59).

இயேசுவை ஏற்றுக் கொள்ளாத இஸ்ரேலருக்கும், பாரம்பரிய கிறிஸ்தவ சபையான ரோமன் கத்தோலிக்க சபைக்கும், இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்று தன்னை வெளிப்படுத்துகிறார் என்று புரியும் போது, யேகோவா விடனஸ் போன்றோருககு புரியாதது பிசாசின் செயல் தான். மேலும் யோ.8:56ல் ஆபிரகாம், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய வார்த்தையான வரை கண்டு களி கூர்ந்தான் என்று எழுதப்பட்டுள்ளதால், ஆபிரகாமோடு உறவாடியவர் இவர் தான் என்று நிதானிக்க ஏது உண்டு. ஏனெனில் யோ. 5:37ன் படி ஒருக்காலும் மனிதர்கள பிதாவாகிய தேவனின் சத்தைக் கேட்டதுமில்லை; அவர் ரூபத்தைக் கண்டதுமில்லை என அறிகிறோம். சீனாய் மலையில் பேசி. 10 கற்பனைகளை கொடுத்தவர் கூட பிதா அல்ல என்றும், தூதனானவராகிய வார்த்தையாகிய தேவன் என்றும் ஸ்தேவான் சொல்ல அப். 7:38, 53 மூலம் அறிகிறோம். யாத்.6:3ன் படி இந்த வார்த்தையாகிய தேவன், "சர்வ வல்லமையுள்ள தேவன்" (எல்ஷடாய்) என்னும் நாமத்தினாலே வெளிப்பட்டார் என அறிகிறோம் (see ஆதி.17:1).

மேலும் என் மகிமையை யாருக்கும் கொடேன் (ஏசா.42:8) என்கின்ற பிதாவாகிய தேவனே, குமாரனை நோக்கி "தேவனே" (God) என்று சொல்லியிருக்க (சங்.45:6,7; எபி. 1:8,9) இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதற்கு வேறு ஆதாரமும் வேண்டுமோ! இன்னும் நான் சொல்கிறேன் கேளுங்கள்:- வெளி.1:8ல் சர்வ வல்லமையுள்ள கர்த்தர் (Almighty) என்னும் வெளி.14:8ல் சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் (Lord God Almighty) என்றும், வெளி.11:17ல் சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவன் (Lord God Almighty) என்றும் வெளி.16:14ல் சர்வ வல்லமையுள்ள தேவன் (God Almighty) என்றும் ரோ.9:6ல் சர்வத்திற்கும் மேலான தேவன் (over all; God) என்றும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லியிருப்பதை வாசியுங்கள்; தியானியுங்கள்; ஆவியானவர் பேசுவதற்கு இடங்கொடுங்கள். "இயேசுவே ஆண்டவர்" (Jesus is the Lord) இயேசுவே கர்த்தர், இயேசுவே சர்வ வல்லமையுள்ள தேவன். திரித்துவத்தில் ஒருவரான மெய்தேவன், மகா தேவன் என்று பறைசாற்றுவோம்! வாழ்க சர்வ வல்லமையுள்ள தேவனின் நாமம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# விழுந்து போன தாவீதின் கூடாரம் எப்போது கட்டப்படும்?

ஆமோஸ் 9:1,12ல் "அந்நாளிலே. (in that day)" விழுந்து போன தாவீதின் கூடாரம் கட்டப்படும் என்று உள்ளது. ஆனால் யாக்கோபு, அப்.15:17ல் "இதற்குப் பின்பு" (After this) விழுந்து போன தாவீதின் கூடாரம் கட்டப்படும் என்று கூறுகிறார். இந்த இரண்டு வசனங்களும் சொல்லும் காலம் எது? கூடாரம் என்பதை ஆங்கிலத்தில் "Tabernacle" என்று எழுதப்பட்டு உள்ளது. அப்படியானால் இங்கே சொல்லப்படும் "தாவிதின் கூடாரம்" என்பது "தாவீதின் ஆசரிப்புக் கூடாரம்" என்று அர்த்தமா? இந்த தாவீதின் கூடாரம் விழுந்து போனது எப்போது? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆசரிப்புக் கூடாரத்தை தேவன் மோசேக்கு மலையின் மேல் காட்டி, ஆராதனைக்கென்று அதன் படியே செய்யச் சொன்னார் (எபி.8:5) உடன் பகைப் பெட்டி என்பது தேவனின் பிரசன்னம் போன்றது. அதிலே தேவனுடைய வார்த்தை இருந்ததல்லவா! இது ஆசரிப்புக் கூடரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்படும். நியாயதி பதிகளின் காலம் போய், இஸ்ரேல் ராஜா சவுலின் நாட்களிலும் இதை இஸ்ரேலர் தேடவில்லை. (1 நாளா.13:3). கீரியாத்யாரீமிலிருந்து இந்தப் பெட்டியை தாவீது கொண்டு வந்து எருசலேமிலே அதற்கென்று ஒரு ஆசரிப்புக் கூடாரத்தைப் போட்டான். (1 நாளா 13:5;15:1) மோசே வனாந்திரத்திலே உண்டாக்கின ஆசரிப்புக் கூடாரம் கிபியோனின் வீட்டின் மேலிருந்தது (1 நாளா 21:29); இங்கிருந்து தான் தேவன் சாலமோனோடு பேசினார் (2 நாளா 1) எருசலேமில் தாவீதால் கட்டப்பட்டஆசரிப்புக் கூடாரத்தை நிரந்தரமாய்க் கட்ட தாவீது வாஞ்சித்த போது தான், நாத்தான் மூலமாய் தேவன் பேசி சாலமோனால் ஆலயம் கட்டச் சொன்னார் (1 நாளா 17:13-14). அப்படியே ஆலயம் கட்டப்பட்டது. ஆசரிப்புக் கூடார ஆராதனை முறைமைகள் மாற்றப்பட்டிருப்பதால் (எபி.7) மறுபடியும் இந்த ஆலயம் கட்டி பழைய முறைமைகள் செய்யப்படுவது முறையற்றது; தேவையற்றது. மேலும் இந்த ஆலயம், மோசேக்கு தேவன் தந்த ஆசரிப்புக் கூடார மாதிரியாய் இருப்பதால், இந்த ஆசரிப்புக் கூடாரத்தை - ஆலயத்தை - தாவீதின் ஆசரிப்புக் கூடாரம் என்று சொல்ல வாய்ப்பில்லை. அப்படியானால் "தாவீதின் கூடாரம்" என்றால் என்ன பொருள்? NIV போன்ற பைபிளில் Tabernacle of David என்று போடாமல் Tent of David என்று தான் உள்ளது. தமிழில் கூட "தாவீதின் கூடாரம்" என்று தானே உள்ளது! 2 பேதுரு.1:13ல் சொல்லப்பட்ட கூடாரம் பேதுருவின் சரீரத்தை குறிக்கிறது.

சங்.78:67ல் சொல்லப்பட்ட யோசேப்பின் கூடாரம் பேதுருவின் சரீரத்தை குறிக்கிறது. சங். 78:67ல் சொல்லப்பட்ட யோசேப்பின் கூடாரம் என்பது யோசோப்பின் சந்ததியை குறிக்கிறது. சங். 19:4ல் சொல்லப்பட்ட சூரியனின் கூடாரம் என்பது சூரியனின் ஆளுகையைக் குறிக்கிறது; நீதி. 14:11ல் சொல்லப்பட்ட செம்மையானவனுடைய கூடாரம் என்பது, தாவீதின் ஆளுகையை - அரசை - அரசாட்சியைக் குறிக்கும்.

தாவீதின் குமாரன், தாவீதின் திறவுகோல், தாவீதின் கூடாரம் என்று தாவீதை இணைத்துச் சொல்வதெல்லாமே, பூமிக்கடுத்தவனாய் தாவீது இருப்பதால், அவைகள் முறையே, பூமிக்கடுத்த மனுஷகுமாரன், பூமிக்கடுத்த ஆசீர்வாத வார்த்தை, பூமிக்கடுத்த அரசு என்று அர்த்தமாகிறது. மற்றபடி தாவீது ஆலய ஊழியனாய் இல்லாமல் வெறும் ராஜாவாய் இருந்ததால் தாவீதின் கூடாரம் என்பது ஆராதனைக்குரிய ஆசரிப்புக் கூடாரத்தைக் குறிக்காது. ஆமென். இயேசு கிறிஸ்துவுக்கு குருத்தோலை பிடித்து ஓசன்னா பாடி எருசலேமுக்கு அழைத்துக் கொண்டு போனதே, இயேசு தாவீதின் கூடாரத்தைக் கட்டி ஆளப்போகிற ராஜா என்ற அர்த்தத்தில் தான். தேவன், தாவீதின் ராஜ்யத்தைக் கட்டப் போவது உறுதி; ஆபிரகாமுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் (ஆதி.15:18-21) நிறைவேறப் போகிறது உறுதி; 1000 வருடம் கிறிஸ்து ஆளப் போகிறது உறுதி. இதனால்தான், இயேசு பரலோகம் போகும்போது "பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று பரிசுத்த ஆவி பெறுவதற்காக சொன்னபோது, இப்பொழுதா இராஜ்யத்தைக் கொடுப்பீர் என்று யூதர்கள் கேட்டார்கள் (அப்.1:5,6) ஆக, தாவீதின் ராஜ்யத்தை மீண்டும் கட்ட இயேசு வரப் போகிறார் என அறிகிறோம். இதுவே தாவீதின் உடன்படிக்கை (1 சாமு.7:16).

இந்த தாவீதின் அரசு விழுந்து போனதா? ஆம். 12 கோத்திரங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து இருக்கும் போது சவுல் ராஜாவானான். அவனுக்குப் பின் தாவீது ராஜாவாகி எருசலேமைத் தலைநகராய் கொண்டு ஆண்டான். சாலமோன் அதன்பின் 40 ஆண்டுகள் ஆண்டான். இவன் விக்ர ஆராதனைக்காரனாய் மாறியதால் தேவன் சொன்னபடியே தாவீதின் கூடாரம் இரண்டாய்ப் பிரிந்தது (1 ராஜா 11). அதில் ஒன்றான இஸ்ரேல் ராஜ்யம் அசீரியர்களால் கி.மு. 772லும், மற்றொன்றான யூத ராஜ்யம் கி.மு. 586ல் பாபிலோனியர்களாலும் வீழ்ந்து போனது. இன்று வரை விழுந்து போன தாவீதின் கூடாரம் எடுப்பித்துக் கட்டப்படவில்லை. மத்.24:32ல் சொல்லப்பட்ட படி, இன்றைக்கு இருக்கும் இஸ்ரேல் அரசு கூட முழுமையான தாவீதின் கூடாரமல்ல. ஆக, விழுந்து போன தாவீதின் அரசு மறுபடியும் கட்டப்படப்

போகின்றது என்பது உண்மை. அல்லேலூயா! எப்போது கட்டப்படும்? ரோ.11:25-27ஐயும் வாசித்தால் இரண்டின் நிகழ்ச்சியும் ஒன்று என்றும், இது இயேசுவின் பூமிக்கு வரும் 2ம் வருகை என்றும் அறியலாம். புறஜாதியாரின் நிறைவு உண்டாகி - அதாவது புறஜாதியாருக்கு இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்லப்பட்டபின் மத்.24:14ல் உள்ளது நிறைவேறியபின் இது நடக்கும். இதைத் தான் "இதற்குப் பின்பு" என்று யாக்கோபு அப்.15:17ல் சொல்கிறார். அதாவது, பேதுரு, அப்.15:7-11ல் புறஜாதியாரும் இயேசுவின் முதலாம் வருகைக்குப் பின் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விளக்கினாரே - அதையே யாக்கோபும் அப்.15:14ல் ஆமோதித்தாரே - அப்படியாய் புறஜாதியார் எல்லாம் இரட்சிப்புக்குள் வந்ததற்குப் பின்பு தாவிதின் கூடாரம் கட்டப்படும்; அதைக் கட்ட இயேசு 2ம் முறை வருகிறார். ஆமோஸ் 9:10,11ல் சொன்னது போல, "இந்நாளில்" (In this day) என்று யாக்கோபு சொல்லியிருந்தால் தாவீதின் கூடாரம் கிருபையின் காலமாகிய இந்தக் காலத்திலேயே கட்டப்படும் என்று தவறாய்க் கணிக்க வாய்ப்புண்டு. எனவே தான் ஆவியானவர்யாக்கோபின் வாயிலே "இதற்குப் பின்பு" என்று வார்த்தையைப் போட்டு பேச வைத்தார். அப்படி பேச வைத்தும் கூட, பலருடைய கண்கள் பிரகாசமில்லாததால், தாவீதின் கூடாரம் என்பது ஆசரிப்புக் கூடாரமென்றும், இயேசுவின் முதல் வருகைக்குப் பின் இயேசுவினால் இந்தக் கூடாரம் எடுப்பித்துக் கட்டப்படுகிறதென்றும் தவறாய்ப் போதிக்கின்றனர்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! ஆசரிப்புக் கூடாரம் பற்றி நமக்கு வெளிப்படுத்தப்பட்டது மோசேயின் ஆசரிப்புக் கூடாரமும் அதே போன்ற கல்லினால் செய்யப்பட்ட எருசலேம் ஆலயமும் மட்டுமே! இந்த ஆசரிப்புக் கூடார முறைமைகள் கிறிஸ்துவின் மரணத்தோடு முடிந்தது; இனி இவைகள் எப்போதும் தேவையில்லை! ஒரு சிலருடைய வாதத்தின் படி விழுந்து போனது தாவீதின் ஆசரிப்புக் கூடாரமாயிருந்தால் அது நல்லது தானே! இரண்டாய்ப் பிரிந்து இன்றைக்கு இல்லாமலிருக்கும் தாவீதின் சிங்காசனம் இஸ்ரேலருக்கென்று ஸ்தாபிக்கப்பட்டு 1000 வருடம் நாமும் கூட இயேசுவோடு ஆளவும் தான் இயேசுவின் இரண்டாம் வருகை! ஆமென். அப்படி அவர் வரும் போது தேவ நாமம் தரிக்கப்பட்ட அந்திகிறிஸ்துவின் ஆட்சியில் தப்பிப் பிழைத்த, பாதுகாக்கப்பட்ட சகல புறஜாதிகளும், மீதமான இஸ்ரேலரும் கர்த்தரை மேசியா என்று ஒலிவ மலையில் காண்பார்களே! (அப்.15:16) அவர்களெல்லாரும் 1000 வருட ஆட்சியில் எருசலேமை நோக்கி வருவார்களே! ஏசா.11, 35, 65ல் சொல்லப்பட்டவைகள் எல்லாம் நடக்கும்! இப்படியெல்லாம் நடக்கும் முன்னே, மணவாட்டியாய் நிச்சயதார்த்தம் பண்ணப்பட்ட நாம் (1 பேதுரு 3:21) இரகசிய வருகையில் எடுத்துக்

கொள்ளப்பட்டு மணம் முடிக்கப்பட்டு 7 ஆண்டு கழித்து அவரோடு கூட ஒலிவமலையில் இறங்கி வர ஆயத்தமாக வேண்டாமா? புறஜாதிகளை மணவாட்டியாய் ஆக்க, யூதரிடமிருந்து தடை வந்ததாலே, பேதுருவின் மூலமாயும், யாக்கோபின் மூலமாயும், பவுலின் மூலமாயும், இனி சம்பவிக்கப்போகிறவைகளை, திட்டமும் தெளிவுமாய் அறிந்து கொள்ள முடிந்தது! அல்லேலூயா! ஆவியானவருக்கே மகிமை!

❖ ❖ ❖

## இயேசுவாய் வந்தவர்தான் பிதாவா?

ஏசா. 9:6ல் பாலகனாய் பிறந்து நமக்கு குமாரனாய் கொடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நாமம் "நித்திய பிதா" என்று போடப்பட்டிருப்பதால் இயேசுதான் பிதா என்றும், வேறொருவர் பிதா ஸ்தானத்தில் இல்லை என்றும் கிறிஸ்தவ வட்டாரத்தில் ஒரு சில கூட்டத்தார் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். இந்த கருகலான சத்தியத்திற்கு ஆவியானவர் பதில் கொடுப்பாராக!

"பிதா வேறு; குமாரன் வேறு. இருவரும் இரண்டு ஆள் தத்துவமுடையவர்கள்" என்று பழைய முழக்கங்களில் வசன அடிப்படையில் ஏராளமான செய்திகளை தாராளமாய் எழுதியிருக்கிறேன். கடந்த பிப்ரவரி முழக்கத்தில் கூட எழுதி உள்ளேன். அஃதல்லாமல் அடியேனின் மூன்று ஆராய்ச்சி புத்தகங்களிலும் பல தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளேன். "இயேசுவின் நாமம்" சபையாரை தவிர (Only Jesus) மற்ற எல்லா சபையாரும், யேகோவா விட்னஸ் சபையார் கூட பிதாவும் குமாரனும் இரண்டு ஆள் தத்துவம் என்று நம்புகின்றனர். இங்கு குறிப்பிட்டுள்ள ஏசா.9:6ல் இயேசுவின் நாமம் "நித்திய பிதா" என்று உள்ளது. வார்த்தையாகிய தேவன் மனிதனாய் பிறந்த போது அவருக்கு இட்ட பெயர் இயேசு என்பதாகும். அவர் வார்த்தையாய் இருந்த போது தனிப்பெயர் ஏதுவுமில்லை. ஏனென்றால் பல மனிதர்கள் இருப்பதால் மனிதர்களுக்கு தான் Identification க்காக பெயர்கள் தேவையே ஒழிய, ஒரே தேவனுக்கு (GOD- ஏலோஹிம்) மூன்று ஆள்தத்துவமாயிருக்கும் ஒரே தேவனுக்கு பெயர் தேவையில்லை. ஒரே தேவனின் மூன்று ஆள்தத்துவத்திற்கு தேவன், வார்த்தை, பரிசுத்த ஆவி என மூன்று அழைப்பு பெயர்கள் இருந்தாலும் இது அவர்களுக்கு இடப்பட்ட காரணப் பெயர்கள்தான். வார்த்தையானவர் நம் பாவங்களுக்காக குமாரனாக்கப்படுவார் என்று பரலோகில் முடிவானதுமே, வார்த்தையானவருக்கு குமாரன் என்றும் தேவனுக்கு பிதா என்றும் காரணப்

பெயர்கள் வந்தன. நீதி.30:4ல் "அண்ட சராசரங்களை உருவாக்கின வருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன?" என்று கேட்பதிலிருந்தே பிதாவும், குமாரனும் வேறு வேறு என்று பழைய ஏற்பாட்டு மக்களுக்கே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது என அறிகிறோம். யோ.12:34ல் கிறிஸ்து என்றென்றைக்கும் இருக்கிறார்" என்று அவர்களே அறிக்கை யிட்டார்களே! (யோ.7:31; 11:27; 4:25; மாற்கு. 8:29 போன்ற பல வசனங்களை தியானியுங்கள்). ஆனாலும் அந்த குமாரனுக்கு கொடுக்கப்பட்ட நாமமெல்லாம் காரணப் பெயர்கள்தான். அப்படித்தான் ஏசா.9:6ல் அவருடைய நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தர், வல்லமையுள்ள தேவன், "நித்திய பிதா", "சமாதானப்பிரபு" என்று காரணப்பெயராக அழைக்கப்பட்டுளளது. இந்த நாமமெல்லாம் அவரின் மகிமையை, மாட்சிமையை, மகத்துவத்தை, வல்லமையை வெளிப்படுத்துபவைகளாகும். அதிலே ஒரு காரணப் பெயர்தான் "நித்திய பிதா" என்பது.

நித்திய பிதா என்றால் Everlasting Father என்று உள்ளது. இதில் Everlasting என்பது Nounல் (பெயர்ச்சொல்) உள்ளது. Everlasting, Eternity என்பதெல்லாம் ஒரே அர்த்தத்தில் வருகிறது. இதன் பொருள் "Endles Time" "முடிவற்ற காலம்" என்று பொருள். Everlasting Father- நித்திய பிதா என்றால் முடிவற்ற காலத்திற்கு தந்தை, முடிவற்ற காலத்திற்கு கர்த்தர்என்று பொருள். இதை இன்னும் கொஞ்சம் புரிந்துக் கொள்ளலாம். எபி.1:2ஐ ஆங்கிலத்திலும் வாசிப்போம். பிதாவாகிய தேவன் வார்த்தையாகிய குமாரனைக் கொண்டு "உலகங்களை உண்டாக்கினார்" (By whom also He made the world) என்று உள்ளது. இங்கே "World" உலகம் என்பதற்கு மூலபாஷையில் Aion என்று உள்ளது. இதன் பொருள் "யுகங்கள்" "காலங்கள்" (Ages, period of time course) என்பதாகும். இந்த அர்த்தத்தில் பார்த்தால் குமாரனாகிய தேவன், யுகங்களையும் (காலங்களையும்) திட்டமிட்டு உருவாக்கி, மனிதனுக்காக தேவ திட்டத்தை செயல்படுத்தினார் என்பதாகும். அதாவது இன்னின்ன காலங்களில் இன்னின்னவை சம்பவிக்க ஏற்படுத்திய செயற்பாடாகும். சம்பவங்கள், நிகழ்வுகள் மாறும்; முடிவுறும், ஆனால், இவர் ஏற்படுத்திய காலங்கள் முடிவற்றவை. நித்தியமானவை. இவர் காலங்களை மாத்திரம் திட்டமிடாமல் எல்லா சிருஷ்டிகளையும் உருவாக்க திட்டமிட்டு செயல்படுத்தியிருக்கிறார் (கொலோ.1:15-18; யோ.1:3, எபே.3:9) இந்த கண்ணோட்டத்தில் இவர் முடிவற்ற காலங்களின் தந்தையாக, கர்த்தராக இருக்கிறார் என்று அறிகிறோம். இதைத்தான் Everlasting Father - நித்திய பிதா என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மற்றப்படி பிதாவாகிய தேவன் ஆள்தத்துவத்தில் ஒருவராய் இருக்கிறார்.

இவர்தான் இயேசுவை பூமிக்கு அனுப்பினவரும், மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தவரும், மரணத்தினின்று உயிர்த்தெழ செய்தவருமானவர். எனவே, இயேசு பிதாவாகிய தேவனால். அல்லேலூயா!

Father is He who brings forth salvation.

Son is He who arranges or executes salvation which the Father brings forth.

Holy Sirit is He who applies to the people, the salvation which was provided by the Father through the Son.

மேலும் ஏசா.9:6ல் சொல்லப்பட்ட குமாரனின் அத்தனை நாமங்களும் பிதாவிற்கு பொருந்தும். ஏனெனில் பிதாவும், குமாரனும் பரிசுத்த ஆவியானவரும் ஒரே மகிமை, மாட்சிமை, மகத்துவம், வல்லமை, குணதிசயம் உள்ளவர்கள். மூவருக்குள் உயர்வு தாழ்வே இல்லை. மூவரும் சமமாயும் ஒன்றாயும் இருக்கிறார்கள். (திரித்துவம் - Trinity) யோ.21:5; 12:36; லூக் 16:8 போன்ற வசனங்களை பார்க்கும் பொழுது, இயேசு, அப்பா ஸ்தானத்திலும் இருக்கிறார் என்று அறியலாம். ஆக பிதாவைப் போல இவரும் அப்பா தன்மை உள்ளவர் என்றும் எடுத்துக் கொள்ளலாம். தவறில்லை. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இயேசுவாய் வந்தவர் பிதா அல்ல என்றும் "நித்திய பிதா" என்பதற்கு "முடிவுற்ற காலங்களின், யுகங்களின் தந்தை, கர்த்தர்" எனப்பொருள் என்றும் உணர்கிறோம். ஆமென்.

❖ ❖ ❖

## தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்தால்தான் பாவ மன்னிப்பா?

பாவ மன்னிப்பு பெற்று நீதிமானாக்கப்படாமல், பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி ஒருவனும் பரலோகம் போக முடியாது. பரலோகம் போக இதுதான் வழி. பாவ மன்னிப்பு பெற்று விட்டால் அவன் புது சிருஷ்டியாகிறான்; பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின (2 கொரி. 5:17); மறுப்பிறப்படைகிறான் (யோ.3:3,5) ஆமென். இன்றைக்கு கிறிஸ்தவ வட்டாரத்தில், தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றால் தான் பாவமன்னிப்பு கிடைக்கிறது அல்லது உறுதியாகிறது என்று பெரும்பாலான கூட்டத்தாரும், அந்த தண்ணீர் ஞானஸ்நானமும் இயேசுவின் நாமத்தினால் கொடுத்தால் தான் பாவமன்னிப்பும் பரலோகமும்

கிடைக்குமென்று ஒரு கூட்டத்தாரும், தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்காமலே கள்ளனைப் போல பரலோகம் போக முடியுமென்று ஒரு கூட்டத்தாரும் போதித்து நடக்கின்றனர். இது குறித்து வேத வெளிச்சம் ஆவியானவரால் நமக்கு வெளிப்பட்டு கருகலான சத்தியம் மலருவதாக!

பாவங்களறக் கழுவப்பட்டு, பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று விட்டேன் என்ற உணர்வு வரும் போது தான் மனுஷன் பரலோகத்திற்கு சொந்தக்காரனாகிறான். பாவங்களற கழுவப்படுவது எப்படி? தண்ணீர் முழுக்கினாலா? தண்ணீரினால் நமது சரீர அழுக்கையே முழுமையாய் கழுவப்பட முடியவில்லையே! இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தமே நம்மை பாவங்களற கழுவி சுத்தரிக்கும் (1 யோ.1:6); இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோ.1:7); இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை (எபி.9:22); லேவி 4:20;17:11; மத்.26-28; ரோ.3:23-26. இந்த வசனங்களை எல்லாம் பார்க்கும் போது, நாமெல்லாரும் பாவமன்னிப்புப் பெற இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்படுவது எப்படி என்ற ஒரு கேள்வி எழுகிறது அல்லவா! பழைய ஏற்பாட்டு மக்கள் வரப்போகிற மேசியாவின் இரத்தத்திற்கு அடையாளமான ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் பாவ மன்னிப்பு பெற்றார்கள். நாமோ சிலுவையில் சிந்திய மேசியாவின் இரத்தத்தால் பாவ மன்னிப்பு பெறுகிறோம். எப்படி? இயேசுவின் இரத்தத்தால் கழுவி அல்ல; இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவும் என்றுரைக்கும் வேத வசனங்களை விசுவாசிப்பதாலே நடப்பதாகும். 1 பேது.1:18, 19ல் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்பட்டோம்; மறுபடியும் பிறந்திருக்கிறோம் என்பதற்கு விளக்கமாய், ஜீவனுள்ள தேவ வசனத்தாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருக்கிறோம் என்று பேதுரு எழுதுகிறார் (1 பேது. 1:23) இதைத்தான் பவுல், ரோ.10:9-10ல், பாவங்களறக் கழுவப்பட்டு தேவ நீதி நம் இருதயமாகிய ஆவியில் (1 பேதுரு.3:4) உருவாக, ஆவியாகிய இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும் என்றும், நீதி வந்த பின் விடுதலையாக, மீட்கப்பட, பாதுகாக்கப்பட, இரட்சிக்கப்பட, பெற்ற நீதியை - இரத்தத்தால் கழுவப்பட்டு நீதிமானாக்கப் பட்டதை - வாயினால் அறிக்கையிட வேண்டும் என்றும் கூறுகிறான். இயேசுவை - இயேசுவாகிய வார்த்தையை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் இரட்சிக்கப்பட கொடுக்கப்பட்டிருக்கும் இயேசுவின் நாமத்தினாலே (அப்.4:12; மத்.1;21) பாவ மன்னிப்பை பெறுவானென்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் சொல்லியிருக்கிறார்கள் (அப.10:43). பவுல் பாவங்களறக் கழுவப்பட்டதும் இப்படித்தானே! (அப்.22:16).

இதனால் தானே பவுல் "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது அல்ல" (எபே.28:9) என்று எழுதுகிறான். விசுவாசத்தினாலே திமிர் வாதக்காரனின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதை நாமறிவோமே! (லூக்.5:20). சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்போது இரட்சிக்கப்படுவீர்கள் என்று பவுல் கூறியது, இரட்சிப்பு - பாவமன்னிப்பு விசுவாசத்தினால் தான் வரும் என்பதால் அல்லவோ! (அப்.16:30-31) தாவீது பத்சபாளுடன் செய்த பாவமும், அவன் புருஷனைக் கொன்ற பாவமும் மன்னிக்கப்பட்டது எப்படி? சங்.51ன் விசுவாச அறிக்கையினாலல்லவோ! (see 1 யோ.1:8) தேவ கிருபை இருந்ததினால் தானே ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பாவ மன்னிப்பு அருள தேவன் அவர்களின் விசுவாச அறிக்கையைத் தேடி வந்தும் அவர்களின் விசுவாசமின்மையால் தண்டனை பெற்றார்கள் அல்லவா! 1 கொரி.6:8-11ஐ வாசியுங்கள். கொரிந்தியரின் பாவங்கள் கழுவப்பட்டது. மன்னிக்கப்பட்டது - எப்போது தெரியுமா? கர்த்தராகிய இயேசுவின், பாவங்களை நீக்கி இரட்சிப்பருளும் நாமத்தால், பரிசுத்த ஆவியைக் கொண்டு கழுவப்பட்டபோது தான். (1 கொரி. 12:13). இது தண்ணீரினால் அல்ல; விசுவாசத்தைக் கொண்ட நம் ஆவியிலே நடப்பதாகும். It is spiritual washing. இது ஆவிக்குரிய காரியம், இயேசுவோடு சிலுவையிலே தொங்கிய வலது புறக்கள்ளனின் பாவம் மன்னிக்கபட்டு, பரதீசில் இடம் பெற்றது எப்படி? அவனது விசுவாசத்தால் - விசுவாசத்தால் பிறந்த அறிக்கையால் அல்லவோ!

ஒரு காரியத்தை உங்களுக்குச் சொல்ல வாஞ்சிக்கிறேன். இயேசு வாழ்ந்த காலம் பழைய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நிக்கோதேமு என்ற வேதப் பண்டிதன்இராத்திரியில் இயேசுவிடம் வந்து பரலோகம் போக வழி கேட்கிறான். ஜலத்தினாலும் ஆவியானலும் மறுபடியும் பிறவா விட்டால் போக முடியாது என்று இயேசு சொன்னதை (யோ.3:5) அப்படியே விசுவாசித்து அவன் போனான்; கடைசி வரை அவருக்கு அந்தரங்க சீஷனாயிருந்து சிலுவையிலே அவர் மரிக்கும் போது வெளிப்பட்டான் (யோ.19:29). ஜலத்தினால் பிறப்பது என்றால் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானமென்றும், ஆவியினால் பிறப்பது பரிசுத்த ஆவியைப் பெறுவது என்றும் பெந்தகோஸ்தே சபையார் கூட பலர் போதிக்கின்றனர். இது உண்மையானால், பழைய ஏற்பாடு நிக்கோதேமு "எங்கள் பிதாவாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தாவீது போன்றோர் தண்ணீர் ஞானஸ்நானம் எடுக்கவில்லையே! அவர்கள் பரலோகம் வரமாட்டார்களா? என்று கேட்டிருப்பான். ஏன் கேட்கவில்லை? அவனுக்கு ஜலம் என்றால் ஜீவத்

தண்ணீராகிய வசனம் என்று தெரியும். ஜலமாகிய வசனத்தினால், பரிசுத்த ஆவியைக் கொண்டு, நம்முடைய ஆவியிலே மறுபடியும் பிறப்பது தான் இரட்சிப்பு - புது சிருஷ்டி - தேவ நீதி உண்டாகுதல் - நீதிமானாக்கப்படுதல் - பரிசுத்தவானாக்கப்படுதல் (see தீத்.3:5; 2 கொரி.5:17) என்று அவன் அறிந்திருந்தான். இந்த அறிவு பல கிறிஸ்தவர்களுக்கு இருக்காதபடி பிசாசானவன் அவர்களுடைய மனக் கண்களை குருடாக்கினான். (2 கொரி.4:4); இப்படிப்பட்டவர்களின் மனக்கண்கள் திறந்து பிரகாசமாக ஜெபிப்போம். (எபேசி.1:19). இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தண்ணீர் ஞானஸ்நானம் என்ற கிரியையினால் யாரும் நீதிமானாகிறதில்லை; பாவ மன்னிப்பைப் பெறுவதில்லை என்றும், இயேசுவின் இரத்தம் என் பாவங்களுக்காய் சிந்தப்பட்டது என்ற வசன விசுவாசத்தாலே, தேவ கிருபையினால் மன்னிக்கப்பட்டு, நீதிமானாக்கப்படுகிறோம் என்றும் அறிகிறோம். இந்த விதி எல்லா ஏற்பாட்டு மக்களுக்கும் உரியது. இந்த விதிப்படியே ஆபிரகாமும், தாவீதும், தானியேலும் பரலோகம் வருவார்கள். தண்ணீர் ஞானஸ்நானத்தால் அல்ல. இதுதான் கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள்ளான ஞானஸ்நானம் (கலா. 3:27).

அப்படியானால் தண்ணீர் ஞானஸ்நானம் தேவையில்லையா என்று நீங்கள் நினைக்கலாம். வசன விசுவாசத்தால் பாவ மன்னிப்பைப் பெற்று, பரலோகம் போகும் நிலையை விட, ஒரு படி அதிகமாக, புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு தேவன் தந்திருக்கிறார். அது தான் தண்ணீர் ஞானஸ்நானம். இது பழைய ஏற்பாட்டு மக்களுக்கு இல்லை. யோவான் ஸ்நானகன் கூட இஸ்ரேலர்கள் அவனிடம் ஞானஸ்நானம் பெற்று, அதன் பின் இயேசுவுக்கு நேராய் மனந் திரும்ப வேண்டும் என ஞானஸ்நானம் கொடுத்தான். நாமோ, மனந்திரும்பினவர்களுக்கே ஞானஸ்நானம் கொடுக்கிறோம். மத்.28;18-20ன் படி சீஷராக்கிய பின், இரட்சிப்புக்குள் வந்த பின் - பாவமன்னிப்பு பெற்ற பின் - ஞானஸ்நானம், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே கொடுத்தாக வேண்டும். இது கிறிஸ்துவின் கட்டளை; அப்.2:38ல் பேதுருவின் வார்த்தை, பாவ மன்னிப்புக்கு என்று ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதாகும். **தண்ணீர் ஞானஸ்நானம் பெற பல காரணங்கள் உண்டு. அவைகளில் சில :-** (1) இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் தெரியுமா? யோ:1:31ஐ வாசியுங்கள். இவர் யாரென்று இஸ்ரேல் மக்கள் அறியும்படி எடுத்தார். அப்போது தான் இவர் என்னுடைய நேசகுமாரன் என்று வானத்திலிருந்து பிதா சாட்சி கொடுத்தார். அப்படியே, அதுவரைக்கும் பாவியாயிருந்தவன். வசனத்தினாலே ஆவியானவரால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு நீதிமானாய் புது சிருஷ்டியாய்,

இயேசுவின் நாமம் தரித்திருக்கிறான் (ரோ.13:14; 12:13; கலா.3:27); இனி பாவியல்ல - என்று உலகத்தாருக்கு சபையாருக்கு, வீட்டாருக்கு தெரியும் படியாய், ஜீவிக்கிற தேவன் மாற்றி விட்டார் என்ற சாட்சிக்காய், இயேசுவின் நாமம் தரித்து - இயேசுவின் நாமத்தினாலேயே - கிறிஸ்து அவன், அவனே கிறிஸ்து என்ற நிலையில், பகிரங்கமாய் ஞானஸ்நானம் பெற வேண்டும். கொடுப்பவர், பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே கொடுப்பார். எடுப்பவர் இயேசுவின் நாமம் தரித்து எடுக்க வேண்டும் (see 1 கொரி. 6:11). (2) மாற்.16:16ன் படி விசுவாசமுள்ளவனாகி புது சிருஷ்டியானவன் - பாவமன்னிப்பு பெற்றவன் - ஞானஸ்நானம் பெறாமலிருந்தால் இறுதி இரட்சிப்பாகிய (see. மத். 24:13) சொர்க்க லோகம் கிடைக்காமல், நரகம் போய் விடுவான். எனவே ஞானஸ்நானம் பெற வேண்டும். (3) மத்.28:18-20ன் படி ஞானஸ்நானம் பெற்றால்தான், ஒரே தேவன், பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்ற 3 ஆள்தத்துவத்தில், ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் செயல்படுகிறார்கள என்று உணர முடியும். (see.1யோ.5:7) இல்லையேல், அப்.19ல் எபேசியர் சொன்னபடி, பரிசுத்த ஆவியை அறியாமல் இருக்க வேண்டிய நிலை வரும் (4) 1 பேதுரு 3:21 ன்படி ஞானஸ்நானமானது தேவனோடு செய்கின்ற ஒப்பந்தம். திருமணத்தற்கான நிச்சயதார்த்தம். நிச்சயதார்த்தம் பண்ணாத எந்த பெண்ணுக்காகவும் மணவாளன் வர மாட்டான். எனவே, மணவாட்டியாய் போவதற்கு ஞானஸ்நானம் அவசியம். பழைய ஏற்பாட்டில் தாசனாய் (Servant), நண்பனாய் அழைக்கப்பட்ட பரிசுத்தவான்கள்; சீயோன் குமாரத்தி என்று அழைக்கும் தகுதியிழந்த இஸ்ரேலர்கள், யோ.1:12ன் படி பிள்ளைகளாய், வெளி 20:21ன் படியான மணவாட்டியாய் இருக்கும் நம்மையல்லாமல் பூரணாக்கப்படுவதில்லை. (எபி.11:39, 40). எனவே தான் விசேஷமான நமக்கு ஞானஸ்நானம் என்ற ஒன்றை கூடுதலாய் தேவன் வைத்திருக்கிறார். விசுவாசத்தால் பாவ மன்னிப்பை பெற்று இரட்சிக்கப்பட்ட ஒருவன், ஞானஸ்நானம் எடுக்க இயலாமல் போனாலும், பரலோகம் நிச்சயம் அவனுக்கு உண்டு. ஆனால், ஞானஸ்நானம் எடுப்பதை தட்டிக் கழித்துக் கொண்டு போனால், அவன் வசனத்தால் (ஜலத்தால்) பிறந்தான் - இரட்சிக்கப்பட்டான் என்று சொன்னாலும் அவனுக்கு பரலோகம் இல்லை. ஏனெனில் வசனத்தினால் பிறந்தவன் வசனப்படி நடப்பான் அல்லவா! (5) இயேசு பாவமாக்கப்பட்டு (2 கொரி.5:21) நமக்காய் பாவியாய் மரித்து நீதியாய் எழுந்ததற்கு அடையாளமாய் நாமும் தண்ணீருக்குள் முழ்கி, பிறகு எழுந்திருக்கிற ஞானஸ்நான சடங்கை செய்து அவரின் மரணத்தையும் உயிர்தெழுதலையும் விசுவாசித்து வெளிப்படுத்துகிறோம். இது கிறிஸ்துவுக்குள்ளாகும் ஞானஸ்நானமாகிய, ஜலமாகிய வசனத்தால்

மறுபடியும் பிறந்தோர் செய்ய வேண்டிய ஒன்றாகும் (ரோமர் 6; கொலோ. 2:11,12) (வார்த்தையாகிய கிறிஸ்துவுக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று இயேசுவின் நாமம் தரிக்கப்பட்டோர் (யோ.3:3,5 ரோ.10:9,10; 1 பேதுரு 1:23; 1 கொரி. 6:11) தாம் தரித்த இயேசுவின் நாமத்தினாலேயே தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற வேண்டும் (மத்.28:10-20); அதன்பின் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற வேண்டும் - அப்.1:4)

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உனக்கு கிடைத்த இரட்சிப்பு எந்த கிரியைகளினாலுமல்ல; விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருப்பீர்கள். அல்லேலூயா! யாராவது வந்து ஞானஸ்நானம் எடுத்தால்தான் இரட்சிப்பு - பாவமன்னிப்பு என்றாலோ, அதுவும் இயேசுவின் நாமத்தினாலோ, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலோ ஞானஸ்நானம் கொடுத்தால்தான் இரட்சிப்பு என்றாலோ அதை நம்பாதிருங்கள். வேதமே வெளிச்சம்; வசனமே உங்களுக்கு வழிகாட்டி! பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று - இனி நான் பாவியல்ல; என் பாவம் கழுவப்பட்டாயிற்று நான் நீதிமானாக்கப்பட்டேன் என்ற விசுவாசம் இருந்தால் போதும், நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என்று பொருள். நீ இரட்சிக்கப்பட்டதை உலகிற்கு காட்ட கண்டிப்பாய் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் உனக்கு தேவை. ஜலமாகிய வசனத்தால் பெற்ற இரட்சிப்பு மற்றும் ஞானஸ்நானத்தில் பெற்ற உறுதிப்பாடு போன்றவற்றில் நிலைத்திரு; இறுதி இரட்சிப்பு உனக்குண்டு.

❖ ❖ ❖

## பரிசுத்த ஆவியானவர் தரும் ஞானஸ்நானம் எது?

மனந்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்று, புது சிருஷ்டியாய் மறுபடியும் ஆவியிலே வார்த்தையைக் கொண்டு பிறந்த, இரட்சிப்பின் அனுபவமுள்ள விசுவாசி, ஜலத்தினால் ஞானஸ்நானம் பெறுகிறான் (ரோ.10:9; யோ.3:3,5; மாற். 16:16; 2 கொரி 5:17; 1 பேது.1:23; அப். 2:38). இப்படியாய் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுப்பவர், நமது சபையில் உள்ள ஊழியர். இந்த முழுக்கு ஞானஸ்நானம் பெற்ற ஒரு விசுவாசி, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப்.1:4) இப்படியாய் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (மத்.3:11). இதைத்தான் "அபிஷேகம்" என்று பெந்தகொஸ்தே வட்டாரங்கள் சொல்லிக் கொள்கின்றன. இது தான் முதுன்முதலாய் பெந்தகொஸ்தே நாளில் 120 பேருக்குள் நிகழ்ந்தேறியது (அப்.2) அன்றைக்கு வானிலிருந்து பூமிக்கு வந்து அந்நிய

பாஷை அடையாளத்தோடு விசுவாசிகளுக்குள் இருக்கிற ஆவியானவரைக் கொண்டு, இன்றும், இயேசு கிறிஸ்து புதிய புதிய விசுவாசிகளுக்கு ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறார். இது நாமறிந்த ஒன்று. ஆனால் 1 கொரி.12:13 "நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே (By Holy Spirit ) ஒரே சரீரத்திற்குள்ளாக" ஞானஸ்நானம் கொடுப்பதைச் சொல்லாமல், ஆவியானவரே ஞானஸ்நானம் பண்ணுவிப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால், பரிசுத்த ஆவியானவர் தரும் இந்த ஞானஸ் நானம் எது? ஆவியானவர் விளக்குவாராக?

1 கொரி.12:13ஐ மறுபடியும் வாசியுங்கள். ஆவியானவர் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணுகிறார். இந்த ஒரே சரீரம் என்பது எது? 1 கொரி 10:17; 12:12, 27; ரோ.12:4-5; எபே.4:4-6 போன்ற வசனங்களின்படி இந்த ஒரே சரீரம் என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை என்று அறிகிறோம். இந்த கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் யூதனென்றும், கிரேக்கனென்றும் அடிமை என்றும், சுயாதீனனென்றும் ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; எல்லோரும் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஒன்றாயிருக்கிறோம் (கலா.3:28) யோ.15:1-12 ஐ ஆவிக்குரிய ரீதியில் எடுத்துக் கொண்டால் கிறிஸ்துவின் சரீரத்தைப் பற்றியே சொல்லியிருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாம். பழைய ஏற்பாட்டு இஸ்ரேலர் சபையானாலும், புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ சபையானாலும் இரண்டும் தேவனுடைய பார்வையில் கிறிஸ்துவின் சரீரமாகவே இருக்கிறது. இரண்டுமே ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்துக்குள்தான். ஆமென். ஒரே கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளே ஒருவன் வருவது எப்போது? இரட்சிக்கப்படும் போதுதான் (அப்.2:47). இந்த இரட்சிப்பு, விடுதலை-பாதுகாப்பு, ஆட்கொள்ளுதல் எப்படி வருகிறது? பரிசுத்த ஆவியினால், ஜலமாகிய வசனத்தைக் கொண்டு, நம் ஆவியிலே ஏற்படுகிற மறுபிறப்பின் போது வருகிறது (யோ.3:3,5). இதைச் செய்கிறவர் ஆவியனாவரே! ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கிற்கு பெண் கொள்ள எலியேசரை அனுப்ப, அந்த எலிசேயர் மணவாட்டியை தெரிந்தெடுத்தது போல, கிறிஸ்துவுக்கென்று ஆவியனாவர் நம்மை தெரிந்தெடுக்கும் காரியம் தான் இந்த மறுபிறப்பு - இரட்சிப்பு என்பதெல்லாம். இது, ஆவியானவர் உலக மனிதனை கிறிஸ்துவுக்குள் உள்ளாக்கும் அனுபவம்; கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளாக்கும் அனுபவம்.

கிறிஸ்தவ சபைக்கு, மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல்,

மரித்தோரின் உயிர்த்தெழுதல் நித்திய நியாயத்தீர்ப்பு என்று ஆறு மூல அஸ்திபார உபதேசங்கள் உள்ளன (எபி.6:1,2). இந்த அஸ்திபாரத்தில் ஒன்று இல்லாவிட்டாலும் அது கிறிஸ்துவ சபையல்ல. **உலகிலுள்ள அநேக சபைகளை கண்டு கொள்ள இதுவே அளவுகோல். அல்லேலூயா!** இந்த அஸ்திபாரத்தில் ஸ்நானமும் ஒன்று. வேதம் சொல்லுகிறபடி ஒரே ஞானஸ்நானம் தான் உண்டு. ஆனால் இந்த வசனத்திலோ, "ஸ்நானங்களுக்கு அடுத்த உபதேசம்" என்று பன்மையில் போடப் பட்டுள்ளது. அப்படியானால் ஒரே ஞானஸ்நானம் என்று எழுதப்பட்டது தவறா? இதுவும் கேள்வியே; ஒரே தேவன் மூன்று ஆள் தத்துவமாய் செயல்படுவது போல, ஒரே ஞானஸ்நானம் மூன்று பிரிவுகளாய் கடைப் பிடிக்கப்படுகின்றது. நாமறிந்தபடி சபை ஊழியர் தரும் தண்ணீரினால் ஞானஸ்நானம் என்பது ஒன்று; பரிசுத்த ஆவியினால் அந்நிய பாஷை அடையாளத்தோடு இயேசுகிறிஸ்து தரும் ஞானஸ்நானம் என்பது இன்னொன்று; இஃதல்லாமல் கலா.3:27-ல் சொல்லப்பட்ட கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம். இது தான் ஆரம்ப ஞானஸ்நானம் - இரட்சிப்பு. இதிலே தான் உலகத்தானுக்கு கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தை செய்பவர் ஆவியானவர். இப்படியாய் பரிசுத்த ஆவியானவர் தரும் ஞானஸ்நானத்தைப் பெற்ற பின்தான் இதற்கு அடையாளமாயும், தேவனோடு செய்யும் உடன்படிக்கை யுமாயிருக்கிற முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படும்; அதன்பின் தான், பரிசுத்த ஆவியனாவரைக் கொண்டு இயேசு கிறிஸ்து தரும் ஆவியின் ஞானஸ்நானம். இம் மூன்றும் ஒரே ஞானஸ்நானமாகும்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெறாமல் (ரோ.6:3-11; கொலோ. 2:11, 12) தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் மட்டும் பெற்றிருக்கிறாயா? அதனால் தான் ஒரே சரீரமாகிய கிறிஸ்துவின் சபை என்கிற எண்ணம், உனக்கு வரவில்லையா? உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற சாதி உணர்வும், பொருளாதார கொள்கையும் சபையிலே பெருகி வருகிறதா? மறப்போம்; மன்னிப்போம் என்ற நிலை இல்லாதிருக்கிறதா? ஆவியானவரால் தாகம் தீர்க்கப்படாமலே அன்பேதுமின்றி அலைகிறதா? ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் நல்ல சமாரியன் இல்லாமல் போகிறதா? அப்படியானால் இன்றே ஒப்புரவாகு; அதே ஆவியானவரால் கிறிஸ்துவுக்குள்ளாய். ஞானஸ்நானம் பெற ஒப்புக்கொடு! உன் பாவங்களை எல்லாம் மன்னிக்கப்பட்ட உணர்வு வரும்; புதுசிருஷ்டியாகிவிட்டேன் என்ற நிலை வரும்! அப்போதுதான் ஒரே சரீரமாகிய கிறிஸ்துவின் சபை உருவாகும்; எழும்பிப் பிரகாசிக்கும்; உலகத்தைக் கலக்கும். இயேசுவிற்கு இரகசிய வருகையிலே ஒரு மாபெரும் கூட்டம்

இணையும்! ஆமென்! நீ மட்டுமல்ல உன்னைச் சார்ந்த எல்லாருக்கும் இந்த நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ள பிரயாசப்படு! அசதியாயிராதே! ஆண்டவர் வருகை சமீபம்!

❖ ❖ ❖

## ஆராதனைக்கு இசை தேவையா?

இசைக்கு மயங்காதது ஒன்றுமில்லை. இசையோடு பாடல் சேர்ந்து விட்டால் அது இன்னும் மகிமைப்படுகிறது. பாடலிலுள்ள கருத்துக்களை, ஈர்க்கும் படியாய் வெளிக்காட்ட இசை பயன்படுகின்றது. பாடல் என்றாலே இசையோட இணைந்ததுதான். இரண்டையும் பிரித்தால் சுவையில்லை. தமிழில் கூட இயல், இசை, நாடகம் என்று மூன்றாய் பிரிக்கப்பட்டு, இசையை மையத்தில் வைக்கப்பட்டு, அந்த இசை, இயற்றமிழ், மூலமும் வெளிப்படுகின்றது. இது தான் இசையைப் பற்றிய தற்கால உலக நிலவரம். ஆனால் ஆவிக்குரிய ரீதியில் பார்த்தால், பெரும்பாலான சபைகளில் ஆராதனை, இசையோடு (Music) இணைந்தே உள்ளது. “கிறிஸ்துவின் சபை” போன்ற ஒரு சில சபைகள் ஆராதனைக்கு கிறிஸ்தவ சபையில் இசை தேவையில்லை; கூடாது என்று வாதிடுகின்றனர். இது குறித்து ஆவியானவர் சொல்வதைக் கேட்போம்.

தேவ ஆராதனைக்கு தேவனின் விருப்பப்படி லூசிபரால் பரலோகிலே உபயோகப்படுத்தப்பட்டது இசையாகும் (எசே.28:14). துதி, தோத்திரங்கள் மத்தியில் இசை பெரும் பங்கு வகித்தது. இப்படிப்பட்ட துதிகளின் மத்தியில் நம்தேவன் வாசம் பண்ணுகிறார். ஆமென். அவன் வீழ்ந்து போனபின்னே, அவனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட இசைத்தாலந்தையும் பூமிக்கு கொண்டு வந்தான். யாருக்கும் கொடுத்ததை திருப்பி எடுக்கிற தேவன் நம் தேவன் அல்லவே! கொடுப்பதில் தான் நம் தேவன் வள்ளல். அல்லேலூயா! 1 யோ.3:12ன் படி பிசாசின் மகனான காயினின் பரம்பரையில் வந்த யூபல் மூலம் பூமியிலே அந்த இசையை உட்புகுத்தினான் பிசாசு (ஆதி.4:21) தேவனை ஆராதிக்கப் பயன்படுத்திய இசையை, பிசாசானவன், ராக், பாப் என்ற பல இசைகளாகவும், காபரே டான்ஸ் போன்ற களியாட்டங்களுக்கு ஏற்றபடியாகவும் ஆக்கி, இசைக்கு மயங்கும் மனிதர்களை சினிமா போன்ற இசைகளில் மயக்க வைத்து, மது, மாது, கொலை, கொள்ளை, விக்ரக ஆராதனை, களியாட்டம் போன்ற பாவங்களில் உலகத்தை மாற்றிவிட்டான். இப்படிப்பட்ட மோசமான இசையால், இசைப் பாடல்களால் கெட்டுப் போனவர்கள் ஏராளம். கிறிஸ்துவ சபைப் பாடல்கள் மூலமாகவும் தெரிந்து

கொள்ளப்பட்டவர்களும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏசா.5:11-13; ஆமோஸ்.6:3-6; தானி. 3:5 போன்ற வசனங்களை வாசித்தால், சாத்தான் எப்படியெல்லாம் தேவனுக்கு விரோதமாய், பாவத்துக்கு நேராய் இசை மூலம் நடத்துகிறான் என்று அறியலாம். நாமும் சபைகளில் இசையோடு கூட நடனமாடி துதிக்கிறோம். தாவீது அப்படித்தானே! (2 சாமு.6:20-23). இந்த ஆராதனையை கிண்டல் செய்த மீகாளுக்கு மகிமையாயிராமல், தாவீது அவளோடு சேராததால் வாழ்நாள் முழுவதும் அவள் பிள்ளை இல்லாதிருந்தாள் என்பதை வாசித்து விட்டு, தாவீதுக்கு மேலே அலங்கோலமாய் ஆடுவது, பாடுவது, இசைப்பது, சிரிப்பது, அழுவது, விசிலடிப்பது போன்றவை எல்லாம் சபைகளிலே நடக்கின்றன. இதுவும் பிசாசின் வேலையே! இதனால் தான் ஆராதனைக்கு இசை வேண்டாம் என்று சொல்கின்றார்களோ என நினைக்கிறேன்.

இசையை பரலோகில் உற்பவித்த தேவன் பூமியில் அதை நன்மைக்காகவே நடப்பிக்க சித்தம் கொண்டார். அதனால் தான் தாவீது இசைத்தான்; அசுத்த ஆவி ஓடிற்று. (1 சாமு.16:23). ஏழு நாளும் இசைத்து, ஏழாம் நாள் எரிகோ கோட்டை விழுந்தது (யோசு.6:12, 13, 20). இசையினாலேயே யோசபாத் ராஜாவின் காலத்தில் மோவாபியர், அம்மோனியர் போன்ற எதிரிகள் வீழ்த்தப்பட்டனர் (2 நாளா 20:21, 22). ஆக, பிசாசின் கிரியைகளை ஒழிக்க தேவன் இசையை பயன்படுத்தியிருக்கிறார்; இந்த இசை தேவன் தரும், தேவன் விரும்பும், தேவனுக்கு மகிமையான, வசனத்தோடு கூடிய பாடல்கள் நிறைந்தாக (Spiritual songs) இருந்திருக்கிறது. ஆமென். மட்டுமல்ல. இசையானது தேவனைத் துதிக்க வேதத்தில் பயன்படுத்தப்பட்டது (2 சாமு 6:5; 1 நாளா 16:41, 42; 2 நாளா 7:6; 29: 25, 26) கண்டிப்பாய் இசைத்து ஆராதிக்க வேண்டுமென்று தேவன், சங்.98:5; 33:2,3; 92:2,3; 108:1-2; 150:3-5 போன்ற பல வசனங்களில் கற்பனையாய்க் கொடுத்திருக்கிறார். இந்தக் கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பாவி என்பது உண்மை தானே!

இப்படிச் சொன்னாலும் பழைய ஏற்பாட்டு முறைமைகளும், சட்டங்களும் நமக்குத் தேவையில்லை; புதிய ஏற்பாட்டில் இசையை ஆராதனைக்கு உபயோகிக்கலாம் என்ற கற்பனை உண்டா? என Church of Christ போன்ற சபையார் கேட்கின்றனர். பரலோகிலேயே துதிக்க இசையைத் தேவன் புகுத்தியிருக்க, அதற்கு விரோதமாய் பேசுவது பிசாசின் ஆவிதானே! சரி. அவர்கள் கேள்விப் படியே புதிய ஏற்பாட்டு 27 புத்தகங்களையும் பார்ப்போம். வெளி.5:8ல் 24 மூப்பர்கள் பரலோகிலேயே இசைக் கருவி வாசிக்கிறார்கள்; 1,44,000 பேர் வாசிக்கிறார்கள் (வெளி

14:1-5); மகா உபவத்திரவ பரிசுத்தவான்கள் வாசிக்கிறார்கள். (வெளி.14:1-5); மட்டுமல்ல.... மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடு என்று யாக். 5:12 சொல்கின்றது. சங்கீதம் என்றாலே "பாடலுடன் கூடிய இசை" என்று பொருள். இதை சங்கீத வித்வான்களிடம் கேட்டாலே சொல்வார்கள். ஆங்கிலத்தில் சங்கீதம் என்பதை Psalm என்று போடப்பட்டுள்ளது. எபிரேய மூலபாஷையில் மிஸ்ஜ்மோர் (Mizmour) என்று உள்ளது. இதன் பொருள, "Instrumental Music," A poem set to notes - Psalm என்று உள்ளது. ஆக, சங்கீதம் என்பது இசையோடு கூடிய பாடல் என அறிகிறோம். எபே.5:19; கொலோ. 3:16 போன்ற வசனங்களை வாசித்தால், புத்தி சொல்ல, போதிக்க வேண்டும் என்று அறிகிறோம். கவலை வரும் போது, விடுதலைக்கு, சமாதானத்திற்கு, மகிழ்ச்சிக்கு, இசையை உபயோகிக்கலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தெய்வீக இசையை, தேவ வசனம் நிறைந்த பாடல்களோடு இணைந்து வாசியுங்கள்; கேளுங்கள், நமக்கும் இளைப்பாறுதலுண்டு; மற்றவர்களையும் ஆத்ம ஆதாயம் செய்யலாம்; தேவனையும் மகிமைப்படுத்தலாம். ஆராதனையில் இசை தேவை என்ற விருப்பம், புதுசிருஷ்டியாய் (2 கொரி.5:17) மாறியிருக்கிற, மறுபடியும் வசனத்தினால் பரிசுத்த ஆவியைக் கொண்டு பிறந்த (யோ.3:3,5) ஆவியிலே, பரிசுத்த ஆவியைக் கொண்டு உருவாகட்டும்! அதற்காய் ஒப்புக்கொடுத்து செயல்படு! மற்றப்படி உன் அறிவாகிய ஆத்மா, மனம், உள்ளம், சிந்தனை இவைகளிலிருந்து உருவாகவே கூடாது; இது பிசாசால் தவறாய் வழி நடத்த ஏதுவாகும். 1 கொரி. 6:12ன் படி எதற்கும் அடிமையாகாதே! (Even to Music)

❖ ❖ ❖

## தேவன் தீமையை அனுமதிக்கிறாரா?

முதலில் தீமை என்றால் என்ன என்று புரிய வேண்டும். பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவகுமாரன் வெளிப்பட்டார் என்பதால் (1 யோ.3:8). பிசாசின் கிரியைகள் எல்லாமே தீமையானவை என்று புரிகிறதல்லவா! அப்படியானால் தேவனின் கிரியைகள் எல்லாம் நன்மை யானவைகள் தானே! (எபே.2:10, யாக்.1:17). நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்த (அப்.10:38) மனுஷகுமாரன் இயேசு இன்னும் ஜீவிக்கிறாரே! அப்படியிருக்க தேவன் தனக்கு விரோதமான தீமையை எப்படி தம்முடைய பிள்ளைகளுக்கு அனுமதிப் பார்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக (யோ.16:13)!

ஒரு காலத்தில், தேவன் தீமையை - பொல்லாதவைகளை கொடுக்கிறார் என்று அறியாமையினாலே (ஓசி. 4:6) சொல்லிக் கொண்டிருந்த சபைகள், தேவனல்ல; பிசாசு தான் தீமையைத் தருகிறான் என்று சொல்லுகின்ற அளவிற்கு ஆவியானவர் நடத்தியிருக்கிறார். இதே கிறிஸ்துவ சபைகளில் பல, "தேவன் தீமையை அனுமதிக்கிறார்" என்று சொல்கின்றன. இதுவும் அறியாமையே! இதனால் ஊழியர்கள் மட்டுமல்ல; விசுவாசிகளும் நன்மையைப் பெற முடியாமல், பிசாசின் ஆளுகைக்குள் தங்களை அறியாமலே போக வழி பிறக்கிறது. இதனால் பிசாசுக்கு கொண்டாட்டம்; நம்மவர்களுக்கோ திண்டாட்டம். வியாதி, வறுமை, தோல்வி, மரணபயம், அகாலமரணம், சமாதானமின்மை, அவிசுவாசம் போன்ற எல்லா பிசாசின் கிரியைகளையும் இயேசு சிலுவையில் ஒழித்தார். சிலுவையில் ஒழித்த அவரே அதே தீமைகளை தம்முடைய பிள்ளைகளுக்கு வர அனுமதிப்பாரா? அப்படி அனுமதிப்பாரென்றால், அவர் ஒழித்தது வீண். பல சபையார் நினைக்கிறார்கள். "தீமையை அனுமதித்து தேவன் நம்மை சிட்சிக்கிறார்" என்று. நம்மை சிட்சித்து நல்வழிப்படுத்த, தீமையை அனுமதிக்கிறாரென்றால், அந்த தீமையை அவர் சிலுவையில் ஒழித்திருக்க வேண்டாமே! அப்படி அவர் பிசாசின் கிரியைகளை ஒழித்தார் என்று நமக்கு அறிவுறுத்தி விசுவாசத்தை நம்மிடத்தில் துவக்கியிருக்க வேண்டாமே (எபி.12:1)! தேவன் தம்முடைய பிள்ளைகளை வசனத்தால் தான் சிட்சிக்கிறாரே ஒழிய, பிசாசின் தீமையான கிரியைகளை நமக்கு அனுமதித்து அல்ல என்று முந்தி ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனும் உணர வேண்டும் (சங்.50:17). இப்படி வசனத்தால் நமக்கு சிட்சை வராமல், வேறு வழியாய் வந்தால் நாம் புத்திரராயிராமல், வேசிப் பிள்ளைகளாயிருப்போம் (எபி. 12:8).

தேவனின் வார்த்தைப்படி நடந்தால் ஆசீர்வாதம், இல்லையேல் சாபமும் வரும் என்று சொன்ன தேவன், நமக்கு சுயாதீனத்தை கொடுத்து நமக்கு முன்னே ஆசீர்வாதம் - சாபம்; நன்மை - தீமை; ஜீவன் - மரணம் என்று வைத்திருப்பதை அறிய வேண்டாமா? (உபா. 11:26-28; 30:15, 19; உபா.28). தீமைதான் சாபம். தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய்ப் போனால் சாபத்தை நாமே தேடிக் கொள்கிறோம்; இப்படித் தேடிக் கொள்ளப்பட்ட சாபத்திலிருந்தும் விடுதலை தருகிற நம் தேவன் (கலா.3:13) தீமையை நமக்கு அனுமதிப்பது எப்படி? யோ.10:10ன் படி தீமை செய்பவன் பிசாசு; நன்மை செய்பவர் தேவன் என்று அறிவோம். இந்தப் பிசாசு மனிதனுக்கு தீமை செய்ய எப்போது பூமிக்கு வந்தான்? ஏதேனிலேயே நுழைந்து விட்டான். ஏதேனிலே நுழைய விட்டது தேவனா? சிந்தியுங்கள். காயீனுக்குள் கொலை வெறியை உருவாக்கி, ஆபேலைக் கொல்ல தீமையை

அனுமதித்தவர் தேவனா? சிந்தியுங்கள். அப்படியானால் ஆதாம் பாவம் செய்து ஒளிந்து கொண்டிருக்கும் போது அவனைத் தேடி ஏன் வர வேண்டும்? ஆபேல் மரித்த பின் காயீனிடம் தேவன் ஏன் வர வேண்டும்? தன்னுடைய பிள்ளைகள், தங்கள் சுயாதீனத்தினாலே பிசாசின் வழியில் போய் தீமைக்குள் மாட்டிக் கொண்டதிலிருந்து காப்பாற்றவே தேவன் ஓடோடி வந்தார். அன்றும் இன்றும் என்றும் தேவனின் நிலை இதுவே. "அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" (எபி.2:18) என்ற வசனத்தை மறக்கலாமோ! "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" (மத்.6:13) என்பதுதானே இயேசு சொல்லிக் கொடுத்த ஜெபம்! உலகத் தோற்றத்திற்கு முன்பே பிசாசுக்கு சோதிக்கவும், தீமைகளைச் செய்யவும் அனுமதி அளித்தாயிற்று. அதை வைத்து தான் அவன் நம்மைச் சோதிக்க வகை தேடுகிறானே ஒழிய (1 பேது. 5:8), அப்போதைக்கப்போது ஒவ்வொரு முறையும் - ஒவ்வொருவருக்காகவும் அவன் தேவனிடம் போய் அனுமதி கேட்பதுமில்லை; அவரும் ஒவ்வொரு முறையும் அனுமதி கொடுப்பதும் இல்லை. ஆதியிலே பிசாசுக்கு கொடுத்த அனுமதியின் பேரில் தான் அவன் தம்முடைய பிள்ளைகளுக்கு தீமையை கொடுப்பான் என்று அறிந்திருப்பதால்தான். அவனின் சோதனையிலிருந்து விடுதலை பெற நமக்கு உதவி செய்கிறார் (1 கொரி. 10:13; லூக். 22:31, 32; with ஆதி.3:15) அல்லேலூயா!

நிறைய பேர் யோபு சரித்திரத்தை எடுத்துக்கொண்டு, தேவன் நமக்கு தீமையை அனுமதிக்கிறார் என்று வாதிடுகிறார்கள். இது அறியாமை! யோபு 1 மற்றும் 2ம் அதிகாரம் முழுவதும் எங்காவது சாத்தான், யோபுவை சோதிக்க அனுமதி கேட்டானா? இல்லை. எங்காவது தேவன் அனுமதி தந்தாரா? இல்லை. யோபுவை தேவனே சோதிக்க வேண்டும் என்றுதான் சாத்தான் கேட்டான் (யோ.1;11). அவரோ "உலகமும் உலகத்திலுள்ளவை களும் உன் கையில்; யோபுவும் உலகில் இருக்கிறான்; அப்படியிருக்க நான் ஏன் சோதிக்க வேண்டும்? உன் கையிலுள்ள உலகை சோதிக்க - திருட, கொல்ல, அழிக்க - உனக்குத்தான் உலகம் உண்டான போதே அனுமதி உண்டே! என்னை ஏன் கேட்கிறாய்" என்கிறார். அத்தோடு மட்டுமல்ல; யோபுவின் சரீரத்தைத் தொடவும், கொல்லவும் அவனக்கு அதிகாரம் இருப்பதால், யோபு வுக்கு வரப்போகும் தீமையிலிருந்து காக்கவே தேவன், அவன் சரீரம் மேல் கை நீட்டாதே என்று, இரட்சிப்பின் - பாதுகாப்பின் - வார்த்தையைச் சொல்கிறார் (யோ.1:12) யோபுவின் சரீரத்தை தொட்டு வியாதியைத் தர சாத்தானால் முடியாதபடி தேவன் பாதுகாப்பாய் இருந்ததால் அவனக்கு வியாதியை உண்டு

பண்ண சாத்தான் தேவனிடம் சொல்கிறான். "அது உன்னால் முடியுமே! நான் அப்படி செய்கிறவர் என்ற எண்ணத்தை விசுவாசிகள் மத்தியில் உருவாக்க நினைக்கிறாயோ! யோபு உன் கையிலிருக்கிறானே!" என்று தேவன் கூறிவிட்டு, அப்போதும் யோபுவைக் கொல்ல சாத்தானுக்கு அதிகாரம் ஏற்கெனவே இருப்பதால், வரப் போகும் தீமையிலிருந்து காக்கவே தேவன், "அவன் பிராணனை மாத்திரம் தப்ப விடு" என்று இரட்சிப்பின் - பாதுகாப்பின் வார்த்தையைச் சொல்கிறார் (யோபு.2:4-6) என்னே தேவ அன்பு! இப்படிப்பட்ட இரட்சகரை "தீமையை எனக்கு அனுமதிக்கிறார்" என்று சொல்லி அவரின் குணாதிசயங்களை, சித்தத்தை குற்றப்படுத்துதல் பாவமல்லவா! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! ஆசீர்வதிக்கவே பிரியமாயிருக்கிற நம் தேவன் (எண்.24;1); நாம் ஒருவரும் கெட்டுப் போகாதபடிக்காய் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்த அன்பான நம் தேவன் (யோ.3:16) நிச்சயமாய் தீமையை அனுமதிப்பதில்லை; தீமையினின்று பாதுகாக்கவே சித்தமாயிருக்கிறார் என்று அறிக்கையிடுங்கள்! மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். எந்த தீமை- சாபம் - வந்தாலும், தேவன் கொடுப்பதுமில்லை; அனுமதிப்பதுமில்லை என்றும் எல்லாம் பிசாசின் கிரியைகள் என்றும் விசுவாசியுங்கள்! தேவனின் அன்புச் செயலை அறியாமல், அவரை பிசாசுக்கு இணையாக்கி அறிந்தோ அறியாமலோ பேசாதீர்கள் ! பிசாசு செய்வதை எல்லாம் தேவன் செய்கிறார் என்று சொல்லாதீர்கள்! விசுவாசியுங்கள்! வெற்றி பெறுங்கள்! சாட்சியாயிருங்கள்! "சத்துரு சோதித்திட தேவ உத்தரவுடன் வருவான்; ஆனால் இயேசு கைவிடார்; தானாய் வந்து இரட்சிப்பார்" என்ற பாடலை, "உலகத் தோற்றத்திற்கு முன்பே பிசாசு பெற்ற உத்தரவுடன் தான் வருகிறான்" என்று வேண்டுமானால் விசுவாசத்தோடு பாடுங்கள். இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்!

❖ ❖ ❖

## ஆவியினால் ஞானஸ்நானமும் ஆவியினால் நிரப்பப்படுதலும் ஒன்றா?

"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப் பின் வருகிறவரோ - பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத்.3:11) என்று யோவான் ஸ்நானன் பிரசங்கித்தான். இயேசு வரும் முன்னே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவன் (லூக்.1:15); ஆனால் பரிசுத்த

ஆவியினால் ஞானஸ்நானம் பெறவில்லை. ஏனென்றால் இயேசு மகிமைப் படாத வரைக்கும் பரிசுத்த ஆவி அருளப்படாதிருந்தது (யோ.7:38,39). அப்படியென்றால் பரிசுத்த ஆவி அருளப்பட்டு ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதும், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதலும் ஒன்று அல்ல என்று புரிகின்றது அல்லவா! இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

பரிசுத்த ஆவியைப் பற்றிய வெளிப்பாடு வேதத்தில் சிறிது சிறிதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் தேவ சித்தப்படி ஆவியானவர் ஒரு சிலரின் மேல் இறங்குவார் (சக.12:10). இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் போதோ, பிதாவிடம் ஜெபித்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள சீஷர்களுக்கு சொல்லிக் கொடுத்தார் (லூக்.11:13); அவரது பூலோக ஊழிய முடிவிலோ, அவரே பிதாவிடம் ஜெபித்து (வேண்டி) ஆவியான வரை அனுப்பப்போவதாக வாக்களித்தார் (யோ.14:16-17). உயிர்த்தெழுந்த பிறகு, சீஷர்களிடம் ஊதிப் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்டார். அதற்காய் எருசலேமில் காத்திருக்கச் சொன்னார் (யோ.20:22; லூக்.24:49; அப்.1:8). அதன்படியே பெந்தகொஸ்தே நாளில் விசுவசிகள் 120 பேர் மேலும் ஆவியானவர் இறங்கினார் (அப்.8:17; 9:17). இரட்சிப்பிற்குள் வரும் புற ஜாதியார் மீதும் ஆவியானவர் இறங்கினார் (அப்.2:1-4). அதற்குப் பிறகு கைகளை வைப்பதினாலே விசுவாசிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றனர் (அப்.10:44). இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இஸ்ரேலரும், புறஜாதியாரும் இரட்சிப்புக்குள் வர வேண்டும் என்பதும், அப்படி வரும் அத்தனை பேருக்கும் பரிசுத்த ஆவியானவர் அளிக்கப்படுகிறார் என்பதும், இந்த சபைக் காலத்தின் நிரந்தர உண்மையாயிருக்கிறது. (அப்.2:39) ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த ஆவியினால் தன் ஆவியில் மறுபடியும் பிறக்கிறான் (யோ.3:3-6; யோ.14:16; 16:14, 9:1 கொரி.12:12, 13, 1 யோ.5:1) அதன்பின் பரிசுத்த ஆவியை அவன் பெற்று ஆவியானவர் அவனுக்குள் வாசமாயிருக்கும் போது அவனது சரீரம் தேவாலயமாகிறது (1 கொரி.6:19). அவனது சரீரம் ஆலயமாய் மாறுகிற நிலைதான் - விசுவாசி பரிசுத்த ஆவியைப் பெறுகிற நிலைதான் - பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதாகும் (1 யோ.2:20, 27; அப்.1:4); இந்த நிலையைத்தான் ஆவியானவரைப் பெறுவது என்றும். மீட்கப்படும் நாளுக்கென்று பெறுகின்ற முத்திரை என்றும் சொல்லப்படுகின்றது (எபே.1:13; 4:30). பாவம் நிறைந்த மனிதனோடு கூட வந்து (with him) இயேசுவின் மேல் விசுவாசத்தை வளர்த்து, மறுபடியும் பிறக்க வைத்து, இரட்சிக்கப்பட்டவனாய் மாற்றுவது ஆவியானவரின் முதல் பணி. இது தான்

கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் என்றும் ஆவியானவர் தரும் ஞானஸ்நானம் என்றும் சொல்லப்படுகிறது (கலா.3:27; 1 கொரி.12:12,13). இரட்சிக்கப்பட்டவன் அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்று, ஆவியானவரை தனக்குள்ளே கொண்டு (In him) அவர் காட்டும் சத்தியத்திற்குள்ளே நடக்க வேண்டும். இப்படியாய் பரிசுத்த ஆவியைப் பெறுவது தான் ஆவியினால் இயேசு கிறிஸ்து தரும் ஞானஸ்நானம். இந்த அனுபவத்திற்குப் பிறகு தான் ஆவியானவர் தம்முடைய சித்தத்தின்படி வரங்களை தருகிறார். (1 கொரி.12:11).

கன்னி மரியாளை ஆவியானவர் நிரப்பினார் (லூக்.1:35); சிமியோனை நிரப்பினார் (லூக்.2:25) தாவீது மேல், 70 இஸ்ரேலர் மேல் நிரப்புதல் நடந்தது. எதை நிரப்பினார் ஆவியானவர்? "நிரப்புங்கப்பா - நிரப்புங்கப்பா..." என்று பாடுகிறோமே எதை நிரப்புவார்? தேவ ஆவியானவர் தம் வல்லமையினால் நிரப்புவார்; தம் மகிமையினால் நிரப்புவார். எதற்காக? ஏதோ ஒரு தேவ காரியத்திற்காக. இதனால்தான் "ஊற்றுமய்யா! உம் வல்லமையை" என்று நாம் பாடுகின்றோம். உபவாசத்தோடும் ஜெபத்தோடும் இருக்கும் போது (மத்.17:21) ஆவியானவர் தம் வல்லமையைப் பொழிகிறார்! அல்லேலூயா! இப்படியாய் ஆவியானவர், வல்லமையினாலும், மகிமையினாலும், ஞானத்தினாலும் நிரப்புவதுதான் ஆவியானவர் நம் மேல் இருக்கிற (upon us) அனுபவமாகும். இதற்கு உபவாசமும் ஜெபமும் தேவை (மத்.17:21) லூக்.4:18ஐ வாசித்தால், ஆவியானவர் இயேசுவின் மேல் இருந்ததால் அவர் அதிலே சொல்லப்பட்ட ஊழியங்களைச் செய்ய முடிந்தது. ஆக, ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஆவியானவர் ஒவ்வொருவர் மேலும் அமர்கிறார் அல்லது ஒவ்வொருவரையும் நிரப்புகிறார் என்று அறிகிறோம். இதைத்தான் அபிஷேகம் என்று வேதம் சொல்கின்றது. இப்படி நிரப்புகின்ற அனுபவம் இரண்டு ஏற்பாடுகளிலும் உண்டு. ஆனால் ஆவியானவரை நமக்குள் (INUS) பெறுகின்ற அனுபவம் புதிய ஏற்பாட்டு சபைக்கு மட்டுமே உண்டு. ஆவியினால் நிரப்பப்படுதல், ஆவியினால் ஞானஸ்நானம் போன்ற இரண்டையும் அந்நியபாஷை. அடையாளத்தோடு ஒரே சமயத்தில் பெறுவதற்கும் வாய்ப்புண்டு. இப்படித் தான் பெந்தகொஸ்தே நாளிலே பெற்றார்கள். அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றபின் - ஆவியினால் ஞானஸ்நானம் அடைந்த பின், ஆவியானவர் தமது சித்தத்தின்படி வரங்களை பகிர்ந்தளிக்கிறார். வரங்கள் மூலம் அற்புதங்கள் நடக்கும், ஆனால் மாற்.16:20ன் படி அடையாளங்களினாலும் ஆத்ம ஆதாயம் செய்ய வேண்டும். இதைத் தான் Signs and wonders என்று சொல்லப்படுவது. அதன் மூலம் கிரியை செய்வது வரங்களால்ல. இயேசு

கிறிஸ்து கடல் மேல் நடந்தார்; மரித்தோரை உயிர்ப்பித்தார்; தண்ணீரை திராட்சை ரசமாய் மாற்றினார். இவைகள் தான் அடையாளங்கள்; அதிசயங்கள். இவைகள் வரங்களினால் செய்யும் ஊழியத்தை விட மேன்மையானவை. இது பரிசுத்த ஆவியைப் பெறுதல் எனும் ஆவியினால் ஞானஸ்நானம் மற்றும் ஆவியின் அபிஷேகம் எனும் ஆவியினால் நிரப்பப்படுதல் போன்றவைகளினால், நடக்காமல் வேறொன்றினால் நடப்பதாகும். **அதைத்தான் அக்கினி அபிஷேகம் அல்லது அக்கினியால் ஞானஸ்நானம் என்று வேதம் சொல்கின்றது.** அதைப் பெறும் போதும் அந்நியபாஷை அடையாளம் வெளிப்படலாம். இந்த அக்கினி அபிஷேகமும் பெந்தகொஸ்தே நாளில் நடந்திருக்கிறது. இது இயேசுவால் நடத்தப்படுவது. ஆவியினால் நிரப்பப்படுதல் (filling upon) இதற்கு ஆரம்பமாகும். ஆவியினால் நிரப்பப்பட்டு வல்லமையைப் பெறுபவனே அக்கினியால் ஞானஸ்நானம் பெறுவான். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இரட்சிக்கப்பட்ட நீ இன்னும் ஆவியின் ஞானஸ்நானம், அந்நியபாஷை அடையாளத்தோடு பெறவில்லை என்றால் அதை உடனே பெற்றுக் கொள். அதன்பின் வரங்கள் உனக்கு அருளப்படும். உபவாசத்தோடும் ஜெபத்தோடும் பரிசுத்த ஆவியின் நிரப்புதலுக்கு வாஞ்சையாய் காத்திரு. தேவசித்தம் நிச்சயம் நிறைவேறும். அக்கினி அபிஷேகம் மூலமாய் ஆத்ம ஆதாயம் பெற வாஞ்சித்துப்பார். தேவனுக்கு சித்தமானால் அதுவும் நடக்கும்.

❖ ❖ ❖

## தெய்வீக சுகம் என்றால் என்ன?

தெய்வீக ஆரோக்கியம் (Divine Health) என்பது வேறு; தெய்வீக சுகம் (Divine Healing) என்பது வேறு. இரண்டையும் தேவன் தான் கொடுக்கிறார். தம் பிள்ளைகள் தெய்வீக ஆரோக்கியத்தோடு வியாதியில்லாமல் வாழ வேண்டும் என்பதுதான் தேவ சித்தம் (2 யோ.2; சங்.91:10). ஆனாலும் பல தேவபிள்ளைகளுக்கு வியாதிகள் வந்து விடுகின்றன. இதற்கு காரணங்கள் பல உள்ளன. இவைகளிலிருந்தும் சுகம் கொடுக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இதற்காகத் தானே நம் எல்லா வியாதிகளையும் சுமந்து தீர்த்தார் (மத்.8:17; ஏசா.53:4)! அல்லேலூயா! இப்படித் தேவன் கொடுக்கிற சுகம் தான் தெய்வீக சுகம். இதைப் பெற்றுக் கொள்ள தேவை வசனவிசுவாசமே! விசுவாசத்தினால் வராத யாவும் பாவம் (ரோ.14:23); விசுவாசித்தால் தான் அவருடைய மகிமையைக் காண முடியும் (யோ.11:40). அப்படியானால், வியாதிப்பட்ட ஒரு தேவைபிள்ளை,

தெய்வீக சுகம் பெற இருதயமாகிய ஆவியில் விசுவாசித்தால் மட்டும் போதுமா? சுகம் கிடைத்து விடுமா? இது கேள்வி. பல தேவ ஊழியர்கள், விசுவாசம் மட்டும் போதும் என்றும் போதிப்பது உண்டு. இது சரிதானா? கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்ற வசனம் பொய்யா? (யாக்.2:20). இந்த தெய்வீக சுகம் பற்றிய கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

வேதத்திலே தேவன் கொடுத்த தெய்வீக சுகம் பற்றி ஒரு சிலவற்றைப் பார்ப்போம். மோசேக்கு விரோதமாய் மீரியாம் பேசி பாவம் செய்ததால், சாபம் அவளைப் பிடித்தது; அவள் குஷ்ட ரோகியானாள். இதிலிருந்து சுகம் பெற தேவனிடத்தில் மோசே ஜெபித்தான். தெய்வீக சுகமும் கிடைத்தது. எப்படி? எப்போது? 7 நாள் பாளையத்துக்குப் புறம்பே அவள் விலக்கப்பட்டு, பின்பு சுகமாகி சேர்த்துக் கொள்ளப்பட்டாள். இது ஒரு வகையான தெய்வீக சுகம் (எண்.12) சீரியா ராஜாவின் படைத் தலைவன் நாகமான் குஷ்டரோகியாயிருந்தான். அவனிடத்திலிருந்த அடிமைப்பெண்ணின் வார்த்தையை விசுவாசித்து சுகம் பெற நாகமான் எலிசாவிடம் வந்தான். “யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு” என்று எலிசா சொன்னதைக் கேட்டு, “எலிசா தன் கையினால் என்னைத் தொட்டு சுகமாக்குவான் என்றிருந்தேன். நான் ஸ்நானம் பண்ணி சுத்தமாக வேண்டும் என்கிறாரே” என்று கோபப்பட்டு திரும்பினான். அப்போது அவன் ஊழியக்காரன் மூலம் தேவன் பேசி சொல்லிய வார்த்தையை நாகமான் விசுவாசித்து, அப்படியே அதை கிரியையில் காட்டினான். ஏழு தரம் முழுகின பின்பு சுகமானான். ஆக, தேவன் தரும் தெய்வீக சுகமானது விசுவாசித்து செயல்பட்ட பின்னரே கிடைத்தது. (2 ராஜா 5) தெய்வீக சுகமானது எப்படியும், எந்த வழியிலும் தேவ சித்தப்படி வெளிப்படலாம் என்று அறிகிறோம்.

**இயேசு கிறிஸ்து மனிதனாய் வந்து கொடுத்த தெய்வீக சுகத்தைப் பார்ப்போம்.** ஒரு குஷ்டரோகி விசுவாச அறிக்கை இட்டான். அவரோ தமது கையை நீட்டி, அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே அவன் சுத்தமானான் (மத்.8:104). ஒரு முறை 10 குஷ்டரோகிகள் “ஐயரே எங்களுக்கு இரங்கும்” என்று தெய்வீக சுகம் வேண்டினார்கள். அவரோ தொடவில்லை; கையை நீட்டவில்லை. “நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு காண்பியுங்கள்” என்றார். அப்போதும் அவர்கள் சுகமாகவில்லை; அவர் சொன்னதை விசுவாசித்து அவர்கள் போகையில் சுத்தமானார்கள் (லூக்.17:12-14). தெய்வீக சுகம் எப்படியும் வெளிப்படலாம். இரண்டு குருடர்கள், விசுவாசத்தோடே அவரைக் கூப்பிட்டுக் கொண்டே அவர்

வீட்டிற்கே வந்து, விசுவாச அறிக்கை இட்டார்கள். அவரோ அவர்களுடைய கண்களைத் தொட்டு "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" என்று சொன்ன உடனே அவர்கள் சொஸ்தமானார்கள் (மத்.9:27-30). ஒரு முறை பிசாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான். அவனை அவர் சொஸ்தமாக்கினார் என்று மத்.12:22 சொல்கின்றது. எப்படி என்று விளக்கப்படவில்லை. ஒருமுறை இயேசு வருகிற வழியில் இரண்டு குருடர்கள் விசுவாசத்தோடு கூப்பிட்டார்கள். சீஷர்கள் தடுத்தும் விசுவாச சத்தம் குறையவில்லை. இயேசு உடனே நின்று, அவர்களின் விசுவாச அறிக்கையை கேட்டு, மனதுருகி அவர்கள் கண்களைத் தொட்டார். அவர்கள் சொஸ்தமானார்கள். (மத்.20:30-34). இன்னொரு முறை, ஒரு குருடனை கொண்டு வந்து அவனைத் தொடும்படி விசுவாசத்தோடு கேட்டபோது, அவரோ அவனை கிராமத்து வெளியே கொண்டு போய், அவன் கண்களில் உமிழ்ந்து அவன் மேல் கைகளை வைத்து, எதையாகிலும் காண்கிறாயா என்று கேட்டார். நடக்கிற மனுஷரை, மரங்கள் போல் காண்கிறேன் என்றதும், மறுபடியும் அவன் கண்களின் மேல் கைகளை வைத்து அவனை ஏறிட்டுப் பார்க்கும்படி செய்தார். அப்பொழுது அவன் சொஸ்தமானான் (மாற்.8:22-25). வேறொரு சமயம், இயேசு தரையிலே துப்பி, உமிழ் நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி, சீலோவாம் குளத்தில் கழுவச் சொன்னார். அவன் விசுவாசித்து கழுவினான்" சுகமானான் (யோ.9:6,7). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். இன்றைக்கு விசுவாசிக்க இயேசுவின் வார்த்தை இருக்கிறது. ஆனால் வியாதிப்பட்ட நம்மைத் தொடவோ, உமிழவோ, சேறு பூசவோ மனுஷ குமாரனில்லை;" சீலோவாம் குளமுமில்லை; ஆசாரியனும் இல்லை போகும்போதே சுகமாக; மாறாக தேவன், நன்மையான ஈவுகளை அளித்திருக்கிறார் (யாக்.1:17). "உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் சுகமேயில்லை; அது காயமும் வீக்கமும் நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ்பிதுக்கப் படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" என்று தேவன் சொல்வதைப் பாருங்கள் (ஏசா.1:6). "கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடை யாமற் போனாள்" (எரே.8:22) என்ற தேவனின் அங்கலாய்ப்பை மறவாதே! வசன விசுவாசத்தோடு தான் பிசின் தைலமோ (மருந்துகள்), இரண வைத்தியனோ (டாக்டர்) தேவை; அப்போதுதான் சுகம் உண்டு என்ற தேவனின் எண்ணத்தை உணர்ந்துகொள். வியாதி என்ற உடனே, நம் சபைகளிலே சொல்வது

எசேக்கிய ராஜா வைத்தான். அவன் மரிப்பான் என்று ஏசாயா சொல்லியும் அவனின் விசுவாச வேண்டுதலால் தேவனே ஏசாயா மூலமாய் மறுபடியும் 15 வருடம் கூட்டிக் கொடுப்பதாய் சொன்னார். அவன் வியாதியினின்று பிழைப்பதற்கு விசுவாசத்தோடு அத்திப் பழத்து அடையை ராஜாவின் பிளவையின் மேல் பற்றுப் போட்டபோது அவன் பிழைத்தான். (2 ராஜா 20) இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தெய்வீக சுகத்திற்கு வசன விசுவாசம் தேவை. மட்டுமல்லாமல் விசுவாசத்தோடு கூடிய நன்மையான செயல்பாடுகள் - கிரியைகள் தேவை. ஆசீர்வதிக்கப்பட்ட அப்பமும் தண்ணீரும் தேவை (யாத்.23:25); ஓய்வு தேவை; நல்ல சூழ்நிலை தேவை; நல்ல மருந்துகள் மருத்துவர்கள் தேவை. நன்மையான எந்தக் காரியங்களையும் உலகிலே தேவன் நமக்காகவே உண்டாக்கி யிருக்கிறார்! அல்லேலூயா! மண்ணான சரீரம் சுகமாயிருக்க விசுவாசத்தோடு மண் பூமியில் உருவாகும் நன்மையானவைகள் நிச்சயம் தேவை. விதைக்கிறது நாம்; விளையச் செய்பவர் தேவன். விசுவாசத்தினால் மட்டுமே சில வேளைகளில் தெய்வீக சுகம் கிடைக்கலாம்; விசுவாசக் கிரியை களிலேயும் சில வேளைகளில் தெய்வீக சுகம் கிடைக்கலாம். எப்படியும் தெய்வீக சுகம் தேவனால் ஏதோ ஒரு வழியில் கிடைக்கும் என்று விசுவாசி! கழுதை மூலமாய் பிலேயாமுக்கு உணர்த்திய தேவன், காகம் மூலம் எலியாவை போஷித்த தேவன், சேறு பூசி சுகமாக்கிய தேவன் இன்றும் ஜீவிக்கிறாரே! அல்லேலூயா! விசுவாசிப்போம்! அறிக்கையிடுவோம்! நன்மையான கிரியைகளில் ஈடுபடுவோம்! தெய்வீக சுகம் நமக்கே! அல்லேலூயா! ஆமென்!

❖ ❖ ❖

## 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் தேவையா?

சில ஆவிக்குரிய சபைகளில் கூட "நியாயப்பிரமாணத்தின் மறுபதிப்புத்தான் புதிய ஏற்பாடு என்றும், 10 கற்பனையை நாம் கைக்கொள்ளவேண்டும் என்றும் போதித்து, ஞாயிற்றுக்கிழமைதான் ஓய்வு நாள் என்றும் சொல்லி, இப்படியாய் 4ம் கற்பனையை ஆசரிக்க வேண்டும்" எனறும் போதிக்கின்றனர். சில கள்ள உபதேச சபைகளிலோ, "மோசேயின் நியாயப் பிரமாணம் வேறு; பத்து கற்பனை வேறு; மோசேயின் பிரமாணம் தான் சிலுவையில் ஒழிந்தது; 10 கற்பனையை நாம் கைக்கொள்ள வேண்டும்" என்று போதிக்கின்றனர். இதுக் குறித்த கருகலான சத்தியத்தை

ஆவியானவர் மறுபடியும் விளக்கி, புத்தாண்டிலாவது உண்மைச் சத்தியத்தின் படி நடக்க வழி நடத்துவதற்கு கீழ்ப்படிவோமாக!

முதலில் நம்மை நிதானிப்போம். நாம் புறஜாதியிலிருந்து கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள். இயேசு கிறிஸ்து நம் பாவங்களை சுமந்து தீர்த்து நீதிமானாக்கினார் என்ற அடிப்படை சத்தியம்தான் நமக்கு தெரியும். 10 கற்பனையோ, நியாயப் பிரமாணமோ ஒன்றும் நமக்கு தெரியாது. அது இஸ்ரேல் ஜாதியிலிருந்து கிறிஸ்துவிற்குள் வந்தவர்களுக்கு தான் தெரியும். அவர்களே நியாயப்பிரமாணத்திற்கு மரித்து விடுதலையாகி இயேசுவின் உபதேசத்தில் நடக்க வேண்டியவர், என்று ரோ.7ல் சொல்லியிருக்க, புறஜாதியிலிருந்து வந்த நாம் இதைப்பற்றி சிந்திக்கவே தேவையில்லை. இதைச் சிந்தித்து செயல்பட வேண்டியவர்கள் இஸ்ரேல் ஜாதியிலிருந்து கிறிஸ்துவுக்குள் வந்தவர்கள் தான். ஆனாலும் கடைசி நாட்களில் பிசாசானவன் வசனத்தெளிவு ஏற்படாதபடி மனக் கண்களை குருடாக்கிக் கொண்டிருப்பதால் (2 கொரி 4:4) நாம் அறிந்து, உணர்ந்து மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டியதும் முக்கியமானதே!

மோசே மூலம் கொடுக்கப்பட்ட அத்தனையும் தேவனின் நியாயப் பிரமாணம்தான். 10 கற்பனையும், சடங்காச்சார பிரமாணமும், தேச சட்டமும், சுகாதாரப் பிரமாணமும் பலி முறைகளுக்கடுத்த பிரமாணமும், மோசே மூலம் கொடுக்கப்பட்ட தேவனின் பிரமாணம்தான் (யோ.1:17; 7:19; உபா.33:4) எனவே அதிலே மோசேயின் பிரமாணம் என்றும் தேவனின் பிரமாணம் என்றும் பிரித்து பேச இடமே இல்லை. சீனாய் மலையில் மோசே மூலம் நடந்த பழைய உடன்படிக்கையின் ஷரத்து-ஒப்பந்தம், 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் தான். நியாயப்பிரமாண புஸ்தகத்தில் மோசே, 10 கற்பனைகள் மற்றும் எல்லா பிரமாணங்கயையும் எழுதி (யாத்.20 முதல் 23 வரை தேவன் சொல்லியதை எழுதி), இஸ்ரேலர் காது கேட்க வாசித்தான். அவர்களும் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்போம் என்று வாக்களித்து பழைய உடன்படிக்கை நிறைவேறியது (யாத்.24:3-8). பழைய உடன்படிக்கை நிறைவேறும் வரை, 10 கற்பனைப் பலகைகள் கொடுக்கப்படவில்லை என்றும், நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்ட 10 கற்பனைகளையும் கைக்கொள்வோம் என்று தான் இஸ்ரேலர் வாக்களித்தனர் என்றும் முதலில் அறியவேண்டும். ஆக, நியாயப்பிரமாணம் 10 கற்பனைகளை உள்ளடக்கியது என அறிகிறோம். மேலும் மலைப்பிரசங்கத்தில் இயேசு, நியாயப் பிரமாணம் - கற்பனைகள் என்று பேசும் போது, "கொலை செய்யாதே; விபச்சாரம் செய்யாதே; பொய்யாணை

இடாதே" போன்ற 10 கற்பனைகளையும், இவைகளைச் செய்தால் வரும் தண்டனைகள் பற்றியும் (இவை 10 கற்பனையில் இல்லை), தள்ளுதற்சீட்டு; கண்ணுக்குக் கண்; பல்லுக்குப்பல்; உனக்கு அடுத்தவனை சிநேகித்து சத்துருவைப் பகைப்பாயாக (இவை 10 கற்பனையில் இல்லை) என்பவைகளையும், சொன்னார் என்று மத்.5:17-44ல் உள்ளதை வாசியுங்கள். ஆக, நியாயப் பிரமாணம் என்பது 10 கற்பனைகளோடு கூடிய எல்லாப் பிரமாணங்களும் சேர்ந்தது தான் என்று அறிகிறோம்."

மேலும் வேதத்தில் கற்பனை என்று வந்தாலே அது 10 கற்பனையைக் குறிப்பதில்லை. கற்பனை, பிரமாணம், வசனம், வார்த்தை, சட்டதிட்டம், வேதம் என்றெல்லாம் பல வார்த்தைகள் வேதத்தில் உள்ளன. 10 கற்பனை என்று எங்கு போடப்பட்டுள்ளதோ அங்குதான் அது 10 கற்பனையைக் குறிக்கும். மற்றபடி கற்பனை என்று வந்தால், அந்த இடத்திற்கு ஏற்ப அது வேறு வேறு பொருள் கொடுக்கும். 1 கொரி 14:37; கலா.6:15, 16; 1 யோ.2:7; ரோ.5:8; யோ.13:34; 15:10; கலா.6:2; பேன்ற பல இடங்களில் வரும் "கற்பனை" "பிரமாணம்" என்ற வார்த்தை, 10 கற்பனைகளைக் குறிக்கவில்லை என்று முந்தி அறிக. 10 கற்பனை கொடுக்கப்படாத காலத்திற்கு முற்பட்டு வாழ்ந்த யோபு கூட தேவனுடைய வார்த்தைகளையே கற்பனை என்கிறான் (யோபு.23:12). மொத்தத்தில் அதிகப்படியான இடங்களில் 'கற்பனை' என்ற வார்த்தை வந்தாலே அது தேவனுடைய வசனத்தையே குறிக்கிறது என அறியலாம்.

இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது சீனாய் மலையில் தான் (யாத்.31:18; நெகே. 13:14; அப்.7:53). இது இஸ்ரேல் மக்களுக்காக தரப்பட்டது (யாத்.20:2; உபா.5:15). இது கிருபைக்கு உட்பட்டது அல்ல; கிரியைக்குட்பட்டது (ரோ.10:5; கலா.3:10; எபி.இ10:28). இது ஒரேபகுதி உடையது. unit (யாக்.2:10,11) இது பரிசுத்தமுள்ளது; நீதியுள்ளது; நல்லது; ஆவிக்குரியது, என்றாலும் எல்லோரையும் குற்றவாளி என்று தீர்க்கும் (ரோ.3:19); யாரையும் நீதிமானாக்கு வதில்லை (ரோ.3:20); இதன் மூலம் நீதியோ ஜீவனோ உண்டாவதில்லை (கலா.3:21); இது அடிமைத்தன ஆகாருக்கு ஒத்தது (கலா.4:21-5:1) இது மீறுதலை பெருக வைக்கிறது; (ரோ.5:20; 7:7; 13:1; 1 கொரி 15:56) இது கிறிஸ்து வரும் வரைக்கும், இஸ்ரேலரை வழிநடத்தும் உபாத்தியாயர் (கலா.3:24). கிறிஸ்துவை கண்டபின் இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணமாகிய உபாத்தியாயர் இஸ்ரேலருக்கே தேவை இல்லை என்கிறபோது, இன்னும் பலர் அந்த உபாத்தியாயரைப் பிடித்துக் கொண்டிருந்தால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை; கிறிஸ்தவர்களாகவில்லை என்று பொருள்.

இயேசுவின் மரணத்தோடு பழைய உடன்படிக்கை முடிவடைந்து விட்டது என்பதால், அதன் ஷரத்தாகிய 10 கற்பனை களடங்கிய நியாயப்பிரமாணமும் இஸ்ரேலருக்கு முடிவடைந்து விட்டது. ஆமென். (எபே.2:14-16; கொலோ.2:14-17; எபி.8:13). "கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல; நிறைவேற்றவே வந்தார்" என்று மத்.5:17 சொல்லியிருக்க, நியாயப் பிரமாணத்தை ஒழிப்பாரா? அவர்ஒழிக்கவில்லை; அவருடைய சரீரம் மரித்தது போலவே அதுவும் அவரோடுகூட மரித்து போயிற்று என்று எபே.2:14-16; எபி.8:13 வசனங்களை வைத்து தியானியுங்கள். மேலும் மத்.5:17ஐ வாசிப்போர், 5:18ஐ வாசிப்பதில்லை. நியாயப்பிரமாணத்தில் உள்ளதெல்லாம் நிறைவேறும் வரைக்கும் நியாயப்பிரமாணம் ஒழியாது; நிறைவேறும் போது ஒழிந்து போகும். ரோ.10:4ன் படி இயேசு நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். எல்லாவற்றையும் நிறைவேற்றி, "முடிந்தது" என்று சொல்லி ஜீவனை விட்டார். நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேற்றப்பட்டு விட்டதால் இயேசுவின் சிலுவைக்குப் பிறகு அது ஒழிந்து போகும் (எபி.8:13). அல்லோலூயா! பழைய உடன்படிக்கையை நீக்கி, புது உடன்படிக்கையை நம்மோடு அல்ல; அன்று இஸ்ரேலரோடு பண்ணினார் என்றால் (எபி.8:10; எரே.31:33; மத்.26:28) பழைய உடன்படிக்கையின் ஷரத்தாகிய 10 கற்பனை களடங்கிய நியாயப்பிரமாணம் நீக்கப்பட்டு விட்டது அல்லவா! சிந்தியுங்கள்.

அப்படியானால் "பொய் சொல்லலாமா? விபச்சாரம் செய்யலாமா?" இது கேள்வி. இதுபுது உடன்படிக்கையின் ஷரத்தை தெரியாதவர்கள் கேட்கிற கேள்வி. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் நமக்கு வந்திருக்கிறது (ரோ.8:1); "உன்னைப்போல பிறரையும் நேசி" என்ற நியாயப்பிரமாண கட்டளையில்லாமல், துரோகிகளாய், விரோதிகளாய் நாம் இருந்தபோதே, நமக்காய் ஜீவனை விட்டு நம்மை அழிவினின்று காத்த (ரோ.5:6-8; யோ.3:16) அந்த இயேசுவைப்போல அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய புதிதான கற்பனையாய் நமக்குக் கிடைத்திருக்கிறது (யோ.13:34; 15:12). இந்தக் கற்பனையின் அடிப்படையிலமைந்த அவருடைய உபதேச வசனத்தையும் (மத்.28:20), அப்போஸ்தலருடைய உபதேச வசனத்தையும் (ரோ.6:17; யூதா.17; அப்.2:42) கைக்கொண்டு நடப்போம்! அப்போது பொய் சொல்ல மாட்டோம்; விபச்சாரம் செய்ய மாட்டோம்; வசன விசுவாசத்திற்கு விரோதமாய் நடக்க மாட்டோம் (ரோ.14:23); கிறிஸ்து இயேசுவின் நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (1 யோ.3:4). அந்தப் பிரமாணமே நம் இருதயமாகிய ஆவியிலே எழுதப்பட்டிருக்கிறது (எபி.8:10; 10:16). அல்லேலூயா!

# அக்கினி அபிஷேகம் என்றால் என்ன?

இன்றைக்கு எங்கு பார்த்தாலும் "அக்கினிப் பெருவிழா", "அக்கினி அபிஷேக முகாம்," "பரிசுத்த அக்கினி திருவிழா" என்றெல்லாம் ஆவிக்குரிய சபைகளிலும், மற்ற சபையார் மத்தியிலும் கொண்டாடப்படுகின்றது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே பிரசங்கியாரோ, பாடல் ஆராதனை நடத்துபவரோ, "அக்கினி இறங்கட்டும், அக்கினி இறங்குகிறது; பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்வதும், முன்னால் நிற்கும் ஊழியர்களும், விசுவாசிகளும், "அல்லேலூயா" என்று ஆர்ப்பரித்து, ஆடிப் பாடி அந்நிய பாஷையில் எப்போதும் போல் பேசுவதும் வாடிக்கையாகிவிட்டது. அவர்கள் சொல்லுகிறபடி அக்கினி அபிஷேகம் பெற்று வீடு திரும்புவோரின் பின் நிலைமை எப்படி இருக்கிறது? பழைய அதே நிலைமையைத் தானே நாம் காண்கிறோம். இந்தக் கூட்டங்களில் மேடையில் முதலில் வருபவர் "அக்கினியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லி "பெற்றாயிற்று" என்று சொல்லிவிட்டுப் போவார். பின்னால் வருபவர்களும் அதே போல அக்கினியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்பார்கள். அப்படியானால் முதலில் பெற்ற அக்கினி என்ன ஆயிற்று? அதை யாரும் சிந்திப்பதே இல்லை. பணம், பகட்டு, ஊர் பேர், பெருமை, கூட்டம், ஜாதி உள்ள ஊழியர்கள், என்ன சொன்னாலும் ஆமாம் சாமி போடும் கூட்டமாய் கிறிஸ்தவ வட்டாரம் மாறிவிட்டதே! ஆவியானவரின் துக்கத்தை அறியாமலிருக்கிறார்களே (எபே.4:30)! அந்த ஆவியானவர் "அக்கினி அபிஷேகம் என்றால் என்ன?" என்ற கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

"எனக்குப் பின் வருகிறவர் ஆவியானாலும் அக்கினியினாலும் ஞான ஸ்நானம் கொடுப்பார்"(மத்.3:11) என்று யோவான் ஸ்நானன் சொன்னான். ஒவ்வொரு மனிதனும் பரிசுத்த ஆவியினால், வசனத்தைக் கொண்டு, தன் ஆவியிலே மறுபடியும் பிறக்கிறான்; இரட்சிக்கப்படுகிறான் (யோ.3:3-6; 1 பேது.1:3; யாக்.1:1:18; யோ.14:16; 16:14,9; 1 கொரி.12:12,13; 1 யோ.5:1; ரோ.10:9,10). அதன்பின் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெற்று, நீதிமானாக்கப்பட்டதை உலகிற்கு காட்டுகிறான் (ரோ.3:23,2; யோ.1:31); தேவனோடு உடன்படிக்கை பண்ணுகிறான் (1 பேது.3:21). அதன் பின் அப்.2:38ன் படி ஆவியினால் இயேசு கொடுக்கும் ஞானஸ்நானம் பெற்று, ஆவியானவர் அவனுக்குள் வாசமாயிருக்கும் தேவாலயமாக மாறுகிறான் (1 கொரி.6:19). இதுதான் ஆவியின் ஞானஸ்நானம்; அல்லது ஆவியின் அபிஷேகம் (1 யோ.2:20, 27; அப்.1:4; எபே.1:13; 4:30). இது அந்நிய பாஷை அடையாளத்தோடு நடக்கிறது. நாம் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம்

பெற்றிருக்கிறோம் என்பதைக் காட்டிடவும், தேவனோடு இரகசியம் பேசவும், பத்திவிருத்திக்காகவும் இந்த அந்நியபாஷை தேவனோடு தொடர்பு வைக்கும் போதெல்லாம் வெளிப்படுகின்றது. ஆமென். இந்த அனுபவத்திற்குப் பிறகு தான் ஆவியானவர் தம்முடைய சித்தத்தின்படி வரங்களைத் தருகிறார் (1 கொரி.12:11); ஆவியானவர் சகல சத்தியத் திற்குள்ளும்நடத்தி ஆவியின் கனிகளில் நிறைய உதவி செய்கிறார். (யோ.14:26; கலா.5:22,23) **வரங்கள் கிரியை செய்ய, வல்லமையோ பரிசுத்தமோ தேவையில்லை; வாஞ்சையே தேவை.** ஆவியானவரை நமக்குள் கொண்டிருக்கும் போது நடக்கும் அனுபவங்கள் இவைகள். இந்த அனுபவம் புதிய ஏற்பாட்டு சபைக்கு மட்டுமே அப்.2ல் இருந்து ஆரம்பமானது.

கன்னி மரியாள் மேல் ஆவியானவர் நிழலாடினார்; நிரப்பினார் (லூக்.1:35); சிமியோனை நிரப்பினார் (லூக்.2:25); தாவீதின் மேல், 70 இஸ்ரேலர் மேல் நிரப்புதல் நடந்தது. எதை நிரப்பினார் ஆவியானவர்? "நிரப்புங்கப்பா - நிரப்புங்கப்பா..." என்று பாடுகிறோமே எதை நிரப்புவார்? தேவ ஆவியானவர் தம் வல்லமையினால் நிரப்புவார்; தம் மகிமையினால், மாட்சி மையினால், அதிகாரங்களினால் நிரப்புவார். இதனால்தான், "ஊற்றுமய்யா - உம் வல்லமையை" என்று பாடுகிறோம். உபவாசத்தோடும் ஜெபத்தோடும் இருக்கும் போது, ஆவியனாவர் தம் வல்லமையைப் பொழிகிறார் (மத்.17:21; அப்.10:38). அந்த அனுபவம் பழைய எற்பாட்டிலும் உண்டு. புதிய ஏற்பாட்டிலும் உண்டு. இந்த அனுபவம் தான் இயேசு தருகிற அக்கினியினால் ஞானஸ்நானம் - அக்கினி அபிஷேகம். ஆவியினால் ஞானஸ்நானம் பெறும்போதே, அக்கினியினால் ஞானஸ்நானமும் அந்நிய பாஷை அடையாளத்தோடு பெறுவதற்கும் வாய்ப்புண்டு. இப்படித்தான் பெந்தகொஸ்தே நாளில் பெற்றார்கள்.

ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற பின், ஆவியானவரின் சித்தப்படி வரங்கள் அளிக்கப்படும் போது பல அற்புதங்கள் 1 கொரி.12:8-10ன் படி நடக்கும். ஆனால் மாற்.16:20 ன் படி அதிசயங்களும் அடையாளங்களும் (signs & Wonders) எப்போது நடக்கும்? இயேசு கிறிஸ்து கடல் மேல் நடந்தார்; மரித்தோரை உயிர்ப்பித்தார்; தண்ணீரை திராட்சை ரசமாய் மாற்றினார். 5 அப்பம் 2 மீன்களை ஐயாயிரம் பேருக்கு அளித்தார்; லேகியோன் பிசாசுகளை விரட்டினார். இவைகள் தான் அதிசயங்கள்; அடையாளங்கள். இவைகள் வரங்களினால் நடப்பவை அல்ல; ஆவியின் ஞானஸ்நானத்தால் - அபிஷேகத்தால் நடப்பவை அல்ல. அக்கினி ஞானஸ்நானத்தால் - அக்கினி அபிஷேகத்தால் நடப்பவை. உலகமே கண்டிராத, ஆச்ரியப்படத்தக்க பெரிய காரியங்கள் அக்கினி அபிஷேகத்தால்

நடைபெறும்; இதனால் வசனங்கள் உறுதிப் படும்; ஆத்ம ஆதாயம் பெருகும். இதற்கு தேவனிடமிருந்து வல்லமை, மகிமை, மகத்துவம், மாட்சிமை, ஞானம் எல்லாம் பெற வேண்டும்; இதற்கு உபவாசமும் ஜெபமும் மிக மிக மிக அவசியம். இதைப் பெறுவதற்கு இரட்சிக்கப்பட்டு, ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்ற தகுதி மாத்திரம் போதாது; பரிசுத்தமான சாட்சி வாழ்க்கை - ஆவியின் கனி - வசனத்தெளிவு - தேவ ஞானம் - தேவ பிரசன்னம் ஆகியவை மிகவும் தேவை. இயேசுவிடம் இவைகள் இருந்தன; ஆதி அப்போஸ்தலர்களிடம் இவைகள் இருந்தன. அதனால் அக்கினி அபிஷேகம் நிறைந்தவர்களாய் அதிசயங்களையும் அடையாளங்களையும் செய்தார்கள். இலட்சக்கணக்கில் பணம் செலவழித்து "அக்கினிப் பெருவிழா", "அக்கினி முகாம்" நடத்தி என்ன பலன்கள் உண்டாயிருக்கின்றன? நடத்துபவர்களுக்கு பேரும் புகழும், ஊழியர் விசுவாசிகள் மத்தியில் உண்டாகின்றது; அவ்வளவுதான். மற்றப்படி அக்கினி ஞானஸ்நானம் பற்றி வசனத்தெளிவு இல்லாததால், ஏதோ ஆடிப்பாடி, அந்நிய பாஷைகளைப் பேசி காலத்தையும், உடல் பலத்தையும், பணத்தையும் வீணாக்குகிறார்கள். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இது சிந்திக்கும் காலம்; செயல்படும் நேரம்; மௌனமாய் இருக்காதே; வசனத் தெளிவு பெற ஆவியானவருக்கு இடங்கொடு; அக்கினியால் ஞானஸ்நானம் பெற்று அதிசயங்களையும் அடையாளங்களையும் செய்ய இன்றே வாஞ்சிப்பாய்! வெறுமனே நிரப்புங்கப்பா - நிரப்புங்கப்பா... என்று பாடிப்பாடியே வீணாய் நாட்களை கழிக்காதே! தேவன் உன் மேல் அக்கினி அபிஷேகம் பண்ண வசனத்தின் படி ஆயத்தமாய் காத்திரு. வெற்றி நமதே! ஆமென்.

❖ ❖ ❖

## எது கொல்லுகிறது? எது உயிர்ப்பிக்கிறது?

2 கொரி. 3:6 வசனத்தைப் படித்து விட்டு பலர் "எழுத்து கொல்லுகிறது; ஆவியோ உயிர்ப்பிக்கிறது" என்பதற்கு பல விளக்கங்கள் தருகின்றனர். அது அவர்களுடைய அறிவிற்கு செம்மையாய்த் தோன்றுகின்றது. ஆனால் நேரிடுவதோ விபரீதம் (நீதி 14:12). எழுத்து என்றால் வேதவசனம் - வேத வார்த்தை என்றும், இந்த வார்த்தை இருபுறமும் கருக்குள்ளப் பட்டயமா யிருப்பதால் (எபி.4:12) அதைப் படிப்பவர்களுக்கு, வாசிப்பவர்களுக்கு, தியானிக்கிறவர்களுக்கு, கொல்லுவதாய் இருக்கிறது என்றும், ஆவியானவர் உயிர்ப்பிக்கிறார் என்றும் பிரசங்கிக்கின்றனர். சங். 1:2; வெளி. 1:3 போன்ற வசனங்களின்படி வேத வார்த்தையானது நம்மைப் பாக்கியவான்களாய்

மாற்றும் போது அது எப்படிக் கொல்லும்? ஜீவத்தண்ணீராம் வசனத்தை இலவசமாய்ப் பெற்றுக் கொள்வது (வெளி. 22:17, யோ. 7:37) சாவதற்காகவா? மனிதனைக் கொல்லுவது பாவமே! எபே. 2:1 ன் படி பாவங்களினாலும் அக்கிரமங்களினாலுமே நாம் மரித்துப் போயிருந்தோம். தேவனின் ஜீவனுடைய வார்த்தையே நம்மை ஆவியில் உயிர்ப்பித்தது (1 பேது. 1:23; யோ. 3:5) தினந்தோறும் ஆத்மாவில் உயிர்ப்பித்துக் கொண்டிருப்பது தேவ வசனமே (யாக். 1:18, 21) அப்படியிருக்க வசனம் எப்படிக் கொல்லும்? இந்த வசனத்தை நமக்கு போதித்து நடத்துகிறவரே ஆவியானவராய் இருக்கும் போது (யோ. 16:13) கொல்லுகிற வசனத்தையா உயிர்ப்பிக்கற ஆவியானவர் தருவார்? சிந்தியுங்கள். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

முதலில் 2 கொரி 3:6 முதல் 18 வரை வாசியுங்கள். ஆவிக்குரியதாயிருக்கிறது புது உடன்படிக்கை என்றும், அதுவே உயிர்ப்பிக்கிறது என்றும் பவுல் எழுதுகிறான். அப்படியானால் எழுத்திற்குரியது எது? மோசே செய்த ஊழியம் எழுத்துக்களில் எழுதப்பட்டு கற்களில் பதிந்திருந்த மரணத்திற்கு கேதுவானா ஊழியம் (2 கொரி.3:7). இது பழைய ஏற்பாட்டு பழைய உடன்படிக்கை ஊழியம். இப்பொழுதோ நியாயப் பிரமாணக்காரர்கள் பழமையான எழுத்தின்படியல்ல; புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்யத்தக்கதாக அவர்களைக் கட்டியிருந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்துக்கு மரித்தவர்களாகி அதினின்று விடுதலையாக்கப் பட்டியிருக்கிறார்கள். (ரோ.7:6) கிறிஸ்து இயேசு வினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், பாவம் - மரணம் என்று சொல்லியே கொல்லுகிற 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தினின்று விடுதலை தந்திருக்கிறது. இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணப் புத்தகம் பழைய உடன்படிக்கைக்காரருக்கு விரோதமான சாட்சியாய் - நீ குற்றவாளி, உனக்கு இன்ன தண்டனை என்று தினந்தோறும் சொல்லுகிறதாய் இருந்தது (உப.31:26). இந்த எழுத்துக் கொல்லிதான் இயேசுவின் மரணத்தோடு மரித்துப் போனது; ஒழிந்து போனது (கொலோ.2:14; எபே.2:14, 15). இயேசுவால் வந்த புது உடன்படிக்கையாகிய ஆவியின் பிரமாணமோ, கிறிஸ்துவின் அன்பென்கிற புதிய கற்பனையாய், உயிர்ப்பித்து ஜீவனைத் தருகிறதாய் இருக்கிறது (யோ. 15:12, 13:34); ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கிற பிரமாணமாய் இருக்கிறது (கலா. 5:2); தீமையோடு எதிர்த்து நிற்காத பிரமாணமாயிருக்கிறது; சத்ருக்களை சிநேகித்து, சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து ஜெபம் செய்ய வேண்டிய பிரமாணமாயிருக்கிறது (மத்.5:39, 44); சரீரத்திலே அல்ல, இருதயத்திலே விருத்தசேதனம் பண்ண வேண்டிய ஆவிக்குரிய

பிரமாணமாயிருக்கிறது (மத். 5:28; ரோ. 2:29); அப்போஸ்தலர்களால் ஒப்புவிக்கப்பட்ட ஆவிக்குரிய உபதேச சட்டமாயிருக்கிறது (ரோ. 6:17). முழுக்கிருபையும், முழு சத்தியமும் தந்த மனுஷகுமாரன் இயேசுவின் கட்டளையே ஆவிக்குரிய உபதேசமாயிருக்கிறது (மத். 28:20; யோ. 1:17). அதை அமுல்படுத்தவே ஆவியாகிய தேவன் நிரந்தரமாய் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறார் (யோ. 14:16)

கொல்லுகிற எழுத்தின்படியான பத்துக் கற்பனைகளடங்கிய பழைய உடன்படிக்கைச் ஷரத்துக்கும் உயிர்ப்பிக்கிற ஆவியின் புது உடன்படிக்கை ஷரத்துக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வோமாக!

| விசுவாசமில்லாத 10 கற்பனைகளடங்கிய எழுத்தின்படியான பிரமாணம் | புது உடன்படிக்கையின் ஆவியின் பிரமாணம் |
|---|---|
| 1. பாவப் பிரமாணம் [ரோ.7:23;8:2] | நீதியின் பிரமாணம் [ரோ. 9:3] |
| 2. மாம்சப்பிரமாணம் [ரோ.7:5,6] | ஆவிக்குரிய பிரமாணம் [ரோ.8:2] |
| 3. விசுவாசத்திற்குரியதல்ல [கலா. 3:12] | விசுவாசத்திற்குரியது [ரோ. 3:27] |
| 4. அடிமை நுகம் [கலா. 5:1] | சுதந்திர சுயாதீனப் பிரமாணம் [யாக்.1:25] |
| 5. இயேசுவால் முடிந்தது [ரோ. 10:4] | இயேசுவால் ஆரம்மானது [எபி.8:6; 10:9] |
| 6. மரணத்தைக் கொண்டு வரும் [2 கொரி. 3:7] | ஜீவனைக் கொண்டுவரும் [ரோ.8:12; 10;17] |
| 7. ஆக்கினை தீர்ப்பை கொடுக்கும் [2 கொரி. 3:9] | சுதந்திரத்தைத்தரும் [கலா.5:1 யோ 8] |
| 8. எதையும் பூரணப்படுத்தாது [எபி.7:19] | பரிபூரணப்படுத்தும் [எபி. 7:19] |
| 9. இரட்சிக்க வல்லமையில்லாதது [எபி. 9:9; 10:4] | முற்றுமுடிய இரட்சிக்க வல்லது [எபி. 7:25] |
| 10. வருஷந்தோறும் பாவங்களை நினைவு கூரும் [எபி. 10:3] | பாவங்கள் மன்னிக்கப்பட்டு மறக்கப்படும் [எபிஅ 8:12; 10:17] |
| 11. பாவமுள்ளவர்களின் ஊழியம் [எபி. 5:1-4] | பாவமில்லாதவரின் ஊழியம் [எபி. 7:26] |
| 12. சுதந்தரிக்கிற வாக்குத்தத்தம் இல்லை [ரோ. 4:13] | சுதந்தரிக்கிற வாக்குதத்தம் உண்டு [எபி.7:26] |
| 13. கோபாக்கினையை உண்டாக்கிறது [ரோ. 4:15] | கோபாக்கினையிலிருந்து விடுதலை தருகிறது [யோ. 5:9] |
| 14. பாவ நிவர்த்தி இல்லை பரிபூரண இரட்சிப்பு இல்லை [எபி. 10:2-4] | பாவ நிவர்த்தி உண்டு பரிபூரண இரட்சிப்புண்டு [கலா. 3:13, எபி. 9:12-15; 5:9; 10:10] |
| 15. இரக்கமே இல்லாதது [எபி. 10:28] | முழுமையாய் இரக்கமுண்டு [எபி.8:12] |
| 16. பலவீனமுள்ளது பயனற்றது கொல்லுகிறது [எபி.7:18] | உயிர்ப்பிக்கிறது [2 கொரி. 3:6] |
| 17. மகிமை மூடப்படுகிறது [2 கொரி.3:13] | மகிமை வெளியரங்கமாகிறது [2 கொரி. 3:18] |
| 18. சாபத்தைக் கொண்டு வருகிறது [கலா. 3:10] | சாபத்திலிருந்து விடுதலை தருகிறது [கலா. 3:13] |
| 19. ஜீவன் தரமுடியாது [கலா. 3:21] | ஜீவன் தருகிறது [யோ. 6:32-58] |
| 20. பாவம் வெளிக்காட்டப்பகிறது [கலா.3:19] | பாவம் மூடப்படுகிறது மன்னிக்கப்படுகிறது [ரோ. 4:1-8] |

**(ஆனாலும், நியாயப்பிரமாணத்தை விசுவாசத்தோடு கிரியைகளில் காட்டினால், ஆவியின் பிரமாணத்திற்கான விசுவாசப் பலன் வந்து சேரும்).**

இன்னும் ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! பழைய உடன்படிக்கை எழுத்தின் வடிவிலான சட்டமாயிருந்தது. புது உடன் படிக்கையோ உயிர்ப்பிக்கிற ஆவியாய் இருக்கிறது. பழைய உடன்படிக்கைகாரர் யாவரும் நம்மையல்லாமல் பூணரா

கிறதில்லை (எபி.11:40) எனவே கொல்லுகிற எழுத்தின் படியிலான 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாண பழைய உடன்படிக்கை நமக்கு வேண்டாம். உயிர்ப்பிக்கிற ஆவியினாலான இயேசுவின் கட்டளைகளும் அப்போஸ்தல உபதேசமும் மட்டுமே நமக்கு வேண்டும். அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்றால் என்ன?

ஆசீர்வாதம், சாபம் என்று போதிக்கும் போதெல்லாம் நம்மவர்கள் தியானிப்பது உபா. 28ல் சொல்லப்பட்டதை தான். இதிலே வசனம் 2 முதல் 13 வரை சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் இந்த பூலோக வாழ்வுக்கு ஏற்றவைகளாகவே இருக்கின்றன. வசனம் 1, 2ன்படி இந்த ஆசீர்வாதங்களெல்லாம், நிபந்தனையோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் இஸ்ரேலருக்குக் கொடுக்கப்பட்டாலும், கலா. 3:7, 9,14; 2 கொரி. 1:20; ன் படி புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் உண்டு. அல்லேலூயா! எபே. 1:3ல். பிதாவாகிய தேவன் உன்ன தங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியானால் அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் என்ன? அவைகள் யாருக்குச் சொந்தம்? அவைகள் கற்களாலோ தோல் சுருள்களினாலோ நியாயப் பிரமாணம் போல் பூமியிலே எழுதப்படாமல், உன்னதங்களிலேயே பரிமாணிக்கப்பட்டதாமே அதன் அர்த்தம் தான் என்ன? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்ற ஒன்று உண்டானால் மாம்சத்திற்குரிய ஆசீர்வாதம் ஒன்று இருக்க வேண்டுமல்லவா! மாம்சம் என்றாலே நிரந்தர மில்லாதது; பூமிக்கடுத்தது; அழிந்து போகிறது என்று பொருள். இப்படிப்பட்ட ஆசீர்வாதம், அழிந்து போகிற பூமியில் வாழும், அழிந்து போகும் மண்ணான சரீரத்துக்குத் தேவையான தாகும்; இம்மைக்குரியதாகும் (1 கொரி 15:19). அதையும் தேவன் தான் தருகிறார் (See உபா. 28); நாம் சுதந்தரித்துக் கொள்கின்றோம். அதனால் உலகிலே வெற்றி வாழ்க்கை வாழ்கிறோம். ஆனாலும் இப்படிப்பட்ட ஆசீர்வாத வாழ்க்கை மாம்சத்திற்கேற்ற வாழ்க்கை என்று அறிகிறோம். ஒரு சில சபையார் சொல்வது போல இந்த உலகத்திற்குரிய ஆசீர்வாதம் தேவையில்லை என்றால், அது தேவனை - தேவனின் ஆசீர்வாத்தை - கீழ்ப்படுத்துவதாகும். மட்டுமல்லாமல் இந்த ஆசீர்வாதத்தை மட்டுமே பிடித்துக் கொண்டிருக்கும் ஒரு சில சபையார் போல இருப்பதும் தேவனைக் கீழ்ப்படுத்துவதாகும். அப்படியானால், இதற்கு

மேலான, நிரந்தரமான, மகிமைக்குரிய ஆசீர்வாதம் ஒன்று உண்டல்லவா! அதுதான் ஆவிக்குரிய ஆசீர்வாதம் (Spiritual Blessing); இதுவும் வசனத்தின் படியேதான்; இதையும் நாம் தான் சுதந்தரிக்கிறோம்.

இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் பிதாவாகிய தேவன் கொடுத்திருப்பதால் நிச்சயம் இது நமக்கே சொந்தம்; அவருடைய பிள்ளைகளுக்கே சொந்தம். ஆமென். அதுவும், இந்த ஆசீர்வாதம் சீனாய் மலையிலோ கற்பலகையிலோ கொடுக்கப்படவில்லை; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்து, உயிர்த்தெழுந்து உன்னதத்திற்குப் போன பின்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்த வான்களுக்கு கிடையாதா? இது கேள்வி. எபி. 11:39, 40ன் படி இவர்களெல்லாம் நம்மையல்லாமல் பூரணராகாதபடியினால், விசேஷமான ஒன்றை கிறிஸ்து இயேசுவினாலே நாம் பெற்றிருக்கிறோம். அல்லேலூயா! நாம் விசுவாசித்து, பெற்று, அனுபவிக்கிறோம். எபி.11ல் சொல்லப்பட்ட பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களோ வரப்போகிற கிறிஸ்து இயேசுவினாலே உன்னதங்களிலே பெறப்போகும் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை முன் கூட்டியே நம்பி - விசுவாசித்து, தங்கள் வாழ்க்கையில் சொந்தமாக்கிக் கொண்டார்கள். இந்த ஆசீர்வாதங்கள் இயேசுவால் ஆவியானவரைக் கொண்டு நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதால் நாம் நேரிடையாக வெளிப்படுத்தப்பட்டு உணர்ந்து அனுபவிக்கிறோம்; அவர்களோ விசுவாசித்து அனுபவித்தார்கள்.

இந்த விஷயத்தில், இதனால், நாம் அவர்களைவிட மேலானவர்களாய் இருக்க வேண்டுமல்லவா! அதனால் தானே நாம் புத்திரரானோம். மணவாட்டியானோம்; ராஜரீக ஆசாரியக் கூட்டமானோம். அவர்களோ சீயோன் குமாரத்தி என்றழைக்கப் பாத்திரமில்லாதபடி தாசரானார்கள். நண்பர் ஆனார்கள். மணவாட்டி அல்லது மனைவியாய் இல்லாமல், ஆவிக்குரிய விபச்சாரம் செய்து அண்டவரை விட்டுப் பிரிந்தவர்களானார்கள். ஆனாலும் அவர்களிலும் பலரைத் தெரிந்து கொண்டு, வரப்போகிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை, அன்றைக்கே தேவன் விசுவாசித்து நடக்க வைத்தார் (see எபி.11). என்னே தேவ அன்பு!

**இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஏராளம் உள்ளன. அவைகளில் ஒரு சிலவற்றை பார்ப்போம்.** 1. அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்திருந்த நம்மை கிறிஸ்துவோடு கூட உயிர்ப்பித்தார். 2. தேவனுடைய ஈவாகிய (Gift) இரட்சிப்பைத் தந்தார், புது சிருஷ்டியாக்கினார். 3. உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள்

நம்மைத் தெரிந்து கொண்டார். 4 தேவனுக்கு நாம் சுவீகார புத்திரராகும்படி இயேசு கிறிஸ்து மூலமாய் முன் குறித்தார். 5. கிருபைக்குள்ளே நம்மை கொண்டு வந்தார். 6. விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தி நம்மை மீட்டெடுத்தார். 7. தேவனின் கிருபையை சகல ஞானத்தோடும் புத்தியோடும் நம்மிடத்தில் பெருகப் பண்ணினார். 8. தேவன் தீர்மானித்திருந்த தம்முடைய சித்தத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தினார் 9. கிறிஸ்துவுக்குள் நம்மை தேவனுடைய உரிமையாளராக்கினார். 10. பரலோகத்திற்கு சொந்தக்காரர் களாக்கி, வாசஸ்தலங்களையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். 11. பரிசுத்த ஆவியினாலே முத்திரை போட்டிருக்கிறார். 12. இயேசு கிறிஸ்துவோடு உன்னதங்களில் உட்கார வைத்திருக்கிறார். 13. நியாயாசனங்களில் அமர்ந்து தேவதூதர்களையும் நியாயந்தீர்க்க செய்கிறார். 14. தேவனுடைய செய்கையாய் கிறிஸ்துவுக்குள் நம்மை சிருஷ்டித்திருக்கிறார். 15. நமக்காய் திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்; நித்திய ஜீவனை அதற்காய் தந்திருக்கிறார். கிறிஸ்துவுக்குள் சமீபமாக்கினார். 16. தேவ அன்பைப் பொழிந்திருக்கிறார். (எபே. 1:3-14; 2:1-13; யோ. 14:2-4; எபி 12:1; 1 யோ. 2:25 - All in English also). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இவைகளைப் பெற்றுக் கொள்ள நீ செய்ய வேண்டுவது ஒன்றே ஒன்று, விசுவாசிக்க வேண்டும். அவ்வளவு தான். விசுவாசம் வெற்றியைத் தரும், (Faith brings success). இந்த சட்டம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும் பொருந்தும்; உலகப் பிரகாரமான அசீர்வாதங்களுக்கும் பொருந்தும். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் கிறிஸ்து இயேசு வினாலே கிடைக்கப் போகும் இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை விசுவாசித்து நடந்திருக்கும் போது, உன்னதங்களிலே, மரித்து உயிர்த்தெழுந்து, பிதாவின் வலது பாரிசத்தில் விற்றிருக்கும் கிறிஸ்து இயேசுவினாலே கிடைத்துவிட்ட இந்த ஆசீர்வாதங்களை எந்த அளவுக்கு நாம் விசுவாசித்து நடக்க வேண்டும் என்று புரிகிறதா? விசுவாசியுங்கள்! சுதந்தரியுங்கள்! ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை ஆவியிலும் ஆத்மாவிலும் அனுபவித்தாலே போதும்; சரீரப்பிரகாரமாய் எல்லாவற்றிலும் அசீர்வாதங்கள் வந்து சேரும் (3 யோ.2). நிரந்தரமான, நித்யமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்! உலகத்திற்குரிய ஆசீர்வாதங்களை மட்டுமே சிந்தியாதிருங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்! அல்லேலூயா!

❖ ❖ ❖

# தேவ தூதர்களிலும் சற்று சிறியவரா நாம்?

எபி.2:6, 7; சங்.8:4,5 போன்ற வசனங்களை வைத்துக் கொண்டு, மனுஷனை தேவதூதர்களிலும் சிறியவனாய் உருவாக்கினார் என்று பலர் போதிப்பதைப் பார்த்திருக்கிறோம். இந்த வசனங்களில் வரும் "மனுஷருடைய குமாரன்" என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது என்றும், இயேசுவும் தேவதூர்களிலும் சிறியவராய்த்தான் உருவாக்கப்பட்டார் என்றும் போதிக்கிறார்கள். தேவ தூதர்கள் மனுஷர்களுக்கும் தேவனுக்கும் பணிவிடை செய்பவர்களாய் இருக்கும் போது (எபி.1:14; லூக்.4:10,11) வேலைக்காரரிலும் கீழாய் தேவன் மனுஷர்களை உருவாக்கி யிருப்பாரா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

முதலில் தேவ தூதர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும. இவர்கள் ஆவியாயிருக்கிறார்கள் (சங். 104: எபி.1:14). ஆனால், உள்ளான மனிதன் படைக்கப்பட்டதோ ஆவியாலும் புறம்பான மனிதன் உருவாக்கப்பட்டதோ மண்ணாலும் என்று "படைப்பின் இரகசியம்" என்ற ஆசிரியரின் செய்தி மூலம் அறிகின்றோம். புறம்பான மனிதன் இல்லாத தேவ தூதர்கள், மனுஷப் படைப்பை விட பெரிதாயிருக்க முடியாது. மேலும், தேவ தூதர்களை ஆண்பாலில் எழுதப்பட்டிருந்தாலும், Sex in the human sense is never ascribed to angels (மத். 22:30; மாற்.12:25) அதாவது மனிதனைப் போன்ற Sex - உடலுறவு அவைகளுக்கு இல்லாததால் நம்மைவிட உயர்ந்த நிலை என்று அவர்களை சொல்ல வாய்ப்பில்லை. பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, அதை ஆண்டு கொள்ளுங்கள் என்ற அதிகாரம் (ஆதி.1:28) மனுஷனுக்கு மட்டுமே. அல்லேலூயா! ஆதாம் - ஏவாள் பாவம் செய்யாததற்கு முன்பு, தேவ மகிமையில் படைக்கப்பட்ட மனிதன் தேவனோடு உறவாடினான்; தேவ தூதர்கள் அப்படி உறவாடுவதில்லை. தேவ தூதர்களுக்கு அதிகப்படியான வல்லமையை தேவன் கொடுத்திருந்தாலும் (See 2 ராஜா 119:35) நமக்கு தம்முடைய ஒரே குமாரனையே கொடுத்து, இயேசுவிலும் மேலானவைகளை செய்ய வைத்திருக்கிறாரே! (1 கொரி 1; யோ.14:12; 3:16) தேவ தூதர்கள் வேலைக்காரர்கள்; மனுஷனோ அவரின் பிள்ளைகள்; மணவாட்டி; தேவ தூதர்களையும் நியாயந்தீர்க்கிறவன்; அவரோடு உட்கார்ந்திருக்கிறவன். மனிதர்களுக்கு நன்மை செய்யவும், பாதுகாப்புக்காகவும் தேவ தூதர்கள் உள்ளனர். (1 ராஜா 19:5; சங்.34;7; தானி.6:22; மத்.2:13, 19; அப். 5:19) மனுஷக் குழந்தைகளை பாதுகாப்பதே இவர்கள் தான் (மத்.18:10; சங்.91:11). ஒரு வேளை மனுஷன் பாவம் செய்த

போது இப்படிப்பட்ட மேன்மைகளையெல்லாம் இழந்து போயிருக்கலாம். ஆனால் அவனை உருவாக்கும் போது தேவ தூதர்களிலும் சற்று சிறியவனாய் ஆக்கவே இல்லை.

அப்படியானால், "அவனை தேவ தூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர் (எபி.2:7) என்ற வசனத்தின் அர்த்தம் என்ன? இங்கே தேவ தூதர்கள் என்று போடாமல், "தேவதூதர்" என்று ஒருமையில் போடப்பட்டுள்ளதால் இந்த தேவதூதர் என்ற வார்த்தை யாரைக் குறிக்கிறது என்று பார்க்க வேண்டும்? எபி.2:2ல் தேவ தூதர் மூலமாய் சொல்லப்பட்ட வசனம் என்று ஆரம்பிக்கிறதே இந்த தேவதூதர் என்பது வார்த்தையாகிய தேவனைத் தானே குறிக்கிறது! சீனாய் மலையிலே பத்துக் கற்பனைப் பலகைகளையும், நியாயப் பிரமாணத்தையும் கொடுத்தவர் தேவ தூதர் என்று அப்.7:53, 38ல் உள்ளதே, அந்த தேவதூதர் வார்த்தையாகிய தேவன் தானே? கலா.3:19ம் இதைத் தானே குறிக்கிறது. யாக்கோபு அன்று ராத்திரியிலே தூதனானவரோடே போராடினானே யார் அவர்? (ஓசி.12:4,5). அவர் கர்த்தராகிய யேகோவா என்றும் வார்த்தையாகிய தேவன் தானே! மனோவாவோடும், அவன் மனைவியோடும் வெளிப்பட்ட தூதனாவர் (நியா.13:3 with ஏசா.9:6) வார்த்தையாகிய தேவன் தானே! (பழைய ஏற்பாட்டில் வரும் தூதனாவர் - தேவதூதர் - பெரும்பாலும் வார்த்தையாகிய தேவன் தான் என்று நான் ஆராய்ச்சிப் புத்தகங்களில் எழுதியதை தேடி வாசியுங்கள்) மேலும் யேகோவா, கர்த்தர் போன்ற நாமங்கள் ஆள் தத்துவமுள்ள மூவருக்கும் உண்டு என்று என ஆராய்ச்சிப் புத்தகங்களில் தேடி வாசியுங்கள் இவைகளையெல்லாம் பார்க்கும் போது, மனுஷனை தேவன், வார்த்தையாகிய தேவனைவிட சற்றுச் சிறியவனாக்கினாரென்றும், மனிதனாய் வந்து இரத்தம் சிந்தி மரித்து உயிர்த்தெழுந்ததன் விளைவாக தேவன் மகிமையினாலும் கனத்தினாலும் முடி சூட்டினாரென்றும், மறுபடியும் அவரின் படைப்புகளின் மேல் முழு அதிகாரமும் கொடுத்தார் என்றும், சகலமும் அவனுக்கு கீழ்ப்படுத்தினார் என்றும் அறிகிறோம் (லூக்.19:10; மத்.28:18-20; ஆதி.1:28).

மேலும், எபி.2:6,7ல் சொல்லப்பட்ட "மனுஷன்" என்பது மூலபாஷையில் ஆதாமையும்; "மனுஷனுடைய குமாரன்" என்பது ஆதாமின் சந்ததியையும் குறிக்கிறதே அல்லாமல், மனுஷனுடைய குமாரன் என்பது இயேசுவை குறிக்கவில்லை என்று அறிக. மனிதனாக வந்த இயேசுவை மனுஷகுமாரன் என்று தான் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய "மனுஷனுடைய குமாரன்" என்று எழுதப்படவில்லை.

ஆங்கிலத்திலும் Son of man என்று Capital ல் போடவில்லை என்று அறிக. எபி.2:9ஐ வாசிக்கும் போது கூட பிலி.2:6-8ல் சொல்லப்பட்டபடி தேவ தூதராகிய - வார்த்தையாகிய தேவனின் நிலையிலிருந்து சற்று சிறிய நிலையில் - மனிதனாய் - அடிமையின் ரூபத்தில் இயேசு வந்தார் என உணரலாம். எபி. 2ம் அதிகாரம் முழுவதும் வாசித்தால், "மரணத்தை ஜெயித்து, இயேசு மரண பயத்தினின்று விடுதலை கொடுத்திருக்கிறார்; பிசாசினால் சோதிக்கப்படுபவர்களுக்கு உதவி செய்கிறார்" என்றும், அதற்காகவே சிறியவராய் - தேவ தூதரிலும் சிறியவராய்ப் பிறந்தார் என்றும் அறியலாம். மரணம், உயிர்த்தெழுதல் என்றெல்லாம் வருவதாலே, எபி.2:9ல் உள்ள தேவதூதர் என்ற வார்த்தையை Angles - தேவ தூதர்கள் - என்றுகூட எடுத்துக் கொள்ள வாய்ப்புண்டு. ஏனெனில் தேவ தூதர்களுக்கு மரணம் என்ற உபாதை இல்லவே இல்லை. எனவே, இந்த மரணத்தை அனுபவிக்க, மரண உபாதையே இல்லாத தேவ தூதர்களிலும் சிறியவராய் இயேசு பூமிக்கு வந்தார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். **ஆனால் மனிதன் உருவாக்கப்பட்ட போதோ அவனுக்கு மரண உபாதையே கிடையாது.** நித்தியரோடு, நித்தியம் நித்தியமாய் வாழும் சிலாக்கியம் பெற்றிருந்தான். அவன் பாவம் செய்ததினாலே மரண தண்டனை அவனுக்கு வந்தது. எனவே மனுஷனை - ஆதாமை - ஆக்கும் போது, தேவ தூதர்களை விட அல்ல; தேவ தூதராம் வார்த்தையாகிய தேவனை விட சிற்றுச் சிறியவனாக்கினார் என அறிகிறோம்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வார்த்தையாகிய தேவனைவிட சிறியவனாக்கப்பட்ட நாம், அவருடைய மரணத்தினாலும் உயிர்த்தெழு தலினாலும் இழந்து போன கனமும் மகிமையும், ஆளுகையும் வல்லமையும் பெற்று குமாரனுக்கொப்பான சாயலைத் தரித்திருக்கிறோம் (ரோ.8:29); அவரோடு கூட உன்னதங்களில் உட்கார்ந்திருக்கிறோம் (எபே.2:7); அவரோடு கூட ஆளுகையும் செய்வோம் (ரோ. 5:17). ஆனாலும் சகலமும் அவனுக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லையாமே அது என்ன? (எபி.2:8). மரணத்தை - மரணப் பிசாசை - மரண அதிகாரியாகிய பிசாசை - இயேசு ஜெயித்தார். நாம் அவரின் இரகசிய வருகையிலே மரணமே உன் கூர் எங்கே? (1 கொரி. 15:55) என்று சொல்லப் போகிறோம். அப்போதுதான் சாத்தான் நம் காலின் கீழே (ரோம.16:20); சகலமும் நமக்கு கீழ்ப்படிருக்கும். அல்லேலூயா! அந்த நாள் மிக சமீபமே! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!

❖ ❖ ❖

# மாசில்லாத சுத்தமான பக்தி உன்னிடத்தில் உண்டா?

தேவபிள்ளையே! இன்றைக்கு எல்லா மதத்தாரிடத்திலும் பக்தியிருக்கிறது; பக்தி வைராக்கியம் இருக்கிறது. ஆனாலும் தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தி இருக்கிறதா? கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நம்மிடத்தில் பக்தி எப்படியிருக்கிறது? ஞாயிறு ஆராதனைக்கு தவறாது போவது, காணிக்கைப் பெட்டியில் போடாமல், தசம பாகங்களையும், காணிக்கைகளையும் ஊழியக்காரரிடமே கொடுத்து ஆசீர்வாதம் பெறுவது, வருஷம் 40 நாள் கறி, மீன் சாப்பிடாமல், நல்ல காரியங்களை செய்யாமலிருப்பது, கல்லறைக்குப் போய் செத்தவர்களுக்காய் ஜெபிப்பது, பூ பொட்டு, நகை இவைகள் இல்லாமல், வெள்ளை டிரஸ் அணிந்து கொள்வது, பண்டிகையின் போது அக்கம் பக்கத்தார், உறவினர்கள், நண்பர்களுக்கு பரிசுகளும், பண்டங்களும் கொடுப்பது; விருந்து வைப்பது, பிறந்த நாள் திருமண நாள் மட்டும் பிச்சைக்காரர்களுக்கு, இல்லாதவர்களுக்கு பணம் கொடுப்பது, பலகாரப் பொட்டலம் கொடுப்பது, சர்ச் கட்ட, ஊழியத்திற்கு, ஊழியருக்கு கார் வாங்க, சர்ச்சில் மியூசிக், ஆம்ப்ளிபயர் சிஸ்டம் வாங்க கஷ்டத்தின் மத்தியிலும் கொடுப்பது போன்றவைகள் தான் பக்தி என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது போன்ற சன்மார்க்க காரியங்களை புறமதத்தாரும் செய்கின்றனரே! அப்படியானால் மாசில்லாத சுத்தமான பக்தி என்றால் என்ன?

திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்கு தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது (யாக்.1:27) என்று வேதம் சொல்லுகின்றது. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன் (யோ.14:18) என்று சொன்ன நம் தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர் (சங்.10:14); அந்த தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்ட நாம் (ஆதி.1:26, எபே 2:10) அவரைப் போலவே இருக்க வேண்டாமா? நல்ல சமாரியன் கதையை மறந்து விட்டோமா? அந்தக் கால ஆசாரியரைப் போலவும், லேவியரைப் போலவும் நாம் இருக்கிறோமோ? நிதானித்துப் பாருங்கள். தாய் தகப்பன் இல்லாத அநாதைகள், கைவிடப்பட்டவர்கள்: ஆதரவற்றவர்கள் எல்லாருமே திக்கற்றவர்கள் என்ற லிஸ்டில் அடங்குவர். விதவையை ஆதரிப்பவர் நம் தேவன்: விதவைகளுக்கு நியாயஞ் செய்கிறவர் நம் தேவன். (சங்.146:9; உபா.10:18) இந்த தேவனின் பிள்ளைகள் அவரிலும் மேன்மையான

காரியங்கள் செய்ய வேண்டும் அல்லவா? (யோ.14:12) விசாரிப்பதற்கு பாத்திரவான் களாகிய விதவைகளும், திக்கற்றவர்கள் பட்டியலில் வருகிறார்கள். இப்படிப்பட்ட திக்கற்றவர்களை கோடிட்டுக் காட்டி, ஆசிரமம், அனாதை இல்லம் என்று வைத்துக் கொண்டு, வெளிநாட்டுப் பணத்தை நியாயமாய்ச் செலவிடாமல் மற்றவர்கள் மத்தியில் கறையாய் காணப்படும் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ ஊழியர்கள் ஏராளம் உண்டு. ஆதி அப்போஸ்தல காலத்திலேயே இந்த பணிக்காக 70 பேர் ஏற்படுத்தப்பட்டனர் (அப்.6:1-4). ஆக, மாசில்லாத சுத்தமான பக்தியில் ஒன்று திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்தில் அவர்களை விசாரிப்பது என்று அறிகிறோம். இது குறித்து இன்னும் அதிகமாய்ப் பார்ப்போம்.

தன்னை அழிக்க நினைத்த சவுலின் பேரனும், யோனத்தானின் மகனுமான மேவிபோசேத் என்பவன், இரண்டு கால்களையும் இழந்து திக்கற்றவனாக இருக்கிறான் என்று கேள்விப்பட்ட உடனேயே, அவனை அழைப்பித்து சவுலின் நிலங்களையெல்லாம் திரும்பக் கொடுத்து, அவனை தினமும் தன்னோடு பந்தியில் அப்பம் புசிக்கச் செய்து தேவ அன்பை வெளிக்காட்டின தாவீதின் செயல் தான் மாசில்லாத சுத்தமான பக்தி. அதனால்தான் அவன் கர்த்தரின் இருதயத்திற்கேற்றவனாய் இருந்தான் (அப்.13:22: 1 சாமு.13:14). இயேசு கிறிஸ்து பூமிக்கு வரும் 2ம் வருகையில், உலகத்திலுள்ள (இரட்சிப்புக்குள் வராத இஸ்ரேலரல்லாத) எல்லா மனுஷரையும் நியாயந் தீர்க்கும் போது, "பசியாயிருந்தேன்: எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாய் இருந்தேன் என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்: வஸ்திரமில்லா திருந்தேன் எனக்கு வஸ்திரம் கொடுத்தீர்கள், வியாதியாருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள்" என்று சொல்லி, 1000 வருட ஆட்சியின் ராஜ்யத்தில் வாழ வைப்பார் (மத்.25:34-16). ஆக, ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி.19:17) என்ற வாக்கியம் உண்மையிலும் உண்மையாகிறது. இதை மாசில்லாத சுத்தமான பக்தி என்று வேதம் கூறுகிறது. நியாயத் தீர்ப்புக்கு இப்படிப்பட்டதான இரக்கம் பாராட்டுகிற பக்தியே மேன்மை பாராட்டும் (யாக்.2:13-20) இவைகளை வெளித்தோற்றத்திற்காய் செய்வது வீண் (யாக்.1:26: கொலோ 2:18, அப்.26:5) யூத மார்க்கத்தார் அப்படித்தான் நடந்தார்கள் என்று வேதம் சொல்கின்றது. விசுவாசிகளின் விசுவாசக் கிரியைகளே பக்தியாகும். அல்லேலூயா. அதுவே பரலோகம் கொண்டு செல்லும். இப்படி திக்கற்றவர்களையும், விதவைகளையும் ஆதரிக்கும் தேவ பக்தியானது, முதலில் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவ சபைக்குள்ளிருந்து

ஆரம்பிக்கக வேண்டும். மத்.18:5-6 ன்படி, விசுவாசமுள்ளவர்களுக்கு - செழிப்பிலே, உலகிலே சிறியவர்களுக்கு - செய்ய வேண்டும். அப். 6லும் நம்மவர்களுக்கே செய்யப்பட்டது! மத்.25:40 ஐ தியானியுங்கள். முதலில் நம்மவர்கள் செழிப்பாய் சாட்சியாய் இருக்க வேண்டும், பின்புதான் உலகத்தார். ஆமென்.

மாசில்லாத சுத்தமான பக்திக்கு முதல் தேவை திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திவத்திலே விசாரிப்பது என்று பார்த்தோம். இரண்டாவதாக, உலகத்தால் கறைபடாதபடிக்கு காத்துக் கொள்ள வேண்டும். உலகம் என்பது மாமிசத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகியவை நிறைந்ததாகும். இந்த உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை என்று வேதம் சொல்கின்றது (1 யோ.2:15, 16, 17). தேவனிடத்தில் அன்புள்ளவன் அவரின் வசனப்படி நடக்க வேண்டும் (1 யோ. 5:3) இயேசுவுக்கு சாட்சியாய், இயேசுவைப் போல் இருக்க வேண்டும் (அப்.1:8). தேவனை அறிக்கையிட வேண்டும் (மத்.10:32, 33). உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக் கூடாது; தேவ சித்தப்படி நடக்க வேண்டும்: சரீரத்தை ஜீவபலியாய் ஒப்புக் கொடுக்க வேண்டும் (ரோ.12:1,2) கறை திரை இல்லாதிருக்க வேண்டும் (எபே.5:27) மத்.5:16,44; 2 கொரி 9:8 கொலோ 1:10; 1 தீமோ. 1:5, 12:2 தீத். 2:7, 14; யாக்.1:27, 3:13,17, 1 பேது.2;12:1 யோ.3:17) போன்ற பல வசனங்கள், மாசில்லாத சுத்தமான பக்திக்கு வழி காட்டியாய் இருக்கின்றன. இயேசு கிறிஸ்து உலகத்தாரல்லாதவராய் வாழ்ந்து காட்டியது போல நாமும் வாழ்ந்து காட்டி (யோ.17:16) தெய்வபக்தியுள்ளவர்களாய் கிரியைகளிலே காட்ட வேண்டும். அப்போதுதான் அசைவில்லாத ராஜ்யத்தைப் பெற முடியும். (எபி.12:28).

இப்படிப்பட்ட தான பக்தி வைராக்கியம், பினெகாஸ், எலியா, யெகூ, தாவீது போன்றவர்களுக்கு இருந்ததை நாமறிகிறோம் (எண்.25:11, 1 ரா. 19:10, 14:2 ராஜா 10:16; சங். 119:139). இந்த பக்தி வைராக்கியம் பக்தி விருத்தியை உருவாக்குகிறது. பக்திவிருத்தி வசனத்தால் மட்டுமே வருகிறது (அப். 20:32) தேவ அன்புக்குள் நாமிருந்தால் வசனம் நம்மில் கிரியை செய்யும் (1 யோ. 5:). வசனம் நிறைந்த பக்தி விருத்தி வளரத்தான் தேவன் 5 விதமான ஊழியங்களை சபையிலே வைத்திருக்கிறார் (எபே.4:12,13). பிதாவுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியை உருவாக்குபவை இந்த ஊழியங்களே! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன்னுடைய பக்தி எப்படியிருக்கிறது? திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறாயா! உலகத்தால் கறைபடாதபடிக்கு

உன்னை காத்துக் கொள்கிறாயா? இப்படிப்பட்ட தான மாசில்லாத சுத்தமான பக்திக்குரிய கிரியைகளை உடையவர்களைத்தான் தேவன் தமக்கென்று தெரிந்து கொள்கிறார் (சங்.4:3). அப்படிப்பட்டவர்களை அழைக்கவே இயேசு வருகிறார்! ஆயத்தமா?

❖ ❖ ❖

## 'அதோ உன் மகன்; அதோ உன் தாய்' – இயேசு ஏன் சொன்னார்?

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் போது சொன்ன ஏழு வார்த்தைகளில் இது 3வது வார்த்தை என்று நாம் நிதானிக்கிறோம். (யோ.19:26,27). பெரும்பாலான கிறிஸ்தவ சபைகளிலே இந்த கடைசி 7 வாக்கியங்களுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்து, இயேசுவின் மரண நாளை ஆசரிக்கும் போது இவைகளைப் பிரசங்கிப்பது வழக்கமாயிருக்கிறது. மரித்து மண்ணோடு மண்ணாய்ப் போகக் கூடிய நம்மைப் போன்ற மனிதர்களுக்கு வேண்டுமானால் சாகும் போது சொல்லும் வார்த்தைகள் ஜீவனுள்ள வார்த்தைகளாய், கைக்கொள்ள வேண்டிய வார்த்தைகளாய் காணப்படலாம். மோசே, யாக்கோபு, தாவீது போன்றோரின் கடைசி வார்த்தைகள் அப்படித்தான். ஆனால் நாம் ஆராதிக்கும் இயேசு கிறிஸ்துவோ சதாகாலமும் உயிரோடு இருக்கிற ஜீவனுள்ள தேவன். எனவே அவரின் கடைசி 7வார்த்தைகள் மட்டுமல்ல, அவரின் $3^1/_2$ ஆண்டு ஊழியத்தில் சொல்லப்பட்ட அத்தனை வார்த்தைகளும் ஜீவனுள்ள வார்த்தைகள். அதனால் தான், வானமும் ஒழியும் ஒழிந்துபோம்; என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை. (மத்.24:35) என்று தமது எல்லா வார்த்தைகளையுமே ஒரே முக்கியப்படுத்தி இயேசு சொல்லியிருக்கிறார்.

இயேசு மரிக்கும் போது "இதோ உன் தாய்" என்று சொல்லிவிட்டுப் போனதால், இந்த மரண வாக்குமூலத்தின்படி, "நம் எல்லாருக்கும் தாயாக மரியாள் இருக்கிறாள். எனவே மரியாளே கிறிஸ்தவர்களுக்கு தாய்" என்று போதிப்போரும் உண்டு. நமக்குத் தாயும் தந்தையுமாய் நம் தேவன் இருக்கும் போது இன்னொருவர் தாய் என்ற ஸ்தானத்தில் தேவையா? சிந்தியுங்கள்! நம் தேவன் நமக்கு போதாதா? "அண்ட சராசரத்தையும் படைத்த சர்வேசுவரனின் தாய் (லூக்.1:43). நமக்குத்தாயாக இருக்க கொடுத்து வைக்க வேண்டுமே" என்று சொல்வோரும் உண்டு. "உலகத்தைப் படைத்த ஆண்டவரையே தனக்குள் வைத்திருந்த மரியாள், பெரியவள் அல்லவா?

இதுவும் சிலருடைய கேள்வி. மரியாள் பெரியவள்தான், ஸ்திரிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் தான்; பாக்கியவதிதான்; ஆண்டவருடைய தாயார்தான் (லூக்.1:42-45). ஆனாலும் மரியாள் ஆண்டவரின் அடிமை (லூக்.1:38). இது மரியாளே சொன்னது. அப்படியிருக்க அவர் தேவனக்குச் சமமானவரோ அல்லது நமக்காய் பரிந்து பேசுபவரோ அல்லது நம் பாவங்களை மன்னிக்கிறவரோ, நம் ஜெபத்தைக் கேட்பவரோ அல்ல. இயேசுவின் நாமத்தில் நாம் ஜெபிக்கும் ஜெபத்தை கேட்பவர் பிதாவாகிய தேவன் (யோ.16:23, 26; 15:16; 14:13); நமக்காய் பரிந்து பேசுபவர் இயேசு கிறிஸ்து (யோ. 2:1); நம் பாவங்கள் மன்னிக்கப்படுவது இயேசுவின் இரத்தத்தினாலே (1 யோ.1:7); அப்படியிருக்க இயேசு ஏன் மரிக்கும் போது இந்த வார்த்தையைச் சொன்னார்?

இயேசுவின் ஊழியக்காலத்தில் ஒரு முறை மரியாளும் இயேசுவின் சகோதரர்களும் வந்திருக்கிறார்கள் என்று சொன்ன போது, "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று கேட்டாரே ஏன்? (மத். 12:48, 49). தெய்வமாம் மனுஷ குமாரனுக்கு தாயுமில்லை; தந்தையுமில்லை; அவர் ஆதியும் அந்தமும் இல்லாதவர், மெல்கிசெதேக் போன்றவர். ஆனால் மனிதனாய்ப் பிறக்கும் போது ஒரு தாய் தேவைப்பட்டது, ஏனெனில் தாயின் வழியில் பிறக்காதவர்கள் எல்லாம் மனிதர்கள் அல்லர். மனிதனாய் வருவதற்கும், வாழ்வதற்கும் மரியாள் தாயாக நின்றாள். தான் பரலோகம் போன பின்பும் கூட மரியாள் தேவனின் தாய் என்று இந்த உலகம் சொல்லும் என்பதை முன் கூட்டியே உணர்ந்து, தெய்வீக ஊழியத்தில் இருக்கும் போதே, "மரியாளல்ல என் தாய்; என் பிதாவின் சித்தப்படி செய்பவனே என் தாய்" என்று இயேசு சொன்னார். இயேசுவை சிலுவையிலறைந்த இஸ்ரேலருக்கு இந்த உண்மை புரிந்திருக்கிறது; ஆனால் தற்கால ஒரு சில சபையாருக்கோ இது இன்னும் புரியவில்லை. அவர்களின் மனக்கண் திறக்கப்பட ஜெபிப்போம். இந்த சிந்தனையிலேயே, இயேசு சிலுவையில் சொன்னதை தியானிப்போம்.

இயேசு முதலில் மரியாளைத்தான் கூப்பிட்டு யோவானைக் காட்டி "அவனே உன் மகன்" என்றார். யோவானைப் பார்த்து, "மரியாளே உன் தாய்" என்றார். இப்படி அவர் சொன்ன உடனேயே அந்நேர முதல் அந்த சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான் என்று யோ.19:27 சொல்கின்றது. $33^1/_2$ ஆண்டுகளாய் தன் பிள்ளைகளை விட்டு, இயேசுவோடு வாழ்ந்த தாய் மரியாளுக்கு, மரித்தபின் ஆதரிக்க ஒருவருமில்லையே என ஆதங்கத்தில், "தந்தையும் தாயையும் கனம் பண்ண வேண்டும்" என்ற தேவனின் சித்தம் நிறைவேறும்படியாய், சாகும் போதும் மகனின் பணியை

செவ்வனே முடித்து விட்டு மரித்தார் என்று நான் பலமுறை எழுதி இருக்கிறேன். அதுவும் உண்மையே! அதைவிட மேலான சத்தியத்தை ஆவியானவர் தருவதைப் பார்ப்போம்.

இயேசு மரித்தபின் ஆவியிலே உயிர்ப்பிக்கப்படுகிறார் (1 பேது. 3:18). தெய்வீக நிலையிலேயே, ஆவிக்குரிய உள்ளான மேனியிலேயே, புறம்பான உலக சரீர தோற்றத்திலேயே இன்றும் இருக்கிறார். அவர் எப்படி இருக்கிறார் என்பதை பரலோகம் போய் காணலாம் (1 யோ.3:1-2). அவர் 40 நாளளவும் காட்சிளித்தது அவரின் தெய்வீக மேனியிலல்ல. இந்த கண்களால் ஆவிக்குரிய மேனியை பார்க்க முடியாது என்று நாமறிவோம். தெய்வமாய் இருக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் மரியாளே தாய் என்று சொல்லி, மரியாளுக்கு அதிமதுர முக்கியத்துவம் கொடுத்து, மரியாளை தேவனுக்கு சமமாக்கி, தனது இரட்சிப்பின் செயல்களுக்கு மரியாதையில்லாமல் ஆக்கப்படும் என்று கருதித்தான், அருகே நின்ற தாயை முதலில் அழைத்து, "அம்மா... இனி நானல்ல உன் மகன்.... நான் பழைய முழுமையான தெய்வீக நிலைக்குப் போகப் போகிறேன்; மாம்சத்தில் வெளிப்பட்ட நான் தேவனாகப் போகிறேன்.. இனி மேலும் நீயல்ல என் தாய், என் வார்த்தைப்படி நடப்பவர்களே என் தாய்... இனி மேலும் நானல்ல உன் மகன்... அதோ... அந்த யோவானை உன் மகனாய் வைத்துக் கொள்.. அவனே மரணம் வரை உன்னைக் காப்பான்" என்று சொல்லிவிட்டு மரித்தார். அப்படியே தமக்கு அன்பான சீஷனை நோக்கி.. "இனி மரியாளை என் தாயென்று சொல்லாதே.... தெய்வத்திற்கு தாயுமில்லை. தந்தையுமில்லை... அவளை உன் தாயாக ஏற்றுக் கொண்டு உலகத்திற்கு உண்மையை வெளிப்படுத்து" என்று சொல்லிவிட்டு மரித்தார்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வார்த்தையாகிய தேவன் மனிதனாய் வந்தபோது $33^1/_2$ ஆண்டுகளுக்கு தான் மரியாள் அவருக்குத் தாய், அவரும் மரியாளின் மகன். இன்றோ அவர் மகாபரிசுத்த ஸ்தலத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கும் மகிமை நிறைதேவன். இந்த தேவனுக்கு தாய் ஒருவருமில்லை. அப்படி தாய் என்றே இன்றும் சொல்வோமானால், இயேசுவை இன்னும் மரிக்கும் மானிட உடலோடு இருக்கும் மனிதர் என்று சொல்வதற்கு ஒப்பாகும்; மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த தேவன் என்ற சத்தியம் இல்லாமலே போகும். இந்தக் கருகலான சத்தியம் நமக்குள்ளே இன்னும் ஆவியானவரால் அதிகமாய் அசை போடட்டும். ஆமென்.

❖ ❖ ❖

# பரீட்சையும், சோதனையும்

இயேசுவின் வருகை சமீபமாயிருக்கும் இந்தக் காலத்திலும் கூட, பரீட்சைக்கும் சோதனைக்கும் வேறுபாடு தெரியாத சபைகளும் உள்ளன. ஆங்கிலத்தில் பரீட்சைக்கு Test என்றும் சோதனைக்கு Tempt என்றும் உள்ளது. வேதத்தில் இந்த இரண்டு வார்த்தைகளையும் ஒரு சில இடங்களில் மாறி மொழி பெயர்க்கப்பட்டிருப்பதால் இவைகளின் முழு அர்த்தமும் பலருக்குப் புரியவில்லை. ஆவியானவர்தாமே இதை விளக்குவாராக!

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி" என்று புறஜாதியான் பாடுகிறான். நம் எல்லாருக்கும் "சாமி" என்றாலே அது ஒரே மெய் தெய்வத்தை அல்ல; புறஜாதியாரின் கடவுளை அதாவது பிசாசை குறிப்பது என்று தெரியும் (நியா.17:5. யோனா.1:5). ஆக, சாமி என்றழைக்கப்படும் பிசாசு தான் சோதனையைத் தருகிறான் என்று அவர்களுக்குத் தெரிகிறது. அவர்களைப் போலவே கிறிஸ்தவனும் நம் தேவன் சோதனையைத் தருகிறார் என்றும் சோதனையை அனுமதிக்கிறார் என்றும் போதிக்கிறான்; விசுவாசிக்கிறான். இவனுக்கு யாக்.1:13 புரியவில்லை; புரிந்தாலும் அதை விசுவாசித்து அறிக்கையிடுவதில்லை. இதனால் தேவ நாமம் தூஷிக்கப்பகிறது என்றும் உணருவதில்லை. "சோதனை" என்பது பொல்லாங்கானது என்றும், இந்தப் பொல்லாங்கன், பிசாசு என்றும் அவனே சோதனைக்காரன் என்றும் சிந்திப்பதில்லை (மத்.13:19; எபே. 65:16; மத். 4:3; 1 தெச. 3:5). அவனுக்கு உலகத்தோற்ற முதலே திருடவும், கொல்லவும், அழிக்கவும் அதிகாரம் தந்தாயிற்று என்றும் புரியவில்லை (யோ.10:10). அவர்களின் மனக்கண்கள் பிரகாசமாக ஜெயிப்போம் (எபே.1:19). பரீட்சை என்பது பொல்லாங்கானது அல்ல. இது வெற்றிக்காய், நன்மைக்காய் நடப்பது. இது விசுவாசத்திற்கடுத்தது. இதனாலே பொறுமை வரும்; நம்பிக்கை வரும், மேன்மை வரும் (See உபா. 8:2; 13:3; சங்.17:3; யாக்.1:2,3 All in English) வெற்றியையும், நன்மையையும், மேன்மையையும் கொடுப்பவர் தேவன் ஒருவரே! அவர் மூலமாகவே பரீட்சை வரும். நன்மையே அவர் செய்கையாயிருக்கிறது (எபே.2:10; அப்.10:38).

தேவன் ஆபிரகாமைச் சோதிக்கவில்லையா? யோபுவை சோதிக்கவில்லையா? இது கேள்வி. ஆதி.22:1-2 ஐ வாசியுங்கள். Kings James Versionல் "God did tempt Abraham" என்றும், NIVல் "God tested Abraham" என்றும் The New Scofield Bibleல் "God did test Abraham" என்றும் உள்ளது. மூல எபிரேய பாஷையில் இதற்கான வார்த்தை Nacah என்பதாகும். இதன் பொருள் totest, prove என்பதாகும்.

பரீட்சையில் பொல்லாங்கான காரியம் ஒன்றும் வெளிப்படாது. ஆபிரகாம், ஈசாக்கை ஏகபுத்திரன், அதுவும் சரீரம் செத்துப் போனபின் பிறந்தவன் என்றும் பாராமல் - தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தேவனுக்கு பயந்தவனாக (Reverential trust in God & His Word; not fear of God) இருக்கிறானா என்பதை பரீட்சை பார்த்து, உலகுக்கு அவன் விசுவாசத்தை வெளிக்காட்டவே (proclaim) தேவன் இப்படிச் செய்தார். (ஆதி.22:12). இப்படி தேவன் பரீட்சை பார்த்ததால் ஆபிரகாமுக்கு பொல்லாத காரியங்கள் நடக்க வில்லை, மாறாக விசுவாச வார்த்தைகள் அவன் வாயிலிருந்து வெளிப்பட்டன (ஆதி.22:5,8). அல்லேலூயா! யோபு விஷயத்தில் தேவன் சோதனையை கொடுக்கவுமில்லை, அனுமதிக்கவுமில்லை என்றும், உலகத்தோற்ற முதலே சாத்தானுக்கு அனுமதி தந்தாயிற்று என்றும் பழைய கடைசிகால விடுதலை முழக்கங்களிலும், ஆராய்ச்சிப் புத்தகங்களிலும் விளக்கி எழுதியிருக்கிறேன். யோபுவை சோதித்தது சாத்தானென்று யோபு.2:7 ஐ வாசித்தால் புரியும். யோபு, பிசாசின் உலகில் - பிசாசின் கையில் இருந்தாலும், ஒவ்வொரு முறையும் அவனைப் பாதுகாக்கும் - இரட்சிக்கும் பணியையே தேவன் செய்தார்! (யோபு. 1;12; 2:6). அந்த தேவன் நமக்கும் அப்படியே தான் பாதுகாப்பளிப்பார் என்று விசுவாசித்தால் நமக்கும் நன்மை கிடைக்கும். இல்லையேல், நம் அறிக்கைப்படியே தான் நடக்கும்.

இயேசு கிறிஸ்து மனிதனாய் இருந்தபோது பரீட்சை பார்த்த ஒரு சிலவற்றைப் பார்ப்போம். கலிலேயாக் கடற்கரையிலே இருந்த திரளான ஜனங்களுக்கு சாப்பிட அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று பிலிப்புவிடம் கேட்டு அவனுடைய விசுவாசத்தை பரீட்சை பார்த்தார் (யோ.6:5,6). அவர் நினைத்தால் ஒன்றுமில்லாமையிலிருந்தே அப்பங்களை உருவாக்கிக் கொடுக்க முடியும். இந்த விசுவாசம் பிலிப்புக்கு உண்டா என்ற பரீட்சை இது. இதிலே பிலிப்பு ஜெயிக்கவில்லை. "ஒரு பையனிடம் உள்ள 5 அப்பம் 2 மீன் இங்கே உள்ள எத்தனை பேருக்கு வரும்" என்று அந்திரேயாவும் சொல்லி விசுவாசத்தில் ஜெயிக்கவில்லை. ஆனால் இவர்களின் வார்த்தை களிலிருந்தே, இவர்கள் சொன்ன அந்த பையனிடம் இருந்தவைகளிலிருந்து அற்புதம் செய்து அவர்களின் விசுவாசத்தை வளர்த்தார். ஒருமுறை லாசருவின் கல்லறைக்கு முன் நின்று "மூடப்பட்ட கல்லை எடுத்துப் போடுங்கள்" என்றார். மார்த்தாளோ "நாறும்" என்றாள். அவரோ, "விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்றார். அவள் அந்த பரீட்சையிலே ஜெயித்தாள். லாசரு உயிரடைந்தான். கல்லைப் புரட்டாமலே லாசருவை வெளியே கொண்டுவர அவரால் முடியும். ஆனாலும் பரீட்சை பார்க்கிறார். ஒரு நாள் பிறவிக் குருடனின் கண்களில் தன் உமிழ்

நீரினால் உண்டாக்கப்பட்ட சேற்றைப் பூசி, சீலோவாம் குளத்தில் கழுவு என்றார் இயேசு. தொட்டால் சுகம், வார்த்தையால் சுகம், இப்படி ஏன் கழுவச் சொல்லி சுகம்? இதுதான் தேவனின் விசுவாசப் பரீட்சை. இதிலே குருடன் ஜெயித்தான்; பார்வையடைந்தான். தேவனின் பரீட்சை ஒருக்காலும் பொல்லாங்கனாது அல்ல. அல்லேலூயா!

சிட்சையும் (chastening) பரீட்சையும் வேதத்தில் கிட்டத்தட்ட ஒரே பொருளில் தான் வரும். சிட்சையை ஆவிக்குரிய அப்பா மனிதனின் இருதயமாகிய ஆவியில் தான் அளிப்பார் (நீதி.17:13; சங்.66:10) இந்த சிட்சையை புடமிடுதல் என்றும் சொல்லலாம். இது வசனத்தால் நடக்கிறது (சங்.94:13; 105:19; 50:17). இதுவும் விசுவாசம் வளர்ந்து வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கே! (See அப்.2:37) (இது குறித்து இந்த நூலிலும், "வியாதியா மரணமா" என்ற ஆசிரியரின் நூலிலும் வாசியுங்கள்). பிசாசின் சோதனையில் உபத்திரவம் வரும், தீமைகள் நடக்கும்; துன்பங்கள் பெருகும். முடிவு அகால மரணமாகும். இந்த பிசாசின் சோதனைக்கு எதிர்த்து நின்றால் - சர்வாயுதவர்க்கங்களோடு நின்றால் - பொறுமையோடு விசுவாசத்தில் உறுதியாய் நின்றால், நிச்சயம் அதை ஜெயிக்க முடியும். நாம் ஜெயங் கொள்ள தேவன் உதவி செய்வார். அல்லேலூயா! சங்கீதக்காரன் சொல்வது போல இந்த பிசாசின் உபத்திரவங்களால் தேவனின் பிரமாணங்களை நிதானித்து விசுவாசத்தில் உறுதியாயிருந்து வெற்றி வாழ்க்கையைக் காண முடியும். (சங்.119:67, 71).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நீ தேவனின் பரீட்சைக்காக காத்திரு! நீ மேலும் மகிமைப்படுவாய்! பிசாசின் சோதனை வந்தாலும் சோர்ந்து போகாமல் ஜெயம் பெறுவாய்! ஆமென்!

❖ ❖ ❖

## புத்தாண்டிலாவது புரிந்து கொள்வீர்களா?

தேவபிள்ளையே! கடந்த செய்தியின் தொடர்ச்சியாய் இது இருக்குமென்று கர்த்தருக்குள் நம்புகிறேன். புத்தாண்டு பிறந்தும், கிறிஸ்துவுக்குப்பின் கிட்டத்தட்ட 2000க்கு மேலாகியும், இன்னும் சோதனையைப் பற்றிய வேத அறிவு பலருக்கு இல்லை. இப்படிப் பட்டவர்களின் மனக்கண்கள் பிரகாசமடைய ஜெபிப்போம். (எபே.1:19) ஒரு சிலருடைய மனக்கண்களே இன்னும் திறக்கப்படவில்லை என்று நீங்கள் சொல்வது என் காதில் விழுகிறது (2 கொரி 4:4). இனிவரும் ஆண்டிலாவது இப்படி கருகலாக்கப்பட்ட சத்தியம் அவர்களுக்குள் துளிர் விடட்டும்! ஆமென்.

“தேவன் மனிதனை சோதிக்கிறார் என்பது கள்ள உபதேசம் என்று (சென்னை) சகோ. சேவியர் அவர்கள் தன் பத்திரிகையில் அடிக்கடி எழுதி வருகிறார். அப்படிச் சொல்லும் அவரின் உபதேசம் தான் (அவர் பாஷையில் கூற வேண்டுமானால்) கள்ள உபதேசம் என்று கூறலாம். சேவியர், கர்த்தர் மனிதனை சோதிக்கமாட்டார் என்கிறார். ஆனால் வேதம், கர்த்தர் மனிதனை சோதிக்கிறார் என்று கூறுகிறது. இதில் எது சரி? எது உண்மை! என்று வேதத்தை நீங்களே வாசித்துப் பாருங்கள்” என்று டிசம்பர் -2005 ஜாமக்காரனில் சேலம் Dr. புஷ்பராஜ் எழுதியிருக்கிறார். இதைப் பல நமது வாசகர்கள் எனக்கு தெரிவித்தனர். அதே Dr. புஷ்பராஜ், மேற்சொன்ன பாராவுக்கு (பத்திக்கு) மேல் பத்தியில் எழுதி உள்ளதை வாசியுங்கள். “மனிதனை தேவன் சோதிப்பதை விரும்புவதில்லை. அதுவும் தீமையினால் சோதிப்பதை விரும்புவதில்லை. அதுவும் தீமையினால் சோதிப்பதை அறவே விரும்புவதில்லை என்று வேதம் கூறுகிறது. ஆனால் பிசாசை அவமானப்படுத்தவும், விசுவாசத்தில் உறுதிப்படவுமே, தன்னை உண்மையாக நேசிக்கும் பிள்ளைகளை கர்த்தரே சோதிக்க அனுமதிப்பார்” என்று எழுதி உள்ளார். முதல் பாராவில் சோதிக்க மாட்டார் என்று எழுதிவிட்டார். அடுத்த பாராவில், சோதிக்கிறார் என்று எழுதுகிறாரே இதிலே எது சரி? எது தவறு? தேவன் தீமையினால் சோதிக்கவே மாட்டார் என்று முதல் பாராவில் சொல்லிவிட்டு, அடுத்த பாராவில் சோதிக்கிறார் என்று முன்னுக்குப்பின் முரணாய் எழுதவோ, சிந்திக்கவோ, ஆவியானவர் என்னை அபிஷேகிக்கவில்லை. அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன், என்றும் சொல்வேன். நம் தேவன் பொல்லாங்கினால் சோதிப்பதே இல்லை. அல்லேலூயா! அதைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாய் நான் சொல்வது - கர்த்தர் சோதிப்பதும் இல்லை, சோதிக்க அவ்வப்போது அனுமதிப்பதுமில்லை. உலக ஆரம்பத்திலிருந்தே பிசாசானவன், திருடவும், கொல்லவும், அழிக்கவும் அதிகாரம் - அனுமதி பெற்று வந்திருக்கும் போது (யோ. 10:10) அவ்வப் போது தேவனிடம் அவன் அனுமதி கேட்கவும் அவசியமில்லை, தேவனும் அவ்வப்போது சோதிக்க அனுமதி கொடுக்கவும் தேவையில்லை. இந்த உண்மை தெரியாத வரைக்கும் கருகலான சத்தியம் துளிர்விடாது, தேவனின் நாமம் தூஷிக்கப்படும், பிசாசு செய்யும் கிரியையை தேவனின் கிரியை என்று சொல்லும் நிலை தொடரும்.

Dr. புஷ்பராஜ் மேற்கோள் காட்டிய வசனங்களுக்கெல்லாம் ஏற்கனவே விளக்கம் ஏராளம் அளித்திருக்கிறேன். **ஆனாலும், கண்கள் திறக்கப்பட - திறக்கப்பட்ட கண்கள் பிரகாசமடைய, மறுபடியும் எழுத வாஞ்சிக்கிறேன்.**

(1) ஆதி 22:1ன் படி ஆபிரகாமை கர்த்தர் சோதித்தார் என்கின்றனர். Dr. புஷ்பராஜ், தேவன் தீமையினால் - பொல்லாங்கினால் - சோதிக்க மாட்டார் என்று எழுதியதை மேலே காட்டினேன். யாக்.1:13 இன்னும் பலருக்கு விளங்கவில்லையே! சோதனைக்காரன் பிசாசு, பொல்லாங்கன் பிசாசு (மத். 4:3; 1 யோ.3:12) அப்படியிருக்க தேவன் எப்படி பிசாசின் வேலையைச் செய்வார்? யாக்.1:17; எபே. 2:10, அப்.10:38 போன்ற வசனங்களை பலர் தியானிப்பதே இல்லையா? "என்னை ஆட்கொண்ட இயேசு அவர் யாரென்று நானறிவேன். உண்மையுள்ளவரே; என்றும் நன்மைகள் செய்பவரே" என்ற பாடலை எந்த சிந்தனையோடு பாடுகிறார்கள்? அன்றைக்கு ஈசாக்கை பலியிடச் சொன்னது தேவன் தான். ஆபிரகாம் சோதிக்கப்பட்டான் என்று எபி.11:17 சொல்கிறதே அப்படியானால் பிசாசா ஆபிரகாமை சோதித்தான்? இல்லையே! அப்படியானால் இங்கே போடப்பட்டசோதனை என்ற தமிழ் வார்த்தை "Test" அதாவது பரீட்சை என்ற அர்த்தத்தில் வேதத்தில் உள்ளது என அறிகிறோம். மூலபாஷையில் NAC AH என்று உள்ளது. அதன் பொருள் to test, to prove என்பதாகும். God proclaimed the faith of Abraham. தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை பரீட்சை பார்த்து, உறுதிப்படுத்தி, பிரகடனப்படுத்தினாரே ஒழிய பொல்லாங்கினால் சோதிக்கவில்லை. ஆமென்.
(2) நீதி.3:12, எபி.12:5 ன்படி தேவன், அன்பு கூருகிறவர்களை சிட்சிக்கிறார் என்கின்றனர். இது 100க்கு 100 உண்மையே! இந்த சிட்சை வேசிப் பிள்ளைகளுக்கு கிடையாது (எபி.12:8). இவர்கள் சொல்லுகிறபடி சிட்சை என்பது, வியாதி, அகாலமரணம், தோல்வி, ஏழ்மை என்றால் இது இரட்சிக்கப்படாத வேசிப்பிள்ளைகளுக்கு வரக்கூடாது அல்லவா? வியாதி, வறுமை, எல்லாமே பிசாசின் கிரியைகள் என்பதால்தான், இயேசு அவைகளை சிலுவையில் ஒழித்தார். (1 யோ.3:8; மத்.8:17; 2 கொரி.8:9). அவர் ஒழித்ததையே மறுபடியும் கொடுப்பாரா? சரீரத் தகப்பன்மார் சரீரத்தில் சிட்சிக்கிறார்கள். ஆவியின் தகப்பன் (எபி.12:9) ஆவியாகிய இருதயத்தில் சிட்சிப்பார். பெந்தகொஸ்தே நாளிலே இருதயத்திலே குத்தப்பட்டது இந்த சிட்சைதானே! (அப்.2:37) ஆவியின் பிதா, வார்த்தையினாலே நமது ஆவியிலே சிட்சித்து நம்மை நல்வழிப்படுததுகிறார். வசனமில்லாத வாழ்வு விசனமானவாழ்வு (யோ.15:3, சங். 50:17, 105:19; 94:13 யோ. 7:17). போதக சிட்சையே ஜீவ வழி (நீதி.6:23) கர்த்தர் ஆவியாகிய இருதயத்தை வசனத்தால் தான் சிட்சிக்கிறார் (நிதி.17:3, சங். 66:10)

(3) யோபு. 5:17,18, யோபுவின் நண்பன் தோமானியனாகிய எலிப்பாஸ் சொன்னவை. இவன் தேவனைக் குறித்து நிதானமாய் பேசவில்லை என்று தேவனே கடிந்து கொள்ளும்போது (யோபு.42:7) தேவ

சித்தத்திற்கு மாறான அவனது வார்த்தை களை நம்புவது அறியாமை அல்லவா! தேவ சித்தம் புரியாதவரைக்கும் கருகலாக்கப்பட்ட சத்தியம் மலராது. (4) சங். 71:20ஐ மேற்போக்காய் படித்துவிட்டு,. இக்கட்டுகளையும், ஆபத்துகளையும் தேவன் தருகிறார் என்று சொல்பவர்கள் 24 வது வசனத்தை தியானியுங்கள். தாவீதுக்கு பொல்லாப்பு - தீமை - செய்பவர்கள் யார்? பிசாசின் ஆவி உள்ளவர்கள் அல்லவா! அவர்களை தேவன் தூண்டி விடுகிறாரா? அவர்களை தூண்டி விடுபவன் பிசாசு தானே! இப்படி பிசாசின் மூலம் வரும் இக்கட்டுகளையும், ஆபத்துகளையும் அவன் கண்டான். அதற்கும் தேவன் தான் ஜீவன் தந்து காணவைத்தார். திரும்பவும், உயிர்ப்பிக்க வைத்து மீட்கிறவரும் அவரே. அவர் தீமையைத் தருவதில்லை. ஆமென். (5) ஊமையனையும், செவிடனையும், குருடனையும்,. அவரே உண்டாக்கி விட்டு, பிறகு அவரை நோக்கி வந்தால் சுகம் தருகிறார் என்றால், அவர் அன்புள்ள ஆண்டவரே அல்ல; ஆதி 1ம் அதிகாரம் வாசித்தால், தேவன் படைத்ததெல்லாம் நல்லதாக இருந்தது என அறிகிறோம். படைப்பின் இரகசியம் புரியாத வரைக்கும் இப்படித்தான் தேவன் மேல் பழிபோடும் கூட்டம் தொடரும். பாவத்தினாலும் சாபத்தினாலும், பிசாசினாலும் இப்படிப்பட்ட பொல்லாத பிறப்புகள் உருவாகின்றன என்று அறியாத வரைக்கும் கருகலான சத்தியம் அவர்களுக்குள் மலராது. யாத்.4:11 க்கு ஏற்கெனவே பலமுறை விளக்கம் கொடுத்து எழுதியிருக்கிறேன். விவரம் தெரியாதவர்கள் என்னை, உங்களிடம் அழையுங்கள். விளக்குகிறேன், அல்லது நீங்கள் என் மூலமாய் நடக்கும் கூட்டங்களுக்கு என்னிடம் வாருங்கள். நான் விளக்குகிறேன். ஞாயிறு, மற்ற கூட்ட நாட்கள் போக, மற்ற நாட்களில் ஆசிரியரை காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை சந்திக்கலாம் (போனில்).

(6) லூக். 22:31 ஐ எடுத்துக் கொண்டு, பேதுருவை சோதிக்க சாத்தான் தேவனிடம் உத்திரவு கேட்டான் என்று உபதேசிக்கிறார்கள். இப்படி இவர்கள் சொல்வதிலிருந்தே, தேவன் சோதிப்பவரல்ல, சாத்தானே சோதிக்கிறவன் என்று தெரிகிறது. மேலும் சாத்தான் உத்தரவு கேட்டான் என்கிறார்களே, தேவன் உத்திரவு கொடுத்ததாய் மேற்போக்குக்காகவாவது வசனம் இருக்கிறதா? இல்லையே! சொந்தப் பிள்ளைக்கு அடித்து உதைத்து, இரத்தம் சிந்த வைத்து, சித்திரவதை செய்ய எந்த தகப்பனாவது விரும்புவானா? ரௌடிக்கு உத்திரவு கொடுப்பானா? உலக தகப்பன்மாரே அப்படிச் செய்யாத போது, ஆவியின் தகப்பன், சோதிக்க பிசாசுக்கு அனுமதி கொடுப்பாரா? மாட்டாரே! அப்படியானால் லூக். 22:31 சொல்வது என்ன? ஆங்கிலத்தில் வாசியுங்கள்:- "Satan hath desired to have you, that he may sift you as wheat, கோதுமை மணியைப் புடைப்பதைப் போல உன்னைப் புடைக்க

பிசாசு ஆசை கொண்டிருக்கிறான், விரும்பிக் கொண்டிருக்கிறான்." "அந்த பிசாசின் வாஞ்சை நிறைவேறாதபடிக்கு, பேதுருவுக்கு வல்லமையும், விசுவாசமும் பெருகும்படிக்காய் ஜெபிக்கிறேன்" என்கிறார் இயேசு. இப்படிப்பட்ட, பாதுகாக்கிற இரட்சகரை, காட்டிக் கொடுக்கிற யூதாசுக்கும் கீழான நிலைக்கு தள்ளுவது அறியாமையே!

"நான் உங்களுக்கு சொல்கிறேன் கர்த்தர் யாரையும் சோதிக்க விருப்பமில்லாதவர் தான்" இப்படி நான் சொல்லவில்லை. Dr. புஷ்பராஜ் பக்கம் 8ல் சொல்வது, தொடர்ந்து சொல்வது தான் தேவ சித்தத்திற்கு வசனத்திற்கு விரோதமாயிருக்கிறது. அதாவது, "ஆனால், சில காரணங்களுக்காக விசுவாசிகளை சோதிக்க வேண்டியது அவசியமாகிறது" என்று அவர் சொல்வதே! பொல்லாங்கினால் சோதிக்க விருப்பமில்லாத தேவன், தன் விருப்பதிற்கு மாறாய் செய்வாரா அதுவும் தீமை வரச் செய்வாரா? அவர் எண்ணத்தில் உறுதியில்லாதவரா? சிந்தியுங்கள். 1 பேது. 1:6, 7 ஐ வைத்துக் கொண்டு விசுவாசி சோதிக்கப்பட வேண்டியது அவசியம் என்கிறார் Dr. புஷ்பராஜ். யாரால் சோதிக்கப்படுகிறான் என்பதுதான் முக்கியம். கிறிஸ்து இயேசு வைத்து விட்டுப் போன அடிச்சுவடு, மாதிரி - இந்தச் சோதனையே, இந்த துக்கமே, கஷ்டமே. இது பிசாசினால் கொடுக்கப்படுவது, நாம் இரத்த சாட்சியாய் இயேசுவை போல் மரிக்க வேண்டும் என்று தேவன் முன்கூட்டியே தீர்மானித்திருந்தால் மாத்திரமே இவைகளிலிருந்து விடுவிக்க மாட்டார் தேவன். முடிவு மரணமே! மற்றப்படி அவர் விடுவிக்கிறார் என்றால் அது நிச்சயமாய் பிசாசு தரும் துன்பமே ஒழிய வேறொன்று மில்லை. ஆமென். வசன விசுவாசமுள்ளவன் - தேவ சித்தம் அறிந்தவன் - எவனும் விடுதலையாவான். இயேசு விடுவிக்கிறவர். அவர் அனுமதிக்கிறவரல்ல.

பூர்வகாலங்களில் பங்கு பங்காய், வகைவகையாய் தீர்க்கதரிசிகள் மூலம் திருவுளம் பற்றியதால், பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு, தேவசித்தம் முழுமையாய் 100க்கு 100 விளங்கவில்லை. இதனால் பல இடங்களில் தங்களுக்கு அறிந்தபடி சில பல காரியங்களை எழுதியிருக் கிறார்கள். ஆனால் இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாயும், தேற்றரவாளனின் தூண்டுதலோடு அப்போஸ்தலர்கள் மூலமாயும் (மத்.28:20; ரோ.6:17; யூதா.17; 2 தீமோ. 3:16,17) முழுமையாய் வெளிப்படுத்தியதை உணரும்போது, நம் தேவனின் சித்தம் நிச்சயம் நமக்குப் புரியும். தேவ சித்தத்தைப் புரிந்து கொள்ள ஒப்புக் கொடுங்கள்! உன்னை ஆட்கொண்ட தேவன், உண்மையுள்ளவர் நன்மை செய்பவர். அவர் செய்கையே நன்மை. அவர் தீமையினால் - பொல்லாங்கினால் சோதிக்கவும் மாட்டார். (ஏனெனில் அது பிசாசின் வேலை) சோதிக்க பிசாசுக்கு அவ்வப்போது

அனுமதியும் தரமாட்டார். சோதனைக்குட்பட பிரவேசிக்கப் பண்ணாமல் தீமையினின்று இரட்சிப்பார் (மத்.6:13). அல்லேலூயா! **இனிவரும் ஆண்டிலாவாது புரிந்து கொள்வீர்களா?** வெற்றி வாழ்க்கை வாழ்வீர்களா? பழையவைகள் ஒழியட்டும்! பாரம்பரிய உபதேசங்கள் அழியட்டும்! கள்ள உபதேசங்கள் மறையட்டும்! கர்த்தரின் உபதேசம் தெரியட்டும்! கருகலான சத்தியம் மலரட்டும்! (ஆசிரியரின் ஆராய்ச்சிப் புத்தகங்களையும், விசுவாச முழக்கம் மாத இதழ்களையும் தயவு செய்து தவறாது வாசியுங்கள். எல்லாவற்றுக்கும் தேவன் பதில் தருவார். நான் சொல்வது ஜஸ்டின் பிரபாகரனின் உபதேசமல்ல; கர்த்தரின் உபதேசமே! அல்லேலூயா!

❖ ❖ ❖

## தேவனுக்கு ரூபம் உண்டா?

வேதத்திலே தேவனுக்கு, முகம், கரம், பின்பக்கம், பாதங்கள், கண்கள், உள்ளங்கை, விரல்கள், முதுகு, வாய், செவி, இடுப்பு எல்லாம் இருப்பதாக வசனங்கள் ஏராளம் உள்ளன. (யாத்.31:18; 33:20-23; ஏசா.66:1;49; 16; 59:1 2 நாளா 16:9; ஏரே.18:17; சங். 93:1) அதே வேதம், தேவன் ஆவியாயிருக்கிறாரென்றும்; அவரை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை என்றும், காணக்கூடாதவர், கண்டிராதவர் என்றும் கூறுகிறது (யோ.4:24; 1:18; உபா.4:12; 1 தீமோ.6:16). இந்த வசனங்களையெல்லாம் படிக்கும்போது வேதம் முன்னுக்குப் பின்முரணாய்ச் சொல்வது போல தோன்றும். ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை தெளிவாக்குவாராக!

“ஆவியான தேவனுக்கு ரூபமொன்றுமில்லையே; ரூபமில்லை ஆதலால் சொரூபம் ஒன்றுமில்லையே” என்று பாடுகிற நாம், தேவனுக்கு ரூபம் இல்லையென்று யூகிக்க வாய்ப்புண்டு அல்லவா! ஆவியானவர் புறாவின் ரூபம் கொண்டு, யோர்தான் நதிக்கரையில் இயேசுவின் மேல் இறங்கினார் என்பதால் ஆவியான தேவனுக்கு ரூபம் எதுவும் இல்லையென்று சொல்லலாம் அல்லது ஒரு ரூபத்திலிருந்தவர், புறா ரூபம் கொண்டாரென்றும் சொல்லலாம். பிலி.2:4,6 வசனங்களை வாசித்தால், இயேசுவானவர் தேவனுடைய ரூபத்தை விட்டு, அடிமையின் ரூபமான மனுஷரூபம் எடுத்தார் என்று அறியலாம். அப்படியானால் தேவனுக்கு ரூபம் உண்டென்றும் அது மனித ரூபம் அல்ல என்றும் சொல்லலாமல்லவா! ஆதி.1:26ன் படி தேவன் தமது ரூபத்தின்படி மனுஷனை உண்டாக்கியிருக்க, தேவனின் ரூபம் மனித ரூபம் அல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்?

தேவனின் "படைப்பின் இரகசியம்" புரியாத வரைக்கும் இதற்கு பதில் புரியாது (இது குறித்து தேவனுக்கு ரூபம் உண்டா? என்ற செய்தியை "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்" என்ற ஆசிரியரின் ஆராய்ச்சிப் புத்தகத்திலும் வாசித்தறியலாம்). தேவனின் ரூபம் மனிதரூபம் அல்ல என்றால் அவருக்கு கண், காது, செவி இருப்பதாக எப்படி வசனம் கூறுகிறது? இது கேள்வி.

தேவன் மனிதனை தமது ரூபத்தின் படியும், சாயலின்படியும் படைத்தார். ரூபம் என்றால் உருவம்; சாயல் என்றால் குணாதிசயம். ஆதி 1:26ல் "மனுஷனை உண்டாக்கு வோமாக" என்று ஒருமையில் சொல்லி விட்டு, தொடர்ந்து "அவர்கள்" என்று பன்மையில் சொல்வதால் மனுஷன் என்பது இங்கே ஆணையும் பெண்ணையும் குறிக்கிறது என்று அறியலாம். ஆங்கிலத்தில் "Man" என்றும் "Woman" என்றும் உள்ளதைக் கவனியுங்கள். Woman என்றால் மனிதனின் அடிவயிறு (Womb) என்று பொருள். ஆக Man என்று சொன்னாலே அவனுக்குள் Woman உண்டு என அறிகிறோம். இன்னும் கொஞ்சம் அதிகமாய் ஆதி.1:27ஐ வாசித்தால், தேவன் ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் என்று அறிகிறோம். அப்படியானால் ஆணின் ரூபமும், பெண்ணின் ரூபமும் தேவனின் ரூபம் போல படைக்கப்பட்டது என்று தானே அர்த்தம். நாம் நடைமுறையில் பார்க்கும் போது, வெளிப்புறமாய்த் தோன்றும் மாம்ச ஆணின் உருவமும் பெண்ணின் உருவமும் வேறு வேறு அல்லவா! இந்த வெளிப்புற உருவம் தான் தேவனின் ரூபம் என்றால் இந்துக்கள் சொல்வது போல, தேவன் பாதி ஆண் ரூபமாகவும், பாதி பெண் ரூபமாகவும் "அர்த்தநாரி" என்று இருக்க வேண்டும். மேலும் மனுஷனுக்கு முன்புறம் கண்கள் உள்ளன, இதனால் பின்புறம் உள்ளதை பார்க்க அவனால் முடியாது. இப்படியே தேவனுக்கு இருந்தால் அவர் ஒரே நேரத்தில் அகில உலகத்தையும் ஒரே சமயத்தில் எப்படிப் பார்க்க முடியும்? இரண்டு கைகள் மனிதனுக்கு இருப்பது போல் அவருக்கு இருந்தால், உலகிலுள்ள அத்தனை பேரையும் எப்படி கரம் பிடித்து நடத்த முடியும்? சிந்தியுங்கள். இதை மனதில் வைத்தே, நான்குமுகன், ஆறுமுகம், முக்கண்ணன் என்று தேவனுக்கு பெயர்கள் வைத்து சித்தரிக்கின்றனர். அதனாலே ஆண் தெய்வம் என்றும் பெண் தெய்வம் என்றும் சித்தரிக்கின்றனர். நம் தேவன் ஒரே தேவன் என்றும், அவரும் தேவ தூதர்களைப்போல ஆண்பாலோ பெண்பாலோ இல்லாதவரென்றும் அறிகிறோம். எனவே நம் தேவனுக்கு ஆணின் ரூபமோ, பெண்ணின் ரூபமோ இல்லையென விளங்குகிறது.

அப்படியானால் தமது ரூபத்தின்படி படைத்தார் என்பதன் பொருள் என்ன? இதை அறியும் முன்னே, ஆதி.2:7ஐ உணர வேண்டும். ஆதி.1:26ல்

ஒரு மனிதனையும் 2:7ல் ஒரு மனிதனையும் இருமனிதனையும் தேவன் படைத்தாரா? மண்ணினால் ஆணைப் படைத்து ஜீவாத்மாவாக்கிய தேவன், ஆணிலிருந்து பெண்ணைப் படைத்திருக்கிறார். (ஆதி.2:21, 22) அப்படியானால் தமது ரூபத்தின்படியே, ஆணாகவும், பெண்ணாகவும் அதே ஒரே ரூபத்திலேயே சிருஷ்டிக்கப்பட்ட அந்த மனிதன் யார்? 2 கொரி. 4:16ன் படி உள்ளான மனுஷன், புறம்பான மனுஷன் என்று இரண்டு மனுஷன் உண்டு. உள்ளானமனுஷனைத்தான் ஒன்றுமில்லாமையிலிருந்து தன் ரூபப்படியே ஆணாகவும் பெண்ணாகவும் சிருஷ்டித்து, நாம் காண்கிற கண், காது, மூக்கு என்று உள்ள புறம்பான சரீரமாகிய மனுஷனை மண்ணினால் உருவாக்கி, இரண்டையும் இணைத்து தேவன் இயங்க வைத்திருக்கிறார். மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்று உண்டு (1 தெச.5:23) ஆத்மா ஆவியோடு இணைந்துள்ளது (எபி.4;12) ஆவி ஆத்மாவையும், ஆத்மா சரீரத்தையும் நடத்த வேண்டும் என்பது தேவசித்தம் (சங்.103) புறம்பான மனுஷன் சரீரம் என்றால், உள்ளான மனுஷன் ஆத்மாவோடு இணைந்துள்ள ஆவியல்லவா? இந்த ஆவியிலே தான் தேவனின் ரூபம், சாயல் உண்டு. இந்த ரூபம், ஆவியிலே ஆணென்றும் பெண்ணென்றும் வித்தியாசமின்றி தேவ ரூபமாயிருக்கும். மனிதனுடைய ஆவியை. ஆவியின் ரூபத்தை - ஒருவரும் காணவில்லை; உணர முடிகிறது. அப்படியே தேவனை - தேவனின் ரூபத்தை - ஒருவரும் காண முடியாது. இதைத்தான் "தேவன் ஆவியாயிருக்கிறார்" என்று வேதம் சொல்கின்றது. (யோ.4:24, 2 கொரி. 3:17). ஆவிக்குரிய மேனியுமுண்டு என்று 1 கொரி.15:40ல் பவுல் சொல்லியபடி ஆவியாயிருக்கிற தேவனுக்கு ஒரு மேனி - உருவம் - நிச்சயம் உண்டு.

அது தான் நம்ஆவியின் ரூபம், இதை சரீரக் கண்களால் காண முடியாது - சரீரத் தோற்றம் போலவும் இருக்காது (ஏனெனில் சரீரத் தோற்றம் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறாயிருக்கிறதே!) அவர் மகிமையின் தேவன் அவர் மகிமையாய் இருக்கிறவர், அவரது மகிமையோடு அவரின் ஆவிக்குரிய மேனியை ஒருவரும் காண முடியாது, கண்டதுமில்லை. பவுல் அவரின் மேனியை அல்ல - ஒளியின் மகிமையைக் கண்டே பார்வையிழந்தானே! (அப்.22:11).

அப்படியானால் தேவனின் கரம், செவி, வாய் என்று போடப்பட்டதெல்லாம் என்ன? இது, தேவ மனுஷர்கள் தங்களின் சிந்தனைக்கேற்றபடி, தாங்கள் காண்கிற தரிசனப்படி (தரிசனம், கனவு எல்லாமே நம் எண்ணத்தின்படியும், இருக்கலாம்), தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைப்படி, வெளிப்படுத்துகிற காரியமாகும். மற்றப்படி தேவனின் ரூபம் அப்படியல்ல. அப்படி தேவரூபம் இருந்தால், அவரின் ரூபத்தை மனுஷ

ரூபத்துக்கு ஒப்பாய் உருவாக்கக் கூடாது என்று தேவன் சொல்ல மாட்டாரே! (ரோ.1:23, யாத்.20:4) உயிர்த்தெழுந்த இயேசு மனித ரூபத்தில் காணப்படவில்லையா? இது கேள்வி. இயேசு மாம்ச சரீரத்தை விட்டு, மகிமையின் ரூபத்தில் உயிர்த்தெழுந்ததை ஒருவனும் கண்டதில்லை. 40 நாளளவும் அவர் அந்த மகிமையின் ரூபத்தில் வெளிப்படவே இல்லை, வெளிப்பட்டிருந்தால் ஒருவராலும் கண்டிருக்க முடியாது. நாம் காணக் கூடியமனித ரூபத்திலேயே வெளிப்பட்டார். ஆனாலும் சகல அதிகாரமும் வல்லமையும் அவருக்குள் இருந்தது (மத்.28:18) அதனால் தான், பூட்டிய வீட்டிற்குள் நுழைய முடிந்தது. பரலோகம் போனதும் திரும்பிவரப் போவதும், நியாயத்தீர்ப்பு செய்யப் போவதும் மனிதரூபத்தில் தான் (அப்.1:11) ஆமென். ஆவியிலே உயிர்த்தவர், மனித ரூபத்தில் காட்சி தந்தார் (1 பேது. 3:18).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! யாராவது, தேவனுக்கு மனித ரூபம் உண்டு என்று சொன்னால் நம்பாதே! தேவன் ஆவியாயிருக்கிறார் என்றிருக்கும் உன் விசுவாசத்தை புரட்ட பக்க வழியாய் நுழைந்திருப்போர் அவர்கள், ஜாக்கிரதை! இந்த நம் சரீரம் மறுரூபமாகி தேவ ரூபம் போல ஆக வேண்டும் என்ற உன் விசுவாசத்தை உடைக்க வந்திருப்போர் அவர்கள். எச்சரிக்கையாயிரு! தேவனைப் பற்றிய அறிவு அவர்களுக்கும் புரியாமல் அறிந்த மற்றவர்களையும் குழப்புகிறவர்கள் அவர்கள். விழித்திரு! விக்ரக ஆராதனை வெளிவர இடங்கொடாதே! **வீட்டிலும், சபையிலும், காலண்டரிலும், பத்திரிகையிலும், ஸ்டிக்கரிலும், புத்தகத்திலும் உருவப்படம் போட்டு, மகிழும் கூட்டமது!** ஆவியான தேவனுக்கு நம் கண்களால் காண்கிற ரூபம் ஏதுமில்லை, கண்களால் காணும் ரூபம் இல்லை என்பதால் அதற்கான சொரூபமும் இல்லை. அல்லேலூயா! இந்தப் பாடலை தொடர்ந்து பாடுவோம்! கருகலான சத்தியம் மலரட்டும்!

❖ ❖ ❖

# காற்றையும், மீனையும் அனுப்பியது வாதிக்கவா? சாகடிக்கவா?

பழங்கால அசீரிய சாம்ராஜ்யத்தின் தலைநகராய் விளங்கிய நினிவே என்ற புறஜாதி நகரத்திற்கு மிஷினரியாய் அனுப்பப்பட்ட யோனா, கர்த்தருடைய சமூகத்திற்கு விலகி, தர்ஷீக்குப் போகும் கப்பலில் ஏறினான் (யோனா.1:3) யோபு.42:2ன் படி தேவன் செய்ய நினைத்தது - தேவனின் தீர்மானம் நிறைவேறியே தீரும் (அவருடைய சித்தம் வேண்டுமானால்

நிறைவேறாமல் போகலாம்) சங்கீதக்காரன் சொல்வது போல தேவனால் தீர்மானிக்கப்பட்டவன், தேவ சமூகத்திற்கு விலகி வானத்திற்கு ஏறினாலும் அங்கேயும் அவர் இருப்பார், பாதாளத்தில் படுக்கை போட்டாலும் அங்கேயும் இருப்பார் (சங்.139:8). “நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதும் இல்லை” (யோசு.1:5) என்ற தேவன் தன் வார்த்தையில் உண்மையுள்ளவராயிற்றே! கப்பலுக்குள்ளே அயர்ந்த நித்திரை பண்ணி தர்ஷீசுவுக்கு போக எத்தணித்த யோனாவை தடுக்க, தேவன் இரண்டு காரியம் செய்தார். **ஒன்று:-** சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். **இரண்டு:-** ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தி யிருந்தார். இவையிரண்டையும் அனுப்பியது, யோனாவை வாதிக்கவா, அல்லது மரண இருளின் பள்ளத்தாக்கில் அவன் மாறுவான் என்பதற்காகவா?

எப்படியாவது யோனா மூலமாய் நினிவேக்கு சுவிசேஷம் போகவேண்டும் என்று விரும்பிய தேவன், ஏதோ ஒரு வழியில் யோனாவை திருப்பிக் கொண்டு வர வழி செய்தார். ஒன்று மாத்திரம் நிச்சயம், தேவன் தன்னுடைய தீர்மானம் நிறைவேற, பொல்லாத வழிகளை - தீய வழிகளை - பிசாசின் வழிகளை உபயோகிக்கவே மாட்டார். அவர் நன்மையின் தேவன். நன்மை செய்யாவிட்டாலே பாவம் என்று பிரகடனப்படுத்துகிற தேவன் இவரல்லவா (யாக்.4:17) ஆமென். பெருங் காற்றை அனுப்பினார், அதனால் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. கப்பல் உடையுமென்று அனைவரும் நினைத்தனர். ஆனால் எந்த ஒரு சேதமும் நடக்கவில்லை நடக்கவும் தேவன் விடவில்லை. பெருங்காற்றினால் அழிவு வரலாம், வாய்ப்பு உண்டு. ஆனாலும் தேவன் தீமைக்கே வழிவிடமாட்டார். அல்லேலூயா! ஏன்? யோனாவின் தேவன், அவனை திருப்பிக் கொண்டு போக காத்திருக்கிறாரே! தன்னுடைய பிள்ளைகளின் நன்மைக்காக எந்த ஒரு சரித்திர நியாயத்தீர்ப்பும் செய்வார். தன் சத்தியம் - சுவிசேஷம் பரவ தன் பிள்ளைகளை வேண்டுமானால் இரத்த சாட்சியாய் பிசாசினால் சாகடிப்பாரே ஒழிய, மற்றவர்களுக்கு வாதையோ, துன்பமோ, மரணமோ தரமாட்டார். ஒரு வேளை அவர்களே வேண்டுமானால் அப்படித் தேடிக் கொள்ளலாம். பெருங் காற்று, கொந்தளிப்பை உண்டாக்கும் என்று தேவன் அறிவார். ஆபிரகாமைப் பாருங்கள்:- (நாபலி-மனிதபலி- தேவனுக்கு விரோதமானது (உபா. 12:31; 18:10; லேவி. 20:1,2). அது பிசாசு விரும்புவது. ஈசாக்கை இப்படிச் செய்யத் தான் ஆபிரகாமை அழைத்தார். ஈசாக்கு மரிப்பான் என்று தான் விசுவாச ஆபிரகாமும் எண்ணியிருப்பான். ஆனால், தேவனோ, தீமை போல ஆரம்பக் காரியம் தோன்றினாலும் முடிவு நன்மையாய் செய்வார். தீமையே வராமல் இரட்சிப்பார். அப்படித்தானே ஈசாக்கை காத்தார் (ஆதி.22:12,13) அதே

ஜீவிக்கிற தேவன், பெருங்காற்றை அனுப்பினாலும் கடைசியில் சமுத்திரம் தன் மும்முரத்தை விட்டு அமர்ந்தது (யோனா. 1:15) அல்லேலூயா! பலருடைய கேள்வி: “யோனாவை கடலுக்குள்ளே போட்டதினாலே தானே கொந்தளிப்பு நின்றது! அதனால் யோனாவிற்கு பயங்கர சாவுக்கேதுவான வாதை வந்ததே” இந்தக் கேள்வியை கேட்போர் சில காரியத்தை மறக்கக் கூடாது. புற ஜாதி மாலுமி, யோனாவை எழுப்பி தேவனிடம் ஜெபிக்கச் சொல்கிறான், (யோனா 1:5) யோனாவோ கடினமனதோடு ஜெபிக்கவில்லை. ஜெபித்திருந்தால் கடல் கொந்தளிப்பிலிருந்து விடுதலை கிடைத்திருக்கும். யோனாவும் கடலுக்குள் எறியப்பட மாட்டான். யோனா தேவசமூகத்தில் நின்று சுவிசேஷம் சொல்லவழிகள் பிறந்திருக்கும். தங்களுக்கு தெரிந்தபடி சீட்டுப்போட்டதில் யோனா பேர் வந்தது. புறஜாதியார் சீட்டுப் போடுவதில் தேவன் நுழைந்து காரியம் செய்வாரா? சிந்தியுங்கள். யோனா பேரில் விழுந்ததாலல்லவோ அவர்கள் அவனை கடலுக்குள் போட்டனர். தான் கர்த்தருடைய சமூகத்தை விட்டு விலகிப்போகிறேன் என்று கொஞ்சமும் பயமின்றி யோனா அவர்கள் முன் அறிக்கையிடுகின்றான். (யோனா 1:10) மேலும், சமுத்திரம் அமர என்ன செய்ய வேண்டும் என்று புறஜாதி மாலுமிகள் கேட்கும் போதும், என்னை சமுத்திரத்தில் போடுங்கள் என்று தன் சுய அறிவை வைத்துப் பதிலளிக்கிறான். ஆனாலும் அவர்கள் உடனே யோனாவை கடலுக்குள் போடவில்லை. கரைசேரும்படி தண்டு வலித்தும் பயனில்லாமல், தேவனுக்குப் பயந்து பழி வராதபடி அறிக்கையிட்டு, யோனாவைத் தூக்கி கடலில் போட்டனர். தீர்க்கதரிசி - மிஷினரி - சுவிசேஷகன் யோனா தேவ சமூகத்திலிருந்து விலகியதால் வந்த வினையைப் பார்த்தீர்களா? அவன் ஜெபிக்கவில்லை; தான் தேவசமூகத்திலிருந்து விலகியதற்கு மன்னிப்புக் கேட்கவில்லை; தானே தன்னை சமுத்திரத்தில் போடச் சொல்லி, அவர்கள் போடும் போதும் தன்னோடு இருக்கும் தேவனை மகிமைப்படுத்தவில்லை. கப்பலில் இருந்த புறஜாதி மக்களுக்கு நம் தேவன் மேல் இருந்த கடுகளவு விசுவாசம் கூட (யோனா 1:16) இல்லாதவனாக கடினப்பட்டுக் காணுகிறான். யோனாவின் இப்படிப்பட்டதான பாவங்களுக்கு சாபம் நிச்சயம் உண்டல்லவா!

யோனாவுக்கு என்ன சாபம் வந்தது? கடலுக்குள் எறியப் பட்டான்; அலைகளால் நெருக்கப்பட்டான், அகோர பாதாளத்திற்குள்ளிருப்பதான நிலையிலிருந்தான்; ஆழத்திலே கிடந்ததால் நீரோட்டம் அவனைச் சூழ்ந்தது. அலைகள் அவன் மேல் புரண்டது. பிராணபரியந்தம் தண்ணீர் நெருக்கியது. கடற்பாசி தலையைச் சுற்றியது. கடலுக்குள்ளிருக்கும் மலைகளின் அடிவாரங்கள் வரை அடித்துச் செல்லப்பட்டான். பூமியைப் பார்க்க முடியாதபடி தாழ்ப்பாள்கள் அடைக்கப்பட்டதாயிருந்தது. அவன் ஆத்மா தோய்ந்து போனது (யோனா

2:2,3,5,6,7) இப்படிப்பட்டதான உபத்திரவத்தை யோனா தன் பாவத்தினால் தேடிக் கொண்டான். தாவீது சொன்னது போல, இப்படியான வாதையால் - உபத்திரவத்தால் தேவனின் பிரமாணத்தை சத்தியத்தை யோனா உணர்கிறான். (சங்.119:67, 71) இந்த சூழ்நிலையில் தேவனின் ஆலயத்தை, பிரசன்னத்தை - மகிமையை நோக்கினான். (யோனா 2:4) கர்த்தரை நினைத்தான் (யோனா 2:7) ஜெபித்தான். பொய்யான உலகமாயைப் பற்றிக் கொண்டு, ஊழியத்தை விட்டுவிலகி, கிருபையைப் போக்கடித்ததை உணர்கிறான். (யோனா 2:8) தேவனை நோக்கிக் கூப்பிடும்போது தன் பிள்ளைகளுக்கு நிச்சயம் பதில் தருவேன் என்று சொன்ன தேவன் (ஏசா. 59:1) சொன்னதையே செய்பவரல்லவா! அவனை காப்பாற்ற மரணத்திலிலிருந்து விடுவிக்க - ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தினார். 3 நாள் மீனின் வயிற்றுக்குள் பாதுகாப்பாய் இருந்தான். மீனுக்கு தேவன் இட்ட கட்டளையில் யோனா கரையை அடைந்தான் (யோனா 1:17, 2:10) இதை வாசிக்கும் தேவபிள்ளையே! தேவனின் கிருபையையும், மாறாத அன்பையும் பார்த்தாயா?

மீன் வயிற்றுக்குள் பாதுகாப்பாக அல்ல; மகா வாதையோடு இருந்தான் என்று யோனா 2ம் அதிகார வசனங்களை வைத்துச் சொல்லி, மீனை தேவன் அனுப்பியது வாதிக்கத்தான் என்று வாதிடுவோர் உண்டு. **அப்படிப் பட்டவர்கள் அறிய வேண்டிய முதல் காரியம்:** யோனா 2ம் அதிகார வார்த்தைகளெல்லாமே மீனின் வயிற்றுக்குள்ளிருந்து தான் பேசியது (யோனா 2:1) என்பதாகும். மீனின் வயிற்றுக்குள்ளிருந்து அவன் விண்ணப்பம் பண்ணும்போது, ஏற்கனவே கடலுக்குள் மூழ்கிய போது கடலுக்குள்ளே கஷ்டத்தின் மத்தியில் சொன்ன வார்த்தைகளை நினைவு கூருகிறான். (யோனா.2:2-4) இந்த 3 வசனங்களும் ஏற்கனவே அவன் பேசிய வார்த்தைகள். மீனுக்குள்ளிருந்து புதிதாய் சொல்வது அல்ல. "என்றேன்" என்று வசனம் 4 முடிவதைப் பாருங்கள். யோனா 2:5,6ல் அவனுக்கு கடலுக்குள் ஏற்பட்டது ன்பத்தை அறிக்கையிடுகிறான். அந்த துன்ப நேரத்தில், தேவனை நோக்கிக் கூப்பிட்டதால் மீனை விழுங்கும்படி அனுப்பி அவனின் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர் என்கிறான். ஆத்மா தொய்ந்து போன நிலையில், கர்த்தரை நினைத்து விண்ணப்பித்தானாம். இந்த 2ம் அதிகாரமே கடலுக்குள்ளிருந்த கடந்த நிலையைக் கூறி (Flashback), கர்த்தர் இரட்சித்தார் என்று சொல்வதாக இருக்கிறது. ஆக, மீனுக்குள் கர்த்தர் வைத்ததினால் அவன் கலங்குவதாகவோ, கதறுவதாகவோ இல்லை. மரணத்தினின்று பாதுகாக்கப்பட்டதாகவே அவன் உணர்கிறான். ஆனால் தற்கால பிரசங்கியார் பலரோ, மீனுக்குள் வாடினான்; உபத்திரவப்பட்டான்; பாதாளமாய் எண்ணினான் என்று வேதத்தில் இல்லாததை தங்கள்

அறிவுக்கேற்றபடி விளக்கி, தங்களைச் சார்ந்தவர்களையும் நம்ப வைக்கின்றனர். தற்கால ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் பலரோ; வெள்ளைக் காகம் பறக்கிறது என்று பாஸ்டர்களோ, தீர்க்கதரிசனம் சொல்வோரோ சொன்னால் "ஆமென்" என்று சொல்கிற நிலையில் இருக்கிறார்களே! ஏமாறுகிறவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுகிறவர்கள இருந்தே தீருவார்கள். தேவபிள்ளையே! இது சிந்திக்கும் காலம், செயல்படும் நேரம், மௌனமாயிருக்காதே!

மீனுக்குள் சுவாசம் கூட இல்லாமல் வாதையில் இருந்திருப்பானே என்று கேட்பார் உண்டு. **இறந்தே போனான் என்று சொல்வோரும் உண்டு.** மத். 12:39-41ல் சொல்லப்பட்டபடி, இயேசு மரித்து 3 நாள் பாதாளத்தில் இருந்து வெளிவந்தபடி, யோனாவும் மீனின் வயிற்றுக்குள் மரித்து பின் 3 நாள் கழித்து உயிர்த்து வந்தான் என்கின்றனர். பெந்தகொஸ்தே ஊழியர்கள் அதிகமாய் உபயோகிக்கும் DAKES பைபிளும் இப்படித்தான் விளக்குகிறது. இது உண்மையா? மீனுக்குள்ளிருந்தே "நானோவெனில் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன்; நான் பண்ணின பொருத்தனையை செலுத்துவேன்; இரட்சிப்பு கர்த்தருடையது" என்று உயிருடனேதான் வாக்குக் கொடுத்தான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார். யோனா கரையிலே கக்கப்பட்டான். (யோனா 2:9,10) ஆக, மீனுக்குள் உயிரோடிருந்தே வெளியே வந்தான்; மரிக்கவே இல்லை என அறிகிறோம். (ஆனால் இருதயத்துக்குள் இருந்த இயேசுவோ மரித்தவர். மரித்தவர் உயிர்த்தார்; யோனாவோ உயிரோடே மீனுக்குள்ளிருந்து வெளியே வந்தான். எனவேதான் யோனாவிலும் பெரியவர் என்ற அடையாள வார்த்தை மத். 12:41ல் உள்ளது). மேலும், வாதை இருந்திருக்குமா? யோனாவை விழுங்கிய மீன் வகைகள் திமிங்கல இனத்தை சார்ந்தவைகளாதலால் சுவாசிக்க காதுகள் கிடையாது. காற்றை சேமித்து வைக்க 686 கன அடி (14 x 7 x 7) அளவுள்ள அறை தலையில் உள்ளது. இந்த மீன்கள் சுவாசிப்பது ஆக்சிஜன் என்பதால் இந்த அறை முழுவதும் ஆக்சிஜன்தான் உள்ளது. விழுங்க முடியாதவைகள் வாய்க்குள் நுழையும் போது, அவைகளை இந்த காற்று அறைக்குள் தள்ளிவிட்டு அப்புறம் கரைப் பக்கம் வந்து அவைகளை தும்மி வெளியேற்றிவிடுமாம். இப்படியாய் மனிதனை சேதமில்லாத முறையில் விழுங்கக்கூடிய 70 அடி நீளமுள்ள மீன்களை ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர். அதுவும் தேவன் ஆயத்தப்படுத்திய மீன், சேதம் உண்டாக்கியிருக்குமா? சிந்தியுங்கள். யோனாவை சேதப்படுத்துவதா தேவ திட்டம்?

இலண்டன் பொருட்காட்சியில் இருந்த **"20ம் நூற்றாண்டு யோனா"** என்ற பெயருள்ள மனிதன் பற்றி The Harmony of service & Scripture

என்ற புத்தக ஆசிரியர் Harry Runner எழுதியதை நவம்பர் 98 முழக்கத்தில் எழுதியுள்ளதை வாசியுங்கள். ஆக்சிஜன் நிறைந்த காற்றறைக்குள் 2 நாள் ஜீவனோடிருந்த அந்த மனிதனைப் பற்றி அறியுங்கள். காற்று அறையில் ஒரு ஆள் நடமாடும்போது வரும் கூச்சத்தாலேயே, மீன் அந்த ஆளை கக்கி விடுமாம்! எனவே யோனா ஜீவனோடு இருந்தது தான் உண்மை என்று புரிகிறதா? **இயேசு மரித்து தான் உயிர்த்தார். அப்படித்தான் யோனாவும் மரிததுத்தான் உயிர்த்திருக்க வேண்டும் என்ற விதண்டாவாதிகளுக்கு கேள்விகள்.** 1) இயேசு பூமிக்குள் ளிருந்த பாதாளத்தில் அவர் சரீரத்தோடு இல்லையே! யோனா மீனுக்குள் சரீரத்தோடு இருந்தானே. 2) பாதாளத்தில் இருந்து இயேசு ஜெபிக்கவும் இல்லை, தேவனை பார்க்கவும் இல்லை. யோனாவோ மீனுக்குள்ளிருந்தே ஜெபித்தான். 3) இயேசு மரித்து தானே பூமிக்குள் போனார். யோனாவோ உயிரோடவே மீனுக்குள் போனானே! 4) இயேசுவை தேவன் உயிர்ப்பித்தார், யோனாவோ ஜீவனோடிருந்ததால் யாரும் உயிர்ப்பிக்கவில்லையே! பிணமாகவா மீனின் வாயில் இருந்து விழுந்தான்? இல்லையே! இப்படி ஏராளமான கேள்விகளை கேட்டுக் கொண்டே இருக்கலாம். **இதற்கு முத்தாய்ப்பு வைப்பது போல ஒன்றைச் சொல்லலாம்:-** தனக்கு ஒரே பேறானவனையே பலியாக ஆபிரகாம் ஒப்புக் கொடுத்தான் (எபி.11:19) என்று எழுதியிருப்பதால் ஈசாக்கை பலியிட்டான் என்று சொல்ல முடியுமா? மரித்தோரிலிருந்து அவனைப் பாவனையாக்த திரும்பப் பெற்றுக் கொண்டான் என்று உள்ளதை உணர்ந்தால் உண்மை புரியும். அப்படியே மத்.12:39-41 ஐ உணர்ந்தால் உண்மை புரியும். யோனா 3 நாள் மீனுக்குள்ளிருந்தது போல இயேசுவும் 3 நாள் பூமிக்குள் இருப்பார். "மீன்-பூமி-3 நாள்," போன்றவை தான் உவமானமே ஒழிய, மரணம், உயிர்த்தெழுதல் என்பதெல்லாம் உவமானமாய் இல்லை.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! யோனாவை விழுங்க தேவன் மீனை மாத்திரம் அனுப்பாதிருந்தால் யோனா கடலுக்குள் மரித்தே போயிருப்பார்; தேவனின் திட்டம் நிறைவேறாமற் போயிருக்கும். ஆக, தேவன் தன் தீர்மானம் நிறைவேற, யோனாவை பாதுகாக்கத்தான் மீனை ஆயத்தம் பண்ணினாரே ஒழிய வாதைக்காகவோ சாகடிக்கவோ அல்ல. ஆமென். பெருங்காற்றை அனுப்பியதால், யாருக்கும் தீமையை வருவிக்கவில்லை நம் தேவன். தேவ சமூகத்தைவிட்டு யோனா விலகி; விசுவாச அறிக்கை இல்லாமல் தன்னைத் தானே கடலுக்குள் தூக்கிப்போட ஒப்புக்கொடுத்து சாபத்தை யோனா, தானே சுதந்தரித்தான் என்றும், பெருங்காற்றால் வந்தது அல்ல என்றும் அறிக! காற்று வீசினாலும், கடல் பொங்கினாலும் தேவன் காப்பாற்றுவார் என்ற விசுவாசம் இல்லாததால் (ஆபிரகாம் ஈசாக்கைப்

பலியிடச் சென்றபோது இருந்த விசுவாசம் இல்லாததால்) சகலமும் நன்மையாக முடியப்பண்ணும் தேவனின் செயலை பிசாசின் செயலுக்கேதுவாய் நடக்க வழி வகுத்துவிட்டான் யோனா! தன்னாலேயே கடலுக்குள் தூக்கி எறியப்பட்டும் (யோன.1:12) தேவன் தள்ளி விட்டார் என்று (யோனா 2:3) தேவனின் நன்மையும் கிருபையும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று அறியாமல் (ரோ.12:2) அலப்பி விட்டான் யோனா! இது கடலுக்குள் தத்தளித்த போது! மீனுக்குள் இருந்தபோதோ தன்னை யாரென்று உணர்ந்து ஒப்புக் கொடுக்கிறான். (யோனா 2:8) தீமையான காரியத்துக்காக அல்ல, நன்மைக்காகவே காற்றையும் மீனையும் தேவன் அனுப்பினார். காற்றைக் கண்டு உடனே விசுவாசம் காட்டாத யோனா, மீனுக்குள்ளிருந்து விசுவாசம் காட்டினான். வெளியே வந்தான். விசுவாசம் வெற்றியையே தரும். தேவபிள்ளையே! என்ன வந்தாலும் தேவ சமூகம் நம்மோடிருப்பதை விசுவாசித்தால் தீமையை தேவன் நம்மில் நடக்க விடவே மாட்டார். நன்மைதான் முடிவாக இருக்கும். அல்லேலூயா!

❖ ❖ ❖

## தேவ வார்த்தையும் தேவ சித்தமும்

வேத வாக்கியங்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்ட தேவ மனுஷன் தேறினவனாவதற்கு எழுதப்பட்டது, எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியாக்க எழுதப்பட்டது (2 தீமோ.3:16, 17). இப்படி நன்மைக்காகவே கொடுக்கப்பட்ட வேத வார்த்தை. அதுவும் விசேஷமாய் பழைய ஏற்பாட்டு வேத வார்த்தை. முன்னுக்குப்பின் முரணாய்த் தெரிவதால், தேவ சித்தம் இன்னதென்று புரிந்து கொள்ள இயலாமல். பல சபைகள் பலவாறாய்ப் போதிக்கின்றன: கேட்கிறவர்களும் ஆராய்ச்சி சிந்தனையோடு கேட்காததால் அனைத்திற்கும் ஆமென் போடுகின்றனர். இதனால் சாத்தான் சந்தோசமடைகிறான்; ஆவியானவர் துக்கப்படுகிறார் (எபே.4:30). இப்படிப்பட்ட நிலையிலிருந்து கிறிஸ்தவனுக்கு விடுதலையே இல்லையா? ஆவியானவர் விளக்குவாராக.

பூர்வ காலம் முதல் பங்கு பங்காவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலம் திருவுளம் பற்றின தேவன், கடைசி நாளில் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றினார் (எபி.1:1,2). எப்படி திருவுளம் பற்றினார்? 2 தீமோ.3:16ன்படி தேவ வார்த்தைகள் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டது (Inspiration). தூக்கிக் கொடுக்கப்படவில்லை: அல்லாது ஆவியானவரால் வரிக்கு வரி டிக்டேட் பண்ணப் படவுமில்லை. ஆவியானவர் கருத்துக்களை கொடுப்பார், எழுத்தாளர்கள் தங்கள் திறனுக்கும், அறிவுக்கும், சிந்தனைக்கும்,

ஞானத்திற்கும், காலத்திற்கும், சூழ்நிலைக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றபடி எழுதுவார்கள். **இப்படிக் கொடுக்கப்பட்டு எழுதப்பட்ட முறையை 4 விதமாகப் பிரிக்கலாம்:-** (1) தேவனே நேரிடையாய் சொன்ன வார்த்தை (Exact word of God) - யாத். 32:16; உபா. 5:4, 24; மத். 3:17; (2) பேசுகிறவர்கள் வாயிலே தேவன் வார்த்தைகளை போட்டு, ஆவியானவரின் உள்ளுணர்வுடன் வெளி வருகின்ற வார்த்தை - யாத்.4:12; எண். 23:5; எசே. 2:7; 3:1.11; அப். 3:21. (3) ஆவியானவரின் அசைவாடுதலால் அப்போதைக்கப்போது வரும் வார்த்தை - யாத். 34:27, 2 பேது. 1:21; (4) எழுத்தாளர் தம் சொந்தத்தில் எழுதும் வார்த்தை - தானி.12:8,9 லூக். 1:1-4; யோ.20:30, 31; அப்.1:1,2. இப்படி நான்கு விதமாக வேதம் எழுதப்பட்டிருந்தாலும். (வேதம் என்றாலே பொதுவாகவே பழைய ஏற்பாட்டைத் தான் குறிக்கிறது என்று முந்தி அறிக). யோ. 1:17ன் படி இயேசுகிறிஸ்துவின் மூலம் தான் கிருபையும் சத்தியமும் வெளிப்பட்டதாக அறிகிறோம். அப்படியானால் அவருக்கு முன் கிருபையும் சத்தியமும் இல்லையா? இருந்தது. ஆனால் இயேசு கிறிஸ்துவின் மூலமாய்த் தான் முழுமையாய் தெரிய வந்தது. தகுதியில்லாதவர்களை தகுதிப்படுத்துவது கிருபை, பாவிகளை மன்னித்து இரட்சிப்பது கிருபை: பைத்தியக்காரர்களை ஞானிகளாக்குவது கிருபை: இப்படிப்பட்ட கிருபையால் தேவன் காரியம் செய்ய, அந்தக் காரியத்திற்குரிய சித்தம், விருப்பம் அவரிடம் இருந்தாக வேண்டும். "நானே சத்தியம்; சத்தியத்தை அறிவீர்கள்; சத்தியம் விடுதலையாக்கும்; ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்" என்றெல்லாம் இயேசு சொல்வதால் அந்த சத்தியம் முழுமையாய் வெளிப்பட, தேவனுக்கு அதற்குரிய சித்தமும், விருப்பமும் இருக்க வேண்டும். ஆக, இயேசு மூலமாய் முழுமையாய் வெளிப்பட்ட கிருபையும், சத்தியமும் இன்னது என்று அறிய வேண்டுமானால், தேவனின் சித்தமும் விருப்பமும் தேவ வார்த்தை மூலம் அறிந்தாக வேண்டும்.

பழைய ஏற்பாட்டு மக்களை, சீயோன் குமாரத்தி, மனைவி என்றெல்லாம் தேவன் அழைத்துப் பார்த்தார். அவர்களோ சிநேகிதர், தாசர் என்ற நிலையிலேயே இருந்தனர். இதனால் மோசே, தாவீது, ஏசாயா, எரேமியா போன்ற எல்லோருக்குமே முழுதேவ சித்தத்தையும் அவரால் சொல்ல முடியவில்லை. அதனால்தான் அவர்களுக்கு துன்பம் வரும்போது. "தேவனே வாதிக்கிறார். தண்டிக்கிறார்; சிறுமைப்படுத்துகிறார்: தோல்வி, பஞ்சம், வியாதி, அகால மரணம் எல்லாம் தருகிறார்" என்று எழுதுகின்றனர். இடையிடையே அவர்கள் செய்த குற்றங்களையும், பாவங்களையும் அறிக்கையிடுகிறார்கள். முடிவில், தேவன் நன்மையைத் தருவார் என்று

விசுவாச அறிக்கையிடுகிறார்கள். இது முன்னுக்குப் பின் முரணாயிருக்கிறது. **உதாரணத்திற்கு ஒன்றிரண்டைப் பார்ப்போம்.** (1) நெகே. 9:26, 27 ல் நாரதர் பாணியில் தேவன் செயல்படுவதாய் உள்ளது. ஏன் இப்படி? ஆசீர்வாதம் சாபம் போன்ற காரியங்கள் (உபா.11:26, 28; 30:15,19) நெகேமியாவுக்கு முழுமையாய்ப் புரியவில்லை. இயேசுவின் மூலம் வெளிப்பாட்டை அறியவில்லை; (2) சங்.83ல் எதிரிகளை அழிக்க தாவீது தேவனிடம் சொல்கின்றான். முடிவில் இரட்சிப்பையும் காட்டச் சொல்கிறான். இங்கே இயேசுவின் மூலம் வெளிப்பட்ட மத்.5:44ன் படியான கிருபையும் சத்தியமும் முழுமையாய் அவனுக்கு புரியவில்லை. (3) யோபு.2:10; 5:18; 1:21; 19:8 - 13; 9:17, 18; 10:18, 22 போன்றவைகளில், யோபுவுக்கு இயேசுவின் மூலம் முழுமையாய் வெளிப்பட்ட மத்.19:17; யாக்.1:17 அப்.10:38 போன்றவை புரியவில்லை. யோபு.42:2,3,5ன் படி மனக் கண் திறக்கப்படவில்லை. மட்டுமல்ல, பரிசுத்த ஆவியினால் சத்தியத்தை அறிகிற நம்மவர்க்கும் (யோ.14) எண்.16:35ல் அக்கினியால் அழித்தது திருஷ்டாந்தமான தேவனின் சரித்திர நியாயத் தீர்ப்பு என்றும், எண்.25:1-9ல் வாதையால் அழித்ததும் தேவனின் நியாயத் தீர்ப்பு என்றும், 1 தீமோ 5:24ஐ வைத்து அறிய மனமில்லை. கொள்ளிவாய் சர்ப்பம் வந்தது போன்ற சாபங்களையும் (எண்.21:6 with உபா. 32:24) தேவனே செய்கிறார் என்றும் தவறான கணிப்பு நம்மில் பலருக்கு இருக்கிறது.

## முன்னுக்குப் பின் முரணாக தோன்றும் வசனங்களைப் பாருங்கள்

| | |
|---|---|
| 1. பட்சிக்க தேவன் வெட்டுக்கிளியை அனுப்பினாராம். அதே தேவன் திரும்பவும் பட்சித்ததை நன்மையாய் அளிப்பாராம் (யோவே. 2:25) கொள்ளிவாய் சர்ப்பத்தை அனுப்புவாராம் (எண். 21:6; உபா. 32:24). | 1. கர்த்தர் நல்லவராம் (சங். 34:8). நன்மையையே தருவாராம் (சங். 85:12; 119:68; அப். 10:38; நெகே. 2:18; 9:21; எபே. 2:10; 3 யோ. 11; சங். 103:5). |
| 2. இஸ்ரேலருக்கு தீங்கு தேவன் செய்து மனஸ்தாபப்பட்டாராம் (எரே. 42:10). | 2. தீமை தேவனிடம் சேராதாம். துன்மார்க்கத்தில் அவருக்குப் பிரியமில்லையாம் (சங். 5:4; 2 தெச. 3:3) |
| 3. இஸ்ரேலருக்கு திரும்பவும் தீங்கு செய்து நிர்மூலமாக்குவாராம் (யோசு. 24:20). | 3. பஞ்சத்தில் உயிரோடே காப்பாராம்; ஆத்மாவை மரணத்துக்கு விலக்கி காப்பாராம் (சங். 33:18,19; 107:8). |
| 4. நிர்மூலமாக்க சாபமாகிய கொள்ளை நோயையும், வாதையையும் மழைக்குப் பதில் புழுதியையும் குருட்டாட்டத்தையும் தேவன் தருவாராம் (உபா. 28:21-29). | 4. நோய்களை குணமாக்குவாராம்; உயிரைக் காப்பாராம்; கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டு வாராம்; வாலவயதாக்குவாராம். ஒடுக்கப்படுவோருக்கு நீதி செய்வாராம் (சங். 103:3-6). |
| 5. தீங்கை உண்டாக்குகிறவராம் (ஏசா. 45:7) | 5. விழுகிறவரை தாங்கி தூக்கி விடுவாராம் (சங். 145:14). |
| 6. காயப்படுத்துவாராம், காயங்கட்டுவாராம், கொடுப்பாராம், பின்கொடுத்ததையே எடுப்பாராம் (யோபு 5:18; 1:21). | 6. காயங்கட்டுவாராம், விடுதலை தருவாராம், கட்டவிழ்ப்பாராம் (ஏசா. 61:1). |

இன்னும் ஏராளம் எழுதிக்கொண்டே போகலாம். இப்படியான வசனங்களை எல்லாம் வாசிக்கும்போது, புறஜாதியார் சொல்வது போல, நம் வேதம் தேவனால் கொடுக்கப்பட்டது அல்ல என்று சுலபமாய் சொல்ல வாய்ப்புள்ளது அல்லவா! நன்மையும் அன்புமான தேவனின் பரிபூரண சித்தம் இன்னது என்று புரியாத வரைக்கும் நம் மனம் தினந்தோறும் மறுரூபமாகாத வரைக்கும், பகுத்தறிவு நம்மில் ஆவியானவரால் வளராத வரைக்கும், நம்மனக் கண் பிரகாசமாகாத வரைக்கும், ஆத்மா செழிப்படையாத வரைக்கும் (ரோ. 12:22; யூதா 22). மேற்சொன்ன வசனங்கள் விளங்காது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கே, தேவசித்தம் முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால் புதிய ஏற்பாடு வசனங்களில் சத்திய - தேவசித்த - மாறுபாடு காண முடியாது.

**அப்படியானால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து மூலமாய் ஆவியானவரைக் கொண்டு முழுமையாய் வெளிப்படுத்தப்பட்ட ஆதிமுதலான தேவசித்தம் தான் என்ன?** (1) பரலோகம் எப்படியோ அப்படியே பூலோகம் எல்லா நன்மைகளோடும் இருக்க வேண்டும் (மத். 6:1). (2) எல்லோரும் சுகமாய் இருக்க வேண்டும் (மத். 8:3). (3) ஒருவனும் கெட்டுப் போகக் கூடாது (மத். 18:14; யோ. 3:16; 1 தீமோ. 2:4). (4) எல்லோருக்கும் பரிபூரண ஜீவன் தேவை (யோ. 10:10). (5) ஒருவரையும் இழந்து போகக்கூடாது (யோ. 6:39). (6) தாவீதைப் போல தேவனுடைய வார்த்தையாகிய உடன்படிக்கைப் பெட்டியாலே தான் ஆசீர்வாதம் உண்டு என்று உணர்ந்து அதற்குரிய முக்கியத்துவம் கொடுத்து, அவனைப் போல ஊழியம் செய்ய வேண்டும் (அப். 13:36). (7) வரங்கள் கொடுக்கப்பட வேண்டும் (1 கொரி. 12:11; எபி. 2:4). (8) நன்மைக்கேற்றபடியாய் பரீட்சை வேண்டும் (ரோ. 5:3; யாக். 1:3). (9) பொல்லாத உலகிலிருந்து விடுதலை (கலா. 1:4). (10) ஊழியர்களை உருவாக்குவது (எபே. 4:13). (11) புத்திர சுவீகாரம் அளிப்பது (எபே. 1:6; யோ. 1:2). (12) பரிசுத்தமாக வேண்டும். அதுவும் வசனத்தாலே ஆக வேண்டும் (1 தெச. 4:3; யோ. 15:13; 17:17). (13) எல்லாக் காரியத்திலும் அவருக்கு நன்றி (வெளி. 4:11). (14) நாம் இரட்சிக்கப்படுவது (யாக். 1:18). (15) சகல சிருஷ்டிப்பும் அவர் சித்தம் (வெளி. 4:11). (16) நன்மை செய்வதே அவர் சித்தம் (எபே. 2:10; 3 யோ. 11; அப். 10:38; யாக். 1:17). (17) நம்மை ஆசீர்வதிப்பதே பிரியமான சித்தம் (எண். 24:1; சங். 149:4). (18) நம் தேசம் வாழப் பிரியம் (ஏசா. 62:4). (19) துன்மார்க்கர் கூட பிழைக்கணும் (18:23). (20) கொடுப்பதில் பிரியப்படுவது (2 கொரி. 9:7). (21) விசுவாசமாயிருத்தல் பிரியம். (22) நீதி நியாயத்தின் மேல் பிரியம் (சங். 33:5). இன்னும் ஏராளம் எழுதிக் கொண்டே போகலாம்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வேத வார்த்தைகளின் மூலம் தேவனின் பிரியமும் நன்மையுமான பரிபூரண சித்தம் வெளிப்படுகிறது என்றும், அந்த வார்த்தைகள் நான்கு விதமான முறைகளில் எழுதப்பட்டிருப்பதால் முன்னுக்குப்பின் முரண் போல தெரியுமென்றும், தேவசித்தம் முழுமையாய் இயேசுகிறிஸ்து மூலமாய் வெளிப்பட்டுள்ளது என்றும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களால் முழுமையாய் அது அறியப்படவில்லை என்றும், நமக்குள் இருக்கும் ஆவியானவரால் விளக்கப்பட்டதற்காய் தோத்திரம். இனிமேல் இந்த கருகலாகப்பட்ட சத்தியமெல்லாம் துளிர்விட்டு வளரட்டும்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖

## பாவமில்லாத சரீரம் பாவம் செய்ய முடியுமா?

இயேசு நம்மைப்போல் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறக்காமல் பரிசுத்த ஆவியானவர், மரியாள் மேல் நிழலாட தேவனால் பிறந்தார். அவருடைய சரீரம் பரலோகிலேயே உருவானது. ஆனாலும் அது மண்ணுக்கேதுவானது (எபி. 10:5), அவரது ரத்தம் தேவ ரத்தம் (அப். 20:28). பாவ சந்ததியாய் - பாவ ஜாதியில் - நம்மைப் போல் அவர் பாவியாய் பிறக்கவில்லை (பாவம் செய்வதால் நாம் பாவியல்ல, பாவஜாதியில் பிறந்ததால் நாம் பாவி என்பதை முந்தி அறிக) இப்படிப்பட்ட பரிசுத்த சரீரமுடைய இயேசு, பாவம் செய்ய முடியுமா?

பிறப்பிலே இயேசுவின் இரத்தம் மாசற்றதாய் இருந்ததால் சகல பாவங்களையும் அது மன்னிக்கிறது (மத். 27:4; 1 யோ. 1:7). மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்று இருப்பது போல மனுஷனாக வந்த இயேசுவுக்கு ஆவி, ஆத்மா (உள்ளான மனுஷன்) இருக்க வேண்டுமல்லவா! சரீரம் பரலோகிலிருந்து வந்தது. உள்ளான மனுஷன் எங்கிருந்து வந்தான்? தேவகுமாரன் மனுஷகுமாரனார். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் இருந்தது (கொலோ. 2:9). குழந்தைகள் பிறக்கும்போது சரீரமானது முழுமையாய் பாவ ஜாதியைச் சார்ந்ததாயிருந்தாலும், உள்ளான மனுஷன், அப்பா-அம்மாவின் குணாதிசயங்கள் கொஞ்சமாவது கொண்டவனாகத்தான் இருக்க வேண்டும்; அந்த உள்ளான மனுஷன் நன்மை தீமை அறிந்தவனாகத்தான் இருக்க முடியும் (ஆதி. 3:22). இந்த நிலை, பாவம் செய்தபின் ஆதாம், ஏவாளின் உள்ளான மனுஷனுக்கு ஏற்பட்டது. தேவனின் நிலையும் இப்படித்தான். ஆதாமின் பரம்பரையில்

பிறக்கும் பிள்ளைகள், பிறக்கும்போதே பாவம் நிறைந்த பெற்றோர்களின் ஆவி - ஆத்மாவுடன் பிறக்காமல், மாசற்ற நிலையில் பிறக்கிறார்கள். (ஏனெனில், தேவன் தன் ஜீவ சுவாசத்தைக் கொடுக்கும் போது வரும் உள்ளான மனுஷன் அது see ஆதி. 2:7). ஆனால் சரீரமோ - பாவக் கிரியை வெளிப்பட்ட சரீரத்தைப் போலவே பிறக்கிறது. அப்படியே, இயேசுவின் உள்ளான மனுஷனும் சிறு குழந்தைகளின் ஆவி - ஆத்மா போல மரியாளின் வயிற்றிலிருந்து பிறக்கிறது; சரீரமோ பாவமில்லாமல் உருவாகிறது. இப்படி பிறந்த உள்ளான மனுஷன் (ஆவி - ஆத்மா) நாளுக்கு நாள் வளர வளர, பெற்றோர்களின் குணாதிசயம், உலகப் பழக்கவழக்கம், தன் சொந்த சித்தம் எல்லாவற்றாலும் வளர்கிறது. இயேசுவின் உள்ளான மனுஷனும் அப்படியே வளர்ந்தது. எந்த பாவமும் ஆவியிலோ, ஆத்மாவிலோ உருவாகி, சரீரத்தில் வெளிப்படும். இதைத்தான், உள்ளான மனுஷனுக்குள்ளிருக்கும் இச்சையானது, ஆவியாயிருக்கும் பிசாசோடு உடலுறவு கொண்டு கர்ப்பந்தரித்து, சரீரத்தில் பாவத்தை - பாவக் கிரியைகளை, பிறப்பிக்கும் என்று யாக். 1:15 சொல்கிறது. அப்படியே இயேசுவின் உள்ளான மனுஷனிலிருந்து பொல்லாத சிந்தனைகள் உருவாக முடியும். அது சரீரத்திலும் வெளிப்பட முடியும். ஆனால் அப்படி வெளிப்படவே இல்லை. அல்லேலூயா! நீதிபதியும், காட்டிக் கொடுத்தவனும், நூற்றுக்கதிபதியும், இயேசுவும், நிரபராதி என்று சாட்சியிடும்போது, சரீரக் கிரியைகளினால் பாவம் இயேசுவுக்கு வெளிப்படவில்லை என்று அறிகிறோம். பாவமில்லாத - மகிமையினால் மூடப்பட்ட - ஆதாம், ஏவாளின் சரீரத்தின் மூலமாய் பாவம் செய்ய முடியுமென்றால், உள்ளான மனுஷனிலிருந்து அந்த பாவம் வெளிப்பட்டது என்றால், பாவமில்லாத இயேசுவின் சரீரத்திலும் பாவம் வெளிப்பட முடியும்; பாவம் செய்யவும் முடியும். ஆனால் இயேசு பாவம் செய்யவே இல்லை. அல்லேலூயா! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இன்றைக்கே தீர்மானம் எடு; தேவனே வழிகாட்டி நடத்துவார்! பெண்களோடு ஊழியம் செய்யும்போதும், வாலிபஸ்திரி பரிமளதைலம் ஊற்றி தன் தலை முடியால் துடைத்த போதும், உள்ளான மனுஷனில் ஒரு கிளர்ச்சி உருவாகி சரீரத்தில் பாவம் வெளிவர வாய்ப்புகள் உண்டு. ஆனால் இயேசுவுக்கோ ஒன்றுமே வெளிப்படவில்லை. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பாவம் செய்ய முடிந்த சரீரத்தில் அவருடைய உள்ளான மனுஷன் பாவத்தை வெளிப்படுத்த இயலாதபடி (சங். 103:1-3) சரீரமானது ஆவியால் உந்தப்பட்ட ஆத்மாவால் நடத்தப்பட இயேசு வாழ்ந்து காட்டினார். அல்லேலூயா! நாமும் அப்படியே வாழ்ந்து சாட்சியாய் நிற்போம்! ஆமென்.

❖ ❖ ❖

# மிருகங்களுக்கு ஆத்மா உண்டா? அது அழியுமா?

மிருகங்களுக்கு உயிர் உண்டு என அனைவரும் ஒத்துக் கொள்கிறார்கள். இந்த உயிர் எல்லா ஜீவராசிகளுக்கும் மாம்சத்தில் இருக்கிறது (ஆதி. 9:4; லேவி. 17:11-14). பலர் உயிரை ஆவி என்று எண்ணுகின்றனர். உயிர்வேறு, சுவாசம் வேறு, ஆத்மா வேறு. இது குறித்து ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலிலுள்ள "ஆவி-உயிர்-ஆத்மா" என்ற செய்தியில் அறியலாம். நமது பைபிள் காலேஜின் முதல் பாடமே இதுதான். 1 தெச. 5:23ன்படி மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் உண்டு என அறியலாம். "மிருகங்களுக்கு ஆவி உண்டா" என்று ஏற்கெனவே எழுதியுள்ளேன். ஆத்மா மிருகங்களுக்கு உண்டா என்று அறியும்முன், ஆத்மாவின் குணாதிசயம் என்ன என அறிய வேண்டும்.

Soul is the seat of affection, desire, emotions and self-will. ஆத்மாவில் இருந்துதான் சரீரத்தில் வெளிப்படும் அன்பு, உலக அறிவு, ஐக்கியம், எண்ணம், ஏக்கம், உணர்ச்சிகள் போன்ற எல்லாமே தோன்றுகின்றன என்று மத். 11:29; 26:38; யோ. 12:27; நீதி. 24:14; 2:10; 1 சாமு. 18:1; உபா. 6:5; சங். 42:6; 84:2; யோபு 14:22; 6:7; போன்ற பல வசனங்களால் அறிகிறோம். மனித சரீரத்தில் மூளை எப்படியோ அப்படியே மனிதனில் ஆத்மா செயல்படுகிறது. மூளையிலே ஜீவன் இல்லாவிட்டாலும் - பைத்தியக்காரனாய் ஆனாலும் - மனிதன் உயிர் வாழ்வான். அப்படியே ஆத்மாவில் ஜீவன் இல்லாவிட்டாலும் அது வாழும். அந்த வாழ்வு ஜீவனுள்ளதல்ல, தாறுமாறானதாகும். இப்படிப்பட்ட தன்மையான ஆத்மா மிருகங்களுக்கு உண்டா? இவைகளை ஜோடி ஜோடியாகப் படைத்ததால் இவைகளுக்கு இனப்பெருக்க - உடலுறவு - உணர்வுகள் உண்டு என அறிகிறோம். இவைகளுக்கு அறிவு உண்டு. நாய் கல்லைத் தின்னாது. மான் மாம்சம் புசிக்காது. நாயை வேட்டையாட, வீட்டைக் காக்க, குற்றவாளியைக் கண்டுபிடிக்க பயன்படுத்துகிறோம். மாட்டை விவசாயத் தொழிலுக்குப் பயன்படுத்துகிறோம். ஆக, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான அறிவு உண்டு என்று புரிகிறது. இதைத்தான் தொல்காப்பியர் முதற்கொண்டு பல அறிஞர்கள், ஓரறிவு, ஈரறிவு, மூன்றறிவு, நாலறிவு, ஐந்தறிவு, ஆறறிவு உள்ள உயிரினங்கள் உண்டு என்றும், மனிதனுக்கு மட்டுமே ஆறறிவு அதுவும் பகுத்தறிவு உண்டு என்றும் சொல்லியிருக்கிறார்கள். யூதா 22, ரோ. 12:2 போன்ற வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. இந்த அறிவு, சிந்தனை, உணர்வு எல்லாமே அதனதன் தகுதிக்கேற்ப - படைப்புக்கேற்ப

அமைகின்றன. இவைகள் பல நேரங்களில் சரியாக இருக்கும், பல நேரங்களில் சரியாக இருக்காது. இப்படிப்பட்ட தகுதிக்கேற்ற, படைப்புக்கேற்ற உலக அறிவு, உணர்வு போன்றவைகளின் பிறப்பிடம் ஆத்மா என்றும், இப்படிப்பட்டவைகள் மிருகம்' போன்ற ஜீவராசிகளுக்கும் இருப்பதால், அவைகளுக்கும் ஆத்மா உண்டென்றும் உணர்கிறோம்.

ஆசிரியர் எழுதிய 'படைப்பின் இரகசியம்' என்ற செய்தித் தொடரை வாசித்தீர்களானால், முதல் 4 நாட்களும் சிருஷ்டிக்காமல் 5ம் நாள் 6ம் நாள் மட்டுமே ஒன்றுமில்லாமையிலிருந்து மனிதனையும் மற்ற ஜீவராசிகளையும் சிருஷ்டித்தார் என அறியலாம் (ஆதி. 1:21,24,27). இந்த இரண்டு நாட்களும் சிருஷ்டித்தது மாத்திரம் அல்ல, ஆதி. 2:7, 19ன்படி இவைகளை மண்ணினாலே உருவாக்கியும் இருக்கிறார். மாம்சத்தை உருவாக்கியவர், ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டித்தது என்ன? எல்லா ஜீவராசிகளுக்கும் அதனதன் தகுதிக்கு, சிருஷ்டிப்புக்கு ஏற்ப ஆத்மா உண்டு என்று நாம் ஏற்கெனவே படித்தாலும், அதை நாம் இந்தக் கண்களால் காண முடியாது என்பதாலும், இந்த ஆத்மாதான் சிருஷ்டிக்கப்பட்டது எனவும் அறிய முடிகிறது. மாம்சக் கிரியைகளுக்கு உதவும் ஆத்மாவானது, எபே. 4:12ன்படி ஆவியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆவியாயிருக்கிற தேவனின் ரூபத்தின்படியும் சாயலின்படியும் சிருஷ்டிக்கப்பட்ட உள்ளான மனுஷனுக்கு மட்டுமே ஆவி இருக்கிறது என்றும், God's Conscious உண்டு என்றும் வேதம் சொல்கிறது. மற்ற ஜீவராசிகளுக்கு God's Conscious - தெய்வீக மனச்சாட்சி இல்லாமல் வெறுமனே Conscious மாத்திரம் தகுதிக்கேற்ப இருப்பதால், அவைகளுக்கு ஆவி இல்லை என்றும் ஆத்மா மட்டுமே சரீரத்தோடு உண்டு என்றும், திட்டமும் தெளிவுமாய் அறியலாம். ஏதேனின் பயமில்லா செழுமை வாழ்வு எப்போது வருமென்று உலகிற்கு அடுத்தவைகளை சிந்தித்து, மற்ற ஜீவராசிகள் பிரசவ வேதனைப்படுவதால் (ரோ. 8:22), அவைகளுக்கு மனம்-உள்ளம் என்கின்ற ஆத்மா உண்டடென்று அறுதியிட்டு சொல்லலாம். (இதுவும் தேவன் தரும் சுவாசத்தால் வருவதாகும்).

மாம்சமான யாவருக்கும் மரணம் உண்டு. பிர. 12:7, லூக். 12:20, 1 இராஜ. 17:21, யாக். 2:21, யோபு 14:22 போன்ற வசனங்களின்படி மனிதனின் ஆவியும் ஆத்மாவும் தேவனிடம் போகின்றது. அங்கிருந்து பரதீசோ, பாதாளமோ போகும். தேவனின் ரூபத்துக்கு ஒப்பான ஆவி, மனிதனுக்கு இருப்பதால் மனித ஆவி தேவனைப்போல் அழியாமல் இருக்கும். அப்படியானால் அந்த ஆவியோடு இணைந்துள்ள மனிதனின் ஆத்மாவும் ஆவி இருக்கும்வரை அழியாது. (எபி. 4:12)

மிருகங்களுக்கு ஆத்மா மட்டுமே சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால், அதுவும் மாம்சத்தோடு இணைந்து இருப்பதால், அவைகள் மரிக்கும் போது மண்ணுக்குப் போகும் சரீரத்தோடு, அவைகளின் ஆத்மாவும் மண்ணுக்குப் போகும். அங்கே சரீரம் அழியும், அப்படியே ஆத்மாவும் அழியும். தேவனால் எல்லாம் கூடும் (லூக். 1:37). ஏனெனில் அவைகளுக்கு மனிதனைப்போல நியாயத்தீர்ப்பு இல்லையே (எபி. 9:27). இதைத்தான் பிர. 3:21 விவரிக்கிறது. இங்கே ஆவி என்று தவறுதலாய் போடப்பட்டுள்ளது என்று முந்தி அறிக. இப்படித் தவறுதலான மொழி பெயர்ப்பு, ஆவி, ஆத்மா சம்பந்தமான காரியங்களில் சில இடங்களில் வேதத்தில் உண்டு. மட்டுமல்ல... எபிரேய, கிரேக்க மொழிகளில் ஆவியையும் ஆத்மாவையும் தமிழ்போல பிரித்துக் காட்ட முடியாது; நமது மலையாளம் கூட ஆவியை ஆத்மா என்றே அழைக்கிறது.

ஆக, இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மிருகம் முதலான ஜீவராசிகளுக்கு தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆத்மா என்ற ஒன்று உண்டு என்றும், அது சரீரத்தோடு இணைந்திருப்பது என்றும், இந்த ஆத்மா சரீரத்தோடே அழியும் என்றும் அறிகிறோம். மேலும் இந்த ஆத்மா, சரீரத்திற்கு உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு போன்ற எதுவுமே இல்லை என்றும் அறிகிறோம். இந்த ஆத்மா, அதனதன் படைப்பின் தகுதிக்கேற்ப அமையும் என்றும் அறிகிறோம்.

❖ ❖ ❖

## இரட்சிப்பை இழந்தவன் இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்ய முடியுமா?

தேவபிள்ளையே! முழுக்கு ஞானஸ்நானம் பெற்றதாலோ, அந்நிய பாஷை பேசுவதாலோ ஒருவர் இரட்சிக்கப்பட்டவன் என்று சொல்ல முடியாது. ஜலமாகிய வசனத்தைக் கொண்டு, பரிசுத்த ஆவியானவரால், ஆவியாகிய இருதயத்தில் மறுபடியும் பிறந்து, ஆவியிலே விருத்தசேதனம் பண்ணப்பட்ட புதுசிருஷ்டிதான் இரட்சிக்கப்பட்டவன் என்று நாமறிவோம் (யோ. 3:5; ரோ. 10:9,10; 1 கொரி. 6:11; 1 பேது. 1:23; உபா. 10:16; 30:6). இவன் பாவத்தில் மரித்தவன்; நீதிக்குப் பிழைக்கிறவன். இப்படிப்பட்ட இரட்சிப்பை ஒருவன் இழந்தபின், அவன் இயேசுவின் நாமத்தில் ஊழியம் செய்ய முடியுமா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

என்றைக்கு ஒருவன் தேவனுடைய பிள்ளையாய் மாறிவிட்டானோ (யோ.1:12), என்றைக்கு ஒருவன் நீதிமானாக்கப்படுகிறானோ, என்றைக்கு

மணவாட்டிக்கான நிச்சயதார்த்தம் பண்ணி விட்டானோ (1 பேதுரு 3:21) அன்றே அவனுடைய பெயர் ஜீவ புஸ்கதகத்தில் எழுதப்படுகிறது (சங். 69:28; லூக். 10:20; எபி. 12:23). சீனாய் வனாந்திரத்திலே தேவனுக்கு சமமாக - பதிலாக - கன்றுக்குட்டியை வணங்கிய இஸ்ரேலர்கள் முற்றிலுமாய் தேவனை ஒதுக்கிவிட்டபோது, ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன் என்று தேவன் சொன்னாரே (யாத். 32:33) அப்படிப்பட்டவர்களின் நிலைதான் 2 பேதுரு 2:20-22; எபி. 6:4-8ல் சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர்கள் தேவனை மறுதலித்துப் போகிறவர்கள். இவர்கள் இயேசுவின் நாமத்தை உபயோகிக்கவே மாட்டார்கள்; இவர்கள் கூட மறுபடியும் ஒருவேளை திரும்பி வரலாம். இப்படி வருவோர் கோடியில் ஒருவராய்த்தான் இருக்க முடியும். இப்படியாய் பெற்ற இரட்சிப்பை உதறித் தள்ளியவன், தேவ-கிறிஸ்தவ-ஊழியம் செய்யமாட்டான்; அப்படியே செய்தாலும் அது தேவ நாமத்தில் இருக்காது; அந்நிய நாமத்தில் தான் இருக்கும்.

"மத். 7:22ஐ எடுத்துக் கொண்டு, இயேசுவின் நாமத்தினாலே அற்புதங்கள் செய்தவன்; ஊழியம் செய்தவன், தேவனால் நரகத்திற்கு தள்ளப்படுகிறானே; அதுவும் அவன் அக்கிரமச் செய்கைக்காரனாமே! அக்கிரமச் செய்கைக்காரன் - பாவி - நிச்சயமாய் இரட்சிப்பை இழந்தவன் தானே! அவன் எப்படி இயேசுவின் நாமத்தில் அற்புதம் செய்ய முடியும்? அவன் பிசாசின் மகனல்லவா! அப்படியானால் அவன் செய்கிற அற்புதம் பிசாசினுடையதாகத் தானே இருக்க முடியும்!" - இது கேள்வி. அக்கிரமச் செய்கை என்றால், Lawlessness அதாவது சட்டத்திற்கு - வசனத்திற்கு விரோதமான செயலாகும். குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பது; பஸ்கா, அறுப்பின் பண்டிகை முதலான பண்டிகைகளைக் கொண்டாடுவது, மாற்றப்பட்ட ஆசாரிய ஊழியத்தை கைக்கொள்வது, மாறுபாடுள்ள சந்ததியை விட்டு வெளி வராமல் இருப்பது, அந்நிய நுகப்பிணைப்பு போன்ற பல காரியங்கள் அக்கிரமச் செய்கையாகும். இந்தக் காரியங்களை செய்கிறவர்கள், ஊழியக்காரராய் இருந்தால், தொடர்ந்து இயேசுவின் நாமத்தில் தான் ஊழியம் செய்வார்கள். ஆவியானவர் சகல சத்தியத்தையும் அவர்களுக்கு போதித்தும் மாற்றடையாதவர்களாய்க் காணப்படுகிறவர்களை விட்டு, தேவன் விலகவே மாட்டார். அவர், அவர்களுக்குள்ளேயே இருந்து துக்கித்துக் கொண்டுதான் இருப்பார் (எபே. 4:30). கரம் பிடித்த தேவன் நம்மை கைவிடுகிறதே இல்லை; பூமியின் கடைசி பரியந்தமும் நம்மோடுதான் இருப்பார் (யோசு. 1:5; மத். 28:18-20). ஒருவேளை நாம் விலகினாலும். அவர் நமக்காய் - நம் வரவுக்காய் காத்துக் கொண்டேயிருப்பார். கெட்ட குமாரன் கதையிலுள்ள அப்பா போல.

வேதத்திலே Sonship - புத்திர சுவீகாரம்; Fellowship - ஐக்கியம் என்ற இரண்டு அம்சங்கள் இரட்சிக்கப்பட்டோருக்கு உண்டு என அறிகிறோம். வசனமில்லாத-வசனத்திற்கு விரோதமாக ஊழியம் செய்பவன், தேவ ஐக்கியத்தை இழந்து போயிருப்பான். புத்திர சுவீகாரத்தை தக்க வைத்துக் கொண்டிருப்பான். அதனால் தானே இயேசுவின் நாமத்தால், வல்லமையால், மகிமையால் ஊழியம் செய்ய முடிகிறது. இப்படியாய் புத்திர சுவீகாரம் - Sonship இருக்கும் வரை தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவை (ரோ. 11:29; 6:23). வரங்களை தேவன் கொடுப்பதே அவர் சித்தப்படிதான் (1 கொரி. 12:11). வரங்கள் பெறுவதற்கு - அதன் மூலமாய் அற்புதம் செய்வதற்கு எந்த தகுதியும் தேவையில்லை. தேவனுடைய பிள்ளை என்ற நிலை இருந்தாலே போதும். வரங்கள், தகுதியில்லாதவர்களுக்கு கிருபையாய் கொடுப்பது. அதை தேவன் எந்த நிலையிலும் திரும்ப எடுக்கவே மாட்டார். அவர் கொடுக்கிற தேவன் தான்; திரும்ப எடுக்கிற தேவனே அல்ல. அதனாலேதான் அக்கிரமச் செய்கைக்காரர் களும் தாங்கள் பெற்றிருக்கும் வரங்களினாலே, இயேசுவின் நாமத்தினால் ஊழியம் செய்கிறார்கள்; அற்புதம் செய்கிறார்கள். ஆனாலும் இப்படிப்பட்டவர்களின் முடிவு பரிதாபமாயிருக்கிறது.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! அற்புதம், அடையாளம் நடப்பதை வைத்து யாரையும் எடை போடாதே; நம்பாதே. வரங்கள் கிருபையாய்க் கொடுக்கப்படுகிறது; கனிகளே பரலோகம் கொண்டு செல்லும். இரட்சிப்பை மறுதலித்துப் போனவன், இயேசுவின் நாமத்தை உச்சரிக்கவே மாட்டான். அவன் மீண்டும் ஒளியாகிய இயேசுவின் வேஷம் தரித்து வந்தாலும், நம்மால், வேத வெளிச்சத்தால் இனங்கண்டு கொள்ள முடியும். அவனாலும் இயேசுவின் நாமத்தால் ஊழியம் செய்ய முடியாது. ஆமென்.

❖ ❖ ❖

## இயேசுவின் பார்வையளிக்கும் அற்புதத்தில் குளறுபடிகளா?

மத். 20:29-34; மாற். 10:46-52; லூக். 18:35-43 போன்ற வசனங்களை வாசித்தால் இயேசு கிறிஸ்து குருடர்களுக்கு பார்வையளித்த ஒரே மாதிரியான நிகழ்ச்சி சொல்லப்பட்டிருக்கின்றதை அறியலாம். இயேசுவும் குருடர்களும் சொன்ன வார்த்தைகளையும், நடந்த இடமான எரிகோ நகரையும் மேற்போக்காக பார்க்கும் போது, மூன்று சுவிசேஷத்தில்

சொல்லப்பட்டதும் ஒரே நிகழ்ச்சிதான் என்று அறிய வாய்ப்புண்டு. ஆனால், மத்தேயு, இரண்டு குருடர்கள் என்றும், மாற்கு, பர்த்திமேயு என்ற ஒருவனை மட்டும் பெயரிட்டு அழைத்தும், லூக்கா ஒருவனை மட்டும் சொல்லி மற்றவனைப் பற்றி சொல்லாமலும் எழுதி இருப்பதை அறிகிறோம். மேலும், இயேசு எரிகோவுக்கு நுழையும் முன்பே சுகமளிக்கப்பட்டது என்று லூக்காவும், அந்த நகரத்தை விட்டு வெளியேறும் போது தான் சுகம் அளிக்கப்பட்டது என்று மத்தேயும் மாற்குவும் எழுதி இருக்கிறார்கள். அப்படியானால் "இந்த நிகழ்ச்சி ஏன் மாறி மாறி வித்தியாசமாய் - குளறுபடியாய் - எழுதப்பட்டுள்ளது; இது உண்மையாகத் தான் இருக்குமா" என்றெல்லாம் சந்தேகம் வர வாய்ப்பு உண்டல்லவா! இந்த கருகலான காரியத்தை ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

**இதிலே ஒரு வாதம்:-** (1) "இந்த மூன்று சுவிசேஷத்திலும் சொல்லப்பட்ட நிகழ்ச்சி ஒன்றுதான். இதிலே இரண்டு குருடர்கள் தான் சுகமடைந்தவர்கள். இந்த இருவரில் பர்த்திமேயு என்ற பெயருள்ள குருடன் மற்றவனை விட மிகவும் விறுவிறுப்பாய் இருந்ததால் அவன் பெயரை மட்டும் மாற்கு எழுதியிருக்கலாம். பர்த்திமேயு அல்லாத இன்னொரு குருடனைப்பற்றி லூக்காவும் முக்கியத்துவம் கொடுத்து எழுதவில்லை என்று சில வேத அறிஞர்கள் கூறுகிறார்கள். (2 'எரிகோ பட்டணம் இரண்டு உண்டு; ஏரோது சக்ரவர்த்தியால் பழைய எரிகோவுக்கு அருகிலேயே புதிய எரிகோ கட்டப்பட்டுள்ளது. இயேசு, பழைய எரிகோவை விட்டு வெளியே வந்து புதிய எரிகோவிலே நுழையும் போது சுகமடைந்திருக்கலாம். எனவே தான் மூவரும் எரிகோ பற்றி எழுதியது வித்தியாசமாய்த் தோன்றுகிறது' என்று ஒரு சில வேத அறிஞர்கள் கூறுகிறார்கள். இதனால் இயேசு பழைய எரிகோவுக்கு நுழையும் போது அவரை உரக்க சத்தமிட்டு அழைத்திருக்கலாம் என்றும் புதிய எரிகோவை விட்டு புறப்படும் போது பார்வையடைந்திருக்கலாம் என்றும் விளக்கமளிக்கப்படுகிறது. ஒரு வேளை இந்த இரண்டாவது விளக்கம் சரியாகத் தோன்றினாலும் முதல் விளக்கம் ஏற்றுக் கொள்ளும்படியாய் இல்லை.

**இன்னொரு வாதம்:-** (1) மத்தேயுவில் இரு குருடர்கள் இயேசுவிடம் பேசுகிறார்கள்; இயேசுவும் பன்மையிலேயே இருவரிடமும் கேள்வி கேட்டு, இருவருடைய கண்களையும் தொட்டு சுகமாக்கினார். மாற்கிலும் லூக்காவிலும் ஒருவன் தான் இயேசுவிடம் பேசுகிறான்; இயேசுவும் ஒருமையிலே தான் கேள்வி கேட்டு, கண்களைத் தொடாமல், "நீ போகலாம் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று சொன்னார். உடனே அவன்

பார்வையடைந்தான். (2) மேலும் எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில் சுகமானதாக மத்தேயும், மாற்கும், எரிகோவுக்கு சமீபமாய் வரும்போது சுகமானதாக எழுதியிருக்கிறார்கள். இந்த இரண்டையும் பார்க்கும்போது, இம் மூன்று விபரங்களும் ஒன்றல்ல என்றும், மூன்று தனிப்பட்ட நிகழ்ச்சிகள் என்றும் நாம் கருதலாம். இப்படிக் கருதும்போது மேல் பாராவில் சொன்ன வாதம் முழுவதும் அடிபட்டுப் போகிறது; மட்டுமல்ல, ஆவியானவர் அருளியது வேதம் என்பதாலும், நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே எழுதுவதாலும், ஒரே நிகழ்ச்சியானால் எழுத்தாளர்கள் மாறி, மாறி எழுதியிருப்பதாய் தோன்றினாலும், எழுத அருளிய ஆவியானவரைப் பற்றியும், எழுதிய தேவ மனுஷர்களைப் பற்றியும் சந்தேகமும், நம்பிக்கையின்மையும் வர வாய்ப்புண்டு. "கிட்டத்தட்ட ஒன்று போல் காணப்படுவது எப்படி மூன்று வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்று சொல்ல முடியும்?" என்று இன்னும் சந்தேகக் கேள்வி கேட்போருக்கு ஆவியானவர் மேலும் விளக்குகிறார். மத். 9:27-30ஐ வாசித்தால், அதிலே வரும் பார்வையளிக்கும் நிகழ்ச்சியும், மேலே சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் போல காணப்படுவதை உணரலாம். ஆனால் அது நடந்த இடம் இயேசுவின் வீட்டில். அப்படியானால் குருடர்களை குணமாக்கும் காரியம் 6 இடங்களில் வேதத்தில் உள்ளதே (மத். 9:27-31; 12:22; 20:29-34; மாற். 22-26; 10:46-52; லூக். 18:35-43). இஸ்ரேல் நாட்டில் குருடர்கள் அதிகமோ என்று சிந்திக்க வாய்ப்புண்டு. கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் நிறைந்த எரிகோ நகரில் மூன்று பார்வையளிக்கும் நிகழ்ச்சி நடத்திருப்பதில் ஆச்சரியமில்லை. மேலும் இன்றைக்கும் உலகில் கிழக்குப் பகுதியில் (Eastern) குருடும் கண் நோயும் சர்வ சாதாரணமாகும். 5ல் ஒருவருக்கு இப்படி இருப்பதாய் கணக்கெடுப்பு கூறுகிறது. சுவிசேஷத்தில், கணக்கிலே வேறுபாடுகள் - இடங்களிலே வேறுபாடுகள் காணப்பட்டால், அவைகள் வெவ்வேறு நிகழ்ச்சிகள் என்று கருதுவதே சாலச் சிறந்தது; அதுதான் வேதத்திற்கும் வேதத்தை எழுத வைத்த ஆவியானவருக்கும் மகிமை. ஆக, மேலே சொன்ன மூன்று நிகழ்ச்சிகளும் ஒன்றல்ல; வெவ்வேறானவை என்று ஆவியானவர் விளக்கியதற்கு கர்த்தருக்கு தோத்திரம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வேதத்தில் எதை வாசித்தாலும் ஆவியானவரின் ஒத்தாசையோடு வாசித்துப்பார். புரியாதவைகளும் புரியும்; தெரியாதவைகளும் தெரியும்; அல்லேலூயா!

❖ ❖ ❖

# இயேசுவை ஏற்றும் ஏனில்லை ஆசீர்வாதம்?

தேவனுடைய பிள்ளையே! இயேசுவை ஏற்றுக்கொண்டு, முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து, ஆவிக்குரிய சபையிலே இணைந்து, அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவிபெற்று, உத்தமமாய் ஜீவிக்கும் எத்தனையோ கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலே கவலை, கண்ணீர், கஷ்டம், வியாதி, வறுமை, வேதனை, கடன் பிரச்சனை, தோல்விகள், ஏமாற்றங்கள் ஏராளம் - ஏராளம். ஏன் அவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்கவில்லை? இவ்வுலக ஆசீர்வாதம் உத்தமக் கிறிஸ்தவனுக்கு கிடையாதா? அப்படியானால் நூறத்தனையாய் இம்மையிலே பெற்றுக் கொள்வோம் என்ற மாற். 10:28, 29 பொய்யா? தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ள வார்த்தையல்லவா? 3 யோ. 2; 1 யோ. 5:4; 1 கொரி. 15:57; ரோ. 8:36, 37 போன்ற வசனங்கள் எல்லாமே உண்மைதானே! இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

மனிதனுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள் எல்லாமே கிருபையினாலே, இரக்கத்தினாலே தானாகவே தேவனிடமிருந்து வந்து விடுவதல்ல. உபா. 11:26-28; 30:15,19ன்படி தேவன், ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் நமக்கு முன்னால் வைத்திருக்கிறார். தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தால் ஆசீர்வாதமும், கீழ்ப்படியாவிட்டால் சாபமும் நமக்கு தானாய் வரும். ஆக, ஆசீர்வாதம் என்பது நிபந்தனைக்குட்பட்டது (conditional) என்று அறிகிறோம். இப்படிப்பட்ட ஆசீர்வாதம் பழைய ஏற்பாட்டு இஸ்ரேல் மக்களுக்கும், புதிய ஏற்பட்டு விசுவாச மார்க்கத்தாராகிய நமக்கும் உண்டு (கலா. 3:7,9,14). இருதரத்தாருக்கும் நிபந்தனையோடு தான் கிடைக்கும். ஆதாமும் ஏவாளும் நன்மை தீமை அறியத்தக்க கனியை புசிக்க வேண்டாம் என்பது தேவனுடைய வார்த்தை (ஆதி. 2:17). இந்த வார்த்தைக்கு கீழ்ப்படியாவிட்டால், "புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" என்பது தேவன் சொன்ன சாபம். இந்த சாபத்தை, ஆதாமும் ஏவாளும் வசனத்திற்கு கீழ்ப்படியாமல் தாங்களே வருவித்துக் கொண்டார்கள். ஆமென். அவர்களுக்கு தேவன் சொன்ன வார்த்தையின் மேல் ஆரம்பத்தில் விசுவாசம் இருந்திருக்கலாம். இந்த விசுவாசம் பிசாசினால் மாற்றப்பட்டு, விசுவாசக் கிரியைக்குப் பதிலாக, அவிசுவாசக் கிரியை அவர்களிலிருந்து வெளிப்பட்டது. முடிவோ... சாபம். ஆக, கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று நாம் அறிந்தது நேற்றும் இன்றும் என்றும் உண்மைதானே (யாக். 2:19).

இதை இன்னும் கொஞ்சம் விசாலமாய் அறிவோம். இயேசுவை ஏற்றுக் கொண்டவன் விசுவாசிதானே! அவன் கீழ்ப்படிபவன் தானே!

அவனுக்கு ஏன் ஆசீர்வாதம் இல்லை. **பல ஊழியர்கள் சொல்கிறார்கள்:-** "இயேசு உனக்குள்-உன் வீட்டிற்குள்-வந்துவிட்டால் ஆசீர்வாதம் வந்துவிடும்" என்று. அதற்கு ஆதாரமாய் அவர்கள் சொல்லுகின்ற ஒன்றிரண்டு காரியங்களைப் பார்ப்போம். (1) "இயேசு கானாவூர் கல்யாணத்திற்கு வந்தார். ஆறு கற்சாடிகளிலிருந்த தண்ணீர் திராட்சை ரசமாக மாறியது. அப்படியே இயேசு உன்னில் வர இடங்கொடு; வந்துவிட்டால் தண்ணீர் மதுரமாகும்" என்பார்கள் (யோ. 2). இப்படி அவர்கள் சொல்வது கள்ள உபதேசம். இயேசு திருமணத்திற்கு வந்தார்; திராட்சை ரசம் இல்லாமற் போயிற்று. எப்போது ஆசீர்வாதமான திராட்சை ரசம் வந்தது? மரியாள் சொன்னபடி, (யோ. 2:5), இயேசு சொன்ன வார்த்தைகளை விசுவாசித்து, அந்த விசுவாசத்தை அப்படியே கிரியைகளில் காட்டினார்கள். எப்படி? திராட்சை ரசம் தீர்ந்து போன நேரத்தில், கால் கழுவ வைத்திருந்த 6 கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பினர். இயேசு சொன்ன வார்த்தையை விசுவாசித்து, மட்டுமல்ல... அந்த சாடிகளிலுள்ள தண்ணீரை பந்தி விசாரிப்புக்காரனிடமும் கொடுத்தார்கள் இயேசு சொன்ன வார்த்தையை விசுவாசித்து, முடிவோ... முந்தின ரசத்தைப் பார்க்கிலும் பிந்தின ரசம் அதிக சுவையாயிருந்தது. இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இயேசு உனக்குள் வந்தால் மட்டும் போதாது; அவரின் வார்த்தை உன்னில் கிரியை செய்தால் மட்டுமே உனக்கு ஆசீர்வாதம் வந்து சேரும். கிரியையில்லாத விசுவாசமோ, விசுவாசமில்லாத கிரியையோ தேவன் உனக்கென்று வைத்திருக்கும் இம்மைக்கும் மறுமைக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளவே உதவாது.

(2) மேலும், "இராத்திரி முழுவதும் பிரயாசப்பட்டும் மீன் கிடைக்காத பேதுருவின் படகில் இயேசு ஏறி அமர்ந்ததால், வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்கள் கிடைத்தன" (லூக். 5:1-6) என்று பல போதகர்கள் போதிக்கின்றனர். இது தவறான போதனை. நமக்குள் இயேசு வர வேண்டும் என்பது உண்மைதான். இயேசு படகில் ஏறி உட்கார்ந்த உடனேயே ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. அற்புதம் நடக்கவில்லை. பேதுரு, இயேசு சொன்னபடி பிரசங்கம் பண்ண படகை இயேசுவுக்கு விட்டுக் கொடுத்தான்; கரையிலிருந்து சற்றே தள்ளினான்; அவர் போதகத்தை விசுவாசித்துக் கேட்டிருந்தபடியாலே, ஆழத்திலே அந்த வலையைப் போடுங்கள் என்று இயேசு சொன்னதை விசுவாசித்தான். "இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன்" (லூக். 5:5) என்று விசுவாசித்து தேவனிடம் அறிக்கையிட்டபடியே செயலில் காட்டினான். கிரியையுள்ள விசுவாசம் ஜீவனாய் வெளிப்பட்டது; ஆசீர்வாதமாய் மீன்களை அளவுக்கதிகமாய்

பெற்றான். அல்லேலூயா! “இது இயேசுவின் வீடு; இயேசு இங்கே இருக்கிறார்” என்று விசுவாசித்துக் கொண்டேயிருந்தாலும், விசுவாசத்தை கிரியைகளிலே காட்டாத பட்சத்தில் ஆசீர்வாதம் வரவே வராது.

(3) மட்டுமல்ல... “மரித்த லாசருவின் கல்லறை இயேசு வரும் வரை துர்நாற்றம் வீசியது. வந்ததாலோ சந்தோச மணம் வீசியது” என்று பல ஊழியர்கள் போதிக்கின்றனர். இது தவறான போதனை. இயேசு கல்லறைக்கு வந்த உடனேயே ஆசீர்வாத மணம் வீசவில்லை. இயேசு சொன்ன யோ. 11:40ஐ விசுவாசித்து, லாசருவின் சகோதரிகள் கிரியைகளிலே காட்டினார்கள்; கல்லைப் புரட்டிப் போட்டார்கள். எதிர்பார்த்த மகிமையின் ஆசீர்வாதத்தை - அற்புதத்தை கண்டார்கள். அல்லேலூயா! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நாற்றமாய் இருக்கும் உன் பிரச்சனையிலிருந்து ஆசீர்வாத மணம் வேண்டுமா? இன்றே தேவனின் வார்த்தையை விசுவாசிக்கும் விசுவாசத்தை கிரியைகளிலே காட்டு. ஆசீர்வாதம் தானாய் வரும்.

அப்படியானால், இயேசு - இயேசுவின் பிரசன்னம் - நமக்குள், நம் வீட்டிற்குள், நம் வாழ்க்கையில் வரவேண்டாமா? இது கேள்வி. வர வேண்டும்; அது மிகவும் அத்தியாவசியமானது. ஆனால், நமக்காய் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிற இயேசு கிறிஸ்து (1 யோ. 2:1), எபி. 9:27ல் சொல்லப்பட்டபடி 2ம் வருகையில்தான் பூமிக்கு வருவார். அதுவரை அவர் யார் வீட்டிற்கும், சபைக்கும், யாருக்குள்ளும் வருவதும் இல்லை; வந்து தங்குவதுமில்லை. அப்படி யாராவது சொன்னால் அதை நம்பாதேயுங்கள். நமக்குள் தங்கி நமது சரீத்தை தேவனுடைய ஆலயமாக்கியவர் பரிசுத்த ஆவியானவர்தான் (1 கொரி. 6:19); இயேசு அல்ல. மேலே சொன்ன மூன்று நிகழ்ச்சிகளிலும் இயேசு சரீரப் பிரகாரமாய் வந்ததுபோல, இனி நமது ஒவ்வொரு காரியத்திலும் வரவே மாட்டார். இயேசு போகாமலே நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமானானே! யோ. 15:9ல் சொல்லப்பட்டபடி இயேசுவின் வார்த்தை தான் நமக்குள் தங்கியிருக்க வேண்டும். இயேசுதான் வார்த்தை; வார்த்தைதான் இயேசு என்று விசுவாசித்தால் இயேசுவின் வார்த்தை நம்மில் தங்கியிருக்கும்போது இயேசு தங்கியிருப்பதாக உணரலாம். இதை தான் “பிரசன்னம்” என்று சொல்கிறோம். ஒரு காதலன் காதலியைப் பார்த்து, “என் இதயத்தில் நீயிருக்கிறாய்” என்று சொல்லும்போது, அவளின் பிரசன்னம் அவளைப்பற்றிய உணர்வு-எண்ணம்-எல்லாம் அவன் இதயத்தில் இருக்கிறது என்று பொருள். அப்படியே இயேசுவின் வார்த்தை நம்மில் இருக்கும்போது, இயேசுவின் பிரசன்னத்தை உணர்கிறோம்; இயேசுவும்,

பிதாவும் நமக்குள்ளே வாசமாயிருப்பதாய் நினைக்கிறோம் (யோ. 14:23). இந்த நிலையில் உள்ள நாம் நமக்குள்ளே இருக்கும் வசன விசுவாசத்தை மேலே சொன்ன நிகழ்ச்சியில் உள்ளவர்கள் போல கிரியைகளில் காட்டும்போது, ஆசீர்வாத மழை தானாய்ப் பொழியும். இயேசுவாகிய வசனகிரியை இல்லாவிட்டால் ஆசீர்வாதம் நம்மை சேரவே சேராது. தேவ பிள்ளையே "இதுவரை நீ எப்படியோ இருந்திருக்கலாம். இன்று ஒப்புக்கொடு. உனக்குள்ளிருக்கும் இயேசுவாகிய வார்த்தையை, கிரியைகளிலே வெளி காட்டு. ஆசீர்வாதம் நிச்சயம்; தவறான - கள்ள - உபதேசத்தை கண்டு கொள்.

❖ ❖ ❖

## அவிசுவாசிகளுக்கு தீர்க்கதரிசனம் அவசியமா?

மத். 11:13ன்படி யோவான் ஸ்நானன் வரைக்கும் தீர்க்கதரிசனம் மலைகளிலும், தெருக்களிலும் அரசவை மண்டபங்களிலும், புறஜாதிகளிடமும் சொல்லப்பட்டு வந்தன. கிறிஸ்தவ சபை பிறந்த உடனே எபே. 4:11-13ன்படி, சபை பக்தி விருத்தி அடைவதற்காய் சபைக்குள்ளே தேவன் ஏற்படுத்திய 5 ஊழியங்களில் ஒன்றான தீர்க்கதரிசன ஊழியம் செயல்பட்டு வந்தது. தீர்க்கதரிசனத்தின் ஆவியுடைய விசுவாசிகளாகிய நாமெல்லாரும் சபைக்கு வெளியே செய்யும் ஊழியம் இயேசுவைக் குறித்த சாட்சி என்று நாமறிவோம் (வெளி. 19:10; அப். 1:8). இந்த நிலையில் 1 கொரி. 14:22-25 வசனங்களை வாசிக்கும்போது தீர்க்கதரிசனத்தால் அவிசுவாசியும் மாறுவான் என்றும், ஆனபடியால் தீர்க்கதரிசன ஊழியம் அவிசுவாசிக்கும் அவசியம் என்றும் நிதானிக்கலாமா என்ற சிந்தனை எழுவது இயற்கைதான். ஆவியானவர் தாமே இந்த கருகலான காரியத்தை மலரச் செய்வாராக!

1 கொரி. 14:22ன்படி அந்நியபாஷை அவிசுவாசிகள் மாற்றப் பயன்படும் என்றும் (ஏசா. 28:11) தீர்க்கதரிசனமோ விசுவாசிகளை பூரண புருஷராக்க, பக்திவிருத்திக்கு ஏதுவாக்கப் பயன்படும் என்றும் அறிகிறோம். வசனம் 24,25 எல்லாமே சபைக்குள் நடப்பதாகும். சபை என்றாலே இரட்சிக்கப்படுகிறவர் களின் கூட்டமாகும் (அப். 2:47). இவர்களோடு தான் தேவ ஆராதனை. (வச. 23,26-28). அன்றைக்கு மோசே பார்வோனிடம் விடுதலை கேட்டதே ஆராதனைக்காகத்தான் (யாத். 8:1; 9:1). அப்போது, எகிப்திலேயே பலியிடுங்கள் என்று பார்வேன் உத்தரவு கொடுத்தபோது மோசே சொன்ன வார்த்தைகளைப் பாருங்கள் (யாத். 8:25-28). அந்நியரோடு ஆராதனை

செய்வது அன்றும் இன்றும் தேவன் விரும்பாதது. அப்படியானால் 1 கொரி. 14:23, 24ஐப் பார்க்கும்போது சபையிலே அந்நியன் - அவிசுவாசி - இருப்பதாகத் தெரிகிறதே! இதைப் புரியுமுன்னே, கொரிந்து பட்டணம் பற்றி நாமறிய வேண்டும். இது நாகரீகம் நிறைந்த, செழிப்பான, அதே நேரத்தில் துன்மார்க்கம் பெருகிப்போன துறைமுகப்பட்டினம். கப்பலில் வருவோர் இளைப்பாறும் நகரம். இவர்கள் சபைக்கும் வரவாய்ப்புண்டு. இந்த சபையிலே வரமாகிய அந்நிய பாஷை பற்றியும், தீர்க்கதரிசனம் பற்றியும் பெரிய குளறுபடிகளும், பிரச்சனைகளும் இருந்தன. இதை சரியாய் விளங்க வைக்கவே பவுல் 14ம் அதிகாரத்தை எழுதுகிறான். பொதுவாக சபையிலே இரட்சிக்கப்படாதோரை ஆராதனைக்கு அழைப்பதே இல்லை. மோசே பலியிட - ஆராதனை செய்ய - புறப்பட்டுப் போனாலும், அந்த கூட்டத்திலே எகிப்தியனும் இருக்கிறானே! (யாத்.) அதே போல சபை ஆராதனையில் அந்நியர் இருக்க வாய்ப்புண்டு. அந்த எண்ணத்தில் தான் பவுல், "அவிசுவாசிகளாவது உள்ளே பிரவேசித்தால்..." (வச. 23) என்று எழுதுகிறான்.

**இங்கே உள்ள பிரவேசிக்க வாய்ப்புள்ள இருதரப்பாரைப் பற்றி பவுல் எழுதுகிறான்** (1) அறியாதவர்கள் - புரியாதவர்கள் (Some who do not understand) - இவர்கள் சபையாராகவும் இருக்கலாம்; அவிசுவாசியாகவும் இருக்கலாம். (2) அவிசுவாசிகள் (unbelievers) - இவர்கள் இரட்சிக்கப்படாதவர்களாகவும் இருக்கலாம்; இரட்சிக்கப்பட்டும் சில வசனங்களை விசுவாசிக்காதவர்களாகவும் இருக்கலாம். (பாவி என்று சொல்லும்போது இயேசுவை விசுவாசிக்காத பாவி என்றும் (யோ. 16:8,9) விசுவாசித்தும் உலகப் பாவங்களில் இருக்கும் பாவிகள் என்றும் (ரோ. 14:23; 1 யோ 5:16,17) சொல்லலாமல்லவா! நீதிமான் என்று சொல்லும் போதும் விசுவாசத்தால் நீதிமான், கிரியைகளால் நீதிமான் என்று இருவகை உண்டு அல்லவா! அப்படியே unbeliever - அவிசுவாசி என்பதை எடுத்துக் கொள்ளலாம்). ஒரு வேளை இரட்சிக்கப்படாதவர்கன் சபைக்குள்ளே வந்தாலும், சபையிலே அப்போது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும், தீர்க்கதரிசன ஊழியமானது, 1 கொரி. 14:22; எபே. 4:13ன்படி சபையாருக்காகத் தான் நடக்குமே ஒழிய, வந்திருக்கும் புறஜாதிக்காக நடக்காது. ஆமென். அப்படியானால் 1 கொரி. 14:24,25ஐ வாசித்தால் தீர்க்கதரிசனமானது வந்திருக்கும் அந்நியனுக்காகவும் சொல்லப்படுவது போல் தெரிகிறது அல்லவா. அவர்களுக்காகவா சபையிலே தீர்க்கதரிசன ஊழியத்தை தேவன் வைத்தார்? அல்லவே! நமக்காகத் தானே! அப்படியானால் இதன் விளக்கமென்ன?

சபையாருக்காய் தீர்க்கதரிசன ஊழியம் நடப்பதையும், அதனால் சபையிலுள்ளோர் பக்திவிருத்தி அடைவதையும், உணர்த்துவிக்கப்படுவதையும், சபையார் சீர்பொருந்துவதையும், ஒப்புக்கொடுப்பதையும், அறிக்கை யிடுவதையும் கண்கூடாய் புதிதாய் வருகிறவன் காண்கிறான். கண்ட மாத்திரத்திலே தன்னைப் பற்றியும் - தன் நிலையைப் பற்றியும் - சிந்திக்க வாய்ப்பு வருகின்றது. தானும் அப்படித்தானே என்று உணர முடிகிறது. பலகாலமாய் அவன் இதயத்தில் புழுங்கிக் கொண்டிருந்தவைகளுக்கு விளக்கம் கிடைத்திருக்கலாம். எனவே, "தேவன் என்னோடு பேசினார் என்று சொல்லாமல், தேவன் உங்களுக்குள்ளே இருக்கிறார் என்று சாட்சி கூற, அதனாலேயே பயத்தின் ஆவி அவனை மேற்கொண்டு, அவனை முகங்குப்புற விழ வைக்கிறது. இது பயமா, பக்தியா என்று நாம் சொல்ல முடியாது. இது எப்படி என்றால், பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுவது போல, நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் பாய்வது போல காணப்படுகிறது. இதனாலேயே தீர்க்கதரிசன ஊழியம் அவிசுவாசிக்கு தேவை என்று வாதிட முடியாது. Exceptional cases சட்டமாக முடியாது அல்லவா! நம் சாட்சிக் கிரியையால், புறஜாதியான் நம் தெய்வத்தைப் போற்றுவதில்லையா! ஈசாக் வெட்டிய துரவில் வரும் தண்ணீரைப் பார்த்து அபிமெலேக் சொன்னதைப் பாருங்கள்: "நிச்சயமாய் கர்த்தர் உம்மோடே இருக்கிறார் என்று கண்டோம்" (ஆதி. 26:28; 39:3). சபையிலே நடக்கும் சாட்சிகள், புதியவர்களுக்கு சாட்சியாய்க் காணப் படுகின்றது. இப்படியாய் சாட்சியாகமத்தைக் கண்டவர்கள், வேதத்தையும் காணும்போது தானே தேவ பிள்ளையாய் மாறுகிறார்கள்! (ஏசா. 8:20).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே, தீர்க்கதரிசின ஊழியம் இரட்சிக்கப்பட்ட விசுவாசிக்குத்தான் என்றும், அவிசுவாசியோ, கல்லாதவனோ வந்தால் (!?) ஒரு வேளை அவர்களுக்குள்ளும் விதை போடப்படலாம் என்றும், அது முளைக்கிற - இரட்சிக்கப்படுகிற - நிலைக்கு அப்போது இருக்க இயலாது என்றும் அறிகிறோம். ஆமென். எனவே தீர்க்கதரிசன ஊழியம், இரட்சிக்கப்படாதவர்களுக்கு தேவையில்லை என்றும், சபையாருக்குத்தான் என்றும் உறுதி கூறுவோம்.

❖ ❖ ❖

## கிறிஸ்தவனுக்கு தீபாவளி பண்டிகை உண்டா?

தேவ பிள்ளையே! ஊரெல்லாம் பட்டாசு வெடித்து, பண்டங்கள் பரிமாறிக் கொண்டு சந்தோஷமாய் இருக்கும் போது, கிறிஸ்தவன் மட்டும், அந்த தீபாவளியை கொண்டாடாமல் இருக்கலாமா? இது கேள்வி. வெறும்

கேள்வி மட்டும் அல்ல; நீண்ட காலமாய் விம்மிக் கொண்டு விரக்தியோடு வெளிக்காட்ட முடியாத கேள்வி. யாருக்கு இப்படி கேள்வி வரும்? ரோ. 10:9,10; 1 கொரி. 6:11; யோ. 3:3,5; 1 பேதுரு 1:23; யாக். 1:18 போன்ற பல வசனங்களின்படி ஆவியிலே மறுபடியும் பிறந்திருக்கும் புது சிருஷ்டிகளாக இரட்சிக்கப்பட்ட - ஆவிக்குரிய - கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே! மற்ற பெயர்க் கிறிஸ்தவர்களுக்கோ இந்த கேள்வி வராது; அப்படியே தப்பித்தவறி வந்தாலும் அதைப்பற்றி கவலைப்படுவதே இல்லை. "ஒருநாள் மட்டும் பிள்ளைகளின் சந்தோஷத்திற்காக கொண்டாடுவதிலே என்ன தவறு? கோவிலுக்கு போகிறேனா, படைக்கிறேனா? ஒன்றும் இல்லையே!" என்பார்கள். இப்படிப்பட்ட நிலையில் ஆவிக்குரிய கிறிஸ்தவன் என்ன செய்வது? ஆவியானவர் விளக்குவாராக!

லேவி. 23ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட 8 பண்டிகைகளும் கிறிஸ்துவுக்கு நிழலாட்டம். நிஜம் வந்த பிறகு நிழல்கள் தேவையில்லை என்பதால், ஒரு பண்டிகையும் தேவையில்லை என்று கொலோ. 2:16,17 சொல்கின்றது. இதனால் கிறிஸ்தவனுக்கு பண்டிகையே இல்லையே என்று வருந்தும் கிறிஸ்தவர்களை திருப்திப்படுத்த, வேண்டாமென்று சொல்லி ஒதுக்கப்பட்ட நிழலாட்டப் பண்டிகைகளான, அறுப்பின் பண்டிகை, பெந்தகொஸ்தே பண்டிகை, பஸ்கா பண்டிகை போன்றவற்றை ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையாரும் கொண்டாடுகின்றனர். இதுவுமல்லாமல், வேதத்திலே இல்லாத - ஆதி அப்போஸ்தலர் கூட ஆசரிக்காத - உலகப்பிரகாரமான, கிறிஸ்மஸ், ஈஸ்டர், கல்லறைத் திருவிழா (All souls day, All Saints day) போன்றவற்றையும் கொண்டாடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் எல்லோருமே தேவசித்தத்துக்கு விரோதமாய் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் பண்டிகை இல்லாமல் இருப்பதா தேவசித்தம்? தொடர்ந்து வாசியுங்கள்.

நரகாசுரன் என்ற அரக்கனை கிருஷ்ணர் அழித்து, தீமையைக் களைந்து விடுதலையைத் தந்தார் என்று தான் தீபாவளி நாளை இந்துக்கள் ஆசரிக்கின்றனர். இது சரித்திரமல்ல; கதை. நரகாசுரன் என்ற தீயவனைக் கொல்வதல்ல முடிவு. ஒரு மூட்டைப் பூச்சியை நசுக்கினால் ஓராயிரம் உருவாகும் என்று நாமறிவோமல்லவா! ஒரு தீயவனைக் கொல்வதால் தீமை அழியாது; ஆனாலும் அவன் போல வேறு பலரும் எழும்ப வாய்ப்புண்டு. எனவே நரகாசுரனை அழிப்பதல்ல முக்கியம்; அவனுக்குள்ளிருக்கும் பிசாசின் கிரியைகளை (satanism-சாத்தானிசம்) அழிப்பதே முக்கியம். பிரச்சனையையே தீர்க்க முயல்வதை விட பிரச்சனைக்கான காரணத்தை நீக்க முயல்வதே அறிவுடைமை. இயேசு படகிலே உறங்கிக் கொண்டிருந்த போது கடல் பொங்கி, படகும் அமிழும் நிலையில் அவரை எழுப்பினார்கள்.

அவரோ பொங்கியெழும் கடலலையை முதலில் அடக்காமல், கடல் பொங்கும் இந்த பிரச்சனைக்கு காரணமான காற்றை முதலில் அதட்டி அமர வைத்தார் (மாற். 4:39). ஆக தீமைக்கு காரண கர்த்தாவான பிசாசின் கிரியைகளை அழிக்காமல், வெறுமனே நரகாசுரனை (கடலலையை) அழித்து பயனேதுமில்லை. என்னவோ, இந்தப் பண்டிகை, நிஜமாயிருந்தாலும் சரி, கதையாயிருந்தாலும் சரி தெய்வீகப் பார்வையில் சரியில்லாதது. இப்படிப்பட்ட பண்டிகையிலே, சீட்டுப் போடுவதும், பட்டாசு வாங்குவதும், பல காரங்கள் பரிமாறுவதும், விருந்திலே பங்கு பெறுவதும் ஆவிக்குரிய கிறிஸ்தவனுக்கு ஏற்றது அல்ல. நம் தேவன் மாத்திரமே, தமது முதலாம் வருகையிலே, தீமைக்கு-அடிமைக்கு-தோல்விக்கு-அநியாயத்திற்கு காரணமான பிசாசின் கிரியைகளை அழிக்க வந்தார் (1 யோ. 3:8) அல்லேலூயா! இரண்டாம் முறை வந்து கிரியைக்குக் காரண கர்த்தாவானா பிசாசையே அழிக்கப் போகிறார் (வெளி. 20:10). இப்படிப்பட்ட விசுவாசமுள்ள நாம், கிருஷ்ணரின் காரியங்களை வெளிப்படுத்தும் தெய்வீகப் பார்வை இல்லாத செயலுக்கான பண்டிகையில் ஈடுபடலாமா? "நான் உலகத்தானல்லாதது போல நீங்களும் உலகத்தாரல்ல" (யோ. 17:16) என்ற வசனம் நம்மில் எழுதப்படவில்லையா? நரகாசுரன் போல, ஆமான் கொல்லப்பட்டதால் மகிழ்ந்து, இஸ்ரேல் மக்கள் பூரிம் பண்டிகை (எஸ்தர் 9:25-28) என்று கொண்டாடியதை நாமறிவோம். இதுவும் பிரச்சனைக்கான காரண கர்த்தாவான பிசாசின் சம்பந்தமானதாய் இல்லாததால் இந்தப் பண்டிகையை இஸ்ரேல் மக்கள் தொடர்ந்து கொண்டாடுவதில்லை.

இருண்டு கிடந்த-பிசாசின் ராஜ்யத்துக்குக்குள்ளிருந்த-மக்களுக்கு தீபமேற்ற வந்த மெய்யான ஒளிதான் இயேசு (யோ. 1:9). அந்தகார லோகாதிபதியின் அதிகாரங்களையெல்லாம் உரிந்து கொண்டு சிலுவையிலே வெற்றி சிறந்த போது தான் (கொலோ. 2:13,14) தீப ஒளி வீச ஆரம்பித்தது. அந்த தீப ஒளி ஏற்றப்பட்டதை அவர் வரும் வரைக்கும் நினைவு கூர வேண்டும் என்று தான் இயேசு சொல்லிவிட்டுப் போனார் (1 கொரி. 11:23-25). இதைத்தான் பண்டிகை என்று சொல்லி பவுல், கிறிஸ்தவர்களை ஆசரிக்கச் சொல்கிறான் (1 கொரி. 5:6,7). எப்படி ஆசரிப்பது? பழைய புளித்த மாவாகிய தீய காரியங்களோடு அல்ல; ஜீவிய மற்றும் உபதேச மாறுபாடுள்ள சந்ததிகளோடு அல்ல; (எகிப்திலே ஆராதனை செய்யாமல் வெளியில் வந்ததை நினைவு கூறுங்கள்) தினந்தோறும் நம்முள்ளே உருவாகும் துர்க்குணம், பொல்லாப்பு எனும் தீய குணங்களோடு அல்ல; துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத, பரிசுத்தமான அப்பத்தோடே இந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டும். இப்படியாய் பண்டிகையை ஆசரிப்பது நமது கடமையும்

உரிமையுமாகும். இது சபைக்கு தேவன் தந்திருக்கிற பண்டிகை. உலகப் பண்டிகைகள் எல்லாம் வருடத்திற்கு ஒரு முறைதான். ஆனால் இந்தப் பண்டிகையையோ, அவரின் மரண நினைவாய், தினந்தோறும் - காலை மாலையிலும் கூட - கொண்டாடலாம். அப்படிப் பார்த்தால் கிறிஸ்தவனுக்கு தினந்தோறும் பண்டிகை. அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! தினந்தோறும் பண்டிகை கொண்டாட கொடுத்து வைத்திருக்கிறாய்! நீ பாக்கியவான்! அல்லாமலும் இந்தப் பண்டிகையை தனி மனிதனாகவும் ஒவ்வொரு மணித்துளியும் கூட ஆசரிக்கலாம். எப்படி? ஜீவனுள்ள வார்த்தையாகிய அப்பத்தை உட்கொள்ளும் போது - தியானிக்கும் போது. இப்படி ஆசரிப்பது ஆவிக்குரிய ரீதியில், சபையாரால் இராப் போஜனத்தோடு ஆசரிப்பது ஆவிக்குரிய ரீதியோடு மட்டுமல்ல; சரீரப் பிரகாரமாயும் ஆசரிப்பதாகும். தேவன் எதிர்பார்ப்பது இதுதானே! இதை ஆசரித்து தேவனின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாய் நிற்போம்! ஆமென். இந்தப் பண்டிகை ஆசரிப்பிலே குடும்பமாய் மகிழ்ந்திருப்போம்.

❖ ❖ ❖

## படைப்பிலே நல்லதல்ல – அது எது?

ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருளடைந்திருந்த இந்த உலகை (ஆதி. 1:2) சீர்ப்படுத்தி செம்மைப்படுத்தி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாய் உருவாக்கி ஆறாம் நாளிலே மனிதனைப் படைத்து வாழ வைத்த நம் தேவனின் படைப்பெல்லாம் நல்லது என்று கண்டார் (அதி. 1:31). முதலாம் நாள் வெளிச்சத்தை உண்டாக்கி நல்லது என்று கண்டார் (ஆதி. 1:4). ஜல சமுத்திரத்தையும், வெட்டாந்தரையையும் உருவாக்கி நல்லது என்று 3ம் நாள் கண்டார் (ஆதி. 1:10). அன்றைக்கே கனி விருச்சங்களையும், புல் பூண்டுகளையும் உண்டாக்கி நல்லது என்று கண்டார் (ஆதி. 1:12). சந்திரனையும், சூரியனையும் ஆகாய விரிவிலே வைத்து நல்லது என்று 4ம் நாள் கண்டார் (ஆதி. 1:18). மச்சங்களையும், நீர்வாழும் ஜந்துக்களையும், பட்சிகளையும் 5ம் நாள் சிருஷ்டித்து நல்லது என்று கண்டார் (ஆதி. 1:21). மிருகங்களையும் காட்டு பிராணிகளையும் 6ம் நாள் சிருஷ்டித்து நல்லது என்று கண்டார் (ஆதி. 1:25) அன்றே மனுஷனையும் படைத்து, படைத்த எல்லாமே அவருக்கு நன்றாயிருந்தது என்று சொன்னார். அப்படியிருக்க அவரது படைப்பிலே எது நல்லதல்ல? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே விளக்குவாராக!

இதை அறியுமுன்னே நம் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை அறிய வேண்டும். தேவன் மாத்திரமே நல்லவர் என்று லூக். 18:19 சொல்கின்றது. அவர் நற்கிரியைகளைச் செய்கிறவர் (எபே. 2:10; யாக். 1:17). மனிதனாய் வந்த போதும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தவர் (அப். 10:38). இந்த தேவனின் படைப்பிலே நல்லதல்லாத ஒன்று எப்படி இருக்க முடியும்? மனிதன் பாவம் செய்வான் என்று முன்னறிந்திருந்தும் (Fore knowledge) பாவம் பூமியிலே பெருகினதையும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததானதையும் தேவன் கண்ட போதும், மனிதனைப் படைத்தது நல்லதல்ல என்று சொல்லவில்லை. பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார் (ஆதி. 6:5,6). நல்லவனாய்ப் படைக்கப்பட்டவன் சுய இச்சையினாலே பிசாசாடு இணைந்து கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பித்து, அந்தப் பாவத்திலே பூரணப்பட்டு 2ம் மரணத்தை பிறப்பித்துக் கொண்டதாலே (யாக். 1:14,15) இருதயத்திலே விசனப்பட்டார். மற்றப்படி மனிதனைப் படைத்தது நல்லதல்ல என்று சொல்லவே இல்லை.

மட்டுமல்ல... 1ம் நாள், 3ம் நாள், 4ம் நாள், 5ம் நாள், 6ம் நாள் படைப்பின் காரியங்களை நல்லது என்று கண்ட தேவன், 2ம் நாளிலே உருவாக்கப்பட்டதை நல்லதல்ல என்று சொல்லாமல், அப்படியே விட்டுவிட்டார். ஏன்? அந்த நாளில் அவர் செய்தது என்ன? நாம் இப்போது காண்கின்ற நீர் மேகம் நிறை ஆகாய விரிவாகிய வானத்தைத்தான் உண்டாக்கினார். இந்த வானம் உருவாகும்போது அதற்கு மேலே இருக்கும் 2ம் வானத்திலுள்ள பிசாசின் கூட்டங்களைக் கண்டிருக்கிறார் (எபே. 6:12; வெளி. 12:7). அங்கிருந்து, இந்த வானம் மற்றும் பூமியை பிசாசு ஆளப் போகிறான் என்று தேவன் முன்னறிந்து கண்டதாலேயே (2 கொரி. 4:4) அதை நல்லதல்ல என்று சொல்லாமல், நல்லதாக இருக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு உருவாக்கி மகிழ்ந்தார். அப்படியானால் அவர் நல்லதல்ல என்று கண்டது எது?

தேவன் ஆதாமையும் ஏவாளையும் ஆவிக்குரிய ரீதியிலே சிருஷ்டித்து (ஆதி. 1:26,27) பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்றார் (ஆதி. 1:28). பின்பு மண்ணினாலே ஆதாமின் சரீரத்தை உருவாக்கி, அதற்குள்ளே உள்ளான மனுஷனாம் ஆவிக்குரிய ரீதியில் படைக்கப்பட்டதை (2 கொரி. 4:16) வைத்து, சுவாசம் கொடுத்து (ஆதி. 2:7) நம்மைப்போல ஏதேனிலே உலாவ வைத்தார். ஆதாமோ நம்மைப் போல சரீரத்தோடு; ஏவாளோ ஆவிக்குரிய நிலையிலே; ஆதாம் தேவனின் விருப்பப்படி, ஜோடி ஜோடியாய்

மண்ணாலே உருவாக்கப்பட்ட மிருகங்கள் பறவைகளுக்குப் பேரிடுகிறான். பேரிடும் போது அவைகளின் சரீரப் பிரகாரமான பல காட்சிகளை அவன் கண்டிருக்கக் கூடும். அப்போது மனதிலே தனக்கும் ஏவாள், சரீரப் பிரகாரமான நிலையில் இல்லையே என்று மனதிற்குள்ளே எண்ணியிருக்கக் கூடும். ஏவாள் ஆவிக்குரிய ரீதியில் இருந்ததால் இருவரும் சரீரப் பிரகாரமாய் பறவைகள் போல இணைந்து ஆதி. 1:28ல் சொல்லப்பட்டபடி பலுகிப் பெருக முடியாதல்லவா! மனிதன் முகத்தைப் பார்க்கிறான், தேவனோ, உள்ளத்தின் ஆழத்தின் எண்ணங்களையும் ஏக்கங்களையும் அறிகிறவர். அப்படியே ஆதாமை தேவன் அறிந்ததினால், சரீரப் பிரகாரமான ஒரு துணை இருந்து மற்ற ஜீவராசிகளைப் போல வாழ முடியாவில்லையே என்று எண்ணி, “ஆதாமுக்கோ ஏற்ற துணை (சரீரப்பிரகாரமான) இன்னும் காணப்படவில்லை” என்று மோசேயை எழுத வைத்தார் (ஆதி. 2:20). இப்படிப்பட்ட நிலை வரும் என்று முன்னறிந்து தான், ஆதி. 2:18லேயே, “மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை உண்டாக்குவேன்” என்று சொன்னார். பிரச்சனையையும் உணர்ந்து, அதற்கேற்ற தீர்வையும் முன் கூட்டியே நிதானிக்கிற தேவன் நம் தேவன். அல்லேலூயா! அதனால் தானே, பாவம் நிறை உலகத் தோற்றத்திற்கு முன்னமேயே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாய் வார்த்தையாகிய தேவன் ஆக்கப்பட்டார் (வெளி. 13:8). அல்லேலூயா! அண்ட சராசரங்களையும் படைத்து நல்லதென்று கண்டும், சரீரப் பிரகாரமான மனிதனின் விருப்பத்துக்கு ஏற்றதாக இல்லாத - சரீரப்பிரகாரமான பெண் துணை இல்லாத - நிலையைக் கண்டு, மனிதன் தனிமையாய் நிறுத்தப்பட்டிருப்பது நல்லதல்ல என்று முன்கூட்டியே உணர்ந்து, முன்னுரைத்தார். ஆக எந்த அளவிற்கு மனிதனின் விருப்பத்திற்கு இசைந்து கொடுக்கிறார் என்று பாருங்கள்! மனிதனுக்கேற்றபடியே, தன் செயல்பாட்டை “நல்லதல்ல” என்று சொல்லும் நம் தேவனின் அன்பைப் பாருங்கள்! இந்த தேவன், நம் விருப்பத்திற்கும் வேண்டுதலுக்கும் மேலாய்ச் செய்கிறவர் என்று சொல்வது முற்றிலும் உண்மைதானே! (எபே. 3:20).

ஆதாமின் விருப்பப்படியே - தேவனின் முன்னறிவின்படியே - சரீரப் பிரகாரமான ஏவாளை உருவாக்கினார். ஆமென் (ஆதி. 2:21-23). இப்படியாய் ஆணையும் பெண்ணையும் உருவாக்கி, மனிதனுக்கு இருந்த குறைவை நீக்கி, படைப்பிலே, “நல்லதல்ல” என்று எதையுமே, மண்ணாலான மனிதன் கூட நினைக்க முடியாதபடி செய்த அன்பின் தேவனுக்கு கோடா கோடி தோத்திரம். நிலைமை இப்படியிருக்க, விவாகம் பண்ணக்கூடாது என்று [illegible]ள்ள உபதேசப் பொய்யர் போதிக்கிறார்கள்

(1 தீமோ. 4:2,3), உடலுறவு பாவமென்று சங். 51:5ஐ வைத்துப் போதிக்கிறார்கள். விவாகம் பற்றி, புருஷன்-மனைவி வாழ்க்கைப்பற்றி வரம் பெற்றவர்கள் (Gifted persons) புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்வார்கள் (மத். 19:11). ஆமென். பரிசுத்தமான விவாக மஞ்சத்தை - தேவன் ஏற்படுத்தியதை - நல்லது என்று அவர் கண்டதை அசிங்கப்படுத்தலாமா? (எபி. 13:4).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! ஆணும் பெண்ணுமாய் உடலுறவு கொண்டு வாழ வேண்டும் என்பது தேவசித்தம். இப்படி இல்லாதிருப்பது படைப்பிலேயே நல்லதல்ல. மற்றப்படி ஊழியத்தினிமித்தம் அண்ணகர்களாக்கிக் கொள்வது அல்லது பரலோக ராஜ்யத்தினிமித்தம் அண்ணகர்களாக்கிக் கொள்வது ஒவ்வொருரின் தனிப்பட்ட காரியம் (மத். 19:12). ஆக, ஆணுக்கேற்ற துணை இல்லாதிருப்பது நல்லதல்ல என்று தேவன் கண்டார். இப்படிப்பட்ட சுதந்திரம் கிடைத்ததை ரோ. 1:24-32ல் சொல்லியபடி உபயோகித்தால் முடிவு பரிதாபம்....

❖ ❖ ❖

## மோதிரமும் செருப்பும் அணிவது பாவமா?

தலைப்பைப் பார்த்து கூட உடனே பலருக்கு பலவிதமான எண்ணங்கள் ஆசிரியரின் மேல் உதிக்கும் என்று என் ஆவியிலே உணர்கிறேன். ஆனாலும் தயவு செய்து இந்த செய்தியை சிரமம் பாராமல் வசன வெளிப்பாட்டோடு படிக்க வேண்டுகின்றேன். பெரும்பாலான ஆவிக்குரிய சபைகளில் தங்கம், வெள்ளியிலான ஆபரணங்களை அணிவது பாவம் என்றும், கனவீனம் என்றும் அப்படிப்பட்டவர்கள் தங்கள் பரிசுத்தத்தை இழந்து போகிறார்கள் என்றும் போதிக்கப்படுகிறது. சில சபைகளில் தங்கமே பாவம் என்றும் சொல்லப்படுகிறது. மட்டுமல்ல.... பெரும்பாலான சபைகளில் சர்ச்சுக்குள், ஆராதனையில் செருப்பு போடக்கூடாது என்றும், அது பரிசுத்தக் குலைச்சலான காரியம் என்றும் கருதப்படுகின்றது ஐயப்ப பக்தர்களின் செருப்பு போடாத பக்தி போல! மோதிரம் மாற்றிக் கொண்டு திருமணம் முடிக்கும் சபைகளும் உண்டு. அவைகளை ஏளனமாய் எண்ணும் சபைகளும் உண்டு. விலையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்தலாகாது என்று ஏழ்மையின் ரூபத்தை வெளிக்காட்ட வேண்டும் என்கின்ற சபைகளும் உண்டு. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஆவியானவர் போதிப்பதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.

ஏதேனிலேயே தங்கத்தை விளைய வைத்த தேவன் (ஆதி. 2:11), விசுவாச மார்க்கத்தின் தகப்பனை, ரெபேக்காளுக்கு பொற் காதணியையும், பொற்கடகங்களையும் கொடுக்க வைத்த தேவன் (ஆதி. 24:22,30) எகிப்தாகிய இருளினின்று ஆச்சரியமான ஒளியினிடமாய் இஸ்ரேலலை அழைத்து வரும்போதே பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் தரிப்பித்து வரச் செய்த தேவன் (யாத். 3:22), பரலோக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பொன்னினாலே ஆராதனைத் தூதனை நவரத்தினங்களோடு அலங்காரம் பண்ணிப் பார்த்த தேவன் (எசே. 28:13), பொன்னுக்கும் பொன்னினாலான பொருட்களை அணிவதற்கும் விரோதியாய் புதிய ஏற்பாட்டில் மாறிவிட்டாரா! சிந்தியுங்கள். இயேசு சொன்ன கெட்ட குமாரன் கதையை மறுபடியும் வாசியுங்கள். உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, அவனுக்கு உடுத்தி, அவன் கைக்கு மோதிரத்தையும் போடுங்கள் என்று தகப்பன் சொல்வதாக இயேசு சொல்கிறாரே, மோதிரமும் செருப்பும் பாவம் என்றால், கனவீனம் என்றால் அப்படி அவர் சொல்லியிருக்க மாட்டாரே! (லூக். 15:22). இயேசு கிறிஸ்துவே மோதிரம் போடுவதையும், செருப்பு அணிவதையும், உயர்ந்த வஸ்திரம் உடுப்பதையும் ஆமோதிக்கும் போது இடையிலே நின்று தடை போடுகின்றவர்கள் யார்? மத். 6:28-30ஐ வாசியுங்கள். இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கே சாலமோனுக்கு மேலாய் தேவன் உடுத்துவித்தால் நமக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா! அழகான தேவ பிள்ளையை அழகாய்ப் பார்க்க தேவனே விரும்பும் போது, இடையிலே குழப்பம் செய்யும் யாரிந்த பூசாரிகள்! மோதிரம் மற்றும் ஆபரணம் அணிவதும், பாதரட்சைகள் போடுவதும் பற்றி வேதம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்.

பார்வோனின் சொப்பனத்திற்கு சரியாய் வியாக்கியானம் செய்த யோசேப்புக்கு அந்த ராஜா கொடுத்தது என்ன? தன் கையில் போட்டிருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய வஸ்திரங்களை உடுத்தி, பொன் சரப்பணியை அவன் கழுத்திலே தரிப்பித்தான் ராஜா. இது யோசேப்புக்கு கிடைத்த மதிப்பும், மரியாதையும், கனமும் மகிமையும், பெருமையுமாகும். (Honour & Dignity). மோதிரம் போடுவது பாவமென்றால் யோசேப்பு தடுத்திருக்கலாம் அல்லவா! ஆக மோதிரம் போடுவது மதிப்பையும் கௌரவத்தையும் உண்டாக்குகிறது என்று அறிகிறோம். இதனால்தான் சில சபைகளில் மணமகனும் மணமகளும் மோதிரம் மாற்றும் வழக்கம் வந்ததோ என எண்ணத் தோன்றுகிறது. ஆமானுக்குப் போட்ட மோதிரத்தை அகாஸ்வேரு ராஜா கழற்றி, மொர்தகாய்க்குப் போட்டதும் இதே முறையில்தான் என அறிகிறோம்

(எஸ்.8:2,15; 3:10). காலங்காலமாய் மோதிரத்தால் முத்திரை போடுவது கனத்துக்குரியதாயிருந்தது (தானி. 6:17). பொன்னை அணிகிறவன் இஸ்ரேலரைப் போல எகிப்தின் அடிமையிலிருந்து சுதந்திரமடைகின்றவன். சுதந்திரம் இல்லாமல் துக்கிக்கிறவன் ஆபரணங்களையும், விலையுயர்ந்த வஸ்திரங்களையும் அணியமாட்டான். சில வேளைகளில் இரட்டு உடுத்தி சாம்பலில் அமர்வான். இப்படித்தான் பொன்னால் கன்றுக்குட்டியை உருவாக்கி வணங்கிய இஸ்ரேலரைப் பார்த்து தேவன் சொன்ன துக்கமான வார்த்தைகளாலே ஒருவரும் ஆபரணங்களைப் போட்டுக் கொள்ளவில்லை என்று அறிக! (யாக். 33:3,4). உலக சபைகளில் கூட பொன் மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் ஒரு சிறப்பைத் தருகிறது என அறியலாம்! (யாக். 2:2). குணசாலியான ஸ்திரீக்குக்கூட இரத்தாம்பரம், மதிப்பையும் மரியாதையும் தருகிறது (நீதி. 31:22-25). கெட்ட குமாரனுக்குக் கூட பொன் மோதிரம் மதிப்பையும், மரியாதையையும், கனத்தையும் தருகிறது. ஆமென்.

மேலும் பல சபைகளில் ஆராதனையின்போது பாதரட்சை போடுவது தேவனைக் கனவீனப்படுத்துகிற காரியம் என்று எண்ணுகிறார்கள். ஆனால் அதே சபைகளில் வெளிநாட்டவர் காலணியோடு வந்தால் அதைக் கண்டு கொள்வதில்லை. தேவனுடைய பார்வையில் ஆளுக்கொரு சட்டமா? அவர் பட்சபாதம் இல்லாதவராயிற்றே! ஏசா. 20:2ஐ வாசியுங்கள். சுதந்திரமில்லாத போது, விடுதலையாகாமல் அடிமையாய் இருக்கும் போது பாதரட்சைகளை கழற்றுவது தொன்று தொட்டு பாரம்பரியம். நம் கிராமங்களில் கூட இன்னும் அடிமை நிலையிலிருக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், உயர்ந்த ஜாதிக்காரர்கள் மத்தியில் செருப்பு போடாத நிலை இருப்பதை அறிவோமே! விடுதலையோடு இருப்பவன் கழற்றத் தேவையில்லை. கெட்ட குமாரனும் விடுதலை கிடைத்த பிறகு தான் பாதரட்சை போடப்படுகிறான். அல்லேலூயா! ஆக, விடுதலைப் பெற்ற தேவ பிள்ளைகள் பாதரட்சையை கழற்றாமல் ஊழியம் செய்யலாம், தவறில்லை. ஆனால் நமது சபைகளிலே எல்லோருமே தரையிலே உட்கார வேண்டியிருப்பதால், தரையிலோ, தரை விரிப்பிலோ அழுக்கடைந்து விடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் தான் செருப்பை வெளியே கழற்றி வைக்கிறோமேயல்லாமல், வேறொன்றுக்காகவும் இல்லை. மோசேயை மட்டும் தேவன் கழற்றச் சொன்னாரே (யாத். 3:5) என்று நீங்கள் கேட்கலாம். மோசே, தேவனுக்கு செய்யப் போகிற பழைய ஏற்பாட்டு ஊழியம் மரணத்துக்கேதுவான ஊழியம்; அடிமைநிலை ஊழியம் (2 கொரி. 3:7-16; கலா. 4:22-25) அடிமை ஊழியத்தின் போது பாதரட்சை போட முடியுமா? (See ஏசா. 20:2). நாமோ இப்போது விடுதலையின் ஊழியம் செய்வதால்

செருப்போடு ஆராதிப்பது பாவமல்ல; மற்றபடி சுகாதாரத்துக்கு உட்பட்டு செயல்படுவது நல்லது. (பாதரட்சை அணிவது குறித்த செய்தியை ஆசிரியரின் மற்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியுங்கள்).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! விடுதலை ஊழியம் செய்யும் நமக்கு, மோதிரம் பாவமல்ல, பாதரட்சை சாபமல்ல. மனிதன் முகத்தைப் பார்த்து தீர்ப்பதுண்டு; தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார். சாந்தமும் அமைதலும் உள்ள ஆவியாகிய இருதயத்தில் உள்ள நற்குணம் என்ற அலங்காரம் இல்லாத போது (1 பேதுரு 3:4) மோதிரமோ, பொன்னோ, பாதரட்சையோ தேவையில்லை. தேவன் விரும்பும் நற்குணம் நம்மில் இருக்கும் போது, மோதிரத்தையோ பாதரட்சையோ அணிந்து கொள்வது பாவமில்லை. அதனால், நான் அணிந்தே தீருவேன் என்பதோ, அணியாதவனைப் பாவி என்பதோ அல்லது அணியாமல் வைராக்கியம் காட்டுவதோ, அணிந்தவனுக்கு பரிசுத்தம் போய்விட்டது குறைந்துவிட்டது என்று சொல்வதோ மனிதனின் மூளையில் உண்டானது; வசனம் நிறைந்த ஆவியாகிய இருதயத்தில் உண்டாகவில்லை. ஆவிக்குரியவனாய் இருப்போம்; ஆண்டவனின் வசனத்தில் நடப்போம். அல்லேலூயா!

❖ ❖ ❖

## இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்தாரா?

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை (எபி. 9:22) என்று வேதம் சொல்கின்றது. இதை விசுவாசித்து வரப்போகிற மேசியாவாகிய இயேசுவின் இரத்தம் எல்லாருடைய பாவத்திற்கும் மன்னிப்பு தரும் என்பதற்கு அடையாளமாக ஆதிப்பிதாக்கள் காளை, வெள்ளாட்டுக்கடா போன்றவற்றைப் பலியிட்டார்கள். அந்த இரத்தம் அவர்களின் பாவங்களை மூடியதே ஒழிய (சங். 32:1; ரோ. 4:7) பாவங்கள் அழிக்கப்படவில்லை. அதனால்தான் பாவங்கள் உண்டென்ற உறுத்துதலினால் வருஷந்தோறும் இஸ்ரேலர் நினைவு கூர வேண்டியிருந்தது. (எபி. 10:1-4) ஆனால் இயேசுவோ தன் இரத்தத்தினால் ஒரே தரம் பாடுபட்டு மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்ததினாலே, நம்மனைவரின் பாவங்களும் நீக்கப்பட்டன; அவரும் வருஷாவருஷம் பலியாகத் தேவையில்லாததால் அவரது இரத்தம் விசேஷித்தமானதல்லவா! மாசற்ற பாவமற்ற இரத்தமல்லவா! விலையேறப் பெற்ற இரத்தமல்லவா! இன்னும் ஜீவிக்கிற இரத்தமல்லவா! (மத். 27:4; 1 பேதுரு 1:19; எபி. 12:2-4). இது தேவனின் இரத்தம் என்று

அப். 20:28 சொல்கின்றது. ஸ்திரியின் வயிற்றில் பிறந்த மனுஷகுமாரனின் இரத்தம் எப்படி இவ்வளவு மகிமையுள்ளதாயிருக்க முடியும்? இது கேள்வி. ஸ்திரியின் வயிற்றில் பிறந்தால்தான், மனிதன் என்று சொல்ல முடியும் என்பதால் ஸ்திரியின் வயிற்றில் இயேசு பிறந்தார். ஆனால் இவர் நம்மைப் போல் மரியாளுக்கும், யோசேப்புக்கும் பிறக்கவில்லை; ஒரு கன்னி கழிந்த பெண்ணின் வயிற்றுக்குள்ளிருந்தும் பிறக்கவில்லை. பரிசுத்த ஆவியினாலே, கன்னிமரியாளின் வயிற்றில் உற்பத்தியாகிப் பிறந்தார். அதிசய தேவன் அதிசயமாகவே பிறந்தார். இயேசுவின் மனிதரூபம் அடிமையின் ரூபம் (பிலி. 2:7) அது பரலோகிலேயே ஆயத்தம் பண்ணப்பட்டு மரியாள் வயிற்றில் வைக்கப்பட்டு வளர்ந்தது (எபி. 10:5) அல்லேலூயா! அதனாலே அது பரிசுத்தமானது என்று வேதம் சொல்கின்றது (லூக். 1:35).

அப்படியானால் ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பதெல்லாம் பரிசுத்தமானது இல்லையா! இது கேள்வி. ஆதாமின் பாவத்தினாலே உலகில் பிறக்கும் அனைவரும் பாவிகளாகப்படுகிறார்கள் (ரோ. 5:19). இது வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்குட்பட்ட (1 தீமோ. 2:14) ஏவாளின் பாவத்தினால் அல்ல. ஏன் ஏவாளின் பாவம் மனுக்குலத்திற்கு வரவில்லையா? ஆணின் விந்து சினை முட்டையோடு இணைந்து கரு உண்டானாலும், குழந்தை பிறப்பது ஆணின் இரத்தத்தால்தான்; ஆணின் வித்தால்தான். குழந்தையின் ஜீவனே ஆணின் வித்திலிருந்துதான் உருவாகிறது. எல்லா மாம்சங்களின் உயிரெல்லாம் - ஜீவன் - இரத்தம் எல்லாமே ஆணின் வித்தில்தான் உள்ளது. ஆண் வித்துதான் குழந்தை பிறப்பிற்கு மூலாதாரம். ஒரு விதையை நிலத்தில் விதைக்கிறோம். வளருகின்ற செடி அல்லது மரத்திற்கு வித்து, நிலமா அல்லது விதையா? வளரும் செடியின் விதையாகிய வித்தின்படிதானே செடி இருக்கும்! மாங்கொட்டை போட்டால் பனை மரமா வரும்? நிலம் என்பது பெண்ணைப் போன்றது. அது போல பாவ ஆதாம் சந்ததியில் பிறக்கும் எல்லோருமே ஆதாமின் பாவ வித்தால் உருவாகிறார்கள்; பாவ ஜாதியாகிறார்கள்; இதைத்தான் தாவீது, நான் துர்க்குணத்தில் உருவானேன்; (சங். 51:5) என்று சொல்லுகிறான். இது உடலுறவைக் குறிக்கவில்லை. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாகவும், விவாகம் அசுசியப்படாததாயு மிருப்பதாக (எபி. 13:4) என்ற வசனத்தின்படி விவாகம் பரிசுத்தமுள்ளது உடலுறவு பாவமல்ல என அறியலாம். இப்படியாய் ஆதாமின் பாவ ஜாதியில், பாவ வித்தில் பிறக்காமல் கன்னியின் வயிற்றில் தேவனாலே பாவமில்லாமல் பிறந்தவர் இயேசு ஒருவரே! மற்றப்படி ஆணுக்குப் பிறந்த அத்தனை பேருக்குள்ளும் ஆதாமின் பாவ வித்து - பாவ ரத்தம் உள்ளது என்று

அறியுங்கள். மத். 1ஐ வாசித்தால் ஆண்கள்தான் பிள்ளைகளைப் பெற்றதாக எழுதியிருப்பது இந்த அர்த்தத்தில் தான் என்று உணரலாம். கன்னி மரியாள் ஆணுக்குத்தான் - ஆதாமின் பரம்பரையின் வித்தால்தான் - பாவ இரத்தத்தினால்தான் பிறந்திருப்பதால், மரியாளின் இரத்தம் பாவ ஜாதியின் இரத்தம் தானே! அப்படியானால் இந்த மரியாளின் இரத்தம் கருவிலிருந்த இயேசுவின் இரத்தத்தோடு இணைந்திருந்தால், இயேசுவின் இரத்தமும், பாவ இரத்தமாயிருக்குமே! அப்படி ஆகியிருந்தால் உலகின் பாவங்களை இந்த இயேசுவின் இரத்தம் தீர்க்க முடியாதே! மட்டுமல்லாமல் பரிசுத்த ஆவியினால் கன்னி மரியாளுக்குள் அவர் இருந்து பிறந்திருக்க தேவையில்லையே! சிந்தியுங்கள். பரிசுத்த இரத்தம் மட்டுமே பாவங்களை மன்னிக்கும். அல்லேலூயா! தாய்க்கும் கருவிலுள்ள குழந்தைக்கும் சத்துணவை அளிக்கும் தொப்புள் கொடிதான் தொடர்பு. சிலர் நினைக்கிறார்கள். ரோ. 3:23,24; 1 கொரி. 6:11; ரோம. 10:9,10ன்படி விசுவாசத்தால் நீதிமானாய் ஆனது போல், மரியாளும் விசுவாசத்தால் நீதிமானாய் ஆகியிருக்கலாம் என்றும், அதனால் மரியாளின் இரத்தம் பாவ இரத்தம் இல்லையென்றும், இந்த இரத்தம், இயேசுவுக்குள்ளே நுழைந்து இருக்கும் என்றும், அந்த மரியாளின் இரத்தமும் சேர்ந்துதான் பாவமன்னிப்பிற்கு வழி வகுக்கிறது என்றும் கருதுகிறார்கள். ஆண் விந்தின்படி ஜீவனும் அந்த ஜீவன் இரத்தத்திற்குள்ளும் உள்ளபடியால் இந்த கருத்து விஞ்ஞான அடிப்படையில் ஒத்து வராது. மேலும் இப்படி நீதிமானாய் ஆக்கப்படுகிறவர்கள் உள்ளான மனுஷனில் தான் - அதுவும் ஆவியில்தான் ஆகிறார்கள் என்றும், ஆத்மாவில் தினந்தோறும் மறுரூபமாகிறார்கள் என்றும், சரீரம் வருகையில்தான் மாற்றப்படும் என்றும் வேதம் திட்டமும் தெளிவுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அதுவரை இந்த சரீரம் மண்ணுக்குரியது - அழிந்து போகிறது என்றும் இந்த சரீரம் மூலம் வரும் விந்தோ, இரத்தமோ ஆதாமின் பாவ ஜாதிக்கு உட்பட்டதுதான் என்றும் முந்தி அறிக. மரியாளின் சரீரமும் இப்படிப்பட்டதுதானே! அப்படி இல்லையென்றால் இரட்சிக்கப்பட்ட நமக்குப் பிறக்கும் பிள்ளைகள் நன்மை, தீமை அறிகிற நிலைக்கு வந்தாலும், அவர்கள் பாவிகள் அல்ல என்று சொல்லி, இரட்சிப்புக்குள் நடத்தாமல் இருக்கலாமல்லவா! நன்மை தீமை அறியும் வரை குழந்தைகள், ஆவி ஆத்மா சரீரம் ஆகிய அனைத்திலும் **பரிசுத்தமா யிருக்கலாம்! இந்த பரிசுத்தம் தூய்மையைக் குறிக்கவில்லை;** பிரித்தெடுக்கப்பட்ட - Setapart - நிலையை குறிக்கிறது. ஆனால் ஆதாமின் பாவ சந்ததியின் இரத்தம் இருக்கிறது என்ற உணர்வு வந்தாலே, இயேசுவின் பரிசுத்த இரத்தம் மட்டுமே எல்லோருக்கும் ஜீவனைத் தரும் என்று உணர வேண்டும். ஆமென்.

அடுத்து, “எரே. 1:5ல் எரேமியாவை கர்ப்பத்திலேயே பரிசுத்த மாக்கினது போல, மரியாள் போன்ற பலரையும் தேவன் கர்ப்பத்திலேயே பரிசுத்தமாக்கி இருப்பாரே; அதனால் அப்படிப்பட்டவர்களுக்குள் ஆதாமின் பரம்பரைப் பாவ ரத்தம் இருக்காதே!” என்று சிலர் வாதிடுகிறார்கள். “இயேசுவின் இரத்தம் மட்டுமே பாவ மன்னிப்பை தர முடியும். இந்த இரத்தம் இல்லாமல் வேறு இரத்தத்திற்கு இருக்க வழிவகுப்பவர்கள்; அவிசுவாசத்திற்கு வித்திடுபவர்கள். பரிசுத்தம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. (1) பிரித்தெடுக்கப்படுதல் (2) தூய்மை. விசுவாசமில்லாமல் யாரும் பரிசுத்தமாக முடியாது என்பதால், எரேமியா குழந்தை விசுவாசிக்க முடியாது; தூய்மை நிறை பரிசுத்தம் என்ற நிலைக்கு வரவும் முடியாது. எனவே எரே. 1:5ல் சொல்லப்பட்டது கர்ப்பத்திலேயே தேவன் எரேமியாவை பிரித்தெடுத்திருக்கிறார் என்று பொருள். ஆமென். விக்கிரக ஆராதனை மற்றும் விபச்சாரம் செய்த இஸ்ரவேல் மக்களை “பரிசுத்த ஜனம்” (உபா. 7:6; லேவி. 20:26) என்று தேவன் அழைத்தது தூய்மையால் அல்ல; பிரித்தெடுக்கப் பட்டதாலே! ஆமென். ஏழாம் நாளையும் இப்படி தனிமைப்படுத்தி - பிரித்தெடுக்கப்பட்டதால் தான் அதை பரிசுத்தப்படுத்தினார் என்று வேதம் சொல்கின்றது (ஆதி. 2:3). இப்படித்தான் நம்மையும், பல தேவ மனுஷர்களையும் தாயின் கர்ப்பத்திலேயே தெரிந்து கொண்டிருக்கிறார் (ஏசா. 49:1,5) மற்றப்படி தூய்மையாக்கவில்லை.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு ஒருவர்தான் பாவமில்லாமல் பிறந்ததால், அவரின் ஒரே இரத்தம் மட்டுமே பாவ மன்னிப்பை தருகிறது. இப்படி பாவமில்லாமல் பிறந்த இயேசு உன்னையும் என்னையும் இரட்சிக்க நம் பாவங்களை சுமந்து நமக்காய் பாவமாக்கப்பட்டு பாவியாய்த் தொங்கினார் (2 கொரி. 5:21). அதனால்தானே என்னை ஏன் கைவிட்டீர் என்று சிலுவையில் கதறினார்! பாவ நிவாரண பலியும் இவரே; பாவ நிவிர்த்தி உண்டாக்குபவரும் இவரே! (லேவி. 16:9,10). பரிசுத்தரும் இவரே; குற்றவாளியானவரும் இவரே; நியாயாதிபதியும் இவரே; நமக்காய் வழக்காடும் வழக்கறிஞரும் இவரே! இவரில்லையெனில் வேறு யாராவது இவரைப் போல பாவமில்லாமல் பிறந்திருந்தால் அவரையே தெய்வமாக ஏற்றுக் கொள்ளலாமே! அப்படி யாருமில்லையே! சிந்தியுங்கள்.

❖ ❖ ❖

# கிறிஸ்தவன் வட்டி வாங்கலாமா?

கிறிஸ்தவன் பேங்கில் பணம் போடும்போது அவன் வட்டி தருகின்றான். பிராவிடன்ட்பண்ட், சொசைட்டி போன்றவைகளிலும் வட்டி வருகின்றது. இந்த வட்டிப் பணங்களை கிறிஸ்தவன் வாங்கலாமா? என்பது கேள்வி. இதற்குப் பல போதகர்கள் பல மாதிரியாக பதில் சொல்வதால் முடிவாய் கிறிஸ்தவனுக்கு ஒன்றும் தெரியாமல் திகைக்கின்றான். சங். 15:5ஐ வாசித்தால் வட்டி வாங்காமல் இருப்பவனே பரலோகம் போவான் என்று உள்ளது. அப்படியானால் 100க்கு 90 கிறிஸ்தவர்கள் கர்த்தரின் பரிசுத்த கூடாரத்தில் தங்கப் போவது இல்லையா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

நியாயப் பிரமாணத்தை தேவன் தரும்போது, கடனாக கொடுக்கிற பணத்துக்கும், ஆகாரத்துக்கும், கடனாகக் கொடுக்கிற வேறே எந்தப் பொருளுக்கும் உன் சகோதரர் கையில் வட்டி வாங்காயாக என்று உபா. 23:19ல் சொல்லியிருககிறார் (நெகே. 5:7ஐயும் பார்க்க) யார் சகோதரன்? இரத்த சம்பந்தமானவனா? இல்லை... இல்லை... மத். 12:46-50ஐ வாசியுங்கள். பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தப்படி செய்கிறவனே சகோதரன். விசுவாசியே சகோதரன். இரட்சிக்கப்பட்டவனே சகோதரன். அப்படியானால் மற்ற புற ஜாதியானிடம் வட்டி வாங்கலாமா? அந்நியன் கையில் வட்டி வாங்கலாம் என்று உபா. 23:20 சொல்கின்றது. "நியாயப் பிரமாணம் நம்மை ஆள்வதில்லை. இயேசுவின் உபதேசமும், அப்போஸ்தலர் உபதேசமும் போதும்" என்று சொல்லும் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ சபையாரும் "10 கற்பனை மட்டுமே நம்மை ஆள்கிறது; மற்ற மோசேயின் நியாயப் பிரமாணம் நமக்கு தேவையில்லை" என்று சொல்லும் 7ம் நாள் அட்வெந்த் போன்ற சபையாரும், அந்நியர் கையில் வட்டி வாங்கலாம் என்ற நியாயப்பிரமாணத்தை ஏற்றுக் கொள்ள முடியாதே! இயேசு கிறிஸ்து மத். 25ல் பரலோக ராஜ்யத்தைப் பற்றி கூறும்போது, புறதேசத்துக்குப் பிரயாணம் போகிற மனுஷன் 5 தாலந்து, 2 தாலந்து, ஒரு தாலந்து என்று மூவரிடத்தில் கொடுத்துப் போனான் என்றும் ஒரு தாலந்து பெற்றவன் நிலத்தை தோண்டி புதைத்து வைத்தான் என்றும் சொல்கிறார். அப்படிப் புதைத்தவனிடம் "ஏன் பணத்தை காசுக்காரர் வசத்தில் போட்டு வைத்திருந்தால் வட்டியோடே வாங்கிக் கொள்வேனே" என்று எஜமான் சொல்கிறான் (மத். 25:27). அப்படியானால் காசுக்காரர் வசம் (Bank) வட்டி வாங்கலாம் என்று இயேசு கோடிட்டுக் காட்டுகிறார் என அறிகிறோம். இரண்டு ஏற்பாடுகளுக்கும் பொதுவான நீதி. 28:8ல் அநியாய வட்டியினால்

ஆஸ்தியைப் பெருக்கக் கூடாது என்று உள்ளது. இதன் பொருள் நியாயமான வட்டியினால் ஆஸ்தியைப் பெருக்கலாம் என்பதுதானே! அதாவது சகோதரர் கையில் வட்டி வாங்காமல், அந்நியர் கையில் நியாயமான வட்டி வாங்கலாம் என்று தெரிகிறது.

அப்படி என்றால் வட்டி வாங்காமல் இருக்க வேண்டும் என்று சங். 15:5 சொல்வது தவறாகுமா? தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்கக்கூடாது என்பது தான் தேவசித்தம். இஸ்ரேலரின் இருதயத் கடினத்தினிமித்தம் தள்ளுதற்சீட்டை கொடுத்து விவாகரத்து செய்யலாம் என்று அதே தேவன் மோசே மூலம், பிரமாணம் தந்தார். அதே தேவன் மனிதனாய் வந்த போது விபச்சார முகாந்திரமில்லாமல் விவகாரத்தே பண்ணக் கூடாது என்றார் (மத். 19:4-9). அதுபோல வட்டி யாரிடமும் வாங்காதிருப்பது மிகவும் நல்லது; அந்நியரிடம் நியாயமாய் வாங்குவது தவறில்லை. திருமணம் செய்யாமல் ஊழியம் செய்வது மிகவும் நல்லது; திருமணம் செய்து ஊழியம் செய்வது தவறில்லை. நகை போடுவது தவறில்லை; நகை போடாதிருப்பது மிகவும் நல்லது. போஜனம் சாப்பிடுவது தவறில்லை; ஆனால் போஜனப் பிரியமே தவறு; ஐஸ்வர்யம் வைத்திருப்து தவறில்லை. ஆனால் ஐஸ்வரிய இச்சையே பாவம்.

இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே! உனக்கு சுயாதீனம் கொடுத்தாயிற்று. எதிலும் மேன்மையானதையே எடுத்துக் கொள்ள முயற்சிப்போம்! ஆவியானவர் தாமே வழிநடத்துவார் உன் விசுவாச அளவுக்கேற்றபடி! ஆமென்.

❖ ❖ ❖

## எல்லாத் தீங்கையும் கர்த்தர் நம்மேல் வரப்பண்ணுகிறாரா?

இந்தக் கேள்விக்குண்டான பதிலை பல கிறிஸ்தவர்களால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. நாம் அவரின் பிள்ளைகள் (யோ. 1:12); அவரின் சுதந்திரத்திற்கு உட்பட்ட புத்திரர் (ரோ. 8:15); அவரின் கண்மணியைப் போன்றவர்கள் (சக. 2:8); சுவிசேஷர்களின் பாதம் எவ்வளவு அழகாயிருக்கிறது என்று நம் பாதத்தையே வர்ணிக்கிற அளவுக்கு உயர்த்தப்பட்டவர்கள் (ஏசா. 52:7; ரோ. 10:15); அவரின் மனையாட்டி நாம்; உன்னதங்களில் அவரோடுகூட உட்கார வைக்கப்பட்டிருப்பவர்கள் நாம் (எபே. 2:7); அவர் அடிமையின் ரூபமெடுத்து (பிலி. 2:7) மரித்து

உயிர்த்தெழுந்து பரிந்து பேசிக் கொண்டிருப்பது நமக்காக; மீண்டும் வரப் போவதும் நமக்காகவே. இந்த தேவன் எல்லா தீங்கையும் நம்மேல் வரப்பண்ணுகிறாரா? யோபு 42:11ல் கர்த்தர் யோபுவின் மேல் வரப்பண்ணின தீங்கினிமித்தம் அவனுக்காக அவனது உறவினர்கள், நண்பர்கள் அங்கலாய்த்தார்கள் என்று எழுதப்பட்டிருப்பதால் யோபுக்கு தீங்கு வரப் பண்ணினவர் தேவனா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

சங்காரத்தூதன் தேவனிடம் உண்டு; தேவனால் நன்மையும் செய்ய முடியும்; தீமையும் செய்ய முடியும். எகிப்திலே ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டவர்கள் அவருடைய பிள்ளைகள்; எனவே சங்கார தூதன் அவர்களை அணுகவில்லை. புறஜாதியாராகிய எகிப்தியரின் வீட்டில் தான் தலைச்சன்கள் மரித்துப் போயின. தீமைகளில் எல்லாம் பெரிய பொல்லாங்கானது மரணம் தான். மரணத்திற்கு மிஞ்சிய தீமை ஒன்றுமே இல்லை. இதையே தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வரப் பண்ணவில்லையே! (யாத். 12:23); தேவனின் குணாதிசயமே நன்மை செய்வது (எபே. 2:10); அவர் மனிதனாய் வந்தபோது நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் (அப். 10:38); நன்மையான எந்த ஈவும் தேவனிடமிருந்து வருகிறது (யாக். 1:17). அவர் ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தார் (யோ. 10:10). கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்தால்தான் புரியும் (சங். 34:8) பிசாசு பொல்லாங்கன்; சோதனைக்காரன்; பொல்லாங்கான தீமைகளைக் கொடுப்பவன்; அதற்கென்றே தேவனால் உலகத் தோற்றத்திற்கு முன்பே உத்திரவு பெற்றுக் கொண்டவன் (யோ. 10:10; யாக். 1:13). தீமையினின்று இரட்சிக்கிறவர் இவர் (மத். 6:13). எகிப்தியருக்கு உண்டான ஒன்றையும் உங்களுக்கு வரப் பண்ணேன் என்று உறுதியளித்தவர் மாறுவாரா? பிசாசின் பொல்லாங்கான காரியங்களை சிலுவையில் ஒழித்து (1 யோ. 3:8). நம்மை அவருடைய ராஜ்யத்துக்குள் அழைத்தவர். தாம் ஒழித்ததையே மறுபடியும் நம்மேல் வரப்பண்ணுவாரா? அப்படிப் பண்ணினால் அவர் ஒழித்தது வீணல்லவா! அப்படியானால் யோபு 42:11ல் சொல்லப்பட்டதன் அர்த்தம் என்ன? யோபுக்கு தீங்கு வந்தது எப்படி?

யோபுக்கு வியாதியைக் கொடுத்தவன் பிசாசு; தேவனல்ல (யோபு 2:7). யோபுவின் திராட்சைத் தோட்டமும், ஆடுமாடுகளும், பிள்ளைகளும் அழிந்தது எப்படி? "தேவனுடைய அக்கினி வானத்திலிருந்து வந்து சுட்டெரித்தது" என்ற வேலைக்காரனின் வார்த்தை உண்மைதானா? (யோபு 1:16). "கர்த்தர்

எடுத்தார்'' என்ற யோபுவின் வார்த்தை உண்மைதானா? ''தேவன் கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமா'' என்ற யோபுவின் வார்த்தையில் உண்மை உண்டா? (யோபு 2:10). நமக்கு ஒளியூட்டுகிற தேவன் இருளைத் தருவாரா? நம்மை ராஜாவாக்குகிறவர் நம் சிரசின் கிரீடத்தை எடுத்துப் போடுவாரா? விசுவாசத்தை உருவாக்கி வளர்க்கிறவர் நம்பிக்கையில்லாமல் நம்மை ஆக்குவாரா? யூதாசை பிராண சிநேகிதன் என்றவர் அவர் நம்மை சத்துருவாக எண்ணுவாரா? (யோ.1; 1 பேதுரு 2:9; எபி. 12:1). யோபு 19:8-11 வரை உள்ள அவிசுவாச வார்த்தைகளை நிதானித்துப் பாருங்கள். ஏன் என்னை பிறக்க வைத்தாய் என்று கேட்கிறானே! (யோபு 10:18). இளைப்பாறுதல் தரக்கூடிய தேவனைப் பார்த்து (மத். 11:28) ''என்னை விட்டு ஓய்ந்திரும்; நான் இளைப்பாற வேண்டும்'' என்கிறானே! (யோபு 10:22). அவனுடைய விசுவாசத்தின்படியே அவனுக்கு சம்பவித்தது (லூக். 7:50; யோபு 3:25,26). யோபுவின் இப்படிப்பட்ட அறிக்கைகளெல்லாம் அவனுக்கு தெரியாத, புத்திக்கு எட்டாத அலப்பல் வார்த்தைகள் என்று தேவனிடமே அறிக்கையிடுவதை யோபு 42:3ல் படித்த பிறகும் அவனின் வார்த்தைகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கும்போது, வேத வசனப்படி ஆராய்ந்து உணர்ந்து புரிந்து கொள்ளவில்லையென்று புரிகிறதல்லவா! நிறைய பேர், கர்த்தர் தீமைகளைக் கொடுக்காமல், பிசாசைக் கொடுக்க சொல்லி அனுமதிக்கிறார் என்று பிரசங்கிக்கிறார்கள். தேவன் தீமையை வருவிப்பதுமில்லை; ஒவ்வொரு வருக்கும் அப்போதைக்கப்போது அனுமதிப்பதும் இல்லை. உலகத் தோற்றத்திற்கு முன்பே பிசாசுக்கு திருடவும், கொல்லவும், அழிக்கவும் அதிகாரம் கொடுத்தாயிற்று. யோபு 1ம் அதிகாரத்தை வாசியுங்கள். யோபுவுக்கு வேலியடைத்து தேவன் காக்கிறார் என்று பிசாசு சொல்லும் வார்த்தையை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நம்பி அதைச் சொல்கிறார்கள். வேலியடைப்பதும், பின் வேலியை எடுத்துவிட்டு பிசாசை தீமை செய்ய அனுமதிப்பதும், மனிதன் தேவனை நோக்கி கதறி அழும்போது மறுபடியும் வேலியைப் போடுவதும் தேவன் செயலா? அது நாரதர் வேலையல்லவா! பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவதா? ஆபேலுக்கு தேவனின் வேலியிருந்திருந்தால் காயீன் எப்படி கொலை செய்வான்? ஏதேனிலே ஏவாளுக்கு வேலியிருந்திருந்தால் சாத்தான் எப்படி அவளை ஏமாற்றுவான்; ஏசா. 59:2ஐ தியானியுங்கள். வசனம் நிறைந்த விசுவாசத்தாலே நாமே ஆவியானவரின் துணையோடு நம்மைச் சுற்றி வேலியடைக்க வேண்டும். அதுதான் சர்வாயுதவர்க்கம் தரிப்பது. விசுவாசம் குறையைக் குறைய வேலி எடுபடும்; பிசாசு உள்ளே வந்து விடுவான்.

இப்படித்தான் யோபுவுக்கு ஆயிற்று. யோபுவைத் தொட்டு அவனுக்குத் தீமை செய்தால் அவன் தேவனைத் தூஷிப்பான் என்று பிசாசு சொன்ன போது தேவன் சொன்ன வார்த்தை என்ன? பிசாசு உலகின் அதிபதி. யோபு உலகில் இருக்கின்றான். அவனுக்கு உண்டானவைகளெல்லாம் பிசாசின் கையிலிருக்கிறது. அப்படியிருக்க, உலகத் தோற்றத்தின் போதே அழிக்க அதிகாரம் பெற்ற அவனே அந்த தீமையை செய்யலாமே; ஏன் தேவனை செய்யச் சொல்கிறான். தேவன் தன் பிள்ளைகளை இப்படியாய் தீமைக்குள் நடத்துகிறார் என்று உலகம் அறியட்டும் என்று சொல்லியிருக்கிறான். நம் தேவனோ அன்புள்ளவர்; சாத்தானால் யோபுவின் சரீரத்தை தொட முடியும்; மரணத்தின் அதிபதி உயிரையும் மாய்க்க முடியும். ஆனால் அன்பு தேவன் முதல் முறை சரீரத்தை தொடதே என்கிறார்; 2ம் முறை உயிரைத் தொடாதே என்கிறார் (1 யோ. 2:26). இவரல்லவோ இரட்சகர்! இந்த இரட்சகரை, பிசாசு செய்யும் பணியைச் செய்பவரென்றோ அல்லது அதற்கு நம்மீது அனுமதி கொடுப்பவர் என்றோ சொல்வது தேவனை அவமாக்குவது அல்லவா!

இன்னும் விவரமாகப் படிப்போம். உபா. 11:26-30; 19:15 போன்ற வசனங்களின்படி ஆசீர்வாதத்தையும் சாபத்தையும், நன்மையையும் தீமையையும் ஜீவனையும் மரணத்தையும் தேவன் நம்முன்னே வைத்திருக்கிறார். அதைச் சுதந்தரிப்பது நாம். பொல்லாங்கானதெல்லாம் சாபம்; தீமையானதெல்லாம் சாபம்; நன்மையானதெல்லாம் ஆசீர்வாதம். உபா. 28ஐ வாசித்தால் நிறைய ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் அறியலாம். உபா. 28:2,15,11,27,28 போன்ற வசனங்களின்படி பார்த்தால் வேத வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிந்தால் சாபம் வராது என அறிகிறோம். ஏவாள் ஆதி. 3:4ன்படி பிசாசின் வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிந்ததால் ஆதி. 2:17ல் சொல்லப்பட்ட சாபம் வந்தது. அதை தேவன் கொடுக்கவில்லை. சாபத்தால் ஆவியிலே இருவரும் மரித்தார்கள் (எபே. 2:1). உபா. 28ஐ வாசித்தால், "கர்த்தர், கொள்ளை நோய் உன்னைப் பிடித்துக் கொள்ளப் பண்ணுவார்" (வச.21); "கர்த்தர் ஈளையினாலும் காய்ச்சலினாலும் வாதிப்பார்" (வ.22); "கர்த்தர் எரிபந்தமான பருக்களாலும் மூலவியாதியாலும், சொறியினாலும், சிரங்கினாலும், புத்தி மயக்கத்தினாலும், இருட்டாட்டத் தினாலும் வாதிப்பார்" (வச.27,28); "நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும், நீ அழியுமளவும் கர்த்தர் உன்மேல் வரப் பண்ணுவார்" (வச.61) என்று பல தீங்குகள் சொல்லப் பட்டுள்ளது. இந்த தீங்கெல்லாம் சாபமென்றும், இவைகளை கர்த்தர் நம் முன் வைத்திருக்கிறார் என்றும், அதைச் சுதந்தரித்து நாம் தான் பெற்றுக் கொள்ள வேண்டும் வேண்டும் என்றும் சொன்ன தேவன், அதை அவரே கொடுப்பதாக

எழுதப்பட்டுள்ளதே, அவரே கொடுப்பாரா? நமது வசன கீழ்ப்படியாமை யினாலே - வசன அவிசுவாசத்தினாலே நாம் சுதந்தரித்துக் கொள்ளும் சாபங்களை தேவன் தரவே மாட்டார். அவர் தருகிறார் என்றால் கீழ்ப்படிதலோடு கூடிய விசுவாசம் தேவை என்று சொல்வது தவறு போல் ஆகிறதல்லவா! வசன விசுவாசம் தேவை (எபி. 12:1) என்று விரும்புகிற தேவன் நிச்சயமாய் தீமையான சாபங்களைத் தரவே மாட்டார் என்பது திண்ணம். எப்படி நாம் சுதந்தரிக்கும் ஆசீர்வாதங்களை தேவன் தருகிறார் என்று **ஆதி. 14:19; சங். 37:22; 128:5; உபா. 28:11** போன்ற பல வசனங்களில் சொல்லப்பட்டுள்ளதோ அப்படியே நாம் சுதந்தரிக்கும் சாபத்தை தேவன் தருகிறார் என்று எழுதப்பட்டுள்ளது. நிச்சயமாய் அப்படி எழுதப்படுகிறது சரியல்ல; தேவன் தீமையானவைகளைத் தருவதில்லை. அவைகள் சாபமானால் அவைகளை நாமே சுதந்தரித்துக் கொள்கிறோம்; அல்லது பிசாசு பொல்லாங்கு செய்ய இடமளிக்கிறோம் என்று பொருள். ஒரு போலீஸ்காரர், "இடது புறம் போனால் நன்மை வரும்; வலதுபுறம் போனால் ஆக்சிடென்ட் வரும்" என்று சொல்லியும் நாம் வலது புறமே போய் விபத்தில் மாட்டிக் கொண்டால் அந்த விபத்தை போலீஸ்காரர் தான் தந்தார் என்று சொல்வது எப்படி தவறானதோ அப்படியே தீமையை தேவன் தன் பிள்ளைகள் மேல் வருவிக்கிறார் என்று சொல்வதும் தவறு! இப்படித்தான் யோபு 42:11ல் எழுதப்பட்டுள்ளது என்று அறிகிறோம்.

இந்த கருகலான சத்தியத்தை இன்னும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமானால், தேவனின் நன்மையும், பரிபூரணமான சித்தமும் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நம் மனமாகிய ஆத்மா வசனத்தால் தினந்தோறும் மறுரூபமாக வேண்டும் (ரோ. 12:2; யாக். 1:21). அப்போது தான் நம் ஆத்மா வாழும்; செழிக்கும். அதன்மூலம் நாம் செழிப்போம். சுகத்தோடு வாழ முடியும் (3 யோ. 2). தீமையான காரியத்தை ஏற்கனவே தேவன் நம்முன்னே வைத்திருந்தால், அவைகள் தேவன் "வரப் பண்ணினார், பண்ணுவார்" என்ற வார்த்தைகளின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மேலோட்டமாய் வசனங்களை படித்து அறிந்து கொள்ளாதபடிக்கு, அவைகளின் ஆழமான சத்தியங்களை ஆவியானவரின் ஒத்தாசையோடு அறிந்து கொள்ள தேவன் வழி திறப்பாராக! தாகமுள்ளவன் மேல் தண்ணீர் ஊற்றப்படும்; ஜீவத் தண்ணீர் ஊற்றப்படும். சத்தியத்தை சத்தியமாய் புரிந்து கொள்வோம்! தம்முடைய பிள்ளைமேல் தீங்கை வரவழைக்க ஒருக்காலும் தேவன் விரும்புவதே இல்லை; சிட்சை என்பது தீங்கை வரவழைத்து புத்தி புகட்டுவது அல்ல என்ற உண்மையை முந்தி

அறிவோம். அதை அறிந்துவிட்டால், தேவன் தீமையை வரவழைக்கிறார் என்ற வார்த்தையை அப்படியே எடுக்காதபடி நம் மனக்கண்கள் பிரகாசமாகட்டும்!

❖ ❖ ❖

## நமக்கு விரோதமான கையெழுத்து எது?

கொலோ. 2:14ல் "நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையிலே ஆணியடித்து... வெற்றி சிறந்தார்" என்று உள்ளது. நமக்கு எதிரிடையாய், விரோதமான கட்டளையாய் (Ordinance) இருந்த கையெழுத்து (Handwriting) எது? அது நடுவில் இல்லாமல் அகற்றப்பட்டதாமே! சிலுவையிலே ஆணியடிக்கப்பட்டதாமே! அது எது? எபே. 2:14,15ல் ஒழித்ததாக சொல்லப்பட்ட அதே நியாயப் பிரமாணமா இது? ஆவியானவர் விளக்குவாராக!

ரோ. 8:2ஐ வாசித்தால், பாவம்-மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று கிறிஸ்து இயேசுவால் பவுல் விடுதலையாகியிருக்கிறான் என்று அறிகிறோம். இது என்ன பிரமாணம் என்று ரோ. 7 முழுவதும் படித்தால் இது நியாயப் பிரமாணம் என்று உணரலாம். ரோ. 7:6ன்படி நியாயப் பிரமாணத்தை அறிந்திருந்த இஸ்ரவேலர் தங்களைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்திற்கு மரித்து ரோ. 7:4ன்படி கிறிஸ்துவை உடையவர்களாக ஆகி இருக்கிறார்கள் என அறிகிறோம். இந்த நியாயப் பிரமாணம் தான் இஸ்ரேலருக்கும் புறஜாதியாருக்கும் பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவர் என்றும், இந்தப் பகையை, விரோதத்தை கையினால் எழுதப்பட்ட பிரமாணத்தைத் தான் சிலுவையில் ஒழித்தது என்று எபே. 2:14,15ன் மூலம் உணர்கிறோம். எனவே கொலோ. 2:16,17ஐ வாசித்தால், நிழலாட்டமாய் இருந்தவைகள், கிறிஸ்துவைப் பற்றியவைகள் எல்லாமே இனி தேவையில்லை எனப் புரிகிறது. இப்படி சிலுவையில் ஒழிந்தது நியாயப் பிரமாணம் என்று மொத்தமாய் நமக்கு ஆவியானவர் விளக்கினாலும், ஒரு சிலர் "இது மோசே எழுதிய பிரமாணம் தான்" என்றும், "தேவன் கையினால் எழுதிய 10 கற்பனைப்பிரமாணம்" அல்ல என்றும் வாதிடுகின்றனர். கொலோ. 2:14ல் "கையெழுத்தைக் குலைத்து" என்று தான் உள்ளதே ஒழிய "மோசேயின் கையெழுத்தை மாத்திரம் குலைத்து" என்று இல்லை. வேதத்தில் மோசே எழுதிய பிரமாணம் வேறு என்றும் தேவன்

எழுதிய 10 கற்பனை அதோடு சேராது என்றும் கூறுவதற்கு வசன ஆதாரமே இல்லை. மத். 5:17ல் சொல்லப்பட்ட நியாயப்பிரமாணம் 10 கற்பனையும் சேர்ந்தது தான் என்று வச. 17 முதல் 43 வரை வாசித்தால் தெரியும். "கொலை செய்யாதே", "விபச்சாரம் செய்யாதே", "பொய்யாணையிடாதே" போன்ற பிரமாணங்கள் 10 கற்பனையிலும் உண்டே! 1 யோ. 3:4ல் "நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" என்பதில் 10 கற்பனை சேராத, மோசேயின் நியாயப் பிரமாணம் என்று அவர்கள் வாதிட முடியுமா? இங்குள்ள நியாயப் பிரமாணம் 10 கற்பனை என்று அவர்கள் சொல்வது எப்படி? '10 கற்பனையோடு சேர்ந்த முழு நியாயப் பிரமாணமும் ஒழிந்தது; நமக்குத் தேவையில்லை" என்று அவர்கள் ஒத்துக் கொள்ளாமல் 10 கற்பனை அல்லாத மற்றப் பிரமாணங்கள் தான் ஒழிந்தன என்று அவர்கள் பிரசங்கிப்பதற்குக் காரணம், 10 கற்பனையில் உள்ள 4வது பிரமாணமாகிய "ஓய்வு நாளை ஆசரிக்க நினைப்பாயாக" என்றபடி, சனிக்கிழமையாகிய ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்று சொல்வதற்குத் தான். ஓய்வு நாள் சனிக்கிழமை தான். இதற்கு மறுப்பே இல்லை. கொலோ. 2:16,17ஐ வாசித்தல், "ஓய்வு நாள் வருங்காரியத்துக்கு நிழல்; இது கிறிஸ்துவைப் பற்றியது; இதை நாம் ஆசரிக்கத் தேவையில்லை" என்று அறியலாம்.

ஓய்வு நாள் எப்படி கிறிஸ்துவைப் பற்றியது என்று பார்ப்போம்! ஆதி. 2:3லேயே 7ம் நாள் பிரத்தியேகம் பண்ணப்பட்ட (Set apart. - பரிசுத்தமாக்கப்பட்ட) நாளாய் தேவன் வைத்தாலும், இஸ்ரேலை ஆசரிக்கச் சொன்னது எகிப்திலிருந்து வெளிவந்தபின் சீனாய் மலையில் தான் (நெகே. 9:14). மன்னா பொழிந்தபோது யாத். 16:23ல் தேவன் சொன்னதை வாசியுங்கள். எகிப்து தேசத்தில் ஓய்வின்றி, அடிமையாய் வாழ்ந்த இஸ்ரேலரை தேவன் விடுவித்து, அவர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வை ஏற்படுத்தி, அதுவும், தான் ஓய்ந்திருந்த நாளையே கொடுத்தார் என்று உபா. 5:15ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஓய்வு நாளை ஆசரித்து, 400 வருட அடிமைத்தனத்தில் இளைப்பாறுதல் இன்றி, பாரத்தோடு வாழாமல் விடுதலையாய் வாழ தேவன் கட்டளையிட்டார். இந்த ஓய்வு சரீரப் பிரகாரம் மட்டுமல்ல; ஆவிக்குரிய ரீதியிலும் ஆசரிக்க தேவன் விரும்பினார். அவர்களோ அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினதால் தீங்கு வந்தது (See நெகே. 13:15-22). இதனால் இயேசு கிறிஸ்து வந்து ஓய்வு நாளைப் பரிசுத்த குலைச்சலாக்கி வருத்தப்பட்டு அலைபவர்களை நோக்கி, "என்னிடத்தில் வாருங்கள்... இளைப்பாறுதல் தருவேன். என் நுகமாகிய வசனத்தை - உபதேசத்தை (மத். 28:20) ஏற்றுக்கொள். அதுவே உன் ஆத்மாவுக்கு இளைப்பாறுதல்" (மத். 11:28-30) என்றார். ஆத்மா இளைப்பாறுதல்

அடைந்தால் சரீரம் இளைப்பாறுதல் அடையும் (3 யோ. 2ஐ தியானியுங்கள்). ஆக, கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான இந்த ஓய்வு நாள் ஆசரிப்பு, இயேசுவை விசுவாசிக்கும் இஸ்ரேலருக்கு தேவையில்லை. ஆமென். இந்த ஓய்வு நாள் ஆசரிப்பு 10 கற்பனையில் இருப்பதால் அதோடு சேர்ந்த எல்லா நியாயப் பிரமாணங்களிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவினிடத்தில் அவர்களை வழிநடத்தும் உபாத்தியாய் இருந்த நியாயப்பிரமாணம், கிறிஸ்து வந்தபின் அவர்களை வழி நடத்துவதில்லை (கலா. 3:24-25). இப்படி நாம் வசனப்படி சொல்லும்போது, சனிக்கிழமை யாகிய ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்று வாதிடுவோர் சொல்வது:- கொலோ. 2:16ல் "ஓய்வு நாட்கள்" என்று சொல்லியிருப்பதால் இது 7ம் நாளாகிய ஓய்வுநாளல்ல; இது பண்டிகைகளோடு வருகிற ஓய்வு நாட்கள். எனவே சிலுவையில் ஒழிந்தது 10 கற்பனையோடு கூடிய நியாயப்பிரமாணம் அல்ல. 10 கற்பனை அல்லாத மோசேயின் நியாயப்பிரமாணம்." இப்படிச் சொல்பவர்களுக்கு ஒரு கேள்வி:- 'ஓய்வு நாட்கள்' என்று பன்மையில் யாத். 31:13,14; எசே. 20:12,20 போன்ற வசனங்களில் வரும் ஓய்வு நாட்கள் 7ம் நாள் இல்லையா? கொலோ. 2:16ம் வசனம் King James versionல் Sabaths என்று பன்மையில் உள்ளது; Scofield போன்ற பைபிள்களில் "Sabath" என்று ஒருமையில் உள்ளது. ஒருமையில் சொன்னாலும் பன்மையில் சொன்னாலும் சொல்லப்பட்ட இடத்தைப் பொறுத்த அர்த்தங்களை நிதானிக்கலாம். கொலோ. 2:11-17 வரை வாசித்தால் இந்த ஓய்வு நாள் 7ம் நாள் தான் என்றும், அது சிலுவையில் ஒழிந்தது என்றும் அறியலாம்.

மோசே, தேவன் சொன்ன எல்லாவற்றையும் ஒரு புத்தகத்தில் எழுதினான். யாத். 20ல் தேவன் சொன்ன 10 கற்பனை முதல் 21,22,23 அதிகாரங்களில் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் எழுதி, வாசித்தான்; கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்வோம் என்று இஸ்ரேலர் சொன்னார்கள். இந்த வார்த்தைகளைக் குறித்து பண்ணியது தான் பழைய உடன்படிக்கை (யாத். 24:3,6-8). கலா. 4:21-25ன்படி இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கொண்ட பழைய உடன்படிக்கை அடிமைத்தனத்திற்குரியது. புதிய உடன்படிக்கைக்காரர் யாவரும் அதற்குக் கீழ்ப்படுவதில்லை. மோசே எழுதிய இந்தப் புத்தகத்தை உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்தில் வைக்கப்பட்டது. இதுவே இஸ்ரேலருக்கு விரோதமான சாட்சி என்று உபா. 31:26 சொல்கின்றது. இதை வைத்து, சத்தியத்தை கருகலாக்க விரும்புவோர் சொல்வதாவது: "உடன்படிக்கைப் பெட்டிக்குள் இருந்த 10 கற்பனை அப்படியே இன்றும் நம்மை ஆள்கிறது. அதன்படியே 7ம் நாள் சனிக்கிழமையை ஆசரிக்க வேண்டும். உடன்படிக்கைப் பெட்டியின் பக்கத்தில் வைத்து மோசே

எழுதிய வார்த்தைகள் தான் விரோதமான சாட்சி. இது தான் சிலுவையிலே கொலோ. 2:14ன்படி ஒழிந்தது.” இப்படிச் சொல்வோர், மேலே உள்ளவைகளை மறுபடியும் படித்தால் மோசேயின் புஸ்தகத்திலும் 10 கற்பனைகள் உண்டென்றும், இந்த புத்தகத்தில் உள்ள 10 கற்பனைகளையும் கைக்கொள்வோம் என்று தான் இஸ்ரேலர் உறுதியளித்தார்கள் என்றும், 10 கற்பனை இல்லாமல் மோசேயின் உடன்படிக்கைப் புத்தகம் இல்லையென்றும் உணர்வார்கள். உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்ட 10 கற்பனையை இஸ்ரேலர் காதுகள் கேட்க யாரும் எப்போதும் வாசிப்பதில்லை. வருடா வருடம் எக்காளப் பண்டிகையின் போது மோசேயின் புத்தகம் முழுவதும் வாசிக்கும்போது தான் அதிலுள்ள 10 கற்பனைகளையும் இஸ்ரேலர் அறிந்து கொள்வார்கள் என்று புரிந்து கொள்க. மேலும் உடன்படிக்கைப் பெட்டிக்குள் உள்ள 10 கற்பனை இன்னும் புதிய ஏற்பாடு மக்களையும் ஆள்கின்றது என்றால், அதற்குள் உள்ள ஆரோனின் தளிர்த்த கோலின் நிழலாட்டப்படியே, லேவியர் கோத்திரத்தில் உள்ளவன்தான் தற்போது ஆசாரியனாய் இருக்க வேண்டுமல்லவா! ஆசாரியத்துவத்தை இயேசுவே மாற்றி யூதா கோத்திரர் பிரதான ஆசாரியராகி (எபி. 7) நாமெல்லாரும் ஆசாரியர்களாக மாற்றப்பட்டிருக்கிறோமே (1 பேதுரு 2:9)! அல்லேலூயா! உடன்படிக்கைப் பெட்டிக்குள் உள்ள மன்னாவின் நிழலாட்டப்படியே, நாம் வானிலிருந்து விழும் மன்னாவையா உண்ண வேண்டும்! இந்த மன்னா இஸ்ரேலருக்கே 40 வருஷம் மட்டும் தானே கிடைத்தது. புதிய ஏற்பாட்டு மக்களாகிய நமக்கு, இயேசுவே மெய்யான அப்பம்! அவருடைய வார்த்தையோடிசைந்த அப்போஸ்தல உபதேசமே நமக்கு மன்னா (மத். 28:20; அப். 16: )! அல்லேலூயா! **ஞாபகார்த்தமாய், நினைவாய் இருக்க உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்கப்பட்டவைகள் இன்றும் ஆள்கிறது என்றால் அதைவிட ஞானசூன்யம் எதுவாக இருக்க முடியும்!**

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான அனைத்து நியாயப்பிரமாணங்களும், கட்டளைகளால் நமக்குள் இஸ்ரேலருக்கு விரோதமான பகையாயிருந்த அனைத்து சட்டங்களும் சிலுவையிலே ஒழிந்தது. ஆமென்! அஃதல்லாமல் நியாயப் பிரமாணத்தில் உள்ள, சுகாதாரப் பிரமாணம், தேச சட்டம், சமுதாயச் சட்டம் போன்றவை இன்றும் உள்ளது. இவைகளை வைத்தே பல அரசாங்கங்கள் தங்கள் நாட்டின் சட்டத்தை வகுக்கின்றன. நீதிமொழிகளில் சாலமோன் சொன்னதும் இவைகளை மையமாக வைத்துத்தான்! இந்த நியாயப் பிரமாணங்களை நாம் கைக்கொண்டாலும் கைக்கொள்ளலாம்; விட்டாலும் விட்டு விடலாம்; இது

நமது சுயாதீனம். அது ஒன்றும் மோட்சத்திற்குப் போகத் தடையில்லை. (இது குறித்து ஆசிரியரின் ஆராய்ச்சிப் புத்தகங்களில் உள்ள பல செய்திகளை வாசியுங்கள்; தெளிவு பெறுங்கள்).

❖ ❖ ❖

## புதிய வானம் புதிய பூமியில் மனித வாழ்க்கை இருக்குமா?

தேவனுடைய பிள்ளையே! இயேசுவின் இரகசிய வருகை வெகு சீக்கிரத்தில் நடக்கும். அதன்பின் 7 வருடம் அந்தி கிறிஸ்துவின் ஆட்சி இந்தப் பூமியில் நடக்கும். பரலோகம் போன சபையாகிய மணவாட்டிக்கு ஆட்டுக்குட்டியானவரோடு திருமணம், விருந்து எல்லாம் முடிந்தபின், ஒலிவமலையில் காலடி வைத்து இயேசு நம்மோடு இறங்குவார். அர்மகதோன் யுத்தம் நடக்கும். அப்போது மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிபடுவார்கள். பிசாசை கட்டிப்போட்டுவிட்டு, 1000 வருடம் இயேசுவோடு கூட நாம் ஆளுவோம். அதன்பின் பிசாசை அவிழ்த்து விட்டபோது, கோகேமாகே யுத்தம் உருவாகும். அப்போது தேவன் இந்த பொல்லாத பூமியாரை அக்கினியால் அழிப்பார். பின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு. இந்த நியாயத்தீர்ப்புக்கு பிறகுதான் (வெளி. 20:11-15) புதிய வானம், புதிய பூமி உருவாகும். யோ. 14:2-3ன்படி நமக்கு உருவாக்கப்பட்ட புதிய நகரம், புதிய எருசலேமாக நமக்கு அளிக்கப்படும். இந்த புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் போன்றவற்றில் தற்காலத்தில் உள்ளது போல ஆண், பெண் மனித வாழ்க்கை இருக்குமா? இருக்காது என்றுதான் பெரும்பாலோர் போதிக்கிறார்கள். இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட சபையாராகிய நாம் மறுரூபமாக்கப்பட்டு தேவதூதர்களைப் போலிருப்போம். அங்கே கொள்வினையும் கொடுப்பினையும் இல்ல. அங்கே ஆண் பெண் என்ற பால்பிரிவோ மனுஷ சரீரமோ இருக்காது (மத். 22:35; 1 கொரி. 15:50) நித்திய நித்தியமாய் நாம் அதே நிலையில் தான் இருப்போம். நமக்குத்தான் புதிய எருசலேம் (புதிய நகரம்) தரப்படும். அதிலே நாம் வாழ்வோம். வானங்கள் அகன்றுபோய், சூரியன் சந்திரன் ஏதுமில்லாத புதிய வானம் உருவாகும் (2 பேதுரு 3:12; வெளி. 21:23). அதிலே முதல் வானமும் இருப்பதில்லை; பிசாசின் தலைமைச் செயலகம் இருக்கும் 2ம் வானமும் இருப்பதில்லை. புதிய பூமி உருவாக்கப்படும். இந்த புதிய பூமியில் இருப்போர் யார்? இவர்கள் எந்த

நிலையில் இருப்பார்கள்? வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டவர்களாக் காணப்படாதவர்கள் எல்லோரும் நரகம் போவர் (வெளி. 20:15). நரகம் போகாதவர்களும் இருப்பார்களா?

பரலோகம் போவதற்காக இரகசிய வருகையில் கிறிஸ்துவுக்குள் மரித்தோர் மனித ரூபத்தில் உயிர்த்து மறுரூபமாவார்கள். ஆனால் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது உயிர்த்தெழுவோர் ஒருவரும் பரலோகம் போகாதபடியால், அவர்கள் மனித ரூபத்திலேயே உயிர்த்து மறுரூபம் ஆகாமல் அப்படியே இருப்பர். இவர்களிலே நரகம் போகாதவர்கள் யார்? 1000 வருட அரசாட்சியில் உயிரோடிருந்த இஸ்ரேல் சந்ததி, 1000 வருட அரசாட்சியில் மரித்து உயிர்த்தெழுந்த நல்லவர்கள், 1000 வருட ஆட்சியில் உயிரோடிருந்து கோகேமாகே யுத்தத்தில் பங்கு கொள்ளாதவர்கள், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறாத, இயேசுவை அறியாத, ஆனால் நீதிமான்களாயிருந்தவர்கள் (இதிலே இயேசுவை அறியாத நமது முப்பாட்டர்கள், நாப்பாட்டர்கள் அடங்குவார் - அப். 17:30). அத்தோடு லூக். 11:31-32ல் சொல்லப்பட்ட தென்தேசத்து ராஜஸ்திரி, நினிவே பட்டணத்தார் போன்றோரும் இருப்பார்கள் (Pl. read ரோ. 11:33; ஏசா. 65:20). இவர்கள் எல்லோருமே மனித ரூபத்தில்தான் இருப்பார்கள். இவர்கள் தான் புதிய பூமியில் வாழக் கொடுத்து வைத்தவர்கள். இவர்கள் மனித ரூபத்தில் இருப்பதால், ஆண்-பெண் உறவு முறையோடு கூடிய மனித வாழ்க்கை அங்கே நிச்சயம் இருக்கும். இதில் ஐயப்பாடே தேவையில்லை.

மேலும் இந்த புதிய பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும், புதிய நகரமாகிய எருசலேமுக்கு கொண்டு வருவார்கள் (வெளி. 21:24,26). இந்த மனித இனத்தை நாம்தான் ஆளுவோம். வெளி. 21:27; 2:2 போன்ற வசனங்களைக் கூர்ந்து கவனித்தால் இந்த மனித ஜனங்களும் தங்கள் பெயர்களை ஜீவபுத்தகத்தில் எழுதத்தக்கபடி நடத்தப்பட்டு, புதிய எருசலேமிலுள்ள விருட்சத்தின் கனிகளைச் சாப்பிடுவார்கள் என்று அறிகிறோம். இந்நிலையில் *உபா. 7:9ஐ கண்டிப்பாய் வாசியுங்கள்.* 1000 தலைமுறை மட்டும், அதவாது கிட்டத்தட்ட 35000 ஆண்டுகள் வரை இஸ்ரேலரோடு தாம் பண்ணிய உடன்படிக்கையையும், தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் நம் தேவன் என்பதால், இந்த இஸ்ரேல் ஜனமும், அவர்கள் மூலமாய் ஆசீர்வாதம் பெறப்போகும் மேலே சொன்ன புதிய பூமியில் வாழ்வோரும் நிச்சயம் மனித ரூபத்திலேயே 35000 ஆண்டுகள் வாழ்வர் என்பது திண்ணம். ஆமென். நம் தேவன் சொல்லுகிறதைச் செய்கிற தேவன்; செய்யப் போகிறதை மாத்திரமே சொல்லுகிற தேவன். அல்லேலூயா! இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நம் தேவனின் சித்தமும், தீர்மானமும்,

உடன்படிக்கையும், தயவும் எவ்வளவு பெரிதென்று பாருங்கள்! இப்படிப்பட்ட தயாளமும், அன்பும், உண்மையும் கொண்ட இந்த தேவனைத் தெய்வமாய்க் கொண்டிருக்கும் நாம் பாக்கியவான்கள். அல்லேலூயா!

❖ ❖ ❖

# 'அபிஷேகம்' பண்ணப்பட்டவர்களுக்கு விரோதமாய் எழும்பலாமா?

தேவனுடைய பிள்ளைகளே! இன்றைய கிறிஸ்தவ உலகிலே பிரபலமாகியிருக்கும் எல்லா ஊழியக்காரரையும் தேவன் அபிஷேகம் பண்ணியிருக்கிறார் என்றும், ஆதலால் அவர்களுக்கு எதிராய் ஒன்றும் பேசக்கூடாது; எழுதக்கூடாது; செய்யக்கூடாது; என்றும் கிறிஸ்தவர்கள் பலர் எண்ணுகின்றனர். இப்படிப்பட்டதான எண்ணமுடைய ஆவி இவர்களுக்கு தாவீதிடமிருந்து வந்தது (See 1 சாமு. 24:6; 26:9) சவுலைப்பற்றி தாவீது இப்படிச் சொல்லி - சொல்லியபடியே செயல்பட்டது சரிதானா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

"அபிஷேகம்" என்றால் அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெறுவது என்று பெந்தகொஸ்தே வட்டாரத்தில் சொல்லப்படுகிறது. பரிசுத்த ஆவியைப் பெறுவதும் ஒருவிதமான அபிஷேகம் தான். ஆனால் அதுதான் அபிஷேகம் என்று இல்லை. அபிஷேகம் - Anointment - என்றால் ஒரு குறிப்பிட்ட தேவ காரியத்திற்காய் வழிநடத்துதல் - தயார்படுத்துதல் - அனுப்புதல் - Direct பண்ணுதல் என்று பொருள். அப். 10:38ஐ வாசித்தால், இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டார்; வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டார். அபிஷேகம் பண்ணுவதிலே பலவகை உண்டு. பிரதான ஆசாரியராக அபிஷேகம்; ராஜாவாக அபிஷேகம்; ஊழியக்காரராக அபிஷேகம்; போதக அபிஷேகம்; சுவிசேஷ அபிஷேகம்; குணமாக்கும் வல்லமையின் அபிஷேகம் என்று பல அபிஷேகங்கள் உள்ளன. சில அபிஷேகங்கள் தேவனுடைய ஊழியக்காரர்களால் செய்யப்படுகின்றன; சில அபிஷேகங்கள் தேவனால் நேரிடையாய் செய்யப்படுகின்றன. பரிசுத்த ஆவியினால் இயேசுவே நம்மை அபிஷேகம் செய்கிறார்; வல்லமையினாலும் தேவன் அபிஷேகம் செய்கிறார். பவுலை அப்போஸ்தலனாக தேவனே அபிஷேகம் செய்தார் (கலா. 1:1). தேவனுடைய ஊழியக்காரர்கள் அபிஷேகம் பண்ணினாலும் அது தேவன் செய்ததுதான். ஆமென்.

'அபிஷேகம்' பற்றிய விளக்கம் அறிந்து கொண்ட நீங்கள் தாவீது சொன்ன காரியத்திற்கு நேராய் உங்கள் மனதைத் திருப்புங்கள். சவுல் என்பவன் யார்? கழுதையைத் தேடி வந்தபோது, சாமுவேலால் இஸ்ரேலருக்கு முதல் ராஜாவாய் அபிஷேகம் பண்ணப்பட்டவன். மாத்திரமல்ல... இவன் பரிசுத்த ஆவியினாலும் அபிஷேகம் பண்ணப்பட்டும், புதிய இருதயம் கொடுக்கப்பட்டு, தீர்க்கதரிசனம் சொல்பவனாகவும் ஆனான் (1 சாமு. 10:6, 9-13). இப்படியாய் அபிஷேகம் பண்ணப்பட்ட சவுல், தேவனுக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணினான்; முரட்டாட்டமாய் தேவனுடைய வார்த்தையைப் புறக்கணித்தான் (1 சாமு. 15:23). இதனால் சவுலின், ராஜா அபிஷேகம் மாற்றப்பட்டு, தாவீது ராஜாவாய் அபிஷேகம் பண்ணப்பட்டான். தேவ ஆவியானவர் சவுலை விட்டு நீங்கினார். ஆவியின் அபிஷேகமும் மாறியது. அவனுக்குள் பொல்லாத ஆவி இருந்தது (1 சாமு. 16:13-23). இப்படிப்பட்ட சவுல் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட தாவீதைக் கொல்ல வலைவீசித் திரிகிறான். அப்போது கர்த்தரும், **"சவுலை உன் கையில் கொடுப்பேன், நீ உன் பார்வைக்கு ஏற்றபடி செய்" என்று தாவீதுக்கு அனுமதியும் கொடுத்து விட்டார்** (1 சாமு. 24:4). இப்படி தேவனே தாவீதுக்கு அனுமதி கொடுத்திருக்க, "அபிஷேகம் பண்ணப்பட்ட சவுலின் மேல் கையைப் போடமாட்டேன்; அப்படிப் போட்டால் நான் குற்றவாளியாவேன்" என்று தாவீது கூறியது சரிதானா? அப்படி தாவீது சொல்லியதையே, தற்கால கிறிஸ்தவ உலகமும் சொல்வது சரிதானா? ஆவியானவர் விளக்குவாராக!

தேவன் சவுலுக்கு தந்த அபிஷேகம் நீங்கிற்று; சவுலுக்குள் அசுத்த ஆவி வந்துவிட்டது. இந்த நிலையில் சவுலை, இன்னமும் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் என்று தாவீது நினைக்கலாமா? ஒருவேளை தேவன் தரும் அபிஷேகத்தை கனம் பண்ணும் தன்மை தாவீதுக்கு இருக்கலாம். அதற்காக தேவ அபிஷேகமே இல்லாதவன் மேல் ஏன் இப்படிப்பட்ட உணர்வு வந்தது? தேவன் சவுலைக் கையில் கொடுத்து, உன் பார்வைக்கு ஏற்றபடி செய் என்று அனுமதி கொடுத்தும் தாவீது ஏன் அதை உணரவில்லை? அறியவில்லை? சவுலின் விஷயத்தில் இப்படியாய் தாவீது செயல்பட்டது சவுலிடம் தாவீதுக்கு இருந்த பயத்தாலா? அல்லது ஆதியிலே இருந்த அன்பாலா? அல்லது தேவ சித்தத்தை, தேவ தீர்மானத்தை அறியாததினாலா? அல்லது அறிந்தும் கீழ்ப்படியாததினாலா? அல்லது பாரம்பரியமாய் கேள்விப்பட்டதை பகுத்தறிவு இல்லாமல் நம்பியதாலா? தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிந்து நடக்கும் பகுத்தறிவுப் பிள்ளைகளே (யூதா. 22). சிந்தியுங்கள்!

சவுல் விஷயத்தில் தாவீதுக்கு இருந்த ஆவி இயேசுவிடம் இருந்திருந்தால், அப்போஸ்தலனாக அபிஷேகம் பண்ணப்பட்ட யூதாஸ் காரியோத்தை, "கேட்டின் மகன்" (யோ. 17:12) என்றும், "இவன் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்" ( ) என்றும் இயேசு சொல்லியிருக்க மாட்டாரே! இயேசு இப்படிச் சொல்லியது தவறா - மட்டுமல்ல...

இஸ்ரவேலருக்குள்ளே தீர்க்கதரிசன அபிஷேகம் பெற்ற பிலேயாமை, பேதுருவும், யூதாவும், யோவானும் சாடியிருக்கிறார்களே (2 பேதுரு 2:15; யூதா 11: வெளி. 2:14) அது தவறா? தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு தமிழகத்தில் பெந்தகொஸ்தே வட்டாரத்திலே அற்புதம் அடையாளங்களோடு ஊழியம் செய்த பாலா சீர்லாறிக்கு விரோதமாய்ப் பேசுவதோ எழுதுவதே தவறா? அமெரிக்காவிலே அதிசயங்களைச் செய்து கிறிஸ்தவர்களை உருவாக்கிய அபிஷேகம் பண்ணப்பட்ட ஊழியர் பிரன்ஹாமுக்கு விரோதமாய்ப் பேசுவதோ எழுதுவதோ தவறா? ஒரு காலத்தில் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டு கடைசி வரை தீர்க்கதரிசன ஊழியம் செய்தோர், பிசாசுகளைத் துரத்துவோர், அநேக அற்புதங்களைச் செய்தோர் எல்லாரையும், தேவனே, "ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே அகன்று போங்கள்" என்று நியாயந்தீர்ப்பது தவறா? இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! என்றைக்கு தேவன் கொடுத்த அபிஷேகம் மாறியதோ, என்றைக்கு வசனத்துக்கு விரோதமாய் கிரமமில்லாமல் அக்கிரமச் செய்கைக்காரர்களாய் (Lawlessness) நடக்கிறார்களோ (மத். 7:22,23) அன்றே அவர்களை தேவனும் வெறுக்கிறார். நாமும் ஒதுக்க வேண்டும்; ஒரு வேளை தேவன் அவர்களுக்குக் கொடுத்த கிருபை வரங்கள் மாறாமல் இருக்கலாம் (ரோ. 11:29). அபிஷேகம் எடுக்கப்பட்ட பின்னும் சவுல் தீர்க்கதரிசனம் சொல்லவில்லையா? (1 சாமு. 19:11-24). சூனியக்காரியிடம் போன சவுலைப்போல, பெரிய ஊழியக்காரர்கள், இந்தியா முழுவதும் இவராலேயே இயேசுவை அறிந்து கொண்டதாய், மக்களால் போற்றப்படும் ஊழியக்காரர்கள், காஞ்சி காமகோடி பீடாதிபதிக்கு, பூஜைக்குரிய சாதனைங்களைப் பரிசாகக் கொடுத்தார்களே; குழந்தை ஞானஸ்நானம் கொடுத்து இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவமதிக்கும் சபையிலே இன்னும் உறுப்பினராய் இருந்து அப். 2:40க்கு விரோதமாய் நடக்கிறார்களே; தாங்கள் நடத்தும் ஸ்தாபனங்களில் விக்ரகங்களை உருவாக்கி நிற்கவைத்து சிலுவைக்கு பிள்ளையார் துண்டுபோல போட்டு விக்ரக ஆராதனையை வளர்க்கிறார்களே. இப்படிப்பட்ட ஊழியர்களுக்கு இன்னும் தேவ அபிஷேகம் இருக்குமா? சிந்தியுங்கள். சவுலைப்போல ஆகிவிட்ட இப்படிப்பட்டவர்களை இன்னும் தூக்கிப் பிடிக்கும்

அறியாமைக் கிறிஸ்தவர்களுக்கு, அன்றைக்கு தாவீதுக்கு இருந்த அதே ஆவி இருக்கிறதல்லவா! தேவனையோ, தேவனின் வார்த்தையையோ இழிவாய்ப் பேசினால் கூட கண்டு கொள்ளாத இவர்கள், இப்படிப்பட்டவர்களுக்காக எகிறித் குதித்து, தகாத வார்த்தைகளால் என்னைப் போன்ற உள்ளம் உள்ளவர்களைத் திட்டுகிறார்களே இதன் மர்மம் தான் என்ன? இவர்களின் மனக்கண்கள் இன்னும் பிரகாசமாகவில்லையா? (எபே. 1:19) அல்லது யோபுவைப்போல் இவர்கள் மனக்கண்களால் தேவனை - தேவனின் வார்த்தையைப் பார்க்கவில்லையா? (யோபு 42:5). சவுலைப் போல அவபக்திக்கும், பாரம்பரியத்திற்கும், பணத்துக்கும், ஜாதிக்கும், பெருமைக்கும், விக்ரக ஆராதனைக்கும், பில்லி சூனிய பாவத்திற்கும் உட்பட்ட பிரபலமான பெரிய ஊழியக்காரர்களை, தாவீதைப்போல மதிக்கும் ஆவிக்குரிய ஊழியக்காரர்கள், விசுவாசிகள் ஏராளம்; ஏராளம். இப்படிப்பட்ட தாவீதின் ஆவியையுடைய ஊழியக்காரர்கள் சாம்சுந்தரானாலும், மோகனானாலும், பெர்க்மான்ஸானாலும், சாம் ஜெபதுரையானாலும் யாராயிருந்தாலும் அவர்கள் தாவீதைப்போல அறிக்கையிட்டு செயல்பட்டால் தவறு தவறுதான்; அவர்களைக் கண்டு அப்படியே செயல்படும் பெந்தகொஸ்தே வட்டார விசுவாசிகளின் செயலும் தவறுதான்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இந்த தாவீதின் இந்த ஆவி நமக்கு வேண்டாம். தேவன் ஒருவரை ஒருகாலத்தில் அபிஷேகம் பண்ணி யிருந்தாலும், அபிஷேகம் அவரைவிட்டு எடுபட்டுப் போனால் அவருக்கு மனிதநேயம் என்ற அன்பைத்தவிர, வேறு எந்த மகிமையையும் நாம் கொடுக்கக்கூடாது. அப்படிப்பட்டவர்களை நாம் வளர்த்து விட்டோமானால், நாமும் அந்த பாதகத்துக்கு உள்ளாவோம்; கள்ள உபதேசமும், கள்ள கிறிஸ்துகளும், கள்ள தீர்க்கதரிசிகளும் பெருகி, விசுவாச துரோகம் முந்தி நேரிட நாமும் உடந்தையாவோம். அபிஷேகம் எடுபட்டுப் போன சவுல் - அசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட சவுல் - தாவீதைப் பிடிக்க ராமாவுக்குப் போகும் போதும், அங்கே சாமுவேலுக்கு முன்பாகவும், ஆவியானவரால் நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனம் சொன்னது போல (1 சாமு. 19:11-24), தற்கால இப்படிப்பட்ட ஊழியர்களும் வரங்களால் கிரியை செய்தாலும், பிசாசை விரட்டினாலும், அவர்களை மகிமைப்படுத்துவது பாவம். இப்படிப்பட்டவர்களின் சத்திய மாறுபாடுகளை நம்மவர்களுக்குச் சொல்லாமல், நம்மவர்களையும் அவர்கள் வழியில் நடத்துவதும் பாவம். தேவனால் அபிஷேகம் பெற்றிருப்பவர் களையும், அபிஷேகம் எடுபட்டுப் போனவர்களையும் அவர்களின் கனிகளால் (மத். 7:16) அறியுங்கள். இந்தக் கனிகள் தேவனின் வார்த்தைகளால் வெளிப்படுகின்றன (யோ. 15:3). வசனத்திற்கு எதிரான ஊழியமெல்லாமே,

தேவ அபிஷேகம் இல்லாத ஊழியம் தான்! எனவே, தேவனின் ஏக்கம், விருப்பம் எல்லாம் நம் இதயத்துடிப்பாக மாறட்டும்! இயேசு சீக்கிரம் வருகிறார்!

❖ ❖ ❖

## தீமையை தேவன் ஏன் படைத்தார்?

ஏசா. 45:7ல் "ஒளியைப் படைத்து இருளையும் உண்டாக்கினேன்; சமாதானத்தைப் படைத்து, தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே" என்று உள்ளது. இதைப் படித்த உடனே, தீங்கை தேவன் படைத்தார் என்று பிரசங்கிப்போர் உண்டு. அப்படிப்பட்டவர்கள், தேவன் படைத்த தீங்கு அவர்களை அணுகும்போது, தேவன் படைத்ததை ஏற்றுக் கொள்ளாமல், "தீமையினின்று இரட்சியும்" (மத். 6:13) என்ற கர்த்தர் கற்பித்த ஜெபத்தைச் சொல்கிறார்களே ஏன்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

சூரியன் சந்திரன் ஆகிய இரண்டையும் படைத்து, இரவையும் பகலையும் பூமியின் சுழற்சியினால் உருவாவதை நாம் அறியலாம். இந்த தேவனின் செய்கையால் இரவிலே இருளும், பகலிலே வெளிச்சமும் உண்டாகியது. இதை நமது நன்மைக்காய் தேவன் தந்தார். தேவன் ஒளியல்லவா! (1 யோ. 1:5). ஒளியில்லாத போது இருள்தானே! இருள் நிறைந்த மனிதனை பிரகாசிக்க வந்த மெய்யான ஒளி இவர் தானே! (யோ. 1:9). ஆசிரியரின் "படைப்பின் இரகசியம்" என்ற செய்தியை "உங்களுக்குத் தெரியுமா" என்ற ஆசிரியரின் நூலில் வாசித்தால், தேவனின் கோபாக்கினையினாலும், பிசாசின் பொல்லாத கிரியையாலும், ஆதியிலே தேவன் படைத்த ஒளிமயமான பூமி, ஒழுங்கின்மையும், வெறுமையுமாகி, இருளாயிருந்தது என அறியலாம் (ஆதி. 1:1,2). முதலாம் நாள் ஒளியை உருவாக்கியதும் இருள் அகன்றது. ஆதியிலே வேண்டுமென்றே தேவன் இருளை உண்டாக்கவில்லை. ஒளியில்லாதபோது இருள் உண்டானது அவ்வளவு தான். ஆனாலும் மனித வாழ்வுக்கு ஒளி நிறை பகலும், இருள் நிறை இரவும் தேவை என்று தேவன் கண்டு பூமியை சுழல வைத்தார். பூமி சுழன்றது. ஒளியும் இருளும் மாறி மாறி வந்தது. அப்படிப் போலவே சமாதானப் பிரபு (ஏசா. 9:6), சமாதானத்தையும் தீங்கையும் உண்டாக்கினாரா?

ஒளியில்லாத போது இருளிருக்கும்; இருளை நீக்க ஒளியை உண்டாக்கினார். இதை சாதாரண கண்ணோட்டத்தில் பார்த்தால் ஒளியையும்

இருளையும் தேவன் படைத்ததாக தெரியும். ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பார்த்தால் "ஒளியை படைத்தார்; இருள் விலகியது. இருள் இருந்தது; ஒளியைத் தந்தார்" என்று உணரலாம். அதுபோல தீங்கு இருக்கும்போது சமாதானம் இருக்காது; சமாதானம் இல்லாத போது தீங்கு இருக்கும். இதையும் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் பார்க்கலாம். இங்கு "தீங்கு" என்பது ஆங்கிலத்தில் Evil என்றும், எபிரேயு பாஷையில் 'Ra' என்றும் உள்ளது. பொய், திருடு, கொலை, கொள்ளை, விபச்சாரம், விக்ரக ஆராதனை, லஞ்சலாவண்யம், பொருளாசை, கோபம், பொறாமை போன்ற எல்லாமே தீங்கு தான். இந்த காரியங்களை தேவன் படைத்தாரா? இல்லையே! ஆதி. 1ல் அவர் படைத்தது எல்லாமே நல்லது என்று தானே கண்டார். மேலே சொன்னவை எல்லாமே பாவ காரியங்கள் அல்லவா! மனிதனுக்குள்ளே இருக்கிற இச்சையானது பிசாசோடு உறவு கொண்டு கர்ப்பம் தரித்து பிறக்கும் பாவங்கள் தானே இவைகள் (யாக். 1:15). இவைகளை உருவாக்குபவன் பிசாசு தானே! அப்படியானால், 'தீங்கு' என்று இங்கு வருவது பாவத்தைக் குறிக்கவில்லை என்று அறிகிறோம். ஏசா. 45:7ல் சொல்லப்படும் தீங்கு என்பது எது?

எபிரேய வார்த்தையாகிய 'Ra'வை ஆராய்ந்தால், அது இன்னலான-இடுக்கமான நிலை (adversity), பெருந்துன்ப-பேராபத்து (calamity) போன்ற அர்த்தங்களைக் கொடுக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் மனிதன் செய்யும் பாவத்தால் வருகின்றன; இவைகளெல்லாம் பாவத்தின் கனிகள் (Fruits of sin); பாவத்தின் பலன்கள். இதைத்தான் சாபம் என்கிறோம். இந்த சாபங்கள் தான் உபா. 28:14 முதல் சொல்லப்படும் வியாதி, வறுமை, கவலை, கண்ணீர், கைவிடப்பட்ட நிலை, பேராபத்து போன்றவை. இந்த சாபங்களின் உச்சகட்டம் தான் தேவன் தந்த தண்டனையாக சரீரப் பிரகாரமான மரணமும், பாவத்தின் சம்பளமான இரண்டாம் மரணமாகிய நரகமுமாகும். (நாம் செய்யும் பாவத்தின் கனிகளான இந்த தீங்கான சாபங்கள் இல்லாவிட்டாலும் எபி. 9.27ன்படி தேவன் தந்த சரீர மரண தண்டனை எல்லோருக்கும் உண்டு என்பதை முந்தி அறிக). தேவன் நன்மையான ஆசீர்வாதத்தையும் (யாக். 1:17) தீங்கான பாவத்தின் கனியாகிய சாபத்தையும் நமக்கு முன்னே வைத்திருக்கிறார் (உபா. 11:26-28; 30:15,19). தேவனுக்கு - தேவ வார்த்தைக்கு - எதிராய்ப் போகும் போது - பாவம் செய்யும் போது - மனிதனுக்கு பாவத்தின் பரிசாக - கனியாக - தீங்கு, அதாவது சாபம் தானாய் வருகிறது; அவனே தெரிந்தெடுத்துக் கொள்கின்றான். இது தான் தேவன் வைத்திருக்கும் தீங்கு. யாக். 1:17ல் சொல்லப்பட்டது தேவன் வைத்திருக்கும் ஆசீர்வாதமானது நன்மைகள் - சமாதானங்கள். அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உனக்கு சுயாதீனம் கொடுத்திருக்கிற தேவன் இந்த விஷயத்திலும் உன் இஷ்டப்படியே விட்டு விட்டார். சமாதானம் வேண்டுமா (ஆசீர்வாதம்)? நீ தான் பொறுப்பு! தீங்கு வேண்டுமா (சாபம்)? நீதான் பொறுப்பு! இன்றே தெரிந்துக் கொள்! அதற்கேற்றபடி நடக்க ஒப்புக் கொடு! தேவனே உனக்கு ஒளி, வழி, சத்தியம், ஜீவன்! ஆமென்.

❖ ❖ ❖

# இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்கள் எத்தனை பேர்? அவர்களில் அவரை தூஷித்தவர்கள் எத்தனை பேர்?

இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட நிகழ்ச்சியை மத். 27:33-43; மாற். 15:22-32; யோ. 19:17-22; லூக். 23:33-38 போன்ற வசனங்கள் விளக்குகின்றன. கிறிஸ்தவ வட்டாரம் அறிந்தவரை, இயேசுவோடு இரண்டு கள்ளர்கள் சிலுவையிலறையப்பட்டார்கள் என்றும், அவர்களில் ஒருவன் அவரை தூஷித்தான் என்றும், இன்னொருவன் மனந்திரும்பி இரட்சிக்கப் பட்டான் எனவும் நாம் கேள்விப்பட்டு விசுவாசித்து வருகிறோம். ஆனால் ஒருசில வசனங்களை வைத்துக் கொண்டு, இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டவர்கள் நால்வர் என்றும், அவரைத் தூஷித்தவர்கள் எல்லோரும் என்றும் தற்காலத்தில் சொல்கின்றார்கள். இதை, பெந்தகொஸ்தே வட்டாரம் பொக்கிஷமாகக் கொண்டிருக்கும் Dakes பைபிளும் உறுதிப்படுத்துகின்றது. அப்படியானால் இது உண்மையா, எது சத்தியம், எது கருகலானது என்ற கேள்விக்கு ஆவியானவர் விடை தருவாராக!

மத். 27:38ன்படி இரண்டு கள்ளர்கள் இயேசுவுக்கு இடதுபுறமும் வலதுபுறமும் அறையப்பட்டார்கள். மாற். 15:27ம் இதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் லூக். 23:33ல், திருடர்கள் என்று போடாமல் இரண்டு குற்றவாளிகள் (male factors) இடது புறமும் வலது புறமும் அறையப்பட்டார்கள் என்று எழுதப்பட்டதால், இந்த இரண்டு பேரும் மத்தேயுவில் சொல்லப்பட்ட கள்ளர்கள் அல்ல என்று வாதிடுகிறார்கள். மேலும், யோ. 19:18ல் "வேறிரண்டு பேர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவைகளை வைத்து இயேசுவோடு சேர்த்து மொத்தம் 5 பேர் அறையப்பட்டார்கள் என்று நிர்ணயிக்கிறார்கள். அதுவும் இயேசு நடுவிலும் வலதுபுறம் ஒரு கள்ளனும் ஒரு குற்றவாளியும், இடதுபுறம் ஒரு கள்ளனும் ஒரு குற்றவாளியும் அறையப்பட்டார்கள் என்கிறார்கள். இதற்கு

இன்னும் ஆதாரமாக, மத். 27:33; மாற். 15:32ன் படி இரு கள்ளர்களும் இயேசுவை நிந்தித்தார்கள் என்றும், லூக். 23:39-40ன்படி ஒரு குற்றவாளி தான் இயேசுவை தூஷித்தான் என்றும் எழுதப்பட்டிருப்பதால் மொத்தம் 5 பேர் சிலுவையில் அறையப்பட்டார்கள் என்கின்றனர். எத்தனை பேர் சிலுவையில் இயேசுவோடு அறையப்பட்டாலும் நமக்கு கவலையில்லை; இயேசுவே நமக்கு இரட்சகர். ஆனால், வேதத்தைப் படிப்போர் இப்படியாய் வேதத்திலே முன்னுக்குப் பின் முரணாய் எழுதப்பட்டிருக்கிறது என்று ஒரு சிலரும், வசனத்திற்கு விரோதமாக இரண்டு கள்ளர் மட்டுமே அறையப்பட்டார்கள் என்று கிறிஸ்தவர்கள் பொய்யாய்ப் போதித்து நம்புகிறார்கள் என்று ஒரு சிலரும் சொல்லி, தேவ வார்த்தைக்கு இழுக்கு உண்டாக்குகிற காரியத்தைப் பற்றி நாம் அறிந்து 1 பேதுரு 3:15ன்படி நம் நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் பதில் சொல்ல எப்போதும் ஆயத்தமாயிருக்க வேண்டுமல்லவா! அதற்காக தொடர்ந்து வாசியுங்கள்.

மாற். 15:32ல் நிந்தித்தவர்கள் கள்ளர்கள் (Thieves) என்றோ, குற்றவாளிகள் (Male factors) என்றோ எழுதப்படாமல் சிலுவையில் அறையப்பட்டவர்களும் நிந்தித்தார்கள் என்பதால், 4 பேருமே நிந்தித்திருக்க வேண்டுமல்லவா! சிந்தியுங்கள். அப்படியானால், லூக். 23:39ன்படி ஒரு குற்றவாளி தான் இகழ்ந்தான் என்று எழுதப்பட்டதன் அர்த்தமென்ன? வேதத்தில் எந்த வசனமும் பொய் சொல்லாது. ஆமென்! அல்லேலூயா! அப்படியானால் இதன் விளக்கம் என்ன? இரண்டு குற்றவாளிகளையும் இயேசுவோடு சிலுவையிறைய வைத்து இயேசுவை கேவலப்படுத்த காரியங்கள் நடந்தன என்றால் நிச்சயமாய் இந்த இருவருமே ஒருவரை ஒருவர் மிஞ்சின தீயவர்கள் தான். ஒருவனும் கிஞ்சித்தும் நல்லவனில்லை. எனவே இயேசுவோடு அறையப்பட்ட எல்லோருமே அவரை நிச்சயம் நிந்தித்திருப்பார்கள். இது உண்மையிலும் உண்மை. கிறிஸ்துவின் சிலுவையிலிருந்து புறப்பட்ட தேவகிருபை, ஒரு நொடிப் பொழுதில், இரட்சிப்புக்கடுத்த விசுவாச உணர்வை ஊட்டி, பாவ உணர்வை வெளிப்படுத்தி தூஷித்தவனை மனமாற்றத்திற்குள் கொண்டு வர முடியுமல்லவா! நம் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக். 2:37). பிதாவே ஒவ்வொருவனையும் இழுத்துக் கொள்ளுகிறார் (யோ. 6:44); இயேசுவே விசுவாச ஓட்டத்தை துவக்கி வைக்கிறார் (எபி. 12:1). "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்ட போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோ. 12:32) என்ற தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது அல்லவா! இந்தப்படி, நிந்தித்த அனைவரில் ஒருவன் மட்டுமே மனந்திரும்பினான்.

ஆமென். அவன் தனக்கு கிடைத்த நீதியான தண்டனையைக் கண்டான்; உணர்ந்தான். இயேசுவின் பாவமில்லாத நிலையைக் கண்டான்; உணர்ந்தான். கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் கண்டான்; உணர்ந்தான். மரணத்திற்கு பின் இருக்கும் ஜீவிக்கிற இயேசுவை - உயிர்த்தெழுந்த இயேசுவை விசுவாசித்தான். சிலுவைக்குப்பின் உள்ள தேவனின் ராஜ்யத்தையும், அதன் ராஜாவாய் இயேசு வரப்போவதையும் விசுவாசித்தான் (லூக். 23:41,42). அறிக்கையிட்டான்; மனமாற்றமடைந்தான். ஆக, தூஷித்தவர்களில் ஒருவன் இரட்சிக்கப்பட்டான்; மனமாற்றமடைந்தான். ஆமென்.

மட்டுமல்ல... உடல்கள் ஓய்வு நாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும் படிக்கும், உடல்களை எடுத்துப் போடும் படிக்கும் உத்திரவு கேட்டுக் கொண்டார்கள். அந்தப்படி போர்ச் சேவகர் வந்து, அவருடனே கூட சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும், மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை (யோ. 19:31,32). இதிலிருந்து நாமறிவது என்ன? மரித்தவர் ஒருவர்; மரிக்காதவர்கள் இருவர். காலொடிக்கப்படாதவர் இயேசு; காலொடிக்கப்பட்டவர்கள் சிலுவையலறையப்பட்ட இருவர் மட்டுமே! நான்கு பேர் அல்ல.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வேத வசனம் ஒன்றும் பொய்யல்ல. இதன்படி இயேசுவோடு அறையப்பட்டவர்கள் 5 பேர் அல்ல, மூன்றே பேர்தான் என்று அறிகிறோம். ஒன்று இயேசு; மற்ற இருவரும் கள்ளர்கள். இந்த கள்ளர்களைத் தான் குற்றவாளிகள் என்று எழுதப்பட்டுள்ளது. இவர்கள் இருவருமே தொடக்கத்தில் இயேசுவை தூஷித்தார்கள். முடிவிலோ ஒருவன் மட்டுமே மனம் மாறினான். அல்லேலூயா.

❖ ❖ ❖

## பொல்லாத ஆவியை ஏவிவிட்டு தேவன் சோதிப்பாரா?

1 சாமு. 16:14; 1 இராஜா. 22; நியா. 9:23; ஏசா. 19:14; 29:10 போன்ற பல வசனங்களை எடுத்துக் கொண்டு, தேவன் பொல்லாத ஆவியை - பிசாசை

ஏவிவிட்டு, நம்மைச் சோதிக்கிறார் என்று பல ஆவிக்குரிய சபைகளிலும் போதிக்கிறார்கள். இவர்கள் தேவனை அறிந்திருக்கிறார்கள்; ஆனால் தேவனைப் பற்றி அறிந்து கொள்ளவில்லை. யோபுவின் மனக்கண் - ஆத்மா - தேவனைக் கண்டது போல அவர்கள் இன்னும் காணவில்லை (யோபு 42:2-5). இப்படிப்பட்டவர்களின் மனக்கண்கள் பிரகாசமடைந்தால் தான் (எபே. 1:19), இவர்கள் மூலம் வரும் சத்திய போதனை ஆரோக்கியமாக இருக்கும்; அதைக் கேட்கிற விசுவாசிகளுக்கும் ஆரோக்கியமான விசுவாசம் வரும்; (தீத்து 1:9,14; 2:1). சபையிலே எழுப்புதல் வரும்; இயேசுவின் இரகசிய வருகை தாமதமாகாது (2 பேதுரு 3:9). கருகலாக்கப்பட்ட இந்த சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக

இதை அறியுமுன்னே மூன்று காரியங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## தேவனைப் பற்றி

நம் தேவன் நல்லவர்; நன்மை செய்கிறதே அவர் சுபாவம் (எபே. 2:10); அவர் மனிதனாய் வந்த போதும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார் (அப் 10:38); நன்மையான எந்த ஈவும் தருபவர் அவரே (யாக். 1:17). அவருடைய சித்தம் நன்மையானது; பிரியமானது - அதாவது அன்புள்ளது. எப்படிப்பட்ட அன்பு? பதில் எதிர்பார்க்காத - மற்றவர்கள் கேட்காதபோது - பொழிகிற கிருபை நிறை தேவ அன்பு (Agappe); அவரது சித்தம் பரிபூரணமானது; உண்மையானது; நேற்றும் இன்றும் என்றும் மாறாதது; இதை பகுத்தறியத்தக்கதாக நம் மனம் தினந்தோறும் வசனத்தால் மறுரூபமாகாத வரைக்கும், யாருக்கும் புரியாது (ரோ. 12:2). இவர் நமக்கு ஜீவனுண்டாயிருக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தார் (யோ. 10:10) ஆமென்.

## பிசாசைப் பற்றி

இவன் ஒருவனே. வலுசர்ப்பம் என்றும், சாத்தான் என்றும், லூசிபர் என்றும் அழைக்கப்படுபவன். இவன் 3ல் 1 பங்கு தேவ தூதர்களை பரலோகத்திலிருந்து கீழே தன்னோடு இழுத்துக் கொண்டு வந்தவன் (வெளி. 12:4). இவனது தலைமைச் செயலகம் 2ம் வானம். இவன் மனிதர்களை கொல்லவும், அழிக்கவும் புறப்பட்டிருக்கிறான் (யோ. 10:10). தெரிந்து கொள்ளப்பட்ட விசுவாசிகளையும் வஞ்சிக்கிறவன் (மத். 24:24). சிலுவையிலே இயேசு இவனது தலையை - தந்திரத்தை, சிந்தனையை நசுக்கிப் போட்டதால் அவர் நாமம் சொன்னாலே அலறுவான். அவனை விரட்ட விசுவாசிகளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார் (மாற். 16:17). இவன்

தேவனுக்கும் நமக்கும் எதிராளி (1 பேதுரு 5:8). போலித் திரித்துவத்தின் முதல் ஆள் (பிதா X வலுசர்ப்பம்). தேவனுக்கு - தேவ வார்த்தைக்கு - விரோதமாய் செயல்படுவதே இவன் தொழில்.

## சோதனைப் பற்றி

சோதனை என்றால் Tempt என்று ஆங்கிலத்தில் உண்டு. பிசாசை சோதனைக்காரன் என்று வேதம் சொல்லுகின்றது (மத். 4:3). யாக். 1:3ன்படி சோதனையெல்லாம் பொல்லாங்கானது; இந்த பொல்லாத சோதனையை தேவன் தரமாட்டார்; அவர் நல்லவர். நன்மை செய்பவர். அப்படியானால் பொல்லாங்கான தீமையை - சோதனையை தருபவன் பிசாசுதான். சோதனை எதற்காக தருகிறான்? மனிதன் பாவத்தில் விழ; சொர்க்கத்தை இழந்து போக; கெட்டுப் போக; அழிந்து போக. இதை தேவன் செய்யமாட்டார். ஏனெனில் யோ. 3:16ன்படி நாமெல்லாரும் கெட்டுப் போகாதபடி தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக சாகக் கொடுத்து நம்மேல் அவ்வளவாய் அன்பு காட்டுகிறவர். அவர் அன்பாகவே என்றும் இருக்கிறார் (1 யோ. 4:8). இப்படிப்பட்ட பிசாசின் சோதனையை ஜெயிக்கத்தக்கதான திராணியைக் கொடுக்கிறவர் நம் தேவன் (1 கொரி. 10:13). தேவன் - தேவனின் வார்த்தை - தேவனின் வல்லமை - நம்மோடிருந்தால் பிசாசின் சோதனையை நிச்சயம் ஜெயிக்க முடியும். இல்லையேல் பிசாசின் கைக்குள் அகப்பட்டு... முடிவோ... சரீர அகால மரணம். பிறகு நித்திய மரணம். பிசாசின் சோதனை வருமுன்னே அவனை விரட்டி ஜெயிப்பது ஒருவகை; சோதனைக்குள் விழுந்த பின்னும் அவனிடம் அடிவாங்கி உதைவாங்கி, விழுப்புண்களோடு வெற்றி வாகை சூடுவது ஒருவகை; பிசாசுக்கு எதிர்த்து நின்றே வீரமரணமடைவது ஒரு வகை. இதிலே முதல் வகையே தேவ சித்தம்.

இந்த நிலையில் அன்புள்ள தேவன் - இரக்கமுள்ள தேவன் - கருணாமூர்த்தி, நமக்கு நியாயாதிபதியாகவும் இருக்கிறார் என்று முதலில் அறிய வேண்டும். நியாயாதிபதி தண்டனையும் கொடுப்பார். வெகுமதியும் அளிப்பார். ஆமென். இந்தத் தண்டனைக்கு அப்பீலே இல்லை. தண்டனை கொடுக்கும் முன்னே தம்முடைய பிள்ளைகளுக்காக பரிந்து பேசுகிற அட்வகேட் அவரே! நமக்கு சாதகமாக சாட்சி சொல்லும் வசனமாகிய - வார்த்தையானவர் அவரே! நமக்கு வரும் தண்டனையை ஏற்கெனவே அனுபவித்து, அதை நம்மை விசுவாசிக்க வைத்து விடுவிப்பவரும் அவரே! ஏழு தரம் விழுந்தாலும் தூக்கி எடுப்பவர் அவரே! வசன உபதேசத்தால் சிட்சித்து வழிநடத்துபவர் அவரே! அப்போதைக்கப்போது நன்மைக்கான பரீட்சை வைத்து (சோதனை அல்ல) பாஸ் பண்ணச் செய்பவர் அவரே!

இவ்வளவு நமக்கு கிருபையாய் செய்தும், திருந்தாத பட்சத்தில் தான், நியாயாதிபதி தம் பணியை செய்ய ஆரம்பிப்பார். பொதுவாக நியாயத்தீர்ப்பு Declare பண்ணுவது, அதாவது வெளிப்படுத்தப்படுவது மனிதனின் மரணத்திற்கு பின் தான். ஆனால், 1 தீமோ. 5:24ன்படி இந்த நியாயத்தீர்ப்புக்கு முன்பதாகவே, இந்த பூமியிலே ஒரு சிலருக்கு நியாயத்தீர்ப்பு வழங்கப்படும். இதைத்தான் சரித்திர நியாயத்தீர்ப்பு என்று சொல்லுகிறோம். இது சோதோம் கொமேராவுக்கு வந்தது போல, அனனியா சப்பீராளுக்கு வந்தது போல ஒரு நொடிப் பொழுதிலும் வரலாம்; யூதா ராஜா யோராமுக்கு குடலில் உண்டான நோயினால் 2 வருஷம் வாதைப்பட்டு இறந்தது போல, விக்ரக ஆராதனைக்கு வழிவகுத்து நம் தேவனை மறுதலித்து அலட்சியப்படுத்தின யேசபேலின் கணவன் ஆகாப் ராஜா போரிலே மரணத்திற்குட்பட்டு "நாய் ரத்தத்தை நக்கும்" என்ற தேவனின் தீர்க்கதரிசனம் நிகழ்ந்தது போல, உயிரோடே தேவனால் தண்டிக்கப்பட்டு சவுல் ராஜா அலைக்கழிக்கப்பட்டு மடிந்தது போல, தேவ தண்டனை கொஞ்ச நாள் அலசடிப்பட்டும் நிறைவேறலாம். இப்படிப்பட்ட சரித்திர நியாயத்தீர்ப்பை பெற்ற யாருக்கும் இடையிலே விடுதலையே கிடைக்காது; அப்படி கிடைக்கப்பட்டவர்களும் ஒருவரும் இல்லை. தேவன் தந்த தண்டனை நிறைவேறியே தீரும்.

இந்த விளக்கத்தின் மத்தியில், செய்தியின் ஆரம்பத்தில் உள்ள ஒரு சில வசனங்களை ஆராய்வோம். இந்த வசனங்களில் சம்பந்தப்பட்டோர் சவுல் ராஜா, ஆகாப் ராஜா, அபிமெலேக், சீகேமின் பெரிய மனுஷர்கள், எகிப்தின் விக்ரக ஆராதனைக்காரர்கள், தாவீது வாசம் பண்ணின அரியேல் நகரத்தைச் சார்ந்த அக்கிரமச் செய்கைக்காரர்கள். இவர்களெல்லாரும் பொல்லாதவர்கள்; தேவனுக்கு விரோதமானவர்கள்; இவர்களையெல்லாம் தேவனே சரித்திரப் பிரகாரமாய் நியாயத்தீர்ப்பு செய்தார் என்று நாமறிவோம். 1 ராஜா. 22ல் வரும் ஆகாப் நிகழ்ச்சியைப் பார்ப்போம். கீலேயாத்தில் உள்ள ராமோத்தில் ஆகாப் விழுந்து போய் மரணமடைய தேவன் சரித்திர நியாயத்தீர்ப்பு செய்ய எத்தணித்து, அதற்காய் பரலோகில் ஆலோசனை பண்ணுகிறார். இப்படிப்பட்ட விக்ரக ஆராதனைக்காரன், தேவ சமூகத்தை பாகால் சமூகமாய் மாற்றுபவன், பிதாக்களின் சுதந்திரத்தை கொடேன் என்று சொன்ன நாபாலுக்கு எதிராக இரு சாட்சிகளை யேசபேல் மூலமாய் உருவாக்கி, அவனைக் கல்லெறிந்து கொன்று, திராட்சைச் தோட்டத்தை எடுத்துக் கொண்டவன், இஸ்ரேலருக்கு விரோதமாய் எழும்பிய துரோகி, தீர்க்கதரிசிகளை துன்புறுத்தியவன், தொடர்ந்து வாழக்கூடாது - அப்படி வாழ்ந்தால் தேவ நாமம் தூஷிக்கப்பட்டு தேசமே பாழாய்ப்போகும் - என்று எண்ணி தேவன் சரித்திர நியாயத்தீர்ப்பை

செய்ய சித்தமானார். தேவனின் பரலோக ஆலோசனையின் போது, "அவனை ராமோத்தில் விழச் செய்ய அவனுக்கு சொல்லிக் கொடுப்பது - வழிநடத்துவது யார்?" என்று வினவினார். அவரோடு இருந்த ஒரு ஆவி இதைச் செய்ய ஒப்புக்கொண்டது. இந்த ஆவி பொல்லாத - எதிராளியான பிசாசின் ஆவியல்ல. எதிராளியை வைத்தா தேவன் தன் நியாயத்தீர்ப்பை செயல்படுத்துவார்? தேவனால் நன்மையும் தீமையும் செய்ய முடியுமல்லவா! எகிப்திலே தலைச்சன் பிள்ளைகளை அழிக்க உபயோகித்தது தன்னிடமிருந்த சங்காரத் தூதன் தானே ஒழிய எதிராளியான பிசாசு அல்லவே! ஆகாப் சாதகமாக தீர்க்கதரிசனம் சொல்லும் 400 தீர்க்கதரிசிகளிடம் கேட்டும், சிதேக்கியா, மிகாயா என்பவர்களையும் அழைத்துக் கேட்டான். 400 தீர்க்கதரிசிகள் சொன்னபடியே சிதேக்கியாவும் "ராமோத்துக்குப் போய் போரிடு, ஜெயமுண்டு" என்று பொய்யாய் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். இப்படி சொல்ல வைத்தது பரலோகிலிருந்து புறப்பட்டு வந்த ஆவி; "இப்படிச் சொன்னால் ஆகாப் நம்பிப்போவான்; அங்கே தேவனின் சரித்திர நியாயத்தீர்ப்பு நிறைவேறும்" என்று நம்பியது அந்த ஆவி. உண்மைக் காரியத்தை மிகாயா சொல்லியும், ஆகாப் அந்தப் போதனையை எடுத்துக் கொள்ளவில்லை. எப்படியோ அவன் மாறுவேடம் போட்ட போதும், தேவனின் சரித்திர நியாயத்தீர்ப்பு நிறைவேறியது. தேவன் சொன்ன தீர்க்கதரிசனமும் நிறைவேறியது (1 ராஜா. 22:38).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! தேவன் தமது சரித்திர நியாயத் தீர்ப்பை பூமியிலே நிறைவேற்ற பொல்லாத எதிரியான பிசாசின் ஆவியை ஏவி விடவில்லை என்றும், தன்னிடத்திலுள்ள தேவ தூதர்கள் ஆவியையே, ஆகாபை சோதிக்க அல்ல; ஆகாபின் மேல் தமது நியாயத்தீர்ப்பை செயல்படுத்த அனுப்பினார் என்றும் அறிகிறோம். நம் தேவன் எதிராளியான பிசாசை எதற்கும் உபயோகிப்பதில்லை என்றும், யாரையும் பொல்லாங்கினால் சோதிப்பதில்லை என்றும், ஒரேயடியாக நியாயத்தீர்ப்பு செய்வார் என்றும் புரிந்து கொள்வோம். தேவனின் சரித்திர நியாயத்தீர்ப்பு மிகவும் கடுமையானது; கொடுமையானது; விடுதலையே இல்லாதது. இதே வெளிச்சத்தில் மேலே உள்ள அத்தனை வசனங்களையும் வாசித்து, விசுவாசித்து தேவசித்தத்தை கண்டு கொள்வோம்! ஆமென்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# வேண்டிக் கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மேலாய் தேவன் செய்வாரா?

நாம் விரும்புகிறவதற்கும் வேண்டிக் கொள்கிறதற்கும் மிகவும் அதிகமாய் தேவன் செய்வார் என்று பலர் போதிக்கின்றனர்; பலர் விசுவாசிக்கின்றனர்; சிலர் பெற்றுக் கொள்கின்றனர்; சிலர் பெறாமல் தவிக்கின்றனர். காரணம் என்ன! பெற்றுக் கொள்கின்றவர்களும் எல்லா காரியங்களையும் பெற்றுக் கொள்வதில்லை. இந்த சத்தியம் குறித்து போதிப்பவர்கள் எடுத்துக் கொள்ளும் வசனம் எபே. 3:20. இந்த வசனத்திலே "மிகவும் அதிகமாய்" என்று இரண்டு Superlative Degree போடப்பட்டு எழுதப்பட்டுள்ளது சிந்திக்க கூடிய ஒன்று. இதை நம்பி பலர், தாங்கள் காணும் கார், வீடு, நிலம் போன்ற பொருட்களை நினைக்கிறார்கள். அவைகளுக்காக ஜெபிக்கிறார்கள். இறுதியில் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தில் சோர்ந்து போகிறார்கள். ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

இந்த வசனத்தை விசுவாசிக்கும் தேவ பிள்ளையே! உன் விசுவாசம் அற்ப விசுவாசமாய், சொற்ப விசுவாசமாய், கடுகளவு விசுவாசமாய் இருக்க கூடாது; மலையைப் பெயர்க்க தக்கதான விசுவாசமாய் இருக்க வேண்டும் (மாற். 11:23). அப்போதுதான் "மிகவும் அதிகமாய்" பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியை பெற்று ஆவியானவர் தரும் "விசுவாசமாகிய வரம்" உனக்குள் வேண்டும் (1 கொரி. 12:9). இப்படிப்பட்ட விசுவாசமாகிய வரமுள்ள நீ, எபே. 3:20 ஐ முழுமையாக படித்து, விசுவாசிக்க வேண்டும். பாதி வசனம் மட்டும் படித்து விசுவாசம் உண்டு என்றால் அது போதாது. நாம் விரும்புகிறதற்கும், வேண்டிக் கொள்கிறதற்கும் மிகவும் அதிகமாய் தேவன் எப்படி கிரியை செய்வார்? **நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே!** யாருடைய வல்லமை? நம் விசுவாச வல்லமைக்கு ஏற்றபடியான தேவனுடைய வல்லமை. அவர் மகா வல்லமையுள்ள தேவன். புறஜாதி தெய்வங்களை வழிபட்ட ஆபிரகாமிடம் "சர்வ வல்லமையுள்ள தேவன்" (எல்ஷடாய்) என்ற நாமத்தில் தான் வெளிப்பட்டார் (ஆதி. 17:1). மனிதனைப் படைக்கும் போதே, "வல்லமை இவரிடத்தில் பூரணமாயிருந்தது" என்று மல். 2:15 சொல்கின்றது. இந்த தேவனின் சர்வ வல்லமை நமக்குள்ளே முழுமையாய்க் கிரியை செய்தால், நாம் விரும்புவதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் மிகவும் அதிகமாய் நாம் பெற்றுக் கொள்வோம். நம் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை (லூக். 1:37); அவர் நினைத்தது ஒன்றும் தடைபடாது (யோபு.

42:2); அவர் நினைப்பதே பூலோகம் பரலோகமாக வேண்டும் என்பதே (மத். 6:10). அல்லேலூயா!

அப்படிப்பட்ட சித்தமுள்ள தேவனுடைய வல்லமை நம்மில் முழுமையாய்க் கிரியை செய்யாததற்குக் காரணம் என்ன? 2 பேதுரு 1:3,4ஐ வாசியுங்கள். மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவு நம்மிடத்திலே முழுமையாய் இல்லை. அது இருந்தால், அவருடைய திவ்ய பரிபூரண வல்லமை நம்மில் கிரியை செய்யும்; இந்த ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய எல்லாம் கிடைக்கும்; அவர் அளித்த ஆசீர்வாத வாக்குத்தத்தங்கள் ஏராளமாய், தாராளமாய் நம்மில் பலிக்கும். தேவனை அறிந்திருக்கிறோம் நாம்; ஆனால் தேவனைப் பற்றிய அறிவு நூற்றுக்கு நூறு நம் ஒருவரிடத்திலும் இல்லை. அதனால் தான் நாமெல்லாரும் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடிக் கொண்டே இருக்கிறோம் (மத். 6:33). நாம் தேடிக் கண்டுபிடிக்கும் அளவிற்கு ஏற்ப அவருடைய வல்லமை நம்மில் கிரியை செய்யும். புறஜாதியார் போல வேளாங்கண்ணிக்கும், ஏர்வாடிக்கும், திருப்பதிக்கும் தேவனைத் தேடி நாம் போக வேண்டியதில்லை. தேவன் நம்மைத் தேடி வந்து நமக்குள்ளே வார்த்தையாய் - ஆவியாய் - வாசம் பண்ணுகிறார் (1 யோ. 4:4; யோ. 15:7; ரோ. 8:11) - அவரோடு கிட்டிச் சேர சேர - அவருடைய பிரசன்னத்தில் மூழ்க மூழ்க - அவரின் வல்லமை தானாகவே நமக்குள் கிரியை செய்ய ஆரம்பிக்கும். இதற்கு முதல் தேவை :- “கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்க வேண்டும்” (சங். 1:2). வேதமே நமக்கு வெளிச்சம். வெளிச்சம் நிறைந்தால் இருளில்லை; இருளில்லையேல் எல்லாம் நமக்கு உண்டு; அல்லேலூயா!

இந்த தேவன் அன்பாயிருக்கிறார் (1 யோ. 4:8); நமக்காய் ஜீவனைக் கொடுத்தார் (யோ. 3:16); நன்மை செய்வதே அவர் சுபாவம் (எபே. 2:10; அப். 10:38); இம்மையிலே நூறத்தனை ஆசீர்வாதம் மறுமையிலே நித்திய ஜீவனும் அடைய வேண்டும் என்பதே அவர் சித்தம் (மாற். 10:29,30); கெட்ட குமாரனின் தந்தையின் குணாதிசயமே நம் தேவனுக்கு. அல்லேலூயா!

இந்த தேவனின் வல்லமை நமக்குள்ளே கிரியை செய்ய நாம் என்ன செய்ய வேண்டும்? தேவனைப் பற்றிய அறிவை வேத தியானத்தால் அறிந்த நாம், அறிந்ததில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் (Vigilant) இருக்க வேண்டும். இல்லையேல் கள்ள உபதேசமும், தவறான உபதேசமும் நம்மை ஆட்கொள்ளும்; ஆரோக்கியமான உபதேசம் நம்மில் நிலைத்திராது. “தேவன்

சோதிக்கிறார்; வியாதி, வறுமை, அகால மரணம், கடன் பிரச்சனை, சமாதானமின்மை, தோல்வி வாழ்க்கை போன்ற பொல்லாங்கான காரியங்களை அனுமதிக்கிறார்; ஆசீர்வாதங்களை கொடுத்த கர்த்தரே எடுக்கிறார். இவ்வுலகில் இப்படித்தான் பாடுகள், பரலோகில் தான் சமாதானம், மகிழ்ச்சி;" போன்ற பல கள்ள உபதேசங்கள் நம்மை ஆட்கொண்டு, தேவனை பற்றிய அறிவிலிருந்து வீழ்ந்து போகும் நிலைக்கு இடந் தரக்கூடாது. வசன விசுவாசத்தோடு தைரியமும், தைரியத்தோடு வேத ஞானமும் (நீதி. 1:7), ஞானத்தோடு இச்சையடக்கமும், இச்சையடக்கத்தோடு பொறுமையும், பொறுமையோடு தேவ பக்தியும், தேவ பக்தியோடு சகோதர சிநேகமும், சகோதர சிநேகத்தோடு தெய்வீக அன்பும் நம்மில் வெளிப்பட வேண்டும். இவைகள் இல்லாதவன் இரட்சிக்கப்பட்டதை மறந்த குருடன். ஆகையால், தேவப்பிள்ளையே! பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு இவைகள் ஒன்றிலும் குறைவுபடாமல் நிறைவாயிருங்கள்.

மட்டுமல்ல; நீங்கள் எது தேவை என்று நினைக்கிறீர்களோ அதிலே உறுதியாய் இருக்க வேண்டும். தரிசனம் - Vision - கண்டிப்பாய் தேவை. தரிசனம் இல்லாவிட்டால் வாழ்வு சீர்கெட்டுப் போகும் (நீதி. ). Where there is vision there will be provision - இந்த தரிசனப் பார்வை வசனத்தை ஒத்ததாய் இருக்க வேண்டும்; அது விசுவாசப் பார்வையாய், உறுதியான பார்வையாய் இருக்க வேண்டும். இந்த பார்வையோடு தேவனிடம் வேண்டிக் கொண்டால் - ஜெபித்தால் - வல்லவராம் நம் தேவன் நமக்குள்ளே தம் வல்லமையை கிரியை செய்ய வைப்பார்; அப்போது நாம் விரும்பியதும் வேண்டிக் கொள்வதும் கண்டிப்பாய் நமக்குக் கிடைக்கும்.

இதை வாசிக்கும் தேவப் பிள்ளையே! மேலே சொன்னபடி எல்லாம் செயல்படாதபடிக்கு பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல விழுங்க அலைகிறான்; அவனை எதிர்த்து நில்லுங்கள். அவனின் அக்கினி யாஸ்திரங்களை அவித்து போடுங்கள்; அவனின் தந்திரங்களை அறிந்துக் கொண்டு விரட்டி அடியுங்கள். இதற்கு தேவை (1) உபவாசத்தினாலும், ஜெபத்தினாலும் உனக்குக் கிடைக்கும் வல்லமை! (த். 17:21). (2) தேவன் கையளித்திருக்கிற அதிகாரம் (மத். 28:18-20). அதிகாரம் உள்ளவனாய், வல்லமையை தரித்துக் கொண்டு செயல்படு! தேவ வல்லமை உன்னில் பரிபூரணமாய் கிரியை செய்யும்! நீ விரும்புகிறதற்கும், வேண்டிக்க கொள்கிறதற்கும் மேலாய் பெற்றுக் கொள்வாய்! ஆமென்!

❖ ❖ ❖

## மக்கள் மறுரூபமாக 10 கற்பனைகள் தேவையா?

பெந்தகொஸ்தே வட்டாரத்தில் காணப்படும் ஒருசில தவறான உபதேசங்கள், கள்ள உபதேசங்களுக்கு நுழைவாயிலாய் மாறுகின்றன என்று ஏற்கெனவே நான் எழுதியிருக்கிறேன். நம் எல்லோருக்கும் தெரியும் நியாயப்பிரமாணத்தில் 10 கற்பனையும் அடங்கியிருக்கிறது என்று (யாத். 24:3-8; மத். 5:14-17); "நியாயப்பிரமாணம் புதிய ஏற்பாட்டுப் பிள்ளைகளுக்கு கிடையாது; அது நம்மை ஆட்கொள்ளாது; நாம் கைக்கொள்ள வேண்டியது கிறிஸ்துவின் உபதேசமே" என்றும் நமக்குத் தெரியும் (ரோ. 7:1-6; 8:2; மத். 28:18-20; அப். 2:42; யூதா 17). இயேசு கிறிஸ்துவோடு கூட சிலுவையிலே, 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் ஒழிந்து போய்விட்டது என்று நாமறிவோம் (எபே. 2:15; ரோ. 10:4). இவ்வளவு தூரம் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை வெளிப்படுத்தியும், இன்னும் ஆவிக்குரிய சபைகளிலே மனக்கண் பிரகாசமாகவில்லையே ஏன்? (எபே. 1:19). மரித்தவர்களோடே தூங்குகிறார்களே ஏன்? (எபே. 5:14). இந்த நிலையில் வசனத்திற்கு இடங்கொடுக்காமல், தவறாய் உபதேசம் பண்ணி, கள்ள உபதேசக்காரர்களுக்கு இடங்கொடுக்கிறார்களே ஏன்? செழிப்பாக வேண்டிய சத்தியத்தை கருகலாக்குகிறார்களே ஏன்?

இதை வாசிக்கும் போதே என்னை ஒரு மாதிரி பார்வையில் பார்க்கிறீர்கள் என்று நான் அறிவேன்! "போற்றுவார் போற்றட்டும்; புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்; என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று தாயுமானவரே சொல்லும்போது, "என் ஜீவன் கிறிஸ்துவுக்கே" என்ற பவுலின் ஆவியை உடைய நான், கருகலான சத்தியத்தை தொடர்ந்து துளிர்த்தெழச் செய்து கொண்டேயிருப்பேன்! அல்லேலூயா! இந்த செய்தி எழுத வழிவகுத்தது ஒரு பெரிய ஆவிக்குரிய சபை ஊழியர் வீட்டிற்கு நான் போனதால்தான்.

என் மகள் அனிதா மெர்சியின் திருமண அழைப்பிதழை கொடுக்க அந்த ஊழியர் வீட்டுக்கு நானும் என் மனைவியும் போனோம். போய் நுழைந்த உடனேயே ஒரு பெரிய போர்டு என் கண்ணை இழுத்தது. அதில் "மக்கள் மறுரூபமாக 10 கற்பனைகள்" என்று தலைப்பிட்டு, சீனாய் மலையில் இயேசு கொடுத்த 10 கற்பனைகளை எழுதி தொங்கவிட்டு இருந்தனர். அங்கே அந்த சபையின் சின்ன பாஸ்டர் மட்டுமே இருந்தார். மறுரூபமாக 10 கற்பனைகள் என்றால் 4ம் கற்பனையை கைக்கொள்கிறீர் களா என்று கேட்டேன். "ஆம். இயேசு உயிர்த்தெழுந்த வாரத்தின் முதலாம் நாளை ஓய்வு நாளாய்க் கைக்கொள்கிறோம்" என்றார். நியாயப் பிரமாணப்படி

7ம் நாளாகிய சனிக்கிழமை தானே ஓய்வுநாள்" (மத். 28:1; லூக். 23:54) என்றேன் நான். "சரிதான். ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பிறகு ஞாயிற்றுக்கிழமையைத் தானே ஆசரிக்க வேண்டும்" என்றார். "வேதத்தின்படி சனிக்கிழமை தான் ஓய்வு நாள்; ஞாயிற்றுக்கிழமை அல்ல. 10 கற்பனைப்படி சனிக்கிழமையைத் தான் ஆசரிக்க வேண்டும். அப்படி ஆசாரிக்காவிட்டால் நீங்கள் எழுதி வைத்திருக்கிறபடி மறுரூபமாக மாட்டீர்கள்; மறுரூபமாகவில்லை என்றால் பரலோகம் போக முடியாது. நியாயப் பிரமாணத்தை ஆசரித்த ஒருவனும் நீதிமானில்லை என்று சொல்லியிருக்க (ரோ. 3:10) பரலோகம் போக வழி 10 கற்பனையா?" என்று நான் கேட்டேன். உடனே அவர், "வாக்குவாதம் நாங்கள் செய்வதில்லை" என்றார். இப்படிச் சொல்லிச் சொல்லியே பல ஆவிக்குரிய சபை ஊழியக்காரர்கள் சத்தியத்தை அறிந்து விடுதலையாகாமல், தவறான சத்தியத்தை சொல்லி கள்ள உபதேசத்தை நுழையவிடுகின்றனர்.

எது வாக்குவாதம்? பரலோகம் போக வழி சொன்னது வாக்குவாதமா? நிக்கோதேமு இரவிலே இயேசுவிடம் பரலோகம் போக வழி கேட்டாரே அது வாக்குவாதமா? (யோ. 3). அப். 15:4-21ல் நடந்தது வாக்குவாதமா? அந்த தர்க்கம் உண்டானதால் தானே புதிய ஏற்பாட்டு மக்களுக்கு சத்தியம் விளக்கப்பட்டது. "வழக்காடுவோம் வாருங்கள்" (ஏசா. 1:18) என்று தேவனே நம்மை அழைக்கும்போது, சத்தியத்திற்காய் கலந்துரையாடுவது தவறே இல்லை. 2 தீமோ. 4:2; 1 பேதுரு 3:15; தீத்து 1:9,14; 2:1 போன்ற வசனங்களெல்லாம் எதற்கு? எதையுமே சிந்திக்காமல், பாரம்பரியமாய் தங்களுக்கு பைபிள் காலேஜிலோ மற்ற இடங்களிலோ போதிக்கப்பட்டதை அப்படியே எடுத்துக் கொண்டு, தாம் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்.

"மக்கள் மறுரூபமாக 10 கட்டளைகள்" என்று போட்டுள்ளார்களே, இங்கே சொல்லப்படும் "மக்கள்" என்பது இரட்சிக்கப்படாத புறஜாதிகளா? அல்லது இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளா? இரட்சிக்கப்படாதவர்கள் என்றால், அவர்கள் ஆவியிலே மறுபடி பிறப்பது - மறுரூபமாவது, 1 பேதுரு 1:23; யோ. 3:3,5; ரோ. 10:9,10; யாக். 1:18; 1 கொரி. 6:11 போன்றவைகளின்படி தேவனின் வசனத்தால் ஆவியானவரைக் கொண்டு, 2 கொரி. 5:17ன்படி ஆவியிலே புதுசிருஷ்டியாவது - தானே ஒழிய, 10 கற்பனைகளை கைக்கொள்வதால் அல்ல. எபே. 2:8ன்படி கிரியையினால் அல்ல இரட்சிப்பு. மற்றப்படி இது இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கென்றால், முதலில் நாம் அறிய வேண்டியது, நமது ஆவி, ஆத்மா, சரீரம் ஆகிய மூன்றும் குற்றமற்றதாயிருக்க வேண்டும் (1 தெச. 5:23). இரட்சிக்கப்படும் போது ஆவியிலே புது சிருஷ்டியாகிறோம்;

மறுரூபமாகிறோம். இது கிரியைகளினாலல்ல வசன விசுவாசத்தால்தான். அதன்பின், நமது மனமாகிய ஆத்மா, அறிவு, சிந்தனை, உணர்வு எல்லாம் மறுரூபமாக வேண்டும் (ரோ. 12:2). ஆத்மாவை மறுரூபமாக்குவதும் வசனம் தான் (யாக். 1:21; 2 தீமோ. 3:16,17). அந்த வசனம் இயேசுவின் உபதேசமும் அப்போஸ்தலர்களின் உபதேசமும் தான் (மத். 28:18-20; ரோ. 6:17; யூதா 17; அப். 2:42; யோ. 15:3; 17:17). அது 10 கற்பனையினால் அல்ல. 10 கற்பனையில் குடிக்கக்கூடாது என்று உள்ளதா? தசமபாகம், காணிக்கை தர வேண்டும் என்று உண்டா? மனந்திரும்ப வேண்டும்; இரட்சிக்கப்பட வேண்டும் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்; பரிசுத்த ஆவி பெற வேண்டும்; சபை கூடி வரவேண்டும்; அப்பம் பிட்க வேண்டும் என்றெல்லாம் உண்டா? இயேசு கொடுத்த புதிய ஏற்பாட்டு புதிய கற்பனை (யோ. 13:34; 15:12) அதில் உண்டா? பாவ மன்னிப்புக்கு வழி சொல்லப்பட்டுள்ளதா? இப்படி கேட்டுக் கொண்டே போகலாம். இந்த 10 கற்பனையானது அதற்கு முன் நிற்பவர்களைப் பார்த்து "குற்றவாளி", "குற்றவாளி" என்று விரோதமான சாட்சி தான் கொடுத்துக் கொண்டிருக்கும் (உபா. 31:26). மற்றப்படி பழைய ஏற்பாட்டில் இது ஒருவரையும் நீதிமானாக்கவில்லை (ரோ. 3:9). பாவம், மரணம் என்று சொல்லும் இந்தப் பிரமாணத்திலிருந்து நாம் விடுதலையாயிருக்கிறோமே! (ரோ. 8:2). இந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம், ரோ. 3:23,24; 1 கொரி. 6:11ன்படி இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, நீதிமான்களாக்கப்பட்ட நமக்கு அல்ல என்று 1 தீமோ. 1:9; ரோ. 7 சொல்வதை வாசிக்கவில்லையா? ஆத்மா இப்படியாய் வசனத்தால் தினந்தோறும் மறுரூபமாகிறது; இயேசுவின் வருகையில் நம் சரீரம் மறுரூபமாகும் (ரோ. 8:23) அல்லேலூயா!

மறுரூபமாகுதலின் தாற்பரியம் இப்படியிருக்க, அதை விடுத்து, இன்னும் பழைய நியாயப்பிரமாணக்காரர்களைப் போல 10 கட்டளையை நம்பியிருப்பது ஏன்? 4ம் கட்டளையில் உள்ள 7ம் நாளாகிய சனிக்கிழமை ஓய்வு நாளை ஆசரிக்காமல் ஞாயிற்றுகிழமையை ஆசரிப்பது குற்றம்தானே! தேவன் ஏற்படுத்திய சனிக்கிழமை ஓய்வு நாளை (நெகே. 9:13,14) ஞாயிற்றுக்கிழமைக்கு, கி.பி. 538ல் ரோமன் கத்தோலிக்க போப் மாற்றினார். போர் மார்க்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஓய்வு நாளை ஆசரிப்பவன் ஆவிக்குரிய கிறிஸ்தவனாய் இருக்க முடியுமா? சிந்தியுங்கள். **அறிந்தோ, அறியாமலோ, வைராக்கியத்தினாலோ, இப்படிப்பட்ட ஆவிக்குரிய சபையார் நரகம் நோக்கிப் போகிறதைக் குறித்து மிகுந்த துக்கத்தோடு இந்த கருகலான சத்தியப் பகுதியை எழுதுகிறேன்.** ஆத்ம இளைப்பாறுதலை - ஓய்வை - அனுதினமும் இயேசு கொடுத்திருக்க, அதுவும் அவரின் வசனமாகிய

நுகத்தால் கிடைத்திருக்க, நியாயப்பிரமாணக்காரர்களின் ஒரு நாள் ஓய்வு நாளோ, கட்டளையோ நமக்குத் தேவையில்லை அல்லவா! (மத். 11:28-30; கொலோ. 2:16,17). இது போன்ற விளம்பர அட்டைகள் அவர்களின் எல்லா சபைகளுக்கும் அனுப்பப்பட்டு அங்கே தொங்கவிடப் பட்டிருக்கும் என்று நம்புகிறேன். இதைப் பார்க்கிற 7ம் நாள் கள்ள உபதேச சபையார், அந்த ஆவிக்குரிய சகோதரர்களிடம் இதையே சுட்டிக்காட்டி தங்கள் பக்கம் விசுவாசிகளை இழுத்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது அல்லவா! மத். 23:13ஐ சிந்திக்க வேண்டாமா? கள்ள உபதேசத்திற்கு வழிவகுக்கும் இப்படிப்பட்ட தவறான உபதேசம் மறையட்டும்! மனக்கண்கள் பிரகாசமாகட்டும்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

# ஜீவன் கிறிஸ்து என்றால் சாவு எப்படி ஆதாயமாகும்?

பிலி. 1:21ல், "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்கிறான் பவுல். ஜீவனும், மரணமும் (சாவும்) ஒன்றுக்கொன்று நேர்மாறானது என்று நாமறிவோம். இந்தப்படி ஜீவனாக கிறிஸ்து இருக்கும்போது மரணம் எப்படி ஆதாயமாக முடியும்? கிறிஸ்துவின் ஜீவனோடே வாழ்வதை விட்டுவிட்டு சாவை ஏன் விரும்பி ஆதாயப்படுத்த வேண்டும்? கிறிஸ்துவினால் கிடைக்கும் ஜீவ வாழ்க்கையை விட, சாவினால் வருவது சந்தோசமாக இருக்குமா? ஜீவாதிபதி இயேசு; மரணத்துக்கு அதிபதி பிசாசு. இப்படியிருக்க, பவுல் ஏன் இப்படி எழுதுகிறான்? ஆவியானவர் தாமே, இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

உள்ளான மனுஷன், புறம்பான மனுஷன் என்று மனிதன் இரு பிரிவுகளாக இருக்கிறான் (2 கொரி. 4:16). புறம்பான மனுஷனாகிய சரீரத்துக்கு - மாம்சத்திற்கு - ஜீவன், இரத்தத்தில் (ஆதி. 9:4; லேவி. 17:11-14). உள்ளான மனுஷனாகிய ஆவி - ஆத்மாவிற்கு ஜீவன், இயேசு கிறிஸ்துவில். இயேசுவே நமக்கு - நமது மரித்துப் போன ஆவிக்கு (எபே. 2:1) ஜீவன் தர வந்தார்; இந்த ஜீவன் பூரணப்பட வந்தார் (யோ. 10:10). அதன்படியே இயேசுவாகிய வார்த்தையால், வார்த்தையாகிய இயேசுவால் ஜீவனைப் பெற்று - மறுபடியும் பிறந்து - புதுசிருஷ்டியாய் இருக்கிறோம் (யோ. 3:3,5; ரோ. 10:9,10; 2 கொரி. 5:17; 1 பேதுரு 1:23). ஆவியிலே நாம் பெற்றிருக்கிற புது ஜீவன் பெலப்பட, பெலப்பட அது ஆத்மாவை வழிநடத்தும் (சங். 103:1-

3); ஆத்மா அதனால் மறுரூபமாகும் (ரோ. 12:2; யாக். 1:21). ஆத்மா செழித்து மறுரூபமாக, மறுரூபமாக, எல்லாவற்றிலும் வாழ்ந்து செழிப்பாயிருப்போம் (Shall be prospereth & be in good health). இந்த அடிப்படை சத்தியத்தோடு பவுலின் வார்த்தையைப் பார்ப்போம் (3 யோ.2).

பவுல் ஜெயிலில் இருக்கும்போது எழுதியது பிலிப்பியர் நிருபம். ஊழியத்தின் நிமித்தம் அநேக நெருக்கங்கள்; வாழ்வா சாவா என்ற நிலை பவுலுக்கு. சரீரத்திலே வாழலாமா அல்லது மரித்துப் போகலாமா என்ற இரண்டு சிந்தனைக்குள்ளாகவும் நெருக்கப்படுகிறான். சாக ஆசைப்படுகிறான் (பிலி. 1:23). ஆனாலும் சாகாமல் சரீரத்தோடே இருந்தால்தான் கிறிஸ்தவ விசுவாசிகளை, ஊழியர்களை திடப்படுத்தி, வழிநடத்தி, வருகையில் கொண்டு சேர்க்க முடியும் என்பதால் உயிரோடிருக்கிறான் (பிலி. 1:24). அப்படியானால் சாவு எப்படி ஆதாயமாகும்?

பவுல் உயிரோடிருந்தால் கிறிஸ்தவர்களுக்கு, கிறிஸ்துவின் ஊழியத்திற்கு, கிறிஸ்துவுக்கு ஆதாயம். மரித்துப் போனால் பவுலுக்கு ஆதாயம் என்ன? (1) ஒரு சிலர் சொல்வது போல "மரித்த பின்னே மனிதன் அணைந்து போகிறான்; உணர்வின்றிப் போகிறான்; நித்திரை அடைகிறான்; ஒன்றும் அறியாமற் போகிறான்" என்றால், மரணத்தால் இலாபமில்லையே! அப்படியானால் மரணத்திற்குப்பின் நிலை என்ன? (2) புறம்பான சரீரத்தை விட்டுப் பிரிகிறான் என்றால், (பிலி. 1:23; 2 பேதுரு 1:13; 2 கொரி. 5:8) பிரிந்து போகிறது எது? உள்ளான மனுஷனாகிய ஆவியும் ஆத்மாவும் தானே! அது பிரிந்து எங்கே போகிறது? (3) ஒன்றுமில்லாமல் nothing ஆவதற்கே பிரிந்து போகின்றது என்றால் அதற்கு ஏன் அவன் ஆசைப்பட வேண்டும்? (4) பிரிந்து போய் கிறிஸ்துவோடிருக்க விரும்புகிறான் என்றால், இயேசு எங்கேயிருக்கிறார்? அவர் கல்லறையில் தான் உணர்வின்றிக் கிடக்கிறாரா? (5) சாவு அதிக நன்மையாயிருக்கிறது என்கிறானே, பூமிக்கு மறுபடியும் போய் சுயநினைவின்றி, செயல்பாடின்றி இருப்பதா அதிக நன்மை? சரீரத்தில் இருந்து கிறிஸ்துவுக்காய் ஆத்ம ஆதாயம் செய்வது அதிக நன்மை இல்லையா?

ஆ! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! பவுலின் இந்த ஒருவரியானது, பரதீசு, பாதாளம், ஆவி, ஆத்மா போன்றவைகள் எல்லாம் இல்லை என்று வாதிட்டு கள்ள உபதேசத்தை பரப்பும் ஓநாய்களுக்கு சாவு மணியாய் இருக்கிறது என்று விளங்குகிறதா? ஆவியில்லாத சரீரம் செத்தது; ஆத்மா எடுபட்டுப் போன சரீரம் செத்தது (யாக். 2:26; லூக். 12:20). ஆக சரீரம் மரிக்கும் போது, ஆவியும் ஆத்மாவும் பிரிகிறது; சரீரம் மாத்திரம்

மண்ணுக்குப் போகிறது (பிர. 12:7). கிறிஸ்தவனுக்கும் அப்படித்தான்; கிறிஸ்தவனாய் இல்லாதவனுக்கும் அப்படித்தான். பவுல் கிறிஸ்தவனாய் இருப்பதால் மேலே விளக்கப்பட்டபடி பவுலின் உள்ளான மனுஷன் ஜீவனோடிருக்கிறான்; இந்த ஜீவன் கிறிஸ்துவே; கிறிஸ்துவாகிய வார்த்தையே! ஜீவனோடிருக்கிற - இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனின் உள்ளான மனுஷன் மரித்த பின் எங்கே போகிறான்? To be absent from the body is to be present with the Lord (2 கொரி. 5:8). To depart to be with christ (பிலி.1:23). ஆக, பிரிந்து போன உள்ளான மனுஷன் கிறிஸ்துவோடு இருப்பான். கிறிஸ்து எங்கே இருக்கிறார்? பரலோகில் இருக்கிறார். ஆமென். (எபி. 8:1; 10:12). பரலோகின் ஒரு பகுதியில் தான் பூரணராக்கப்பட்ட நீதிமான்களின் - இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் ஆவி இருக்கிறது (எபி. 12:23; எபே. 4:8-10; வெளி. 6:9-11). இந்த இடம் வரைக்கும் தான் உலகில் வசிக்கும் போதே பவுல் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறான் (2 கொரி. 12:3). இப்படிப்பட்ட இடத்திற்கு - கிறிஸ்துவின் இடத்திற்கு - பரதீசுக்கு போய் இருக்க ஆசைப்பட்டது அதிக நன்மையானது தானே! கிறிஸ்துவின் ஜீவனில்லாதவர்கள் - இரட்சிக்கப்படாதவர்கள் - உள்ளான மனுஷனில் மரித்திருப்போர்களின் ஆவியும், ஆத்மாவும் சரீரத்தை விட்டுப் பிரிந்து இயேசு சென்ற பாதாளம் தான் போகும். அங்கு தான் லாசரு - ஐஸ்வரியாவன் சரிதையில் உள்ள பாவி ஐஸ்வரியவான் போனான். சரீரத்திலே ஊழியத்திற்கென்று பாடுகள் பட்டு ஆத்ம ஆதாயம் செய்வதைவிட, சரீரத்தை விட்டுப் பிரிந்து - மரித்து - கிறிஸ்துவோடு என்றென்றும் வாழ்வது அதிக நன்மையும் சந்தோசமும் தானே!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! கிறிஸ்துவின் ஜீவன் பவுலுக்கு இருந்தது போல நமக்குள் இருந்து கிரியை செய்தாலும், சரீரத்தை விட்டுப் பிரிந்து போகும் ஆவி - ஆத்மாவிற்கு, ஆதாயம் அபரிமிதமாய் இருந்தாலும், பவுலைப் போல நாமும் சொல்வோம், "ஆத்ம ஆதாயத்திற்காய் சரீரத்திலே இருந்து செயல்படுவோம்" என்று. அது தான் தேவன் விரும்பும் நல்ல போராட்டம்; இந்த போராட்ட ஓட்டத்தை வெற்றியோடு முடிப்போம்! ஜீவ கிரீடத்தை பெறுவோம்! மரணத்திற்குப் பின் ஏதுமில்லை என்ற கள்ள உபதேசத்தை முறியடிப்போம்! ஆத்மா - ஆவி - எல்லாம் இல்லை என்கிற துன்மார்க்கரை வெற்றி கொள்வோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖

# கிறிஸ்தவன் "பொருத்தனை (vow) பண்ணலாமா?

தேவபிள்ளையே! ஏதாவது ஒரு காரியம் தேவனிடத்திலிருந்து நடக்க வேண்டுமென்றால் தற்கால கிறிஸ்தவர்கள் பலர் பொருத்தனை பண்ணி ஜெபிக்கிறார்கள். ஜெபிக்கிற காரியம் நடந்துவிட்டால், "நான் அணிந்திருக்கிற ஆபரணங்களையெல்லாம் கழற்றி விடுவேன்," "இனிமேல் கலர் உடையே அணியாமல் வெள்ளை உடையே அணிவேன்." தேவனுக்கு காணிக்கையாக 10000 தருவேன்," "ஒரு சபை கட்ட உதவி செய்வேன்," "இந்த ஊழியத்தை முழுமையாய் தாங்குவேன்," "வேலையை ராஜினாமா செய்து விட்டு முழுநேர ஊழியனாவேன்," "திருமணமே முடிக்காமல் ஊழியம் செய்வேன்," "இனிமேல் மது, மாது போன்ற காரியங்களில் ஈடுபட மாட்டேன்," "இனி மேல் காவி உடைதான் உடுத்துவேன்" என்று பலவாறு தங்களது அறிவில் உதித்த வண்ணம் பொருத்தனையை ஏற்படுத்தி, பயத்தோடே நிறைவேற்றுகிறார்கள். நிறைவேற்றாவிட்டால் தாங்கள் பெற்ற ஆசீர்வாதம் மாறிப் போகுமோ என்று அஞ்சுகிறார்கள். இன்னும் பல கிறிஸ்தவர்கள், தங்கள் பொருத்தனைகளை இடையிலேயே மாற்றிக் கொள்கின்றனர். உதாரணத்திற்கு மறைந்த சென்னை பாஸ்டர் சுந்தரத்தை எடுத்துக் கொள்வோம். சி.பி.எம்.ல். அவர் ஊழியம் ஆரம்பித்தபோது "திருமணம் செய்யாமலே ஊழியம் செய்வேன்" என்று பொருத்தனை பண்ணி, இடையிலேயே சி.பி.எம். சபையை விட்டு வெளியேறி, திருமணம் செய்து கொண்டு, பெந்தகொஸ்தே சபையை நிறுவி, ஒரு பெரிய எழுப்புதலை உருவாக்கினார். இவைகளை எல்லாம் பார்க்கும்போது, கிறிஸ்தவர்கள் பொருத்தனை பண்ணலாமா என்ற கேள்வி எல்லா பகுத்தறிவாளர்களுக்கும் (யூதா 22) எழுவது இயற்கைதானே! இந்த கருகலான காரியத்தை ஆவியானவர் தாமே வெளிப்படுத்துவாராக!

நியாயப்பிரமாணத்தில் உள்ள பலதரப்பட்ட சட்டங்களில் பொருத்தனை சட்டமும் (vow laws) ஒன்று. இந்த பிரமாணம் லேவி. 27; எண். 30 மற்றும் உபா. 23:21-23ல் விளக்கப்பட்டுள்ளது. **பழைய ஏற்பாட்டில் பண்ணப்பட்ட பொருத்தனைகள் ஒன்றிரண்டைப் பார்ப்போம்.** (1) கானானிய ராஜா இஸ்ரேலருக்கு விரோதமாக யுத்தம் பண்ணி, அவர்களில் சிலரை பிடித்துக் கொண்டு போனான். அப்போது இஸ்ரேலர், "இந்த கானானியரை கர்த்தர் எங்களுக்கு ஒப்புக் கொடுத்தால் அவர்களுடைய பட்டணங்களை சங்காரம் பண்ணுவோம்" என்று பிரதிக்கினை - பொருத்தனை பண்ணினார்கள் (எண். 21:2). (2) யெப்தா என்பவர் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி, தேவரீர் அம்மோன் புத்திரரை அவன் கையில் ஒப்புக் கொடுத்தால்...

வெற்றியோடு திரும்பி வரும்போது எதிர் கொண்டு வருவது கர்த்தருக்கு உரியது என்றான் (நியா. 11:30,31). (3) "உமது அடியாளுக்கு ஆண் பிள்ளையைக் கொடுத்தால் அவனை உயிரோடிருக்கும் நாளெல்லாம் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன்" என்று பொருத்தனை செய்தாள் அன்னாள். இப்படியாய் பழைய ஏற்பாட்டுப் பொருத்தனைகளை எல்லாம் பார்த்தால், "இந்தக் காரியத்தை கர்த்தர் செய்தால், நான் இதைச் செய்வேன்" என்றே எல்லோரும் சொல்கின்றனர். மட்டுமல்ல... பழைய ஏற்பாட்டு காலத்துக்கு முன் வாழ்ந்த யாக்கோபும், "என்னை என் தகப்பன் வீட்டுக்கு சமாதானத்தோடே திரும்பி வரப் பண்ணுவாரானால், தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்துவேன்" என்று சொல்லி பொருத்தனை பண்ணினான் (ஆதி. 28:20-22). இதிலிருந்து நாம் அறிவது என்ன? பொருத்தனை பண்ணிய யாருமே, "கர்த்தர் எனக்கு இதைச் செய்வார்" என்று 100க்கு 100 விசுவாச அறிக்கை செய்யவில்லை. கர்த்தர் செய்வார் என்று நம்பியும் முழுமையாய் சொல்லி அறிக்கையிட முடியவில்லை. எனவே, பொருத்தனை ஒன்றைப் பண்ணி, பொருத்தனைக்காகவாவது தேவன் செய்வார் என்று நம்பி இருந்தனர். இவர்கள் செய்த பொருத்தனை இவர்களுக்கு காரியம் நிறைவேறும் வரை விசுவாசத்தை வளர்க்க உதவியது என்று நாம் நிதானிக்கலாம். இதனாலே தான், சரியாய் பொருத்தனை பண்ணிய எல்லோருக்குமே எபே. 3:20ன்படி காரியங்களை தேவன் வாய்க்கப் பண்ணினார். அல்லேலூயா!

**புதிய ஏற்பாட்டுக்கு வருவோம்.** நமக்கு விசுவாச ஓட்டத்தை துவக்குபவரும், முற்றும் முடிய நடத்துபவரும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே (எபி. 12:1). பொருத்தனையினால் அல்ல; வசனத்தால் இப்படிச் செய்கிறார் (ரோ. 10:17); அதற்கு பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார் (யோ. 16:13). இதனால்தான் மாற். 11:23ல் "எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும்" என்று மெய்யாகவே இயேசு சொல்கிறார். நமக்கு வசன விசுவாசம் தேவை; அந்த விசுவாசத்தை அறிக்கையிட்டு அதற்கேற்ற கிரியை தான் தேவை. வேறொன்றும் தேவை இல்லை. நியாயப் பிரமாணம் - பலி முறைகள் - ஆசாரியத்துவம் என்றொல்லாம் எபிரெயு புத்தகத்திலே பவுல் எழுதிக் கொண்டே வந்து எபி. 11ல் விசுவாசிகளின் பட்டியல்களைத் தருகிறானே ஏன்? எல்லா நியாயப் பிரமாண முறைமைகளும் இயேசுவை நோக்கியே வருகின்றன; அந்த இயேசுவை விசுவாசிக்காமல் செய்கிற எந்த பலிகளும், காணிக்கைகளும், பொருத்தனைகளும், உபவாசங்களும்,

பண்டிகைகளும் அர்த்தமற்றவை என்பதை விளக்கவே அப்படி எழுதுகிறான் (எபி. 11:39). வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவை - அவர் மூலம் வந்த புது உடன்படிக்கையை - அவர்கள் அடையாமற் போனார்கள். நாமோ அதை அடைந்து, அவர்களைவிட விசேஷித்தவர்களாகிவிட்டோம். அப்படியானால் நாம் எதை விசுவாசித்து எப்படி செயல்பட வேண்டும்? இன்னும் மேசியா வருவார் என்று விசுவாசித்து, நியாயப் பிரமாண முறைப்படி, பொருத்தனை முதற்கொண்டு எல்லாம் செய்ய வேண்டுமா? இது கேள்வி.

ஏசா. 53ஐ முழுவதும் வாசியுங்கள். நமக்கு சுகம் கிடைக்க வேண்டும் என்பதற்காய் தன்னுடைய சரீரத்தையே பிய்க்கக் கொடுத்து, காயங்களால் உண்டான தழும்புகளைப் பெற்ற அந்த தேவனுக்கு நாம் ஈடாக - பொருத்தனையாக - என்னத்தைக் கொடுத்தாலும் அது தகுதியாயிருக்குமா? நமது பாவங்கள் மன்னிக்கப்பட, நமக்கு சமாதானம் கிடைக்க, நாம் வெற்றி வாழ்க்கை வாழ, தன்னுடைய விலையேறப் பெற்ற இரத்தத்தையே சிந்தியிருக்கிறாரே, அதற்கு ஈடாய் பலி செலுத்தலாமா? அதற்கு ஈடாய் நாம் என்னத்தை கொடுத்தாலும் அது தகுதியாயிருக்குமா? நமது தரித்திரம், கடன் பிரச்சனை எல்லாம் நீங்கி நாம் ஐஸ்வர்யவானாய் மாறி பொருளாதார ஆசீர்வாதம் பெற வேண்டும் என்பதற்காய், ஐஸ்வர்ய சம்பர்னராகிய நம் தேவன் ஏழையாய் பிறந்தாரே அதற்கு ஈடாய் நாம் என்னத்தை கொடுத்தாலும் அது தகுதியாயிருக்குமா? சிந்தியுங்கள். அப்படியானால் நாம் செய்ய வேண்டியது என்ன? பழைய ஏற்பாட்டுக்காரர்கள் கர்த்தர் இதை செய்தால் நான் இதை செய்வேன் என்றனர். நமக்கோ அவர் எல்லாவற்றையும் செய்து முடித்து விட்டார். அல்லேலூயா! தெய்வீக சுகமா, பொருளாதார ஆசீர்வாதமா, வெற்றி வாழ்க்கையா, சமாதானமா எல்லாவற்றையும் சிலுவையிலே தந்து முடித்து விட்டார். அதைப் பெற நாம் செய்ய வேண்டியது ஆடு மாடு பலியல்ல; பொருத்தனை அல்ல; காணிக்கை அல்ல. நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. நம் இருதயமாகிய ஆவியை (1 பேதுரு 3:4) அவருக்கு ஒப்புக் கொடுத்து நம் இருதயத்தில் எழுதப்பட்ட வசனத்தை (எபி. 8:10) விசுவாசித்து, "கர்த்தர் செய்துவிட்டார்" என்று விசுவாச அறிக்கையிட வேண்டும். இந்த விசுவாச அறிக்கையிலே ஒன்று தான் ஸ்தோத்திர பலி. வெள்ளியும் பொன்னும் கர்த்தருக்குரியது; இந்த அண்ட சராசரங்களும் கர்த்தருக்குரியது. இதுவா அவருக்குத் தேவை? இவைகள் எல்லாம் அழிந்து போகும். அழியாத - நிலையான - நித்திய தேவனுக்கு, இந்த அழிந்து போகும் பொருட்கள் எம்மாத்திரம்? அழியாத உன் ஆவியையும் உன் ஆத்மாவையும், அழியாத தேவன் விரும்புகிறார்.

உன் இருதயத்தில் எழுதப்பட்ட ஒழியாத வார்த்தைப்படி விசுவாசித்து கிரியை செய்ய தேவன் விரும்புகிறார். நீ எப்படி இருக்கிறாய்?

எந்த காரியத்திற்காய் தேவனிடம் கேட்டாலும் முதலில் தேவை வசன விசுவாசம். வசனமில்லாத வாழ்வு விசனமான வாழ்வு. இந்த வசன விசுவாசத்தை கிரியையிலே தேவனுக்கும் மற்றவர்களுக்கும் காட்ட வேண்டும். அப்போது வெற்றி உண்டு. கிரியையில்லாத விசுவாசம் செத்தது அல்லவா! (யாக். 2:20). எப்படிக் காட்டுவது? "பெற்றுக் கொண்டேன்" என்று விசுவாசத்தோடு தேவனோடு பேச வேண்டும் - ஜெபிக்க வேண்டும். வியாதியிலிருந்து விடுதலை வேண்டுமா? 1 பேதுரு 2:24ன்படி இயேசுவின் தழும்புகளால் சுகமானேன் என்று தேவனிடம் முதலில் அறிக்கையிட வேண்டும். அதற்கு வசன விசுவாசம் தேவை; தேவன் நமக்காய் எல்லாம் செய்து முடித்துவிட்டார் என்ற அசையாத உறுதியான விசுவாசம் தேவை. விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்குமல்லவா! (யாக். 5:15). நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும் என்ற யோ. 15:7 மற்றும் "நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளை கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உண்டாகும் என்று சொல்கிறேன்" போன்ற பல வசனங்களை தியானியுங்கள். தேவன் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது வசன விசுவாசமுள்ள கிரியைதான்; பலியையல்ல; உபவாசமல்ல; பொருத்தனையை அல்ல; பண்டிகை ஆசரிப்பை அல்ல. பழைய ஏற்பாட்டு மக்கள், இயேசுவின் சிலுவை மரணத்தால் கிடைக்கப் போகும் ஆசீர்வாதங்களுக்கு சொந்தக்காரர்கள்; நாமோ கிடைத்த ஆசீர்வாதங்களுக்கு சொந்தக்காரர்கள். அப்படியிருக்க, நம் கிரியை எப்படி இருக்க வேண்டும்? தன்னையே, நமக்காய் பொருத்தனை பண்ணிய தேவனுக்கு நாம் என்ன பொருத்தனை செய்ய முடியும்? அது அவருடைய ஆவி - ஆத்மா - சரீரத்திற்கு ஈடாகுமா? நம்மை நாமே ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்கப்படுவதையே அவர் விரும்புகிறார் (ரோ. 12:1; கலா. 5:24; 2:20).

அப்படியானால் புதிய ஏற்பாட்டில் பொருத்தனை பண்ணவே இல்லையா? இது கேள்வி. எருசலேமிலுள்ள மூப்பர்கள், பவுலை யூதர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று ஒரு திட்டம் போட்டார்கள். பவுல் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்கிறவன் என்பதைக் காட்டும்படியாய், ஏற்கெனவே பொருத்தனை (பிராத்தனை) பண்ணியிருந்த

யூதராகிய நாலு பேரோடு பவுலும் சுத்திகரிப்பு செய்து கொள்ள வேண்டும் என்று மூப்பர்கள் வலியுறுத்தினார்கள். அதையே அவனும் செய்தான் (ப். 21:21-26). இது 1 கொரி. 9:18-23ன்படி சரியானதுதானே! மற்றப்படி வேறு எந்த அப்போஸ்தலர்களும் ஊழியர்களும் பொருத்தனை பண்ணியதாக இல்லை. நியாயப்பிரமாணத்தை அறிந்த கிறிஸ்தவ இஸ்ரேலர்களே அதை வெறுத்து ஒதுக்கும்போது, நியாயப் பிரமாணத்தையே அறியாத நாம் அதை பிடித்துக் கொள்வது மகா தவறல்லவா! பவுல் கூட அப். 18:18ல் மொட்டையடிக்க பிராத்தனை பண்ணியிருந்து செயல்படுத்தியிருக்கிறார். பவுலும் நியாயப் பிரமாணத்தில் வளர்ந்து பின் கிறிஸ்துவுக்குள் வந்த ஊழியன் தானே! அவனும் மனிதனே! அவனிடத்திலும் இது போன்ற குற்றங்கள் இருக்கலாமே! அதனால் தான் மேகம் போன்ற திரளான ஊழியர்களின் வாழ்க்கைச் சாட்சிகள் இருந்தாலும், அவைகள் 100க்கு 100 சரியாய் இருக்காது என்பதால், இயேசுவை நோக்கியே - இயேசுவின் வாழ்க்கையைப் பார்த்தே - ஓடக்கடவோம் என்று எபி. 12:1 சொல்கின்றது. அதனால்தான், “ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப் பார்!” என்று அடிக்கடி நான் சொல்லுகிறேன்; எழுதுகிறேன்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! “இதைச் செய்தால் இது பொருத்தனை” என்ற பழைய ஏற்பாட்டு 100% விசுவாசமில்லாத காரியம் ஒழியட்டும்; எல்லாவற்றையும், தன்னையே பதிலாக - பொருத்தனையா - இயேசு கொடுத்து நமக்கு எல்லா ஆசீர்வாதங்களையும் செய்து முடித்தார் என்று விசுவாச அறிக்கையிட்டு, நம்மை நாமே ஜீவ பலியாய் ஒப்புக் கொடுப்போம்! பாரம்பரியம் ஒழியட்டும்! பழைய ஏற்பாடு மறையட்டும்! புதிய ஏற்பாடு ஒளிரட்டும்! புது வாழ்வு மிளிரட்டும்!

❖ ❖ ❖

## இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரமா?

தேவனுடைய பிள்ளையே! இன்றைக்கு இந்து மதத்தில், ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம், கல்கி அவதாரம் என்று இவர்களுடைய ‘சாமி’ பல அவதாரங்கள் எடுத்ததாக கூறப்படுகிறது. உதாரணமாய் தசரதனுக்கும் கோசலைக்கும் மகனாய் பிறந்த இராமருக்குள்ளே திருமாலின் (விஷ்ண) மகிமை, வல்லமை, அதிகாரம் எல்லாம் நிறைந்து, திருமால் என்ற அவர்களுடைய ‘சாமி’ இராமராகவே வெளிப்பட்டார். இதையே அவதாரம் என்று சொல்கிறார்கள். இயேசுவும் இப்படித்தான் தேவனின் - கர்த்தரின் - அவதாரமாய் வெளிப்பட்டாரா? இது கேள்வி.

வரப்போகிற அந்தி கிறிஸ்துவை கேட்டின் மகன் என்று 2 தெச. 2:3 சொல்கின்றது. கேட்டின் மகனென்றால் கிரேக்க பாஷையில் "டயபோலஸ்" (Diabolus) என்று உள்ளது. இந்த வார்த்தை சாத்தானையும், சாத்தானின் அவதாரத்தையும் குறிக்கும். அப்படியானால் அந்தி கிறிஸ்து, சாத்தானின் அவதாரம் என அறிய முடிகிறது. அதாவது மனிதனாய்ப் பிறந்த அந்தி கிறிஸ்துவுக்கு, சாத்தான் தன் வல்லமையையும், மகிமையையும், அதிகாரத்தையும் கொடுத்து, தன் பணியை அந்த மனுஷன் மூலம் செய்ய வைக்கிறான் என்று அறிகிறோம். யோ. 17:12ல் யூதாசையும் கேட்டின் மகனென்றே சொல்லப்பட்டுள்ளது; அப். 1:24ல் அவன் மரித்து தனக்குரிய இடத்திற்கு போனான் (பாதாளத்திற்கு) என்று பேதுரு சொல்வதால், இவனும் சாத்தானின் அவதாரமே! யூதாசின் ஆவியும், அந்தி கிறிஸ்துவின் ஆவியும் சாத்தானின் ஆவியே! மேலும் ஆதி. 3:15ன்படி "உன் வித்துக்கும் ஸ்திரியின் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்" என்பது, ஸ்திரியாகிய இஸ்ரேல் சபையின் வித்தாகிய இயேசு கிறிஸ்துவுக்கும், சாத்தானின் வித்தாகிய அந்தி கிறிஸ்துவுக்கும் பகை என நாம் உணர்வதால், அந்தி கிறிஸ்து சாத்தானின் அவதாரம் என்று உறுதியாகிறது. 2 தெச. 2:7ன்படி "அக்கிரமத்தின் இரகசியம்" அந்தி கிறிஸ்து மூலம் வெளிப்படுவதால், சாத்தான் தேவ பக்திக்குரிய இரகசியத்திற்கு (1 தீமோ. 3:16) எதிராய் செயல்பட வைக்க அந்தி கிறிஸ்துவை தெரிந்து கொண்டான் என்று அறிகிறோம். இந்த அந்தி கிறிஸ்து, சாத்தானின் அவதாரமாய் இருப்பதால், அந்தி கிறிஸ்துவுக்கு எதிராளியான கிறிஸ்துவும், தேவனின் அவதாரம் என்று சிலர் கணிக்கிறார்கள். அது சரியா?

ஏற்கெனவே நான் சொன்னபடி ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் பிறந்த ஒரு மனுஷன் மூலம் கிரியை செய்வது தான் அவதாரம். அந்த மனுஷன் தான் அவதாரப் புருஷன். ஆனால் நாம் ஆராதிக்கிற இயேசு கிறிஸ்துவோ ஒரு புருஷனுக்கும் மனைவிக்கும் பிறக்கவில்லை. பரலோகிலேயே தேவனால் முன் தீர்மானிக்கப்பட்ட வார்த்தையாகிய தேவன், பரலோகிலேயே மனிதக் கருவாகி மரியாளின் கர்ப்பத்திலே பரிசுத்த ஆவியானவரால் வைக்கப்பட்டு பிறந்தவர் (எபி. 10:5-7; சங். 40:6-8; லூக். 1:35). அவரின் இரத்தம் தேவ இரத்தமே (அப். 20:28); மனித இரத்தமல்ல. தேவனே மாம்சத்தில் தாமாவே வெளிப்பட்டார் (1 தீமோ. 3:16). "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாய் இருப்பதை, கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார்" (பிலி. 2:6,7) என்ற வசனத்தின்படி தேவனே மனிதனாய் வந்தார் என்று

விசுவாசிக்கிறோம். அந்தி கிறிஸ்து சாத்தானின் அவதாரம் என்பதால், அந்தி கிறிஸ்து சாத்தானல்ல. அதுபோல, இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரம் என்றால், இயேசு கிறிஸ்து தேவனல்லவே! ஆனால், ரோ. 9:5; தீத்து 2:13; 1 யோ. 5:20; 2 பேதுரு 3:10; 1 தீமோ. 3:16; யோ. 1:14: 1:1 போன்ற வசனங்களின்படி இயேசுவே தேவன் என்பதால், இவர் தேவனின் அவதாரமல்ல என உணரலாம். இவர் தேவனின் அவதாரம் என்று சொன்னால், "இயேசு தெய்வமல்ல; அவர் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்று யேகோவா விட்னஸ் சபையாரின் கள்ள உபதேசம் உண்மையாகிவிடும்.

மேலும், இந்து மக்களிடம், "ராமர், கிருஷ்ணன் என்றெல்லாம் பல அவதாரங்களை கடவுள் என்று வணங்குகிறீர்களே, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கருத்து பொய்யா? பல கடவுள்கள் உண்டா" என்று கேட்டால், "இல்லை இல்லை ஒரு தேவன் தான். அவர் தான் பரமாத்மா. அவரின் அவதாரங்கள் தான் இவர்கள்" என்பார்கள். இந்த மக்களுக்கு ஒரே தேவன் என்ற கருத்து இருந்தும் அவதாரப் புருஷர்கள் என்று பலர் உருவாக்கப்பட்டிருப்பதால், ஐம்பெரும் பூதங்களை வணங்கிய மனிதன், இவர்கள் மூலம் வெளிப்பட்ட சில மகிமைகளை எண்ணி, இவர்களையும் தெய்வம் என்று எண்ணி வணங்குகின்றனர். இப்படித்தான் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் மரியாள், அந்தோணியார், சவேரியார் என்று பலரை வணங்குகின்றனர்; புத்தர்களும் புத்தரை வணங்குகின்றனர்; சீக்கியரும் குருநானக்கை வணங்குகின்றனர். ஆவிக்குரிய கிறிஸ்தவனும் பொருளாசையாகிய விக்ரக ஆராதனையை வைத்திருக்கிறான்; சிலுவையை வணங்குகிறான்; பைபிள் புத்தகத்தை தொட்டுக் கும்பிடுகிறான்; பண்டிகைகள் ஆசரிப்பிலே தெய்வீகம் இருப்பதாய் எண்ணுகிறான். இவைகளெல்லாம் 2 கொரி. 4:4ன்படியான மனக்குருடால் வருவதாகும்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு கிறிஸ்து தேவனின் அவதாரமாய் வரவில்லை; தேவனே பூமியில் பிறந்தார். அல்லேலூயா! தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் அவருக்குள் இருந்தது (கொலோ. 2:9). அவர் 100க்கு 100 தேவனாகவும், 100க்கு 100 மனிதனாகவும் இருந்தார். ஆமென். எனவே அவரை அவதாரப் புருஷன் என்று ஒருவனும் சொல்லாதிருப்பானாக!

❖ ❖ ❖

# இயேசுவின் படம், சிலை மற்றும் சிலுவை வைப்பது பாவமா?

தேவ பிள்ளையே! இது குறித்து நான் பழைய முழக்கங்களில் விளக்கமாய் எழுதியிருக்கிறேன். ஆயினும் பலரது மனக்கண் பிரகாசமாகாததாலும் (எபே. 1:19) பாரம்பரியம் தலைதூக்குவதாலும் (மத். 15:3) மனுஷருடைய கற்பனைகள் பெருகிப் போனதாலும் (மத். 15:9) வேத வசனத்தை தியானிக்க, ஆவிக்குரிய சபையாரே தவறுகின்றனர். தேவனின் வார்த்தையைப் பாராமல், ஊழியத்திலே இருக்கும் பெரிய தலைகளின் செயல்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் பார்த்து செயல்படுவதினால் வருகிற விளைவு தான் இது. அந்தப் பெரியவர் செய்யும் போது நான் செய்யக் கூடாதா? இதுதான் கேள்வியும் பதிலும். உங்களை பரலோகம் கொண்டு போவது அந்தப் பெரியவரல்ல; தேவனுடைய வார்த்தையே! அநேக ஆவிக்குரிய சபையாரின் வீடுகளில், ஜெப ஆலயங்களில், இயேசுவின் படமும், துண்டு போர்த்திய சிலுவையும், சிலைகளும் காணப்படுகின்றன. இப்படிச் செய்வது பாவம் என்பதை ஆவியானவர் விளக்குவாராக!

பாவம் என்றால் என்ன? யோ. 16:8,9ன்படி, இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காதது தான் பிரதான பாவம். இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனுக்கு (1) தேவனுடைய பிரமாணத்தை - வார்த்தையை (Law) மீறுவது பாவம் (1 யோ. 3:4). (2) விசுவாசத்தினால் வராத யாவும் பாவம் (ரோ. 14:23); விசுவாசம் கேள்வியினால் வரும்; கேள்வி வசனத்தினால் வரும் (ரோ. 10:17). (3) நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்யாமல் போனால் பாவம் (யாக். 4:17). (4) அநீதியெல்லாம் பாவம் (1 யோ. 15:17) போன்ற பல காரியங்கள் பாவமாகும். முதலாவது நம் தேவன் எப்படியிருக்கிறார்? ஆவியாயிருக்கிறார் (யோ. 4:24). மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறார் (1 தீமோ. 6:16); அவரின் மகிமையைக் கண்டதால் தானே பவுல் பார்வையிழந்தான் (அப். 22:11); இயேசுவே சொல்கிறார் "நீங்கள் ஒருக்காலும் தேவனின் ரூபத்தைக் கண்டதில்லை" என்று (யோ. 5:37). மோசே கூட அவரின் மகிமையை முழுமையாய்க் காணாமல், கன்மலையின் வெடிப்பில் வைத்து, பின் பக்கத்தைக் கண்டான் (யாத். 33:18-23). நாம்கூட மறுரூபமாகித்தான் அவரைப் பார்க்கப் போகிறோம். இப்படியிருக்க அவரின் உருவம் எப்படி இவர்களுக்குக் கிடைத்தது? தரிசனமாய் காண்பதெல்லாம் உண்மையானது அல்ல அல்லவா! (2 பேதுரு 1:20). காணாத தேவனுக்கு உருவம் வைக்கலாமா? இது வசன விரோதமல்லவா!

தேவன் தன் கையால் எழுதிக் கொடுத்த 10 கற்பனையில் 2ம் கற்பனையே, விக்ரக ஆராதனை கூடாது என்று சொல்கின்றது (யாத். 20:4,5); புதிய ஏற்பாட்டில் ரோ. 1:22,23லும் எழுதப்பட்டுள்ளது. இந்த வசனங்களைச் சொன்னால், "நாங்கள் இந்த உருவங்களை நமஸ்கரிக்க வில்லையே" என்று கிறிஸ்தவன் சொல்கிறான். "உருவாக்குவதே" பாவம் என்று இருப்பதை கவனிக்கத் தவறுகிறார்கள். இஸ்ரேல் மக்களின் 40 வருட வனாந்திரத்தில், தேவன் அவர்களிடத்தில் கண்டது அவிசுவாசம். அதனாலே அவர்கள் கானானுக்குள் போகவில்லை (எபி. 3:13). அவிசுவாசத்தினாலே அவர்கள் செய்த மிகப் பெரிய பாவங்கள் இரண்டு தான். ஒன்று விக்ரக ஆராதனை; இன்னொன்று அந்நிய நுகப்பிணைப்பு. இவை இரண்டும் ஆவிக்குரிய ரீதியிலும் இருந்தன; உலகப் பிரகாரமாகவும் இருந்தன. விக்ரக ஆராதனை என்பது புறஜாதிகள் வழக்கம். அது இஸ்ரேலருக்குள் புகுந்தது. தேவனுக்குச் சமமாய் எதை நிறுத்தினாலும் நினைத்தாலும் விக்ரக ஆராதனை தான். ஆரோனின் தலைமையில் கன்றுக்குட்டியை தேவனுக்கு சமமாக்கினதால் தானே ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன் என்றார் தேவன். புறஜாதியிலிருந்து - ஆவிக்குரிய எகிப்திலிருந்து - வெளிவந்த நாம், தேவனுக்கு சமமாய் படமோ, சிலையோ செய்யலாமா? மனுஷர், பறவைகள், மிருகங்கள், மற்ற ஜீவ ராசிகள் போன்றவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாய், நம் தேவனை - காணாத தேவனை, கற்பனையாய் உருவாக்கி வைக்கலாமா? அதை மதிக்கலாமா (சேவிக்கலாமா)? அதை நமஸ்கரிக்கலாமா? இது தேவனின் வார்த்தைக்கு விரோதமான விக்ரக ஆராதனை செயல் அல்லவா!

கொள்ளிவாய் சர்ப்பத்தின் கடியிலிருந்து பிழைக்க, தேவன் சொல்லியபடி ஒரு கட்டையிலே வெண்கலச் சர்ப்பத்தை வைத்து தூக்கிப் பிடித்தான் மோசே! சர்ப்பத்தை விசுவாசித்துப் பார்த்தவர்கள் பிழைத்தனர் (எண். 21; யோ. 3:14,15). இந்த வெண்கல சர்ப்பத்தை எசேக்கியா ராஜா காலம் வரை இஸ்ரேல் மக்களில் சிலர் பாதுகாத்து தூபங்காட்டி விக்ரகமாக்கி இருந்தனர். இதை எசேக்கியா உடைத்துப் போட்டான் (2 ராஜா. 18:4). இதிலிருந்து நாமறிவது என்ன? விக்ரக உருவாக்கம், வழிபாடு எல்லாம் தேவனுடைய பிள்ளைகளுக்குள்ளே காலா காலமாய் இருந்து வந்திருக்கிறது. இதற்கு ஆதி முதல் தேவன் எதிர்ப்பாகவே இருந்தார். இன்றும் அப்படியே! யாக்கோபு கூட ஆபரணங்கள் என்பதாலா கழற்றி கர்வாலி மரத்தருகே புதைத்தான்? இஸ்ரேலர் கூட வெண்கல சர்ப்பத்தை பார்த்து சுகமானார்கள். தற்கால ஆவிக்குரிய சபையாரில் சிலரோ, வெண்கல சர்ப்பமான இயேசுவை தூக்கி எறிந்துவிட்டு, அந்த சர்ப்பமிருந்த கட்டையை - சிலுவையை வைத்து,

அதற்கு துண்டு போட்டு மரியாதை செய்கின்றனர். கேவலம் உணர்வில்லா கட்டைக்கு தெய்வீக மரியாதையா? அது ஈனச் சிலுவை அல்லவா? (கலா. 3:14). அது ஒருக்காலும் புனிதமாகாது. உயிரில்லாத அதைப் புனிதமாக்கவா இயேசு வந்தார்? அந்த சிலுவையில் இயேசுவுக்கு பின் எத்தனை கொள்ளைக்காரன், கொலைகாரன் சிலுவையில் அறையப்பட்டிருப்பான்? சிந்தியுங்கள். சிலுவையல்ல; சிலுவையில் தொங்கிய இயேசுவைப் பற்றிய - இயேசுவின் - உபதேசமே நமக்கு தேவை (1 கொரி. 1:18). நாம் சுமக்க வேண்டிய சிலுவை இதுவல்ல; கிறிஸ்துவுக்காய் வரும் அவமானம், நிந்தை போன்ற சிலுவைதான். எசேக்கியா ராஜா இப்போது இருந்தால் எல்லா வீடுகளிலும், சபைகளிலும் புகுந்து இந்த சிலுவைகளை உடைத்திருப்பான்! இன்னும் இந்த சிலுவை மரியாதை தேவையா? சிந்தியுங்கள்.

V.B.S., Sunday School போன்றவற்றில் சிறுபிள்ளைகளுக்கு, இயேசுவின் படத்தைக் காட்டி, புறாவின் ரூபத்தைக் காட்டி, வயதான பிதாவைக் காட்டி போதிக்கிறார்கள். குழந்தைகளின் உள்ளங்களில் தேவனின் உருவத்தைப் பதித்து விடுகிறார்கள். அதற்குப்பின் ஜெபிக்கும் போதும், தேவனைப்பற்றி சிந்திக்கும் போதும் அதே உருவம் தான் அவர்களுக்குள் நிழலாடும். அந்தப் பிள்ளைகள் வளர வளர தன் பெற்றோரைப் பார்த்து; “அந்த சர்ச்சில் இயேசுவின் சிலையும் படமும் இருக்கிறது; என் பள்ளியில் இருக்கிறது; நம் சர்ச்சில் ஏன் இல்லை? அந்த சர்ச்சுக்கே போகலாம்” என்று கேட்கும்போது என்ன சொல்வீர்கள்? அது பாவம் - விக்ரக ஆராதனை என்று சொல்வீர்களா? இந்த விக்ரகத்தை ஏன் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே காட்டி அவர்களின் உள்ளத்தைப் பாழடிக்க வேண்டும்? இன்றைக்கு பெரும்பாலான பத்திரிகைகளில் (ஆவிக்குரிய?!) இயேசுவின் படம்; இதைக் கண்டு வரவேற்கும் ஆவிக்குரிய கூட்டத்தார் ஏராளம். கிருபையின் காலம் என்பதால் நாம் பிழைக்கிறோம். 2 கொரி. 5:16ல் பவுல் சொல்வதைப் பாருங்கள்:- **“இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்.”** இதைப் படித்த பின்னும் மாம்சத்தின்படியான இயேசுவின் உருவத்திற்கு நைட்லேம்ப் (Night lamp) (இரவில் கண் தெரியாதா?); மாலை (அவர் மரித்த பிணமா)! மெழுகுவர்த்தி - ஊதுபத்தி (என்ன நாற்றமடிக்கும் பிணமா?) சகல அதிகாரத்தோடும் வல்லமையோடும் திகழும் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இந்த கதி ஆகிவிட்டாரா? (மத். 28:18). சில ஆவிக்குரிய சபையாரின் வீடுகளில் இயேசுவின் இராப்போஜன நிகழ்ச்சியான ஒரு போட்டோ, சாப்பாட்டு அறையில் இருக்கும். அறியாமல் செய்தாலும் அடிகள் உண்டு. ஆமென்.

அன்பளிப்பால் கொடுத்தால் மட்டும் அதை உபயோகித்து பாவத்தில் விழலாமா? சிந்தியுங்கள். நம்மைவிட முஸ்லீம்கள் மேல். அவர்கள் அல்லாவுக்கோ, முகமது நபிக்கோ எந்த ஒரு உருவமும் வைப்பதில்லை.

உயிர்த்தெழுந்த இயேசுவை - உயிர்த்தெழும்போது - ஒருவனும் கண்டதில்லை; அவர் ஆவிக்குரிய மேனியோடு உயிர்த்தெழுந்தார். ஆனால் அவர் 40 நாட்கள் அநேகருக்கு காட்சி தந்து, ஒலிவ மலையினின்று பரலோகம் போனதோ உயிர்த்தெழுந்த மேனியிலல்ல (அதை நம் கண்களால் காண முடியாது); நமது மனுஷீக மேனியில் தான். இந்த மனுஷீக உருவம் அடிமையின் ரூபம்; கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எடுத்து வந்த ரூபம் (பிலி. 2:6,7). இது அழிந்துபோகும் ரூபம். இந்த ரூபத்தையா நித்யமான ஆவிக்குரிய மேனியை அவரைப் போலவே பெறப் போகும் நாம் (1 யோ. 3:2) உருவாக்குவது? சேவிப்பது? நமஸ்கரிப்பது? சிந்தியுங்கள். ஆதி அப்போஸ்தலர்கள் யாராவது மனித இயேசுவின் ரூபத்தையோ அவர் சுமந்த சிலுவைக் கட்டையையோ ஊழியத்தில் பிரஸ்தாபப்படுத்தியதாகவோ, மரியாதை செலுத்தியதாகவோ வேதத்தில் எங்குமில்லை. விக்ரக ஆராதனைக்காரர்களான கிரேக்கர், பாலஸ்தீனியர் போன்ற புறஜாதி மக்கள் கிறிஸ்தவர்களாய் மாறிய பின் கி.பி. 3ம் நூற்றாண்டிலிருந்து இப்படிப்பட்ட பழக்க வழக்கங்கள் நுழைந்தன. ரோமன் கத்தோலிக்க சபையால் வளர்ப்பிக்கப்பட்ட இந்த விக்ரக ஆராதனை, அதிலிருந்து பிரிந்து போன புராட்டஸ்டண்ட் சபையார்களையும் பிடித்துக் கொண்டது. அந்த சி.எஸ்.ஐ. லுத்தரன் போன்ற சபைகளிலிருந்து ஆவிக்குரிய சபையில் சேர்வோர் அந்தப் பழக்கத்தை இங்கும் தூவி விட்டு வளர விடுகின்றனர். ஆவிக்குரிய சபை என்பது ஆதி அப்போஸ்தல காலத்தில் தோன்றி, இயேசுவின் மேல் கட்டப்பட்டு, இடையிலே நசுங்கி, ஒடுங்கி மறைந்து கிடந்து கி.பி. 1905 முதல் (பரிசுத்த ஆவியின் மாரி ஊற்றப்பட்டது முதல்) விரிவான ஒன்று. இது கத்தோலிக்க சபையிலிருந்தோ புராட்டஸ்டண்டு சபையிலிருந்தோ வந்தது அல்ல. உண்மை அப்படியிருக்க, அந்த சபைகளின் விக்ரக வழக்கம் நமக்கு தேவையா? தேவனுடைய மகிமையை அழிந்து போகின்ற ஒன்றுக்கு சமமாக்கலாமா? சத்தியத்தை அறியுங்கள். தமிழகத்தில் பெரிய ஊழியர் என்று பிரபலமாகி உள்ளவர் எடுத்துக் கொண்ட Copy Right படங்கள் தான் இயேசுவின் உருவமும், துண்டு போட்ட சிலுவையும் என்பது உங்களுக்குத் தெரியுமா? பிசாசானவன் யாரை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல அலைகிறான். ஜாக்கிரதை! மத். 7:23ஐ தியானி.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்காதே! உருவம் வைப்பதும்,

வணங்குவதும் பாவம் என்று வேதம் சொல்லியிருக்க, அதையும் மீறி நீ செய்வது பாவமல்லவா! விக்ரக ஆராதனை - அந்நிய நுகப்பிணைப்பு ஆகிய இரண்டினால் தானே இஸ்ரேலர்கள் கானானில் போக முடியவில்லை! விக்ரக ஆராதனையை விபச்சாரம் என்றும் வேதம் சொல்வது உனக்குத் தெரியுமா (எபே. 5:5). இப்படிப்பட்டவர்களுக்கு பரலோகம் இல்லை என்பதை அறிவாயா? (வெளி. 22:15). இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖

# கிறிஸ்தவ சபை பற்றிய தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டில் உண்டா?

கிறிஸ்தவ சபை என்பது இஸ்ரேல் சபையின் மறுமலர்ச்சி சபை அல்ல. எபே. 2:14,15ன்படி புதிய மனுஷனாக சிருஷ்டிக்கப்பட்ட, புதிய ஏற்பாட்டு சபை இது. இந்த சபை அப். 20:28ன்படி தேவன் தமது சுயரத்தத்தினால் சம்பாதித்தது. இந்த சபை உருவாவது சம்பந்தமாக பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனங்கள் உண்டா? சிலர் சொல்கிறார்கள்:- "ஏசா. 2:2-3ன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்று. மட்டுமல்ல... "மத். 3:1-2ன்படி சபைக்கான முன் ஆயத்தம் செய்யப்பட்டது" என்றும் சொல்கிறார்கள். இதுசரிதானா? ஆவியானவர் விளக்குவாராக!

தேவன் ஆதாமைப் படைத்ததே ஒருபக்தியுள்ள சந்ததி உருவாக வேண்டும் என்பதற்காகவே! (மல். 2:15). இந்த சந்ததி எது? ஆபிரகாமின் மூலமாகவே ஒரு சந்ததி வெளிப்படும் என்று முன் அறிந்த தேவன், ஆசீர்வாதமுள்ள வாக்குத்தத்தங்களை அந்த சந்ததிக்கு ஆபிரகாம் மூலமே கொடுத்திருக்கிறார் (ஆதி. 13:14-17; 22:17,18). அந்த சந்ததி கிறிஸ்துவே என்று கலா. 3:16 சொல்கின்றது. ஆக, கிறிஸ்துவாகிய ஆபிரகாமின் சந்ததிக்கு, அவனுக்கு தந்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் வந்து சேரும் என்பது உண்மையே! இது இஸ்ரேலருக்குத்தானா? கலா. 3:7,9,14ன்படி இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட புறஜாதிகளுக்கும் உண்டு; அதாவது கிறிஸ்தவ சபையாருக்கு-கிறிஸ்துவுக்குள் வாழ்வோருக்கும் உண்டு. ஆக, கிறிஸ்தவ சபை உருவாக வேண்டும் என்று தேவனுடைய சித்தம், படைப்பிலேயே வெளிப்பட்டிருந்தும், அது தீர்க்கதரிசனமாக யார் மூலமாகவாவது வெளிப்பட்டதா? இது கேள்வி.

சிலர் சொல்லுகின்ற ஏசா. 2:2-3ஐ வாசியுங்கள். இது 1000 வருட அரசாட்சியில் நிறைவேறப் போகிற தீர்க்கதரிசனமாகும். "கர்த்தருடைய ஆலயம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படுகிறது." "அது

யாக்கோபின் தேவனின் ஆலயம்,'' "சீயோன்,'' "எருசலேம்'' என்ற வார்த்தைகளை எல்லாம் தியானியுங்கள். இது கிறிஸ்தவ சபையைப் பற்றிய தீர்க்கதரிசனம் அல்ல. மேலும், பரலோக ராஜ்யத்துக்கான ஆயத்தம்தான் மத். 3:1-2ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாய் இயேசுவே எருசலேமிலிருந்து இந்த பூமியை ஆளுவார். பலவந்தம் பண்ணப்படுகிற இந்த பரலோக ராஜ்யத்தை (மத். 11:12) யூதர்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா, யோவான் ஸ்நானன் தான் என்று இயேசு சொன்னார் (மத். 11:14). அவர்கள் ஏற்றுக் கொள்ளாததால் பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. (They rejected morally-மத். 11:20. They rejected officially also - மத். 21:42-43). இதனால் பரலோக ராஜ்யம் பூமியில் ஸ்தாபிப்பது தள்ளிப் போடப்பட்டது. அதனால் அவர் ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை விவரிக்கத் தொடங்கினார் (மத். 13) இந்த ஆவிக்குரிய பரலோக ராஜ்யம் இப்போது நிழலாக உள்ளது. நிஜமான பரலோக ராஜ்யம் 1000 வருட அரசாட்சியில் ஸ்தாபிக்கப்டும். இந்த ராஜ்யம் தான் யூதர்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் ராஜ்யம் (அப். 1:6,7); இதுதான் தாவீதின் உடன்படிக்கை (2 சாமு. 7:8-17). நிஜமான ராஜ்யத்துக்காய் காத்திருக்கும் இஸ்ரேலரும், கிறிஸ்தவ சபையாரும் இந்த ஆவிக்குரிய ராஜ்யத்தில் அங்கம் வகிக்கின்றனர். இந்த நிஜமான பரலோக ராஜ்யத்தில் தான், இஸ்ரேலரும், கிறிஸ்தவ சபையாரும் ஆளுவோம். இப்படி ஆளப் போகும் கிறிஸ்தவ சபை உருவாவது பற்றி ஒரு தீர்க்கதரிசியும் முன்கூட்டியே சொல்லவில்லையே! இயேசு பிறப்பார்; மரிப்பார்; உயிர்ப்பார்; ஆளுவார் என்றெல்லாம் சொன்ன தீர்க்கதரிசிகள், சபை உருவாகும் என்று சொல்லவே இல்லை.

இயேசு தான் மத். 16:18ல் "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்'' என்று முதன் முதலாக, தன் மூலமாய் தன்மேல், கிறிஸ்தவ சபை கட்டப்படும் என்று சொன்னார். இதைப் பலரும் - சீஷர்கள் கூட - அதிகமாய் உணரவில்லை; சிந்திக்கவில்லை. பரலோகம் போகும் போது, 'என் ஆடுகளை-ஆட்டுக்குட்டிகளை-மேய்ப்பாயா?'' என்று பேதுருவிடம் இயேசு கேட்ட போது கூட (யோ. 21:14-16) கிறிஸ்தவ சபை உருவாகப் போவதை யாரும் அறிய வில்லை. பூர்வகாலமுதல், இரகசியமாய் வைக்கப்பட்டிருந்த பல காரியங்களை பவுல் மூலமும், யோவான் மூலமும் தேவன் புதிய ஏற்பாட்டு காலத்தில் வெளிப்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் மறைவானவைகளாய் இருந்தவை புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டாயிற்று (உபா. 29:29; லூக். 8:17).

அப்படித்தான், ஒருவருக்கும் வெளியரங்கமாகாமல், இருந்த சபையைப் பற்றிய இரகசியத்தை, பவுல் மூலம் தேவன் வெளிப்படுத்தினார். அல்லேலூயா! புறஜாதியாரையும் இஸ்ரேலரையும் ஒரே ஆவியினாலே ஒரே

புதிய சரீரமாகிய கிறிஸ்தவ சபைக்குள்ளே தேவன் இணைத்து, ஆபிரகாம் சந்ததிக்கான வாக்குத்தத்தத்துக்கும் பங்காளிகள் என்று ஆக்கிய இரகசியம், பவுல் மூலமே வெளியாயிற்று (எபே. 2:18-3:6; 1 கொரி. 2:13). "இந்த இரகசியம் இப்பொழுது தேவனுடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" என்று பவுலே எபே. 3:6ல் சொல்வதைக் கேளுங்கள்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! யாராயிருந்தாலும், எவ்வளவு பெரிய ஆளாயிருந்தாலும் வசனத்தின்படி சொல்லாவிட்டால் நம்பாதே! "கட்டளையே விளக்கு; வேதமே வெளிச்சம்" (நீதி. 6:23) என்பதை மறவாதே! பவுலுக்குமுன் ஒருவருக்குமே நம் சபையைப் பற்றிய வெளிப்பாடே இல்லை என்பதே உண்மை. பவுல் வரைக்கும் இரகசியமாய் வைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ சபை, ஒருநாள் இரகசியமாகவே எடுத்துக் கொள்ளப்படப் போகிறது! அல்லேலூயா! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்கு வோம்! பூமிக்கு வராமல் மத்திய ஆகாயத்திலிருந்து அழைக்கும் இயேசுவோடு இணைவோம்! (1 தெச. 2:16-18) ஆமென்!

❖ ❖ ❖

## புதிய ஏற்பாட்டு மக்களுக்கு சாபம் வருமா?

கலா. 3:13ஐ வைத்துக் கொண்டு பலர் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு சாபமே இல்லை என்றும், கிறிஸ்து நமக்காய் சாபமாகி விட்டார் என்றும் போதிக்கின்றனர்; விசுவாசிக்கின்றனர். அப்படியானால், இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவனுக்கு அப்பமும் தண்ணீருமின்றி தரித்திரம் ஏன்? தீராத வியாதியும் அகால மரணமும் ஏன்? கர்ப்பம் விழுகிறது ஏன்? மலடு ஏன்? சுனாமியும், புழுதியும், சூறாவளியும், புயலும் ஏன்? மழை இல்லையே ஏன்? ஒன்றுமே வாய்க்காமல் போவது ஏன்? வீடில்லாமல், திருமணம் நடக்காமல், வேலையில்லாமல் அலைவது ஏன்? ஊழிய வளர்ச்சி இன்றி சபையிலே எழுப்புதல் இல்லாமல் போகிறது ஏன்? புறஜாதிகள் மத்தியில் வெட்கப்பட்டு போவது ஏன்? கடன் காரணமாகவே கஷ்டப்படுவது ஏன்? தலையாகாமல் வாலாகவே இருக்கிறாயே ஏன்? இந்த கருகலான காரியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

நன்மை என்று ஒன்று உண்டென்றால் நிச்சயம் தீமை என்று ஒன்று உண்டு. ஒளி உண்டென்றால் இருளும் உண்டு. ஜீவன் உண்டெனில் மரணம் உண்டு. அப்படியே ஆசீர்வாதம் என்று உண்டென்றால் நிச்சயம் சாபம் என்ற ஒன்று இருந்துதானே ஆக வேண்டும் (உபா. 30:15,19; 11:26).

கலாத்தியர் புத்தகம் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. கலா. 3:7,19,14ன்படி ஆபிரகாம் முதல் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட அத்தனை ஆசீர்வாதங்களும் கிறிஸ்து இயேசுவினால் இரட்சிக்கப்பட்ட புறஜாதிகளுக்கு புதிய ஏற்பாட்டு மக்களுக்கு நிச்சயம் உண்டு. ஆமென். இந்த ஆசீர்வாதம் கிடைக்கவில்லையென்றால் சாபம்தானே கிடைத்தாக வேண்டும். ஆசீர்வாதம், சாபம் ஆகிய இரண்டுக்கும் அப்பாற்பட்ட காரியம் ஏதாவது நமக்கு நடக்குமென்று வேதம் எங்காவது சொல்லியிருக்கிறதா? இல்லையே! சொர்க்கம் இல்லையேல் நரகம். இஃதன்னில் வேறு ஏதாவது உண்டென்று வேதம் சொல்லுகிறதா? "உத்தரிக்கிற ஸ்தலம்" என்ற ஒன்று இருப்பதாக ரோமன் கத்தோலிக்கர் தான் வேதத்தில் இல்லாத ஒன்றை சொல்கின்றனர். அப்படியே ஆசீர்வாதம், சாபம் இவையிரண்டுக்கும் அப்பாற்பட்ட ஒன்று இல்லவே இல்லை. உபா. 28; ஆதி. 12:2,3 போன்ற ஆசீர்வாதங்கள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களுக்கு உண்டென்பதால் அந்த ஆசீர்வாதங்களை தொடர்ந்து சொல்லப்பட்ட சாபங்களும் கிறிஸ்தவன் முன் இருந்துதானே ஆக வேண்டும்.

இயேசு தான் நமக்காய் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டாரே பின்பு எப்படி நம்முன் சாபம் இருக்கும்? இது கேள்வி. நம்முன் ஆபிரகாமின் ஆசீர்வாதம் இருப்பதால்தானே. கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்ட நம்மால் அதைச் சுதந்தரிக்க முடிகிறது (உபா. 11:16). ஆசீர்வாதம் தானாய் வருவதல்ல. அதை நாம் சுதந்தரிக்க வேண்டும். அதற்கு வசன விசுவாசக் கிரியைகள் தேவை. ஆமென். எந்த ஒரு நிபந்தனையும் கிரியையும் இல்லாமலே இஸ்ரேலரின் ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும் என்கிற தவறான கள்ள உபதேசக்காரர்களால் ஏற்படும் குழப்பம் இது. ஆசீர்வாதத்தை சுதந்தரிக்காத பட்சத்தில் சாபம் தானாய் நம்மைச் சேரும். உபா. 28ன் ஆசீர்வாதத்தை சுதந்தரிக்க தேவனின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டும் என்பது நிபந்தனை. நாமோ இயேசுவோடு கூட மரித்துப் போன நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ளாமல் (எபே. 2:15; ரோ. 7:4; 10:4) இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளையும் அப்போஸ்தலர்களின் உபதேசத்தையும் கைக்கொள்ள கட்டளை இடப்பட்டு இருக்கிறோம் (யோ. 15:10; 13:34; மத். 28:20; கலா. 6:2; ரோ. 6:17). அந்தக் கட்டளைப்படி நடக்கும்போது இயேசுவின் பிள்ளைகளாகிய நமக்கு அந்த ஆசீர்வாதங்கள் நிச்சயம் வந்து சேரும். இயேசு கிறிஸ்து நியாயப் பிரமாணத்தில் சொல்லப்பட்ட எல்லா பாவங்களையும் சாபங்களையும் சுமந்து தீர்த்துவிட்டார். இதை விசுவாசிக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவின் கற்பனைகளையும், அப்போஸ்தலர் உபதேசங்களையும் அறிந்தோ, அறியாமலோ கைக்கொள்ளாததால் வரும் எல்லா சாபங்களிலிருந்தும்

விடுதலையாகிறான். ஆமென். அப்படியானால் கிறிஸ்தவனுக்கு சாபம் வருமா? இது கேள்வி.

ரோ. 12:2ன் படி தேவனின் நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியாத வரைக்கும், இப்படிப்பட்ட கேள்விகள் எழும்பிக் கொண்டே இருக்கும். 1 கொரி. 16:22ஐ வாசியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூராமற் போனால் அவன் சபிக்கப்பட்டவன். அவன் பரலோகம் போகப் போவதில்லை என்பதால் அந்த வசனம் மாரநாதா Maranaatha - கர்த்தர் வருகிறார் என்ற எச்சரிப்போடு முடிகிறது. கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூருவது எப்படி? 1 யோ. 5:3; யோ. 15:10 போன்ற வசனங்களின்படி தேவனின் வார்த்தையை கைக்கொள்வதே நாம் அவரிடத்தில் அன்பு கூர்வதாகும். கைக்கொள்ளாவிட்டால், அன்பு கூராவிட்டால் சாபம்தானே! சிந்தியுங்கள். கிறிஸ்தவர்களாய் ஆன பின்னும் நியாயப் பிரமாணக் கிரியைக்காரராய் இருந்தால் அவர்கள் சபிக்கப்பட்டவர்களே! (கலா. 3:10). அதாவது சாபம் அவர்களுக்கு வந்து சேரும். "ஒரு நாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து கிறிஸ்தவர்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனையில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்; விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும் பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களுடைய சாபத்தின் பிள்ளைகள் (2 பேதுரு 2:13,14) போன்ற வசனம் கூறுவதென்ன? கிறிஸ்தவனே சாபத்திற்குட்பட்டு, சாபத்தின் பிள்ளையாகிறான். வெளி. 22:3ன்படி சாபமே இல்லாத நிலை பரலோகிலும், புதிய வானம் புதிய பூமியிலும்தான். பாவம் என்ற ஒன்று உண்டென்றால் சாபம் தானாய் தொற்றிக் கொள்ளுமல்லவா? கிறிஸ்தவ சபையிலும் கோதுமையும், களையும் உண்டல்லவா! பூரண புருஷராகத்தானே 5 விதமான ஊழியம் (எபே. 4:11-13). வேதத்தை அறியாதவன் சபிக்கப்பட்டவன் (யோ. 7:49); கிறிஸ்துவை விட்டுவிட்டு தன் சுயப்படி நடப்பவர்கள் சபிக்கப்பட்டவர்கள் (ரோ. 9:3). கள்ள உபதேசக் கிறிஸ்தவன் சபிக்கப்பட்டவன் (கலா. 1:8,9).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பாவம் செய்தால் சாபம் தானாய் வரும் என்று நீ அறியவில்லையா? பாவத்தை இயேசு சுமந்து தீர்த்தார் என்பதனாலே பாவம் நமக்கு இல்லை அல்லது பாவம் நம்மை அணுகாது என்று சொல்ல முடியுமா? அப்படியானால் 1 யோ. 1:8,9 வசனம் தேவையில்லையா? பாவம் செய்யும்போது, இயேசுவின் இரத்தத்தை விசுவாசித்து அறிக்கையிட்டு சாபத்தை சுமந்து தீர்த்தார் என்று விசுவாசித்து அறிக்கையிடும்போது சாபமும் நம்மை அணுகாது. அல்லேலூயா! இனி சாபம் நம்மை வந்து சேராதபடியாய் இயேசுவின் கற்பனையையும், அப்போஸ்தலர்

உபதேசத்தையும் மறுதலிக்காமல் கைக்கொண்டு நடப்போம். ஆமென். ஒன்றை மாத்திரம் உங்களுக்கு சொல்லுகிறேன். தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொள்ளாதது பாவம்; அதனால் சாபம் அன்றும் உண்டு. இன்றும் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட பாவத்தினால் வரும் சாபம் எல்லோருக்கும் சம்பவிப்பதில்லை என்பதை முந்தி அறியுங்கள். சாபம் சம்பவிக்காமல் பாவத்தில் இருக்கிற பலரை நாம் கண்கூடாய் கண்டிருக்கிறோமே! 1 தீமோ. 5:24ன்படி சிலருடைய பாவங்கள் நியாயத்தீர்ப்புக்கு முந்தி வெளிப்படும். சிலருடைய பாவங்கள் அவர்களை நியாயத்தீர்ப்பு வரை பின்தொடர்ந்தே செல்லும். தேவபிள்ளையே! சாபத்திற்கென்று இல்லாமல், ஆசீர்வாதத்திற்கென்று வாழ்கின்ற பிள்ளைகளாயிருப்போம். அந்த ஆசீர்வாதம் இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் நித்திய ஜீவனைத் தரும் (மாற். 10:29,30). அல்லேலூயா.

❖ ❖ ❖

## பலியை தேவன் விரும்புகிறாரா?

சங். 40:6; எபி. 10:5 போன்ற வசனங்களை வைத்து தேவன் பலியை விரும்பவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். இந்த வசனங்களை இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து தியானித்தால், இந்த வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகைக்குப் பின் பலியிட தேவையில்லை என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டதாய் நிதானிக்கலாம். அவரே நமக்காய் பலியானதால், வேறொரு பலி தேவையில்லை. ஆமென். அப்படியானால் முதலாம் வருகைக்கு முன் பலி செலுத்தப்பட்டு வந்ததே அதை தேவன் விரும்பினாரா? இது கேள்வி. சங். 50:8-14; 51:16; மீகா 6:6-8; 1 சாமு. 15:22 போன்ற வசனங்களை மேற்போக்காய் வாசிக்கும்போது, தேவன் பலியையே விரும்பாதவர் போல் தெரிகிறது. அப்படியானால் பலி முறைகளையும், ஆசாரியரையும் அவர் உருவாக்கினது ஏன்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

மிருகம் கொல்லப்பட்டு, தோலாடைகள் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்ட போதுதான் வேதத்தில் முதன் முதலில் பலியைச் சந்திக்கிறோம் (ஆதி. 3:21). மிகவும் வெளிப்படையான பலி செலுத்தும் முறையை ஆதி. 4:4 (See எபி. 11:4)ல் பார்க்கிறோம். ஆபேலின் நீதி, அவனது பலி முறையினால் உயர்த்தப்பட்டது. அவனது நீதி, அவன் செலுத்திய ஆட்டுக்கிடாய் பலியினால் அல்ல; அவனது விசுவாசத்தால் வெளிப்பட்டது. என்ன விசுவாசம்? வரப்போகிற மேசியாவாகிய இயேசுவின் இரத்தம் பாவ மன்னிப்பைக் கொடுக்கும் என்ற விசுவாசத்தோடு, நிழலாட்டமாய் பலி

செலுத்தியது தான். நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்னும், குடும்பத் தலைவனே ஆசாரியன் போல பலி செலுத்தினார்கள். இந்த பலி முறைமையானது (1) கிறிஸ்து நமக்காய் பலியாகி, பாவமாக்கப்படுவார், சாபமாக்கப்படுவார். (கலா. 3:13; 2 கொரி. 5:21). (2) கிறிஸ்து பதிலாளியாய் பலியாவார் (லேவி. 1:4; ஏசா. 53:5-6; 1 பேதுரு 2:24). (3) கிறிஸ்து தாமாகவே எதிர்ப்பின்றி பலியாவார் (யோ. 10:18). (4) கிறிஸ்து பலியாகி விடுதலை தருவார் (எபே. 1:17; 1 கொரி. 6:20). (5) கிறிஸ்து கிருபாதார பலியாவார் (ரோ. 3:25). (6) கிறிஸ்து பலியாகி தேவனோடு ஒப்புரவாக்குவார் (2 கொரி. 5:18-19; கொலோ. 1:21-22). (7) கிறிஸ்து பலியாகி நம்மை இழுத்துக் கொள்வார், உயர்த்துவார் (யோ. 12:32,33; ரோ. 5:9,10; எபே. 2:13; எபி. 9:11-12,26; 10-17, வெளி. 1:5). (8) கிறிஸ்து பலியாகி அன்பை வெளிப்படுத்துவார் (யோ. 3:16; 1 யோ. 4:9-10) போன்ற பலவற்றை விசுவாசித்து செய்ய வேண்டியதாகும். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பது தேவனின் தாற்பரியம் (லேவி. 17:11; 4:20,35; எபி. 9:22 with மத். 26:28). மனிதன் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான். ஒருவனுடைய உயிரை ஒருவன் கொன்றால், அதுவே தேவ சாயலை - தேவனையே - கொல்வது போன்றதாகும். தேவனையே கொல்பவன், கொல்லப்பட வேண்டியவன். எனவே ஒருவன் மனுஷக் கொலை செய்வானகில், அவன் கொல்லப்பட்டு பலியாகி, நிவாரணம் பெற வேண்டும் (ஆதி. 9:5,6). ஆனாலும், பலியானவனுக்கு மன்னிப்பு கிடைத்தபாடில்லை, மறு வாழ்வு வந்தபாடில்லை. மட்டுமல்ல, ஒரு கொலைக்கு ஒருமுறை பலியானால், பல கொலைகள் செய்பவனை பலமுறை பலியாக்க முடியுமா? எத்தனை ஆடு மாடுகளை பலியிட்டாலும் ஈடு செய்ய முடியுமா? முடியாதே! எனவே தான், தனது மாசில்லாத விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தி ஒரே முறை, பலியாகி, நம்மெல்லாருக்கும் இயேசு மீட்பைத் தந்தார். அல்லேலூயா!

ஆக, தேவன், கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான பலிமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார் என்று அறிகிறோம். இந்த பலிமுறைகள் புறஜாதிகளுக்குள்ளும் பிசாசுக்கேற்ற வகையில் இருந்தன. எப்படியோ, வரப்போகிற மேசியாவுக்கு நிழலாட்டமான பலிமுறைகளை, பாவ நிவாரணத்திற்கென்று செய்ய வேண்டும் என பாவம் செய்த ஆதாம் ஏவாளின் சந்ததி முழுவதின் உள்ளத்திலும் அறிந்தோ அறியாமலோ பதிந்திருந்தது என அறியலாம். பிசாசு நுழைந்து, பலிமுறைகளை மாற்றியதால், நியாயப் பிரமாணத்தில் இதற்கென விதிமுறைகளை உருவாக்கினார் தேவன். எக்காரணம் கொண்டும் நரபலி - மனித பலி - கூடாது என்பது தேவ சித்தம் (லேவி. 18:21; 2-5; உபா. 12:31; 18:10).

ஆபிரகாமை நரபலி செலுத்த தேவன் அழைக்கவில்லையா என்பது கேள்வி. நரபலி தேவன் விரும்பாதது என்பது ஆபிரகாமுக்கு தெரிந்திருந்தால் அவன் தேவனிடம் மறுத்துப் பதில் கூறியிருக்கலாம். அவன் பதிலே பேசவில்லை. ஒரு வேளை அவனுக்கு தெரிந்திருக்கும், தேவன் என்ன சொன்னாலும் அதை கண்டிப்பாய் செய்ய வேண்டும் என்று கீழ்ப்படிதல் உள்ள விசுவாசியாய் இருந்திருக்கலாம். எப்படியோ, தேவன் நரபலி செய்ய அவனை விடவில்லை; அதை அவர் விரும்பவுமில்லை. யெப்தா தன் மகளை பலியிட்டான் என்று, தேவ சித்தத்திற்கு வியாக்கியானம் சொல்வோரும் உண்டு (யெப்தா தன் மகளை பலியிட்டானா என்ற செய்தியை, ஆசிரியரின் இதே நூலில் வாசியுங்கள்). தேவன் விரும்பும் பலி எது?

நம் தேவன் நொறுங்குண்ட, பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாழ விரும்புகிறார் (ஏசா. 57:15). தேவனுக்கேற்ற பலி நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான ஆவி தான் (சங். 51:17; 34:18). அப்படிப்பட்ட ஆவியோடு தகனபலியும், சர்வாங்க தகனபலியும் செலுத்தும்போது தேவன் பிரியப்படுகிறார். இப்படிச் செலுத்தும்போது தான் அது நீதியின் பலியாகிறது. இப்படிப்பட்டதான பலிகளிலே தேவன் பிரியமாயிருக்கிறார் (சங். 51:19; 34:18; 4:5; மல். 3:13). இந்த பலி கீழ்ப்படிதலோடு செய்கிற பலி; வசனத்திற்கு செவி கொடுத்து செய்கிற பலி (1 சாமு. 15:22). இப்படியாய் வசனத்திற்கு செவி கொடுக்காமல் கீழ்ப்படியாமல், தேவனை அறிகிற அறிவில்லாமல், செய்கிற பலியையல்ல தேவன் விரும்புவது (மத். 12:17; 9:13; ஓசியா 6:6; மீகா 6:6-8) ஆமென். அன்றும் இன்றும் என்றும் தேவன் விரும்புகிற நீதியின் பலி இதுவே! நியாயப் பிரமாணத்தில் சொல்லப்பட்ட நீதியின் பலிகளெல்லாம், இயேசுவின் பலியால் - இயேசுவின் பலியோடு - முடிவுக்கு வந்துவிட்டது (ரோ. 10:4; கலா. 3:19-28; 4:21-31; எபி. 7:11-10:23). இயேசு, பலியையும் காணிக்கையையும் ஒழியப் பண்ணவில்லை, அவர் பலியாகும் போது அவரது சரீரத்தோடு அவைகளும் நியாயப்பிரமாணமாகவே மரித்துப் போயின (எபே. 2:15; ரோ. 7) பலி முறைகளை - நீதியாய் செலுத்திச் சொல்லிக் கொடுத்தவரே அவைகளை ஒழிப்பாரா? சிந்தியுங்கள். (தானி. 9:27ல் ஒழிப்பது வரப்போகிற அந்திகிறிஸ்து என்று அறிக!).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! ஆடு, மாடுகளால் செய்யப்படும் நீதியின் தகனபலி, சர்வாங்க தகனபலி போன்றவை இயேசுவோடு ஒழிந்திருக்கலாம். ஆனால் அவர் விரும்புகிற பலி இன்றும் உண்டு. அதுதான் நமது சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாய் ஒப்புக்கொடுப்பதாகும் (ரோ. 12:1). அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை ஏறெடுப்பதாகும் (எபி. 13:15; சங்.

107:22). நன்மை செய்கிறதும், தானதர்மம் பண்ணுகிறதுமான தேவனுக்குப் பிரியமான பலிகளைச் செய்வதாகும் (எபி. 13:16). மற்றப்படி உடலை வருத்தி பலிகடாவாய் ஆக்குவதுதல்ல தேவன் விரும்பும் பலி. கீழ்ப்படிதலும், வசனத்திற்கு செவிமடுத்து செயல்படுவதும்தான் தேவன் விரும்பும் பலி (மத். 12:7). நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இதயமே அவருக்கேற்ற பலி. தேவபிள்ளையே! உன் நிலைமை எப்படியிருக்கிறது? இயேசு சீக்கிரமாய் வருகிறார்! இன்றே ஆயத்தமாகு! மற்றவர்களை ஆயத்தப்படுத்து!

❖ ❖ ❖

## வேதப் பொன்மொழிகள்

★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!

★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!

★ விசுவாசம் வெற்றியைத் தரும்

★ Where there is vision there will be provision

★ போதக சிட்சையே ஜீவ வழி

★ பரிசுத்தமாக்குவது வசனமே

★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது

★ Have positive confession

★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு

★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?

★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்

★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு

★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி

★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்

★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்

★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல

★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் (பாகம் I)

★ கருகலான சத்தியம் (பாகம் II)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)

★ வியாதியா? மரணமா?

★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)

★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்

★ கதைகள் அறுபது

★ சிறுவர் ஊழியம்

★ இஸ்லாமியரின் கேள்விகள்

★ உங்களுக்குத் தெரியுமா?

★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 75

★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)

★ தானியேல் (3 சி.டி)

(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 75/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்

★ குரான் சொல்லும் ஈசா தேவனா?

★ இயேசு ஏன் வரவில்லை?

★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?

★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்

★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்

★ மாறுபாடுள்ள சந்ததி எது?

★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?

★ குரானில் குளறுபடிகள் உண்டா?

★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?

★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?
★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?
★ எது தேவசித்தம்?
★ வியாதி தேவனின் சிட்சையா?
★ திரித்துவம் உண்டா?
★ அந்நிய பாஷை
★ எது ஆவிக்குரிய சபை?
★ படைப்பின் இரகசியம்
★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?
★ தெய்வீக சுகம்
★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?
★ இயேசுவின் இரத்தம்
★ பண்டிகைகள் தேவையா?
★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்
★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்
★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?
★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?
★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்
★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?
★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்
★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?
★ யார் அந்த 1,44,000 பேர்?
★ 70 வார தீர்க்கதரிசனம்
★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

**"End Time Deliverence Ministry Trust"**


Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)

# FAITH BRINGS SUCCESS



Rev. Dr. A. Xavier
(Author)

## ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து, தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார். கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.Iசபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், "எப்போதும் வசன விளக்கம்" போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். "கடைசிகால விடுதலை முழக்கம்" என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் "வசன முழக்கம்" என்ற பத்திரிக்கையை நடத்தினார். "விசுவாசம் வெற்றியைதரும்" என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர். தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.

endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com